# தமிழ் இலக்கிய வரலாறு

## பதின்மூன்றாம் நூற்றாண்டு



மு. அருணாசலம்

தமிழ் இலக்கிய வரலாறு
பதின்மூன்றாம் நூற்றாண்டு

---

மு. அருணாசலம்

# தமிழ் இலக்கிய வரலாறு

## பதின்மூன்றாம் நூற்றாண்டு

மு. அருணாசலம்

**The PARKAR**

தமிழியல் ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனம்

*293, அகமது வணிக வளாகம், இரண்டாவது தளம்*

*இராயப்பேட்டை நெடுஞ்சாலை*

*இராயப்பேட்டை*

*சென்னை - 14.*

தமிழ் இலக்கிய வரலாறு

பதின்மூன்றாம் நூற்றாண்டு

மு. அருணாசலம்

© ஆசிரியர்

முதற் பதிப்பு : சித்திரை 1970.

திருத்தப்பட்ட பதிப்பு : மார்கழி 2005.

பக்கம் : xxxvi + 420 = 456.

பதிப்பு :

**தி பார்க்கர்**

293, அகமது வணிக வளாகம்,

இராயப்பேட்டை நெடுஞ்சாலை,

இராயப்பேட்டை, சென்னை - 600 014.

விலை : 328. 00

வடிவமைப்பு :

வே. கருணாநிதி

அச்சிட்டோர்:

**தி பார்க்கர்**

293, அகமது வணிக வளாகம், இரண்டாவது தளம்,

இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை - 600 014.

# முகவுரை

திரு மு. அ. என்றே அழைக்கப்பட்ட இவ்வாசிரியர் ஒரு பன்முக எழுத்தாளர். அவருடைய வாழ்க்கையைப் பல கட்டங்களாகப் பிரிக்கலாம். அவருடைய எழுத்தும் அவ்வாறே. எனினும் 1930இல் சென்னையில் குடியேறியதில் இருந்து, தமிழ்ப் பெரியோர்களுடன் அவருக்கு இருந்த நெருக்கமான தொடர்பினால், அவரது தமிழ் ஆர்வமும் ஆராய்ச்சியும் வாழ்நாள் முழுவதும் அமைந்தன. ஐயங்களுக்கு விடைகாணவும், முடிவுகளை விவாதிக்கவும், பல நூலகங்களையும் அனேக தமிழ் அறிஞர்களையும் நாடிச் சென்றார்.

'தமிழ் இலக்கிய வரலாறு' என்பது ஒரு தனி மனிதனின் உழைப்பும், ஆழ்ந்த அறிவின் பயனும் ஆகும். இது 1969-முதல் பகுதி, பகுதியாக, 'காந்தி வித்தியாலயம்' சார்பில் வெளியிடப்பட்டது. அன்றைய தொழில் நுட்ப முறையில் பல அச்சகங்களை நாடி, பலவிதமான தாள்களில் வெளிவந்தன. இருப்பினும், பதினொரு தொகுதிகளுக்கும் வடிவம் ஒன்றே. சுமார் இருபதாண்டுகளாக இவற்றின் பிரதிகள் கிடைக்கப் பெறாமையால் தமிழ்ப் படிப்பவர்களுக்கு ஏமாற்றமளித்தது. இன்று மிக மிக முன்னேற்றம் அடைந்த அச்சுத்தொழில் முறையில் இவற்றை வடிவமைத்து மறுபதிப்புக்காக வெளியிட 'தி பார்க்கர்' பதிப்பகத்தார் முன்வந்துள்ளனர். அவர்களுக்கு நன்றி.

திருச்சிற்றம்பலம். **அ. சிதம்பரநாதன்**
15. 11. 2004.

# நன்றியுரை

தமிழ் இலக்கிய வரலாறு - நூற்றாண்டு முறை தொகுதிகள் அனைத்தையும் அறிஞர் மு. அருணாசலம் ஐயா அவர்கள் குறித்து வைத்திருந்த திருத்தங்களுடனும் புதிய கருத்துகளுடனும் புதிதாக வடிவமைத்து மறுபதிப்புச் செய்து வெளியிட எமது நிறுவனத்திற்கு அனுமதி அளித்த ஆசிரியரின் புதல்வர் திருமிகு அ. சிதம்பரநாதன் அவர்கள் மற்றும் அவரது சகோதரிகள் அனைவருக்கும் எமது மனப் பூர்வமான நன்றிகள்!

இம்முயற்சியில் என் துணை நின்று வழிநடத்தியவர் மனைவி இ.சா. பர்வீன் சுல்தானா அவர்கள்.

இத்தொகுதிகளின் உருவாக்கப்பணியில் என் அலுவலகப் பணியாளர்களுடன் சேர்ந்துகொண்டு என் சிந்தனைக்கு வலுச் சேர்த்து உழைத்தவர், மதுரை அமெரிக்கன் கல்லூரி, தமிழ்த்துறை விரிவுரையாளர் நண்பர் உல. பாலசுப்பிரமணியன் அவர்கள்.

உத்வேகம் கொடுத்து எம்மை உழைக்க வைத்தவர் தமிழக சட்டமன்ற சபாநாயகர் காளிமுத்து ஐயா அவர்கள். தோள்கொடுத்து உதவியவர்கள் : மதுரை வணிகவரி உதவி ஆணையர் திரு. தேவேந்திர பூபதி, நண்பர் சி. ஆறுமுகம், அமுத நிலையம் உயர்திரு வீரபாகு, மைத்துனர் காலிப் அல்தாப், மைத்துனர் முகமது தானியெல், திரு. முருகன் (முருகன் பேப்பர்ஸ்), எனது தம்பிகள் வே. உதயசூரியன், வே. சிற்றரசு, அண்ணன் கோணங்கி, நண்பர் பிரபாகர் ஜெயராஜ், எம். ஜெயசந்திரன், ஜெ. சந்திரா, நண்பர்கள் நாசர், சாகுல், ஆனந்த்.

எமது நிறுவனப் பணியாளர்கள் : ஜெ. கலைவாணி, அ. ஜெயந்தி, எஸ்.என். விஜயகுமார், ஜெ. சரவணன், ஜெயகுமார், தனசேகர், பால சுப்பிரமணியன், பஹிமா, மெஹபூப் சுபுஹானி, சைதாபானு, கயல் விழி, தேன்மொழி, பாத்திமா, சுகுணா, அனுராதா, சுமதி, தேவி, ஜாய்ஸ், நஸ்ரின், நஜீலா, சரஸ்வதி, தமிழ்ச்செல்வி, ஈஸ்வரி, திலகவதி, சித்ரா, கவிதா, வசந்தி, ராஜேஸ்வரி, ஷமா, கல்பனா, சையதுஅலி பாத்திமா, ஜோதி, நிஷா, கலா, பவானி, ராணிசித்ரா, மல்லிகா, அம்மு, ரதிதேவி - இதனால் சகலமானவருக்கும் எமது நன்றிகள்.

# பதிப்புரை

தமிழ் இலக்கிய வரலாறு - நூற்றாண்டு முறை அடிப்படையிலான தொகுதிகளின் வெளியீட்டுத் திட்டத்தில், இந்நூல் 13ஆம் நூற்றாண்டு வரலாறு. இதுபற்றி ஆசிரியர் இந்நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"தமிழ் இலக்கிய வரலாற்றையும் தமிழ்ப் புலவர் வரலாற்றையும் நூற்றாண்டு முறையில் ஆராய்ந்து கூறும் எமது முயற்சியில் இது மூன்றாவது புத்தகமாக வெளிவருகின்றது.

இருபது நூற்றாண்டுகளின் தமிழ் இலக்கிய வரலாற்றையும் பதினைந்து புத்தகங்களாக வெளியிடும் எமது திட்டத்தின்படி, இதனோடு மூன்று புத்தகங்கள் வெளியாகியுள்ளன... ஆரம்ப நூற்றாண்டுகளை ஆராய்ந்து எழுதுங்கால், பதினைந்து புத்தகம் என்ற எல்லை ஒருகால் இன்னும் அதிகமாதலும் கூடும்."

ஆசிரியர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருப்பினும் 1969ஆம் ஆண்டு தொடங்கி, 1977ஆம் ஆண்டு வரை பதினொரு தொகுதிகளே வெளிவந்தன. மேற்படி தொகுதிகளில் 1969ஆம் ஆண்டில் 14ஆம் நூற்றாண்டு, 15ஆம் நூற்றாண்டு வரலாற்றுத் தொகுதிகளும், 1970ஆம் ஆண்டில் 13ஆம் நூற்றாண்டு வரலாற்றுத் தொகுதியும், 1971ஆம் ஆண்டில் 11ஆம் நூற்றாண்டு வரலாற்றுத் தொகுதியும், 1972ஆம் ஆண்டில் 10ஆம் நூற்றாண்டு வரலாற்றுத் தொகுதியும், 1973ஆம் ஆண்டில் 12ஆம் நூற்றாண்டு பாகம்-1, பாகம்-2 ஆகிய வரலாற்றுத் தொகுதிகளும், 1975ஆம் ஆண்டில் 9ஆம் நூற்றாண்டு பாகம்-1, 16ஆம் நூற்றாண்டு பாகம்-2 ஆகிய வரலாற்றுத் தொகுதிகளும், 1976ஆம் ஆண்டில் 16ஆம் நூற்றாண்டு பாகம்-3 வரலாற்றுத் தொகுதியும், 1977ஆம் ஆண்டில் 16ஆம் நூற்றாண்டு பாகம்-1 வரலாற்றுத் தொகுதியும் காந்தி வித்தியாலயம் பதிப்பாக வெளிவந்தன.

இவ்வரலாற்றுத் தொகுதிகள் மொத்தம் 14 நூல்களாக வெளிவருகின்றன. ஆசிரியர் வெளியிட்டவை 11. நாம் புதிதாகச் சேர்த்தவை 3. இவற்றுள் 14வது தொகுதியானது மேற்படி நூல்

களில் உள்ள வரலாற்று அட்டவணைகள் முன்னுரைகளுடன் சேர்த்துத் தொகுக்கப்பட்டுள்ளன.

அவரால் எழுதி வெளியிடப்பட்ட இலக்கிய வரலாற்றுத் தொகுதிகள் அனைத்தும் பக்கத்துக்குப் பக்கம் வெள்ளைத் தாள் இடையிட்டுக் கட்டமைப்புச் செய்யப்பட்ட ஒரு தொகுப்பு அவரது நூலகத்தில் காணப்பட்டது. இத்தொகுதிகளில் பல புதிய செய்திகளும் ஆங்காங்கே திருத்தங்களும் ஆசிரியரால் குறித்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றை ஒவ்வொரு தொகுதி யிலும் சேர்த்தும் திருத்தியும் முறைப்படுத்தியுள்ளோம்.

இத்தொகுதியில் பிற்சேர்க்கையாக இடம்பெற்ற செய்தி கள் உரிய இடங்களில் சேர்த்து முறைப்படுத்தப்பட்டுள்ளன.

1992ஆம் ஆண்டளவில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வில் ஈடுபட்டபோது இத்தொகுதிகளை மறுபதிப்புச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு ஏற்பட் டது. 1994ஆம் ஆண்டில் பதிப்பகம் தொடங்கியும், பதினொரு ஆண்டுகள் கழித்தே இவற்றை மறுபதிப்புச் செய்யும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அதேவேளை முப்பத்தைந்து ஆண்டு களுக்குப்பின் இந்நூல், திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பாக வெளிவருகிறது.

தன் தந்தையாரின் இவ்விலக்கியப் பணியை மீண்டும் தமிழ் மக்கள் மத்தியில் வெளிக்கொணர எமக்கு அனுமதியளித்து, தனது வீட்டில் தங்கவைத்து எம்மை ஊக்கப்படுத்தியவர் அவர் மகனார்; உணவளித்து எம்மை உபசரித்தவர் அவர் மருமகளார்; இவர்கள் மிகுந்த போற்றுதலுக்கு உரியவர்கள்.

ஒரு தனி மனிதன் தனது வாழ்நாளில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதுவதற்காகவே செல விட்டிருக்கிறார். இத்தொகுதிகளை அவர் வெளியிட்ட அன்றைய காலகட்டத்தில் இருந்த அச்சமைப்பு வசதிகள் அவரது பாரிய சிந்தனைக்கு ஈடு கொடுக்காமையினால் அவரது விருப்பப்படி இத்தொகுதிகளை அவரால் வடிவமைக்க முடியவில்லை; இக் குறைபாட்டை நீக்கும் முகமாகவும் அவரது பணியைப் போற்றும் விதமாகவும் அன்னாரின் மகனார் ஒத்துழைப்பின் அடிப்படை யில் எமது நிறுவனம் இவற்றை வெளியிட்டு மகிழ்கிறது.

சென்னை
25.12.2005.

வே. கருணாநிதி

## முதல் பதிப்பின் முகவுரை

என்றும் நாம் யாவர்க்கும் இடைவோம் அல்லோம்;
இருநிலத்தில் எமக்கெதிரா ஆரும் இல்லை;
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்;
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்;
ஒன்றினால் குறைஉடையோம் அல்லோம் அன்றே;
உறுபிணியார் செறல் ஒழிந்திட் டோடிப் போனார்:
பொன்றினார் தலைமாலை அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணிய புண்ணியத்து ளோமே. – அப்பர்

தமிழிலக்கிய வரலாறு முழுவதையும், செம்மையாய் வரலாற்று முறையில் அறிவதற்கும் அதன் வளர்ச்சியையும் போக்குகளையும் சிறப்புகளையும் எடுத்துரைப்பதற்கும் அடிப்படையான முதல் தேவை, நூல்கள் அனைத்தையும் குறித்த, திட்டமான கால அறிவு. முக்கியமான ஒவ்வொரு நூலின் காலமும் தெளிவாகத் தெரியவேண்டும், ஒரு காலத்தில் உள்ள நூல்கள் இவை இவை என்று வரையறுத்துக் கொள்ளவும் வேண்டும். இத்தகைய கால வரையறை தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தவரையில் இல்லை. எம் நூல்கள் இவ்விரு வகை வரையறையையும் செய்து தரும் முயற்சியாகும். காலத்தைக் குறித்த திட்டமான அடிப்படை வரையறுத்தபின், அதன்மேல்தான் நூல் ஆராய்ச்சி என்ற கட்டிடத்தைச் செம்மை பெற எழுப்புதல் இயலும்.

### இவ்வரலாற்று நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றையும் தமிழ்ப் புலவர் வரலாற்றையும் நூற்றாண்டு முறையில் ஆராய்ந்து கூறும் எமது முயற்சியில் இது மூன்றாவது புத்தகமாக வெளி வருகின்றது. 14, 15 ஆகிய நூற்றாண்டுகளின் வரலாறுகள் இரு தனிப் புத்தகங்களாக விரிந்த முறையில் சென்ற சௌமிய சித்திரை மாதம் முதல் தேதி வெளியாயின. அவற்றைத் தொடர்ந்து இப்பதின் மூன்றாம் நூற்றாண்

டின் வரலாறு வெளியாகிறது. இருபது நூற்றாண்டுகளின் தமிழ் இலக்கிய வரலாற்றையும் பதினைந்து புத்தகங்களாக வெளியிடும் எமது திட்டத்தின்படி, இதனோடு மூன்று புத்தகங்கள் வெளியாகி யுள்ளன. 10, 11, 12, நூற்றாண்டு வரலாறுகள் விரைவில் அச்சாகி வெளிவரும். ஆரம்ப நூற்றாண்டுகளை ஆராய்ந்து எழுதுங்கால், பதினைந்து புத்தகம் என்ற எல்லை ஒருகால் இன்னும் அதிக மாதலும் கூடும்.

இவ்வரலாற்று நூல்களின் அமைப்பைப் பற்றிய எல்லாக் கருத்துக்களும் பதினான்காம் நூற்றாண்டு வரலாற்றின் முக வுரையில் மிக்க விரிவாயும் தெளிவாயும் உரைத்திருக்கிறோம். எல்லா வகையிலும் அம்முகவுரை இத்தொடர் நூல்கள் அனைத் துக்கும் ஒரு பொது முகவுரையாகவே அமைந்துள்ளது. இவ் வரலாற்று நூல்களுக்குத் தோற்றுவாய் யாது, முன் எழுந்த நூல் கள் யாவை, இன்றைய வரலாற்று நூல்களின் போக்கு யாது, வரலாறுகளின் விளக்கமின்மைக்கும் கால வரையறையிலுள்ள பிழைக்கும் காரணம் யாது, இங்கு எந்த முறையில் வரலாறுகள் ஆராய்ந்து விளக்கப்படுகின்றன, காலம் எம் முறையில் உறுதி செய்யப் பெறுகிறது, இவ்வாராய்ச்சிக்கு ஆதார நூல்கள் யாவை, திட்டமாக ஆராய்ந்து முடிவு செய்யப்பெறும் ஆசிரியர் - நூல்கள் யாவை என்பன முதலான பல பொருள்கள் அங்கு விளக்கிச் சொல்லப்பட்டன. இப்புத்தகமானது, அதன் தொடர்ச்சியாகவே அமைந்திருப்பதால், இந்நூலைப் படிக்கத் தொடங்குமுன், பதி னான்காம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றின் முகவுரையையும் முன்னுரையையும் ஒரு முறை கற்றறிதல் மிக்க பயனுடையதா யிருக்கும்.

## இந்நூற்றாண்டு வரலாறு

இந்த நூலும், முன் சென்ற இரு நூல்களையும் தழுவி, நூலா சிரியர் பற்றிய இலக்கிய வழக்காறுகள், அவர் வாழ்க்கைச் சரித் திரம், நூலாராய்ச்சி, கால வரையறை என்ற பொருள்களை முறையே கூறுவதாய் அமைந்திருக்கும். வரலாறு ஆராயப் பெறு கின்ற ஆசிரியர்களின் தொகை இந்த நூற்றாண்டிலும் ஐம்பதுக்கு மேல் உள்ளது. இவர்களுள் பொதுவாக இலக்கிய வரலாற்றா ராய்ச்சியாளர் நன்கறிந்த பெயர்கள் - புகழேந்தி, பரிமேலழகர், பவணந்தி முனிவர், நாற்கவிராச நம்பி, பேராசிரியர், சேனா

வரையர் போன்ற மிகச் சிலரே. ஏனைய ஆசிரியர்களைப் பற்றி வரலாற்று நூல்களில் விளக்கம் காண்பது அரிது. இவர்களுள் ளும், நம்பி காலம் விளங்கியதில்லை; புகழேந்தி போன்றோர் காலம் கூறுவதில் மிக்க முரண்பாட்டைக் காண்கிறோம் இந் நூலில் முரண்பாடுகளை ஓரளவுக்கு அமைவுபடுத்தி, தொடர் பின்றிக் கிடந்த செய்திகளைத் தொடர்பாக்கி, வரலாற்றை ஒரு முகப்படுத்த முயன்றிருக்கிறோம். ஓரளவு நாட்டின் வரலாற்றைத் தழுவியே இலக்கிய வரலாற்றையும் நடத்திச் செல்ல முயன்றி ருக்கிறோம். நாட்டின் வரலாறு முன்னுரையில் சுருக்கி உரைக் கப்பட்டுள்ளது.

நூற்றாண்டு வரையறை என்பது ஒரு செயற்கையான வரை யறையே. சில ஆசிரியர் ஒரு நூற்றாண்டில் பிறந்து வளர்ந்து, அடுத்த நூற்றாண்டில் வயதில் முதிர்ச்சி பெற்று நூல்கள் செய்து புகழ் எய்தியிருத்தல் இயல்பே. உதாரணம்: குலோத்துங்க சோழன் கோவையாசிரியர் இவர் நூல் செய்தது, நிலைமைகளை யொட்டி கி.பி. 1205 என்று எழுதுகிறோம். இவர் 12ஆம் நூற்றாண்டிலேயே பெரும் புலவராயிருந்திருப்பார். எனினும், இவர் செய்த நூலின் காலம் 1205ஐ ஒட்டியிருக்குமென்று கருதுவதால் இவர் வரலாற் றையும் நூலையும் 13ஆம் நூற்றாண்டு வரலாற்றில் கூறுகிறோம்; இக்குலோத்துங்க சோழனுக்குரிய ஆட்சிக் காலம் கி.பி. 1178 - 1218 என்பதையும் கருதுக. இதுபோல், நன்னூலார் காலம் கி.பி. 1212 என்று கூறுகிறோம்: இது எதனால் என்றால், இவரை ஆத ரித்த சீயகங்கன் பொறித்த கல்வெட்டொன்று 1212க்குரியதாய்த் தெரிவதால்; பவணந்தி முனிவர் நன்னூல் செய்தது இவ் ஆண் டுக்கு முன்னுமிருக்கலாம், பின்னுமிருக்கலாம். மிக முன்னாக இருந்தால், 12ஆம் நூற்றாண்டின் இறுதியாதலும் கூடும். எனி னும், தெரிந்த ஓர் எல்லையைக் குறிப்பிட்டுக் கூறுதலே சாத்தி யம் ஆதலால், இவரை 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர் என்று கூறுகிறோம்.

மிகப் பலவான உரைகளையும் உரையாசிரியர்களையும் தொகுத்து, ஓரிடத்தில் அவர்கள் பணியைச் சீர்தூக்க முயன்றி ருப்பது, இந்நூலின் ஒரு சிறப்பு அம்சமாகும். கி.பி. 11 - 14 ஆம் நூற்றாண்டுகள், இலக்கிய இலக்கண உரைகள் தோன்றி வளர்ந்த ஒரு செழிப்பு மிக்க காலப் பகுதி என்றால், அதனுள் பதின்மூன் றாம் நூற்றாண்டின் சாதனை என்ன என்பதையும் நன்கு ஆராய்ந்

திருக்கிறோம். பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க் கணக்கு, ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் ஆகிய இலக்கியங்களின் உரைகள், இலக்கண உரைகள் - ஆகியவற்றை இங்கு முதன்முறையாக ஒரு தொகுப்பாய்க் கருதுகிறோம். இங்கு ஆராயப் பெற்ற ஆசிரியர் பெயர் விளக்கமில்லாத - சிற்றுரைகள் யாவும் 13ஆம் நூற்றாண்டில் தான் எழுந்தன என்பது இதனால் பொருளன்று. காலம் சிறிது முன் பின்னாக இருத்தல் இயல்பே; அதுவே உண்மையுமாகும். எனினும், இவ்வுரைகளின் காலம் தனித்தனியே திட்டமாகத் தெரியாமையால் இங்கு ஒரே இடத்தில் தொகுத்துச் சொல்கிறோம். பெரும் பகுதி இந்நூற்றாண்டுக் குரியதே.

இக்கால ஆசிரியர்களுள், சைவ நூலாசிரியர்கள் நன்கு அறியப்பட்டவர்கள். வைணவ ஆசாரிய பரம்பரையில் பேராசிரியர் சிலர் இக்காலத்தில் வாழ்ந்து பெருநூல் செய்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் நூல்களைத் தமிழில் செய்யாமல் வடமொழியும் தமிழும் கலந்த மணிப்பிரவாள நடையில் செய்திருக்கிறார்கள்: அதுபற்றி அவர்கள் நூல்களையோ வரலாற்றையோ இலக்கிய வரலாற்றில் யாரும் சொல்லியதில்லை. அவர்கள், தங்கள் வாழ்க்கையாலும் எழுத்தாலும், வைணவ மக்கள் நாலாயிரத்தைப் பயின்று அதன் வழி ஒழுகி, அதுவே கதியென்று வாழும்படி செய்தவர்கள். நிச்சயமாக அவர்களுக்கு இலக்கிய வரலாற்றில் (அது சமய இலக்கியமாயிருந்தாலும் சரியே) சிறப்பான இடம் உண்டு. 9ஆம் அத்தியாயத்தில் மணிப்பிரவாளம் பற்றிய சிறப்பான விளக்கத்தைக் காணலாம். இக்காலப் பகுதியில் சித்தர் யாரும் விளக்கம் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை.

என்ன காரணமோ, சமயத் துறையில் சில நூல்கள் விளக்கம் பெற்றிருக்க, சில நூல்கள் விளக்கம் பெறவில்லை. பெறாதவற்றில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது, பகவத்கீதையின் தமிழ் மொழி பெயர்ப்பாகிய பரமார்த்த தரிசனம் என்பது; ஸ்ரீ பட்டனார் என்பவர் செய்தது. இந்நூல் சிறந்த நடையில் செய்யப்பட்டது; சிறந்த ஆட்சி பெறுதற்குரியது.

நூலகத்துப் பலவிடத்தும், வரலாற்றறிவுக்கும் நூலறிவுக்கும் அவசியமான அனேகம் பாடல்களை, பயன் கருதிச் சேர்த்திருக்கிறோம்.

இது இருண்ட காலப்பகுதி என்று எழுதினோர் உளர். வரலாற்றுத் துறையில் இந்த நூற்றாண்டு நன்கு விளக்கம் பெற்றுள்ளது. அதையொட்டி, பவணந்தி முனிவர் போன்றோர் வரலாறுகள் சிறந்த விளக்கம் பெற்றுள்ளன; நன்னூலும் நளவெண்பாவும் தோன்றிய வரலாறறிந்த காலத்தை இருண்ட காலம் என்று சொல்வது பொருந்தாது. ஆயினும், பொதுவாய்க் காலத்தால் பின்னோக்கிச் செல்லச் செல்ல, ஆதாரங்கள் கிடைப்பது அருமை; வரலாற்று உண்மைகளைக் காண்பது கஷ்டம். இங்கும், இன்னும், விளக்கம் பெறாத இடங்கள் உள்ளன. இந்த அளவாவது விளக்கம் தர முடிந்தது பற்றி எமக்கு மகிழ்ச்சி.

**விளக்கங்கள்**

ஆசிரியர் வரலாறும், காலக் குறிப்பும், நூல் ஆராய்ச்சியும், இந்நூலின் உறுப்புக்கள். இங்கு அறியப்படும் நூல்களைத் தொகுத்து, இலக்கியம், இலக்கணம், உரை, சைவம், வைணவம் என்ற முறையில் பாகுபடுத்தி, அப்பாகுபாடு ஒவ்வொன்றிற்கும் தனித்த முன்னுரை ஒன்று எழுதியிருக்கிறோம். அம்முன்னுரை ஒரு சிறப்பான பகுதி; இத்தனைக்கும் மேலாக, குறிப்பிடத்தக்க சிறப்புப் பகுதிகள் பல இந்நூலில் உள்ளன. இவை வேறு இலக்கிய வரலாறுகளில் காணப்படாதனவாயும் புதிய விளக்கம் கொண்டனவாயும் இருக்கும்.

இவற்றுள் குறிப்பிடத்தக்க சில பின்வருவன: நூல் பற்றிய விளக்கம் - சிற்றட்டகம், பரமார்த்த தரிசனம், எட்டுத்தொகை பதினெண் கீழ்க்கணக்கு உரைகள்; காலம் பற்றிய விளக்கம் - நாற்கவி ராச நம்பி, மெய்கண்டார், மனவாசகங் கடந்தார், அறநெறிச்சாரம், யசோதர காவியம், குலோத்துங்க சோழன் கோவை, சங்கர சோழனுலா, இரணியவதைப் பரணி; வரலாற்று விளக்கம் - பாட்டியல், புராணங்கள், சைவ இலக்கியம், வைணவ பரம்பரை, பேராசிரியர்; கருத்து விளக்கம் - பௌத்தநூல்களின் நிலை, இலக்கண நூல் வளர்ச்சி, இலக்கண மரபு, உரையாசிரியரால் விளைந்த தமிழ் வளம், மணிப்பிரவாளம், வேதாந்தமும் தமிழும்.

எழுதிக் கொண்டு போகப் போக, கருத்துக்கள் முறையாகத் தெளிவாகின்றன. மொழி வரலாற்றிலும் இலக்கிய வரலாற்றிலும், இந்த நூல்களில் கருத்துத் தெளிவு பெற்று வருவதைக் காண

லாம். முதலில் வெளிவந்த எமது இரு நூல்களில் சொல்லப்பட்ட இலக்கிய விமரிசனம், இந்த நூலிலும் அடுத்து வரும் நூல்களிலும், பின்னும் விரிந்து வருவதைக் காண முடியும்.

சார்பின்றி யாரும் எதுவும் சொல்ல முடியாது, நூல் செய்ய முடியாது. எனினும், இங்கு சமயச் செய்திகளைக் கூறுமிடத்தும் நூல்களை ஆராயுமிடத்தும், இயன்ற வரையில் எந்தச் சார்புமின்றி நடுநிலையில் நின்று விருப்பு, வெறுப்பு இன்றிப் பொது நோக்காக உண்மை காணவும், வரலாறு கூறவும், நூல்களை மதிப்பிடவும் முயன்றிருக்கிறோம். வைணவ ஆசிரியர் வரலாறு போன்றவை இதை நன்கு காட்டும். அன்றியும், யசோதர காவியம் மிகவும் கீழ்த்தரமான நூல் என்று குறிப்பிட்ட நாம், அதே பகுதியில் மற்றொரு சைன நூலான அறநெறிச் சாரத்தைச் சிறப்பித்துக் கூறியிருப்பதனாலும் இது நன்கு விளங்கும்.

இங்கு ஆராய்ந்து கூறப் பெற்றுள்ள முடிவுகள் யாவும் ஒரே வகையான ஆதாரங்களைக் கொண்டவையல்ல. வரலாற்றுச் சான்றுகள் கிடைத்தவரையில் அவை தக்க ஆதாரங்களாகும். சம்பிரதாயமாக வழங்கி வருகின்ற கதைகள் இங்கு தகுதி நோக்கிக் கொள்ளப்பட்டுள்ளன. சில சமயம் பிற சூழ்நிலைகளையும் ஆதாரமாய்க் கொண்டிருக்கிறோம். கல்வெட்டுச் சான்றுகள் சிறந்த ஆதாரங்களாய் உதவியுள்ளன. சில சமயம் சொல்லாட்சியும் பயன்பட்டிருக்கிறது. வேறெந்தக் காலக் குறிப்புக்களும் சொல்ல முடியாதபோது, தக்க காரணங்களால் இங்கு சொல்லப்பட்டுள்ள முடிவுகளையே கொள்ள வேண்டும். பின் செய்யும் ஆராய்ச்சியினால் வேறு திட்டமான சான்றுகள் கிடைத்து இம்முடிவுகளை மாற்றிக்கொள்ள நேர்ந்தால் அது பிழையாகாது, குறைவுமாகாது.

இங்கு இலக்கியங்கள் மட்டுமல்லாமல், எமது முந்திய இரு நூல்களில் மேற்கொண்டுள்ள முறையைப் பின்பற்றி, இலக்கணங்களையும், சமய நூல்களையும், பிற துறை நூல்களையும் கிடைத்தவரை ஆராய்ந்து குறிப்பிட்டிருக்கிறோம். சிறப்பாய்ச் சொல்லத்தக்கது சித்தராரூடம் என்ற நூல்.

### ஆதார நூல்கள்

ஆதார நூல்களாகச் சொல்லத்தக்க நூல்கள் சில. தமிழ் நாவலர் சரிதை (17 நூ.), புலவர் புராணம் (19 நூ.), மண்டல

சதகங்கள் சில என்பன. இவற்றுள் தமிழ் நாவலர் சரிதை பல பண்டைய வரலாறுகளையும் செய்திகளையும் தொகுத்துந் தந்த போதிலும், முழுமையும் கால முறையாக அமையவில்லை. அன்றியும், சரித்திரச் சம்பவங்கள் மட்டுமன்றி, வெறும் கதைகளும் அதனுள் சேர்ந்துள்ளன. செவிவழியாக வந்த செய்திகள் ஆதலால், ஒருவர் வரலாற்றை மற்றொருவர் மேல் ஏற்றிச் சொல்லிய கூற்றுக்களும் பல உள்ளன. இக்காரணங்களால், பிற சான்றுகள் இருந்தால் மட்டுமே அதன் குறிப்புக்களை நாம் கொள்ள முடியும்.

திருப்புகழ் - தண்டபாணி சுவாமி என வழங்கிய பெரியார் சென்ற நூற்றாண்டின் இறுதியில் 75 புலவர் வரலாறுகளைத் தாம் கேட்டு அறிந்த அளவில் புலவர் புராணம் என்ற மூவாயிரம் பாடல் கொண்ட பெருநூலாகப் பாடி வைத்தார். தாம் பாடியதற்கு ஆதாரம் - "முன்னோர் நவில் மொழியும் கலைவாணி நடம் புரியும் நாவும், வேற்பிடித்து மூலைதொறும் போய்த் திருவருட் பேராடல் - விளைக்கும் முழு துணர் புலவன் விரை மலர் தாள்களுமே" என்று அவரே கூறியுள்ளார். (நூற் சிறப்புப் பாயிரம் 6ஆம் பாடல்.) இந்நூல் சம்பிரதாயக் கதைகளையே வேறுபடுத்திச் சொல்கிறது. வரலாற்றுக் கண்கொண்டு பார்ப்பதற்கு இது எவ்வகையிலும் பொருந்துவதன்று.

தமிழ் இலக்கிய வரலாற்றைப் பாகுபடுத்திக் கூறும் பல முயற்சிகளுள், யாழ்ப்பாணத்துச் சபாபதி நாவலர் எழுதிய திராவிடப் பிரகாசிகை ஒரு நல்ல முயற்சி. இந்நூல் 1889 - 1927 ஆண்டுகளில் இருமுறை அச்சாயிற்று. இது, தமிழின் தெய்வ பழமை மரபியல், இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், சாத்திர மரபியல், ஒழிபியல் என்ற ஐந்து இயல்களாக எழுதப்பட்ட நூல் என்பதைத் தவிர, வரலாற்று ஆராய்ச்சிக்குப் பயன்படத் தக்கதன்று: நூற் பொருளாராய்ச்சி மட்டும் கருதுவோர் இவ்வைந்து தலைப்புக்களிலும் இந்நூலின் பகுதிகளைப் பயின்று பயனடைதல் கூடும்.

இனி, வரலாற்றுச் செய்திகளைக் குறிப்பிடுகின்ற மண்டல சதகங்கள் நான்கு இங்கு குறிப்பிடத்தக்கன. படிக்காசுப் புலவர் செய்த தொண்டை மண்டல சதகம் (17 நூ.) கார்மேகக் கவிஞர் செய்த கொங்கு மண்டல சதகம் (18 நூ.) ஆத்மநாத தேசிகர் செய்த சோழ மண்டல சதகம் (18 நூ) ஐயம் பெருமாள் என்பவர் செய்த

பாண்டி மண்டல சதகம் (18 நூ.) என்பன இங்கு கருதத்தக்கன. இவற்றுள் முதல் மூன்றும், உரை, மேற்கோள் பாடல் முதலிய அம்சங்களுடனும், ஏனையது மூலம் மாத்திரமும் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. பொதுவாக, இவ்வகை நூல்களில் இரண்டு குறை பாடுகள்: ஒன்று, எல்லாம் புராணக் கதை என்ற அடிப்படையில் எழுந்தனவேயன்றி, வரலாற்று அடிப்படையில் அல்ல. இரண்டாவது, நூலாசிரியரும் உரையாசிரியரும், எல்லாப் புலவர் வரலாறுகளும் அவ்வரலாற்று ஊர்களும் தங்கள் தங்கள் மண்டலத்துக் குரியனவாகத் தாபிக்க முயல்கிறார்கள். ஒரே ஆசிரியர் அல்லது ஒரே ஊர், தங்களுக்கே உரியது என்று பல மண்டலத்தார் பாடுகிறார்கள்: ஆதலால் இவர்கள் அனைவருமே ஆதாரமாகக் கொள்ளத்தக்கவராகார். தொண்டைமண்டல சதகம் பழமையாயினும், ஆராய்ந்தே கொள்ள வேண்டியிருக்கிறது. அன்றியும், பாண்டி மண்டல சதகம் என்பது, இன்னும் பிற்காலத்தெழுந்த போலி நூலோ* என்ற ஐயமும் எழுகின்றது. கார் மண்டல சதகம் ஒரு போலி நூலே - அதை நாம் இங்கு கூறவில்லை.

### பிற்சேர்க்கைகள்

பிற்சேர்க்கையாகப் பல செய்திகளும் அட்டவணைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. நூலகத்து இருக்கத்தக்க சில குறிப்புக்கள், அங்கு விட்டுப் போனமையால் முதல் பிற்சேர்க்கையாக பின்னே சேர்க்கப்பட்டுள்ளன; அவற்றை உரிய இடத்தில் பொருத்தி வாசித்துக் கொள்க. காலிங்கர் (அத்தியாயம் 2) தம் குறள் உரையில் காட்டும் இரண்டு வரிகள் விவேக சிந்தாமணி என்ற ஒரு தனியான பிற்கால நீதி நூலில் காணப்படுகின்றன. இது பற்றிய குறிப்பு இரண்டாம் பிற்சேர்க்கையாக உள்ளது. இனி, குலோத்துங்க சோழன் கோவை முதலியவை பற்றி இலக்கிய வல்லுநரும் சரித்தர வல்லுநரும் தவறான முடிவுகளைச் சொல்லுகிறார்கள். ஆராய்ச்சியாளர் பலருக்கு உண்மை காண இயலாதவாறு பெரும் குழப்பம் ஏற்படுகிறது. விருப்பு வெறுப்புக்களே மாறுபாடான கருத்துக்களுக்குக் காரணம். பிற்காலக் கல்வியாளர் தெளிவு

* போலி நூல் என்பது பிற்காலப் புலவ்ரொருவர் பல செய்திகளைப் பழைய நூல் என்று கருதும்படி பாடி வைப்பது என்ற கருத்தில் கூறியிருக்கிறோம். இன்னிலை, மூவடி முப்பது என்ற பெயரோடு இப்போது அச்சாகியுள்ள நூல்கள் இதற்குச் சிறந்த உதாரணங்கள்.

பெற உணர்தல் பொருட்டு இதுபற்றி விளக்கமான ஒரு குறிப் பைப் பிற்சேர்க்கை மூன்றாகச் சேர்த்திருக்கிறோம்; குறை கூறு வதற்காக அன்று. மற்றப்படி வழக்கமாயுள்ள அட்டவணைகள் இங்கு உள்ளன. இப்புத்தகத்தில் ஆராயப்பட்ட நூல்களின் அட்ட வணை ஒன்று புதிதாய்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

இவையன்றி, நூலகத்திலும் பல அட்டவணைகள் சேர்க்கப் பட்டுள்ளன. திருவாய்மொழி வியாக்கியான அட்டவணையில் சிறப்புடையன ஐந்து மட்டும் காணலாம். இவையன்றி, வேறு மூவாயிரப்படி ஒன்றும் பதினெண்ணாயிரப்படி ஒன்றும், பிற் காலத்தில் செய்யப் பெற்றிருந்தன என்றும் சொல்வர். ஈட்டுக்கு, சீயர் அரும்பதம், அடைய வளைந்தான் அரும்பதம் என்ற இரண்டு அரும்பத உரைகள் ஏற்பட்டிருந்தமை அதற்குரிய தனிச் சிறப்பு.

அரசியற் சூழ்நிலையை நன்கு உணர்தற்குத் துணைபுரியும் பொருட்டு, இக்காலத்துக்குரிய சோழ பரம்பரையின் அட்ட வணையும், பாண்டிய பரம்பரையின் அட்டவணையும் சேர்க்கப் பட்டுள்ளன. வைணவ நூலாசிரியர் சரிதங்களை நன்கறியும் பொருட்டு வைணவ ஆசாரியர் பரம்பரை அட்டவணையொன் றும் சேர்க்கப்பட்டுள்ளது. சைவ ஆசாரிய பரம்பரையைப் பொறுத்தவரையில், அடுத்த நூற்றாண்டில் தான் இது விரி வடைந்து வளர்ந்தது. இந்நூற்றாண்டுக்குரியோர் மெய்கண்டா ரும் அவர் மாணாக்கரான அருணந்தி சிவமும் மனவாசகங் கடந்தாரும் ஆவர்; இவர்களுக்குப் பரம்பரை அட்டவணை இங்கு சேர்க்கவில்லை; 13 - 16 நூற்றண்டுகளுக்கான விரிவான சைவ பரம்பரை அட்டவணைகள் எட்டு, பதினான்காம் நூற்றாண்டு வரலாற்றில் சேர்க்கப்பட்டுள்ளன. வழக்கம் போல் இக்காலப் பகுதிக்குரிய ஆசிரியர் கால அட்டவணையும், கால ஒப்புமை அட்டவணையும், பிற அகராதிகளும் இறுதியில் சேர்க்கப் பட்டுள்ளன.

ஆராய்ச்சிக்கு உதவக்கூடிய நூற்பதிப்புக்கள் குறைவு. ஐய ரவர்களும் வையாபுரிப் பிள்ளையவர்களுமே ஏட்டில் உள்ள பாடத்தை எழுதி நூல் பிரதி செய்தோரால் விளைந்த வழுக்களை நீக்கிப்பாடத்தை உள்ளபடியே அச்சிட்டவர்கள். சந்தேகமிருந் தால் அப்படியே குறிப்பிட்டார்கள். ஆனால் பின்வந்த பதிப் பாளர் அனைவரும், தாமோதரம் பிள்ளை உள்பட, சந்தேகம்

விளைந்த இடங்களில் தங்கள் கருத்துப் போல் திருத்திவிட்டார்கள். இன்னும் சிலர் பாடல்களையே தங்கள் கருத்துக்களுக்கு இயையத் திருத்திக் கொண்டார்கள். அப்படிப்பட்ட பதிப்புக் களை நம்பி ஆராய்ச்சி மேற்கொள்வதில் பயனில்லை. இருப் பினும், நூல்களை அச்சிட்டுத் தந்த பதிப்பாளர் வெளியீட்டாளர் பலருக்கும் ஒரு வகையில் தமிழுலகம் கடமைப்பட்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை. இந்த ஆராய்ச்சி வரலாற்றில் எமக்குதவி யவை டாக்டர் சாமிநாதையருடைய பதிப்புக்கள், மு. இராகவை யங்காருடைய ஆராய்ச்சித் தொகுதி, பெருந்தொகை, சாசன தமிழ்க்கவி சரிதம், வையாபுரிப்பிள்ளை நூல்கள், மதுரை தமிழ்ச் சங்கப் பதிப்புக்கள், சதாசிவப் பண்டாரத்தார் எழுதிய சோழர் வரலாறு, பாண்டியர் வரலாறு என்பன. வைணவ நூல்களை ஆராய்ந்தபோது எமது ஆராய்ச்சிக்கு உசாத்துணையாக உதவிய அன்பர் மர்ரே கம்பெனி எஸ். ராஜம்.

இந்நூலில் பலவிடத்தும் குறிப்பிடப்பட்டுள்ள நூல்கள் அன்றி, பரிமேலழகருரை, நாலடியாருரை, பகவத் கீதையுரைகள், சித்தாந்த சாத்திர உரைகள் முதலான பல ஏட்டுப் பிரதிகள் ஆராய்ச்சிக்குப் பயன்பட்டுள்ளன.

அச்சுத்துறை தமிழில் மிகவும் முன்னேறி இருந்த போதி லும் கூட, சில குறைபாடுகளை நிவர்த்தி செய்யமுடிவதில்லை. ஆங்கிலத்தில் இடலிக்ஸ் என்ற எழுத்துக்கள் இருப்பது போலத் தமிழில் இப்போதில்லை; ஒரு தலைமுறைக்குமுன் இருந்தது. அப்போது 12 பாயின்ட் பைகாவில் அச்சிடும்போது, அதில் இடலிக்ஸ் மாதிரிப் பயன்பட்டு வந்த ஆண்டிக் எழுத்து ஒன்று இருந்தது. அவ்வெழுத்து நீண்ட காலமாக வழக்கில் இல்லை. புதிய புதிய எழுத்துக்கள் வரவும், அச்சகத்தாரும் வெளியீட் டாரும் புதுமை மோகத்தில் அமிழ்ந்தி, புதிய எழுத்து படிப் பதற்கு வசதியானதா என்பதைப் பார்க்கும் விவேகத்தைக் கை விட்டார்கள். இதனால் நல்ல எழுத்துக்கள் போய்ப் புதுரக எழுத் துக்கள் மலிந்து விட்டன. பழைய பைகா ஆண்டிக் எழுத்துப் போய் விட்டது. அதன் இடத்தில் இப்போதுள்ள ஆண்டிக் எழுத் துக்களை அச்சிட்டால், தடிப்பாயும் கறுப்பாயும் தெரியும். ஆதலால் வரிகளினிடையே வரும் நூற்பெயர் போன்றவற்றை ஆங்கிலத்தில் செய்ய இயல்வது போலத் தனியே பிரித்துக் காட்ட

முடிவதில்லை. இந்த ஆண்டிக் எழுத்தில் போட்டால் பார்க்க நன்றாய் இராது, கண்ணை உறுத்தும்; ஆகவே போட முடிய வில்லை.

நூலை நன்முறையில் அச்சிட்டுதவிய மாணிக்கம் அச்சகத் தாரைப் பாராட்டுகிறோம். அச்சுத்தாள் திருத்துவதில் உதவி செய்த காந்தி வித்தியாலயத் தமிழாசிரியர் கு. கலியாண சுந்தரம் அவர் களுக்கும் முற்கூறிய அன்பர்கள் அனைவருக்கும் எமது நன்றி உரியது.

சௌமிய ஆண்டுப் பிறப்பன்று (14 - 4- 1969) வெளியான எமது 15ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில்; 11, 12, 13 நூற்றாண்டு வரலாறுகள் வெளிவரச் சித்தமாயுள்ளன என்று எழுதியிருந்தோம். இன்று ஓராண்டின்பின் 13ஆம் நூற்றாண்டு வரலாறு வெளியாகிறது. 11, 12 அச்சாகின்றன. 9, 10 தயாராகி வருகின்றன. இவை விரைவில் வெளிவர இறைவன் திருவருள் கூட்டி வைக்க வேண்டும். எம்மை இத்துறையில் ஈடுபடுத்தி நடத்தி வருகின்ற இறைவன் திருவடியை எந்த நேரமும் சிந்திக்கின்றோம்.

**வேண்டேன் புகழ், வேண்டேன் செல்வம்,**
**வேண்டேன் மண்ணும் விண்ணும்**
**வேண்டேன் பிறப் பிறப்பு, சிவம்**
**வேண்டார்தமை நாளும்**
**தீண்டேன், சென்று சேர்ந்தேன், மன்னு**
**திருப்பெருந்துறை இறைதாள்**
**பூண்டேன் புறம் போகேன், இனிப்**
**புறம் போகல் ஒட்டடேனே.** – **திருவாசகம்**

திருச்சிற்றம்பலம் **மு. அருணாசலம்**
*14 - 4 -1970.*

# பொருளடக்கம்

*1. இலக்கிய ஆசிரியர்* *1*

புகழேந்தி - வரலாறு - கதைகள் - சமயம் - நளவெண்பா - கதைச்சுருக்கம் - நூற்சிறப்பு - காலம் - பிற நூல்கள் - குறிப்பு 1 - குறிப்பு 2 - குறிப்பு 3.

**2. இலக்கிய உரயாசிரியர் – 1** *28*

காலிங்கர் - வரலாறு - சமயம் - காலம் - குறள் உரை - பரிமே லழகர் - ஆசிரியர் - திருக்குறள் உரை - பரிபாடல் உரை - திருமுருகாற்றுப்படை உரை - கோவை உரைசெய்த பேரா சிரியர் - ஆசிரியர் - காலம் - கோவையார் உரை.

**3. இலக்கிய உரையாசிரியர் – 2** *75*

திருமுருகாற்றுப்படை - பழைய உரையாசிரியர் - உரை - காலம் - எட்டுத்தொகை உரைகள் - ஐங்குறுநூற்றின் பழைய உரை - அகநானூற்றின் பழைய உரை - பதிற்றுப்பத்து உரை யாசிரியர் - காலம் - ஆசிரியர் - பதினெண்கீழ்கணக்கு உரை கள் - நான்மணிக்கடிகை - இனியவை நாற்பது - இன்னா நாற்பது - கார்நாற்பது - களவழி நாற்பது - திணைமொழி ஐம்பது - ஐந்திணை எழுபது - திணைமாலை நூற்றைம்பது - ஐந்திணை ஐம்பது - திரிகடுகம் - ஆசாரக்கோவை - பழ மொழி நானூறு - சிறுபஞ்சமூலம் - முதுமொழிக் காஞ்சி - ஏலாதி - கைந்நிலை - குறள் உரை - தாமத்தர் - நச்சர் - தருமர் - நாலடியார் உரைகள் - பதுமனார் - ஆசிரியர் - நாலடியார் உரை - காலம் - தருமர் - ஆசிரியர் - காலம் - நாலடியார் உரை - நாலடியார் விளக்கவுரை - மதிவரர்.

**4. இலக்கண ஆசிரியர்** *113*

பவணந்தி முனிவர் - நன்னூல் - சீயகங்கன் - காலம் - நன்னூல் உரைகள் - நாற்கவிராச நம்பி - இலக்கண நூல் வளர்ச்சி - ஆசிரியர் - நூல் - காலம் - பதிப்பு.

5. இலக்கண உரையாசிரியர் 143

பேராசிரியர் - பேராசிரியர் பலர் - தொல்காப்பிய உரை செய்த பேராசிரியர் - சமயம் - நாடு - காலம் - தொல்காப்பிய உரை - வச்சணந்திமாலை உரையாசிரியர் - வச்சணந்தி மாலை - பாட்டியல் வரலாறுகள் - வச்சணந்திமாலை உரை - காலம் - பதிப்பு - சேனாவரையர் - ஆசிரியர் - காலம் - சொல் லதிகார உரை - பதிப்பு - இராசபவித்திரப் பல்லவதரையர்.

6. புராண இலக்கியம் 183

பெரும்பற்றப் புலியூர் நம்பி - வரலாறு - நம்பி திருவிளை யாடல் - திருச்சிற்றம்பலம் - திருவம்பலம் - பொன்னம்பலம் - காலம்.

7. சைவ இலக்கியம் 198

மெய்கண்டார் - வரலாறு - காலம் - சிவஞானபோதம் - உரை - அருள் நந்தி சிவாசாரியார் - வரலாறு - சிவஞான சித்தியார் - பரபக்கம் - சுபக்கம் - உரைகள் - இருபா இருபஃது - சிவஞான போதச் சிறப்புப்பாயிரம் - மனவாசகங் கடந்தார் - காலம் பற்றிய குறிப்பு.

8. வேதாந்த இலக்கியம் 225

ஸ்ரீ பட்டனார் - ஆசிரியர் - நூல் - காலம்.

9. வைணவ இலக்கியம் 235

மணிப்பிரவாளம் - ஒரு விளக்கம் - நஞ்சீயர் - வரலாறு - நூல் கள் - காலக்குறிப்பு - நம்பிள்ளை - நூல் - வடக்குத் திருவீதிப் பிள்ளை - ஈயுண்ணி மாதவப் பெருமாள் - பெரியவாச்சான் பிள்ளை - வரலாறு - நூல்கள் - நயினாராச்சான் பிள்ளை - பின்பழகிய பெருமாள் ஜீயர் - நூல்கள் - நடாதூரம்மாள் - திருக்கோனேரி தாஸ்யை - நூல் - ஆசிரியர் - காலம் - தனியன் பாடிய ஆசிரியர் - பரகால தாசர் - வார்த்தா மாலை.

10. சைன இலக்கியம் 291

முனைப்பாடியார் - நூல் - ஆசிரியர் - காலம் - பதிப்பு - யசோதர காவியம் - ஆசிரியர் - நூலின் கதைச்சுருக்கம் - நூற்பொருள் - அறத்தின் உயர்வு - காலம் - பதிப்பு.

11. பிரபந்த இலக்கியம் 315

குலோத்துங்க சோழன் கோவை - மூன்றாம் குலோத்துங்க சோழன் - கோவை - ஆசிரியர் - சங்கர சோழன் உலா - சோழர் மரபு - குமார மகீதரனும் சங்கர சோழனும் - ஆசிரியர் - உலா - பொய்யாமொழிப் புலவர் - ஆசிரியர் - தஞ்சை வாணன் கோவை - காலம் - இரணிய வதைப்பரணி - நூல் - காலம் - விளக்கமில்லாத பிரபந்தங்கள் - கோயிற் அந்தாதி - நரையூர் அந்தாதி - தில்லை அந்தாதி - மழவை எழுபது.

12. பிற ஆசிரியர் 361

கவிராச ராசன் - சத்திமுற்றப் புலவர் - சித்தராரூடம் - திருக்கோட்டி நம்பி - சாசனப் புலவர் - சோழர் ஆதரவு பெற்றோர் - அருள்நிலை விசாகன் - திருவாழி பரப்பினான் கூத்தன் - வீராந்த பல்லவரையர் - பாண்டியர் ஆதரவு பெற்றோர் - திருவரன் குலமுடையான் - காரணை விழுப்பரையர் - ஆதிச்ச தேவன் - கவிராயர் ஈசுவர சிவ உடையார் - தாயின் நல்ல பெருமாள் - பாடப் பெற்றோர் - கோப்பெருஞ்சிங்கன் - ஆரிய சேகரன் - மகதைப் பெருமாள் - சுந்தர பாண்டியன் (1216-1238) - சுந்தர பாண்டியன் (1251-1271) - விக்கிரம பாண்டியன் (1248-1258) - குறிப்பு - கூற்றும் மறுப்பும்.

13. ஆதார நூல்கள் 388

14. மேற்கோள் செய்யுள் அகராதி 396

15. பொருள் அகராதி 401

16. சொல்லாட்சியும் பொருளும் 403

17. சிறப்புப் பெயர் அகராதி 405

ooo

## அட்டவணைகள்

இந்நூலகத்தும் இறுதியிலும் பல்வேறு அட்டவணைகள் பயன் கருதி அமைத்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றின் பட்டியலைக் கீழே காண்க.


| | | |
|---|---|---|
| 1. | எட்டுத்தொகை உரைகள் | 80 |
| 2. | அத்தியாயப் பெயர்கள் வடமொழி நூல்பெயர் அட்டவணை | 231 |
| 3. | வைணவ குரு பரம்பரை நூல்களின் அட்டவணை | 237 |
| 4. | திருவாய்மொழி வியாக்கியானங்கள் | 240 |
| 5. | சோழர் வரலாறு | 329 |
| 6. | பாட்டியல் நூல்கள் - யாப்பு - காலம் | 166 |
| 7. | சோழர்பரம்பரை | 384 |
| 8. | பாண்டியர் பரம்பரை | 386 |
| 9. | வைணவ பரம்பரை | 387 |
| 10. | ஆசிரியர் பெயர் கால அட்டவணை | 390 |
| 11. | ஆசிரியர் கால ஒப்புமை அட்டவணை | 394 |


ooo

## இங்கு ஆராய்ந்த நூல்கள்


| | |
|---|---|
| அகநானூறு பழைய உரை | 82 |
| அகப்பொருள் விளக்கம் (நம்பி) | 135 |
| அமலனாதிபிரான் வியாக்கியானம் | 272 |
| அல்லியரசாணிமாலை❖ | 24 |
| அவிநய உரை* | 182 |
| அறநெறிச்சாரம் | 294 |
| ஆசாரக்கோவை பழைய உரை | 93 |
| இரணியவதைப் பரணி | 352 |
| இரத்தினச் சுருக்கம்❖ | 25 |
| இருபா இருபது | 217 |
| இன்னா நாற்பது பழையவுரை | 90 |
| இனியவை நாற்பது பழையவுரை | 90 |
| உண்மை விளக்கம் | 218 |
| எட்டுத்தொகை உரைகள் | 79 |
| ஏலாதி பழைய உரை | 94 |
| ஐங்குறுநூறு பழையவுரை | 80 |
| ஐந்திணை எழுபது பழையவுரை | 91 |
| ஐந்திணை ஐம்பது பழையவுரை | 92 |
| ஓரான்வழித் திருமுடி அடைவுகலியனருள்பாடு | 275 |
| களவழிநாற்பது பழையவுரை | 91 |
| காங்கேயன் பிள்ளைத் தமிழ்* | 373 |
| கார்நாற்பது பழையவுரை | 91 |
| காரணை விழுப்பரையன்மடல்* | 373 |
| காலிங்கர் குறள் உரை | 35 |
| குருபரம்பரை ஆறாயிரப்படி | 279 |

| | |
|---|---|
| குலோத்துங்கன் கோவை | 317 |
| குறள் காலிங்கர் உரை | 31 |
| தருமர் தாமத்தர் நச்சர் | 95 |
| பரிமேலழகர் உரை | 46 |
| குறுந்தொகை உரை | 80 |
| கைந்நிலை பழையவுரை | 95 |
| கோவையார் பேராசிரியர் உரை | 68 |
| சங்கரசோழன் உலா | 328 |
| சித்தர் ஆரூடம்* | 365 |
| சிந்துப்பிரபந்தம்* | 371 |
| சிவஞான சித்தியார் | 212 |
| சிவஞானபோத உரை | 209 |
| சிவஞானபோதம் | 204 |
| சிற்றட்டகம்❖ | 139 |
| சிறுபஞ்சமூலம் பழையவுரை | 93 |
| செஞ்சிக் கலம்பகம்* | 24 |
| சேனாவரையர் தொல்காப்பிய உரை | 171 |
| தஞ்சைவாணன் கோவை | 349 |
| திணைமாலை நூற்றைம்பது | 92 |
| திணைமொழி ஐம்பது | 91 |
| திரிகடுகம் பழையவுரை | 92 |
| திருப்பல்லாண்டு வியாக்கியானம் திருப்பாவை மூவாயிரப்படி | 272 |
| திருமுருகாற்றுப்படை பரிமேலழகர் உரை | 63 |
| திருமுருகாற்றுப்படை பழைய உரை | 77 |
| திருவாய்மொழி இருபத்து நாலாயிரப்படி | 264 |
| முப்பத்தாறாயிரப்படி | 264 |
| திருவாய்மொழி வியாக்கியானங்கள் | 294 |
| திருவாய்மொழி வாசகமாலை | 283 |
| தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம் | 171 |
| தொல்காப்பியம் பொருளதிகாரம் பேராசிரியம் | 150 |
| நம்பி திருவிளையாடல் | 189 |

| | |
|---|---|
| நளவெண்பா | 16 |
| நன்னூல் | 122 |
| நன்னூல் உரைகள்❖ | 132 |
| நாலடியார் | 196 |
| - தருமர் உரை | 107 |
| - பதுமனார் உரை | 100 |
| - மதிவரர் உரை | 112 |
| - விளக்கவுரை | 111 |
| நான்மணிக் கடிகை பழையவுரை | 89 |
| பதிற்றுப்பத்து பழையவுரை | 85 |
| பதினெண்கீழ்க்கணக்கு உரைகள் | 87 |
| பரமார்த்த தரிசனம் உரை | 229 |
| பரமார்த்த தரிசனம் (தமிழ் பகவத் கீதை) | 229 |
| பரிபாடல் உரை | 60 |
| பரிமேலழகர் குறள் உரை | 46 |
| பழமொழி நானூறு பழையவுரை | 93 |
| பேராசிரியர் தொல்காப்பிய உரை | 156 |
| மணிப்பிரவாளம் | 242 |
| முதுமொழிக்காஞ்சி பழையவுரை | 94 |
| யசோதர காவியம் | 300 |
| வச்சணந்திமாலை பழையவுரை | 164 |
| வார்த்தாமாலை | 288 |
| வைணவ குருபரம்பரை நூல்கள் | 235 |


○○○

* இல்லாத நூல்கள்.

❖ வேறு நூற்றாண்டுக்குரியவை.

# முன்னுரை

பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கியங்களை ஒரு தொகுப்பாக நாம் பார்க்கும்போது, பொதுவாய்ப் பேரிலக் கியங்கள் எவையும் தோன்றவில்லை என்று காண்கிறோம். தமிழ் நாட்டின் அரசியல் நிலையைக் கூர்ந்து நோக்கினால், ஒரு வகை யில் இதன் காரணம் நன்கு புலப்படும். முந்திய நான்கு நூற் றாண்டுகளாக நாட்டில் புத்துயிர் பெற்றுத் தஞ்சையையும் கங்கைகொண்ட சோழபுரத்தையும் புதிதாக நிருமாணித்து அவற் றைத் தலைநகரங்களாகக் கொண்டு, தமிழ் வழங்கும் நிலப் பகுதி அனைத்தையும் ஒரு குடைக்கீழ் கொண்டு வந்ததோ டன்றி, பெரிய கடற்படையோடு கடல் கடந்து சென்று பல நாடுகளைத் தன்னகப்படுத்தியும் ஓங்கி வளர்ந்திருந்த சோழர் பேரரசானது நிலைகுலையத் தொடங்கி இந்தப் பதின்மூன் றாம் நூற்றாண்டின் இறுதியில் அழிந்தே விட்டது.

**அரசியல் – சோழர்**

கி.பி. 1178இல் பட்டமேற்ற மூன்றாம் குலோத்துங்க சோழன், ஒப்பற்ற புயபல பராக்கிரமம் பெற்றவனாயிருந்து, நாற்பது வருஷ காலம் - 1218 வரையில் - பேராற்றலோடு நாட்டைப் பரி பாலித்தான். எனினும், அவன் காலத்திலேயே சீர் குலைவதற் கான சின்னங்கள் தோன்றி விட்டன. ஆங்காங்கு குறுநில மன்னர் தலையெடுத்துக் கிளர்ச்சி செய்து வந்தார்கள். தன்னுடைய வலி மையின் மிகுதியால் இவன் அனைவரையும் அடக்கிவிட்டான் என்பது உண்மை; ஆயினும், இவனுக்குப் பின்வந்த இவன் மகன் மூன்றாம் இராசராசனால் நிலைமையைச் சிறிதும் சமாளிக்க முடியவில்லை. இவன் பாண்டியனிடம் தோற்றோடியபோது, சேந்தமங்கலத்தில் ஒரு சாதாரணப் படைத்தலைவனாகத் தோன்றி வளர்ந்து, இவன் தந்தை மூன்றாம் குலோத்துங்கனிடம் படை வீரனாக இருந்த கோப்பெருஞ்சிங்கன் இவனைச் சிறைப்பிடித்து

விட்டான். பின்னர் இவன் மகன் மூன்றாம் இராசேந்திரனுக்குச் சந்ததி இன்றி இறந்து போனமையாலும், குறுநில மன்னரும் பிறரும் தலையெடுத்த நிலையை அடக்கும் வலிமை வாய்ந்த அரசு இல்லாமையாலும், பாண்டியர் வலிமை ஓங்கிச் சோழ நாட்டைக் கைப்பற்றியமையாலும். இவ் இராசேந்திரனோடு 1279இல், சோழர் ஆட்சி முடிவெய்தியது.

**பாண்டியர்**

சோழப் பேரரசர் காலத்தில் வலிகுன்றி ஒடுங்கியிருந்த மதுரைப் பாண்டியர் இந்த நூற்றாண்டில் மீண்டும் தலை யெடுத்து ஓங்கிச் சிறிது காலம் புகழோடு விளங்கினார்கள். மூன்றாம் குலோத்துங்க சோழனுடைய பேராதரவைப் பெற்று முதல் சடையவர்மன் குலசேகர பாண்டியன் 1190இல் முடி சூடி 1218 வரை ஆட்சி புரிந்தான். அடுத்து முடிசூடிய முதல் மாற வர்மன் சுந்தர பாண்டியன் (1216 - 1238) பாண்டி நாட்டை மீண்டும் ஒரு பேரரசு ஆக்கி நிறுத்தியவன். இவன் 1219இல் சோழ நாட்டின்மீது படையெடுத்துச் சென்று, அங்கு ஆண்டி ருந்த வலி குன்றிய மூன்றாம் இராசராசனைத் தோற்கடித்து, உறையூரையும், தஞ்சையையும் அடியோடு அழித்துத் தீயிட்டுக் கொளுத்தினான். பின் தன்னிடம் பணிந்த அவ் இராசராச னுக்கே சோழ நாட்டை அளித்து மதுரை திரும்பியபின், மீண் டும் அச்சோழனோடு மாறுபட்டுச் சோழ நாட்டின் மீது படை யெடுத்து எஞ்சியிருந்த நாட்டை அழித்தான். பிற்காலத்தில் முகம்மதியரும் ஆங்கிலேயரும் இந்நாட்டில் புகுந்து கோயில் களையும் கோட்டைகளையும் சிறிதும் இரக்கமின்றி இடித்து அழித்தார்கள் என்று கேள்விப்படுகிறோம்: இப்பாண்டியன் செயல் அவ் அன்னியர் செயலுக்கு எந்தவிதத்திலும் சளையல்ல என்று மட்டும் கூறி இப்போதைக்கு அமைகிறோம்.

இவனிடம் தோற்றுத் துணை தேடி வடக்கு நோக்கிச் சென்ற இராசராசனைக் கோப்பெருஞ்சிங்கன் சிறை பிடித்து விட்டான். பின்னர் போசள (ஹொய்சள) மன்னர் தலையீட் டால் அவன் இராசராசனைச் சிறைவீடு செய்தான் (1232).

அடுத்து வாழ்ந்த சிறப்பான பாண்டி மன்னன் முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் என்பான் (1251 - 1271). இவன்

சோழமன்னனான மூன்றாம் இராசேந்திரனை வென்று தனக்குக் கீழ்ப்படுத்தியதோடு சோழருக்கு ஆதரவாயிருந்த கண்ணனூர்ப் போசளரையும் வென்றான். அடுத்த சிறப்புடைய பாண்டி மன்னன் முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1268 - 1310) என்பவன். இவனுடைய படைத்தலைவன் ஆரிய சக்கரவர்த்தி என்பவன் இலங்கை மன்னனை வென்று அங்கிருந்த புத்தர் பல்லைக் கைப் பற்றி வந்தான் என்றும், இலங்கை மன்னனாகிய பராக்கிரம பாகு என்பவன் பாண்டியனைப் பகைத்துப் பயனில்லை என்று கண்டு, அவனுக்குப் பணிந்து நட்புப் பூண்டு, பின் அப்பல்லைத் தன் நாட்டுக்குப் பெற்றுச் சென்றான் என்றும் வரலாறு கூறும். இக்குலசேகரன் பிள்ளைகள் இருவர்: பட்டத்தரசியின் புதல்வ னான சுந்தரபாண்டியனும், காதற்கிழத்தியின் புதல்வனான வீர பாண்டியனும். இருவருள் இளையவனான வீரபாண்டியனே நாடாளும் தகுதியுடையவனெனக் கருதி 1296இல் குலசேகர பாண்டியன் இவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினான். இதனால் கோபமடைந்திருந்த சுந்தர பாண்டியன் சமயம் பார்த்திருந்து, 1310இல் தந்தையைக் கொன்று, தான் முடி சூடினான். சூடியும் அரசு நிலைக்கவில்லை. அடுத்த போரில் இவன் வீர பாண்டிய னிடம் தோற்றோடி, டில்லியில் அரசுபுரிந்த அலாவுதீன் கில்ஜி யின் படைத்தலைவனாய்த் தென்னாடு வந்திருந்த மாலிக் காபூ ரின் துணையை நாட, அவன் பாண்டி நாட்டைச் சூறையாடி, மதுரையை அழித்தான்; இரு பாண்டியரின் செல்வங்களையுமே டில்லிக்குக் கொண்டு சென்றுவிட்டான். (டில்லிக்குக் கொண்டு சென்ற செல்வம் 612 யானை, 20 ஆயிரம் குதிரை, 96 ஆயிரம் மணங்கு பொன் முத்துக்கள், அணிகலன்கள்.) சுமார் கி.பி. 1330 முதல் 1378 வரை மதுரையில் முகம்மதியர் ஆட்சி; கோயில்கள் கொள்ளையிடப்பட்டு, வழிபாடெல்லாம் நின்று போயிற்று. பின்னர் விசயநகர வேந்தர் தலைவன் குமாரகம்பண்ணன் படையெடுத்து முகம்மதியரை ஓட்டி, மதுரையைப் புணர்நிர் மாணம் செய்தான். இங்ஙனமாக, முகம்மதியர் படையெடுப்பு ஏற்பட்டு மதுரையை அவர்கள் அழித்த போது பாண்டியரும் அழிந்தனர்; தமிழ் நாடெங்கும் தமிழராட்சியும் அழிந்தது; ஓடி ஒளிந்த பாண்டியர் தென்காசியில் இருந்து சிலகாலம் வாழ்ந்த போதிலும், தமிழராட்சி அழிந்து போனது உண்மையே.

## இலக்கியம்

இது அரசியல் நிலை. நாட்டின் ஆட்சி, மிகுந்த கொந்தளிப்பான நிலையில் இருந்தது. 13ஆம் நூற்றாண்டு நூல்களை ஆராய்ந்த வரையில், இக்காலத்தில் தோன்றிய சிறப்புடைய இலக்கியங்கள் மிகவும் குறைவு என்பது விளங்கும். குலோத்துங்க சோழன்மீது ஒரு கோவையும் அவன் தம்பி சங்கர சோழன் மீது ஓர் உலாவும் பாடப்பெற்றன. குறுநிலத் தலைவர்களுடைய ஆதரவால் தோன்றிய இலக்கியங்களில், புகழேந்தியின் நளவெண்பாவும், தஞ்சைவாணன் மீது பாடப்பெற்ற போவையும் குறிப்பிடத்தக்கன. இந் நூற்றாண்டுக்குரிய மிகவும் சிறந்த இலக்கியம் என்று சொன்னால் நளவெண்பா ஒன்றைத்தான் சொல்லலாம். பிற நூற்றாண்டுகளில் எழுந்த பேரிலக்கியங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இதன் சிறப்புக் குறைவு என்றபோதிலும், தமிழுலகத்தில் பிற்கால வரலாற்றில் இன்றுவரை இந்நூல் மிகவும் புகழ்பெற்று வருகிறது. இதன் பாடல்களையும் இது கூறும் நளன் வரலாற்றையும் தமிழ் மக்கள் நன்கு கற்றிருக்கிறார்கள். கல்வி பயிலும் இளம் பிள்ளைகளுக்கு இது முக்கியமான செய்யுட் பாடமாக இருந்து வருகிறது. தஞ்சைவாணன் கோவையை ஒரு காவியம் என்று சொல்ல முடியாவிட்டாலும், சிறந்த ஒரு சிற்றிலக்கியமாக இன்றளவும் விளங்கி வருகிறது. திருக்கோவையாருக்கு அடுத்துப் புகழ் வாய்ந்த கோவை நூல் இதுவே.

பிற்காலத்தில் வாழ்ந்த ஒரு திறமைசாலி, ஒட்டக்கூத்தர் - புகழேந்தி பற்றி இன்று வழங்கும் பூசற் கதைகளைக் கட்டிவிட்டிருக்கிறார். ‘இவரும் பாடியிருக்கலாம்’ என்று எண்ணக் கூடிய சில தனிப்பாடல்களையும் வேறு பாடல்களையும் கோத்துக் கதைக்கு இவர் உருவம் கொடுத்து விட்டார். ஆராய்ச்சியில்லாதோர் இக்கதைகள் உண்மையென்றே நம்பியிருக்கிறார்கள். இது மிகவும் விபரீதமான கீழ்நிலை. ஒட்டக்கூத்தர் காலம் கி.பி. 1163க்குள். புகழேந்தியின் காலம் 1275. இருவரும் ஒரு காலத்தினர். என்பது போலிக் கதை என்பதை விளக்கத் தேவையில்லை.

## சமய நூல்

இக வாழ்க்கையில் துன்பம் மலியும்போது மனம் இறைவனை நாடிச் செல்வது இயல்பு. இதைத் தனிப்பட்ட வாழ்க்கை

யில் காண்பது போல, மக்கட் சமுதாயத்தில் எழும் இலக்கியத் துறையிலும் காண்கிறோம். அரசியல் தடுமாற்றம் மிகுந்திருந்த இந்த நூற்றாண்டில்,பொதுவாக சமயத்துறையிலேயே மிக்க எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம், முந்திய நூற்றாண்டுகளில் சோழ மன்னர் கட்டிய பெருங்கோயில்களும் அவற்றால் ஏற்பட்ட சமய உணர்வுமாகும். இந்த நூற்றாண்டின் இடையில் மெய்கண்டார் தோன்றினார் என்பது வழங்கும் கருத்து. இவர் இறைவன் அருள் பெற்று, சைவத் திருமுறைகளில் கண்ட சமய தத்துவங்கள் எல்லாம் முறைப்படுத்தித் தொகுத்து மூல சாத்திரம் செய்தார் என்று நாம் கருதவேண்டும். கயிலாயத் திலிருந்து வந்த ஒரு சிவஞானி இவருக்குச் சைவ சமய உண்மை களைப் போதித்தார் என்பது சம்பிரதாயமான வரலாறு. இது இக்கால உலகுக்குப் பொருந்துவது அருமை. இறையருள் கை கூடிய மெய்கண்டார், சமயாசாரியர் பாடிய நூல்களை நன்கு பயின்று, தம் உள்ளத்தில் திருவருளால் தோன்றிய கருத்துக் களைச் சாத்திரமாகச் சுருக்கி எழுதிவைத்தார் என்று கொள்வது பிழையாகாது; குரு உபதேசமும் துணை செய்தது என்பதில் ஐயமில்லை. இவருக்குச் சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகள் பிற்பட்டு, வடமொழி ரௌரவாகமத்தில் மெய்கண்டார் நூலுக்கு மூலம் இருக்கிறதென்ற கதையும் எழுந்தது. இவரிடம் பயின்ற மாணாக்கர் பலருள் இருவர் வழி நூல் செய்தார்கள். முதல் மாணாக்கரான அருணந்தி சிவத்தின் வழியாக மெய் கண்ட சாத்திரம் என்ற பெயரோடு சைவ சாத்திர மரபும் சைவ சந்தான மரபும் வளரலாயின. மதுரைச் சோமசுந்தரக் கடவுளு டைய திருவிளையாடல்களைப் புராணமாக விரித்துச் சொல்லு கின்ற நம்பி திருவிளையாடற்புராணமும் இக்காலத்தில் பாடப் பெற்றது.

'படிகொண்ட கீர்த்தி இராமாயணமென்னும் பக்தி வெள் ளம் - குடி கொண்ட கோயில் இராமானுசர்' சென்ற நூற்றாண் டில் ஒழுங்குபடுத்திக் கொடுத்த வைணவ நெறி என்பது இந்நூற் றாண்டில் பல துறையிலும் பெருகிற்று. இப்பெருக்கமே அடுத்த நூற்றாண்டில் பெரும் பூசலுக்கு வித்தாகி, மிக முற்றிய வடகலை - தென்கலைச் சண்டையிலும் கொண்டுபோய் விட்டது. வைணவ மரபில் பட்டருடைய சீடராக ஆகிப் பெரும் புகழோடு ஆசாரி

யப் பதவி வகித்த நஞ்சீயர் தொடங்கி, நம் பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, பின் பழகிய பெரு மாள் ஜீயர் என்பவர்களாக வைணவ சமயாசாரியர் மிகப் பலர் வாழ்த்து, தங்கள் சமய சித்தாந்த நூல்களும் நாலாயிரப் பிரபந்த வியாக்கியானங்களும் அளவின்றிச் செய்தார்கள். முந்திய நூற் றாண்டில் திருக்குருகைப்பிரான் பிள்ளான் புதிதாய்த் தோற்று வித்த தமிழும் வடமொழியும் விரவிய மணிப்பிரவாள நடையை யொட்டி இவர்கள் அனைவரும் மணிப் பிரவாள நடையிலும் வடமொழியிலும் நூல் செய்தார்கள்.

அப்படியே, சங்கரபாஷ்யம் பயின்றிருந்த ஸ்ரீ பட்டனார் என்பவர் அதைத் தழுவி, தமிழில் வேதாந்திகளிடை இன்று ஓர ளவு பிரசாரமுடைய பரமார்த்த தரிசனம் என்னும் பகவத்கீதை மொழிபெயர்ப்பைச் செய்தார். இது நல்ல தமிழில் இயன்ற செய் யுள் நூல். அறநெறிச்சாரம் இக்காலப் பகுதியில் தோன்றிய சைன நூல்; மிகவும் சிறப்பான நீதிநூல். யசோதர காவியம் என்பது சைன தருமத்திலுள்ள ஒரு கருத்தை மட்டும் போதிக்கவந்த மற் றொரு சிறு நூல். இதன் பெயர் காவியம் என்று சொன்ன போதி லும் கூட, இது ஒரு சாமானியச் சிறுகதையேயாகும்; தமிழில் இவ்வளவு அசம்பாவிதமான வேறு நூல் எழவில்லை.

**உரைகள்**

அரசியலிலும் அதன் விளைவாய்ச் சமூகத்திலும் ஏற்பட்ட பெருங்குழப்பங்களும் நிலையின்மையும், சிறப்பிலக்கியங்கள் எழத்தக்க சூழ்நிலை இல்லாது செய்துவிட்டன; இதனால் சிற் சில சிற்றிலக்கியங்கள் மட்டுமே எழுந்தன என்றோம்; புலவர் மனம் உள்முகமாகத் திரும்பித் தத்துவ ஆராய்ச்சியிலும், சமய உண்மைகளைக் காண்பதிலும் சென்றது என்றோம். அப்படியே, புத்திலக்கியப் படைப்புக்குப் பதிலாக, வழக்கிலுள்ள பண்டை இலக்கியங்களுக்கு உரை இயற்றும் முயற்சி இக்காலத்தில் மிக வும் பெரிதாயிற்று. சைவத்தைப் பொறுத்தவரையில் இக்காலத் தில் அருள் நூல்களுக்கு உரை எழுதும் முயற்சி எழவே இல்லை; சைவர்கள், அருள்நூலைப் பயின்று அதன்வழி அமைந்து இறை யருளைப் பெறும் நெறியில் வாழ்ந்தால் போதும் என்று நின்று விட்டார்கள் போலும். எனினும் புலவர் மனம் இலக்கியங்களை நாடிச் சென்றது. சென்று, மிகப் பலவான இலக்கிய இலக்கணங்

களுக்கு உரையெழுதும் முயற்சியில் ஈடுபட்டது. இவ்வுரைகளை இன்று நாம் பயிலும்போது, இப்புலவர்கள் எத்துணைப் பெரும் புலமையுடையவர்கள் என்று கண்டு வியப்படைகிறோம்.

பதினொராம் நூற்றாண்டின் முற்பாதியில் சைவத் திருமுறைகள் தொகுக்கப் பெற்றன; அடுத்த நூற்றாண்டின் இடைப் பகுதியில் சேக்கிழாரின் பெரிய புராணம், திருமுறை பன்னிரண்டு எனச் சேர்க்கப்பட்டது. ஆனால் எந்தத் திருமுறைக்கும் பண்டைய உரைகள் எழவில்லை. சைவத் திருமுறைகளுக்கு ஒப்பான வைணவ நாலாயிரப் பிரபந்தங்களுக்கு எத்தனையோ மணிப்பிரவாள வியாக்கியானங்கள் எழுந்திருக்க, சைவத்தில் இக்காலத்தில் ஒன்றுமே எழவில்லை என்ற நிலைமை நன்கு சிந்தித்தற்குரியது. திருக்கோவையார் ஒன்று மட்டும் இதற்கு விலக்கு. தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர் அல்லாத மற்றொரு பேராசிரியர் இந்த நூற்றாண்டில் தோன்றி, திருக்கோவையாருக்கு மிகவும் சிறப்பான உரை எழுதியிருக்கிறார்.

இலக்கிய இலக்கண உரையாசிரியர்களில் சிறப்புடைய பலர் இக்காலத்தே வாழ்ந்து நூல் செய்தார்கள். குறள் உரையாசிரியர்களான காலிங்கர், பரிமேலழகர் ஆகியோர் தம் உரைகளை எழுதினார்கள். நாலடியாருக்குப் பால் இயல் அதிகார அடைவுகள் செய்து, உரையும் எழுதிய பதுமனார் இந்நூற்றாண்டில் வாழ்ந்தார். நாலடியாருக்கு உரை செய்த தருமர் என்பவரும், வேறு உரை செய்த பெயர் தெரியாத ஆசிரியரும், இதே காலத்தில் வாழ்ந்திருந்தார்கள் போலும். சிறந்த தொல்காப்பிய உரையாசிரியர்களான சேனாவரையர், பேராசிரியர் என்போர் இக்காலத்தே வாழ்ந்தார்கள். அவிநயம் என்ற இலக்கண நூலுக்கு இராசபவித்திரப் பல்லவதரையர் உரை எழுதினார்; ஆனால் இவ்விலக்கணமும் உரையும் இன்று இறந்து போயின. வச்சணந்தி மாலை என்ற பாட்டியலின் உரை இக்காலத்தே எழுந்தது. பிற பதினெண் கீழ்க்கணக்கு நூல் உரைகள் போன்ற சிலவும் இக்காலத்தே செய்யப்பெற்றன.

**இலக்கணம்**

குலோத்துங்க சோழன் கீழிருந்த அதிகாரிகளுள் ஒருவனான சீயகங்கள் ஆதரவில் பவணந்தி முனிவர் நன்னூல் செய்தார்; இன்று வரை இது, எழுத்தும் சொல்லும் பொறுத்தவரையில்,

பின்னூல் எதுவும் தனக்கிணை இல்லை என்று சொல்லும்படி ஒப்பற்ற சிறப்புடைய இலக்கணமாக இருந்து வருகிறது. இந்த நூற்றாண்டில் நாற்கவிராச நம்பி தமது அகப்பொருள் விளக்கமும் அதன் உரையும் செய்தார். இவ்வகப்பொருள் இலக்கண நூல், தொல்காப்பியம் - இறையனார் களவியல் ஆகிய இரண்டின் வழிவந்து, பிற்கால ஆசிரியர்கள் அனைவரும் ஆதாரமாய்க் கொள்ளத்தக்க ஒரு சிறப்பு நூலாக அமைந்திருக்கிறது.

### பிற நூல்கள்

சிந்தாமணி உரையில் நச்சினார்க்கினியர் சித்தராரூடம் என்ற ஒரு சிறு விஷ நூலைக் குறிப்பிடுகின்றார். அவருக்கு முந்திய நூற்றாண்டாகிய இந்தப் பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றியதாக இந்த நூலைக் கொள்ளலாம். இவ்வாறு பிற துறைகளிலும் நூல்கள் செய்யப் பெற்றிருத்தல் கூடும் என்பதை ஆங்காங்கு உரைக்குறிப்புக்களால் நாம் அறிகிறோம்.

பாண்டியர் ஆதரவிலும் சோழர் ஆதரவிலும் புலவர் பலர் வாழ்ந்து, சாசனப் பாடல்கள் மெய்க் கீர்த்திகள் பாடியதோடன்றித் தனி நூல்களும் செய்திருக்கிறார்கள். முன்னமே தமிழில் மகாபாரதம் பலமுறை செய்யப்பட்டிருந்தும், இந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் சிறப்புடைய சக்கரவர்த்தியாக இருந்த குலோத்துங்க சோழன் காலத்தில் மீண்டுமொரு முறை விரிவாகத் தமிழில் மொழி பெயர்க்கப் பெற்றது. ஆனால் இந்த நூல்களில் ஒன்றும் கிடைக்கவில்லை.

பொது நோக்காக இந்த நூற்றாண்டைப் பார்க்கும் போது, சமய நூல்களும் உரைநூல்களுமே தோன்றி வளர்ந்த காலம் என்று இதைக் கருதலாம்.

### பொது – பௌத்தம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு நிலைமையை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. அதாவது பௌத்த சமய நூல்களின் நிலை. பௌத்த சமயத்தில் தமிழில் சிறப்பான ஆசிரியர்கள் எவருமே தோன்றி, சிறு நூலோ பெரு நூலோ செய்தது மிகமிக அபூர்வம். கிறித்தவ அப்தத்தின் முதல் ஆயிரம் ஆண்டுகளில் ஏறக்குறைய இடைப்பகுதியில் தோன்றிய ஒரு பெருநூல்

மணிமேகலையாகும். இந்நூல் பௌத்த சமயம் முழுமையும் நன்கு ஆராய்ந்து விளக்குகிறது. இந்நூல் முழுமையும் இன்று கிடைத் திருப்பது பெரிதும் வியப்பென்றே கருதவேண்டும். குண்டலகேசி என்ற ஒரு பெருங்காப்பியம் இருந்ததென்று, புறத்திரட்டினுள் தொகுக்கப்பெற்ற சில பாடல்களால் அறிகிறோமேயன்றி, நூல் முழுமையும் இறந்து போயிற்று. பதினொராம் நூற்றாண்டில் வீர ராசேந்திரன் காலத்தில் புத்தமித்திரனார் என்பவர் செய்த வீரசேந் திரன் காலத்தில் புத்தமித்திரனார் என்பவர் செய்த வீரசோழியம் என்ற இலக்கண நூல் பௌத்த சமயத்தார் செய்தது. இவ்விரு இலக்கிய இலக்கண நூல்களையன்றி, வேறு எந்த நூலும் இச்சம யத்துக்குரியதாகவோ இச்சமயத்தாரால் செய்யப் பெற்றதாகவோ இன்று இல்லை. விம்பிசார கதை, சித்தாந்தத் தொகை என இரு நூல்கள் பிற்காலத்துப் பெயர் சொல்லப்பட்டுள்ளன. அன்றியும் வீரசோழிய உரை, யாப்பருங்கல விருத்தி மேற்கோள், நீலகேசி விருத்தியின் மேற்கோள் முதலியவற்றால் சுமார் முப்பது தனிப் பாடல்கள் புத்தரைப் போற்றுகின்ற பாடல்களாகக் கிடைக்கின் றன. அன்றியும், புத்தருக்குரிய இரண்டு சிறப்புத் தலங்களாக துடித புரம், மானாவூர் என்ற இரண்டு ஊர்களும் அங்கு சொல்லப் பட்டுள்ளன. இருப்பினும், வரலாற்றை எவ்வளவு நுணுகிப் பார்த்தாலும், முற்சொன்ன இரு நூல்களைத் தவிர வேறு எந்தப் புத்தசமயத் தொடர்பும் காணப்படவில்லை. இதன் காரணம் நன்கு ஆராய்தற்குரியது.

சைன இலக்கியத்தின் தன்மை இங்ஙனமன்று. மிகவும் புரா தன காலம் தொடங்கி - 7ம் நூற்றாண்டு தொடங்கி 16ஆம் நூற் றாண்டு வரையில் - சைனருடைய சமய இலக்கியங்களும் உரை களும் அவர்கள் செய்த இலக்கணங்களும் உரைகளும் வளமா கப் பல்கிக் காணப்படுகின்றன. இவற்றின் பட்டியல் மிகவும் விரி வாய் இருக்கும். தமிழ் நாட்டிலும் ஆங்காங்கு சைன மக்கள் தொகையாக வாழ்கிறார்கள். கோயில்கள் அமைத்துத் தங்கள் வழிபாட்டையும் ஒழுக்கத்தையும் பேணி வருகின்றார்கள்.

இவ்வாறு காணப்படும் சைன பௌத்த நூல் நிலைமை களின் வேறுபாடு நன்கு சிந்தித்தற்குரியது.

ooo

*அத்தியாயம் 1*

# இலக்கிய ஆசிரியர்

## *முன்னுரை*

இந்த நூற்றாண்டில் பேரிலக்கியங்கள் எவையும் எழ வில்லை. கி.பி. 1218 வரையில் மூன்றாம் குலோத்துங்க சோழன் அரசு புரிந்தான். அவனே மிகச் சிறந்த பண்டிதன் என்று நூல் களால் அறிகிறோம். அன்றியும் அவன் ஒப்பற்ற வீரனாயிருந் தவன். அவன் காலத்தில் சோழப் பேரரசு சிதறுண்டு போவதற் கான சூழ்நிலை உருவாகி வந்தது. ஆதலால், அவன் நாற்ப தாண்டுக் காலம்கொண்ட தனது நீண்டகால ஆட்சியில், நாடெங்கும் தோன்றிய கலகங்களையும் குழப்பங்களையும் அடக்குவதிலேயே செலவிட வேண்டியிருந்தது. மக்கள் கொந் தளிப்பான நிலையில் வாழ வேண்டியிருந்தமையால் பேரிலக் கியங்கள் தோன்றவில்லை என்று காண்கிறோம். இக்காலத்தில் இலக்கியம் என்று பெயர் சொல்லத்தகுந்த காவிய நூலாக நமக்குக் கிடைப்பது புகழேந்தி பாடிய நளவெண்பா ஒன்றே.

இது பெருங்காப்பியம் அல்லவென்றாலும், தோன்றிய காலம் முதலே தமிழ் மக்கள் விரும்பிப் பயிலும் சிறந்த நூலாக அமைந்திருக்கிறது. பொருள் அளவில் மட்டுமன்றி, யாப்பமைதி யிலும் கூட, இந்நூல் சிறப்புடையது; சங்க காலத்தில் வழங்கிய வெண்பாவின் ஓசையை மாற்றி வெண்பாவுக்கு வேறு ஓசையை ஊட்டி இருக்கிறது. இதற்கு முன்னதாக, பெருந்தேவனார் பாரத வெண்பா என்ற சிறப்பான நூல் எழுந்திருந்தது உண்மையே; அது இத்துணைப் பிரகாசம் எய்தியதாகத் தெரியவில்லை. ஆனால் புகழேந்தியே, 'வெண்பாவிற் புகழேந்தி' என்று பாடலில் போற்றிக் கூறுமளவு தமக்கென ஒரு புதுவெண்பா

யாப்பமைதியைப் படைத்துக்கொண்டு மக்கள் மனத்தைக் கவர்ந்துள்ளார். 17ஆம் நூற்றாண்டில் பாடிய பாடல் காண்க:

வெண்பாவிற் புகழேந்தி; பரணிக்கோர்
    சயங்கொண்டான்; விருத்த மென்னும்
ஒண்பாவிற்கு உயர்கம்பன்; கோவை உலா
    அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்;
கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்;
    வசைபாடக் காள மேகம்;
பண்பாக உயர்சந்தம் படிக்காசு
    அலாதொருவர் பகரொ ணாதே.

புகழேந்திக்குப் பின் அடுத்த நூற்றாண்டில் எழுந்த சைன சமய இலக்கியமான சீவசம்போதனையையும், 15ஆம் நூற்றாண்டில் எழுந்த அரிச்சந்திர வெண்பாவையும் படித்தால், பின்வந்தோர் எந்த அளவுக்குப் புகழேந்தியின் வெண்பா யாப்பைப் பின்பற்றிப் பாடல் செய்ய முற்பட்டார்கள் என்பது நன்கு விளங்கும். இது மட்டுமன்று; தமிழ் மக்களிடையே புதிய விழிப்பு ஏற்பட்டுள்ள காலமாகிய 19, 20ஆம் நூற்றாண்டுக் காலங்களில் எழுந்த சிறு வெண்பாக் காவியங்கள் எண்ணில்லாதன; இராமாயண வெண்பா, அகலிகை வெண்பா, சாவித்திரி வெண்பா, குசேல வெண்பா, சகுந்தலை வெண்பா, நளாயினி வெண்பா, துருவவெண்பா, கோவல வெண்பா, ஞானசம்பந்த வெண்பா முதலாக இவை பல. இவற்றுள் இராமாயண வெண்பா அளவில் மிகவும் பெரிது; மற்றவை சிறியன. இவை தோன்றுவதற்கு முன்மாதிரியாக இருந்து ஊக்கமளித்தது புகழேந்தியின் நளவெண்பாவே.

இந்நூற்றாண்டுக்குரிய சிறப்பிலக்கியங்களாகக் கருதத்தக்க பிற நூல்கள், செல்வி நகர் - பெரும்பற்றப்புலியூர் நம்பி செய்த பழைய திருவிளையாடற் புராணமும், சிறுகாப்பியங்களுள் ஒன்று என்று பலராலும் கருதப்பெற்று வரும் யசோதர காவியமும் ஆகும். இவ்விரண்டையும், முறையே புராண இலக்கியம் சைன இலக்கியம் என்ற அத்தியாயங்களில் விளங்கக் காணலாம். அறநெறிச்சாரம் என்பது இக்காலத்தெழுந்த ஒரு சிறப்பான நீதிநூல்; சைனசமய ஒழுக்கங்களைக் கூறுவது. இதையும் சைன இலக்கியம் என்ற பகுதியில் காண்போம்.

# புகழேந்தி

## வரலாறு

நளவெண்பா என்ற ஒரு நூலினால் மட்டும் கல்வியாளர் நன்கறிந்த ஒரு சிறந்த புலவர் புகழேந்தி. இவர் இயற்பெயர் தானும் தெரியவில்லை; புகழை ஏந்தியமையால் புகழேந்தி எனப்படுகிறார் போலும். இவர் தொண்டை மண்டலத்திலுள்ள பொன்விளைந்த களத்தூரில் பிறந்தவர். "களந்தைப் புகழேந்தி" என்று தொண்டை மண்டல சதகம் பல பாடல்களில் (35, 63) இவரைக் கூறும். புகழேந்தி என்ற பெயர் முன்னமே வழங்கியது போலும். வீரசோழியவுரையில் பெருந்தேவனார் இப் பெயரைச் சொல்லுகிறார்; 62 உரை இறுதி. இவர் மள்ளுவ நாட்டு முரணை நகர் சந்திரன் சுவர்க்கி என்ற தலைவனால் ஆதரிக்கப்பெற்று வாழ்ந்தார் என்பது மட்டுமே இவர் நூலால் அறிகின்ற செய்தி.

மற்று, இவரையும் ஒட்டக்கூத்தரையும் பிணைத்துப் பல கதைகள் வழங்குகின்றன. ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன், இரண்டாம் இராசராசன் ஆகிய மூன்று சோழர் காலத்திலும் மிக்க சிறப்போடு, சோழர்களுக்கு அவைப்புலவராக வாழ்ந்து வந்தவர். அவர் காலத்துக்கு நூறு ஆண்டுகள் பிற்பட்டுப் பிறந்து வளர்ந்தவர் புகழேந்தி. இருவரும் ஒரே காலத்தவர் என்று கூறி, குலோத்துங்க சோழன் அவைக்களத்தில் இருவருக்கும் புலமையால் பொறாமை ஏற்பட்டு, ஒட்டக்கூத்தர் புகழேந்தியை மிகவும் துன்புறுத்தினார் என்ற கதைகள் பல ஏற்பட்டுள்ளன. சென்னை அரசாங்கக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராயிருந்த அஷ்டாவதானம் வீராசாமிச் செட்டியார் 1876இல் எழுதி வெளியிட்ட விநோதரசமஞ்சரி என்ற உரைநடை நூலில் இவை விரிவாக எழுதப்பட்டுள்ளன.

இந்நூல் முதற்பதிப்பில் (1876) 16 தலைப்புக்கள் உள்ளன. அவற்றுள் கம்பர் சரித்திரம் 2, ஒட்டக்கூத்தர் 2, புகழேந்தி 1, காளமேகம் 1 ஆக 6 தலைப்புக்கள் தமிழ் இலக்கிய வரலாறு சம்பந்தப்பட்டவை. ஒட்டக்கூத்தர் என்ற தலைப்பில் ஒன்றும், புகழேந்தி 'நளவெண்பாப் பாடியது' என்ற தலைப்பும், இங்கு நாம் கருதும் பொருளைக் குறிப்பவை. இவ்வாசிரியருடைய

குறிப்புக்களே பிற்காலத்தில் தனிப்பாடல் திரட்டு, தனிச் செய்யுள் சிந்தாமணி போன்ற திரட்டு நூல்களில் சொல்லப்பட்டன. விநோதரச மஞ்சரிக்குக் காலத்தால் முந்தியது தமிழ் நாவலர் சரிதை. அது குறிப்பிடும் வரலாற்றை இறுதியில் ஆராய்வோம்.

**கதைகள்**

ஒட்டக்கூத்தர் பற்றிய இரண்டாவது வரலாறு, 'சோழனுக்குப் பெண் பேசியது' என்ற தலைப்புடையது. இது அச்சுப் புத்தகத்தில் (இரத்தின நாயகர் பதிப்பு, டெம்மி அளவு, 1931) 22 பக்கம் இருக்கிறது. இவ்வளவு விவரமாகச் சொல்லியிருப்பது ஆசிரியருடைய புனைந்துரை என்றே கருதத்தக்கது. இக்கதை இன்று தமிழ் நாட்டில் பெருவழக்காக உள்ளது. பள்ளிக்கூடத்துப் பாடம் முதல், நாடகமேடை நாடகம் வரை, இது எங்கும் அறிந்த கதையாக உள்ளது. ஆதலால் இக்கதையை இங்கு சுருக்கிக்கூறி, இதை மறுக்கும் கடப்பாடு நமக்கு எழுகின்றது.

விக்கிரமசோழன் தன் மகன் குலோத்துங்கச் சோழனுக்கு முடிசூட்டி, தான் பிறகு காலமானான். அவையில் பெரும்புலவராயும் குலோத்துங்கனுக்கு ஆசிரியருமாக இருந்த ஒட்டக்கூத்தர் குலோத்துங்கனுக்குப் பாண்டி மன்னன் மகளை மணம்பேச எண்ணி, மதுரையடைந்தார். மணம்பேச வேண்டி அரசவையில் இங்கிதம் அறியாமல் சோழனை உயர்த்தியும் பாண்டியனைத் தாழ்த்தியும் ஒரு பாடல் பாடினார்:

**கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானே**
**கூறுவதும் காவிரிக்கு வையையோ அம்மானே**
**ஆருக்கு வேம்புநிகர் ஆகுமோ அம்மானே**
**ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானே**
**வீரர்க்குள் வீரனொரு மீனவனோ அம்மானே**
**வெற்றிப் புலிக்கொடிக்கு மீனமோ அம்மானே**
**ஊருக்கு உறந்தைநிகர் கொற்கையோ அம்மானே**
**ஒக்குமோ சோணாட்டைப் பாண்டி நாடு அம்மானே?**

இதைக் கேட்டவுடன் பாண்டியன் அவைப் புலவராயிருந்த புகழேந்தி, ஒட்டக்கூத்தர் கூற்று ஒவ்வொன்றையும் மறுத்து, பாண்டியனுக்கு உயர்வும் சோழனுக்குத் தாழ்வும் தோற்றுமாறு ஒரு பாடல் பாடினார்:

**ஒருமுனிவன் நேரியிலோ உரைதெரித்த தம்மானே**
**ஒப்பரிய திருவிளையாட்டு உறந்தையிலோ அம்மானே**
**திருநெடுமால் அவதாரம் சிறுபுலியோ அம்மானே**
**சிவன்முடியில் ஏறுவதும் செங்கதிரோ அம்மானே**
**கரையெதிரல் காவிரியோ வையையோ அம்மானே**
**கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானே**
**பரவைபணிந் ததும்சோழன் பதந்தனையோ அம்மானே**
**பாண்டியனார் பராக்கிரமம் பகர்வரிதே அம்மானே.**

கேட்ட கூத்தர், பின்னும் நிலைமையை உணராமலும், புகழேந்தியைத் தக்கபடி மதிப்பிட அறியாமலும், சோழன் வீரத்தைப் புகழ எண்ணி,

**வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்**
**என்றும் முதுகுக்கு இடான் கவசம் –**

என்று தொடங்கி நிறுத்தின மாத்திரத்தில், புகழேந்தி,

**– துன்றும்**
**வெறியார் கமழ்தொங்கல் மீனவன் கைவேல்**
**எறியான் புறங்கொடுக்கின் என்று.**

எனப் பாடி முடித்தார். கூத்தர் வெட்கும்படியாயிற்று.

இந்தத் தொடக்கத்திலிருந்து ஒட்டக்கூத்தருக்குப் புகழேந்தியிடம் பகைமையுணர்ச்சி தோன்றி வளரலாயிற்று. இருப்பினும் அவர், பாண்டியனைப் பெண் கொடுக்கச் சம்மதிக்கச் செய்து, சோழநாடு வந்தார். உரிய காலத்தில் மணம் நடந்தது. சீதனப் பொருள்களோடு புகழேந்தியும் சோழன் அவைக்கு வந்தார். பகைமையுணர்ச்சியினால் ஒட்டக்கூத்தர் தம் செல்வாக்கைப் பயன்படுத்தி இவரைச் சிறையிலிடச் செய்தார். மாணாக்கனாகிய குலோத்துங்கன் ஒட்டக்கூத்தர் பங்கிலிருக்க, பாண்டிநாட்டு அரசகுமாரி புகழேந்தி பக்கம் இருந்து வந்தாள். சிறையிலிருந்த புலவர், சிறைப்பக்கமாகச் சென்ற எளிய குலத்துப் பெண்களுக்கு உவப்பளிக்கும்படி, அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை, புலந்திரன் களவு மாலை, பஞ்சபாண்டவர் வனவாசம், ஏணியேற்றம், அபிமன்னன் சுந்தரிமாலை, திரௌபதி குறம், மின்னொளியாள் குறம் முதலான பாரத வரலாறு சம்பந்தப் பட்ட கற்பனையான அம்மானைக் கதைப்பாடல்கள் பல

பாடிக் கொடுத்தார்.* அவர்கள் அதைக்கேட்டு மகிழ்ச்சியடைந்து, சமையலுக்கு வேண்டிய உணவுப் பண்டங்களைப் பலகணி வழியாகத் தர, அவர் அவற்றைப் பெற்றுச் சமைத்துண்டு, சிறைக் காவலருக்கும் கொடுத்துக் குறைவின்றி வாழ்ந்திருந்தார். ஒரு சமயம் அவ்வழியே வந்த சோழ மன்னன் சிறையிலிருந்த இவரைக் கண்டு, 'இவர் நம் பாண்டி நாட்டுப் புலவரல்லவா?' என்று உடன் இருந்த கூத்தரைக் கேட்க, அவர் மிக்க அலட்சியத்துடன்,

மானிற்கு மோ அந்த வாளரி வேங்கைமுன் வற்றிச் செத்த
கானிற்கு மோ அவ் வெரியுந் தழல்முன், கனைகடலின்
மீனிற்கு மோ அந்த வெங்கட் சுறவமுன், வீசுபனி
தானிற்கு மோஅக் கதிரோன் உதயத்தில், தார்மன்னனே.

என்று ஒரு பாடல்பாடி, இவரைப் பழித்துரைத்தார். இதைக் கேட்டிருந்த புகழேந்தி அரசனை நோக்கி, "இதை நான் ஒட்டிப் பாடவோ, வெட்டிப் பாடவோ?" என்று கேட்டார். அரசன் தன் தேவி பொருட்டாகப் புகழேந்தியிடம் சற்று இரக்கம் கொண்ட போதிலும், ஒட்டக்கூத்தரிடம் அபிமானம் அதிகம் இருந்த படியால், 'ஒட்டிப் பாடுக' என்று சொன்னான். அப்படியே புகழேந்தியும், கூத்தர் சொன்ன சொற்களை வைத்தே தம்மை உயர்த்தியும் அவரைத் தாழ்த்தியும் பின்வரும் பாடல் பாடிக் கூத்தர் பின்னும் வெட்கும்படி செய்தார்:

மானவன், நானந்த வாளரி வேங்கையும்; வற்றிச் செத்த
கானவன், நானவ் வெரியுந் தழலும்; கனைகடலின்
மீனவன், நானந்த வெங்கட் சுறவமும்; வீசுபனி
தானவன், நானந்தக் கதிரோனுதயமும்; தார்மன்னனே.

இருப்பினும், அர்சன் இன்னும் இவரைச் சிறையிலிருந்து விடுவிக்கவில்லை. சிறையிலிருந்த புகழேந்தி அங்குக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஏனைய குற்றவாளிகளுக்கெல்லாம் நல்ல கல்வி புகட்டி, பண்டிதராக்கியிருந்தார். ஒட்டக்கூத்தர், விழா வில் நரபலி இடுவதற்காகச் சிறையிலிருந்த கைதிகளை அழைப்

* இதுபோன்ற நூல்கள் யாவும் ஒன்றுபோலவே இருக்கும்; இவற்றுள் முதல் நூல் அல்லியரசாணி மாலையே. சாமானிய நூலாயினும், இலக்கிய நயம் பொதிந்த பல வரிகள் இதன்கண் உள்ளன. இந்நூலும் பஞ்ச பாண்டவர் வனவாசம் என்பதும் மட்டும் காலத்தால் முற்பட்டன வாக - ஒருகால் 13 - 15 நூற்றாண்டுகளில் எழுந்தனவாக - இருக்கலாம். ஏனையவை யாவுமே சுமார் 18ஆம் நூற்றாண்டில் அல்லது பிற்பட்டும் பாடப்பட்டிருக்கும்.

பித்தார் என்று, விநோதரச மஞ்சரி வரலாறு கூறுகிறது. புகழேந்தி யிடம் கற்றவர்களில் பல சாதியினரும் நிரம்பியிருந்தனர். முதலில் கூத்தரிடம் ஒரு குயவன் சென்றான். அச்சமில்லாமல் எதிரே வந்து நின்ற அவனைப் பார்த்துக் கூத்தர்,

மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந் தெதிர்த்தவன் ஆரடா?

என்று கேட்ட மாத்திரத்தில், அவன் சற்றும் அஞ்சாது ஒட்டக் கூத்தராகிய யானையை அடக்கவல்ல அங்குசம் என்னும் பொருள்படும்படி,

கூனையுங் குடமுங் குண்டு சட்டியும்
பானையும் பண்ணும் அங்குசப் பையல்யான்.

என்று அவர் திடுக்கிடும்படியாகப் பதில் சொன்னான். சிறிது கலக்கமடைந்த கூத்தர், அவனை நிறுத்தி, அடுத்தவனை அழைத் தார். அவன் குருடனான நாவிதன். அவனைப் பார்த்து,

விண்பட்ட கொக்கு வல்லூறு கண்டென்ன விலவிலக்கப்
புண்பட்ட நெஞ்சொடும் இங்குநின் றாய்பொட்டை யாய்புகலாய்.

என்று கூத்தர் கேட்கவும்,

கண்பொட்டை யாயினும் அம்பட்டன் நான்கவி வாணர் முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயுந்திடுக்கிடப் பாடுவனே!

என்று அவன் தயங்காது விடைகூறினான். அடுத்து வந்தவன் ஓர் இருப்புக் கொல்லன். ‘நீ யார்?’ என்று மட்டும் கூத்தர் கேட்கவே, அவன் தன் பிரதாபத்தை ஒரு பாட்டாகவே பாடி விட்டான்:

செல்லன் புதல்வன் திருவேங் கடவன் சகற்குருவாம்
கொல்லன் கூவியைக் குறைசொல்லு வோரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்ட மாட்டிப் பகைவர்முன்னே
அல்லும் பகலும் அடிப்பேன் கவியிருப் பாணிகொண்டே.

கோபித்த போதிலும், கூத்தர் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. அடுத்தவன் ஒரு தச்சன். அவன் வந்தவுடன்.

சொன்னசந் தக்கவியாவருஞ் சொல்லுவர், சொற்சுவைசேர்
இன்னசந் தக்கவி யாதென்ற போதில், எதிர்த்தவரை
வன்னசந் தங்கெட வாயைக் கிழித்திந்த வாய்ச்சியினால்
கன்னசந் தங்களி லேகவி யாப்பைக் கடாவுவனே.

என்று பாடினான். மீண்டும் கூத்தர் அடுத்தவனை அழைத்தார். வந்தவன் வண்ணான். அவன் தனது தொழிலுக்கும் செங்குந்த ராகிய ஒட்டக்கூத்தர் மரபுக்குரிய நூல் நெய்யும் தொழிலுக்கும் பொருத்தமாக, தான் நூலிலுள்ள மாசைப் போக்கவல்லவன் என்று குறிப்பிட்டு, ஒரு பாடல் பாடினான்.

சேலேய் விழிமட வாரிற்செங் கால்அன்னம் சேர்பழனப்
பாலேய் பணவயிற் கூத்த,நின் போலியர் பாப்புனைந்த
நூலேய் துகளகலத் தூய்தாக்கு நோன்மை நுவல்வதல்லால்
மேலேய் தமிழ்ப்புலவோர் என்னை யென்ன விளம்புவதே?

பின்னர் கூத்தர் அடுத்து நின்றவனை அழைத்தார். வந்தவன் ஒரு வேளாளன்.* அவன் கூத்தருடைய இறுமாப்பைக் கண்டு அவருக்குப் புத்தி புகட்டும் முறையில், பண்பாடு குறையாமல், உலகியல்பைச் சுட்டி ஒரு பாடல் பாடினான்:

கோக்கண்ட மன்னர் குரைகடல் புக்கிலர்; கோகனகப்
பூக்கண்ட கொட்டியும் பூவாதொழிந்தில; பூவில்விண்ணோர்
காக்கண்ட செங்கைக் கவிச்சக்ரவர்த்தி, நின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர் களோ,கவி பாடிய பாவலரே?

இதைச் சொல்லிய பின், மேலும் அவன் சொல்லலானன்: "ஐயா! நீர் முன்பு சோழ மகாராஜாவின் மேற்பாடிய அண்டத்துப் பரணியென்னும் பிரபந்தத்தில்❖ இந்தப் பிரமாண்டத்தையே நகரமாகவும், பூமியைச் சுற்றியிருக்கின்ற சக்கரவாளகிரியையே மதிலாகவும், அதற்கு உட்புறத்திலிருக்கின்ற சப்த சமுத்திரங் களையே அகழாகவும், பூமி மத்தியிலுள்ள மகமேருவையே கோட்டைக் கொடிக்கம்பமாகவும் உருவகப்படுத்தி வருணித் திருக்கிறீரே, அகழானது புறத்திலிருந்தால் அல்லவோ கோட் டைக்கு உறுதி? அகத்திலிருக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறதே, அதனால் என்ன பயன்? இது சரிதானா? சொல்ல வேண்டு மானால் அண்டத்திற்கப் புறத்திலுள்ள பெரும் புறக்கடலைச் சொல்லலாமே; கம்பர் இராமாயணத்தில் நகர வருணனையில்,

---

* ஒட்டக்கூத்தர் செங்குந்தமரபினர்; புகழேந்தி வேளாளமரபினர் என்பர் புலவர் புராணமுடையார்.

❖ அண்டத்துப்பரணி என்றது தக்கயாகப்பரணி போலும்; அதன் 137ஆம் பாடல் பார்க்க. கதை புனைந்தவர், ஏதோ ஒரு பரணிப் பாடல் கேள்வியுற்று அதற்கு அண்டத்துப்பரணி என்று பெயர் சூட்டி விட்டாரென்று தோன்றுகிறது.

நேமிமால் வரைமதி லாக நீள்புறப்
பாமமா கடல்கிடங் காகப் பன்மணி
வாமமா ளிகைமலை யாக மன்னற்குப்
பூமியும் அயோத்திமா நகரம் போலுமே.

என்ற செய்யுளில் பெரும்புறக்கடலை அழகாகச் சொன்னதை யாவது பார்க்கவில்லையா அல்லது கேட்கவுமில்லையா?" என்றான்.

அதன்மேல் ஒட்டக்கூத்தர் செருக்கடங்கினார்; நரபலியை நிறுத்தி, இவர்களையும் விடுவித்தார்.

இதற்கிடையில் சோழன்தேவி, புகழேந்திக்குச் செய்த இன் னலைக் கேள்வியுற்று, அரசன்மீது, கோபித்து, அவன் அந்தப் புரத்தை நாடி வந்தபோது, கதவை அடைக்கச் செய்தாள். வந்த அரசன் இருக்கின்ற நிலைமையை அறிந்து, தன் ஆசிரியராகிய கூத்தரை அழைத்துத் தேவியைச் சமாதானம் செய்யுமாறு பணித்தான். அப்படியே கூத்தர் சென்று முன்போலவே இங்கிதம் அறியாமல் சற்று மிடுக்காகவே,

நானே இனியுன்னை வேண்டுவ தில்லை நளினமலர்த்
தேனே, கபாடந் திறந்து விடாய், செம்பொன் மாரிபொழி
வானே றனைய இரவி குலாதிபன் வாசல்வந்தால்,
தானே திறக்கும், நின் கையித ழாகிய தாமரையே.

என்ற பாடலைப் பாடினார். கேட்ட தேவி பின்னும் கோப மடைந்து, 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்'* என்று மீண்டுமொரு தாழ்ப்பாளிடச் செய்தாள். இதைச் சோழன் அறிந்தான். விரகதாப மிகுதியினாலே, இதுவரை இகழ்ச்சி யாகக் கருதியிருந்த புகழேந்தியை அவன் மனம் நாடிற்று. இவருக்கு இட்டிருந்த காவலை நீக்கி, நிலைமையைக் கூறி, தேவியைச் சமாதானம் செய்யுமாறு வேண்டினான். இவரும் அங்ஙனமே சம்மதித்து, அந்தப்புரம் அடைந்து, மிகவும் பக்குவ மாகத் தேவியை நோக்கி நயமான இரு பாடல்கள் பாடினார்:

இழையொன்றிரண்டு வகிர்செய்த வற்றொன் றிணையுமிடை
குழையொன்றிரண்டு கட்கொம் பனையாய், கொண்ட கோபந்தவிர்
மழையொன்றிரண்டு கைமானபரன் கண்டன்வாயில் வந்தால்
பிழையொன் றிரண்டு பொறுப்பதன் றோகடன் பேதையர்க்கே?

---

* இவ்வாக்கியம் இன்றுவரை ஒரு பழமொழியாகவே வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

தூபங் கமழும்பைங் கோதையன் விக்ரம சோழன்மன்னர்
தீபன்* புறங்கடை வந்துநின் றான், நின் திருப்புருவச்
சாபங் குனிய விழிசிவப் பத்தலை சாய்த்துநின்ற
கோபந் தணிஅன் னமே,எளி தோநம் குடிப்பிறப்பே?

இவற்றைக் கேட்டுத் தேவி உண்மையாகவே மனமிளகி வாயிலைத் திறந்து வெளிவந்து, புகழேந்தியைக் கண்டு வணங்கி, நிகழ்ந்தன வெல்லாம் அவரால் உணர்த்தப்பெற்று, ஊடல் தணிந்து அரசனோடு சமாதானமானாள்.❖ புகழேந்தியும் அரசனிடத்துப் பாராட்டைப் பெற்றபோதிலும், இனி அங்கிருக்க மனமின்றி, சிலநாள் சென்றபின், சோழநாட்டை நீங்கி, பின் மள்ளுவ நாட்டின் தலைநகராகிய முரணை நகரில் தலைவனாயிருந்த சந்திரன் சுவர்க்கி என்ற மன்னனால் ஆதரிக்கப்பெற்று, அவன் வேண்டியபடி பாரதத்திலுள்ள நளன் கதையை நளவெண்பா என்ற தனிச் சிறு காவியமாகப் பாடியளித்தார்.

ஒட்டக்கூத்தர் ஓரளவு பச்சாத்தாபம் கொண்டு புகழேந்தியிடமிருந்த பகைமையை மறந்தபோதிலும்கூட, குற்றம் காணும் தன்மை முழுமையும் அவரிடம் நீங்கவில்லை. இக்குணம் மீண்டும் நளவெண்பாவைப் புகழேந்தி அரங்கேற்றியபொழுது வெளிப்பட்டது. சோழன் அவையில் புகழேந்தி இந்நூலை அரங்கேற்றினார் என்று இக்கதை சொல்கிறது. முதலாவதாகப் புகழேந்தி இந்நூலைச் சந்திரன் சுவர்க்கி அவையில் அரங்கேற்றினார் என்றும், அதன்பின் நூற்சிறப்பைக் கேட்டறிந்த குலோத்துங்கன் தனது அவையில் புகழேந்தியை அழைப்பித்து மீண்டும் ஓர் அவைகூட்டி அரங்கேற்றுவித்தான் என்றும், பின் வந்தோர் எழுதியிருக்கிறார்கள். இந்த அவையில் ஒட்டக்கூத்தர் இருந்தார். அனைவரும் மிக்க மகிழ்ச்சியோடு புகழேந்தியைக் கொண்டாடியதைக் கண்ட ஒட்டக்கூத்தருக்குப் பொறாமைக் குணம் மீண்டும் தலையெடுத்தது.

மல்லிகையே வெண்சங்கா வுண் டூத, வான் கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப, – முல்லைமலர்
மென்மாலை தோளசைய, மெல்ல நடந்ததே,
புன்மாலை அந்திப் பொழுது.

---

* தீபன் - விக்கிரமன் புதல்வன் குலோத்துங்கன்.

❖ புகழேந்தி - கூத்தர் கதைகளைப் புலவர் புராணமுடையாரும் சில வேறுபாடுகளோடு குறிப்பிடுகிறார்.

என்ற பாடலைப் புகழேந்தி எடுத்து விரித்துரைத்த பொழுது, கூத்தர், "ஐயா! மல்லிகையை வெண்சங்காகவும், வண்டை ஊது வோனாகவும் உருவகம் செய்தது பொருந்தாது. ஏனெனில், உலகத்தில் சங்கநாதம் செய்பவர்கள் சங்கின் கீழ்ப்புறத்தே வாய் வைத்து ஊதுவார்கள். ஆனால் வண்டானது மலரின் மேலிருந்து ஒலி செய்யுமேயன்றிக் கீழ்வந்து ஊதுதல் இல்லையாதலால், இப்பாடல் குறிப்பிடும் உவமை பிழை" என்று குறிப்பிட்டார். கேட்ட புகழேந்தி, மிக்க சமற்காரமாக, "குடிவெறியனுக்குத் தலையென்றும் கீழென்றும் விளங்குமா?" என்று கூறினார். குடிவெறி என்ற கருத்தைச் சபையோர் மிகவும் பாராட்டி னார்கள். கேட்ட ஒட்டக்கூத்தர் அதற்குமேல் ஒன்றும் சொல்ல முடியவில்லை.*

இவ்வாறு இன்னும் பல மறுப்புக்களை ஒட்டக்கூத்தர் கூற, அவற்றிற்கெல்லாம் புகழேந்தி தக்க சமாதானம் கூறிக் கொண்டு வந்து அரங்கேற்றத்தை முடித்தார். அன்றிரவு புகழேந்தி தம் இல்லத்தில் இருந்து, ஒட்டக்கூத்தர் தம்மீது பொறாமை கொண்டு எப்போதும் இடையூறே செய்து வருகிறார் என்று எண்ணி, அவரைக் கொல்வதுதான் இவ்விடையூற்றை நீக்கும் வழி என்று துணிந்து, கையில் வாளை எடுத்துக்கொண்டு, நள்ளிரவில் கூத்தர் இல்லம் அடைந்தார். அப்போது அங்கு அவர் கண்ட காட்சி வேறுவிதமாக இருந்தது. "இன்று அரசவை யில் புகழேந்தி நளவெண்பா அரங்கேற்றக் கேட்டசெவி இன்பத்தால் இப்பொழுது எந்த உணவும் கொள்ளவில்லை. நளவெண்பாவிலுள்ள பாடல்களின் சாரத்தையே பிழிந்து எடுத்து என் உணவில் விட்டால்கூட, எனக்குத் தெவிட்டி விட்டது; ஆதலால் உணவு கொள்ளமாட்டேன்" என்று கூத்தர்

* ஆழ்வார், 'எல்லியம்போது இருஞ்சிறை வண்டு எம்பெருமான் குணம்பாடி மல்லிகை வெண்சங்கூதும் மதில் அரங்கம் என்பதுவே' என்று பாடியிருப்பதையும், திருச்சிற்றம்பலக் கோவையாருள் 'மல்லிகைப் போதில் வெண்சங்கம் வண்டூத' என்று சொல்லப் பட்டிருப்பதையும் புகழேந்தி எடுத்துக்காட்டி, முன்னோர் ஆட்சி இவ்வாறு இருப்பதனால் தம் பாடல் பிழையாகாது என்றார் எனப் பிற்காலப் புலவர் ஒருவர் விளக்கம் எழுதியிருக்கிறார். இது இப்புலவர் கற்பனையேயன்றிப் பழங்கதையில் காணப்படவில்லை. ஆயினும் முன்னோர் மொழிபொருளையும் சொல்லையும் பொன்னேபோல் போற்றிப் புகழேந்தி கூறியதைக் கூத்தர் அறியாது தருக்கித்தார் என்பது பொருத்தமற்ற கட்டுக்கதையே.

தம் மனைவியிடம் சொல்லிக் கொண்டிருந்தார். கேட்டுக் கொண்டே வந்த புகழேந்தி, கூத்தர் உள்ளம் இருந்த தன்மையை உணர்ந்து மிகவும் பதறிப்போய், கூத்தர் காலில் விழுந்து தம் கைவாளை எறிந்துவிட்டு, தாம் கொண்டிருந்த எண்ணத்தைச் சொல்லித் தம்மை மன்னிக்கும்படி வேண்டினார். பின் இருவருமே நெருங்கிய நண்பர்களாயினர்.

இதை அறிந்த சோழன் மகிழ்ச்சியடைந்து இருவரையும் பாராட்டி, அவர்களைத் திருநெய்த்தானம் சென்று அங்கு நெய்யாடியப்பரை வழிபட்டு அவர்மீது ‘நெய்த்தானத்தானைச் சேவித்தே’ என்பதை மகுடமாக வைத்து ஒவ்வொரு சந்த விருத்தம் பாடும்படி சொன்னான். அப்படியே இருவரும் சென்று வழிபட்டுப் பாடினார்கள். ஒட்டக்கூத்தர் பாடிய பாடல்:

> விக்காவுக்காவித் தாவிப்போய் விட்டானட்டார் சுட்டூர்புக்கார்
> இக்காயத்தாசைப் பாடுற்றேயிற்றேடிப் போய்வைப்பீர் நிற்பீர்
> அக்காடப்பேய் தொக்காடச்சூ ழப்பாடத்தீ வெப்பாடப்பூண்
> நெக்காடக்கா னத்தாடப்போம் நெய்த்தா னத்தானைச் சேவித்தே.

புகழேந்தி பாடிய பாடல்:

> தற்கோலிப்பூ சற்பாசத்தே தப்பாமற்சா கைக்கே நிற்பீர்
> முற்கோலிக்கோ லிப்பூசித்தே முட்டாமற்சே வித்தேநிற்பீர்
> வற்றாநெட்டோ டைப்பாரைச்சேன் மைப்பூகத்தே றித்தாவிப்போய்
> நெற்றாளூற்றா லைப்பாகிற்சேர் நெய்த் தானத்தானைச் சேவித்தே.

பின்னர், புகழேந்தி தென்பாண்டிநாடு சென்று, திருக்குறுங் குடியில் எழுந்தருளியுள்ள அழகிய நம்பி என்ற திருமாலை வழிபட்டு, ஒரு பாடலைப் பாடினார்:

> எட்டெழுத் தைக்கருத் திற்குறித் திட்டுநித் தம்பரவும்
> சிட்டர்கட் குத்திருப் பொற்பதத் தைச்சிறக் கத்தருமவ்
> வட்டநெட் டைப்பணித் தற்பநித் தற்கிடம் வாரிசப்பொ
> குட்டினத் துக்குலந் தத்திமுத் தீனுங் குறுங்குடியே.

இவ்வாறு விநோதரச மஞ்சரிக்காரர் சொல்லிய ஒட்டக் கூத்தர் புகழேந்தி கதைகளைச் சுருக்கி இங்குக் கொடுத்தோம். இதன் நோக்கம், ஆராய்வோருக்கு ஒரே இடத்தில் இவ்வரலாறுகள் இருப்பது நலம் என்பதே. ஆனால் இக்கதைகள் சற்று விரசமாக

இருந்தபோதிலும்கூட, சமற்காரமும் கற்பனை நயமும் பொருந்தியன என்பது உண்மை. இப்புனைகதைகளைப் படைத்தவர் யாரென்பது விளங்கவில்லை. எனினும் தொண்டைமண்டல சதகத்தின் 35ஆம் பாடல், புகழேந்தி சோழன் அவையில், நெய்த்தானத்துக்குரிய 'தற்கோலி என்ற கவியைச் சொல்லி ஒட்டக்கூத்தனை வென்றார்' என்று சொல்லுகிறது:

நூலார் கலைவல்ல செம்பியன் கேட்க
    நொடித்துமிக்க
கோலாகலன் ஒட்டக் கூத்தனை அன்றுதற்
    கோலியென்று
மேலார் கவிசொல்லி நெய்த்தானத் தே சென்று
    வென்று கொண்ட
மாலார் களந்தைப் புகழேந்தியும் தொண்டை
    மண்டலமே.

சதகம் பாடினவர் படிக்காசுப் புலவர். அவர்காலம் 17ஆம் நூற்றாண்டின் இறுதி ஆதலால், அவருக்கு முன்னமேயே ஒட்டக்கூத்தரையும் புகழேந்தியையும் பிணைக்கும் கதை இருந்ததென்று இப்பாடல் காட்டுகிறது. அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுந்த பாண்டிமண்டல சதகம் இரண்டு பாடல்களில் புகழேந்தியைக் குறிப்பிடுகிறது.

முதல் பாடல், அவர் பாண்டிமன்னன் பெண்ணுக்குச் சீதனமாக அனுப்பப்பட்டார் என்று கூறுகிறது:

நளனைப் புகழ்கின்ற வெண்பாவைப் பாடிநன்
    னாட்கவிதை
களகத்தில் மிக்க புகழேந்தி யாம்கவி
    ராசன் தன்னைக்
தளவப் பெருநகை மாதொரு தென்னவன்
    தான்மணஞ்செய்
வளவற்குச் சீதன மீந்ததும் பாண்டியன்
    மண்டலமே. (26)

மற்றொரு பாடல், சோழன் வேளாளர் அடிமை என்று கூறியதாகச் சொல்கிறது. இதில் குறிப்பிடப்பட்ட வரலாறு விளங்கவில்லை:

நாமார் அடிமை வேளாளர் அடிமை எந்
 நாளுமென்று
கோமான் வளவன் முன் கூற அவனுரை
 கூறித்தென்னன்
பாவாண ராகவந் தாண்டவ னென்று
 பகருங்கஞ்ச
மாவார் களந்தைப் புகழேந்தி பாண்டியன்
 மண்டலமே. (33)

கூத்தர் புகழேந்தி கதைகளை, சொற்பம் படித்தவர்கள்கூட விருப்பத்தோடு படித்தும் சொல்லியும் வருகிறார்கள்: பாடப் புத்தகங்களிலும் இவை இடம் பெற்றுள்ளன. ஆனால் இவற்றில் சிறுபகுதிகூட உண்மையன்று. இவை முழுமையும் பொய்க் கதைகளே. ஒட்டக் கூத்தருக்கும் புகழேந்திக்கும் இடையில் ஒரு நூறாண்டுக் காலமாவது இடைவெளி இருக்கும். கூத்தர் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கமும் இடைப்பகுதி யுமாகும். புகழேந்தியின் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதி, ஆகவே, இருவரும் ஒரே காலம் என்பது பொருந்தாது என்பது வெளிப்படை. மேலும், மூன்று சோழ மன்னருடைய சபையில் மிக்க சிறப்போடு இருந்த பெரும்புலவரான ஒட்டக் கூத்தர், பாண்டியனவையிலேயே பாண்டியனைத் தாழ்த்திப் பாடினார் என்பது போன்ற செய்திகள் மிகவும் பிழைபட்டவை.

இவ்விருவரோடு அவ்வையாரையும் சேர்த்துப் பிணைக்கும் கதைகளும் உள்ளன. அவையும் போலிக்கதைகள்; ஆதலால் விரிவஞ்சி இங்கு சொல்லப்பெறவில்லை.

முன்னமே குறிப்பிட்ட வரலாற்றில் வேளாளன் பாடிய தாகச் சொல்லப்பட்ட கோக்கண்ட மன்னர் என்ற பாடல், கவிஞரை வெட்ட வேண்டாமென்று ஒட்டக்கூத்தரை நெற்குன்ற வாண முதலியார் பாடியதென்று தமிழ் நாவலர் சரிதையில் காணப்படுகிறது; 12ஆம் நூற்றாண்டு. அதுவே உண்மை.

**சமயம்**

புகழேந்தியின் வாழ்க்கை வரலாறு எதுவும் தெரியவில்லை. சந்திரன் சுவர்க்கி என்ற வள்ளலால் ஆதரிக்கப் பட்டவர் என்பது மட்டும் நூலால் தெரிகிறது. இவருடைய சமயத்தைக் குறித்துச் சில சொற்கள் கூறலாம். நளவெண்பாவில் கடவுள் வாழ்த்துப்

பகுதியில் காணப்படும் நான்கு பாடல்களில், 'நீல நெடுங் கொண்மூ' என்பது முருகன் துதி. இரும்பல் காஞ்சிப் பாட்டு; பிற மூன்றும் விநாயகர், திருமால், சிவபிரானைத் துதிப்பவை. விநாயகர் பாடலுக்கு, மகிழ்மாறனைத் துதிக்கின்றதான பூரண பாடபேதம் உள்ளது. அன்றியும், கலிதொடர் காண்டத்தின் காப்பாகவும், கலிநீங்கு காண்டத்தின் காப்பாகவும் இவ்விரண்டு பாடல்கள் உள்ளன. ஒன்று நம்மாழ்வார் அல்லது திருமால் துதியாகவும், மற்றது சிவபெருமான் துதியாகவும் உள்ளன. இக் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் அனைத்தையும் ஆசிரியர் வாக் காகக் கொள்ள வேண்டுமேயன்றி, இடைச்செருகல் எனல் பொருந்தாது. இப்பாடல்களின் ஓசை, பிற புகழேந்தியின் பாடல் கள் போலவே சொல்லையும் பொருளையும் வருந்தித் தேடி அமைக்காதபடியும், செம்பாகமும் பொருளாழமும் பெற்றும், இயன்றுள்ளது. எடுத்துக்காட்டாகப் பின்வரும் இரு பாடல் களையும் காண்க (கலி நீங்கு காண்டத் தொடக்கம்):

மூலப் பழமறைக்கு முன்னேயுங் காணலாம்
காலிக்குப் பின்னேயுங் காணலாம் – மால்யானை
முந்தருளும் வேத முதலே என அழைப்ப
வந்தருளுஞ் செந்தா மரை.

போதுவார் நீறணிந்து பொய்யாத ஐந்தெழுத்தை
ஓதுவார் உள்ளம் எனஉரைப்பர் – நீதியார்
பெம்மான் அமரர் பெருமான் ஒருமான்கை
அம்மான் நின் றாடும் அரங்கு.

மேலும், பதின்மூன்றாம் நூற்றாண்டில் நூல் இயற்றிய புகழேந்தி யார் கடவுள் வாழ்த்தின்றி இந்நூல் பாடினார் என்பது மரபுக்கு ஒவ்வாததாகவும் இருக்கிறது. எனவே, இக்கடவுள் வாழ்த்துப் பாடல்கள் யாவும் இவருடைய வாக்கு எனவே கொள்ளும் பொழுது, இவருடைய சமரசநோக்கு நன்கு புலனாகின்றது.

எனினும், இவருடைய சமயம் வைணவம் என்பதை நன் றாக உணர்த்தியே பாடுகின்றார். நளனைக் கலி தொடர்ந்தது, திருமால் திருவடியைச் சேராதாரைத் துன்பம் தொடர்ந்தாற் போலும்; அவனுடைய உலகளந்த மெய்யடியைப் பற்றினோர் வினை நீங்குவதுபோல, நளனுக்கு அமைந்திருந்த விகாரமான தேர்ப்பாகன் வடிவம் நீங்கிற்று என்று சொல்வது கருதத்தக்கது:

நாராய ணாய நமஎன்று அவனடியிற்
சேராரை வெந்துயரம் சேர்ந்தாற்போல் – பாராளும்
கொற்றவனைப் பார்மடந்தை கோமானை வாய்மைநெறி
கற்றவனைச் சேர்ந்தான் கலி.

மிக்கோன் உலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோர் அருவினைபோற் போயிற்றே – அக்காலம்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு.

அன்றியும், மூன்றிடங்களிலும் முதலில் திருமால் துதியை வைத்துப் பின்னரே சிவபிரான் துதியை வைத்திருக்கிறார்.

## நளவெண்பா

இது 424 வெண்பாக்கள் கொண்ட சிறப்பான ஒரு சிறு தமிழ்க் காப்பியம். 'புலவர்க்கு வெண்பாப் புலி' என ஒரு பழஞ் சொல் உண்டு; இது கடினம் என்பதைப் புலப்படுத்தும். இக் கடினத்தையும் கடந்து இவர் வெண்பாப் பாடுதலில் பெரு வெற்றி பெற்றிருக்கிறார். 'வெண்பாவில் புகழேந்தி' என்று இப் புலவருக்குச் சிறப்பு வருவதற்கு இச்சிறு நூலின் சுவையே காரணமாகும். இது சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என்ற மூன்று காண்டங்களைக் கொண்டது; முறையே 177, 155, 192 பாடல்கள் உள்ளன. ('மர்ரே கம்பெனியார் பதிப்பில் 378 பாடல்கள் மட்டுமே கொள்ளப்பட்டன.) இவ் வத்தியாய முடிவிலுள்ள குறிப்பைப் பார்க்க.)

நீல நெடுங்கொண்மூ நெற்றி நிழல்நாறிக்
காலை இருள்நீக்கும் காய்கதிர்போல் – சோலை
மணித்தோகை மேற்றோன்றி மாக்கடற்சூர் வென்றோன்
அணிச்சே வடிஎம் அரண்.

என்ற பிரசித்தமான முருகன் துதியான வெண்பா 'இரும்பல் காஞ்சிப் பாடல்' என்று புறத்திரட்டுக் கூறுகிறது; பண்டைக் காலத்தில் நளவெண்பா ஏடு எழுதினோர் இப்பாடலைத் தாங் களும் எடுத்து எழுதிக் கொண்டனர் போலும். உறுதியாகச் சொல்வதற்கில்லை. அன்றியும்,

உருவழிக்கும், உண்மை உயர்வழிக்கும், வண்மைத்
திருவழிக்கும், மானஞ் சிதைக்கும், – மருவும்
ஒருவரோடு அன்பழிக்கும்; ஒன்றல்ல: சூது
பொருவரோ தக்கோர் புரிந்து?

என்ற நளவெண்பாப் பாடல் (41) பாரத வெண்பாப் பாடல் என்றே புறத்திரட்டுக் கூறுகிறது:

**உருவழிக்கும், உண்மை நலனழிக்கும், வண்மைத்**
**திருவழிக்கும் மானஞ் சிதைக்கும், – ஒருவர்**
**ஒருவரோடு அன்பழிக்கும், ஒன்றலாச் சூது**
**பொருவரோ தக்கோர் புரிந்து.**

என்பது புறத்திரட்டில் கண்டபாடம். (ஒருகால் நளவெண்பா என்று கூறுவதற்குப் பதிலாகப் பாரத வெண்பா என்று பிழையாகச் சொல்லிற்றோ என்ற ஐயம் எழுதலும் இயல்பு.)

மேலும், பாயிரப் பகுதியில் விநாயகர், திருமால், சிவபெருமான், முருகன் ஆகியோர் வணக்கமும் அவையடக்கப் பாடல் ஒன்றும் காணப்படுகின்றன. ஆசிரியரின் பெயர் கூறும் அடுத்த பாடல் பின்வருவது:

**பாரார் நிடத பதிநளன்சீர் வெண்பாவால்**
**பேரார் புகழேந்தி பேசினான் – தாரார்**
**செழியனையும் சென்னியையும் சேரத் திறைகொள்**
**மொழியின் சுவையே முதிர்ந்து.**

அவையடக்கப் பாடல் 'நளன் தன் தெய்வத் திருக்கதை என்று கூறுகிறது. தெய்வத் திருக்கதை என்பதை ஆசிரியர் கூறும் உயர்வு நவிற்சி என்றே கொள்ள வேண்டும்.

நளனுடைய சரித்திரம் தமிழும் வடமொழியும் நன்கறிந்தது. மகாபாரதத்திலுள்ள கிளைக்கதைகளில் ஒன்று நளோபாக்கியானம் என்பது. இதைத் தழுவியே புகழேந்தி நளவெண்பாப் பாடினார். மற்றொரு சிறப்பான வடமொழி நூல், ஹர்ஷ சக்கரவர்த்தி* பாடிய நைஷதம் என்பது. (நிஷத நாட்டு மன்னன் சரிதம் நைஷதம்.) ஹர்ஷர் ஏழாம் நூற்றாண்டின் முற்பாதியில் வாழ்ந்தார். இவர் செய்த நூல், 'நைஷதம் புலவர்க்கு ஔஷதம்' என்று சிறப்பிக்கப் பெறும். இதன் சிறப்புச் சிறிதும் குறையாமல் 16ஆம் நூற்றாண்டில் அதிவீரராம பாண்டியர் இதைத் தமிழ் விருத்தப் பாடலாக மொழிபெயர்த்தார். இப்பழமொழி தமிழ்

---

* ஹர்ஷர் என்ற புலவர் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார். நைஷ தீப சரித்திரம் செய்தார். வேதாந்தி. கன்னோஜ்சர சபையில் புகழோடு விளங்கினார் என்ற செய்தியும் ஆராயத்தக்கது.

நூலுக்கும் நன்கு பொருந்துவதாகும். புகழேந்தி செய்த நூல், காலத்தால் மூன்று நூற்றாண்டுகள் இதற்கு முற்பட்டதாகும்.

**கதைச் சுருக்கம்**

பாண்டவர்கள் நாடெல்லாம் துறந்து காட்டிலிருந்த காலத்தில் வியாசமுனிவர் வந்து கண்டார். அவரைத் தரும புத்திரர் வணங்கி, உபசரித்து "நாங்கள் இத்தகைய அவலநிலை அடைவதற்குக் காரணந்தான் யாது?" என்று கேட்க வியாசர், சூதாட்டத்தினால் நள மன்னன் எவ்வாறு பெருந்துயர் அடைந்தான் என்பதைக் குறிப்பிட்டு, அவன் கதையை விரிவாகச் சொன்னார். நிடத மன்னனாகிய நளன் விதர்ப்ப நாட்டு அரசனாகிய வீமனது மகள் தமயந்தியின் பண்புகளை அன்னத்தின் வாயிலாகக் கேட்டு அவ்வன்னத்தையே அவளிடத்தில் தூதாக அனுப்பினான். அன்னம் சென்று தமயந்தியிடம் நளனது காதலை உரைக்க, அவளும் நளன்மீது காதல் கொண்டாள். அவளது நிலையை உணர்ந்த தந்தை வீமராசன் அவளுக்குச் சுயம்வரத்துக் காக ஏற்பாடு செய்தான். கலகப்பிரியரான நாரத முனிவரால் இச்செய்தியை அறிந்த இந்திரன், வருணன், யமன், அக்கினி ஆகிய நால்வரும் சுயம்வரத்தை நாடிவந்தனர். வழியில் நளனைக் கண்டு தங்கள் பொருட்டு அவனையே தமயந்தியிடம் தூதாக அனுப்பினர். அவள் இசையவில்லை. சுயம்வர மண்டபத்தில் இந்நால்வரும் நளன் உருக்கொண்டு அமர்ந்திருக்க, கண் இமைத்தல் கால்நிலம் தோய்தல் முதலிய குறிகளால் உண்மை நளனை இன்னான் என்று தமயந்தி அறிந்து மாலையிட்டாள். திரும்பிச் சென்ற தேவர்கள் எதிர்ப்பட்ட கலிபுருடனிடத்தில் நிகழ்ந்தது உரைத்தனர். அவன் சினந்து, "தேவர்கள் பெற்ற அவ மதிப்புக்குக் காரணமாயிருந்த நளனைச் சிறுமைப் படுத்து கிறேன்" என்று சூளுரைத்து, சிறிது நாளில் புட்கரன் என்ற மன்னனோடு நளன் சூதாடுமாறு செய்து, அவன் நாடு முதலிய அனைத்தையும் கவரச் செய்தான். தோற்ற நளன், தன் மக்களை வீம மன்னனிடத்தில் அனுப்பிவிட்டு, நாட்டைத் துறந்து காடு வழியே சென்றபொழுது, ஒரு நள்ளிரவில் உறங்கியபோது கலியின் வலியால் தமயந்தியைத் தனியே விட்டு அகன்றான். நளனைக் காணாது வருந்திய தமயந்தி ஒரு வணிகன் வழிகாட்ட, தன் தந்தை நாடு அடைந்து, நளனைத் தேடச் செய்தாள். காட்டின் வழியே சென்ற நளன் கார்க்கோடகன் என்ற ஒரு பாம்பைத் தீயின் வாயிலிருந்து காத்தான். அப்பாம்பு அவனை

உடனே தீண்ட, அவன் உருவம் அவலட்சணமான உருவமாக ஆயிற்று. "இவ்வுருவத்தோடு நீ இருந்து உனக்கு நற்காலம் வரும் பொழுது இவ்வுடைகளை அணிந்து பழைய உருவத்தைப் பெறுவாய்" என்று கூறிப் பாம்பு உடைகளைத் தந்து சென்றது. அப்பால் நளனும், அயோத்தி மன்னன் ருதுபர்ணன்பால் தேர்ப்பாகன் தொழிலும், மடைத்தொழிலும் செய்து வந்தான். நளனைத் தேடி வந்த அந்தணன் அவன் அங்கு இருப்பதை உணர்ந்து தமயந்திக்கு அறிவிக்க, அவளும் 'தமயந்திக்கு இரண் டாம் சுயம்வரம்' என்று சொல்லித் தந்திரமாக ருதுபர்ணனைத் தேர்ப்பாகனோடு விதர்ப்பநாடு வரச்செய்து, அங்கு நளன் பிள்ளைகளைக் கண்டு உருகி உண்மை வடிவத்தோடு வெளிப் படுமாறு செய்தாள். நளனும் பின்னர் கலி நீங்கப்பெற்று, புட்கரனோடு மறுபடியும் சூதாடி இழந்த நாட்டை மீளவும் பெற்றுச் சுகமே வாழ்ந்திருந்தான்.

கலி தன்னைவிட்டு நீங்குங்காலத்தில், "என் சரிதம் கேட்டவர் களை நீ பீடிக்கக்கூடாது" என்று நளன் கலிபுருடனை ஒரு வரங்கேட்டான். கலியும் 'அப்படியே' என்றான் *(3: 77-78)* இந்த வரத்தின் சிறப்பு தமிழ்நாட்டில் இன்றும் நிலவிவருகிறது. காரைக்கால் பகுதியிலுள்ள திருநள்ளாறு என்ற தலம் சனிக்குரிய தலமாகக் கருதப்படுகிறது. இங்கு நளன் கலி நீங்கப் பெற்றதாக வரலாறு. நளதீர்த்தம் என்றொரு குளமுமிருக்கிறது; மக்கள் இன்றும் பெருந்திரளாகச் சனிப்பெயர்ச்சி அன்றும் மற்ற நாள் களிலும் இங்கு வந்து நீராடிச் சனியை வழிபட்டுப் போகிறார்கள் என்பது அறியத்தக்கது.

நளன் கதை தமிழ்நாட்டில் பழமையாகவே வழங்கியது என்பதற்குச் சிலப்பதிகாரம் சான்று பகரும்:

> வல்லா டாயத்து மன்னரசு இழந்து
> மெல்லியல் தன்னுடன் வெங்கான் அடைந்தோன்
> காதலிற் பிரிந்தோன் அல்லன்; காதலி
> தீதொடு படூஉம் சிறுமையள் அல்லள்;
> அடவிக் கானத்து ஆயிழை தன்னை
> இடையிருள் யாமத்து இட்டு நீக்கியது
> வல் வினை யன்றோ?

என்ற வரிகளைக் காண்க *(ஊர் காண்காதை வரி 50-56).*

### நூற் சிறப்பு

இந்நூல் தோன்றிய காலம் முதல், கல்வி பயிலுகின்ற இளம் பிள்ளைகள் தவறாது படிக்கின்ற சிறிய காப்பியமாக அமைந்திருக்கின்றது. புகழேந்தியின் பாடல்களில் சங்கச் செய்யுள் பதினெண் கீழ்க்கணக்குப் போன்ற சொற்செட்டு, ஓசை நயம் அமையாத போதிலுங்கூட, ஓரளவு பாரதவெண்பா, முத்தொள்ளாயிரம் ஆகிய வெண்பா நூல்களின் ஓசையையும் தொடை நயத்தையும் தழுவி வந்து, பிற்கால நூலாசிரியர் அனைவருக்கும் சிறப்பான முன்மாதிரியாக இயன்றுள்ளது.

நூலுள் ஆங்காங்கு பண்டைய நூற்கருத்துக்களும் தொடர்களும் பயில்வதைக் காணலாம். இங்ஙனம் பயிலும் நூல்கள் திருக்குறள், திருவாசகம், திருநெடுந்தாண்டகம், திருவாய்மொழி, கம்பராமாயணம், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலாயின.

இந்நூல் மிகவுயர்ந்த நீதிகளை எளிதாக, செம்பாகமான சொற்களால் புகட்டும் ஒரு சிறந்த காவியமாகும். இது எழுந்த காரணமே சூதாட்டத்தின் தீமையை எடுத்து உணர்த்துவதற்காக. புகழேந்தி எளிய பாடல்களால் இந்நீதியைப் புகட்டுகிறார்:

**காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்**
**ஈதல் மறுத்தல் இவைகண்டாய், – போதில்**
**சினையாமை வைகுந் திருநாடா, செம்மை**
**நினையாமை பூண்டார் நெறி..**

**அறத்தைவேர் கல்லும், அருநரகிற் சேர்க்கும்,**
**திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும், – மறத்தையே**
**பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்**
**தீண்டுவரோ என்றார் தெரிந்து.**

தமயந்தி வேடனை விழித்துப் பார்த்த மாத்திரத்தே அவன் வெந்து நீறானான் என்று கூறும் நிகழ்ச்சியினால் கற்பின் திண்மையைச் சிறப்பித்துக் காட்டுகிறார். கற்பின் இலக்கணத்தை இவர் சுட்டிச் சொல்கின்ற பாடல் அனைவரும் நன்கறிந்தது:

**நாற்குணமும் நாற்படையா, ஐம்புலனும், நல்லமைச்சா,**
**ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா, – வேற்படையும்**
**வாளுமே கண்ணா, வதன மதிக்குடைக்கீழ்**
**ஆளுமே பெண்மை அரசு.**

மக்கட் பேற்றின் சிறப்பைக் கூறும் பாடல்கள் மிகச் சிறந்த பாடல்கள்.

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும்மற்று
என்னுடைய ரேனும்உடையரோ – இன்னடிசிற்
புக்களையுந் தாமரைக்கைப் பூ நாறும் செய்யவாய்
மக்களையிங் கில்லாத வர்.

சொன்ன கலையின் துறையனைத்தும் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம், இன்முகத்து – முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்கால் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி.

வருணனை என்று வரும்போது, சூரியோதயம் அஸ்தமனம் முதலியன கூறும் பாடல்கள் சிறந்த சொல்லோவியங்கள். வாய்மையின் சிறப்பு, தூதர் இலக்கணம், ஊழ்வினையின் வலிமை போன்ற பல பொருள்களை ஆசிரியர் ஆங்காங்கு உணர்த்திச் செல்கிறார். இவ்விதமாக, பொருட் சிறப்பினாலும், அழகான சொற்றொடர் அமைப்பினாலும், சொற்களைச் சிதைக்காத தொடையினாலும், எளிய மொழிகளாலும், புகட்டும் நிலைத்த நீதிகளாலும், இச்சிறு காப்பியம் என்றும் தமிழ் மக்கள் உள் ளத்தில் மாறாத இடம் பெற்றிருக்கும். இவ்வளவு சிறு நூலில் அதிகமான அளவுக்கு அமைந்துள்ள நயமான சொல்லோவி யங்கள் பிற பெருநூல்களிலும் காண்பது அரிது. அறங்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும் - மறங்கிடந்த திண்தோள் வலியும்; செம்மனத்தான் தண்அளியான் செங்கோலான் மங்கையர்கள் - தம் மனத்தை வாங்கும் தடந்தோளான்; அழகு சுமந்து இளைத்த ஆகத்தாள்; இசை முகந்த வாயும் இயல் தெரிந்த நாவும்; பண்டை வினைப்பயனைப் பாரிடத்தில் ஆர்கடப்பார்; நினைப்பென்னும் காற்றசைப்ப நெஞ்சிடையே மூளும் - அனற் புகைய வேகின்றான் - என்பன காண்க.

இவர் பாடல் கற்போருக்கு உவப்பளிப்பதாய் உள்ளது; பின்வரும் பிரசித்தமான பாடல் இத்தன்மையைச் சுட்டி எழுந்தது:

காசுக்குக் கம்பன், கருணைக்கு அருணகிரி
ஆசுக்குக் காளமுகில் ஆவனே, – தேசுபெறும்
ஊழுக்குக் கூத்தன், உவக்கப் புகழேந்தி,
கூழுக்கிங்கு அவ்வையெனக் கூறு.

**காலம்**

இவர் பற்றி வழங்கும் கதைகளை ஒதுக்கிவிட்டு, இவருடைய காலத்தை அறிய முற்பட்டால், நூலகத்தில் சில குறிப்புக்களைக் காண்கிறோம். தம்மை ஆதரித்த மள்ளுவ நாட்டு முரணை நகர்த் தலைவன் சந்திரன்சுவர்க்கியை ஐந்து பாடல்களில் குறிப்பிடு கிறார்.

மாமனுநூல் வாழ வருசந் திரன் சுவர்க்கி
தாமரையாள் வைகுந் தடந்தோளான் – காமருபூந்
தாரான் முரணைநகர் தானென்று சாற்றலாம்:
பாராளும் வேந்தன் பதி. (1:17)

மாமுத்த வெண்குடையான் மால்களிற்றன் வண்டிரைக்கும்
தாமத் தருச்சந் திரன்சுவர்க்கி – நாமத்தால்
பாவேய்ந்த செந்தமிழாம் என்னப் பரந்ததே
கோவேந்தர் செல்வக் குழாம். (1:57)

தாருவெனப் பார்மேல் தருசந் திரன் சுவர்க்கி
மேருவரைத் தோளான் விரவார்போல் – கூரிருளில்
செங்கா னகஞ்சிதையத் தேவியைவிட் டேகினான்
வெங்கா னகந்தனிலே வேந்து. (2:109)

சங்க நிதிபோல் தருசந் திரன் சுவர்க்கி
வெங்கலிவாய் நின்றுலகம் மீட்டாற்போல் – மங்கையைவெம்
பாம்பின்வாய் நின்று பறித்தான் பகைகடிந்த
காம்பின் வாய் வில் வேடன் கண்டு. (2:128)

வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்தார் புனைசந் திரன் சுவர்க்கி – கொண்டாடும்
பாவலன் பால் நின்ற பசிபோல நீங்கிற்றே,
காவலன்பால் நின்ற கலி. (3:48)

இதுவரை வெளியாகியுள்ள கல்வெட்டுக்கள் ஆராய்ந்தோர் இந்த மள்ளுவநாடு எது; முரணை நகர் எது என்று குறிப்பிட்ட முடியவில்லை. பிற்காலத்திலும் இந்நூலுக்கு முந்திய சங்க காலம் முதலான காலங்களிலும் எழுந்த நூல்களில் குறிப்பிட்ட இடம் பெயர் போன்றன பல திட்டமாக இன்னவைதான் என்று வரையறை செய்ய முடிந்திருந்தும், மிகவும் பிற்காலப் பெயர் களான இம் மள்ளுவ நாடு முரணை நகர் சந்திரன் சுவர்க்கி என்ற பெயர்கள் வரையறை செய்யமுடியாதிருப்பது பெரு

வியப்பே. சுயம்வர மண்டபத்தில் வந்திருந்த மன்னர்களைக் கூறும்போது, முதலில் இவர் சோழ மன்னனைக் கூறுகிறார். ஆதலால் இவர் சோழநாட்டில் சிறப்புப் பெற்றிருந்தார் எனக் கருதுதல் பிழையாகாது. தனிப்பாடல் திரட்டு முதலியவைகளில் காணும் கதைகள் இவர் பாண்டி நாட்டினர் எனக் குறிப்பிடு கின்றன. இவர் பாண்டிநாட்டு மன்னன் மகளோடு கூட அந் நாட்டிலிருந்து அவள் மணந்த சோழ மன்னன்பால் அனுப்பப் பட்டார் என்பது உண்மையானால், இவர் பாண்டி நாட்டை முதற்கண் கூறுவது இயல்பு; அங்ஙனம் கூறாமையால் இவர் பாண்டி நாட்டினர் அல்லர் என்பது தெளிவு.

திருச்சிராப்பள்ளி ஜில்லா முசிறித் தாலுக்காவில் வள்ளுவப்பாடி நாடு கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், வள்ளுவப்பாடி நாடு வள்ளுவ நாடாகக் குறுகி மள்ளுவ நாடாக மருவியிருக்கலாம் என்றும், இதுவே சந்திரன் சுவர்க்கி யின் நாடு என்றும் சதாசிவ பண்டாரத்தார் எழுதுகிறார்.

புகழேந்தி ஈழநாடு சென்று அந்நாட்டு அரசன் ஆரிய சேகரனைப் பாடிப் பரிசில் பெற்றார் என்ற செய்தி தமிழ் நாவலர் சரிதை கூறும். இவன் கி.பி. 1268-1311இல் பாண்டிய சக் கரவர்த்தியாய் இருந்த முதல் மாறவர்மன் குலசேகரனுடைய படைத் தலைவர்களுள் ஒருவன். இவன் பிறந்தது பாண்டி நாட்டில் செவ்விருக்கை என்ற பகுதியிலுள்ள சக்கரவர்த்தி நல்லூர். மதிதுங்கன் என்பது இவன் இயற்பெயர். போர்த்திறம் காரணமாக, தனி நின்று வென்ற பெருமாள் என்று இவன் பாண்டியனிடம் பட்டம் பெற்றவன். இவனது போர், இலங்கை வரலாறு கூறுகிற மகாவம்சத்தில் சொல்லப்பட்டுள்ளது. இவன் சிங்களவனைப் போர் வென்று (1288இல்) அங்கிருந்த அவகிரிக் கோட்டையைக் கைப்பற்றினான் என்று அந்நூல் கூறுகிறது. இவனையே புகழேந்தி பாடிப் பரிசில் பெற்றார்.

எனவே, இவரது காலம் குலசேகர பாண்டியன் காலமாகிய 13ஆம் நூற்றாண்டின் இறுதி என்று நாம் கொள்ளலாம். கதை கள் இவரைக் குலோத்துங்க சோழனோடு சம்பந்தப் படுத்திக் கூறுகின்றன; ஆனால் இவர் தம் சிறந்த நூலில், சந்திரன் சுவர்க்கியைக் கூறுகின்றாரேயொழிய, எந்தச் சோழனையும் குறிப்பிடவில்லை என்பது இங்கு கருதத்தக்கது. இவர் ஒட்டக் கூத்தருக்குச் சமகாலத்தவர் என்பது வெறும் கட்டுக்கதை.

**பிற நூல்கள்**

செஞ்சிக் கலம்பகம்: புகழேந்தி செய்ததாகத் தெரிவனவும் வழங்குவனவும் பின்வருவன: செஞ்சிக் கலம்பகம், அல்லியரசாணி மாலை முதலிய பல அம்மானைப் பாட்டுக்கள், இரத்தினச் சுருக்கம்.

தொண்டை மண்டல சதகம் 63ஆம் பாடல் இவர் தொண்டை நாட்டுச் செஞ்சி என்ற ஊரிலிருந்த கொற்றன் என்பவனுடைய தந்தை மீது ஒரு கலம்பகம் பாடினார் என்று கூறுகிறது; கலம்பகம் இப்போது இல்லை.

> காரார் களந்தைப் புகழேந்தி சொன்ன கலம்பகத்தின்
> நேரான 'நையும்படி' யென்ற பாடலின் நேரியர்கோன்
> சீராகச் செப்பிய நற்பாடல் கொண்டவன் செஞ்சியர்கோன்
> மாராபிராமநங் கொற்றந்தை யூர் தொண்டைமண்டலமே.

இதில் குறிப்பிட்ட 'நையும்படி' என்ற பாடல், இச்சதகப் பாடல் உரையினுள் மேற்கோளாகக் காட்டப்பட்டிருப்பதைக் காணலாம். அப்பாடலில் 'வையம் பெறினும் பொய்யுரைக்க மாட்டார்' என்றிருப்பது சிறப்பு. இக்கருத்து, பழையனூர் நீலிக்காகக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் பொருட்டு வேளாளர் எழுபது பேர் உயிர் துறந்த வரலாற்றைக் குறிப்பிடும் போலும்.

> நையும்படியென் நாம் கொற்றனங்கோன் செஞ்சிவரைமீதே
> ஐயம்பெறுநுண் ணிடைமடவாய் அகிலின் தூப முகிலன்று
> செய்யுந் துளியோ மழையன்று பிரசத்துளியே பிழையாது
> வையம் பெறினும் பொய்யுரைக்க மாட்டார் தொண்டை நாட்டாரே.

இச்சதகம் பாடிய பிற்காலப் புலவரான படிக்காசுப் புலவர்,

> பூட்டார் நிலைமன்னன் வையம்பெறினும் பொய்தானுரைக்க
> மாட்டார் எனச்சொன்ன நாட்டார் திகழ் தொண்டை மண்டலமே. (17)

என்று இவரைப் பாராட்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. கொற்றன் தந்தை பெயர் தெரியவில்லை.

அல்லி அரசாணிமாலை போன்ற சில நூல்களைக் குறித்து முன்னமே குறிப்பிட்டோம். புகழேந்தி ஒட்டக்கூத்தரால் சிறைப் படுத்தப்பட்டபோது, சிறையிலிருந்த இப்புலவர் வெளியே நீர் சுமந்து சென்ற பெண்களுக்கு இவ்வம்மானைப் பாடல்களைப்

பாடிக் கொடுத்து உணவு முதலியன பெற்றார் என்ற கதை வழங்குகிறது. ஒட்டக்கூத்தர் புகழேந்தி கதையே உண்மையல்ல என்று கூறிய நாம் இப்பாடல்களைப் பற்றிப் பேசவேண்டிய தில்லை; முழுமையும் புனைந்துரை. இவை புகழேந்தி பாடியன அல்ல. சைன சமயத்தில் கந்தியார் எனப்படுவோர் போலவும், பிற்கால வேதாந்த மார்க்கத்தில் கைம்மைக் கோலம் பூண்டு பல வேதாந்த சாத்திரங்கள் பாடிய பெண்கள் போலவும், அக்காலத் திலோ சற்றுப் பின்னோ, பெண்டிர் சிலர் இருந்து இவ்வகை எளிய கதைப்பாட்டுக்கள் பாடினார்கள் என்று நாம் கருதலாம். இவற்றுக்கும் புகழேந்திக்கும் சம்பந்தம் இல்லை.

இரத்தினச் சுருக்கம் என்ற ஒரு சிறுநூல் புகழேந்தி செய்ததாய் நெடுங்காலமாக அச்சிட்டு வழங்குகிறது. இது உவமான சங்கிரகம் போன்றதொரு நூல்; வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம் என்பன உள்ளன; அந்தாதித் தொடை. பெண்களின் உறுப்புக்களுக்கு உவமை கூறுவதோடுகூட, இந் நூலின் ஆசிரியர், தம் காலத்தில் அதிகமாய்ப் பாடப்பெற்று வந்த உலா தூது முதலான பிரபந்தங்களைப் பாடும் புலவருக்குப் பயன்படும் பல செய்திகளையும் இச்சிறு நூலுள் தொகுத்துக் கூறுகிறார். சில தொகைவிரிகள், சில தெய்வப் பெருமைகள் போன்ற சிறப்பான பகுதிகளும் இறுதியில் உள்ளன. இந்நூல் 17ஆம் நூற்றாண்டுக்குரியது. நாம் கருதும் புகழேந்தி செய்ததன்று.

**குறிப்பு 1.**

தமிழ் நாவலர் சரிதையானது ஒட்டக்கூத்தர், புகழேந்தி கதையைச் சொல்லுகிறது. புகழேந்தி, சோழன் அவைக்களம் சென்றபோது ஒட்டக்கூத்தர் அவனைப் பித்தன் என்றார் போலும். அது கேட்டுப் புகழேந்தி சினந்து பின்வரும் பாடலைப் பாடினாராம்:

> சத்தம் பயிலும் புலவோர் கதலித் தண் தோட்டம் புக்க
> பித்த னிவனென்ப தென்னைக் கண்டாய் பிழைத்துக் கணத்தே
> தத்தம் முதுகிட்ட தெவ்வேந்தர் தங்கள் தடமகுட
> சத்தம் அவசத்த மாகுங்கொல் யானைச் சயதுங்கனே.

இனி அபயன் துலாபுருடதானம் பண்ணியபோது புகழேந்தி பாடியது:

பொருந்த வொருதட்டு மேருப் புகினும்
இருந்த வொருதட் டெழாதால் – திருந்து
மறைபுக்க சொல்லபயா வன்புறவுக் காக
நிறைபுக்க தெவ்வாறு நீ.

சூதில் தேவியை உயர்த்தி இவர் பாடியது:

பழியும் புகழு மெவர்க்குமுண் டாம் இந்தப் பாரிலுனக்
கழியுஞ் சிலையுங் கயலுமன் றோஅகளங்க துங்க
மொழியும் பொழுதெங்கள் பெண் சக்ரவர்த்தி முகத்திரண்டு
விழியும் புருவமு மாகியிப் போதுன்னை வெல்கின்றவே.

இவை தமிழ் நாவலர் சரிதை கூறும் பாடல்கள். அகளங்கன் - விக்கிரமன்; இதனால் இப்பாடல் புகழேந்தி பாடியதன்று.

முன் குறிப்பிட்டதுபோல, புகழேந்தி கூத்தருக்கு நெடுங் காலம் பிற்பட்டவர். ஆதலால், இவையாவும் செவிவழிச் செய் திகளேயன்றி, வரலாற்றுக்கு ஆதாரமாய்க் கொள்ளத்தக்க செய்திகள் ஆகா.

## குறிப்பு 2.

தமிழ் நாவலர் சரிதை, சாருவபௌமன் புகழேந்தி என்ற ஒரு புலவனைக் குறிப்பிடுகிறது. இவன் கி.பி. 1422-62இல் ஆண்ட தென்காசி பராக்கிரம பாண்டியனைப் பாடியவன்; ஆகவே காலம் தெளிவு. ஒருகால் இப்புலவன், நளவெண்பா பாடிய புகழேந்தி மரபில் வந்து அதே பெயரைத் தரித்தவனாகலாம். (எமது 15ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு, அத்தி யாயம் 13 பார்க்க).

## குறிப்பு 3.

சம்பிரதாயமாக அச்சிட்டு வழங்கும் நளவெண்பாவில் 424 பாடல்கள் உள்ளன. நூல் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்து, அவையடக்கம், சிறப்புப் பாயிரம் என 6 பாடல்களும், கதையின் தோற்றுவாயாக வியாசமுனிவர் தருமபுத்திரனுக்குச் சொன்னார் என்று 11 பாடல்களும், பிந்திய இரு காண்டங்களிலும் கடவுள் வாழ்த்தாக இவ்விரண்டு பாடல்களும் உள்ளன. இவையாவும் மர்ரே கம்பெனியார் பதிப்பில் நீக்கப்பெற்றுள்ளன. நூலகத்துப் பல பாடல்களை நீக்கி மொத்தம்; 378 பாடல்களில் நூல் அவர்களால் அச்சிடப் பெற்றுள்ளது. விளக்கம் கீழே காண்க:

| பகுதி | பழைய பதிப்புக்கள் | மர்ரே |
|---|---|---|
| பாயிரம் | 6 | - |
| நூல் வரலாற்றுப் பகுதி | 11 | - |
| சுயம்வர காண்டம் | 160 | 151 |
| கலிதொடர் காண்டம் | 155 | 141 |
| கலிநீங்கு காண்டம் | 92 | 86 |
| | 424 | 378 |

கம்பெனியார் தங்கள் பதிப்பு முன்னுரையில் சில செய்திகள் குறிப்பிட்டிருக்கிறார்கள். கடவுள் வாழ்த்து முதலான பாடல்கள் ஓர் ஏட்டில் உள்ளது போல் மற்றொன்றில் இல்லை; சுருக்கமாக 169 பாடல்களிலேயே கதையை முடிக்கும் ஏடுகளும் உள்ளன; பழைய உரையும் உண்டு; மொத்தம் 228 மிகைப் பாடல்கள் காணப்படுகின்றன - என்றெல்லாம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். எப்படியும் ஒரு திருத்தமான பாடமுடைய பதிப்பு அச்சிட்டுத் தந்த அவர்களுக்கு நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருந்த போதிலும், சில செய்திகளைக் குறிப்பிட்டே யாக வேண்டும். கடவுள் வாழ்த்து, அவையடக்கம், சிறப்புப் பாயிரம் என்ற அங்கங்கள் அக்கால நூல்களுள் இருத்தல் இயல்பு; இராமாயணம், பாரதம் பார்க்க. ஏடுகளில் வேறுபாடு காணப்படுகிறது என்பதற்காக இப்பகுதியே வேண்டாம் என்று ஒதுக்குவது பொருத்தமன்று. அப்படியே, காண்டந்தோறும் கடவுள் வணக்கம் கூறுவது அக்கால நூல் மரபு. இராமாயணம், பெரியபுராணம், பின்வந்த வில்லிபாரதம் என்பவற்றுள் இதைக் காணலாம். நளவெண்பாவில் மட்டும் இப்பகுதி மிகை என்று ஒதுக்குவதும் பொருத்தமன்று. இவைபோலவே, கிளைக் கதையை அறிமுகப்படுத்தும் முறையாக வியாச முனிவன் தரும புத்திரனுக்குக் கூறும் கூற்று அமைந்துள்ளது. (உபமன்னியு முனிவர் திருத்தொண்டர் வரலாற்றை முனிவர்களுக்குக் கூறியதாகப் பெரியபுராணத்தில் சேக்கிழார் திருமலைச் சிறப்பு என்ற 40 பாடல் கொண்ட ஒரு தனிப்பகுதியே அமைத்திருப்பதும் நோக்கத்தக்கது.) இதைப் புகழேந்தி பாடவில்லை என்று முடிவு செய்வதும் பொருத்தமன்று. இவற்றையெல்லாம் விலக்கிய பதிப்பு நளவெண்பாச் சுருக்கமேயன்றி, முழு நூற்பதிப்பு ஆகாது. பாரத வெண்பாவிலிருந்து வந்துள்ள பாடல்கள், சோழ மன்னனை அறிமுகப்படுத்துமிடத்துள்ள இரண்டாவது பாடல் போன்றன நீக்கியது பொருத்தமே.

○○○

## அத்தியாயம் 2

# இலக்கிய உரையாசிரியர் – 1

### முன்னுரை

தமிழ் இலக்கியப் பரப்பில், 10ஆம் நூற்றாண்டு தொடங்கியே இலக்கியங்களுக்கும் இலக்கணங்களுக்கும் விரிவுரைகள் எழுந்திருந்தன. மூல நூல்களுக்குள்ள சிறப்பு உரைகளுக்கும் உரியது. பல பேராசிரியர்கள் தாங்கள் எழுதிய உரை காரணமாகவே இலக்கிய வரலாற்றில் நிரந்தரமான சிறப்பிடம் பெற்றிருக்கிறார்கள். உரைகாரர்களாலேயே மூல நூல்கள் விளக்கம் பெறுகின்றன. அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் செய்த உரையும் இலவானால், சிலப்பதிகாரத்தின் முத்தமிழ்ப் பெருமை எவ்வாறு முழுவிளக்கம் பெறும்? தொல்காப்பிய உரைகள் இல்லையென்றால், தொல்காப்பியத்தின் பொருளாழத்தையும் விரிவையும் மொழிவளர்ச்சியையும், மக்கட் பண்பாட்டையும், அன்றைய இலக்கிய மரபையும் நாம் எவ்வாறு உணர்தல் கூடும்? நச்சினார்க்கினியர் உரையினாலேயே சிந்தாமணி ஒழுங்கும் விளக்கமும் பெறுகிறது என்பதை நுணுகி ஆராய்பவர் நன்கு உணர்வர். உரையாசிரியர் அனைவரும் பெரும்புலவர்கள். நூல் செய்திருந்தால் அவர்கள் எத்துணையோ சிறப்பும் விரிவும் கொண்ட பெருநூல்கள் செய்திருக்க முடியும். ஆனால், மூல நூலொன்றைத் தேர்ந்து கொண்டு அதற்குரை செய்ய அவர்கள் முற்பட்டது, அவர்களுக்குத் தமிழினிடத்தும் நூலினிடத்தும் உள்ள ஈடுபாட்டைப் புலப்படுத்தி, அம்மூல நூலுக்கு ஏற்றம் தருவதோடு, உரையாசிரியர்களுடைய பக்குவத்தையும் பண்பாட்டையும் காட்டுகிறது.

பல உரையாசிரியர்கள் தருக்க ரீதியாகப் பொருளை விளக்குவதோடு, நூலாசிரியரின் இதயத்தைத் திறந்து காட்டுவது

போலப் பொருளைக் காட்டுகிறார்கள். தக்கயாகப் பரணி யுரையாசிரியர் (15 ஆம் நூற்றாண்டு) போன்றோர் உரை கூறும் போது, உரைகாரர் நம் கண்முன்னே நின்று பேசுவது போன்ற உணர்வை நாம் பெறுகிறோம். அவருடைய தனித்த குணாதிசயங் களைக் கூட நேர்முகமாய்க் கண்டறிவது போன்ற உணர்வை நாம் அடைகிறோம்.

இவ்வுரைகாரர்களே தமிழ் மரபை அழியாமல் தொடர்பு அறாமல், காத்தவர்கள். இவர்கள் யாருமே மனம் போனபடி அந்நேரத்திற்கு ஏற்ற ஒரு பொருள் கூறுபவர்கள் அல்லர். தமிழுக்கும் நூலுக்கும் கருத்துக்கும் ஏற்றம் கற்பித்தே இவர்கள் கூறுவது, படித்துச் சிந்திக்கச் சிந்திக்க மிக்க வியப்பும் இன்பமும் விளைப்பதாயுளது; நூலாசிரியருக்குக் குறைவுதரும் பொருள் எதையும் இவர்கள் சொல்லமாட்டார்கள்.

உரையாசிரியர் செய்த மற்றொரு முக்கியமான சேவை, பல பண்டைய நூல்களை உதாரணமாக எடுத்துக்காட்டி நினைவூட்டுவது. இவ்வாறு இவர்கள் காட்டுவதால், இறந்து போன நூல்கள் எத்தனையோ, பெயரளவிலேனும் நாம் அறிகிறோம்; அவற்றின் பாடல்களையும் பொருட்போக்கையும் ஓரளவு அறிகிறோம். உரையாசிரியர்கள் குறிப்பிடாவிட்டால், எத்துணை விரிவான இலக்கியச் செல்வம் இருந்தது. எவ்வளவு பெரும்பகுதியை நாம் இழந்து விட்டோம் என்று அறியவே இயன்றிருக்காது; முத்தமிழின் பெரும் பிரிவுகளான இசைத் தமிழ் நாடகத்தமிழ் என்ற இரண்டும், எத்துணை விரிவாக வளர்ந்து காலகதியில் இறந்து போயின என்பதை நாம் அறிந் திருக்கவே முடியாது; பாட்டியல் மரபில் எத்துணைப் பிரிவுகள் இருந்தன என்பதையும் அறிந்திருக்க முடியாது.

உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டும் தனிப்பாடல்களை அடுத்துக் குறிப்பிடலாம். உரையாசிரியர்கள் பெரும்பான்மை யும் சிறந்த ரசிகர்கள். ஆதலால் நூல்களைப் பயின்றிருப்பதோடு கூட, சுவைமிக்க நல்ல தனிப்பாடல்களையும் இவர்கள் நினை வில் வைத்திருந்து, சந்தர்ப்பம் வரும்போது எடுத்துக்காட்டு கிறார்கள். இதனால், இவர்களுக்கு முற்பட்ட காலத்திலிருந்த சமய நிலை, வாழ்க்கை ஒழுகலாறு, சரித வரலாறு முதலாயின நமக்கு நன்கு தெரியவருகின்றன. யாப்பருங்கல விருத்தியுரைகாரர் (11 நூ.) இத்துறையில் சிறப்பாய்க் குறிப்பிடத்தக்கவர். விடுகதைகள்

முதலியவற்றை எடுத்துக் காட்டுகின்ற நச்சினார்க்கினியரும் (14 நூ.) குறிப்பிடத்தக்கவர். சில சமயம் இவர்களே செய்யும் உரைச் செய்யுள்களும் குறிப்பிடத்தக்கவை.

சங்க இலக்கியங்கள் போன்றவற்றை ஏடு வைத்துப் பரிசோதனை செய்தவர்கள், ஏடுகளின் குறைபாட்டால் மூல பாடம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியாதபோது உரைகள் மூலத்தை நன்கு தெளிவுபடுத்திக் காட்டியிருப்பதை நன்குணர் வார்கள். ஐயரவர்கள் இதைப் பல இடங்களில் குறிப்பிட்டிருக் கிறார்கள். யாமும், வையாபுரிப் பிள்ளையவர்களோடு புறத் திரட்டு, சங்க நூல்கள், சிந்தாமணி, பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் சில போன்றவற்றை உரையோடு வைத்து ஆராய்ந்த காலத்தில், இவ்வியல்பை நன்கு கண்டிருக்கிறோம்.

நூற் புலமை காலந்தோறும் குறைந்து கொண்டே வருவது நம் துர்ப்பாக்கியம். கற்றலிற் கேட்டலே நன்று என்று நூல்கள் கூறும். ஆகவே நாம் ஒரு நூலின் மூலத்தை எடுத்துக் கற்க முயல்வதை விட, பண்டைப் பேராசிரியரொருவர் எழுதி வைத் துள்ள உரையைப் பயிலும்போது, அவ்வாசிரியர் சொல்லி நாம் கேட்பது போன்ற அல்லது அவர் நமக்குப் பாடம் போதிப்பது போன்ற நிலைமை ஏற்படுகிறது. ஆதலால் உரையாசிரியர்கள், நாம் கற்று அறியக் கூடியதைவிட, ஒரு பெருங்கல்வியாளரிடம் பாடம் பயின்ற அனுபவத்தை நமக்கு ஊட்டுகிறார்கள்.

உரைகள் உரைநடையில் எழுதப்பட்டுள்ளமையால் உரைநடை பற்றிய வரலாற்றறிவையும் நாம் பெறுகிறோம். பதினெட்டாம் நூற்றாண்டின் பின்தான் தமிழ் உரைநடை இலக்கியத்தில் தனியான இடம்பெற்று வளர்ந்தது. ஆனால், மனிதன் பேச ஆரம்பித்த அன்றே பேச்சுநடை தொடங்கிற்று. எனினும், வரலாறாக எடுத்து ஆய்வதற்குத் தனி உரைநடை நூல்கள் இல்லை. பண்டையுரையாசிரியர்களே இக்குறையை நிரப்பி, தாங்கள் எழுதியுள்ள உரைகளின் நடையினால், பண்டை உரைநடை எப்படியிருந்தது என்று நமக்கு உணர்த்துகிறார்கள்.

இவ்வளவு சிறப்புடைய உரையாசிரியர்கள் பரம்பரை யில், 13ஆம் நூற்றாண்டின் எல்லைக்குள் அமைவது சிறப்பான இருவர் வரலாறே. இவர்கள் காலிங்கர், பரிமேலழகர் என்போர். இருவரும் திருக்குறள் உரை செய்தவர்கள். குறள் உரைகள் பத்து என வழங்கினும், ஓரளவேனும் முழு வடிவில் இன்று

கிடைப்பவை ஐவர் உரைகள். இவர்களுள் இருவர் உரைகள் காலத்தால் இந்நூற்றாண்டுக்கு முற்பட்டன: மணக்குடவர், பரிப்பெருமாள், ஒன்று பிற்பட்டது: பரிதியார். இவ்வத்தியாயத்துள் காலிங்கர், பரிமேலழகர் என்ற இவ்விருவர் வரலாற்றை மட்டும் ஆராய்வோம்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம்பெற்ற பேராசிரியர்கள் என்ற பெயருடையார் பலர். அவர்களுள் இருவர் இந்த நூற்றாண்டுக்கு உரியோர் என்று அறிகிறோம். ஒருவர் திருக்கோவையாருக்கு உரை செய்தவர். இவர் வரலாற்றை இப்பகுதியில் பார்ப்போம். மற்றவர் தொல்காப்பிய உரை செய்தவர். அவர் வரலாற்றை இலக்கண உரையாசிரியர் என்ற பகுதியில் ஆராய்வோம்.

எட்டுத்தொகையிலும் பதினெண் கீழ்க் கணக்கிலும் உரை செய்த ஆசிரியர் சிலர் இந்நூற்றாண்டில் வாழ்ந்திருக்கக்கூடும் என்று கருதுகிறோம். இவர்கள் வரலாற்றையும், பின்னும் சில உரையாசிரியர் வரலாற்றையும், அடுத்த அத்தியாயத்தில் தனியே ஆராய்வோம்.

## காலிங்கர்

### முன்னுரை

திருக்குறளுக்கு உரைசெய்த ஆசிரியர் பதின்மர் என்று பழம் பாடலொன்று கூறும்.

> **தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்**
> **பரிதி பரிமே லழகர் – திருமலையர்**
> **மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர்நூற்கு**
> **எல்லையுரை செய்தார் இவர்.**

இப்பதின்மருள், பரிமேலழகர் செய்தவுரை மிகவும் சிறப்புடையது; மணக்குடவர் உரையும் நெடுங்காலமாக அச்சிடப் பெற்று வழங்குவது. ஏனைய உரைகளுள், பரிதியார், பரிப்பெருமாள் (கவிப்பெருமாள் என்றும் பெயர்), காலிங்கர்* என்ற மூவர்

---

* பெயர் காளிங்கர் என்றும் வழங்குவதுண்டு. எனினும் காலிங்கர் என்பதே திருத்தமான வடிவம். கலிங்கநாட்டை வெற்றி கொண்ட காலம் முதல், காலிங்கன் காலிங்கராயன் என்ற பெயர்கள் தமிழில் வழக்கத்துக்கு வந்தன. (கலிங்கம் - துணி.) காளிங்கன் என்பது, கண்ணன் ஏறி அடக்கி, நர்த்தனம் செய்த பாம்பு என்று கருதலாமாயினும், அத்துணைப் பொருத்தம் அன்று.

உரைகளும் சமீபகாலத்தில் வெளிவந்துள்ளன. திருப்பனந்தாள் காசிமடத்துப் பதிப்பாகிய உரைக்கொத்து என்ற தொகுப்பில் இவ்வைந்தும் கிடைத்தவரை திருத்தமாக அச்சிடப் பெற்றுள் ளன. தாமத்தர் நச்சர் தருமர் என்ற பெயரில், கடவுள் வாழ்த்தின் சில பாடல்களுக்கு மட்டும் உரைகள் சேர்த்து அச்சிடப் பெற் றுள்ளன. இவை உண்மையில் மற்ற உரைகளே என்று தெரிய வருகின்றன. ஐவர் அன்றிப் பிறர் உரைகள் கிடைப்பனவாகத் தெரியவில்லை.

காலிங்கர் உரை, ஓரளவு நூல் முழுமைக்கும் கிடைத் துள்ளது; இடையிடையே இரண்டொரு பாடல்களுக்குக் கிடைக்கவில்லை போலும்; அவ்விடத்தில், அச்சிட்டோர் பரிதி யார் உரையையே தந்திருக்கின்றனர். இவரைக் குறித்த சிறப்புப் பாயிரமோ வேறுவகையான பாடலோ எதுவும் இல்லை. எனவே, இவரைக் குறித்த செய்திகள் எவையும் வேறு வழியில் புலப்பட வழியில்லை, எனினும் சில செய்திகள் கூறமுடியும்.

**காலிங்கர் வரலாறு**

காலிங்கர் என்ற பெயருடையோர் (அல்லது பட்டப் பெயருடையோர்) பலர் சோழ அரசில் பெரும்பதவியில் இருந் திருக்கிறார்கள். அவர்களனைவரும் வேளாளகுலத்தினராயும் படைத்தலைவர்களுமா யிருந்தார்களென்று அறிகிறோம். இவரும் அந்தப் பரம்பரையில் வந்தாரென்று நாம் கருத வேண்டும். இன்றுங்கூட வேளாளரிடையே ‘காலிங்கராய’ என்ற கோத்திரப் பெயருடைய பல குடும்பங்கள் இருக்கின்றன. (பிற் காலத்தில் சிறந்த சைவப் புலவராயிருந்த எல்லப்ப நாவலரும் ஒரு காலிங்கராயர் ஆவார்.) அங்ஙனம் இவரே சிறந்த போர் வீரரும் உழவருமாவார் என்பதற்குச் சான்றுகள் பல நூலகத்துக் காணப்படுகின்றன. போர்த்தொழில் பற்றிய செய்திகளை இவர் கூறுவதற்கு உதாரணமாக, அரண் என்ற 75ஆம் அதிகாரம் முழுமையுமே குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாக ஒரு பாடல் உரை மட்டும் இங்கு முழுமையும் கூறுவோம்.

> முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
> வீறெய்தி மாண்டது அரண்.

என்பது குறள் 749. உரை வருமாறு:

“புறத்து அரசன் கடைப்புறத்துப் போர் தொடங்கிய அள விலே தலைசாய்ந்து ஓடுமாறு அகத்தோர் இயந்திரம் முதலிய,

கல்பொறியும் பாம்பும் கனலும் கடிகுரங்கும்
வில்பொறியும் வேலும் வெந்தீ வட்டும்
காய்ச்சிய மணலும் கவவு இருப்பு உலக்கையும்
வீச்சுறு தூண்டிலும் விசைத்தெறி கவணும்.

(புறப்பொருள் வெண்பாமாலை 112)

ஆகிய வினைத்தொழிலை உடைய மாட்சிமைப் பட்டது யாது, மற்று, அதுவே அரணாவது என்றவாறு. முனைமுகத்து என்பது கடைமுகத்து வந்து போர் தொடங்கிய என்றது. வினைமுகத்து என்பது போர்த் தொழிலிடத்து என்றது. வீறு எய்தி என்பது விருப்பம் உற்று என்றது." படைபற்றி வரும் அதிகாரங்களில் பாடல்தோறும் இவர் எழுதும் உரை, இவர் ஒரு போர் வீர ராயிருந்திருப்பார் என்று நமக்கு உணர்த்தும்; 774, 861 முதலி யன பார்க்க.

இங்ஙனமே, உழவு என்ற அதிகாரத்தில் இவர் கூறும் உரை, இவர் சிறந்த உழவர் மரபினர் என்பதைத் திண்ணமாய்க் காட் டும். 1031, 1034, 1037, 1038 முதலியன உரை காண்க. முதற்பாட்டின் உரை: கடலோடியும் மலை ஏறியும் காடுமண்டியும் நாடு பரந்தும் ஓடித்திரிதலே அன்றியும் உண்பான் பொருட்டு இதனைப் பிற பிற முயன்று அலம் வந்தும் அதனால் ஒரு பயனும் இல்லை. ஆதலால் ஏர் கொண்டு வாழ்வார் தமது வழிச் சேறலே பயனுள்ள வாழ்வாம். மற்று அது எங்ஙனம் எனில், உழுகைப் பொருட்டாக உழுகருவிக்குக் காடுபுக்கு மரம் தடிதலும், கனவிய கொழுவும் அதற்கேற்ற பல கருவியும் வன்புலம் மென்புல வடிவத்தியற்றலும், படைக்கால் அமைத்தலும் முதலிய பலவகைப் பயிர் வளம் முற்றியவை. அவை அனைத்தும் உழந்தும் உழவு இயற்றலே தலைமைப்பாடு ஆவது என்றவாறு.

இனி, மூன்றாவதாக, இவ்வாசிரியர் மருத்துவம் வல்லவர் என்றும் நாம் கருதுதல் கூடும்: "உற்றான் அளவும் பிணி அளவும் காலமும்" என்ற 949ஆம் பாடல் உரை காண்க: "நோயுற்றவனது வன்மையும் மென்மையும், அவனுக்குச் சென்ற வயது அளவு ஆம் பிறவும். அவனுற்ற நோயாவது அவன் அனுபவத்திற்கு வந்து அடிக்கொண்ட முகமோ என்றும், இடங்கொண்ட நோய் தலை சாய்ந்த முகமோ என்றும், இந்நோய் நிலை அளவறிந்தும், காலம் கார், கூதிர், முன்பனி, பின்பனி, சீரிளவேனில், வேனில் என்னும் அறுவகைப்பருவத்துள்ளும் இப்பருவத்து இந்நோய்க்கு

இம்மருந்து செய்தால் தீரும், விகற்பிக்கும் என அறிதலும் யாரோ எனில், வாகடம் முதலிய மருந்து நூல்களை மாசறக் கற்றவரே; இத்துணையும் குறிக்கொண்டு மற்று இதன் பின்னரே மருந்தினைச் செய்வானாக என்றவாறு."

இவற்றால் நாம் பெறுவது காலிங்கர், உழவர் குடியில் பிறந்தவர், மருத்துவம் வல்லவர், சிறந்த போர் வீரராயுமிருந்தார் என்பது: பண்டைய ரோம் நகரத்துப் பெரு வீரனான கொரியோ லானஸ் போல; இவற்றோடு இவர் புலவராகவுமிருந்தார்.

**சமயம்**

இவர் சமயத்தால் சைனராகலாமென்று திருப்பனந்தாள் உரைக்கொத்து ஆராய்ச்சி முன்னுரையில் கூறப்பட்டுள்ளது; அது அத்துணைச் சரியான முடிவு என்று கருதுதற்கில்லை. நாற்குணம் என்று அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி என்பவற்றை இவர் குறிப்பிடுகிறார் (635). பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் என்ற 580ஆம் பாடலுரையில், 'நாகரிகம் வேண்டுபவர்' என்ற தொடருக்கு, "பெரியோரால் விரும்பத்தக்க உம்பர் உலகினுள் சிறப்புடைய உத்தர குருவினைத் தாம் எய்தி இனிது வாழ்ந் திருக்க வேண்டுபவர்' என்று உரை எழுதியிருக்கிறார். உத்தர குரு என்பது சிறப்பாகச் சைனர் கூறும் போகபூமி வகையுள் ஒன்றாயினும், பொதுவாக அனைவருமே கருதும் போகபூமி யாகும். இதுகொண்டு இவர் சைனர் என்பது உறுதியாகாது. இனி, 'வகுத்தான் வகுத்த வகையல்லால்' என்ற 377ஆம் பாட லுரையில், "முன்னம் செய்தவர் செய்த வினை வகைகளால் துய்த்தல்" என்று வருவது, வினை காரணமாக அனுபவம் ஏற்படுகிறது என்று கொள்ளத்தக்கதே அன்றி, வினை தானே வந்து பயனை ஊட்டுகிறது என்பதாகக் கொள்ள இடமில்லை. இதுவும் சைனருக்கே உரிய கோட்பாடன்று. அன்றியும், எண் குணத்தான் என்றவிடத்து (9) இவர் 'எண்ணப்பட்ட குணங் களையுடைய இறைவன்' என்று கூறுகின்றாரே அன்றி, ஏனை யோர் போல இறைவனது எட்டுக் குணங்களைச் சைனர் மதம் பற்றிக் கூறவில்லை. ஆதலால் இவர் சைனர் என்று துணிந்து சொல்வதற்கு ஆதாரமில்லை. பின்னும் கடவுள் வாழ்த்துப் பாடல் களின் உரையில், மூலகாரணனாகிய இறைவன், எவ்வுயிர்க்கும் உயிராய் நின்ற இறைவன், இறைவனாற் பெற்ற உபதேசப் பொருள், இறைவனது உபதேச முறைமை என்ற தொடர்கள் இவர் சைன சமயத்தவர் என்ற கருத்துக்கு ஆதரவு தரவில்லை.

### காலம்

காலத்தால் இவர் பரிமேலழகருக்கு முற்பட்டவர் என்று கொள்ளுதல் பொருத்தமுடையது. மிகப் பலவான இடங்களில், பரிமேலழகர், "இவ்வாறு பாட மோதுவாருமுளர்" என்று குறிப்பிட்ட இடங்கள் காலிங்கர் கொண்ட பாடமாகவே இருக்கக் காண்கிறோம். அறம், பொருள், இன்பம், உயிரச்சம் என்ற 501ஆம் குறளுரையில், "சில வடநூற் பொருண்மையை உட்கொண்டு இவர் ஓதியது அறியாது பிறரெல்லாம் இதனை உயிரெச்சம் எனப் பாடம் திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்" என்று பரிமேலழகர் எழுதுகிறார். இவ்வாறு பாடங் கொண்டு வேறுரை எழுதுபவர் காலிங்கர்; உயிரச்சம் முத்தி என்பது இவர் கூற்று. 614, 702, 958, 1012, 1013, 1056, 1081, 1122, 1151, 1161, 1178 முதலான பாடல்களின் உரைகளை ஒப்பிடுக. இவ்வாறு காலிங்கர் கொண்ட பாடங்களைப் பரிமேலழகர் குறிப்பிடுவதால், அவர் இவருக்குக் காலத்தால் பிற்பட்டவர் என்பது தெளிவு. வேறு இவர் உரையில் காலத்தைச் சுட்டவல்ல குறிப்பு எதுவும் காணப்படவில்லை. இருவர் குறிப்புகளையும் நன்கு ஆராயும்போது, காலிங்கர் முதியவராயிருந்தபோது, பரிமேலழகர் இளைஞராயிருந்திருக்கலாம், அல்லது பரிமேலழகர், இவர் காலத்துக்கு உடன் அடுத்துப் பின்னே வாழ்ந்தவர் என்று கருதலாம். பரிமேலழகர் காலம் 13ஆம் நூற்றாண்டின் இறுதி (1272) என்று தெரிதலால், இவர் காலம் அதே நூற்றாண்டின் தொடக்கம் என்று கொள்வது பொருத்தம் (1225). உரையின் தன்மையைப் பார்க்கும்போது இவர் மணக்குடவர் பரிப் பெருமாளுக்கு முற்பட்டவராயிருத்தல் இயலாது என்பது தெளிவு.

11-14 ஆகிய நூற்றாண்டுகள் தமிழில் இலக்கண இலக்கிய உரைகள் பெரிதும் எழுதப்பெற்ற காலம். ஓராசிரியருடைய கருத்து வழங்கி வரும்போது பின்வரும் அறிஞர், தாம் அதனுள் மாறுபாடு கண்டு தம் கருத்தை எழுதிவைக்கிறார். இவ்வாறு எழுந்தனவே உரைபேதங்கள். இதனாலேயே காலிங்கரை அடுத்துப் பரிமேலழகர் தோன்றி உரை செய்தார் என்று கருதுதல் பொருந்துவதாகும்.

### குறள் உரை

காலிங்கர் செய்ததாக இத்திருக்குறளுரை ஒன்றுதான் கிடைத்துள்ளது. வேறெந்த நூலும் தெரியவில்லை. இவர் பெயரை வேறெவரும் குறிப்பிடவும் இல்லை. கிடைத்துள்ள

உரையிலும், சில பகுதிகள் காணப்படவில்லை போலும்; இரண்டொரு பாடல்களுக்கு இவருரை இல்லாது ஏடுகளிற் கண்டோர் பரிப்பெருமாள் உரையே கொண்டனர்.

காலிங்கர் திருவள்ளுவமாலை கூறும் இயல் பாகுபாட்டை ஒட்டி உரை எழுதுகிறார். இவர் உரை சிறப்பான ஓர் உரை யாகும். பல இடங்களில் இவர் உரை முழுமையும் வேறாகவே இருக்கிறது. பொழிப்புரையாகவே இவர் உரை அமைந்துள்ளது. ஆசிரியருடைய கருத்தை விளக்கமாகவே உரைக்கிறது. நல்ல தமிழ் நடையில் அமைந்துள்ளது; வட சொற்கள் சில பயில்வன ஆயினும், நல்ல தமிழ் நடையில் எழுதுகிறார். மிகவும் எளிமை யான வாக்கிய அமைப்பு. சிக்கலான வாக்கிய அமைப்போ பொருள் அமைப்போ இல்லை.

ஒவ்வொரு பாலுக்கும் அவதாரிகையும், அதிகாரத்தின் இறு திக் குறள் உரையில் அடுத்த அதிகாரத்தின் தொடர்பும் எழுது கிறார். பல இடங்களில் இவர் உரைநடையைச் செய்யுளோசைப் பட எழுதுகிறார். பின்வரும் உதாரணங்கள் காண்க: 576ஆம் பாடல், "மண்ணோடியைந்த மரத்தனையர்" என்பதன் உரை:

வண்ணம் எழுதா வகைத்து உருவாகிய
மண்மேல் எழுதிய கற்பகத்தரு முதலிய
மரத்தைப் போல்பவர்; யார் எனின்,
செய்ய வாயும் செவ்வரிக் கண்ணும்
கரிய குழலும் வெளிய நகையும்
பிறவும் ஆகிய

வகையமை உறுப்பின் வனப்பு வேற்றுமை
தகைபெற உடைய தன்மைய ரேனும்
கண்ணுறுப் புக்கு நுண்ணுறுப் பாகிய
கண்ணோட்டம் இல்லாத கடுவினை யாளர்.

என்றவாறு. 749, 1257, 1263 போன்ற பாடல் உரையிலும் காண்க; குறள் 1258 உரை: "தோழீ, நின்மாட்டு,

அன்பு பெரிதுடையேன், அருளும் நீங்கேன்
நின்னிற் பிரியேன், பிரியினும் ஆற்றேன்;
புறத்துடம் பிரண்டல்ல தகத்துயிர் ஒன்றென
வஞ்சனை பலவும் வகுத்துடன் படுத்து எம்
கவின்திறம் முழுதும் கவர்ந்த கள்வன்

பண்புற மொழிந்த பணிமொழி அன்றோ; நம்
பெண்மையை உடைக்கும் கருவி.

என்றவாறு". அறத்துப்பால் இறுதி:

வள்ளுவக் கடவுள் வகுத்தமைத் துரைத்த
எள்ளறு சிறப்பின் அறத்துப்பால் முற்றும்.

பாலாரும் வேதப் பயனாகும் பாயிரநான்கு
ஏலாகேள் இல்லறமும் நாலைந்தாம் – மேலாம்
துறவுபதின் மூன்று தொடர்ந்தூழொன் – றென்ப
அறிவுநெறி ஆய்ந்துடையார் தாம்.

ஆதியில் அறநூல் ஆய்ந்தெடுத் துரைத்த
நீதியின் வழாஅ நெடும்பொரு ளாகலின்
அருட்பால் இயைந்த அறத்துப்பால் அதன்பின்
பொருட்பால் வள்ளுவன் புகன்றனன் புவிக்கு.

என்ற இரு பாடல்களை இவ்விடத்தில் எழுதியுள்ளார். வள்ளுவக் கடவுள் என்றமையால் இவருக்கு ஆசிரியரிடமுள்ள பக்தி நன்கு புலனாகின்றது.

இவர் வழக்கிலுள்ள நூலின் பாடபேதங்களையும் ஆங்காங்குக் குறிப்பிடுகிறார். "செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து இல்லாளின் ஊடிவிடும்" என்ற குறளில் (1039) இவர் "நிலமடந்தை புல்லாள் புரளவிடும்" என்று பாடங் கொண்டு உரை எழுதுகிறார். எழுதியபின் விசேடமாக, "நிலம் புலந்து இல்லாளின் ஊடிவிடும் என்பாரும் உளர்; கற்புடை மகளிரை ஊடிவிடும் என்பது பொருள் அல்ல" என்றுரைக் கிறார். "அற்றம் மறைக்கும் பெருமை, சிறுமைதான்" என்ற (980) பாடலை முழுமையும் வேறாக இவர் கொண்டிருக்கிறார்; "அற்றம் மறைக்கும் சிறுமை; பெருமைதான் குற்றமாக் கொண்டு விடும்" என்று பாடங்கொண்டு உரை எழுதுகிறார்: "சிறுமையானது என்றும் தான் செய்யும் நெறி அற்றங்களை அடக்கிக் கொண்டு ஒழுகும்; மற்றுப் பெருமையானது தான் அதனைக் குற்றமாகக் கொண்டுவிடும். எனவே, அதனை ஒரு பொழுதும் தன்கண் அடக்க நிலை இல்லை என்பது பொரு ளாயிற்று என்றவாறு. இவ்வாறு அன்றி, 'அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான், சுற்றமாக சூழ்ந்துவிடும்' என்பது பாடமாயின், தன்கண் ஓர் நெறி அற்றமாகிய குற்றம் வந்து உளதாம் ஆயின் அதனை அப்பொழுதே மாய்த்துவிடும் பெருமை

யானது: மற்று இனிச் சிறுமைதான் தன் நட்பின் இனிய கிளையாகக் கொண்டு ஒழுகும் என்றவாறு. இன்னும் பிறவாறு பாடம் ஓதுவாரும் உளர் என்னின், அதற்கு ஏற்குமாறு அறிந்து உரைக்க." இங்கு, பின்னும் பாடங்களையும் இவர் குறிப்பிடுவது காண்க. இங்ஙனமே குறள் 317 - எனைத்தானும் என்பதன் உரை காண்க. வேறு உரைகளையும் கூறுகிறார். 751, 604, 1313 என்பன காண்க. அன்று அறிவாம் என்னாது அறம் செய்க: அறம் செய்கைக்கு, அறிவல்லது என்றும் அறிவாவது என்றும், காலத்தைக் கழியாதே கடிதாக அறத்தினைச் செய்து கொள்க (36). செல்லாமை உண்டேல் என்ற (1151) குறளை இவர் தலைவி கூற்றாகத் தோழியை விளித்துப் பொருளுரைக்கிறார். இதைப் பரிமேலழகர் மறுத்து, தோழி தலைவனுக்குக் கூறும் கூற்றாக உரை எழுதுகிறார்.

இவர் உரையிற் காணும் சில சிறப்புக் கருத்துக்கள் பின் வருவன. குணம் என்னும் குன்று - ராசத தாமத சாத்து விகம் என்னும் குணங்களும், காம வெகுளி மயக்கம் என்கின்ற குணங்களும் அழல் சீதம் இடர் இன்பம் மானம் அவமானம் என்று எண்ணப்படுகின்ற குணம் அனைத்தின் தொகையுமாகிய குன்று 29; புட்சிமிழ்த்தல் - பேடை சேவல் என்னும் புள்விரும்பி வாய்மேல் விரலால் எற்றிப் பயில விளித்த அத்தன்மைத்து 274; எண்ணென்ப - எண் என்பது இருமை இன்பமும் தமது உள்ளத்தால் தெரிந்து பிரித்து எண்ணிக் கொள்வது 392. குடி புறங்காத்து - குடியை அறுவகைப் பயம் காத்து 542.

ஒற்கம் - நரகம் 414 கட்டளைக்கல் - தகுதி மாற்று அறியும் கருவியாகிய உரை கல்லும் நிறைதூக்கிய கட்டளைக் கல்லும் 505. புகழ்ந்தவை - தொல்கலையும் தொல் சான்றோரும் நல்லவை என்று புகழ்ந்தவை 538. ஒருவந்தம் - பெருஞ்செல்வம் 563, 593. அறிவு, நிறைவு, ஓர்ப்பு, கடைப்பிடி என்னும் நாற்பெருங்குணனும் நன்குற அமைந்த அமைச்சன் 635. இணர் ஊழ்த்தும் - சொல்மலர் மலரப்பெற்று வைத்தும்; சொல்மலர் எவ்விடத்துப் பெறுதும் எனின், குரவர் முதலான அரசர் சொல் திருவாய் மலர்ந்தார் என்னும் வழக்கத்துள் கண்டுகொள்க 650. குலத் தூய்மை, குணத்தூய்மை, மனத்தூய்மை, வாய்மொழித் தூய்மை முதலிய தூய்மை 688. அகத்தது - அகத்தது உணர்வானை தெய்வத்தோடு ஒப்புக் கொளல் கருதியது அறிவார் கடவுளர் ஆகலான், மற்று இவர் மக்கள் யாக்கையின் வந்தனராயினும்

வானக் கடவுளரோடு ஒப்பர் 702. நாகம் உயிர்ப்ப - நாகம் வந்து பூத்தென மூச்செறிய 763. நிழல் நீரும் இனிய எனினும், சில நச்சு மரமும் நச்சுப் பொய்கையும் உள அன்றே மற்று அவை ஏனை நிழலும் நீரும் போன்று இருந்தும், இருந்தோரும் அருந்தினோரும் இறந்துபடும் திறம் விளையும் 881. மட்பகை - மண் கரையை முழுவதையும் முரித்தெறியும் வெள்ளம் 883. மேலிருந்தும் மேலல்லார் - மனையும் மாடும் பொருளும் பூமியும் முதலியவற்றான் மேலாயினாரும் தம் குலமும் ஒழுக்கமும் குணமும் ஞானமும் முதலியவற்றான் மேம்பாடுடையர் அல்லாதார் 973. ஒருமை மகளிர் - பிறமதில் காவலும் மக்கள் காவலும் அன்றித் தம் மனக்காவல் ஆகிய நெஞ்சு ஒருமைப் பாட்டால் கொண்டானைப் பிழையாத மகளிர் 974. எச்சம் - குலம் உருபு குணம் ஒழுக்கம் புதல்வர் பொருள் என்னும் எச்சம் 1004. உழவினார் கை மடங்கின் - உழவுத் தொழிலினார் தமது ஒழுக்கமாகிய குடிமை செய்வார் கண்டுரைத்த பெரியோரைப் போலத் தாமும் இவ்வொழுக்கம் தணிவராயின் 1036. இலம் - இல்லா ஆளரேம் 1040.

இவர் விளக்கமாக உரை எழுதிய இடங்கள் மிகப் பல. குறள் 765: நகும் என்றது வெறுங்கையாளனை எறிந்தவன் ஒரு வீரனா என்று ஒரு நகையும், வெறுங்கைக்கு 'அம்மா, ஒரு வேல் வந்தது' என்று நகையும் என அறிக 774; இவனை ஒரு மகன் என்று கூறுவதற்கு நாணி உயிர் என்றது 940. பின்னும் 714, 737, 833, 887, 910, 947, 950, 1020, 1031 - 1037 - 8, 1045, 1068, 1072 - 3, 1227 பார்க்க. நாணாமை நாடாமை நாரின்மை என்ற பாடலில் உரை செய்யத்தகாதன செய்தால் பிறர் சிரிப்பர் என்று நாணம் இல்லாமையும், நன்மையும் தீமையும் ஆராயாமையும், யாவர் மாட்டும் தன் நெஞ்சத்தோடு நட்பும் நயமும் இல்லாமையும், தவமும் ஞானமும் கல்வியும் முதலிய பெரும்பேறுகளில் யாதானும் ஒன்று தனக்கு வேண்டும் என்று பேணிக்கொள் ளாமையும் - இப்படிச் சொல்லப்பட்டவை யெல்லாம் மதி மயக்கை உடையது யாது, மற்று அதுவே பேதை தன் தொழில் என்றவாறு 833.

உரைகளிற் சில: மடிதற்று - மடியினைப் (சோம்பலை) போக்கி 1023; பொச்சாப்பு - இகழ்ச்சி 532; உப்பு என்பது இனிமை, காடி என்பது நடுவுநிலைமை 1050. சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் 311; பொருள் - குணச்செல்வம் குலச்செல்வம்,

பொருட்செல்வம், செவிச்செல்வம் என்றவை முதலாக உரைத்து எண்ணி வருகின்ற செல்வங்கள் 63; வடுமாற்றம் வாய்சோரா வன்கணவன் (689) என்றவிடத்து, பரிமேலழகருரையும் இவருரையும் மாறுபாடாகவுள்ளன; இவர் கூற்றின் சிறப்பை உரையை நோக்கி அறிக.

காமத் தீச்சுடும் என்பதை இவர் நயமாக விளக்கிக் கூறுகிறார். உலகத்துத் தீயினது இலக்கணம், தன்னை வந்து அணுகின் சுடுதலும், அகலின் மெய் தண் என்றலும் செய்யும்: அதுவல்லது இங்ஙனம் சிறிது தன்னை வந்து அணுகின் சுடுதலும் அகலின் தண் என்றலும் செய்யும் இந்தத் தீ இவள் எவ்விடத்துப் பெற்றவள் 1104; புற நெருப்பு அன்றி அகம் சுடும் வெவ்வழலாகிய வறுமைத் தீ 1049; காமத் தீப்போல் விட்டு நின்ற காலத்து வெவ்விதாகி நின்று உள்ளே சுடுதல் அறியுமோ உலகத்துத் தீ? 1159.

இவர், பாரதத்துள் நூற்றுவரையும் இராமாயணத்தில் இராவணனையும் எண்ணிக் கொள்க என்று 530ஆம் குறளில் உதாரணம் கூறுகிறார்.

இவர் ஒவ்வோர் அதிகாரத்தின் பத்தாவது குறள் உரையின் முடிவில் தவறாமல் அடுத்த அதிகாரத்துக்குத் தோற்றுவாயை அழகாக அமைத்துக் காட்டுகிறார். சில அதிகாரத் தலைப்புக்களில் மாறுதல்கள் காணப்படுகின்றன. இரண்டு பாடல்கள் வேறு அதிகாரங்களில் அமைந்துள்ளன.

காமத்துப்பாலில் பெரும்பான்மையான பாடல்களுக்கு, 'கேளாய் நெஞ்சே' என்ற வினாவோடு உரை எழுதுகிறார். பொதுவாக எங்குமே முன் குறளுக்கும் அடுத்த குறளுக்கும் பொருள் தொடர்பைக் காட்டி எழுதுகிறார். கருத்தை இவர் பொருந்திக் காட்டுவது மிக்க நயமாக உள்ளது.

சில இடங்களில் பிறர் செய்யுளை உரைநடையாகவும் மேற்கோளாகவும் எழுதிச் செல்கிறார். புறநானூற்று வரிகளைத் தம் உரையாகவே எழுதிச் செல்கிறார். 'ஏனக்காவல் இவளும் அல்லள்' என்ற சிற்றட்டகப் பாடலில் ஒரு வரியை 'மது மறைந் துண்டோர் மகிழ்ச்சி கண்ணினானே' கண்டு கொண்டார் என்றெழுதுகிறார், 709 மேற்கோள். (இக்கருத்து இவரன்றிப் பின்னும் பலரும் எடுத்தாளுவது.) பால் புளிப்பினும் பகல் இருளினும் 219 - புறநானூறு.

அருமையாக இவர் பழமொழிகளையும் கூறுகிறார். "ஆர்த்தோரெல்லாம் போருக்குரியரல்லர்" - 1027. வரைவின் மகள் கூற்றாக இவர் காட்டும் ஒரு பாடற் பகுதி குறிப்பிடத்தக்கது:

இம்மையே தவஞ்செயார்கை இருநிதி யகற்றல் வேண்டி
நம்மையும் கள்ளும் சூதும் நான்முகன் படைத்து விட்டான்.

இப்பாடலின் மூலம் விளங்காவிடினும், இவ்விரு வரிகள் விவேகசிந்தாமணி (ஸ்ரீ மகள் கம்பெனிப் பதிப்பு) என்ற பிற்கால நூலில் பாடபேதங்களுடன் 24ஆம் பாடலாகக் காணப்படு கின்றன. 'இரு மனப் பெண்டிரும் கள்ளும் கவறும் திருநீக்கப் பட்டார் தொடர்பு' என்ற 920ஆம் குறள் உரையில், இருமனப் பெண்டிர் கள்ளும் கவறும் என்றமைக்குக் காலிங்கர் மேற் காட்டிய வரிகளை உதாரணமாகக் காட்டி, 'என்றார் பிறரும் என அறிக' என்று உரைக்கிறார். இக்கூற்றால், இது அவர் காலத்தில் நன்கு தெரிந்திருந்த ஒரு பாட்டு என்று கொள்ளக் கிடக்கின்றது. இதைக் கொண்ட விவேகசிந்தாமணிப் பாடல் பின்வருவது:

பொம்மெனப் பணைத்து விம்மிப் போர்மதன் மயங்கிவீழும்
கொம்மைசேர் முலையினாளே கூறுவன் ஒன்று கேண்மோ:
செம்மையில் அறம் செய்யாதார் திரவியம் சிதற வேண்டி
நம்மையும் கள்ளும் சூதும் நான்முகன் படைத்த வாறே.

விவேகசிந்தாமணி என்பது, 135 பாடல்களோடு அச்சிடப் பட்டுள்ளது. இதனுள் வெண்பா, விருத்தம், கலித்துறை, கலி விருத்தம் முதலான பல பாவினங்கள் உள்ளன. சில பாடல்கள் மக்கள் நாவில் பழமொழியொப்ப நன்கு பயில்கின்றன. இவை நீதியுரைக்கும் பழம் பாடல்களின் தொகுப்பென்று தெரிகிறது. கம்பராமாயணம், சிந்தாமணி, புறத்திரட்டு, காளமேகம், சிவப் பிரகாசர் பாடல்களும் இதன்கண் உள்ளன. அருணையந்தாதிப் பாடல் காப்புச் செய்யுளாக உள்ளது. இவற்றைப் பார்க்கும் போது, இது மிகவும் பிற்காலத்தில் -18ஆம் நூற்றாண்டில் - தொகுக்கப் பெற்ற நீதிநூல் என்று தெரிகிறது. பிரஜை, முஸ்தீபு, எதேஷ்டம், ராந்தல் போன்ற சொற்கள் பயிலும் விருத்தமொன்று இதனுள் சேர்க்கப்பெற்றுள்ளது. சிவப்பிரகாசர் காலம் (17ஆம் நூற்றாண்டின் இறுதி), நூல் தொகுத்த காலத்தை வரையறை செய்கிறது. மிகப் பல பாடல்கள் மாதரைப் பழிப்பனவாயுள்ளன.

இவற்றால் நாம் அறிவது, காலிங்கர் மேற்கோளாகத் தரும் வரிகளையுடைய பாடல், பழைய நூலொன்றுக்குரியதா யிருத்தல் கூடும். அந்நூல் யாது என்பது விளங்கவில்லை; அல்லது அப்பாடல் ஒரு பழைய தனிப்பாடலாயிருக்கலாம்; பிற்காலத்தில் விவேகசிந்தாமணி தொகுத்தவர் கம்பராமாயணம் சிந்தாமணிப் பாடல்களைச் சேர்த்துக் கொண்டமை போலவே, இதையும் சேர்த்துக் கொண்டார் என்பதாகும்.*

உரையில் மற்று என்ற சொல், குறள்தோறும் ஓர் அசை போலப் பயில்கிறது; ஒரே குறளின் உரையில் பல முறையும் வருகிறது. 'மானித்து' என்ற சொல்லையும் மிகுதியாகக் காண லாம். உரையை இரு கூற்றாக்கி வினாவிடை போல அமைப்பது இவர் இயல்பு: இங்ஙனம் காத்தலைப் புரியும் மன்னவன் யாவன், அவன் உலகத்து மக்கள் யாவர்க்கும் இறைவன் என்றுமுன் வைத்து எண்ணப் பெறுவான் 388. இத்தன்மையை ஆராயும் போது, இவர் ஆசிரியராயிருந்து மாணாக்கருக்குப் பாடம் சொல்லி வந்தாரென்றும், அங்ஙனம் சொல்லி வருகையில் எழுதிய குறிப்புக்களே இவ்வுரையாகும் என்று கருதத் தோன்றுகிறது.

## பரிமேலழகர்

தலைசிறந்த உரையாசிரியர்களுள் மிகவும் சிறப்புடையவர் பரிமேலழகர். பரிமேலழகியார் பரிமேலழகரையர் என்றும் இவர் பெயர் வழங்கும்; ஐயர் என்பது இவர் அந்தண மரபு என்பதை உணர்த்தும். இத்தொடரின் பொருள், குதிரை நம்பிரான் மீது அலங்காரத் திருக்கோலங் கொண்டருளி உலா

---

* கழகப் பதிப்பொன்று விவேகசிந்தாமணி இரண்டாம் பாகம் என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. முதல் பாகமே பழைய நூல், இரண்டாம் பாகம் முழுமையும் வேறு பாடல்கள். இதற்குத் தனிக் கடவுள் வணக்கம் சொல்லி, 100 பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. திருமந்திரம், அவ்வை பாடல், நாலடி, சிறுபஞ்சமூலம், நான்மணிக் கடிகை, பட்டினத்தார் பாடல் முதலியன இதன்கண் காணப்படு கின்றன. 1953இல் இந்நூலைப் பதிப்பித்தவர் தாமாகப் பல பாடல் களைத் திரட்டிப் பழைய திரட்டின் இரண்டாம் பாகமாக இதை அமைத்துக் கொண்டார் போலும். 20ஆம் நூற்றாண்டில் செய்த புதிய தொகுப்புக்குப் பழைய பெயரைச் சூட்டி மயங்கச் செய்திருக்கும் இம்முயற்சியை நாம் காணும்போது, திருவள்ளுவமாலை முதலாகப் பிற்காலத்தில் செய்யப்பட்ட நூலுக்குப் பழைய புலவர் பெயர்களை அமைத்துக் கொண்ட நிலையை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

வரும் பெருமான் என்பதாகும். இவர் செய்த திருக்குறள் உரை மிக்க பிரசித்திபெற்றது. இவரது பெரும்புகழுக்கு அதுவே காரணம். பரிபாடல் உரையும் இவர் செய்தது. இவர் செய்த தாகத் திருமுருகாற்றுப் படையொன்றும் அச்சாகியுள்ளது.

திருக்குறள் உரை செய்த பதின்மர் உரைகளுள் அச்சில் வந்துள்ள ஐந்து உரைகளில் எல்லா வகையாலும் சிறப்புடை யது பரிமேலழகர் உரையே.

**ஆசிரியர்**

ஆங்காங்குக் கிடைக்கும் சில குறிப்புக்களினால் இவர் வரலாறு சிறிது தெரிகிறதேயன்றி, விளக்கமான செய்திகள் கிடைக்கவில்லை. தொண்டைமண்டல சதகப் பாடலால் இவர் காஞ்சிபுரத்தினர் என்று அறிகிறோம்.

**வள்ளல் சிலைப்பெருமாள் நச்சர் சாத்தர் வழுதிமுதல்**
**தள்ளுவ னார்க்குந் தலையான பேரையும் தன்னுரையை**
**விள்ளுவ னார்க்குந் திருக்காஞ்சி வாழ்பரி மேலழகன்**
**வள்ளுவன் நூற்குவழி காட்டினான் தொண்டை மண்டலமே. (41)**

தொண்டைமண்டல சதகத்தை விசேடவுரை, சரித விளக்கம் முதலிய பகுதிகள் எழுதிச் சேர்த்துப் பொழிப்புரையுடன் பதிப்பித்த சி.கு. நாராயணசாமி முதலியார் கூறும் சில கருத்துக் களை இங்கு எடுத்துத் தருகிறோம்: “இவர் இளமையில் அழகர் எனப்பெயர் பெற்று, தமிழ்ப் புலமையும் வடமொழிப் புலமை யும் ஒருங்கே சிறக்க வாய்ந்து, குறளுக்குத் தருமர் முதலான ஒன்பதின்மர் இயற்றிய உரையேயன்றி, தாமும் ஓர் உரை வகுத் தனர். அவ்வுரையைத் தங்காலத்து அரசுபுரிந்த வேந்தன்பாற் சென்று காட்ட, அம்மன்னன் இதனை இங்குள்ள உருக்குப் பரிமேலிருந்து கூறுவீராயின் ஒப்புவோமென, அங்ஙனமே பழுக்கக் காய்ந்த பரிமேலிருந்து தம் உரை சிறந்ததெனக் கூறிப் பழுதில்லாமல் வந்தமையால் பரிமேலழகர் எனப் பெயர் சிறந் தனர். இதனை, ‘திருத்தகு சீர்த் தெய்வத் திருவள்ளுவர்’ எனவும், ‘பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ’ எனவும்* கூறியிருத்தலால் உணரப்படும். வள்ளுவர் செய்தருளிய திருக்குறளுக்கு உரை கண்ட பதின்மருள், முற்பட்டவராகிய தருமர் ஆருகதர். அவரை ஆருகதர்கள் தருமசேனர் என்பர். அவர் செய்த உரையிலே

* இவ்விரு பாடல்களையும் பின்னே காணலாம்.

பெரும்பாலும் ஆருகமதக் கொள்கைகளே நிரம்பியுள்ளன. இவ்வாறே மற்ற உரையாசிரியர்களும் தத்தம் சார்பு பற்றி உரைத்தனர். அவருள், நச்சினார்க்கினியர் ஒருவரே திருக்குறளைப் பொது நூலெனக் கொண்டு நடுநிலை கலங்காது உரை செய் தனர். ஆயினும், அவ்வொன்பதின்மர் உரையும், மெய்யுரை அல்லவெனக் கண்டே பரிமேலழகர், தாம் உரைசெய்யத் துணிந்தனர். இவர் யோகப் பயிற்சியுடையரென்றும், ஒவ்வொரு சொல்லுக்கும் சமாதியிலிருந்தே மெய்ப்பொருள் கண்டா ரென்றும், பூர்வம் வைணவராயிருந்து பின்னர்ச் சுப்பிரமணிய உபாசகர் ஆயினாரென்றும், ஒரு கர்ண பரம்பரைச் செய்தி உண்டு. இஃதெவ்வாறாயினும், ஒவ்வொரு சொற்கும் சமாதியி லிருந்தே மெய்ப்பொருள் கண்டாரென்பது அவர் உரையை ஊன்றி நோக்குந் தோறும் நம்பத்தக்கதாகின்றது."

இக்கூற்றுக்களைப் பிறர் யாரும் சொல்லவில்லை. இவை கொள்ளத்தக்கனவல்ல என்பது வெளிப்படை.

இவர் காஞ்சி உலகளந்த பெருமாள் கோயில் அருச்சகர் பரம்பரையில் பிறந்தவர். வைணவ சமயத்தினர். பரிபாடல் உரைச்சிறப்புப் பாயிரத்தில் வரும் 'நீள்நிலம் அளந்தோன் தாள் தொழும் மரபில் - பரிமேலழகன்' (20 - 21) என்ற வரிகளாலும், தம் பரிபாடல் உரைக்குப் பாயிரமாக இவர் கூறியுள்ளதாகக் கருதத்தக்க கடவுள் வணக்கப் பாடலில்,

> விரும்பி யருள்நீல வெற்பிமயக் குன்றில்
> வரும்பரிசு புள்ளூரும் மாலே – அரும்பு
> வரிபாட லின்சீர் வளர்துளவத் தோளாய்
> பரிபாட லின்சீர்ப் பயன்.

என்று திருமாலுக்கு வணக்கம் கூறியிருப்பதாலும் அறிகிறோம். நீள்நிலம் அளந்தோன் - உலகளந்த பெருமாள். குறளுரை யகத்துக் காணும் பல குறிப்புக்களும் இவர் வைணவர் என்ப தற்குச் சான்று பகரும். இறைமாட்சி என்ற அதிகாரத்தின் அவ தாரிகையில், 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்று பெரியாரும் பணித்தார்' என்று இவர் கூறுவதையும், 349ஆம் குறளுரையில் 'பற்றற்ற கண்ணே' என்ற விடத்து 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்றும், 370ஆம் குறளுரையில் 'அவா நீப்பின் அந்நிலையே பேரா இயற்கை தரும்' என்பதற்கு,

நன்றாய் ஞானம் கடந்துபோய் நல்லிந்திரியம் எல்லாம் ஈர்த்து
ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும்பாழ் உலப்பில் அதனை உணர்ந்துணர்ந்து
சென்றாங்கின்பத் துன்பங்கள் செற்றுக்களைந்து பசையற்றால்
அன்றே அப்போ தேவீடு அதுவே வீடு வீடாமே.

என்றும் திருவாய்மொழிப் பாடல்களை எடுத்துக்காட்டுவதையும் காண்க. தாமரைக் கண்ணான் உலகு (1103) என்றவிடத்து, "துறந்த யோகிகள் எய்தும் செங்கண்மால் உலகு" என்று கூறி, இந்திரனது சுவர்க்கம் என்று கூறிய மணக்குடவர் கருத்தையும் மறுத்துள்ளார். 'அடியளந்தான் தாஅய தெல்லாம்' என்ற தொடர் திருமாலைக் குறிப்பிடும் (610). பிற உரையாசிரியர் மகாவிட்டுணு, திருமால் என்று எழுத, இவர் எல்லா உலகையும் அளந்த இறைவன் என்று எழுதியிருப்பது இவரது சமயச் சார்பை நன்கு புலப்படுத்தும். இவர் வைணவ சமயத்தினராயினும், பிறசமயத் தெய்வங்களைப் பொதுநோக்காகப் போற்றுபவர். பல சமயங்களின் கருத்துக்களை நன்கறிந்து சொல்லுகிறார். 'எண் குணத்தான் (9) - தன்வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை என இவை. இவ்வாறு சைவாகமத்துட் கூறப்பட்டது" என இவர் எழுதுவது காண்க.

குறளுரை ஏட்டுப் பிரதிகளில் காணும் பாடலொன்று இவர் ஒக்கை காவலர் என்று கூறும்:

விரைத்தார் அலங்கல் திருவள்ளுவர் முன்னம் வெண் குறட்பா
நிரைத்தார் மிகுபொருள் நான்கும் விளங்க நெறிப்புலவர்
உரைத்தார் பலரும் அதற்குரை தன்னை உலகறியக்
கருத்தான் வகுத்தமைத் தான்கலை தேர்ஒக்கை காவலனே.

ஒக்கை என்பது ஒக்கூர். இது பாண்டி நாட்டுள்ள ஊர் என்று கருதல் வேண்டும். மற்றோர் ஏட்டுப் பிரதிப் பாட்டில் இவர் மதுரை நகரினர் என்று குறிப்பிடப்பட்டுள்ளார்:

முன்னுரைத்த தேவர்குறள் (மூதறிஞர் போற்றுபொருள்)
இன்னதிது என்றுரைக்க எய்தினான் – முன்னூற்
புரிமேல் அழகியகோப் போற்றுதமிழ்க் கூடல்
பரிமே லழகியனென் பான்.

இப்பாடல் கூறுகின்றபடி இவர் பாண்டிநாட்டு அரசனால் சிறப்புச் செய்யப்பெற்று ஒக்கூரில் தலைவராக வாழ்ந்திருந் தார் என்று கருத இடமுண்டு. இவரது குறள் உரையில் காணும் அரசியற் செய்திகள், அறிவாற்றல் கருத்துக்கள் யாவையும் இவருடைய பெருந்தகுதிக்கும் கல்விப் பரப்பிற்கும் சான்று பகர்வன. இளமையில் பாண்டிநாடு சென்று சிறப்போடிருந்து முதுமையில் மீண்டும் காஞ்சியடைந்து தம் ஆற்றல்கள் புலப்படு மாறு பேருரைகள் செய்தார் என்று கருதலாம். இவர் வரலாறு குறித்து நாம் அறிவது இவ்வளவே.

பரிமேலழகர் திருக்குறளுக்கும் பரிபாடலுக்கும் உரை செய்தார் என்பது எல்லோரும் அறிந்த செய்தி. திருமுருகாற்றுப் படைக்கும் இவர் உரை செய்தார் என்று ஓர் உரையும் அச்சாகி யுள்ளது.

**திருக்குறள் உரை**

இதன் சிறப்புப் பாயிரமாகிய 'திருந்திய தமிழில்' என்ற பாடல் மிக்க சிறப்புடையது. விரிவாயினும் அதன் சிறப்பைக் கருதிப் பாடல் முழுமையும் இங்கு தருகிறோம்:

திருந்திய தமிழில் தெய்வப் புலமை
அருந்திறல் வள்ளுவன் ஆய்ந்துதன் வாக்கால்
அறம்பொருள் இன்பம் வீடென நான்கின்
திறந்தெரிந் துரைத்த செவ்விழுப் பாலுக்கு,
ஒருரை யின்றி ஒன்பது சென்றும்
ஐயுற வாக நையுறு காலை,
வள்ளுவன் மீளவும் வந்துதித் துலகோர்க்கு
உள்ளிய பொருளை உரைத்தனன் என்ன,
எழுத்து முதல இலக்கண வகையும்
வழுத்துவே தாகம வகையதன் பயனும்
தங்கிய குறட்பாத் தமிழ்மனு நூலிற்கு
இதுவே உரையென்று யாவரும் வியப்பப்
பொழிப்பக லத்தொடு நுட்ப எச்ச
விழுப்பொருள் தோன்ற விரித்தினி துரைத்தனன்;
வடநூல் துறையும் தென்திசைத் தமிழும்
விதிமுறை பயின்ற நெறியறி புலவன்,
அன்பருள் நாணொப் புரவுகண் ணோட்டம்
நன்றறி வாய்மை நற்றவ முடையோன்,

இத்தகை யன்றி ஈசன தருளால்
உய்த்துணர் வுடையவோர் உண்மை யாளன் –
பரிமே லழகன் எனப்பெயர் படைத்துத்
தரைமே லுதித்த தலைமை யோனே.

ஆசிரியரின் அரிய கல்வி கேள்வித் திறன்களை இது தொகுத்துக் கூறுகிறது. வடநூல்துறையும் தென்திசைத் தமிழும் - விதிமுறை பயின்ற நெறியறி புலவர், அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் நன்றறிவாய்மை நற்றவமுடையோர், உண்மையாளர் என்ற அடைமொழிகளைக் காண்க. கல்வியிற் சிறந்தவர் பரிமேலழகர். தமக்கு முன் எழுந்திருந்த குறள் உரைகள் அனைத்தையும் நன்கு ஆராய்ந்து அவற்றால் பயன் எய்தியிருக்கிறார். தமது பரந்த கல்வி, நுண்ணறிவு, அரிய மொழிவன்மை, வடமொழிப் பயிற்சி ஆகிய திறன்கள் அனைத்தையும் திருக்குறளின் ஆழ்ந்தகன்ற கருத்துக் களைத் தாம் உணர்வதற்கும் எடுத்து உணர்த்துவதற்கும் பயன் படுத்தியுள்ளார். குறள் உரைகள் ஒன்பது இருந்தும், ஐயுறவாக நையுறு காலை, வள்ளுவரே மீண்டும் தோன்றித் தம் நூலுக்குப் பொருள் உரைத்ததுபோல இவர் உரை செய்தார் என்று பாயிரம் கூறுகின்றது. இவற்றுள் கிடைப்பன ஐந்தே என்பதும், ஐந்தில் பரிதியார் உரை இவருக்குப் பிற்பட்டது* என்றும் வேறிடத்தில் விளக்கமாகக் காலக்குறிப்போடு கூறியிருக்கிறோம். பாயிரப் பாடல் செய்தார் பிற்காலத்தார் ஆதலின், காலஎல்லை தெரி யாமையாலும் பரிமேலழகரைச் சிறப்பிக்க எண்ணியுமே அவ்வாறு பாடினார் என்று கருதவேண்டும். பரிப்பெருமாள் உரையும் காலிங்கர் உரையும் தத்தம் நெறியில் சிறப்புடையன. பரிதியார் உரை பரிமேலழகருக்குப் பின்வந்தும், சிறப்புடைய உரையன்று.

பரிமேலழகர் தமதுரையைப் பொழிப்புரையாகவே எழுதினார். பிற்காலத்தில் உரையை அச்சிட்டோர், கற்போர் நலனைக் கருதிப் பதவுரையாகப் பிரித்து அச்சிட்டனர்.❖ ஒருவர் இதைக் காண்டிகையுரையாக வைத்துத் தாம் இவ்வுரைக்கு விருத்தியுரை எழுதுவதாகச் சொல்லுகிறார்; இது அத்துணைப் பொருத்தமுடைய கூற்றாகத் தோன்றவில்லை. ஏனெனில், சூத் திரப் பொருளைச் சுருங்க விளக்கியுரைக்கும் உரைக்கே காண் டிகை என்ற பெயரும் பொருந்தும்.

---

* எமது தமிழ் இலக்கிய வரலாறு: 15ஆம் நூற்றாண்டு நூல் பார்க்க.

❖ எம்மிடமுள்ள பண்டை ஓலைச்சுவடி யொன்றிலும் பரிமேலழகருரை பொழிப்புரையாகவே உள்ளது.

திருவள்ளுவரை இவர் எங்கும் போற்றியே கூறுவார்: 'ஈண்டு தெய்வப் புலமைத் திருவள்ளுவரால் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக் கொள்ளப்பட்டது'; 'எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர் இயல்பு' (322). ஞானம் என்ற இயலைத் தனியே பிரித்து, அதன் முதல் அதிகாரமாகிய நிலையாமைக்கு அவதாரிகை கூறு மிடத்துத் திருவள்ளுவரின் பொதுநோக்கை நன்கு விளக்கு கிறார்: "மயங்கிய வழிப் பேய்த்தேரில் புனல்போலத் தோன்றி, மெய்யுணர்ந்த வழிக்கயிற்றில் அரவுபோலக் கெடுதலின் பொய் என்பாரும், நிலை வேறுபட்டு வருதலால் கணந்தோறும் பிறந்து இறக்கும் என்பாரும், ஒருவாற்றான் வேறுபடுதலும் ஒருவாற் றான் வேறுபடாமையும் உடைமையின் நிலையுதலும் நிலை யாமையும் ஒருங்கே உடைய என்பாரும் எனப் பொருட் பெற்றி கூறுவார் பல திறத்தவராவர்; எல்லார்க்கும் அவற்றது நிலையாமை உடம்பாடாகலின், ஈண்டு அதனையே கூறுகின் றார்' (அதிகாரம் 34).

பரந்த நூற்பயிற்சியுடையவராதலால் ஒரு கருத்தை இவர் சொல்லுமுன், முன்னோர் செய்யுட்கள் முந்தி வந்து எதிர் நிற் கின்றன. இதனால் முந்தையோர் செய்யுட்களையும் தொடர் களையும் உரைநடையாகவே எழுதிச் செல்கிறார்: 'புகழ்தான் உரையும் பாட்டும் என இருவகைப்படும்' (232: புறம் 27). சிறு கையான் அளாவலாவது இட்டும் தொட்டும் கௌவியும் துழந்தும், நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தல் 64: புறம் 188). பெரிய அறங்களைச் சிதைத்தலாவது, ஆன்முலை அறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த் தபுதலும் ஆகிய பாதகங்களைச் செய்தல் (110: புறம் 34). புலவர் பாடும் புகழு டையோர் விசும்பின் வலவன் ஏவா வான ஊர்தி எய்துவர் (970: புறம் 27). மது மறைந்துண்டோர் மகிழ்ச்சிபோல உள்ளத் துள்ளே மகிழ்தலின் (இறையனார் களவியல் 8 உரை மேற்கோள், ஏனல் காவல் இவளுமல்லள் என்ற பாடல்.) ஊராண்மை என்பதை விளக்குமிடத்து (773), "இலங்கையர் வேந்தன் போரிடைத் தன் தானை முழுதும்படத் தான் தமியனாய் அகப்பட்டானது நிலைமை நோக்கி, அயோத்தியர் இறை மேற்செல்லாது, 'இன்று போய் நாளை நின் தானையோடு வா' என விட்டாற் போல்வது" என்று எழுதுகிறார். இது கம்பராமாயணத் தொடராகும்:

ஆள்ஐயா உனக்கமைந்தன மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை: இன்று போய்ப் போர்க்கு
நாளை வா என நல்கினன், நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்.

இங்ஙனமே இவர் பல திருக்குறட் பாடல்களையும் உரைநடையாக எழுதிச் செல்வதைக் காணலாம்.

பரிமேலழகர் மேற்கோளாக ஆங்காங்கு எடுத்துக்காட்டும் நூல்கள் மிகப் பல. இலக்கணங்களுள், தொல்காப்பியத்தை எங்கும் காணலாம். படையைக்கூறும் இடங்களிலும், புறப் பொருள் வெண்பாமாலை மிகுதியாக ஆட்சி பெறுகிறது. நன் னூலை இவர் ஆளுவது, ஒருபொருட் பன்மொழி என்ற தொட ரால் அறிகிறோம் (863 குறள்). இறையனார் களவியல் மேற் கோள் பாட்டு முன்னமே காட்டப்பட்டது.

காப்பியங்களுள் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி; எட்டுத்தொகையுள் நற்றிணை, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, புறம், அகம்; கீழ்க்கணக்கினுள் நாலடி, பழமொழி நானூறு, நான்மணிக்கடிகை, திரிகடுகம் என்பன; பத்துப்பாட்டுள் பட்டினப்பாலை, நெடுநல்வாடை; பிறநூல்கள் முத்தொள்ளாயிரம், திருவாய்மொழி, கம்பராமா யணம். மிகவும் அதிகமாக ஆட்சி பெற்ற நூல்கள் புறநானூறும் நாலடியும். ஓரிடத்தில் கபிலரது பாட்டு என்று கூறுவார். திருக்கோவையார் தொடரையும் (குறள் 277) பெரியபுராணக் கருத்தையும் (குறள் 442) குறிப்பிடுகிறார்.

இடம் விளங்கா மேற்கோட் பாடல்களும் சில உள்ளன; சில குறட்பாக்கள், சில வெண்பாக்கள், அவற்றில் பின்வருவது ஒன்று:

எழுத்தறியத் தீரும் இழிதகைமை, தீர்ந்தால்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும் – மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூல் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்.

(இப்பாடலின் மூலம் தெரியவில்லை. எனினும், இதனுள் ஐந்து பொருள்கள் சொல்லப்பட்டுள்ளமையால், இது சிறு பஞ்சமூலப் பாடலாயிருக்கலாமோ என்று கருத இடமுண்டு. அதனுள் இன்னும் சில பாடல்கள் காணப்படவில்லை என்பதும் அறியத்தக்கது.)

பரிமேலழகர் 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்த வைணவர். அக்காலம் வைணவ சமயத்தில் பேரெழுச்சி ஏற்பட்டு, அச்சமய சாத்திர போதனையும் சாத்திரஉரை செய்யும் முயற்சிகளும் தமிழ்நாட்டில் பெருக்கெடுத்து அலைமோதிக் கொண்டிருந்தன. வடமொழியும் தமிழும் கலந்த உரைநடையாகிய மணிப்பிரவாள நடை தமிழில் ஒரு புதிய படையெடுப்பாகத் திரண்டு வந்தது. அக்காலத்தில் வாழ்ந்த வைணவரான இவர் தாமும் அந்த வெள்ளத்தில் கலந்திருத்தல் இயல்பே. இவருடைய வட மொழிப் புலமை நூலுள் நன்கு விளங்கத் தெரிகிறது.

குற்றங்கள் ஐந்து - அவித்தை அகங்காரம் அவா விழைவு வெறுப்பு; இவற்றை வடநூலார் பஞ்சக்கிலேசம் என்ப 38. இன்பம் ஒன்றையே நோக்கும் இன்பநூலுடையார் இத்தீயொழுக்கத்தையும் (பிறனில் விழைதல்) பரகீயம் என்று கூறுவர் 441. மனு முதலிய அறநூல்களால் பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்கள் எல்லாம் இவர் தொகுத்துக் கூறிய இவற்றுள்ளே அடங்கும் 240; வடநூலார் குற்றம் ஐந்து என்றார் 360; சீவன் முத்தன் 370; கொடியவர் என்றது தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவிற் கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறை கொள்வார், பிறனில் விழைவார் என்றிவர் முதலாயினாரை; இவரை வடநூலார் ஆததாயிகள் என்ப 550; வடநூர்லார் இவற்றுள் பொருத்து தலைச் சந்தி என்றும், பிரித்தலை விக்கிரகம் என்றும் கூறுப 663; வடநூலார் மதம் 687, 1330; வடநூலார் ஈதிகள் என்ப 732; வடநூலாரும் விதனம் என உடன் கூறினர் 920. நாண் என்னும் நல்லாள்: பெண்பாலாக்கியது வடமொழி முறைமைபற்றி 924.

பின்னும் சில விளக்கங்களை இனிக் கூறுவோம். படை வகுப்பைக் குறித்த இவரது விளக்கம்: "படைவகுப்பாவது வியூகம். அஃது எழுவகை உறுப்பிற்றாய், வகையான் நான்காய், விரியான் முப்பதாம். உறுப்பு ஏழாவன: உரம் முதல் கோடி ஈறாயின. வகை நான்காவன: தண்டம், மண்டலம், அசங்கதம், போகம் என இவை. விரி முப்பதாவன: தண்டவிரி பதினேழும், மண்டலவிரி இரண்டும், அசங்கதவிரி ஆறும், போகவிரி ஐந்தும் என இவை. இவற்றின் பெயர்களும் இலக்கணமும் ஈண்டு உரைப்பின் பெருகும்; அவை எல்லாம் வட நூல்களுள் கண்டு கொள்க."

இவர் வடமொழிப் பயிற்சி மிக்கு, அம்மதம் பற்றிப் பல கருத்துக்களைக் கூறினும், நடுவுநிலை திறம்பாது நின்று, தமிழர்

வழக்குப்பற்றி அம்மொழியார் வழக்கை உரிய இடங்களில் மறுத்தும் எழுதுகிறார்.

இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல். (961)

என்பதன் உரையில், "இறப்ப வருவழி இளிவந்தன செய்தாயினும் உய்க என்னும் வடநூல் முறைமையை மறுத்து, உடம்பினது நிலையின்மையையும் மானத்தினது நிலையுடைமையையும் தூக்கி, அவை செய்யற்க" என்று கூறுவதை ஆராய்க.

பரிமேலழகர் சமய நூலறிவு மிக்கவர் என்பதை இவர் சொல்லும் குறிப்புக்களால் நன்கு காணலாம். சாங்கிய நூல் (27) ஆருகதர் (286), வைசேடிகர் (307, 359) என்பன குறிப்பிடுகின் றார். பூசை குறிப்பிடும்போது நித்திய நைமித்திகம், சைவாகமம், இறைவர் அருளான் உலகத்தார் உறுதி எய்துதற்பொருட்டுக் கூறிய ஆகமங்கள் (300) ஆகம அறிவிற்குப் பயன், அவன் தாளைத் தொழுது பிறவியறுத்தல் (2) என்பன காண்க. யோகநூல் (359), ஞான யோகங்களின் முதிர்ச்சி உடையார் (359), ஒழுக்கம் என்றது யோகநெறி ஒழுகுதலை; அஃது இயமம், நியமம், இருப்பு, உயிர் நிலை, மனவொருக்கம், தாரணை, தியானம், சமாதி என எண் வகைப்படும் என அட்டாங்க யோகங்களைக் குறிப்பிடுகின்றார் (359). இடைவிடாது பாவித்தல்: இதனைச் சமாதி எனவும், சுக்கிலத்தியானம் எனவும் கூறுப (358). இங்கு ஆசனம், பிராணா யாமம், பிரத்தியாகாரம் என்ற மூன்றும் இருப்பு, உயிர்நிலை, மனவொருக்கம் எனப்பட்டன. இப்படியே பரிமேலழகருக்கு முற்பட்ட அடியார்க்கு நல்லாரும், பிற்பட்ட நச்சினார்க்கினி யரும் தமிழ்ச் சொற்களால் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். வட நூலார் ஆதி ஆத்மிகம், ஆதி பௌதிகம், ஆதி தெய்விகம் என்று கூறுபவற்றை இவர் தன்னைப்பற்றி வருவனவும், பிற உயிர்களைப் பற்றி வருவனவும், தெய்வத்தினைப் பற்றி வருவன வும் என மூவகையான் வரும் துன்பங்கள் (4) என்று தமிழில் சொல்லுகின்றார்.

மெய்யுணர்தல் (அதிகாரம் 36) என்பதற்குத் தத்துவஞானம் என்று பொருள் கூறி, இவ்வதிகாரத்தின் பத்துப் பாடல்களிலும் தத்துவப் பொருள்களையே விரித்துரைக்கின்றார். சாங்கிய நூலார் மதம் பற்றித் தத்துவம் 25 என்பதை 27ஆம் பாடலில் கூறுகிறார்.

பரிமேலழகர் உரை இலக்கணவுரை என்றும் சொல்லியிருக்கிறார்கள். காரணம், அவர் ஆங்காங்குப் பல இலக்கணக் குறிப்புக்களைத் தந்திருப்பதும், பிறவுரையாசிரியர்கள் இலக்கணப் பிழையால் செய்த தவறான உரைகளை எடுத்துக்காட்டியிருப்பதும் ஆகும். எழுத்து, சொல், அகப்பொருள், புறப்பொருள், அணியிலக்கணம் ஆகியவற்றை ஆங்காங்கு ஆய்ந்து காட்டுகிறார். இலக்கண நூல்களுள் இவர் குறிப்பிடுவன தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல் என்பன. காமத்துப் பால் உரையில் அகப்பொருள் இலக்கணத்தைப் பாடற்பொருளோடு ஒற்றுமைப்படுத்தி விளக்கி யுரைத்திருப்பது பயின்று இன்புறத்தக்கது. அப்படியே புறத்திணைப் பகுதியையும் உரிய இடங்களில் புறப்பொருள் வெண்பாமாலையை மேற்கோள் காட்டி விளக்குகிறார்.

இவர் பல துறைகளிலும் புலமை மிக்கவர் என்பதை ஆங்காங்கு எழுதும் குறிப்புக்களால் நன்கு உணர்கிறோம். இவருடைய அரசியல் துறைப் புலமைக்கு ஒரு சான்று: "ஈட்டல், காத்தல், வகுத்தல் என்றவற்றிற்கு ஏற்ப இயற்றல் என்பதற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. பொருள்களாவன: மணி, பொன், நெல் முதலாயின. அவை வரும் வழிகளாவன: பகைவரை அழித்தலும், திறைகோடலும், தன்நாடு தலையளித்தலும் முதலாயின. பிறர் என்றது பகைவர், கள்வர், சுற்றத்தார், வினை செய்வார் முதலாயினார். கடவுளர், அந்தணர், வறியோர் என்று இவர்க்கும் புகழிற்கும் கொடுத்தலை அறப் பொருட்டாகவும், யானை, குதிரை, படை, நாடு, அரண் என்று இவற்றிற்கும் பகையொடு கூடலின் பிரிக்கப்படுவார்க்கும் தன்னில் பிரிதலின் கூட்டப்படுவார்க்கும் கொடுத்தலைப் பொருட் பொருட்டாகவும், மண்டபம், வாவி, செய்குன்று, இளமரக்கா முதலிய செய்தற்கும் ஐம்புலன்களான் நுகர்வனற்றிற்கும் கொடுத்தலை இன்பப் பொருட்டாகவும் கொள்க (385)" - என இங்கு அறம் பொருள் இன்பம் என மூன்றையும் சுட்டி இயற்றலைக் கூறுவது நயம்.

உழவைப்பற்றி இவருடைய கருத்து அதிகம் வெளிப்படாவிட்டாலும் கூட, ஒரு சிறு குறிப்பு விளக்கமாக உள்ளது. "பயிரைக்காத்தல்: பட்டி முதலியவற்றான் அழிவெய்தாமல் காத்தல், உழுதல், எருப்பெய்தல், களைகட்டல், நீர்கால் யாத்தல், காத்தல் என்று இம்முறையவாய இவ்வைந்தும் வேண்டும் என்பதாம்."

இவருடைய மருத்துவக் குறிப்புக்கள் பெரிதும் ஆராய்ந்து வாழ்க்கைக்குப் பொருந்த எழுதப்பெற்றவை. "மாறு கொள்ளாத உணவு உண்பான் பகுதியோடு மாறு கொள்ளாமையும், கால வியல்போடு மாறுகொள்ளாமையும், சுவை வீரியங்களால் தம்முள் மாறு கொள்ளாமையுமாம். அவையாவன: முறையே வாத பித்த ஐகளானாய பகுதிக்கு அடாதவற்றைச் செய்வன வாதலும், பெரும்பொழுது சிறு பொழுதென்னும் கால வேறு பாடுகளுள் ஒன்றற்காவன பிறிதொன்றற் காகாமையும், தேனும் நெய்யும் தம்முள் அளவொத்து நஞ்சாதல் போல்வனவுமாம். அவற்றைக் குறிக்கொள்ளாது மனம் பட்டவாற்றால் துய்ப்பின், அதனானே நோயும் மரணமும் வருதலின் கடைப்பிடித்து என்றார்" *(944).*

பண் என்ற சொல்லை விளக்குமிடத்து இவருடைய இசையறிவைக் காண்கின்றோம்: "பண்களாவன; பாலை யாழ் முதலிய நூற்று மூன்று. பாடல் தொழில்களாவன: யாழின் கண் வார்தல் முதலிய எட்டும், பண்ணல் முதலிய எட்டும், மிடற்றின் கண் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம் என்னும் ஐந்தும், பெரு வண்ணம், இடை வண்ணம், வனப்பு வண்ணம் முதலிய வண்ணங்கள் எழுபத்தாறுமாம். இவற்றோடு இயையாத வழிப் பண்ணால் பயன் இல்லாதவாறு போலக் கண்ணோட் டத்து இயையாதவழிக் கண்ணால் பயனில்லை என்பதாம்."

'வையத்தார் உள்ளுவவெல்லாம், வாலறிவின் வள்ளுவரும் தம் குறள் வெண்பாவடியால் ஓர்ந்தளந்தார்.' எனவே, உலகம் எவ்வளவு விரிவோ அவ்வளவு விரிவு இவர் கூறும் பொருள். ஆதலால் இடமும் காலமும் சூழ்நிலையும் நோக்கிப் பேருண்மை களை இவர் சுருங்கிய சொற்களால் சொல்ல முற்படும்போது, குறளை மட்டும் தனியே எடுத்துப் பார்ப்பவருக்குச் சில கருத்துக் கள் முரண்படுவனவாகத் தோற்றுவது இயல்பு. வாய்மை பற்றிய கருத்துக்களும் ஊழைப் பற்றிய கருத்துக்களும் இவ்வாறு அடிக்கடி பலரும் குறிப்பிடுபவை. வாய்மையின் சிறப்பு முப்ப தாம் அதிகாரம் முழுமையும் சொல்லப்பட்டது. அங்கு, இரண் டாம் குறள் மட்டும் பொய்ம்மையைப் பேசுகிறது:

> பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கு மெனின்.

இக்கருத்துக்களுக்குப் பரிமேலழகர் அழகுபெற ஓர் அமைதி காட்டுகிறார். "குற்றம் தீர்ந்த நன்மை அறம்; அதனைப் பயத்த

லாவது கேடாதல் சாக்காடாதல் எய்த நின்றதோர் உயிர் அச் சொற்களின் பொய்ம்மையானே அதனின் நீங்கி இன்புறுதல், நிகழாதது கூறலாம். நன்மை பயவாதாயிற் பொய்ம்மையாம்; பயப்பின் மெய்ம்மையா மென்பது கருத்து" (291).

அடுத்து, ஊழைக் குறித்த மாறுபாடான கருத்துக்களைப் பார்க்கலாம். அறத்துப்பாலின் இறுதியில், ஊழியல் என்றே ஓரதிகாரம் (32) தனியாக அமைக்கப்பட்டுள்ளது. இதன் இறுதிப் பாடல் பின் வருவது:

**ஊழிற் பெருவலி யாவுள, மற்றொன்று**
**சூழினும் தான்முந் துறும். (380)**

ஊழே அனைத்தினும் வலியதென்று நிறுவுகின்ற குறளாசிரியர், ஆள்வினையுடைமை என்ற அதிகாரத்தின் இறுதிப்பாடலில் ஊழையும் புறங்காண முடியும் என்று கூறுகின்றார்:

**ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர். (620)**

இவ்விரு பாடல்களும் ஒன்றுக்கொன்று நேர்முரணாயிருப்பது வெளிப்படை. 'அறத்துப்பால் இல்லறத்தில் வாழும் நன் மக்களுக்குச் சொல்லப்பட்டது. பொருட்பால் அரசாள் வோருக்குச் சொல்லப்பட்டது. இருவகையாருடைய செயலிலும் விவகாரத்திலும் நிரம்ப வேற்றுமையுண்டாதலால், ஒருவனுக்குச் சொல்லியது மற்றவருக்குப் பொருந்தாது. இதனால்தான் கருத்தில் மாறுபாடு எழுகிறது' என்று ஒரு சாரார் சொல்லுகின்றனர். இக்கருத்து ஏற்கத் தக்கதன்று. இதை நன்குணர்ந்தே பரிமேலழகர் ஓர் அமைதி காட்டுகிறார். ஊழின் வலியவை யாவை எனக் கேட்டபின்னும், மக்கள் முயற்சிக்கு இடமிருக்கிறது: "ஊழ் ஒரு காலாக இரு காலாக அல்லது விலக்கலாகாமையின், பலகால் முயல்வார் பயன் எய்துவர்" என்கிறார். மக்கள் வாழ்க்கை ஊழை எண்ணி மாழ்கி விடக்கூடாது; முயன்று போராடி வளர்ந்து மேம்பட வேண்டும். இதன் பொருட்டே பரிமேலழகர் இவ்வாறு விளக்கந் தருகிறார். இவை போல்வன பின்னும் பல.

எனினும், பரிமேலழகரின் உரையுள் பொருந்தாத கருத்துக்கள் இல்லையென்று கருதவியலாது, எழு பிறப்பும் தீயவை தீண்டா என்ற குறளின் உரையில் (62), பிறப்பு ஏழு யாவை என்பதற்கு ஒரு மேற்கோள் பாடல் தருகிறார்.

ஊர்வ பதினொன்றாம் ஒன்பது மானிடம்
நீர்பறவை நாற்காலோர் பப்பத்துச் – சீரிய
பந்தமாந் தேவர் பதினாறு அயன்படைத்த
அந்தமில்சீர்த் தாவரம்நா லைந்து.

எழு பிறப்பு என்பதைப் பொதுவாக, தொடர்ந்த ஏழு மக்கட் பிறப்பாகக் கருதுகின்றோமேயன்றி, ஏழுவகைப் பிற உயிர்களின் பிறப்பு என்று இவர் கூறுவதை ஏற்பது அரிது. எழுமையும் ஏமாப்புடைத்து என்ற விடத்தும் இப்படியே குறிப்பிடுகிறார். (பரிதியாரும், ஏழுபிறப்பு என்றவிடத்து, இவரைத் தழுவியே உரை கூறுகிறார்.) இச் சிறு மாறுபாடுகள் இவரது பெருமை மிக்க உரைக்கு இழுக்காகா.

தமிழில் இலக்கிய உரையாசிரியர்களுள் மிகச் சிறந்தார் என்று தேர்ந்து குறிப்பிடுவோமாயின், மூவரைக் குறிப்பிட முடியும்; அவர்களாவார் அடியார்க்கு நல்லார் பரிமேலழகர் நச்சினார்க்கினியர் என்போர் (காலமுறைப்படி). ஒவ்வொரு வரும் ஒவ்வொரு விதத்தில் சிறப்புடையவர். தமிழ் வேதம் என்று சிறப்பித்துக் கூறுகின்ற திருக்குறளுக்குக் கருத்து விளக்கமான உரை எழுதிய பெருமை பரிமேலழகருக்கு உரியது.

பரிமேலழகர் மிகச் சிறந்த உரைநடையில் தம் உரையை எழுதியுள்ளார். சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் முதலிய அழகுகள் யாவும் பொருந்தியது இவ்வுரை. சொல்லுக்கு அமைய வேண்டிய குணங்கள் என்று கருதும் வழுவின்மை சுருங்குதல் விளங்குதல் இனிதாதல் விழுப்பயன் தருதல் என்பனவெல்லாம் இவர் உரையில் நன்கு அமைந்துள்ளன. சில இடங்களில் உரை செய்யுள் ஓசை பெற்றிருக்கும். சிறந்த நூல்கள் நூற் கருத்துக்கள் பலவற்றை உரைநடையாகவே எழுதிச் செல்வதை முன்னமே குறிப்பிட்டோம். இவர் மேற்கோள் காட்டும் பொழுது தாம் விளக்கக் கருதிய கருத்துக்குரிய சிறு பகுதியை மட்டும் எடுத்துக் கூறுவார். ஆசிரியர் கருத்தை நன்குணர்ந்து அதற்கு இருமொழி ஆதாரத்தையும் விளக்கிக் காட்டுவார். எங்கும் பிறர் கருத்துக் களைக் காரணங்காட்டி மறுத்து எழுதுவார்.

உரை எழுதுவதற்கு இவர் சிறப்பான ஒரு முறையை வகுத்துக் கொண்டிருக்கிறார். நூலின் தொடக்கத்தில் உரைப்பாயிரம் கூறி அங்கு பால் பாகுபாட்டைவிளக்குகிறார். ஏன் வீடு கூறப் படவில்லை என்பதையும் காட்டுகிறார். இயல் ஒவ்வொன்றுக் கும் அவதாரிகை கூறுகின்றார். ஒவ்வோர் அதிகாரத்துக்கும்

தோற்றுவாய் எழுதி, முன் அதிகாரத்தை எப்படி இது தொடருகிறது என்பதையும் தெளிவுபடுத்துகிறார். அதிகாரத்திலுள்ள பத்துப் பாடல்களையும் தனித்தனியே தொகுத்து இப்பாட்டுக்களால் இன்னது சொல்லப்பட்டது என்று கூறுகிறார். எடுத்துக்காட்டாக, கேள்வி என்ற அதிகாரத்தை நோக்கினால், "இவை இரண்டு பாட்டானும் கேள்வியது சிறப்புக் கூறப்பட்டது; இதனால் அதனை உடையாரது சிறப்புக் கூறப்பட்டது; இவை நான்கு பாட்டானும் கேட்டார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது; இவை மூன்று பாட்டானும் கேளாத வழிப்படும் குற்றம் கூறப்பட்டது; என்று பத்தையும் தொகுத்துக் கூறியிருக்கக் காணலாம். இத்தகைய தொகுப்புரை ஏனைய உரையாசிரியர்களிடம் காண்பதற்கில்லை. திருவள்ளுவர் கூறுகின்ற உவமைகளெல்லாம் நன்கு விளக்குகின்றார். "நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும்' என்பதை விளக்குமிடத்து, விசும்பின்கண் தன் தன்மைத்தாய நீர் நிலத்தோடு சேர்ந்தவழி நிறம் சுவை முதலிய பண்புகள் திரிந்தாற் போல, தனி நிலைக்கண் தன் தன்மைத்தாய அறிவு பிற இனத்தோடு சேர்ந்தவழிக் காட்சி முதலிய தொழில்கள் திரியும்" என்பார் (452). உரை எல்லாவிடத்தும் மிக்க நயமாகவே அமைந்திருக்கும்.

> **நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே,**
> **கல்லார்கண் பட்ட திரு.** **(408)**

எவ்வாறு இன்னாது என்பதை, "திரு கல்லாரைக் கெடுக்க, வறுமை நல்லாரைக் கெடாது நிறுத்தலான், வறுமையினும் திரு இன்னாது என்றார்" என இவர் எழுதியிருப்பது காண்க. இங்ஙனமே சில சொற்களுக்குப் பொருளும் விளக்கமும் இவர் எழுதியிருப்பது போற்றற்குரியது. பிற்காலத்தில் இலக்கிய வரலாறு முழுமையும் ஆராய்ந்தால் பெரும்புலவர்கள் இவர் கூறிய கருத்துக்களில் நன்கு ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.

பரிமேலழகர் சில இடங்களில் வடமொழி வழக்கையும் கருத்தையும் வலிந்து புகுத்தியிருக்கிறார் என்று அறிஞர் பலர் கருதுவர். உண்மை. யாரும் தாம் வாழ்ந்த காலத்தையும் சூழலையும் கடந்து ஒன்றுசெய்தல் இயலாது. பரிமேலழகரும் இந்த உண்மைக்கு விலக்கல்லர். பிழைகளை விலக்கிச் சிறப்புக்களை மாத்திரம் கொள்வோமானால், குறளுக்குப் பெருவிளக்கம் தர இவர் உரை உதவுகிறது என்பதை யாரும் தெள்ளிதின் உணர முடியும்.

பிற்காலத்தில் பரிமேலழகர் செய்த உரைக்கு விளக்கமாக அனேகர் மேலும் உரையெழுதியிருக்கிறார்கள். அவையனைத்தையும் இங்கு தொகுத்துச் சொல்வது விரியுமென்றஞ்சிக் குறிப்பிடவில்லை. சில குறட்பாக்களுக்கு மட்டும் அவர் உரையினும் சிறப்பான உரை எப்படி அறிஞர் கூறுகின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டி நிறுத்திக் கொள்கிறோம்.

**தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது.** **(68)**

இதற்குப் பரிமேலழகர் உரையின் கருத்து, தம் மக்களின் அறிவுடைமையைத் தந்தையினும் அவையத்தார் உவப்பர் என்பது; இவ்வுரையில், தம்மின், தம் என்ற இரு சொற்களும் சுட்டுவதற்காகத் தந்தை என்ற ஒரு சொல் வருவித்து இவர் உரை கூறுகிறார். இதைவிட்டு, பாட்டு அமைந்துள்ளபடியே சொல் வருவிக்காமல் பொருள் செய்ய முடியும். மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம், தம் அறிவுடைமையைப் பார்க்கிலும் தம் மக்கள் அதிக அறிவுடையவராயிருப்பது இன்பம் தருவதாகும் என்பது. யாருக்கும் தம்மைவிடப் பிறர் அறிவுடையவராயிருத்தல், ஒரு பொறாமையைத் தரும்; ஆனால், அத்தகைய அதிக அறிவு தம் மக்களிடம் காணப்பட்டால் மட்டும் பொறாமை உண்டாகாமல் அதுவே இன்பம் செய்யும்; இது உயிர்களின் இயல்பு; விளக்க அவசியமில்லை.

**அறத்திற்கே அன்பு சார்பு என்ப: அறியார்;**
**மறத்திற்கும் அஃதே துணை.** **(76)**

"அன்பு துணையாவது அறத்திற்கே என்று சொல்லுவார் சிலர் அறியார்; ஒருவன் செய்த பகைமை பற்றி உள்ளத்து மறம் நிகழ்ந்துழி, அவனை நட்பாகக் கருதி அவன்மேல் அன்பு செய்ய அது நீங்குமாகலின், மறத்தை நீக்குதற்கும் துணையாம்" என்று பரிமேலழகர் எழுதுகிறார். அறம் நிலைபெறவும் மறம் நீங்கவும் என்று இரு எதிர்மறையான வினைகளை இங்கு வருவித்து உரைக்கிறார். அஃதன்றி, உலகியல்பையொட்டி, சிலர் அன்பு செய்யுமிடத்து அன்பு பூண்பதற்கும், சிலர் செய்யும் அன்பு காரணமாகவே அவரிடத்து மறம் விளைவதற்கும், அன்பே காரணமாயுள்ளது என்பது பொருந்தும் உரையாயிருக்கிறது. சிலர் தீங்கு விளைவிப்பது, பகைமையினாலல்ல, அன்பு காரணமாகவே என்ற பெருவாழ்க்கை உண்மையை இது சுட்டுகிறது. உதாரணங்களை விரிப்பிற் பெருகும்.

**நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்**
**வித்தகர்க் கல்லால் அரிது. (235)**

'ஆக்கமாகும் கேடும் ஆக்கமாகும் சாக்காடும், வித்தகர்க்கே உரியது; நிலையாதனவற்றால் நிலையின எய்துவார் வித்தகர்' என்பது பரிமேலழகர்; நத்தம் என்பதை இவர் ஆக்கம் என்று பொருள் செய்தார். போல் என்பதை உவம உருபாகவும், நத்தம் என்பதைச் சங்கு என்றும், இயல்பாகக் கொண்டு பொருள் செய்வது சிறப்பு. நத்தத்தின் சாக்காட்டில் கேடும் உளதாகிறது: அதாவது சங்கின் சாவால், அவ்வழிவில் நற்பயனாகிய முத்து விளைகிறது. அதுபோல, வித்தகருக்கே, தம் அழிவினாலும் நன்மை கைகூடவல்ல பெரும்பயன் விளையும் என்பது பொருள்.

**கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல்.**

"நட்பாய் ஏற்றுக்கொண்டாரைப் பின் வேறுபடாமல் பிணிக்கும் குணங்களை அவாவி, மற்றைப் பகையாய் ஏற்றுக் கொள்ளதாரும் பின் அப்பகைமை ஒழித்து நட்பினை விரும்பும் வண்ணம் சொல்லப்படுவதே அமைச்சர்க்குச் சொல்லாவது" என்றெழுதிப் பரிமேலழகர், 'நூல் கேட்டாதார் கேளாதார் என உரைப்பாரும் உளர்' என்றெழுதுகிறார். 'கற்றிலனாயினும் கேட்க' என்பது குறள் (414); இதன்படி, (உறுதி நூல், சாத்திரம்) கேட்டாரைப் பிணிக்கும் தன்மைபெற்று, உறுதிநூற் பயிற்சியில் லாதாரும் பின்னும் கேட்க வேண்டும் என்ற ஆசையை ஊட்டுவ தாய் இருப்பதே சொல் எனப்படுவது என்பதே பொருள்.*

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய். (69)**

'தான் பெற்ற பொழுதை மகிழ்ச்சியினும் மிக மகிழும், தன் மகனைக் கல்வி கேள்விகளால் நிறைந்தோன் என்று அறிவுடையோர் சொல்லக்கேட்ட தாய்; ... பெண்ணியல்பால் தானாக அறியாமையின் கேட்ட தாய் எனவும் கூறினார்' என்பது பரிமேலழகர் உரை. இது பிழை என்பது பல்லோரும் உரைப்பது; காரணம், இவர் கருத்துப்படி தாய்க்குக் கல்வி கேள்வியறிவு, பெண்மை காரணமாக, இல்லை என்பது. இது பெரிதும் மறுப்புக்கிடமான கூற்று. மகப்பேறு தாய்க்கு மிக்க மகிழ்ச்சி

* இந்நான்கு குறள் விளக்கங்களும் டி.கே. சிதம்பரநாத முதலியார வர்கள் சொல்லியவை.

தரும் நிகழ்ச்சி; அம்மகவைச் சான்றோன் என உலகத்தார் புகழக் கேட்கும்போது, அம்மகிழ்ச்சி பல மடங்கு பெரிதாகிறது என்பதே உரை.

பரிமேலழகர் திருக்குறள் முழுமையும் பலமுறை நுண்மையாகக் கற்று ஆழ்ந்து சிந்தித்து முன்பின் முரண்பாடின்றி மயக்கமில்லாதபடி ஒரு நோக்கில் வைத்து உரை எழுதுவது மிகவும் சிறப்பானது. பரிமேலழகரும் இவர் போன்ற ஆசிரியர்களும் அக்காலத்தில் சங்க இலக்கியங்களின் பெருமையை மீண்டும் நிலைநாட்ட முற்பட்டார்கள் என்று கருதவேண்டும். ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு நூல்களில் சொற்செட்டுக் குறைந்தது. பின்னர் தமிழில் வடமொழிக் கலப்பு மிகவும் அதிகமாயிற்று. இந்த நிலைமையை மாற்றிப் பண்டைய பெருமையையும் தமிழ்ச் சொல்லின் சுருக்கத்தையும் ஆழத்தையும் மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என்று 12 - 15 நூற்றாண்டுகளில் உரையாசிரியர் பலர் முயன்றார்கள். அவர்களுள் பரிமேலழகர் சிறப்பானவர். காலப் போக்கினால் இவருடைய எழுத்தில் வடமொழி ஆட்சி பயில்கின்றதே அன்றி, இவருடைய கருத்து பழந்தமிழ்ச் செல்வத்தை நிலைபெறச் செய்வதே ஆகும்.

அன்றியும், திருவள்ளுவர் நூல் செய்த காலத்தில் மக்கள் நிலைவேறு; சமுதாயநிலை, அரசியல், வாழ்க்கையின் குறிக்கோள், மொழியின் தன்மை, சமயவுணர்வு ஆகியன அன்று வேறாயிருந்தன. ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் உரை எழுதிய பரிமேலழகர் காலத்தில் அவை, முழுமையும் என்று சொல்லாவிட்டாலும், பெரிதும் மாறிவிட்டன. இவர் காலத்தின்பின், இன்று, முக்காலாயிரம் ஆண்டுகளுக்குப் பின், எல்லாமே தலைகீழாக மாறி விட்டன. காலம் என்ற ஒரு நியதி எல்லோரையும் ஆட்கொள்வது. திருக்குறளின் தன்மை பொதுவாகக் காலத்தைக் கடந்து பொருந்துவதாயினும், செய்த ஆசிரியர் கால தத்துவத்துக்கு உட்பட்டவர். குறளாசிரியர் தம் காலத்தில் அனைத்தையும் ஆராய்ந்து உணர்ந்து, ஏற்பன ஏற்றுத் தள்ளுவன தள்ளி நூல் செய்தார். அவ்வியல்புகளை நுனித்துணர்ந்தே பரிமேலழகர் உரை செய்திருக்கிறார். வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் தழுவியிருக்கின்ற இப்பெரு நூலுக்கு உரை செய்த பரிமேலழகர் எந்தப் பிழையும் செய்யவில்லை என்று யாரும் சொல்லவியலாது. காலக்கண் கொண்டே இவற்றைப் பார்க்க வேண்டும். இவர் உரையைப் பிழை என்று சொல்வது எளிதான காரியமன்று.

இன்றைய குறளறிவு பெற்றோர் யாவரும் பரிமேலழகரைப் பயின்றே அறிவு பெற்றார்கள். இவரைப் பழிப்பதே தமக்குப் புகழ் என்று எண்ணுவோரும் உளர். கால மாறுபாட்டால் இவர் கூறும் சில கருத்துக்கள் இக்காலத்துக்குப் பொருந்தாமற் போக லாம்; பிழையாகவும் தோன்றலாம். ஆனால் அக்காலத்துக்கு அவை பொருந்தின என்பதை மறுக்கவியலாது. 1330 பாக்கள் கொண்ட தமிழ் வேதம் என்று சொல்லத்தக்க பெருநூலுரை யுள் இவ்வாறு இன்றைய கருத்துலகுக்கு முரணாகத் தோன்று மிடங்கள் மிகமிகச் சிலவே என்பதை மறத்தல் கூடாது. இன் றுள்ள குறளறிவு முழுமையும் இவர் தந்த கொடை என்பது மிகையாகாது.

**பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ, பாரிலுள்ள**
**நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ, – நூலிற்**
**பரித்தஉரை யெல்லாம் பரிமே லழகன்**
**தெரித்தஉரை ஆமோ, தெளி.**

**தெய்வப் புலமைத் திருவள் ளுவர்குறளில்**
**உய்விக்கும் நூலெல்லாம் உள்ளதெனச் – செய்வித்தான்**
**தத்துவமெல் லாமுடம்பில் தந்துணர்வார் போலுலகம்**
**ஒத்துபரி மேலழகன் ஓர்ந்து.**

**திருத்தகுசீர் வள்ளுவன் தெய்வப் பயனின்**
**கருத்தமைதி தானே கருதி விரித்துரைத்தான்**
**பன்னுதமிழ்த் தேர் பரிமேலழ கனெனு**
**மன்னுமுயர் நாமன் வந்து.**

என்பன பழம் பாடல்கள்.

**பரிபாடல் உரை**

பரிமேலழகர் உரைசெய்த மற்றொரு நூல் பரிபாடல். இவர் இவ்வுரை செய்தாரென்பதை முந்நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருக்குருகூர் - திருமேனி இரத்தின கவிராயர் தாம் செய்த திருக்குறள் நுண்பொருள்மாலை என்ற நூலில், 'பரிபாட்டினுள் மழையிருஞ்சூல் என்பதனை, முன்பின்னாகத் தொக்க இரண்டாம் வேற்றுமைத் தொகை என்றார் இவ்வுரை யாசிரியர்' (47) என்று கூறுகிறார். இது குறளுரையில் வருவது; இதனால் திருக்குறள் உரைசெய்த பரிமேலழகர் பரிபாடலுக்கும்

உரை செய்தார் என்பது அவர் கருத்தாகிறது. அவர் பரிமேலழகருக்கு நானூறு ஆண்டுகளே பிற்பட்டவர் என்பது நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

பரிபாடலின் உரைச்சிறப்புப் பாயிரமானது சில செய்திகளை நமக்கு நன்குணர்த்துகிறது.

கண்ணுதற் கடவுள் அண்ணலங் குறுமுனி
முனைவேல் முருகன் எனஇவர் முதலிய
திருந்துமொழிப் புலவர் அருந்தமிழ் ஆய்ந்த
சங்க மென்னும் துங்கமலி கடலுள்
அரிதின் எழுந்த பரிபாட் டமுதம்
அரசுநிலை திரீஇய அளப்பருங் காலம்
கோதில் சொல்மகள் நோதகக் கிடத்தலில்,
பாடிய சான்றவர் பீடு நன்குணர
மிகைபடு பொருளை நகைபடு புன்சொலில்
தந்திடை மடுத்த கந்திதன் பிழைப்பும்,
எழுதினர் பிழைப்பும் எழுத்துரு வொக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்,
ஒருங்குடன் கிடந்த ஒவ்வாப் பாடம்
திருந்திய காட்சியோர் செவிமுதல் வெதுப்பலில்,
சிற்றறி வினர்க்கும் தெற்றெனத் தோன்றிய
மதியின் தகைப்பு விதியுளி யகற்றி,
எல்லையில் சிறப்பின் தொல்லோர் பாடிய
அணிதிகழ் பாடத்துத் துணிதரு பொருளைச்
சுருங்கிய உரையின் விளங்கக் காட்டினன்:
நீள்நிலங் கடந்தோன் தாள்தொழு மரபிற்
பரிமே லழகன் உரிமையின் உணர்ந்தே.

இதனால், இப்பரிபாடல் பாராட்டுவோரற்றுக் கிடந்தது, கந்தியாரால் இடைச் செருகல்களும் பிழைகளும் சேர்ந்தன, பாடகரால் பிழைகள் சேர்ந்தன, இவற்றையெல்லாம் ஆய்ந்து நீக்கிச் சிற்றறிவுடையோர்க்கும் தெளிவாக விளங்கும்படி உண்மையான பொருளைச் சுருங்கிய உரையில் பரிமேலழகர் விளங்கக் காட்டினார் என்றறிகிறோம். பரிபாடல் எழுபது பாடலாயினும், கிடைக்கின்ற பகுதி இருபத்திரண்டு பாடல்களும் உரையுமே. இவை ஐயரவர்களால் அரிதின் முயன்று அச்சிடப்பட்டுள்ளன. ஏனையவை இறந்துபோயின போலும்.

இப்பாடல்களில் முருகக் கடவுளையும் சிவபிரானையும் போற்று மிடங்களில் இவர் அவரவர் பெருமையை விளக்கிச் சொல்லும் முறை, சமயத்துறையில் இவர்கொண்ட நடுவு நிலைமையை விளக்கிக் காட்டுகின்றது. சில பாடல்களின் இறுதியில் இவர் வினைமுடிவு காட்டியிருப்பது மிக்க பயனுடையது.

பரிபாடல் பதினொராம் பாடல் உரையால் இவருடைய வானநூல் பயிற்சி நன்கு உணரப்படும். குறளுரையில் காணப் படும் சிறப்புக்கள் யாவும் இங்கும் காணமுடிகிறது. பாடினோ ருடைய ஆழ்ந்த கருத்துக்களை விளக்கி ஆங்காங்கு இவர் இந்நூலுள் எழுதியிருக்கும் உரைநயங்கள் மிகப்பல. சாங்கியர் நூலைக் குறளுரையில் குறிப்பிட்டார். இங்கும் குறிப்பிடுகின் றார் (3 - 77); பாழ் - குருடன்; சாங்கியர் பிறிதொன்று பிறத்தற்கு இடன் ஆகாது என்று ஆகலான் அவர் மதம் பற்றிக் குருடனைப் பாழ் என்றார், ஈண்டுத் தத்துவம் கூறுகின்றமையின். அறிதுயில் - யோக உறக்கம். அம்பா ஆடல் என்று நன்னீராடற்கு பெயர் ஆயிற்று, தாயோடு ஆடப்படுதலின் (11-81). மையாடல் ஆடல் மழபுலவர் - மையோலை பிடித்த இளைய புலவனது விளை யாட்டு (11-88). மார்கழி மாதம் குளம் எனப்பட்டதற்கு இவர் காரணம் கூறுவது பொருள் பொதிந்த செய்தி: திருவாதிரை நிறைமதி நாள் ஆம்கால், ஆதித்தன் பூத்தடத்தின் கண் (புனர் பூசம்) நிற்குமாதலின், அதனையுடைய மார்கழி மாதம் குளம் எனப்பட்டது (11. 76 - 77).

பரிபாடல் உரையை நன்கு ஆராயும்போது, அதனுள் குறளுரையின் தன்மைகள் பலவும் விளக்கமாகக் காணப்படுவது தெரியும். இவ்வுரையானது பாடல்களின் பொருளுக்கேற்பச் சமயக் கருத்துக்கள் பல கொண்டுள்ளது. அடுத்த அடி உரையில் திருவாதிரைக்குத் தெய்வமாகிய இறைவனுக்கு ஆகமங்களை யுடைய பூசகர் விழாவைத் தொடங்குகிறார்கள் என்று இவர் குறிப்பிடுகிறார். அப்படியே விரிந்தகன்ற கேள்விகள் என்னு மிடத்து (3 - 48) விரிந்து அகன்ற ஆகமங்கள் என்று உரை எழுது கிறார். குறளுரையிலும் பல இடங்களில் சைவாகமங்களைக் குறிப்பிடுகிறார். சைவாகமங்கள் பேரளவாகச் சிவாலயங்களில் ஆட்சிக்கு வந்தது சோழப் பேரரசின் சிறப்புக்களில் ஒன்று. மூன்றாம் பாடலில் 'ஈசர்க்கு வடிவாகிய அட்டமூர்த்தங்கள்' கூறுகின்றார். சைவ மரபில் எட்டாவது மூர்த்தம் புருடன் என்று கூறியிருக்கும்; பரிபாடல் அறன் என்றுகூற, இவர் வேள்வி

முதல்வன், வேட்கின்ற வடிவு தருமமாதலின் அஃது அறனெனப் பட்டது' என்கிறார். உபநிடதத்தைப் பல இடங்களில் குறிப்பிடு கின்றார். 'நொசிப்பு சமாதி; ஒன்று - மனத்தினை ஒன்றாகி நுண் ணியதாகக் காண்க. ஆதலின் சமாதி நொசிப்பு ஆகப்பட்டது.'

பொழிப்புரை பதவுரை கருத்துரை ஆகிய தன்மைகள் ஆங்காங்கு அமைந்துள்ளன. அழகான பதசாரத்துடன் கூடியது. புலப்படாத சொற்களுக்குப் பழைய வடிவங்களைப் புலப்படுத்து வது. 'சாம வேதத்தை உபசார வழக்கால் ஏஎ என்னும் இசை யுடையதனை ஏஎ என்றார்' என்பர்.

இந்நூலும் இதற்குப் பரிமேலழகர் எழுதிய உரையும், இருபத்திரண்டு பாடல்களுக்கு மட்டும் கிடைத்து, எழுபது பாடல்களுக்கும் கிடைக்காமலிருப்பது நம்முடைய தவக்குறை என்றே கருத வேண்டியிருக்கிறது.

### திருமுருகாற்றுப்படை உரை

பரிமேலழகர் உரையென்று ஓர் உரை பலரால் அச்சிடப் பட்டுள்ளது. காசி மடத்தார் வெளியிட்ட திருமுருகாற்றுப் படை உரைக்கொத்தில் இது காணப்படும். இவ்வுரைகளுள் நச்சினார்க்கினியர் உரையே சிறப்பானது. பரிமேலழகர் வைணவர் ஆயினும் சமய நடுவுநிலைமை படைத்தவர்; எனினும், இவர் முருகனைப் புகழ்கின்ற திருமுருகாற்றுப் படைக்கு உரை எழுதி னார் என்பது சந்தேகம். திருக்குறள் பொதுநூல். பரிபாடல் திருமாலைப் புகழ்வது; கூடவே வையை மதுரை முருகனையும் புகழ்கின்றது. முருகனையே புகழ்கின்ற முருகாற்றுப் படைக்கு இவர் உரை செய்யவில்லை என்ற கருத்தும் உண்டு. எனினும், இவ்வுரையின் சிறப்புப் பாயிரம் இவர் பெயரைக் கூறுகின்றது:

> அரிமே லழகுறூஉம் அன்பமை நெஞ்சப்
> பரிமே லழகன் பகர்ந்தான் — விரிவுரைமு
> தக்கீரிஞ் ஞான்று தனிமுருகாற் றுப்படையாம்
> நக்கீரன் நல்ல கவிக்கு.

உபநிடதத்தைப் பல இடங்களில் குறிப்பிடுகின்றார்: இவ் வுரையுள் இவர் கல்லாடத்தைக் குறிப்பிடுகின்றார். ஆவினன் குடியைச் சித்தன் வாழ்வு என்று கூறுகின்றார். வலன் ஏர்பு திரிதரு என்ற இடத்து, இம்மகமேரு பூமிக்கு நடுவாதலானும், இதன் உச்சியில் பரமேசுவரன் எழுந்தருளியிருத்தலானும் என்று சிவ

பெருமானுக்குப் பெருமை தோன்ற எழுதுகிறார். சுப்பிரமணியன் என்ற ஒரு சொல் இங்குவருகிறது. நால் வேறு இயற்கை சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்பார். செய்வினை முற்றிய முடி என்ற விடத்துப் பல்வேறு விளக்கம் கூறுகிறார். எனினும், இவ்வுரை இவர் செய்ததா என்பது இன்னும் ஐயப்பாட்டுக் கிடமாகவே உள்ளது. பரிமேலழகருக்குரிய சிறப்புக்கள் இதனுள் காணுமாறு இல்லை.

**காலம்**

பரிமேலழகர் காலத்தைத் திட்டமாய்க் கூறுதற்குச் சில ஆதாரங்கள் உள்ளன. உமாபதி சிவாசாரியர் செய்ததாகப் பின் வரும் பாடல் வழங்குகிறது:

> **வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே**
> **தெள்ளுபரி மேலழகர் செய்தஉரை – ஒள்ளியசீர்த்**
> **தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்**
> **தண்டமிழின் மேலாந் தரம்.**

உமாபதியின் காலம் கி.பி. 1313ஐ ஒட்டி; ஆகவே பரி மேலழகர் இவருக்கு முற்பட்டவர் என்பது பலர் கருத்து. ஆனால் இப்பாடல் உமாபதியார் பாடினார் என்பதற்கு ஆதாரம் இல்லை. இப்பாடலில் சித்தியார் முதலானவற்றைக் குறிப்பிட் டுள்ளமையால் இவ்வாறு பலரும் கருதினர் போலும். திருவாசகம் திருத்தொண்டர் புராணம் சித்தியார் ஆகியவற்றை உமாபதி கூறுவாராயினும், சமயத் துறையிலேயே நின்ற அவர் தொல் காப்பியத்தைக் குறிப்பிட்டிருத்தல் கூடியதன்று; ஆதலால் இப்பாடல் அவர் செய்ததாகாது. இதைப் பிற்காலத்துப் பாட லென்றே கொள்ள வேண்டும். இதன் துணைகொண்டு பரிமே லழகர் காலத்தை வரையறை செய்தல் பொருந்தாது.

“வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர் தோள்” (முருகு, அடி 106) என்புழி ‘வசிந்து’ என்பதற்குப் பகைவர் மார்பைப் பிளந்தென்று பொருள்கூறி, படைக்கலங்களால் வடுப்பட் டென்று பொருளுரைத்தல் இறைவனாதலிற் பொருந்தாதென்று விசேடவுரையுமெழுதிய ஆசிரியர் நச்சினார்க்கினியரின் மறுப்பு, வாண்மிகு வயமொய்ம்பின் (பரிபாடல் 9:57) என்பதற்கு வாட்டழும்பு நெருங்கிய வெற்றி மொய்ம்பென்று இவர் பொருள் எழுதியதைச் சுட்டியதாயின், இவர் இந்நூலுக்கு உரையியற்றிய காலம், அவர் பத்துப்பாட்டிற்கு உரையியற்றிய காலத்திற்கு

முற்பட்டதென்று கொள்ளலாம்" என்று ஐயரவர்கள் பரிபாடற் பதிப்பின் உரையாசிரியர் வரலாற்றில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இக்கருத்துக் கொள்ளக்கூடியதே. நச்சினார்க்கினியர் காலம் 14ஆம் நூற்றாண்டு என்பது தெரிதலின், பரிமேலழகர் காலம் நிச்சயமாக இதற்கு முற்பட்டதாகிறது.

மற்றொரு குறிப்பு. காமத்துப் பாலுக்கு அவதாரிகை கூறுமிடத்து, "ஈண்டு இன்பம் என்பது, ஒருகாலத்து ஒரு பொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காம இன்பத்தினை. இச்சிறப்புப்பற்றி வடநூலில் போசராசனும் சுவை பல என்று கூறுவார் கூறுக, யாம் கூறுவது இன்பச் சுவை ஒன்றனையுமே என இதனையே மிகுத்துக் கூறினான்" என்று இவர் எழுதுகிறார். இப்போசராசன் வடநாட்டில் தாரா நகரைத் தலைநகராகக் கொண்டு 11ஆம் நூற்றாண்டில் ஆண்ட பிரசித்திபெற்ற மன்னன். பரிமேலழகர் குறிப்பிடும் கருத்து போசன் செய்த (அச்சாகாத) சிருங்காரப் பிரகாசம் என்ற நூலின் முதற்பிரகாசத்து ஆறாம் சுலோகத்தில் உள்ளது" என்று மு. ராகவையங்கார் எழுதியிருக்கிறார். இதனால் பரிமேலழகர் 11ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் என்பதும் தெளிவாகிறது.

மற்றொரு குறிப்பும் கூறலாம். இவர், காலத்தால் பவணந்தி முனிவருக்குப் பிற்பட்டவர் என்று ஒரு குறிப்பினால் கருத வேண்டும். ஒரு பொருட் பன்மொழி என்பது தமிழிலக்கண நூலாருடைய குறியீட்டுத் தொடர். மீமிசை என்பது இதற்கு உதாரணம். இக்குறியீடு தொல்காப்பியத்தில் இல்லை. இப்பேரிலக்கணம், 'ஒரு பொருளிரு சொற் பிரிவில வரையார்' (சொல். 460) என்று கூறும். நச்சினார்க்கினியர் முதலியோர்கூட 'மீமிசை' போன்றதனை 'ஒரு பொருளிரு சொற்பிரிவில்லாதது' என நீண்டதோர் குறிப்பினால் வழங்கினார். முதன்முதலில் 'ஒருபொருட் பன்மொழி' என்ற சுருங்கிய அழகிய தொடரை வழங்கியவர் நன்னூலாரேயாவர். முற்பட்ட ஏனை இலக்கண நூல்களுளொன்றிலேனும் இக்குறியீடு காணப்படவில்லை. பரிமேலழகர் இதனை இரண்டு இடங்களில் (571, 863 உரை) எடுத்தாண்டுள்ளார். ஆதலால் இவர் நன்னூலாருக்கும் பிற்பட்டவராவர்.* அந்நூலாசிரியர் காலம் கி.பி. 1212 என்று அறிகிறோம். ஆகவே, பரிமேலழகர் இதற்குப் பிற்பட்டவர் என்பது தெளிவு.

* வையாபுரிப் பிள்ளையவர்கள், செந்தமிழ் தொகுதி 41.

இனி, சாசன வாயிலாகப் பரிமேலழகர் காலம் அறியத் திட்டமான ஒரு குறிப்பு கிடைக்கிறது. காஞ்சிபுரம் வரதராசப் பெருமாளாகிய அருளாளப் பெருமாள் கோயிலில் தெலுங்கச் சோழனாகிய விசயகண்ட கோபாலனது 22ஆம் ஆண்டில் (சகம் 1193 - கி.பி. 1271 எழுந்த சாசனமொன்று இவரைக் குறிப் பிடுகிறது. மற்றொரு கல்வெட்டானது விசய கண்ட கோபாலனது 16ஆம் ஆட்சியாண்டு சகம் 1187 என்று குறிப்பிடுகிறது. இதன்படி ஆட்சியாண்டு 21ஆவது சக ஆண்டு 1193; இதற்கு நேரானது கி.பி. 1271. ஆமூர் நீலகங்கரையன் என்ற சிற்றரசனொருவன் வண்துவரைப் பெருமாளான பரிமேலழகிய பெருமாள் தாத ருடைய 500 குழி நந்தவனத்தை விலைக்குப்பெற்று அதை அக் கோயிற் பெருமாளுக்குத் திருமாலைப் புறமாக அளித்தான் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. இப்பரிமேலழகிய பெருமாள் தாதரே குறள் உரைசெய்த பரிமேலழகர் என்று அறிஞர் கருது கிறார்கள். வண்துவரைப் பெருமாள் என்பது அவருடைய இயற்பெயர் என்றும், பரிமேலழகிய தாதர் என்பது தாஸ்யநாமம் என்றும், மு. ராகவையங்கர் கூறுவார். இதுகொண்டே, இவர் அர்ச்சராயிருந்தது அருளாளப்பெருமாள் கோயிலே என்றும் எழுதுவார்.

காலம் இடம் சமயம் முதலான பல ஒற்றுமைகளால் இத்தாதரே நம் பரிமேலழகர் என்று முடிவு செய்ய முடிகிறது. எனவே, காலம் கி.பி. 1271ஐ ஒட்டியது என்பது இதனால் திட்டமாய் விளங்குகிறது. 1276இல் வாழ்ந்த சேனாவரையரும் இவரும் சமகாலத்தவர் ஆகிறார்கள்.

இளம்பூரணரைத் தழுவாது சேனாவரையரை நன்கு பயின்றவர், ஆண்டில் அவரிலும் இளையராயிருத்தல் கூடும் என்பர் மு. ராகவையங்கார். பரிமேலழகர் சேனாவரையர் சொல் லாது விட்ட உதாரணத்தைக் கொண்டெழுதிச் செல்லுகின்றார். “வானோக்கி வாழுங் குடி (குறள் 542) என்பதற்குச் சேனாவரை யரைத் தழுவியும், ஆக்கமும் கேடும் என்ற குறளுரையில் (642) செய்யுளாதலிற் சுட்டும் பெயர் முன்வந்தது என்று காட்டிச் செய்யுட்கண் முன்னிற்றல் வந்தவழிக் கண்டுகொள்க என்று சேனாவரையர் காட்டாது விட்ட உதாரணத்தை விளக்கியும், சொல்லெச்சத்துக்கு உரையாசிரியர் கொள்கையைச் சொல் லாது, சேனாவரையர் கருத்தைத் தழுவியும் (சொல், 441 உரை - குறள் 10, 37 உரை) செல்லுதல் காண்க” என்பது மு. ராகவையங்கார் குறிப்பு (சாசனத் தமிழ்க்கவி சரிதம். பக்கம் 118).

மேலே கண்ட முடிவுகளுக்கு ஆதரவான ஒரு கருத்தொற்றுமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. பெரியபுராணத்தில் ஒரு பாடல் உயிர்களுக்கு வரும் இடையூறுகள் ஐந்து வகையால் வரும், மன்னவனாவான் இவற்றை நீக்கிக் காக்கவேண்டும் என்று கூறும்:

மா நிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங் காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால் தன்பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த்து அறங் காப்பான் அல்லனோ.

ஐவகைப் பகையாவது, தான், தன்வினை செய்வார், பகைவர், கள்வர், உயிர்கள் (சுற்றத்தார்) என்னும் ஐவர். பரிமேலழகர் 442ஆம் குறள் உரையில் மக்களால் வரும் துன்பங்களாவன: பகைவர், கள்வர், சுற்றத்தார், வினை செய்வார் என்னும் இவர்களான் வருவன என்று எழுதுகிறார். பெரியபுராணம் கூறுகின்ற மன்னவன் என்பது வினைசெய்வார் (அரசாட்சியும் வினையுள் கொள்ளப்படும்) என்பதனுள் அடங்குவதாக நாம் கருதலாம். இங்ஙனம் கருதும்போது, பரிமேலழகர் கூறுகின்ற நால்வரும், பெரிய புராணம் கூறுகின்ற ஐந்து வகையை மனத்துட் கொண்டே கூறப் பெற்றனர் என்பது பொருந்தும். அங்ஙனமாயின், பெரிய புராணம் பாடிய சேக்கிழார் காலம் இரண்டாம் குலோத்துங்கன் காலம், அதாவது (கி.பி. 1133 - 1150), எனவே, பன்னிரண்டாம் நூற்றாண்டு ஆகிறது. பரிமேலழகர் இக்கருத்தைச் சொல்லியிருப்பதால், இவர் காலம் சேக்கிழாருக்குப் பிற்பட்டதாகிய பதின்மூன்றாம் நூற்றாண்டு என்று முன்கொண்ட முடிபை இவ்வொற்றுமையும் ஆதரிக்கிறது.

பழங்குடி என்ற தொடரை விளக்குமிடத்து (955), தொன்று தொட்டு வரும் குடி என்று கூறி, சேர சோழ பாண்டியர் என்றாற் போலப் படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வருதல் என்று எழுதுகிறார். இதனால், இவர் இப்பேரரசர் காலத்தைக் கண்டவர் அக்காலத்திலும் வாழ்ந்தவர் எனக் கருதலாம். இவர் காலம் என நாம் குறிப்பிட்டது, கி.பி. 1271ஐ ஒட்டிய காலம். இவர் பாண்டிநாட்டில் வாழ்ந்திருக்கக் கூடும் என்றும் குறிப்பிட்டோம். 1251இல் பட்டம் பெற்ற முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன், பிற்காலப் பாண்டியருள் பெருவீரனாக விளங்

கியவன், சோழநாட்டில் அரசுபுரிந்த மூன்றாம் இராசேந்திரனை 1257இல் வென்றவன். ஆதலால் இத்தகைய சிறப்பான தமிழ் மன்னராட்சிக் காலத்தில் வாழ்ந்தமையால்தான் பரிமேலழகர் முற்கூறியவாறு. படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டுவரும் தமிழ் முடிமன்னரைக் குறிப்பிட்டார் என்று கருதலாம்.

பலர் விளக்க உரை எழுதினார்கள் என்று முன்னமே குறிப்பிட்டோம். பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமேனி இரத்தின கவிராயர் என்பவர் பரிமேலழகர் உரையில் காணப்படும் சிறப்புக்களை எல்லாம் தொகுத்து விளக்கங்களும் எழுதி நுண்பொருள்மாலை என்ற ஒரு நூல் எழுதியிருந்தார். இது பகுதி பகுதியாக மதுரை - செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளி வந்தது. சென்ற நூற்றாண்டில் சரவணப்பெருமாள் ஐயர் தொடங்கி இன்று வரை பலர் பரிமேலழகர் உரைக்கு விளக்கங் களும் குறிப்புக்களும் எழுதிச் சேர்த்து வெளியிட்டிருக்கிறார்கள். பரிமேலழகர் உரை மட்டும் எண்ணில்லாத பதிப்புக்கள் வெளி யாகி உள்ளன. இதனோடொப்ப மிக அதிகமாக அச்சிட்டு வெளி யான நூல் வேறில்லை. சமீபகாலத்தில் மலிவுப் பதிப்புக்கள் பல பதினாயிரக் கணக்கான பிரதிகள் அச்சிட்டு வினியோகமாகி யிருக்கின்றன. அன்றியும், தனிக்குறட் சொல்லடைவுகள் சில வும் வெளியாகியுள்ளன. இவ்வளவு இருப்பினும், ஒரு சிறந்த ஆராய்ச்சிப் பதிப்பு - பலவகையான பொருள் அகராதிகள் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் ஒப்புமைப் பகுதிகள் போன்றவற்றுடன், ஐயரவர்கள் பதிப்பைப் போல் - இன்றுவரை வெளிவரவில்லை. இது ஆராய்ச்சியாளருக்குப் பெரும் குறையாகவே உள்ளது.

## கோவை உரைசெய்த பேராசிரியர்

### ஆசிரியர்

பேராசிரியர் என்ற பெயரோடு புலவர் பலர் வாழ்ந்தனர் என்றும், அவர்களுள் ஒருவர் தொல்காப்பியம் உரை செய்தவர் என்றும், மற்றொருவர் இவரின் வேறாய்த் திருக்கோவையார் உரை செய்தவர் என்றும், தொல்காப்பிய உரைகாரரான பேராசிரியரைக் குறித்து ஐந்தாம் அத்தியாயத்தில் விளக்கியுரைத் திருக்கிறோம். இவ்விருவரும் வெவ்வேறானவர் என்பதற்கு முக்கியமான இரு கருத்துக்கள் உள்ளன. ஒன்று திருக்கோவை யாரின் பாடலை அவர் தம்உரையில் ஓரிடத்தும் எடுத்துக்

காட்டவில்லை என்பது. அவரே இவ்வுரை செய்திருந்தாராயின் எடுத்துக்காட்டாதிரார். மற்றது அவர் நூலாசிரியரைக் குறிப் பிடும்போது பண்டைய மரபையொட்டி 'ஆசிரியன் கூறினான்' என்றே படர்க்கை ஒருமையில் எழுத, இவர் 'ஆசிரியர் சொன் னார்' என்று எப்போதும் பன்மை கொடுத்தே எழுதுவது. அன்றியும் பொதுவாக, இரு உரைகளும் வெவ்வேறு ஆசிரியர் என்று உரைகளின் நடையாலும் பொது இயல்பாலும் எளிதில் காணலாம். பேராசிரியர் என்ற பெயர், புலமையால் அமைந்தது ஆகும்; இயற்பெயர் தெரியவில்லை.

கோவை - பேராசிரியருரை, சென்ற நூற்றாண்டில், ஆறுமுக நாவலரால் பொன்னுசாமித் தேவர் விருப்பத்தின்படி பரி சோதித்து அச்சிடப்பெற்றது. அக்காலம் இலக்கிய அறிவு விளக் கம் பெறாத காலம். ஆதலால் பிரசித்தமாய்த் தெரிந்த உரை யாசிரியராகிய நச்சினார்க்கினியரே இவ்வுரையும் செய்தார் என்று அக்காலத்தார் நினைத்ததில் வியப்பில்லை; நாவலர் பதிப்புக்குச் சிறப்புப்பாயிரம் கொடுத்த திருவாவடுதுறையாதீனம் தாண்ட வராய சுவாமி என்பவர் கூறுவது காண்க:

– இந்நூலிற்கு
உச்சிமேற் புலவர்கொள் உயர்நூற்கு உரைகள்செய்
நச்சினார்க் கினியர் நயந்துரை செயஎணி
மற்றைய பொருளெலாம் மனக்குமெட் டாமையைத்
தெற்றென உணர்ந்து சீர்சால் அகப்பொருள்
நூலினால் நுதலிய நுண்பொருட் கிணங்க
வாலிதின் தேர்ந்து வகுத்தபே ருரை –

கோவையுரை, நாவலர் நான்காம் பதிப்பில் (1922) பின் வரும் குறிப்புள்ளது: "இவ்வுரையைப் பிற்காலத்தறிஞர்கள் பேராசிரியரதென்றனர்; முற்காலத்தறிஞர் பலர் நச்சினார்க் கினியரதென்றனர்; தஞ்சைவாணன் கோவையுரைகாரர் சேனாவரையரது என்றனர்." 18ஆம் நூற்றாண்டில் பிரயோக விவேகமும் அதனுரையும் எழுதிய சுப்பிரமணிய தீக்ஷிதர், பேராசிரியர் என்றே குறிப்பிடுகிறார்: "இனி உள்ளப்படுவன எனவருந் திருக்கோவையாருள் (177), சொற்சோதனை காட்டிய 'வஞ்சரை யஞ்சப்படும்' என்பதற்கு அஞ்சத்தகும் என்பர் பேரா சிரியர்". பேராசிரியர் என்பதே சரி, பிற கருத்துக்கள் பிழை.

இவர் 'திருவளர் தாமரை' என்ற முதற் பாடலுக்கு உரை எழுதத் தொடங்கும்போது, உரைப்பாயிரமாக 46 அடி கொண்ட

நீண்ட ஆசிரியப்பா வொன்று எழுதியிருக்கிறார். இதனுள் சில அடிகள் இங்கு கருதத்தக்கன:

அறிவோன் அறிவில தெனவிரண் டாகும்
நெறியினில் தொகைபெற்று நிரல்பட விரிந்த
மண்புனல் அனல்வளி மாவிசும் பெனாஅ
வெண்மதி செஞ்சுடர் வேட்போன் எனாஅ
எண்வகை நிலைஇய எவ்வகைப் பொருளும்
தோற்றம் நிலைஇறுதி கட்டுவீ டென்னும்
மாற்றருஞ் செயல்வழி மாறாது செயப்பட்டு
வெருவா வுள்ளத்து வேட்போன் தான்செய்
இருவினைப் பயன்துய்த்து மும்மலன் ஒரீஇப்
பொருவறு சிவகதி பொற்பினிற் பொருந்தவும்;
………………… ………………… ………………… …………………
பண்ணமை தேமொழிப் பார்ப்பதி காண
ஐயா றதன்மிசை எட்டுத் தலையிட்ட
மையில் வான்கலை மெய்யுடன் பொருந்தித்
தில்லை மூதூர்ப் பொதுவினில் தோன்றி
எல்லையில் ஆனந்த நடம்புரி கின்ற
பரம காரணன் திருவரு ளதனால்
திருவாத வூர்மகிழ் செழுமறை முனிவர்
ஐம்பொறி கையிகந் தறிவா யறியாச்
செம்புலச் செல்வ ராயினர், ஆதலின்
அறிவனூற் பொருளும் உலகநூல் வழக்குமென
இருபொருளும் நூதலி எடுத்துக் கொண்டனர்.

கோவை நுதலிய பொருளைக் குறிப்பிடும் இவ்வடிகள் கூறும் கருத்து இங்கு நோக்குதல் தகும். 'பொருள்கள் அறிவோன் அறிவிலது என இரண்டாகும். விரிக்கின் இவை மண் புனல் அனல் வளி விசும்பு மதி சுடர் வேட்போன் என்னும் அட்ட மூர்த்தங்களாகும். இவற்றின் செயல்வழி, தோற்றம் நிலை இறுதி கட்டு வீடு என்னும் ஐந்து. வேட்போன், இவ்வழி வினைப்பயன் துய்த்து, மும்மலம் ஒருவிச் சிவகதி பொருந்துபவன். இதன் பொருட்டு, பரம காரணன் பார்ப்பதி காண, முப்பத்தெட்டுக் கலையுடன் பொருந்தி, தில்லைப் பொதுவில் நடம்புரிகின்றான். இதைத் திருவாதவூர் முனிவர் உணர்ந்து அறிவன் நூற்பொருளும் உலகியல் வழக்கும் என இருபொருளும் இங்கு கூறத் தொடங்கினர். இவற்றுள் ஆகமம் நுதலிய ஞானயோக நுண்பொருள்

உணர்த்துதற்கரியது. ஆகவே அவர் உலகியல் வழியில் சொல்லிய பொருளே இத்திருக்கோவை என்னும் எல்லையற்ற பாற்கடல் அமுதம். இதில் எம்புலன்களால் சிறிது உணர்ந்த வகை உரைக்கின்றோம்' என்று பேராசிரியர் உரைகூறப் புகுகின்றார். இவ்வாறு இவர் கூறுவது சிந்திக்கத் தகுந்தது. இக்கூற்றைப் பார்க்கும்போது, இவர் மெய்கண்டார் - அருணந்தி காலத்துக்குப் பின்னே இருந்து, ஒருகால் அவர்கள் செய்த சாத்திரங்களையும் கேட்டுணர்ந்து, அவ்வறிவால் இவ்விதம் கூறினாரோ என்று கருதத் தோன்றுகிறது.

பேராசிரியர் சைவர் என்று சொல்வது மிகை. சைவத் திருமுறைகளுள் எட்டாவதில் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பெற்ற இந்த நூலுக்கு உரை எழுதியது இவர் சைவர் என்பதை நன்கு புலப்படுத்தும். மேலும், பன்னிரு திருமுறைகளுள் இன்று பண்டைய உரை எழுதப்பெற்ற நூல் இதுவொன்றே; வேறெந்தத் திருமுறைக்கும் உரை இல்லை. இவரது சைவசமய அறிவும் பண்பும் உரையில் பல இடங்களில் நன்கு விளங்குகின்றன. முற்காட்டிய நீண்ட அகவற்பாடல், '38 கலைபொருந்த நடம் புரிகின்ற பரம காரணன்' என்று குறிப்பிடுவது காண்க. பல நிலங்களினும் சென்று துய்க்கும் இன்பமெல்லாம் தில்லையின் வாழ்வார் ஆண்டிருந்தே துய்ப்பர் (1). பொய்யுடையார்க்கு; அரன் துன்பத்தைச் செய்து சேயனாமாறு போல (48). தன்னொரு பால் அவர் அத்தனாம் மகனாம் தில்லையான் - சிவதத்துவத்தினின்றும் சக்தி தத்துவம் தோன்றலின் அவர் அத்தனாம் என்றும், சக்தி தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றலின் மகனாம் என்றும் கூறினார் (112). நீறணிந்த கோலம் நெஞ்சம் பிணிக்கும் **எழிலுடைமையான், அக்கோலம்** தொழுதெழுவார் உள்ளத்து நீங்காது நிற்றலான் ஆண்டுள்ள வினை நீறாமென்னும் கருத்தான், 'வினைவளம் நீறெழ நீறணியம்பலவன்' என்றார்; புதல்வனது பிணிக்குத் தாய் மருந்துண்டாற் போலத் தொழுதெழுவார் வினைக்குத் தான் நீறணிந்தான் என்பாருமுளர் (118).

### காலம்

முப்பத்தெட்டுக் கலை என்பது வடமொழி ஆகமங்களில் சொல்லப்பட்டிருந்தாலும் தமிழில் இதைக்கூறும் நூல்கள் பேராசிரியர் செய்த இப்பாடலும், 14ஆம் நூற்றாண்டின் இடையில் தத்துவப்பிரகாசர் செய்த தத்துவப்பிரகாசமும், 15ஆம் நூற்றாண்டில் சட்டைநாத வள்ளல் செய்த சதாசிவ

ரூபமுமேயாகும். இவர் அவ்விருவருக்கும் காலத்தால் முற்பட்ட வரென்று கருதுதல் பொருந்தும். எனவே, இப்பேராசிரியருடைய காலம் மெய்கண்டார் காலமாகிய 13ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதிக்கும் தத்துவப்பிரகாசர் காலமாகிய 14ஆம் நூற் றாண்டின் இடைப்பகுதிக்கும் இடைப்பட்ட காலமெனக் கொள்ளலாம். சுமார் 1275 - 80 எனல் பொருந்தும்.

நச்சினார்க்கினியர், ஐந்திணைப் பெயர்கள் ஒழுக்கத்தால் வந்தன என்றுகூற, இவர் முதற்பாட்டினுரையில், திணைகள் பெயர்பெற்றது பூவால் என்று விளக்குகிறார். அன்றியும் அதே இடத்திலும் பின்னரும் (191), மற்றைய நிலம்போலப் பாலைக்கு நிலமின்மையால் நானிலம் என்று இவர் கூற, நச்சினார்க்கினி யர் தம்முரையுள் பல இடத்தும் பாலைக்கு நிலமுண்டென்றே கூறுவார். எனவே, இவர் நச்சினார்க்கினியருக்கு முற்பட்ட வரென்றே கருதவேண்டும். அவர் காலம் உத்தேசம் 1375 ஆக இருக்க, இவர்காலம் 1275 என்று கருதுதல் பொருந்துவதே.

### கோவையார் உரை

இவர் தமக்கு முன்னிருந்த மற்றோர் உரையையும் அது கொண்ட பாடங்களையும் மிகப் பலவான இடங்களில் எடுத்துக் காட்டுகிறார். அவ்வுரை, காசி மடத்துப் பதிப்பில் சேர்த்து அச்சிடப்பட்டுள்ளது (1960). இவர் குறிப்பிடும் இடங்கள் பெரும்பாலன அதனுள் காணப்படுகின்றன. எனவே, இவருக்கு முற்பட்டது அவ்வுரை என்று கருதவேண்டும். அவ்வுரையை இவர் நன்கு பயின்று அதையொட்டியே எழுதுகிறார் என்பதும் புலப்படுகின்றது. 'காரணி கற்பகம்' என்ற 400ஆம் பாடலின் இருஉரைகளையும் ஒப்பு நோக்குக. பின்னும் பல.

இவர் குறிப்பிடும் மேற்கோள் நூல்கள் - தொல்காப்பியம், திவாகரம், இறையனார் களவியல், தமிழ்நெறி விளக்கம் என்ற இலக்கண நூல்களும், புறநானூறு, குறுந்தொகை, கலித்தொகை, குறள், நாலடி, சிலப்பதிகாரம், அப்பர் தேவாரம், திருவாசகம் என்ற இலக்கியங்களுமாகும். இவர் குறிப்பிடும் சில இலக்கண நூல்கள் இடம் விளங்கவில்லை. இவர் காலத்தில் நம்பியகப் பொருள் ஆட்சிக்கு வரவில்லைபோலும். அந்நூலின் காலம் 1275 எனக் குறிப்பிடுவதும் பொருத்தமாகும்.

திருக்கோவையாரில் பாடல்தோறும் அமைந்துள்ள கொளுக்கள் பழமையானவை; இவற்றுக்குப் பழைய உரையும்

உண்டு. ஆதலால் இவை பேராசிரியருக்கும் முற்பட்டவை. ஆனால் துறைகள்தோறும், ஒவ்வொரு கிளவியின் கண்ணும் அமைந்துள்ள துறைகள் யாவை என்பதைத் தொகுத்துக் கூறும் அகவற்பா ஒன்றைப் பேராசிரியர் எடுத்துத் தருகிறார். முதற் கிளவியாகிய இயற்கைப் புணர்ச்சி தொடங்கி 25ஆம் கிளவி யாகிய பரத்தையிற் பிரிவு வரையில் ஒவ்வொன்றுக்கும் இது அமைந்திருப்பதோடு, இவ்விருபத்தைந்தும் யாவை என்று தொடக்கத்தில் இவற்றை அதிகார வரலாறு என்ற ஓர் அகவற் பாவால் 'இவை இந்நூற்குக் கிளவிக் கொத்தெனப்படும் அதி காரங்களாம் என்று கூறுவர் அகத்திணையிலக்கணம் உணர்ந் தோர்' என்று எழுதுகிறார். இவ்வாறு கூறும் நூற்பாக்களின் அடிகள் 341; இவை இரண்டடிச் சிறுமையும் 48 அடிப் பெருமை யும் உடையன. இவற்றுக்கும் பேராசிரியர் உரை எழுதிச் செல் கிறார்.* இவை வேறு ஒரு நூலில், காணப்படுவனவாய்த் தெரிய வில்லை; உரையாசிரியரே அமைத்துக் கொண்டார்போலும்.

இவர் அகப்பொருள் இலக்கணத்தை நன்கு உணர்ந்து எழுதுகிறார். முதற்பாட்டின் உரையை விரிவாக எழுதி, முடிவில் 'இப்பாட்டு நுதலிய பொருளைப் பிண்டப் பொழிப்பினால் உரைத்தாம். நுண்ணிதாக உரைப்பான் புகின் வரம்பின்றிப் பெருகும் என்பது' என்று கூறுகிறார். பாடல்தோறும் எல்லா இலக்கணக் குறிப்புக்களையும் தருவது இவர் இயல்பு. சொற்கள் எவ்வாறு கிடக்கின்றன என்பதையும் தவறாது விளக்குகிறார். சில இடங்களில் கடாவிடையாகவும் உரை எழுதுவார். ஒரு தொடருக்குப் பொருள்கூறி, 'வேறு இவ்வாறு உரைப்பினும் அமையும்' என்பார்; 'இன்னது பாடமாயின் பொருள் இவ்வாறு கொள்க' என்பார். பாடல்தோறும் மெய்ப்பாடும் பயனும் விளக்கியுள்ளார்.

பதசாரம் சொல்வதில் இவ்வாசிரியர் இணையற்றவர். திருவளர் தாமரை என்ற பாடல் முழுமையும் காணத்தக்கது; கோங்கு என்ற சொல் அடையின்றி வரும் காரணம் சிறப்பு. 'உணர்ந்தார்க்கு உணர்வரியோன் - ஒருநாள் தன்னை உணர்ந் தவர்க்குப் பின்னும் உணர்வதற்குக் கருவியாகிய சித்த விருத்தி யும் ஒடுங்குவதால் மீட்டு உணர்வரியோன்' என்பார். ஆளி

* உரை செய்தமையாலே கிளவிக்கொத்து இவர் செய்யவில்லை என்ற கருத்து கொள்ளத்தக்கதன்று. நூலும் உரையும் ஒரே ஆசிரியர் செய் வதைத் தமிழ் இலக்கண நூல் மரபில் பல இடங்களில் காணலாம் - தண்டி யலங்காரம், நம்பியகப் பொருள், இலக்கண விளக்கம் போன்றன காண்க.

யன்னான் என்றதனால் நின்மகனுக்கு வருவதோர் இடையூறில்லை எனக் கூறினானாம். பயிர்ப்பு - பயிலாத பொருளின் கண் வரும் அருவருப்பு. பொற்கொழுந்து - பொன்னை வண்ணமாகக் கொண்டெழுதிய கொழுந்து (23). சில சொற்பொருள்களைத் தெரிந்து இவர் எழுதுவது சிறப்பு. இருவி - கதிர் கொய்த தட்டை; தாள் - கதிர் கொய்யாத முன்னும் சொல்வதோர் பெயர். கூத்தப்பிரான் - கூத்தனாயினும் பிரானாயுள்ளான் (30). வடிக்கண் பரப்பி என்றான். இன்ன திசையால் வருமென்று அறியாது சுற்றெங்கும் நோக்குதலின் (34). அடுக்கிய விளிகளாற் காதற் சிறப்பு விளங்கும் (47). பிழைகொண்டு ஒருவிக்கெடாது - அடைந்தார். பிழைப்பின் தலையாயினார் பிழையை உட்கொண்டு அமைதலும், இடையாயினார் அவரைத் துறத்தலும், கடையாயினார் அவரைக் கெடுத்தலும் உலகத்துண்மையின், அம்மூவகையும் செய்யாது (65), எல்லாப் பொருளையும் கடந்தானாயினும், எமக்கண்ணியன் என்னும் கருத்தால் எம்பரன் என்றார் (99). இரதம் என்றது நாட்டியச் சுவையையன்று, கட்கினிமையை; நடம் என்றது நாட்டியத்தையன்று, கூத்தென்னும் பொதுமையை (57). தொழுதெழுவார் என்றது, துயிலெழுங் காலத்தல்லது முன்னுணர்வின்மையான், உணர்வுள்ள காலத்து மறவாது நினைவார் என்றவாறு (118).

‘தாமரை மருதநிலத்துப் பூவாதலான் மருதமும், நெய்தல் நெய்தல் நிலத்துப் பூவாதலான் நெய்தலும், குமிழ் முல்லை நிலத்துப் பூவாதலான் முல்லையும், கோங்கு பாலை நிலத்துப் பூவாதலான் பாலையும், காந்தள் குறிஞ்சி நிலத்துப் பூவாதலான் குறிஞ்சியும் என இவ்வைந்து பூவினானும் ஐந்திணையும் சுட்டினார் (1)’ என்று இவர் காட்டுவது சுவையாக உள்ளது.

இவர் உரையுள் வரும் குறிப்புக்களால், இவருக்கு முன், இப்போது அச்சாகி வெளிவந்துள்ள பழையவுரையேயன்றி, வேறும் ஓர் உரைமரபு இருந்ததென்று அறிகிறோம். இவர் உரை அனைவராலும் போற்றப்பெற்ற சிறந்த உரைகளுள் ஒன்று.

திருக்கோவையாருண்மை என்ற ஒரு நூல் பிற்காலத்தெழுந்தது. இது கோவைப்பாடல் ஒவ்வொன்றுக்கும் பேரின்பப் பொருள் மட்டும் தனியே ஒவ்வொரு கொளுவில் அமைத்துக் கூறுகிறது.

○○○

*அத்தியாயம் 3*

# இலக்கிய உரையாசிரியர் – 2

## *முன்னுரை*

*முந்திய அத்தியாயத்தில், இந்த நூற்றாண்டில் எழுந்த சிறப்பான இலக்கிய உரைகளைப் பார்த்தோம். பின்னும் சிலவற்றை இங்குப் பார்க்கலாம். ஏறக்குறைய இக்காலப் பகுதியில் சற்று முன்பின்னாக, சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டு எட்டுத் தொகைகளுக்கும், ஐம்பெருங்காப்பியம் என்ற வழக்குப்பெற்ற காப்பியங்களுக்கும், உரைகள் எழுந்தன. இவ்வுரைகளின் காலம், பொதுவாக நான்கு நூற்றாண்டு காலம் - கி.பி. 11 முதல் 14 நூற்றாண்டு வரையில். உரைஎழுதும் முயற்சி, பத்தாம் நூற்றாண்டில் இறையனார் களவியல் உரையை எழுதி வைத்தபின் எழுந்ததென்று கருதுகிறோம். இம்முயற்சி, இலக்கியம் இலக்கணம் ஆகிய இரு துறைகளிலும் வளர்ந்தது.*

*பத்துப்பாட்டு முழுமைக்கும் நச்சினார்க்கினியர் உரை எழுதினார் (14 நூ.). அதனுள் முதற்பாட்டாகிய திருமுருகாற்றுப் படைக்கு மட்டும், நச்சினார்க்கினியர் உரையையன்றி, பின்வரும் உரைகளும் வெளிவந்திருக்கின்றன:*

**பரிப்பெருமாள் உரை – 11 நூற்றாண்டு.**
**பழைய உரை – 13 நூற்றாண்டு.**
**பரிமேலழகர் உரை – 13 நூற்றாண்டு.**
**பரிதியார் உரை – 15 நூற்றாண்டு.**

*நச்சினார்க்கினியர், பரிதியார் உரைகள் எமது 14, 15ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறுகளில் விவரிக்கப்பட்டன. பரிமேலழகர் உரை இந்நூலின் 2ஆம் அத்தியாயத்தில் பேசப்பட்டது. திருமுருகாற்றுப்படை பழையஉரை மட்டும் இங்கு ஆராயப்படும்.*

அடுத்து எட்டுத்தொகை உரைகளும், பதினெண் கீழ்க் கணக்கு உரைகளும் பரிசீலிக்கப்படும். ஐம்பெருங் காப்பியங்கள் என்ற அளவில், இன்று கிடைப்பன மூன்றே; வளையாபதியும், குண்டலகேசியும் இல்லை; இவற்றுக்கு உரை இருந்ததா என்பதும் தெரியாது. மணிமேகலைக்கு உரை இல்லை. சிந்தா மணிக்கு உரை செய்தார் நச்சினார்க்கினியர்; அவர் வரலாறு எமது 14ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில் விவரிக்கப் பட்டது. சிலப்பதிகார உரைகள் இரண்டு: ஆசிரியர் பெயர் தெரியாத அரும்பதவுரை - 11ஆம் நூற்றாண்டு; அடியார்க்கு நல்லார் உரை - 12ஆம் நூற்றாண்டு. இவற்றை அக்கால இலக் கிய வரலாற்றுள் காண்க. ஐஞ்சிறு காப்பியங்கள் என்பவற் றுள் குறிப்பிடத்தக்கவை பின்வரும் மூன்றே; சூளாமணி - உரை இல்லை; யசோதரகாவியம் - உரை இல்லை; நீலகேசி - வாமன முனிவர் உரை - எமது 14ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாறு காண்க.

இங்கு ஐயரவர்களின் சங்கநூல் உரைப் பதிப்புக்களைக் குறித்து ஒரு கருத்தைச்சொல்ல எண்ணுகிறோம். அவர்கள் பரிசோதித்த பழைய உரைப்பதிப்புக்கள் பின்வருவன. ஐம்பெருங் காப்பியங்களில், சிலப்பதிகாரம் - இரண்டு உரைகள்; சிந்தாமணி - நச்சினார்க்கினியர் உரை. பத்துப்பாட்டு முழுமையும் - நச்சி னார்க்கினியர் உரை. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எதுவும் அவர்கள் பதிப்பிக்கவில்லை. எட்டுத்தொகையைப் பொறுத்த வரையில், ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, புறநானூறு - பழைய உரைகள்; பரிபாடல் - பரிமேலழகர் உரை. குறுந்தொகைக்குப் பழைய உரைகள் கிடைக்கவில்லை; ஆகவே, பிற்காலத்தில் அவர்கள் புதிய உரையெழுதி, சென்னைப் பல்கலைக்கழகத்தார் உதவியோடு வெளியிட்டார்கள்.

எட்டுத்தொகையில் எஞ்சிய நூல்களான நற்றிணை, அகநானூறு, கலித்தொகை என்ற மூன்றையும் அவர்களே பதிப்பிக்க எண்ணியதுண்டு. ரா. இராகவையங்கார் அவர்கள் அகநானூற்றுக்குத் தாம் எழுதி வைத்திருந்த பிரதிகள் முதலிய வற்றைப் பதிப்பிப்பதற்காக, பாண்டித்துரைத் தேவர் மூலமாக ஐயரவர்களிடம் சேர்ப்பித்ததாகவும் எழுதியிருக்கிறார்கள். எனினும், இம்மூன்று நூல்களும் ஐயரவர்கள் பதிப்பாக வெளி யாகவில்லை. இதற்குக் காரணம் ஒருவகையில் புலமைக் காய்ச்சல் என்று சொல்லலாம்.

புலமைக் காய்ச்சல் என்பது, பண்டைய இலக்கியங்களில் கேள்விப்படுகிற பொய்க்கதைகளும் மெய்க்கதைகளும் மட்டு மல்ல; இன்றும் நம் கண்முன்னே உண்மையாக அறிகிற செய்தி என்று காண்கிறோம். ஐயரவர்கள் உடனிருந்து ஆராய்ந்து வந்து பழகியிருந்த புலவர்கள் சிலர், அவர் தொடர்பினாலும் பிறவகையாலும் தங்களுக்குக் கிடைத்த ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு இந்த நூல்களைத் தாங்களே பதிப்பித்து விட்டார் கள். ஐயரவர்களுக்கு இதுபற்றி மிக்க வருத்தமும் இருந்தது. இதனாலேயே அவர்கள் பிற்காலத்தில் இந்நூல்களைத் தாம் நன்கு ஆராய்ந்து வைத்திருந்தும், பதிப்பிக்கவில்லை. ஆனால், அவர்கள் கையால் இந்நூல்கள் வெளிவந்திருந்தால் இவை எவ்வளவோ சிறப்படைந்திருக்கும். இந்நூல்களுக்கு இன்று வரை எழுந்துள்ள பதிப்புக்களையும் உரைகளையும், அவர்கள் பதிப்பித்துள்ள பத்துப்பாட்டு புறநானூறு போன்றவற்றையும் வைத்து ஒப்பு நோக்கினால் இதுநன்கு விளங்கும். சிறப்புப் பெயரகராதி, விளங்கா மேற்கோளகராதி, ஒப்புமைப் பகுதிகள், பொருளகராதி முதலிய எண்ணற்ற ஆராய்ச்சிப் பகுதிகளோடு அவர்களது நூற்பதிப்பு விளங்குவது, அவர்கள் தந்துள்ள விளக்கம் அவர்களுக்குப் பின் எத்தனையோ பேர் நூல்களைப் பதிப்பித்தும், எங்கும் காணப்படவில்லை என்பது இன்றும் அவர்களுக்குப் பெருமை தருவதாய் உள்ளது. ஐயர் அவர்கள் இந்நூல்களைப் பதிப்பிக்காமல் போனது தமிழ்நாட்டின் தவக் குறை என்பதில் கருத்துவேற்றுமை இருக்கமுடியாது.

## திருமுருகாற்றுப்படை - பழைய உரையாசிரியர்

பத்துப்பாட்டுள் முதல் பாட்டாகிய திருமுருகாற்றுப் படைக்கு இக்காலத்தில் மிகப்பல உரைகள் எழுந்துள்ளன. பழமையான உரைகள் ஐந்து. பத்துப்பாட்டு முழுமைக்கும் உரை எழுதிய நச்சினார்க்கினியர் திருமுருகாற்றுப் படைக்கு எழுதிய உரையே சிறப்பாக வழங்குகிறது. வேறு உரைகள் பரிப் பெருமாள், பரிமேலழகர், பரிதியார், பழைய உரையாசிரியர் என்பன. இவ்வைந்து உரைகளும் காசி மடத்தார் வெளியிட்ட உரைத்தொகுப்பினுள் ஒரு தொகுப்பாக வெளியாகியுள்ளன. இவற்றுள் பழைய உரையாசிரியர் உரை ஒன்றை மட்டும் இங்கு ஆராய்கிறோம்.

### உரை

இவ்வுரையை முதன்முதலாகச் செந்தமிழ் இதழ்களில் வையாபுரிப்பிள்ளை அவர்கள் விரிந்த ஆராய்ச்சி முன்னுரை யோடு 1943இல் வெளியிட்டார். தமிழிலக்கிய மரபில் உரை யாசிரியர் என்ற பெயர் இளம்பூரணர் ஒருவரையே குறிக்கும். எனினும், இந்த உரை அவர் எழுதியதன்று என்பது இதன் நடை யினாலேயே தெளிவாக உணரப்படுகிறது. அன்றியும், அவர் செய்ததாக இன்று கிடைத்துள்ள நூல் தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களுக்கும் உரிய உரைஒன்றே. வேறு இலக்கிய உரை எதுவும் அவர் செய்ததாக வரலாறு இல்லை.* எனவே, இவ்வுரை காரர், பெயர் தெரியாத பிறிதோர் ஆசிரியர் என்று மட்டுமே இப்போது கருதமுடியும்.

திருமுருகாற்றுப் படையில் வரும் 'தலைத்தந்து' என்ற தொடருக்குப் பொருள் தெளிவுபடவில்லை. நச்சினார்க்கினியர், "முதற்கை கொடுத்து" என்று மட்டும் எழுதினார். புறநானூறு 24ஆம் செய்யுளில் வரும் "தலைக்கை தரூஉந்து" என்ற தொடருக்கு அதன் பழைய உரையாசிரியர், "முதற்கை கொடுக்கும்" என்று மட்டும் எழுதினார். தலைக்கை முதலிடம் என்ற பொருளில் பெருங்கதையுள் பலவிடத்திலும் வருகின்றது. கலித்தொகை 73ஆம் பாடலில் "துணங்கையுள் தலைக்கொள்ள" என்பதற்கு, "கூத்திடத்தே ... தலைக்கை கொடுத்தல் தொழிலைக் ... கொள்கை யினாலே" என்று நச்சினார்க்கினியர் உரை எழுதினாரேயன்றி, தலைக்கை கொடுத்தல் தொழில் என்பதை விளக்கினாரல்லர். ஆனால் இப்பழைய உரையாசிரியரே, "அவர்கள் (மகளிர்) கள வறிந்து, அவர்கட்கு இருப்பிடம் கொடுத்து" என்று எழுது கிறார். இவ்விளக்கம் இவ்வுரையால் கிடைக்கின்ற சிறப்பு.

### காலம்

நச்சினார்க்கினியர் உரைக்குறிப்பு ஒன்றினால் இவருடைய காலம் 14ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென்று பிள்ளையவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். நூலினுள் 'மொய்ம்பில் சுடர் விடுபு, வண்புகழ் நிறைந்து வசிந்து வாங்கு நிமிர்தோள்' என்ற தொட ருக்கு நச்சினார்க்கினியர், 'தம்முடைய வலியினாலேயே பெரிய

---

* இளம்பூரணர் பற்றிய உரைச் சிறப்புப் பாயிரமொன்று ஒரு பாடல் செந்தமிழில் வெளியாயிற்று. இதுபற்றிய குறிப்பு எமது 11ஆம் நூற் றாண்டு இலக்கிய வரலாற்றில் உள்ளது.

புகழ் நிறையப்பட்டு சுடரை உடைய படைக்கலங்களை எறிந்து பகைவர் மார்பைப் பிளந்து அவற்றை வாங்குதோள்" என்று உரை எழுதிவிட்டு பின்னர், 'மொய்ம்பினை உடைத்தாய் ஒளிவிட்டு நிறைந்து வளைய வேண்டுமிடம் வளைந்து நிமிர வேண்டுமிடம் நிமிரும் தோள் எனவும் உரைப்பர்' என்று எழுதுகிறார். இவ்வாறு உரைக்கின்றவர் நாம் இங்குக் கருது கின்ற உரையாசிரியர். ஆதலால் இவ்வுரையாசிரியர் நச்சினார்க் கினியருக்கு முற்பட்டவர் என்பது தெளிவு. நச்சினார்க்கினியர் காலம் 14ஆம் நூற்றாண்டு. இவருக்கு நம் உரையாசிரியர் ஒரு நூற்றாண்டு முற்பட்டு வாழ்ந்தவரென்று கொள்வோமாயின், இவர்காலம் 13ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி என்று கொள் ளலாம்; அதாவது உத்தேசம் 1275.

## எட்டுத்தொகை உரைகள்

எட்டுத் தொகையாகிய சங்கநூல்கள் யாவை என்பதை ஒரு பழம்பாடல் கூறும்:

**நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறமென்று**
**இத்திறத்த எட்டுத் தொகை.**

இனி, இவ் எட்டு நூல்களையும் இவற்றுக்கெழுந்த பண்டைய உரைகளையும் உரைகளின் காலத்தையும் பின்வருமாறு ஓர் அட்டவணையாகக் காட்டுவோம்.

இவற்றுள், குறுந்தொகை உரை, வரலாறுகளில் சொல்லப் பட்டதேயன்றி, கிடைக்கவில்லை; இறந்தது போலும். நச்சினார்க் கினியர் வரலாறு, எமது 14ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் காண்க. புறநானூற்றுரையாசிரியர் வரலாறு எமது 12ஆம் நூற்றாண்டு வரலாற்றில் காண்க பரிபாடல் உரைசெய்த பரிமேலழகர் வரலாறு முந்திய அத்தியாயத்தில் சொல்லப் பட்டது. எஞ்சிய ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு ஆகியவற்றின் உரைகளைச் சிறிது இங்கே ஆராயலாம்.*

---

* எட்டுத் தொகையுள் ஏழு நூல்களுக்கு உரை இருக்கும்போது, முதல் நூலாகிய நற்றிணைக்கு மட்டும் உரையாரும் எழுதவில்லை என்று கருத முடியவில்லை; உரை இருந்து கிடைக்கவில்லை என்றே சொல்ல வேண்டும்.

| நூல் | பழையஉரை | உரையின் காலம் நூற்றாண்டு |
|---|---|---|
| 1. நற்றிணை | இல்லை | - |
| 2. குறுந்தொகை | பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் (உரை கிடைக்கவில்லை) | 13, 14 |
| 3. ஐங்குறுநூறு | பழையவுரை | 13 |
| 4. பதிற்றுப்பத்து | பழையவுரை | 13 |
| 5. பரிபாடல் | பரிமேலழகர் | 13 |
| 6. கலித்தொகை | நச்சினார்க்கினியர் | 14 |
| 7. அகநானூறு | பழையவுரை, ஒரு பகுதிக்கு மட்டும் | 13 |
| 8. புறநானூறு | பழையவுரை, ஒரு பகுதிக்கு மட்டும் | 12 |

## ஐங்குறுநூற்றின் பழையவுரை

ஐங்குறுநூற்றைப் பதிப்பித்த ஐயரவர்கள், கருத்துரையும் பொழிப்புரையும் சேர்த்துப் பதிப்பித்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கருத்துரை என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பது, பாடல்தோறும் துறை விளக்கமாக எழுதப்பட்டுள்ள குறிப்பு. சில சமயம் இது ஒரே வரியாக இருக்கும்; பலசமயம் பலவரிகள் கொண்ட விரிந்த விளக்கமாகவும் இருக்கும். இதைச் செய்தார் யார் என்பது விளங்கவில்லை. ஐந்து ஆசிரியர் செய்த ஐந்து திணைகளுக்கும் இவ்விளக்கம் ஒன்றுபோலச் சொல்லப்பட்டிருப்பதால், பாடல் பாடிய ஆசிரியரே துறை விளக்கமும் எழுதினார் என்று கொள்வதற்கில்லை. ஒருகால், ஐங்குறுநூற்றைத் தொகுத்தார் என்று வழங்குகிற புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் எழுதியிருத்தல் கூடும்; திட்டமாகச் சொல்வதற்கில்லை. இந்நூல், சிறுவரிகள் சிலவே கொண்ட பாடல்களாயிருத்தலினால், துறையை நன்கு எடுத்து உணர்த்த வேண்டி இவரே இவ்விளக்கம் எழுதியிருக்கலாம்.

நாம் இங்கு கருத எண்ணுவது, பழையவுரை என்று ஐயரவர்கள் அச்சிட்டுள்ள பகுதியை மட்டுமே. இவ்வுரை எழுதினோர் யார் என்பது தெரியவில்லை. கிடைக்கின்ற பகுதி, இவ்வுரைகாரர் எழுதி வைத்திருந்த குறிப்புக்கள் மட்டும் போலும்; ஏனெனில் சில பாடல்களுக்கு உரை விரிவாய் எழுதி

யிருக்க, சில பாடல்களுக்கு ஒருசொல் உரை எழுதியிருக்கிறார்; பல பாடல்களுக்கு உரை எதுவுமே எழுதவில்லை. இவர் உரை எழுதும்முறை ஒரு தனித்தன்மை உடையது. பெரும்பாலும் மூலத்துக்கு உரை எழுதுவதில்லை. தாம் உரை எழுதும் இடங்களிலெல்லாம் பாடலின் உள்ளுறை உவமத்தைத் தெளிவாக விளக்கி உரைக்கிறார். எடுத்துக்காட்டாக ஐங்குறுநூற்றின் முதற் பகுதியாகிய வேட்கைப்பத்துப் பாடல்களைக் குறிப்பிடலாம். ஒவ்வொரு பாட்டிலும், 'தலைவி இல்லறமே விரும்பி ஒழுகினாள்' என்று எழுதி, அதற்குப் பொருந்த இறுதியில் வரும் வரிகளில் உள்ளுறையைத் தெளிவுபடுத்துகிறார். முதற்பாட்டில், 'தலைவியை யாய் என்றது, புலத்தற்குக் காரணமாயின உளவாகவும், அவை மனம் கொள்ளாச் சிறப்பை நோக்கி; தோழி யாங்களென உளப்படுத்தது, ஆயத்தாரை நோக்கி எனக்கொள்க.' 'பூவும் புலாலும் ஒக்க விளையும் ஊரன் என்றது குலமகளிரைப் போலப் பொதுமகளிரையும் கொண்டொழுகுவான் என்பதாகும்' என்பது காண்க. அடுத்து, 'சிறப்புடைய கருங்குவளையுடனே சிறப்பில்லாத நெய்தல் நிகர்க்கும் ஊரன் என்றது, குலமகளிருடனே பொதுமகளிர் இகலும் ஊரன்'; 'பூத்துப் பயன் படாக் கரும்பினையும், காய்த்துப் பயன்படும் நெல்லினையும் உடைய ஊரன் என்றது, ஈன்று பயன்படாப் பொதுமகளிரையும் மகப்பயந்து பயன்படும் குலமகளிரையும் ஒப்ப நினைப்பான் என்றவாறு'. 'புன்னையோடு ஞாழல் பூக்கும் என்றது குடிப் பிறப்பும் உருவும் நலனும் ஒத்தல் கூறியவாறு (103), ஞாழலில் தாழ்ந்த புள் வதியும் என்றது, தான் வரையாது, நமக்கு வரும் நோய் அறியாது, தான் வேண்டும் இன்பமே முடிப்பான் என்றது (142).

சில இடங்களில், குறித்த பாடல் அத்திணைக்கு எவ்வாறு பொருந்தும் என்பதை விளக்குகிறார். இது கருப்பொருளால் பாலை; இது காலத்தால் பாலை; இது பாலைக்குரித்தாகிய வேனிற்கண் நிகழும்குரவும் குயிலும் கூவுதலால் பாலையாயிற்று; இது பாலைக்குரிய கருப்பொருளாகிய கோங்கு கூறினமையால் பாலையாயிற்று - என்னும் இடங்கள் காண்க.

ஓரிடத்தில் வேறுரையும் (26) சில இடங்களில் வேறு பாடமும் வேறு உரையும் குறிப்பிடுகின்றார் (20, 271), இவர் உரையில் தொல்காப்பியத்தை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

எல்லாப் பாடல்களுக்கும் இவருடைய உரையோ குறிப்போ கிடைக்காமைதான் குறை.

## அகநானூற்றின் பழையவுரை

அகநானூறு பண்டைய உரைக் குறிப்புக்களோடு, வே. இராசகோபால ஐயங்காரவர்களால் இருமுறை (1923, 1926) பதிப்பிக்கப்பெற்றது. இங்கே அவர் பழைய குறிப்புரை ஒன்றும், வேறுரை ஒன்றும் கிடைத்தன என்று சொல்லிச் சில உரைக் குறிப்புக்களை அச்சிட்டிருக்கிறார். இரண்டு உரைக்குறிப்புக் களும் தனியாக அச்சிடப்பெறவில்லை. குறிப்புரையானது முதல் 90 பாட்டுக்களுக்கு மட்டுமே உள்ளது; வேறோர் உரை என்பது, இடையிடையே 51 பாட்டுக்களுக்கு மட்டுமே உள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இந்நூலும் உரையும் மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்களால் பரிசோதிக்கப்பட்டன. இக்குறிப்புரையை ஆராய்ந்தபோது தெரியவந்த சில கருத்துக் களை மட்டும் இங்கு குறிப்பிடுவோம்.

இவ்வுரை ஏட்டில் கொல்லம் 460 என்று வரையப்பட் டிருந்தது; அதாவது கி.பி. 1285. ஒருகால் இதுவே உரையின் காலமும் ஆகலாம். ஆசிரியருடைய பெயரோ வரலாறோ ஒன்றும் தெரியவில்லை. இவ்வுரையானது பல அரிய தமிழ் வழக்கங்களையும் மக்கள் இயல்புகளையும் புலப்படுத்துகின்றது. அருந்தொடர்களுக்குப் பொருள் எழுதி, துறைவிளக்கம் கூறி, அகத்திணையில் முக்கியப் பகுதியான உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் முதலியவற்றையும் உணர்த்தி, சொல் முடிபு பொருள் முடிபு காட்டி, இலக்கணக் குறிப்புக்களையும் தந்து செல்கிறது. இவ்வுரை பதவுரையும் அல்லாமல் பொழிப்புரை யும் அல்லாமல், குறிப்புரையாகவே உள்ளது. ஆங்காங்கு வேறு பாடத்தையும் வேறு கூறப்படும் உரையையும் உணர்த்திச் செல்கிறது. (காப்புச் செய்யுள், பாடல் 17, 19, 21 பார்க்க).

பதினைந்து இடங்களுக்கு மேல் உள்ளுறை உவமத்தை மிகவும் நன்றாக விளக்குகிறது. பின்வருவது ஓர் எடுத்துக்காட்டு:

“காரன் தனக்கு நிலையென்று புகுதப்பட்ட கொட்டிலை நீராலும் சாணகத்தாலும் தானே சேறாக்கிக் கொண்டு, தளையையும் அறுத்துக் கொண்டு, பழனத்துக்குக் காவலாகிய வேலியையுங் கோட்டாலெடுத்து, மீன்களிரியத் தாமரையைச்

சூழ்ந்த வள்ளையை மயக்கி, மலர்ச்சியின்றி வண்டொடு குவித்த தாமரையை ஆர்ந்தாற்போல, நீயே ஆதரித்துக் கொள்ளப்பட்ட இவளை நீ தானே வேறுபடுத்தி நாணமாகிய தளையையும் அறுத்துக்கொண்டு, பரத்தையர்க்குக் காவலாகிய விறலியையும் பாணனாகிய கோட்டாலே நீக்கி, அப்பரத்தையருடனுறையும் தோழிமாரறிய அப்பரத்தையருடைய தாய்மாரையும் மயக்கி, அகமலர்ந்து உன்னை எதிரேற்றுக் கொள்ளாத மகளிரை நுகர்வா னொருத்தனல்லையோ என்றவாறு" (46)

இவர் சில சொற்களுக்குப் பொருள் எழுதுவது சிறப்பாக உள்ளது. பொங்கழி - தூற்றாப்பொலி (37). செண்ணுதல் - கை செய்தல்; செண்ணுதலால் செண் என்று கொண்டைக்குப் பெயர் ஆயிற்று (59). விலங்கமர்க் கண்ணள் - ஒருக்கடித்துப் பார்க்கும் கண்ணளாய் (54). கோடி - திருவணைக் கரை (70).

எளிதாக வடமொழித் தொடர்களைக் குறிப்பிட்டுச் செல் கிறார். மகனே - ஒரு புருஷன் (48). நீள் எரி - மிக்க உஷ்ணம் (51). மருடல் - ஆச்சரியப்படுதல் (82). ஏமம் - ரக்ஷை (84). வதுவை நன்மணம் - வதுவைக் கல்யாணம், ஓர்இல் - சதுர்த்தி அறை (நாலாம் நாள் பள்ளியறை), பின் - கல்யாணம் கழிந்த பின் (86).

பல இடங்களில் துறை விளக்கங்களும், கூற்று விளக்கமும் எழுதியிருப்பது சுவை உடையதாய் இருக்கின்றது. பல இடங் களில் வினைமுடிபும் சொல்முடிபும் பொருள்முடிபும் குறிப் பிட்டு எழுதுகிறார் (75, 89).

இனி, அகநானூற்று உரையிறுதிக்கண் உள்ள உரைப்பாயி ரப் பாடல், "இத்தொகைக்குக் கருத்து அகவலாற் பாடினான் இடையளநாட்டு மணக்குடியான் பால்வண்ண தேவனான வில்லவதரையன்" என்று கூறும் குறிப்புடன் முடிகிறது. பாடல் பின்வருவது:

நின்ற நீதி வென்ற நேமிப்
பழுதில் கொள்கை வழுதியர் அவைக்கண்
அறிவுவீற் றிருந்த செறிவுடை மனத்து
வான்தோய் நல்லிசைச் சான்றோர் குழீஇ
அருந்தமிழ் மூன்றும் தெரிந்த காலை,

ஆய்ந்த கொள்கைத் தீந்தமிழ்ப் பாட்டுள்
நெடிய வாகி அடிநிமிர்ந் தொழுகிய
இன்பப் பகுதி இன்பொருட் பாடல் —
நானூ றெடுத்து நூல்நவில் புலவர்
களித்த மும்மதக் களிற்றி யானைநிரை
மணியொடு மிடைந்த அணிகிளர் பவளம்
மேவிய நித்திலக் கோவை என்றாங்கு,
அத்தகு பண்பின் முத்திற மாக
முன்னினர் தொகுத்த நன்னெடுந் தொகைக்குக்
கருத்தெனப் பண்பினோர் உரைத்தவை நாடின்,
அவ்வகைக்கு அவைதாம் செவ்விய, அன்றி
அரியவை யாகிய பொருண்மை நோக்கிக்
கோட்ட மின்றிப் பாட்டொடு பொருந்தத்;
தகவொடு சிறந்த அகவல் நடையால்
கருத்தினி தியற்றி யோனே: பரித்தேர்
வளவர் காக்கும் வளநாட் டுள்ளும்
நாடெனச் சிறந்த பீடுகெழு சிறப்பில்
கெடலரும் செல்வத்து இடையள நாட்டுத்
தீதில் கொள்கை மூதூ ருள்ளும்
ஊரெனச் சிறந்த சீர்கெழு மணக்குடிச்
செம்மை சான்ற தேவன்:
தொன்மை சான்ற நன்மை யோனே.

'இப்பாயிரச் செய்யுளாலும், இதன்பின்னுள்ள வசனத்தாலும் சோணாட்டைச் சேர்ந்த இடையள நாட்டு மணக்குடி என்னும் ஊரிலிருந்த பால்வண்ண தேவன் வில்லவதரையன் என்று பெயர் சிறந்தவர். இந்நெடுந்தொகைக்குக் கருத்து அகவலாற் பாடினார் என்பது புலனாவது. அவர் கருத்தினைப் புலப்படுத்திப் பாடிய அகவல் இப்போது கிடைத்திலது' என்பது ரா. இராகவையங்கார் குறிப்பு. 'இடையளநாடு இடையனாடு என்றும் பிரதிபேதம் உண்டு. இந்நாடு ஜயங்கொண்ட சோழ மண்டலத்து (தொண்டை மண்டலத்து) உள்ளதாம். இடையனாட்டு மணக்குடி மூவேந்த வேளார் என்பது சாசனம். பாண்டி நாட்டுள்ள மணக்குடியாகக் கருதுவாரும் உளர். வில்லவதரையன் இயற்றிய அகநானூற்றுக் கருத்தகவல் இப்போது கிடைத்திலது' என்பது மு. இராகவையங்கார் குறிப்பு.

## பதிற்றுப்பத்து உரையாசிரியர்

எட்டுத்தொகையுள் நான்காவதாகிய பதிற்றுப்பத்து, பத்து அகவற்பாக் கொண்ட பத்துப் பகுதிகள் சேர்ந்ததனால் இப்பெயர் பெற்றது; பிற்காலத்தில் வெவ்வேறான பத்துவகை விருத்த யாப்பினால் இவ்விதம் அமைந்து அந்தாதியாக வரும் நூல் பதிற்றுப் பத்தந்தாதி* என்பர். இதனுள் நாலாம்பத்து மட்டும் அந்தாதிக்கு வருகிறது. ஒவ்வொரு பத்தும் ஒருசேர அரசனை ஒரு புலவர் பாடியது. இப்பத்தினுள் முதற்பத்தும் பத்தாம்பத்தும் கிடைக்கவில்லை. இடையிலுள்ள எட்டே கிடைத்துள்ளன. ஒவ்வொரு பத்தின் முடிவிலும் ஒருபதிகம் உள்ளது. இது அகவற்பாவாகத் தொடங்கி, செய்தார் பெயர், பாடல்பெற்ற சேரன் பெயர், செய்த சமயமும் காரணமும் என்ப வற்றைத் தொகுத்து உரைக்கிறது. பதிகத்தின் இறுதியில் பத்துப் பாட்டுக்களின் பெயரும் பாடிப்பெற்ற பரிசிலும் சொல்லப் பெற்றுள்ளன. இவற்றோடு, குறித்த அரசன் எத்தனை ஆண்டு அரசு வீற்றிருந்தான் என்று சொல்லியிருப்பது, ஆராய்ச்சி யாளர்க்குப் பேருதவியாக உள்ளது.

பதிற்றுப்பத்துக்குப் பழையஉரை ஒன்று உண்டு. இது ஐயரவர்களால் முதல் முதல் 1904இலும், ஐந்தாம்பதிப்பு அவர் பரம்பரையில் 1949இலும் வெளிவந்தன. இவ்வுரை சுருக்கமாக அமைந்துள்ளது. உரைகாரர் நீண்ட பாடலில் இடையிடையே பொருளை முடித்துக் காட்டுகிறார். பதிற்றுப்பத்து ஒவ்வொரு பாடலுக்கும் அவ்வப்பாடலில் வருகின்ற சுவையான ஒரு தொடரை வைத்துப் பாட்டின் பெயர் அமைக்கப்பெற்றிருக்கும். அந்தத் தொடரை இவர் நயமாக விளக்குகிறார். மறம் வீங்கு பல்புகழ், அடுநெய் ஆவுதி, வரம்பில் வெள்ளம், நன்னுதல் விறலியர் போன்ற தொடர்கள் பாட்டின் பெயர். 'சான்றோர் மெய்ம்மறை' என்ற பெயருக்கு இவர் எழுதும் உரை காண்க. "ஈண்டுச் சான்றோர் என்பது போரில் அமைதி உடைய வீரரை. மெய்ம்மறை - மெய்புகு கருவி. மெய்ம்மறை என்பது அச்சான்

---

* மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்துள், ஐந்தாம் பகுதி திருச்சதகம் என்ற பெயருடையது; 100 பாடல்கள்; இதுவே தமிழ்மொழியில் முதலாவது எழுந்த பதிற்றுப் பத்தந்தாதியாகும்.

றோர்க்கு மெய்புகு கருவிபோல போரில் புக்கார் வலியாய் முன் நிற்றலின். இச்சிறப்பு நோக்கி இதற்குச் சான்றோர் மெய்ம்மறை என்று பெயராயிற்று.

ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் அதன் துறை, வண்ணம், தூக்கு என்பன சொல்லப்பட்டிருக்கும். இவர் அவற்றை நன்கு விளக்குகிறார். இவ்வுரையினால் செந்தூக்கு, வஞ்சித்தூக்கு முதலிய பெயர்கள் எவ்வாறு பொருந்துகின்றன என்பதை நன்கு அறியலாம். ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் 'இதனால் இன்னது பெறப்பட்டது' என்று எடுத்துக்காட்டுகிறார். "இதனால் சொல் லியது அவன் வென்றிச்சிறப்பும் தன்நாடு காத்தற்சிறப்பும் உடன் கூறிவாயிற்று" என்பனபோன்ற கருத்துரைகளைக் காண்க. இவர் வேறு பாடங்களையும் தந்து, வேறு உரைப்பாரும் உளர் என்று குறிப்பிடுகின்றார் (13).

இவ்வுரை பதவுரையாகவுமில்லாமல், குறிப்புரையாகவு மில்லாமல், சில கருத்துக்களை மட்டும் விளக்கிக்கொண்டு போவது. பல விளக்கங்கள் மிகவும் சுவையாக உள்ளன. "ஆடு சிறையறுத்த நரம்பு என்றது, கின்னர மென்னும் புள்ளின் இசையெழுகின்ற சிறகினைத் தோற்பித்த யாழ்நரம்பென்றவாறு" (43 வரி 21) "களங்காய்க் கண்ணி நார்முடி என்றது, களங்காயாற் செய்த கண்ணியும் நாராற்செய்த முடியும்; தான் முடிசூடுகின்ற காலத்து ஒரு காரணத்தால் முடித்தற்குத் தக்க கண்ணியும் முடியும் உதவாமையால், களங்காயாற் கண்ணியும் நாரால் முடியும் செய்து கொள்ளப்பட்டன என்றவாறு" (38).

நிலநீர் வளிவிசும்பு என்ற நான்கின்
அளப்பரி யையே,
நாள் கோள் திங்கள் ஞாயிறு கனையழ்ல்
ஐந் தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை,
போர் தலை மிகுந்த ஈ ரைம் பதின்ம ரொடு.

என்ற வரிகளுக்கு (பாடல் 14) இவர் எழுதுகின்ற உரை மிகவும் விளக்கமாக உள்ளது: "பூதங்கள் ஐந்தையும் எண்ணாது தீயை ஒழித்தது: மேல்விளக்கத்துக்கு உவமமாக எண்ணுகின்ற வற்றோடு கூட்ட வேண்டியென்பது. ஈண்டுக் கோள் என்றது, விளக்கமில்லாத இராகு கேது என்னும் இரண்டு நீக்கி, நின்ற ஏழினும் சிறப்புப்பற்றி, வேறு எண்ணப்பட்ட திங்கள் ஞாயிறு

என்றும் இரண்டும் நீக்கி, நின்ற ஐந்தையும் என்பது. ஐந்தென்று தொகைகூறியது, நாள் கோள் என்னும் அவற்றின் தொகைக் கூற்றின் ஒரோவொன்றாக்க என்பது."

இவர் சில இடங்களில் எழுதும் இலக்கணக் குறிப்புக்கள் பிற உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டாதன என்பது ஐயரவர்கள் குறிப்பு.

**காலம் ஆசிரியர்**

76 ஆம் பாடலில் சில்லேராளர் என்ற தொடருக்கு உரையெழுதும்போது, "சிறிய ஏராளர்" என்று குறிப்பிட்டு, "சின்னமையால் சின்னூல் என்பதுபோல, சிறுமையாகக் கொள்க" என்று எழுதுகிறார். சின்னூலாவது நேமிநாதம்; அதன்காலம் 1195 ஆகும். இவ்வுரை அதற்குப் பிற்பட்டதாகவே, அடுத்ததாகிய 13ஆம் நூற்றாண்டின் பிற்பாதி என்று இவ்வுரையின் காலத்தை வரையறை செய்யலாம்.

இவ்வாசிரியரின் பெயர் வரலாறு ஒன்றும் விளங்கவில்லை. பண்டைத்தமிழ் இலக்கண இலக்கிய உரைகாரர் மிகப் பலர். சிலர் பெயர் தெரிந்து சிறப்பு வாய்ந்தவர்கள்; சிலர் பெயர் தெரியாமல்கூடச் சிறப்பு மிக்கவர்கள். ஒவ்வோர் உரையும் தனித்த சிறப்பும் நயமும் உடையது. இவ்வுரையும் ஒரு சுவையான நயம் பொருந்திய உரையேயாகும்.

## பதினெண் கீழ்க்கணக்கு உரைகள்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பாலானவற்றிற்குப் பழையவுரைகள் பல எழுதப்பெற்றிருந்தன. திருக்குறளுக்கு வெவ்வேறு காலங்களில் உரைகள் எழுந்தன. இவை பத்தாம் நூற்றாண்டில் மணக்குடவர் தொடங்கி, பதினாலாம் நூற்றாண்டில் பரிதியார் வரையில், ஐந்து உரைகள் இப்பொழுது கிடைத்துள்ளன. பின்னும் ஐந்து உரைகள் எழுதப்பட்டிருந்தன என்று தெரிந்தும் உரைகள் கிடைக்கவில்லை. அப்படியே நாலடியார்க்குப் பதுமனார், தருமர், மற்றொருவர் உரை ஆகிய மூவர் உரை கிடைத்து அச்சிடப்பட்டுள்ளன. பின்னும் பல இருந்திருத்தல் கூடும்.

இவ்விரு நூல்களும்போக, ஏனைய நூல்களுக்கும் பண்டைய உரைகள் இருந்திருக்கின்றன. ஆனால் அவ்வுரைகள் சிறப்பறிந்து

போற்றப்படவில்லை. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் குறள், நாலடிபோக மற்றவற்றுள் பழமொழி நானூறு, திரிகடுகம், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, முதுமொழிக் காஞ்சி என்பவை நீதிநூல்கள் என்ற கருத்திலும், ஆசாரக்கோவை நீதிதருமமும், ஆசாரமும் கூறுகின்ற நூல் எனவும் சிறப்பாகப் பயிலப்பெற்று வந்திருக்கின்றன; ஏனைய வற்றுக்கு இந்தஅளவு பயிற்சி கற்றோரிடை இல்லை. மேலும், பள்ளிப் பிள்ளைகள் பயிலுவதற்காகவே பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவை அச்சிடப்பெற்றன. அச்சிட்ட புலவர்கள் பழைய உரைகளைப் பயின்று, தாங்கள் புதிய உரைகளை எழுதி னார்களேயன்றி, பழையவுரைகளைப் பதிப்பிக்கவில்லை. மூல இலக்கியங்கள் மட்டுமே சிறப்புடையனவன்றி, உரைகள் அத் துணைச் சிறப்புடையன அல்லவென்று அவர்கள் கருதினர் போலும். பெருநூல்களாகிய குறுந்தொகைக்குப் பேராசிரியர், நச்சினார்க்கினியர் போன்ற பெரும்புலவர்கள் செய்த உரைகளே இன்று வழங்காது போயிருக்கும்போது, சிறுநூல்களின் உரை கள் வழங்காது போனதில் வியப்பில்லை. எனினும், ரா. இராக வையங்கார், அனந்தராமையர், வையாபுரிப்பிள்ளை போன்ற அறிஞர் சிலர், கிடைத்தவரை கீழ்க்கணக்கு நூல் உரைகளையும் நன்கு ஆராய்ந்து பதிப்பிக்க முயன்றிருக்கிறார்கள். இங்கு, கிடைக் கின்றவரை இவற்றை ஆராய முற்படுவோம்.

ஒரு கருத்தைச் சொன்னால், இங்கு ஆராய்வதன் பொருத் தமும் விளங்கும். கிடைக்கின்ற இவ்வுரை நூல்கள் காலத்தால் பழையன என்பது தெளிவு. உரையின் நடையையும் சொற் களையும் பொருளையும் நன்கு ஊன்றிப் பார்க்கும்போது, இவை பிற்காலத்தன அல்ல, அதாவது 14ஆம் நூற்றாண்டு அல்லது அதற்கு முற்பட்டு எழுந்தன என்பது நன்கு தெரிகிறது. இவையாவும் ஏறக்குறைய ஒருகால எல்லைக்குள் செய்யப் பெற்றன என்று கருதலாம். மிகப்பல உரைகள் தோன்றிய கால மான 12 - 14 ஆகிய நூற்றாண்டு எல்லைக்குள் இவைகளும் எழுதப் பெற்றிருத்தல்கூடும். ஆகவே, இக்கால எல்லையின் இடைப்பகுதியில் இவற்றை ஒருசேரத் தொகுத்து இங்கு ஆராய் கிறோம். எவ்விளக்கமும் பெறாத இவ்வுரையாசிரியர்கள் சில ராயினும் பலராயினும், காலத்தால் இவர்கள் சற்றுமுன் பின்னாக இருப்பினும், இவ்வாராய்ச்சிக்கு இழுக்காகாது.

கிடைத்துள்ள பழைய உரைகள் ஒன்றிலேனும், உரை ஆசிரியர் பெயரோ, பிறவரலாறுகளோ, காலக்குறிப்போ - எதுவும் காணப்படவில்லை. இலக்கிய வரலாற்றுச் செய்திகள் நிறைவுபெறும் பொருட்டே இந்த இடத்தில் இவற்றை ஒரு சேரக் குறிப்பிடுகிறோம். இதனால், இவ்வுரைகள் யாவுமே 13ஆம் நூற்றாண்டில் செய்யப்பெற்றன என்பது முடிந்த பொருளன்று. எனினும், இந்நூற்றாண்டை மையமாக வைத்துச் சிலகாலம் முன்பு அல்லது பின்பு இவை தோன்றின என்றே யாம் கருது கிறோம்.

இனி, குறளையும் நாலடியையும் நீக்கி, ஏனைய நூல்களை யும் அவற்றின் பழையஉரை, பதிப்பு விவரம் முதலியவற்றையும் கீழே ஓர் அட்டவணைப்படுத்தித் தந்திருக்கிறோம். திருக்குறள் உரை செய்தார் பதின்மர் என்றும், அவர்களுள் கிடைப்பன ஐந்து என்றும் வேறிடத்தில் குறிப்பிட்டோம். இவ்வைந்தும் பின்வரும் காலமுறைப்படி அமையும்: மணக்குடவர் 950 - 1000; பரிப்பெருமாள் 1050 - 1100; காலிங்கர் 1225; பரிமேலழகர் 1272; பரிதியார் 1450. நாலடியார் உரைகள் பின்வரும் முறைப்படி அமையும்: பதுமனார், தருமர், மதிவரர், விளக்கவுரை (யாவும் 13ஆம் நூற்றாண்டு). இவற்றுள், மதிவரர் உரை கிடைத்திலது. (ஒருகால் இவர் உரை 11ஆம் நூற்றாண்டாகவும் இருக்கலாம்.)

ஏனைய பதினாறு கீழ்க்கணக்கு நூல்களையும், 'நாலடி நான்மணி' என்ற பாடல் குறிப்பிடும் வரிசையிலேயே ஆராய் வோம்.

**1. நான்மணிக் கடிகை:**

பழையவுரை, 1903: செந்தமிழ், ரா. ராகவையங்கார் பதிப்பு, 1924: வே. ராஜ கோபாலையங்கார் பதிப்பு, 1944: வையாபுரிப் பிள்ளை பதிப்பு.

இவ்வுரையானது பொழிப்புரையாகவே இயன்றுள்ளது. உரைகாரர், அடங்கி வரம்புக்குட்பட்டு எழுதுவது போற்றத் தக்கது. ஒருசொல்லும் விடாமல் எழுதுகிறார்; உரை புறநானூற்று உரைபோல உள்ளது. சுருக்கமாயும் தெளிவாயும் உள்ளது. இவர் வேறு பொருளும் சில இடங்களில் கூறுவதோடு, ஏழு இடங்களில் வேறு பாடங்களைக் குறிப்பிடுகிறார். சொல் வரு வித்துப் பொருளுரைக்க என்று சில இடங்களில் எழுதுகிறார். அபூர்வமாய்க் கருத்தைத் தனியே சொல்கிறார். மனைக்கு

விளக்கம் மடவாள் (103) என்ற பாடல் உரையில் புறநானூற்றை ஒப்பிட்டுக் காட்டுகிறார். காரணகாரியத் தொடர்பு விளங்க இவர் உரை எழுதுவது சில இடங்களில் மிக்க நயமாக உள்ளது. மந்திரம் - மறைமொழி 12; தீதில் ஒழுக்கம் - தான் பிறந்த குலத்துக்குத் தீதுவாராமல் ஒழுகும் ஒழுக்கம் 8; ஏலாதான் பார்ப்பான் - ஒருவரோடு என்றும் மாறுபடாதான் பார்ப்பான் ஆவான் 54. தன்னின் இடும்பை (96) என்றவிடத்து, தற்பெருமை யான் வரும் இடும்பை என்று இவர் எழுதுவது, சிறப்பான நகைச் சுவையைப் புலப்படுத்தி, உலகியலறிவையும் நன்கு காட்டுகிறது.

6ஆம் பாடலில், அறிவார் யார் நல்லாள் பிறக்கும் குடி என்பதற்கு அறிவார் யார் நல்லறிவினை உடையானொரு மகன் பிறக்கும் குடியினை என்று இவர் எழுதுகிறார். இது சம்பிரதாய மான உரை. குறளிலும் (1030) கருத்தூன்றும் நல்லாள் இலாத குடி என்ற இடத்து, தாங்கவல்ல நல்ல ஆண்மகன் பிறவாத குடி என்றே எல்லா உரைகாரரும் எழுதியுள்ளனர். அந்த இடத்து அவ்வுரை பொருந்துவதாகலாம். ஆனால், நல்லாள் என்ற சொல், நல்லவள் என்றும் திரு என்றும், பெண்ணையே குறித்தல் மரபு, நாணென்னும் நல்லாள், நிலமென்னும் நல்லாள் என்ற குறள் தொடர்களைக் காண்க. இவைபோல இங்கும் நல்லாள், திரு என்றே பொருள்படும். கள்ளி வயிற்று அகில் பிறப்பது போல, மிகத் தாழ்ந்ததான குடியிலும் திருவையொத்த உயர்ந்த பண்புடைய பெண் அவதாரம் செய்தல்கூடும் என்றே இங்கு பொருள் செய்தல் வேண்டும் என்று டி.கே. சிதம்பரநாத முதலியார் சொல்வார்.

**2. இனியவை நாற்பது:**

பழையஉரை. 1845; இராமானுச கவிராயர் பதிப்பு. 1905: செந்தமிழ், ரா. ராகவையங்கார் பதிப்பு. 1949: வையாபுரிப் பிள்ளை பதிப்பு.

இவ்வுரை சொல்விடாது எழுதுகின்ற பொழிப்புரையா யுள்ளது, சுருக்கமும் தெளிவும் பொருந்தியது. உரையின் பின், நான்கு இடங்களில் சொற்களை விளக்கியுரைக்கிறார். சலவர் - வஞ்சகர் 21; சோர்தல் - நீங்குதல் 24. வெற்றல் - வென்றி 36; அச்சு இன்மை - அஞ்சத்தகும் துன்பமின்மை 38.

**3. இன்னா நாற்பது:**

பழைய உரை. 1944: வையாபுரிப்பிள்ளை பதிப்பு.

இவ்வுரையும் சொல்லை அடியொற்றி எழுதுகின்ற பொழிப்புரை. நான்கிடங்களில் உரைகாரர் வேறு பொருள் உரைக்கிறார். தெளிவான உரை. மந்திரம் - மறைமொழி (2), கடன் உடையார் - தனிசு உடையார் (12) என்பன இவர் கூறும் சிறப்புச் சொற்கள்.

**4. கார் நாற்பது:**

பழையஉரை ஒரு பகுதிக்கே உண்டு; 23 -38 பாடல்களுக்குக் கிடைக்கவில்லை.

**5. களவழி நாற்பது:**

பழையஉரை. 1931: அனந்தராமையர் பதிப்பு.

இவ்வுரை முன் உரைகளைப் போல, சுருக்கமாயும் தெளிவாயும் இருந்தபோதிலும், இதன் இயல்பே வேறு. மூலத்தின் சொற்களை அப்படியே அமைத்து உரைகாரர் எழுதிக் கொண்டு போகிறார். அதனால் இவர் மிகவும் கற்றவர்க்கே தம் உரையைக் கூறுகிறார் என்று தோன்றுகிறது. ‘புனனாடன் - நண்ணாரை அட்ட களத்து’ என்பதுபோல நூலின் பாடல்கள் எல்லாவற்றின் இறுதிப்பகுதி அமைந்திருக்கும். இப்பகுதிக்கு இவர் உரை எழுதாமல் இதை அப்படியே அமைத்துக் கொள்கிறார். ஓரிடத்தில் வேறுரையும் குறிப்பிடுகிறார் (6). வஞ்சி - கருவூர் என்பது இவருடைய குறிப்பு (39).

**6. திணைமொழி ஐம்பது:**

பழையஉரை. 1918: சோமசுந்தரதேசிகர் பதிப்பு. 1922: மணி திருநாவுக்கரசு முதலியார் பதிப்பு.

இவ்வுரை தெளிவான எளிய பொழிப்புரையாக மட்டும் உள்ளது. பதசாரம், உள்ளுறைப் பொருள், இலக்கண விளக்கம் முதலான எச்சிறப்பும் இதனிடத்து இல்லை.

**7. ஐந்திணை எழுபது:**

பழையஉரை. 1926: சோமசுந்தரதேசிகர் பதிப்பு. 1931: அனந்தராமையர் பதிப்பு.

இவ்வுரை 24 பாடல்கள் வரையிலுமே உள்ளது. உள்ள வரையில் தெளிவான பொழிப்புரை; வேறு விசேடம் இல்லை.

**8. திணைமாலை நூற்றைம்பது:**

*பழையஉரை. 1908: செந்தமிழ், ரா. ராகவையங்கார் பதிப்பு.*

*இவ்வுரை பிற அகத்திணை நூல்களினும் பார்க்க விளக்கமும் சிறப்பும் கொண்டது. எளிமையாகவும் தெளிவாகவும் உள்ளது. 127 பாடல் வரையில்தான் உரை கிடைக்கிறது. ஒரு பாடலுக்கு (3) வேறுபாடமும் வேறு உரையும் சொல்வாருமுளர் என்று காட்டுகிறார்; 88இல் இவரே வேறு உரையும் கூறுவார். இலக்கணக் குறிப்பும் (99) விளக்கங்களும் (4, 17, 62, 95) உள்ளன. தொடர்ந்து பொழிப்புரையாக எழுதும் இவர், இரண்டு பாடல்களுக்கு மட்டும் தொடர்தொடராக உரை கூறி முடிக்கிறார் (103, 108).*

**9. ஐந்திணை ஐம்பது:**

*பழையஉரை. 1912: செந்தமிழ், ரா. ராகவையங்கார் இரண்டாம் பதிப்பு.*

*இது திருத்தமும் தெளிவும் சுருக்கமும் கொண்ட பொழிப்புரை. விசேடக் குறிப்புக்கள் எவையும் இல்லாவிடினும், மூலத்தை நன்கு விளக்குவது.*

*இந்நான்கு அகத்திணை நூல்களுக்கும் அமைந்த உரைகள் ஒரே தன்மையுடையனவாயிருப்பது குறிப்பிடத்தக்கது. தெளிவும் சுருக்கமும் உடைய உரை, மூலத்தின் சொற்களின் வைப்பு முறையை ஒட்டியே எழுதியிருப்பது, பிற விளக்கங்கள் குறைவாயிருப்பது - இவை இவற்றின் பொதுஇயல்புகள்.*

**10. திரிகடுகம்:**

*பழையஉரை. 1944: வையாபுரிப்பிள்ளை பதிப்பு.*

*இவ்வுரையும் பிறவுரைகளைப் போல மூலத்தை விடாது அடியொற்றிச் செல்வதாய் உள்ளது; இது பொதுவாக பழைய உரைகளுக்கெல்லாம் அமைந்த ஒரு சிறப்பியல்பு. (இதைப் புறநானூற்றுரையில் மிக நன்றாய்க் காணலாம்.) இவ்வுரை வையாபுரிப் பிள்ளையவர்களுக்கு உண்மைப் பாடங்காணப் பெரிதும் உதவியிருக்கிறது. பல்வேறு சமயப் புலமையுடையவராதலால், இவ்வுரையாசிரியர் மூன்றிடங்களில் (18, 59, 98) வேறுபொருளும் கூறுகிறார். ஓரிடத்தில் (72) வேறுபாடமும் வேறுரையும் குறிப்பிடுகிறார்.*

### 11. ஆசாரக் கோவை:

*பழையஉரை. 1857: தில்லையம்பூர் சந்திரசேகர கவிராச பண்டிதர் பதிப்பு. 1898: செல்வ கேசவராய முதலியார் பதிப்பு.*

*மிகச்சிறிந்த பொழிப்புரை. நூலின் கருத்தை நன்கு எளிய சொற்களால் விளக்கிச் செல்கிறது. ஓரிடத்தில் வேறுரையும் கூறுகிறது (44). ஏடுகளில் முழுமையும் உரைப்பேதம் இருக்கும் போலும். அச்சிட்ட செல்வகேசவராய முதலியார் பதிப்பில் இறுதிப் பகுதியில் 14 பாடல்களுக்கு (54 - 5, 77 - 8, 82 - 3, 87 - 91, 93 - 4, 99) முழுமையும் வேறான உரையே பிரதிபேதமாகத் தரப் பட்டுள்ளது. இதைப் பார்க்கும்போது, இரண்டாவது உரை தனியே இருந்திருக்கும் என்றெண்ணத் தோன்றுகிறது.*

### 12. பழமொழி நானூறு:

*பழையஉரை. 1874: சுப்பராயச் செட்டியார் பதிப்பு. 1918, 1922: நூறு நூறு பாடல்கள் உரை, செந்தமிழ், திருநாராயணையங்கார் பதிப்பு. 1918: செல்வ கேசவராய முதலியார் பதிப்பு.*

*இவ்வுரையும் மிகச் சிறந்த பொழிப்புரை. தெளிவும் சுருக்கமும் உடையது. ஆங்காங்கு உரையாசிரியர் சில சொற் களுக்கு விளக்கமும் கருத்துக்களுக்கு விளக்கமும் கூறுகிறார். (186, 292, 234, 334, 387.) பழமொழியொன்றை எடுத்து விளக்கு கிறார் (57). வேறு பாடங்களையும் (76, 257) வேறு உரை கூறக் கூடும் என்பதையும் (99, 314, 333) குறிப்பிடுகிறார். சில இடங் களில் பாடலின் கருத்து இன்னது என்று தெளிவுபடுத்துகிறார். (12, 24, 146, 222, 226, 303, 362). மகண் மறுத்து மொழிதல் என் னும் புறத்துறையைக் கூறுகிறார் (338). முதலிலார்க்கு ஊதியம் இல்லை என்ற குறட்பாவையும், 'காமஞ்சான்ற கடைக்கோட் காலை' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தையும் (312, 398) தம் உரையுட் பெய்து எழுதுகிறார்.*

### 13. சிறுபஞ்சமூலம்:

*பழைய உரை. 1875: கொ. சண்முகசுந்தர முதலியார் பதிப்பு. 1944: வையாபுரிப்பிள்ளை பதிப்பு.*

*சிறுபஞ்சமூலம் சற்றே பொருள் கருகலான நூல். மற்ற நீதி நூல்கள் போல, இதுவும் ஏலாதியும் அதிகம் பயிலவில்லை. இதன் பழையவுரையே ஓரளவு பொருள் விளங்கும்படி செய்து,*

ஐந்து என்ற பொருள் வரையறையைத் தெளிவுபட அறிய உதவுகிறது (1, 16, 82, 84). சில சொற்களுக்குப் பொருள் எடுத்துச் சொல்கிறார். நூலாசிரியர் சைனர்; இவ்வுரையாசிரியரும் சைனர் போலும். ஆம்பல்வாய் என்ற பாடல் உரையில், அரிவையை எவ்வாறு மூங்கிலைப்போலக் கருதி இகழவேண்டும் என்று இவர் விளக்கிக் கூறுவது, பெண்ணை இகழ்ந்து பேசும் ஒரு சைனருக்கு இயலுமேயன்றிப் பிறருக்கு இயலாது:

**ஆம்பல்வாய் கண்மனம் வார்புருவம் என்றைந்தும்**
**தாம்பல்வாய் ஓடி நிறைகாத்தல் – ஓம்பார்**
**நெடுங்கழை நீண் மூங்கில் நியமத்தா ராட்டும்**
**கொடுங்குழை போலக் கொளின்.**

எ - து: பல்லும், வாயும், கண்ணும், மனமும், புருவமுமாகிய உறுப்பு ஐந்தையும் கண்டு அரிவையர்க்கு அன்பாய்த் தாம் பலவிடங்களினோடித் தங்கள் நிறையைக் காக்கமாட்டாதார், குவளையையும் தாமரையையும் அசைவிக்கின்ற காதிற் கொடுங் குழையையுடைய அரிவையை நெடிதாய்த் திரண்டு நீண்ட மூங்கிலைப்போலக் கருதி இகழ்வாராயின், அவர்க்கு நிறை காக்கலாம். அரிவையை மூங்கில்போலக் கொண்டிகழ்தலாவது அம்மூங்கிலிலுள்ள முத்தம் அவளது பல்லாகவும், மூங்கிலின் குழல் அவள் வாயாகவும், மூங்கிலின் கண் அவள் கண்ணாகவும், மூங்கிலின் பொய்ப்பட்ட உள்ளம் அவள் மனமாகவும், மூங்கிலின் வில் அவள் புருவமாகவும் கொண்டு இகழ்தல்; இவ்வகை கருத, அவ்வரிவைமேல் அன்பு நிகழாதெனக் கொள்க என்ற பாடலும் உரையும் காண்க.

### 14. முதுமொழிக் காஞ்சி:

பழையஉரை. 1919: செல்வக்கேசவராய முதலியார் பதிப்பு. நூல், குறைந்த வரியுடைய பாடல்கள். உரை, விளக்கமான பொழிப்புரையாகும்.

### 15. ஏலாதி:

பழையஉரை. கழகப்பதிப்பு 1939.

இவ்வுரையானது தெளிவான பொழிப்புரையாகவும், ஏலாதிச் செய்யுள் ஒவ்வொன்றிலும் அமைந்துள்ள ஆறு அல்லது ஏழு பொருள்களைத் தெளிவாகவும் உணர்த்துவதாய் உள்ளது. உரையில் பயில்கின்ற பின்வரும் தொடர்கள் குறிப்பிடத்தக்கன.

பிரமசாரி முதலிய நால்வர், திருநான்மறை நெறியில் ஒழுகு வோர், நூல் - பெரியோராற் செய்யப்பெற்ற ஆகமம், துதிக்கும் தோத்திரம். 50ஆம் பாடலில் உணவும் எண்ணெயும் உடுக்கை யும் மாத்திரம் சொல்லியிருக்க, இவ்வுரைகாரர் இவற்றோடு கணக்கு நூலையும் இலக்கண நூல்களையும், பயன்படும் நுட்பத்தோடும், தெளிந்த அறிவோடும் சேர்த்துக் கூறியிருப்பது புதுமையாக உள்ளது.

### 16. கைந்நிலை:

பழையஉரை. 1931: அனந்தராமையர் பதிப்பு.

கைந்நிலை செய்யுட்கள் 18 கிடைக்கவில்லை. அதுபோலவே, உரையின் பல பகுதிகளும் கிடைக்கவில்லை. கிடைக்கின்ற பகுதி, முன் அகத்திணை நூலுரைகளுக்குச் சொல்லியதுபோல, மூலக்கருத்தை விளக்கும் சுருக்கமான பொழிப்புரையாக அமைந் துள்ளது என்று மட்டுமே கூறமுடியும்.

## குறள் உரை - தாமத்தர், நச்சர், தருமர்

இம்மூவர் உரைகளும், திருக்குறள் கடவுள் வாழ்த்து 5, 6ஆம் பாடல்களுக்கு மட்டும், தமிழ்ப் பொழிலிலும், திருக்குறள் உரைவளம் தண்டபாணி தேசிகர் பதிப்பிலும், திருக்குறள் உரைக்கொத்து காசிமடத்துப் பதிப்பிலும், அச்சாகியுள்ளன. இவற்றுள், தருமர் உரையானது முழுமையும் காலிங்கர் உரை யாகவே இருக்கிறது. மற்ற இரண்டும் தம்மில் பெரும்பகுதி ஒத்துள்ளன. இவ்வுரை ஏடுகள் கிடைப்பதாகத் தெரியவில்லை. இப்பகுதிகளில் ஒருகால் ஏடு எழுதினோர் இப்பெயர்களை எழுதிக் கொண்டார்கள் போலும். இவ்வுரையாசிரியர்களின் காலம் 13ஆம் நூற்றாண்டு என்று பலர் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கு ஆதாரம் புலப்பட்டிலது. நூலே கிடைக்காதபோது காலம் சொல்ல முயல்வது பயனில்லாதது. எனினும், விளக்க மில்லாத சிறப்பான பல உரைகளைக் குறிப்பிடுகின்ற இந்த இடத்தில், செய்திகள் நிறைவுபெறும் பொருட்டு இவர்களை யும் குறிப்பிட்டோம்.

இத்தருமர், நாலடியார் உரைசெய்த தருமனாரே போலும்; அவ்வுரையை அடுத்து ஆராய்கிறோம். மல்லர் திருமலையர் உரைகள் பற்றி எச்செய்தியும் தெரிந்திலது.

## நாலடியார் உரைகள்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் இன்னவை என்று குறிப் பிடும் பழம்பாடல் நாலடி என்றே தொடங்குகிறது:

நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணை முப்
பால் கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோடு ஏலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு.

இந்த நாலடி, திருக்குறளுக்கு அடுத்த பெருமையுடையது; நாலடிநானூறு என்பது வழக்கு. பொருட் சிறப்பால், நாலடியார் என்று சிறப்பிக்கப்பெறுவது. திருஞான சம்பந்தரோடு புனல் வாதம் செய்யப்புகுந்த காலை, வையையாற்றிலிட்ட சமணர் ஏடுகள் யாவும் நீரால் அடித்துச் செல்லப்பெற்றுக் கடலை அடைந்தனவென்றும், அவ்வாறு கடலை அடையாமல் தப்பி யவை நானூறுவெண்பா எழுதிய ஏடுகள் என்றும், இவை திரட்டப்பெற்று நாலடிநானூறு என்று வழங்கலாயின என்றும், ஒரு பழைய வரலாறு சொல்வதுண்டு. நாலடியார் 200, 296ஆம் பாடல்களில் குறிப்பிடப்பெறும் பெருமுத்தரையர் என்பார் வரலாறு முழுமையும் தெரியாவிட்டாலும், இப்பரம்பரையினர் ஏழு எட்டாம் நூற்றாண்டுகளில் பல்லவர்களின் கீழ், செந்தலை, வல்லம் ஆகிய இடங்களைத் தலைநகராகக் கொண்டு சிறிது காலம் சிறுநிலப்பகுதியை ஆண்டு வந்தார்கள் என்று திட்ட மாய்த் தெரிகிறது. ஆகவே, சம்பந்தர் காலமாகிய ஏழாம் நூற் றாண்டின் இடைப்பகுதியில் நாலடியார்ப் பாடல்கள் பாடப் பெற்றன என்று கொள்வதில் பெரிதும் தவறு ஏற்படாது. ஒரு கால், அக்காலத்தில் பெருமுத்தரையர் எவரேனும் குறுநிலத் தலைவராய் ஆட்சி புரிந்து, சமணராயும் இருந்து சமண முனிவர்களுக்கு ஆதரவு அளித்திருக்கலாம். பெருமுத்தரையர் வரலாறு முழுமையும் இன்று தெளிவுபட விளங்காமையால், இவ்வாறு இருக்கலாம் என்று சொல்வதற்கில்லை. அன்றியும், வரலாறு விளங்காத களப்பிரர் காலத்துக்குரியது இப்பகுதி என்பதும் நினைவு கூரத்தக்கது.

அன்றியும், சம்பந்தர் காலத்தில் சுமார் நானூறு பாடல்கள் தொகுக்கப்பட்டு, இரண்டொன்று குறைவாயிருந்து, அடுத்த

நூற்றாண்டில் இவ்விரு பாடல்களும் சேர்க்கப் பெற்றிருக்கலாம். ஆற்றிலிட்டுக் கிடைத்தவை திட்டமாய் நானூறுதான் என்று சொல்வதும் அத்துணைப் பொருத்தமாயில்லை. இதற்குமேல் நாலடியாரின் கால ஆராய்ச்சியில் நாம் இப்போது இறங்க வில்லை. இது அதற்குரிய நூற்றாண்டு ஆராய்ச்சியில் விளக்கப் பெறும்.

மற்றொரு வரலாறும் சொல்வதுண்டு. பாண்டியன் சமண சமயம் மேற்கொண்டு ஒழுகியபோது, அவனிடம் எண்ணாயி ரம் சமண முனிவர் அவைப்புலவராய்; இருந்தனர். ஒரு சமயம் பாண்டிநாட்டில் கொடிய பஞ்சம் ஏற்பட்டபோது, இச்சமண முனிவர் வேறிடம் சென்று விட்டனர். அரசனிடம் சொன்னால் அனுமதிக்கமாட்டான் என்று சொல்லாமலே போய்விட்டார்கள். போகுமுன் அவர்கள் தாங்கள் இருந்த பலகையின் கீழ் ஒவ்வொரு வெண்பாவைப் பாடிவைத்துச் சென்றனர். அவர்கள் சென்றதை அறிந்த அரசன் வருத்தமும் கோபமும் அடைந்தான். பாடல் களை அவன் கண்டபோது அவற்றையெடுத்து வைகையில் எறியச் சொன்னான். எல்லா ஏடுகளும் கடலோடு சென்று மறைய, சில மட்டும் ஆற்றோடு செல்லாது எதிர்த்துச் சென்றன. அரசன் இவற்றைக் கண்டு அதிசயித்து, இவற்றில் ஓர் சிறப்பு இருக்கிறது என்று கருதி எடுத்துப் பார்த்தபோது, இவை உலக நீதிகளைக் கூறும் அழகிய பாடல்களாய் இருக்கக் கண்டான். மகிழ்ந்து இவற்றை ஒரு நூலாக்கி, நாலடியார் எனப்பெயரிட்டு வழங்கச் செய்தான்.

இவ்விதமாக, ஏடு எதிரேறிச் சென்றது இரு வரலாறு களிலும் கூறப்பட்டுள்ளது. இரண்டும் ஒன்றுக்கொன்று முரண் என்று கருதவேண்டியதில்லை. சம்பந்தர் காலத்தில் எதிரேறிய ஏடுகளுக்கு, பஞ்சம் வந்தது என்ற கதை பிற்காலத்தில் புனையப் பட்டுள்ளது என்று கருதலாம்.

இவையாவும் தனித்தனிப் பாடல்கள் ஆனமையால், தொடர்பின்றி இருந்தன. பின்னர் இவற்றைப் பதுமனாரே பால் இயல் அதிகாரப் பாகுபாடு செய்தார். செயற்கையாக அவர் பாடல்களை இவ்வாறு பத்துப் பத்தாக வகுத்தபோது, பல பாடல்கள் அதிகாரங்களுக்குப் பொருத்தமில்லாமல் இருந்தன. இது இயல்பே.

## பதுமனார்

நாலடியாருக்குப் பலர் உரை எழுதியிருக்கிறார்கள். அவர்களுள் பதுமனாருரையும், தருமருரையும், ஆசிரியர் பெயர் விளங்காத மற்றோருரையும் தஞ்சை சரசுவதி மகால் வெளியீடாக நாலடியார் உரைவளம் என்ற பெயரோடு 1953இல் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளன.* இம்மூன்றில் காலத்தால் முந்தியதாகத் தெரியும் பதுமனாருரையை முதலாவதாக இங்கு ஆராய்வோம்.

### ஆசிரியர்

பதுமனாரே முதலாவதாக நாலடியாருக்கு உரையெழுதியவர். இவருடைய உரைப்பாயிரம் நூலின் அதிகார அடைவைக் கூறுகின்றது. பால் இயல் அதிகார அடைவுகள் இவரே முதன் முதலாகச் செய்தன. இவர் வரலாறு ஒன்றும் விளங்கவில்லை. இவர் சமயத்தால் சமணர் என்பது உரையகத்துக் குறிப்பால் தெரிகிறது. கடவுள் வாழ்த்துப் பாடலில், 'கால் நிலம் தோயாக் கடவுள்' என்ற தொடருக்கு உரையெழுதுமிடத்து, 'அவரது பெருமையை நினைப்பவர் உள்ளக் கமலமிசை இடைவிடாதே தோயுந் தன்மை உடைத்தான பாதங்களாதலால், நிலத்தின்கண் தோயாத பாதங்களை உடையவர்' என்கிறார். 140ஆம் பாடல் உரையில் அறிவன் - அனந்த ஞானம், அனந்த குணம் முதலான பெருமையை உடையவன் என்று எழுதுகின்றார். பூவின் மேல் வந்தருளும் இறைவன் என்று இவர் கூறுவது அருகனைக் குறிக்கும் என்பது தெளிவு (இது மலர்மிசை ஏகினான் என்ற திருக்குறள் அடியை நினைவூட்டும்). யாப்பருங்கலத்தின் கடவுள் வாழ்த்தாகிய 'வெறிகமழ் தாமரை மீமிசை யொதுங்கிய' என்பதையும் குறிப்பிடுவது (22) காண்க. இவற்றால் இவர் சைனர் என்பது தெளிவு. மற்றும் 64 கலைகளை இவர் திட்டமாக உரைத்திருப்பது இவருடைய புலமையைக் காட்டும். அங்கேயே இவர் வடமொழிப் பாடல்களை மேற்கோள் காட்டுவது இவருடைய வடமொழியறிவைக் காட்டும். எங்கும் உலகாயதத்தைக் கண்டித்து எழுதுகிறார்.

---

* இம்மூன்று உரைகளும் அல்லாத மற்றோர் உரை, பொழிப்புரை எம்மிடம் ஏட்டு வடிவத்தில் உள்ளது: இவ்வுரைக்கு இரண்டு ஏட்டுப் பிரதிகள் உள்ளன.

இவ்வாசிரியர் பதுமாசாரியர் என்றும் சொல்லப்பெறுவர் போலும். பின்வரும் கடவுள் வாழ்த்து உரைப்பகுதி காண்க:

“நாற்பது அதிகாரத்தாலடக்கிய தர்மார்த்த காமங்களாகிய புருஷார்த்தங்களை, எண்பெருங் குன்றத்தெண்ணாயிர மிருடிகளும், உக்கிரப் பெருவழுதி முன்னெழுதி நீரினொழுக்கப்பட்டு ஒரு பொருளின் மேற் பலவாய்ப் பரந்த எண்ணாயிரம் வெண்பாவுக்குள் எதிரேறின கவிகள் நானூறு; தருமநெறி வழக்காய்க் கிடந்த இந்தக் கவிகள் நானூற்றையும் நாற்பது அதிகாரத்திலும் பண்பாலும், பயனாலும் இன்பத்தாலும், சார்பாலும், பொருளுக்கேற்ப பத்து வெண்பாக்களை ஓரதிகாரமாக்கிப் பதுமாசாரியராற் சேர்க்கப்பட்ட சிறப்புப்பெயரால் நாலடியென்னும் பெயரால் முடிதற்கும், இதனையோதினாற்கு அறிவும், ஒழுக்கமும், வீடுபேறுமாகிய பயன் பெறுதற்குக் காரணமாகவும் இவ்வாசிரியனால் கடவுள் வணக்கஞ் சொல்லப்பட்டது.” இதனால் பதுமனார் ஒரு சமயத் தலைவராயிருந்து பதுமாசாரியரென்று வழங்கப்பெற்றார் என்றும், இவர் அதிகார அடைவு செய்ததோடு, நாலடி என்று நூற்பெயரமைத்தாரென்றும் கருதலாம். எனினும், இவருக்கு முன்வந்த உரையாசிரியர்களான இளம்பூரணர், யாப்பருங்கல விருத்தியுரைகாரர் அடியார்க்கு நல்லார் முதலியோர் நாலடிநானூறு என்றே வழங்குதல் இங்கு அறியத்தக்கது.

நாலடியைத் தொகுத்தவர் பதுமனார் என்றால், முன்னமே நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடப் பெற்றிருத்தல் இயலாது. அன்றியும், இவரும் மற்ற உரையாசிரியர்களும் ‘வானிடு வில்லின்’ என்ற கடவுள் வாழ்த்துப் பாடலுக்கும் சேர்த்து உரையெழுதியிருப்பதனால், இதை முன்னமேயே செய்யப்பெற்ற பாடல் என்று கொள்ளவேண்டும். எனினும், கடவுள் வாழ்த்துப் பாடல் மட்டும் ஒருகால் பதுமனாரே செய்தாரென்று கருதக்கூடும்; இவ்வுரைப் பகுதியில் பதுமாசாரியர் என்றிருப்பதால், இவரே தம்மை அவ்வாறு குறிப்பிட்டுக்கொள்ள மாட்டார் என்று கருதலாம். எனினும், பேராசிரியர் போன்றோர் ‘வானிடு வில்லின்’ என்ற இப்பாடலை எடுத்துக்காட்டுவதால், இது பழம் பாடலென்றே கருத வேண்டியுள்ளது. உரையுள் இவ்வாசாரியன் என்று வரும் சொல்லாட்சி ஐயத்தைத் தோற்றுவிக்கிறது. ஆசாரியன் என்றமையால், பதுமாசாரியரே என்றெண்ண இடமாகிறது; சைன முனிவர் என்று பொதுப்படக் கொள்ளுதலும் ஒன்று.

## நாலடியார் உரை

பதுமனாரின் உரை பின்வரும் பாயிரத்தை முன்வைத்துத் தொடங்குகிறது:

அறவியல் இருவகைத் தாம்; அவை தம்முள்,
துறவு ஏழ் இல்லறம் இருமூன்று என்ப;
பொருளியல் வகை ஏழ் புலப்படக் கிளப்பின்,
அரசியல் ஏழ்அதி காரம் ஆகும்;
நட்பியல் நான்கு அதிகாரம்; இன்பம்
மூன்றே; துன்ப வியல்அதி காரம்
நான்கே; ஒன்றே; பொதுவியல்; பகையியல்
கூறதி காரம் ஒன்றே; இன்ப
வகைதான் இருவகை: அவற்றுள், இன்ப
துன்பத்து அதிகாரம் ஒன்றே; ஏனை
இன்பம் கூறதி காரம் இரண்டே.

இதன்படி கிடைத்த நானூறு வெண்பாக்களையும் பதுமனார் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று இயலாகப் பிரித்தார் என்றும், இவற்றுள் அறவியல் துறவு - இல்லறம் என இரண்டு பிரிவு; பொருளியல் அரசு, நட்பு, இன்பம், துன்பம், பொது, பகை, நெறி என ஏழு; இன்பவியல் இன்ப துன்பம், இன்பம் என இரண்டு எனவும் அறிகிறோம். அன்றியும், இவர் துறவறத்தை முதலில் வைத்துப் பாகுபாடு செய்தமையால் துறவை வலியுறுத்துகின்ற சைன சமயத்துக்குரியவர் என்று தெளிவாகின்றது. மேலும், இவர் உரையைத் தழுவிப் பதவுரையும் கருத்துரையும் எழுதிய தருமரது உரையின் சிறப்புப்பாயிரம் பதுமனார் 40 அதிகாரங்களாக நாலடியை வகுத்து வைத்தார் என்று கூறுவது குறிப்பிடத்தக்கது.

நானூறு: அவற்றின் நயந்தெரிந் தோதிய
மதுமலர்த் தண்தார்ப் பதுமன் தெரிந்த
ஐயமில் பொருண்மை அதிகா ரம்தாம்
எய்யா நலத்த எண்ணைந்து.

கிடைத்த நானூறு பாடல்களை முயன்று அதிகார அடைவு செய்து, அதிகாரத்துக்குப் பத்துப்பாடல் வீதம் திருக்குறட் பாகுபாட்டைத் தழுவி அமைத்த பதுமனார் முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது. தனிப்பாடல்களாயுள்ளவை பின்வந்தோர் செய்யும் செயற்கையான அடைவுக்குள் அடங்குவது அருமை

என்பதில் ஐயமில்லை. எனினும், பதுமனார் இவ்வாறு செம்மை பெற ஓர் அடைவு செய்திருக்கிறார். தம் அடைவுக்கேற்பப் பாடல்களுக்குப் பொருள் அமைத்துக் காட்டுவதற்காகவே இவர் உரை எழுதினார் என்றும் சொல்லத் தோன்றுகிறது. உரையிறுதியில் காணப்படும் பாடல் இவர் உரைக்கு அமைந்த மற்றொரு சிறப்புப்பாயிரம் போலும்:

> **ஞாலத் துழிதரு நற்பாட்டே கொண்டடக்கி**
> **நாலடி நானூறெனப் பெயரா – வாலிதின்**
> **ஈட்டித் தொகுத்தான் இசைசால் பதுமனே**
> **கூட்டமைத்த மூன்றுபால் கொண்டு.**

பதுமனார் சில இடங்களில் அவதாரிகையும் உரையும் மிக்க விரிவாக எழுதியிருக்கிறார். இவற்றைப் பார்க்கும்போது இவரது புலமை எத்துணைச் சிறப்பானது என்பது நன்கு விளங்கும். இரண்டொன்றை இங்கே குறிப்பிடுவோம். யாக்கை நிலையாமை என்ற அதிகார அவதாரிகையில், மனித உடலின் உற்பத்தி வளர்ச்சியை விளக்குகிறார். பழவினை என்ற 11ஆம் அதிகார அவதாரிகையில் அளவையிலக்கணத்தை விரிவாகச் சொல்லுகிறார். சிலசமயம் அவதாரிகையில் சாமானியப் பொருள்களைக் கூட இவர் மிகவும் விளக்கியுரைக்கிறார். அவையறிதல் என்ற அதிகாரத்தின் அவதாரிகையைக் காண்க:

"அவை என்றது ஈண்டுக் கற்றறிவினையுடையார் திரட்சியினை; அறிகையாவது உலகத்துப் பொதுப்பட வழங்கும் நூல்களைக் கற்றவரும், அதனால் தத்தம் சமய நூல்களைக் கற்றவரும், இவ்விரு திறத்துக் கற்ற நூல்களையும் நுண்ணியதாக அறிந்திருப்பாரும், பாக்களைக் கற்றுந் தூலமாக அறிந்திருப்பாரும், மண்ணில் ஊன்ற இலச்சினையை இலச்சினைதான் எனவும் அன்றெனவும் ஒண்ணாமைபோல இருந்துள்ள சமயங்களையும் மற்றுமுள்ள சாத்திரங்களாற் பெறும் பயன்களையும் அறிந்து பரமார்த்தத்தினை உணர்ந்து இது கற்கில் அகப்படுவதொன்றன்று என்றும், ஈது ஒருவர்க்கு அறிவித்தலாவது அந்தகனுக்குச் சிவப்பு வெளுப்பாம் நிறத்தைக் காட்டுந்தன்மை என்று ஒன்றுஞ் சொல்லாதிருப்பாரும் ஆகிய இத்திரட்சியதனை அறிந்து, தாம் கற்றளவையும் இது சொன்னால் வெல்லும் இது சொன்னால் தோற்கும் என்று அறிதலும் அறியாதார் முன் ஒன்றும் சொல்லாதிருத்தலுமாம்."

இங்ஙனமே கற்புடை மகளிர் என்ற முப்பத்தொன்பதாம் அதிகாரத்தின் தொடக்கத்தில் இவர் எழுதியிருப்பது சுவையுடையதாக இருக்கிறது: "குல மகளிராய்த் தமக்கு இயல்பாக உடனே வளரும் நாணம், மடம், அச்சங்களினும் விழுமிதாகக் காக்கப் பட்ட கற்பினைச் சிறிதும் வழுவாமல் உடைய மகளிரது தன்மை கன்னிகையான காலத்துளதாகிய சுதந்திரத்திலும் தேவதன்மங் களினும் கருத்துப் பிறவாமலும், பர்த்தாவே சகல தெய்வங்களும், சகல தன்மங்களும், அவனுக்கான தொழில் செய்வதே சகல விரதங்களுமாகப் புத்தி பண்ணுதலும், தன்னலந் தீங்குகளிலும் அவன் சந்நிதியில்லாத விடத்தும் அவனையே புத்திபண்ணி யிருத்தலும், தந்தை தாய் சுற்றத்தவர்கள் முறைப்பெயரான வையே அறிந்தாற்போல உலகத்து வேறுள்ள பேரையும் மனிதர் என்னும் மாத்திரமே அறிந்து தன் புருடனைப்போல இவர்களும் புருடர் என்று அவர்கள்மேற் புருடபக்தி பிறவாமலும், அவன் கரணாதிகள் அவன் கருத்துவழி நிகழ்ந்தாற்போலத் தான் அனுகூலமாய் ஒழுகுதலுமாகிப் பதிவிரதா பாவமதனை வழு வாமல் உடைய மகளிரது தன்மை கூறுகின்றது."

இப்படியே இவர் பல பாடல்களின் உரையில் மிக்க விரிவாகச் செய்திகளைக் கூறுகிறார். 135ஆம் பாடல் 'கல்வி கரையில கற்பவர் நாட்சில' என்பதன் உரையில் மிக்க விரிவாக 64 கலைஞானங்கள், தத்துவங்கள் முதலியவற்றை ஆராய்கிறார். இங்கு இவர் குறிப்பிடும் வெகுவிதமான சாத்திரங்களுள் சோர சாத்திரம் என்பதும் ஒன்று. இத்தகையதொரு நூற்பிரிவு இருந்தது என்பதைக் களவுநூல் என்று அடியார்க்கு நல்லார் சிலப்பதி கார உரையில் குறிப்பிடுவதாலும் நாம் உணரலாம்.

நன்னிலைக் கண் தன்னை நிறுப்பானும் என்ற பாடலுக்கு இவர் எழுதியுள்ள விரிவுரை கற்று மகிழத்தக்கது. பின்வரும் பாடல்களும் பார்க்க - 207, 330, 384, கடைப்பட்டாரினும் கல் மிகவும் நல்லது என்ற பாடலின் விளக்கத்தில் இவர் எழுதுவது அறியத்தக்கது: தம்மைச் சேர்ந்தவர்க்குக் கல்லு மிகவும் உதவுகையாவது: ஒரு வடிவாக்கி நிறுத்திப் பிராணப் பிரதிட்டை செய்து வேண்டிக்கொள்ள அவன் நினைவின்படி கொடுக்கை யாலும், மாணிக்கமாகிய சாதியான கல்லினைத் தன் கையிலே இருத்தி நோக்கிக்கொண்டு போந்தவனுக்கு, ஒரு தோட்டத்

திலே தான் விலைப்பட்டு அனேகம் பொருளை வாங்கிக் கொடுத்து உதவி செய்தும், ஒரு வாய்க்காலுக்குப் பாலமாகப் படுக்க அதன்மேல் நடந்துபோம்படி இப்படி உதவிசெய்தும், தன்னை ஒரு பகைவன் தொடர்ந்து கொல்லவர ஒரு கல்லினை எடுத்தெறிய அவனைப் பிழைப்பித்து உதவி செய்தலுமாம்.

பல இடங்களில் பாடலில் கூறும் உவமையை இவர் தெளிவாக விளங்குகிறார். நட்பில் கடை இடை தலை என்ற மூன்றுக்கும் உவமையாகக் கமுகு தெங்கு பெண்ணை என்ற மூன்றும் சொல்லப்பட்டிருப்பதை இவர் நன்கு விளக்கி உரைக் கிறார் 216: "கடையாயார் நட்பில் கமுகனையர் - கமுகும் ஒரு தழும்பு பட்டால் அது விழுந்து போமளவுந் தழும்பு கிடப்பது போலக் கடையாயினார்க்கும் ஒருகுற்றஞ் செய்தால், அக்குற்றத் தைச் சாமளவும் மறவார். ஆதலால் அவருறவைக் கொள்ளாது ஒழிக. கமுகுக்கு நாள்தோறும் இறைக்கவும் மேற்றலையில் குற்றமாய புழுக்கடியும் பார்த்துப் பேணினாற்போல இவனுக்கு நாள்தோறும் செய்யும் நோய்க்கு அவுஷதஞ் செய்யவேண்டும். அது ஒழிந்தால் கமுகு தலைகெட்டு விழுந்தாற்போல இவனும் விழுமளவும் தீங்கு விசாரிப்பான் என்றவாறு. இடையாயார் தெங்கின் அனையர் - தெங்கிற்குத் தலையாலே தண்ணீர் சுமந்து அடியிலே வார்க்கப், பின் தலையாலே நீரைத் தருதலால் இவர்க்கும் முன்பு நன்மை செய்தால் பின்பு வரும். எண்ணரும் பெண்ணை போன்று இட்டஞான்று இட்டதே தொன்மை யுடையார் தொடர்பு - எண்ணுதற்கரிய பனையும் ஒரு நாள் விதையிட்டாற் பின்பு பாதுகாக்க வேண்டாம்; பின்பு பயன் பட்டகாலத்திலே சென்று பயன் கொண்டாற்போல அறிவும், ஒழுக்கமும், பெருமையும் , முயற்சியும், ஒழியாமல் தொன்று தொட்டு வரும் பழைமையையுடையார் உறவை விடாது கொள்ளுதல் நன்று என்று உரைப்பாருமுளர்.

குறட்பாடல்களை மேற்கோள் காட்டுவதோடு குறட் கருத்தையே உரைநடையாக எழுதுகிறார். விளங்காத மேற் கோள்களுள் வடமொழி மேற்கோள்களும் உள்ளன. வேறு பாடங்களையும் வேறு உரைகளையும் இவர் குறிப்பிடுவதால், இவருக்கு முன்னும் உரைகள் இருந்தன என்றும் தெரிகின்றது.

ஆங்காங்குச் சில சொற் பொருள்கள் இவர் கூறுவது மிகவும் நயமாக உள்ளது. குதலைமை - தளர்ச்சி (197). தோட்

கோப்பு - ஆற்றுணவு; தோளின் கண்ணே கோக்கலால் தோட் கோப்பென்று பொதி சோற்றுக்குப் பெயராயிற்று; அல்லதூஉம் தோளின் கண்ணே சாற்றுதலால் தோட்கோப்பென்பாருமுளர். பீள் - முற்றாக் கரு. கள்ளங் கடைப்பிடித்தல் - கூற்றினது வஞ்சத்தை மறவா தொழிதல் (20). நிறக்கோங்கு - பொன் போன்ற தாதை வீசும் பூவையுடைய கோங்கு (223). சந்தனநீள் சோலை - வேறொரு மரமின்றிச் சந்தன மரத்தால் செறிந்த சோலை (234). கல்லாது நீண்ட ஒருவன் - ஐசுவரியத்தால் நீண்டு கல்லாத ஒருவன் என்றுமாம் (254). வழுதுணை - வழியிற் பொருந்திய பருக்கைக் கல் (264). அருமரபிற் கடல் - இலக்குமி பிறத்தலாலும், மாயன் உறங்குதலாலும் மரக்கலம் ஓடுதலாலு மாம் (244). கணக்காயர் பாடம் - பள்ளிப்பாடம் (314). சுனைத்து எழுதல் - நாத் தினவினால் பிறருடன் வாதுசெய்ய எழுதல் (313). தண்டி - விலகி (324). மைத்துனர் - நகை செய்வார் (பழிப்பவர்) (340). உடையாரோ தாமுற்ற நோய் - இங்கு நோய் என்றது மானத்தால் வந்த நோவு (292). நீரினும் நுண்ணிது நெய் என்ற பாடலில் நெய்யும் புகையும் எவ்வாறு நுட்பமானவை என்பதை விளக்கியுரைக்கிறார் (282).

239ஆம் பாடலில் நாகம் விரிபெடையோடு ஆடவிட்டற்று என்பதற்கு இவர், படத்தையுடைய நாகம் மயிற்பெடையின் முன்னே படத்தை விரித்தாடியதுபோலும் என்பது, மயிலால் இந்த நாகம் அழியும் என்று கருத்தாகிறது. ஆனால் பின்வந்த தருமர் விளக்கவுரைகாரர் போன்ற பிறர் அனைவரும், படநாகம் விரியன் பெடையோடு புணரில், விரியன் வயிற்றில் கர்ப்பம் முற்றுவிக்க நாகத்திற்கு ஆயுள் குன்றும் ஆதலால், தீய குணத் தாரோடு உறவாகாது என்று கூறுகின்றனர்.

நகைச்சுவையோடு இவர் எழுதும் இடங்களும் உள்ளன. செத்தபிணம் - உயிர்போயின பிணம்; நடைப்பிணமும் உண்டாதலின் (281). குன்ற நன்னாட - குறிஞ்சி நிலத்தோழனே என்பாரும் உளர்; இச்சொல் இருபதாம் நூற்றாண்டை நோக் கிற்றுப் போலும் (290). கொடுப்பதொன்று இல்லாரைக் கொய் தளிர் அன்னார் விடுப்பர் தம் கையால் தொழுது - பரத்தையர் தமது கையால் தொழுது போக்குவர்; தொழுது விடுப்பது, பொருள் பெற்றால் கொண்டு வருவதற்கு (373).

பெருமுத்தரையர் என்பார் நாலடியாருள் இரண்டு இடங்களில் குறிப்பிடப்படுகிறார். இவர்கள் பல்லவர்க்குரிய பட்டங்களில் ஒன்றாகிய பெரும்பிடுகை என்பதைத் தாங்களும் சூடிக் கொண்டு பெரும்பிடுகு முத்தரையர் என்று வழங்கப்பெற்றனர். சோழப்பேரரசு தலையெடுத்த காலத்து இவர்கள் செல்வாக் கோடு வாழ்ந்து சோழர்களிடம் தோல்வியுற்றுக் காலகதியில் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டனர்போலும். சோழர் அரசின் இறுதிக் காலத்தில் உரைசெய்தார் என்று நாம் கருது கின்ற பதுமனார் காலத்தில் முத்தரையர் என்ற பெயரே மறைந்து விட்டது. ஆதலால் பெருமுத்தரையரைப் பற்றி இவர் உரையில் எந்த விளக்கமும் கிடைக்கவில்லை. செல்வர் என்றும் 'நாலு மரபாகிய வம்சத்தும் முற்பட்டிருக்கும் தலைமையுடையார்' என்றும் மட்டுமே பதுமனார் உரை எழுதுகிறார்.

**காலம்**

பதுமனார் வரலாறு தெரியாவிட்டாலும் கூட, சில குறிப்புக் களால் இவர்காலம் இன்னது என்று குறிப்பிட முடிகிறது. அமிதசாகரர் செய்த யாப்பருங்கலத்தின் கடவுள் வாழ்த்துத் தொடரை எடுத்துத் தருகிறார் என்று குறிப்பிட்டோம். எனவே, இவர் அமிதசாகரருக்குப் பிற்பட்டவர். இடை நட்புக்கு உவமை யாக முன்காட்டிய தெங்கைக் குறித்த உவமையில், தண்ணீர் சுமந்து அடியிலே வார்க்கப், பின் தலையாலே நீரைத் தருதலால் என்று இவர் எழுதும் தொடர், அவ்வையாரின் மூதுரைப் பாடலில் வரும் 'தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருதலால்' என்ற தொடரை எடுத்தமைத்ததாகும். இவ்வவ்வை யார் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு என்று வரையறை செய்திருக்கிறோம்.

மேலும் இவர், கோயில்களில் திருவுருவங் களைப் பிரா ணப் பிரதிட்டை செய்வது என்றெல்லாம் குறிப்பிடுகிறார். இது ஆகமக் கருத்து. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தான் ஆகம வழிபாட்டு முறைகளுக்குப் பெரும் ஆட்சி ஏற்பட்டது என் பதைச் சேக்கிழார் பெரியபுராணத்துள்ள குறிப்புக்களால் நன்கு அறியலாம். இத்தொடர்புகளால் பதுமனார் காலம் பன்னிரண் டுக்குப் பிற்பட்டதாகிய பதின்மூன்றாம் நூற்றாண்டு என்று நாம் கருதுகிறோம்.

## தருமர்

### ஆசிரியர்

இப்பெயருடைய ஆசிரியர் நாலடியாருக்கு உரையெழுதி னார் என்று குறிப்பிட்டு, அவ்வுரையானது நாலடியார் உரை வளப் பதிப்பில் முதல் உரையாக அச்சிடப்பட்டுள்ளது. அங்கு காணப்படுகின்ற சில பாடல்கள் சில செய்திகளைத் தெரிவிக் கின்றன.

**சீல முனிவர் இருந்து தெரிந்துரைத்த**
**நாலடி நானூற்றின் நற்பொருளைப் – பால்வகையே**
**கண்டான் பொருள்தான் பயனுரைத்தான் காதலித்துத்**
**தண்டார்ப் பொறைத்தருமன் தான்.**

இதனால் இவர் நாலடியார் உரைசெய்தது தெளிவு. அன்றியும், இவர் உரைசெய்யத் தொடங்கும் முன் விநாயக வணக்கமாக ஒரு பாடல் பாடியிருக்கிறார்.

**மாலின் மருகா மதகளிறே மாறாமா**
**பாலமுத மோடு பழமிடுவேன் – சாலவே**
**நாலடி நானூறும் நழுவாமல் என்மனத்திற்**
**சீலமுடன் நிற்கத் தெளி.**

இப்பாடல் பிறர் செய்தார் என்று கருதுவதற்கில்லை. இங்கு விநாயகர் வணக்கம் கூறுவதால் இவர் சைவ சமயத்தவர் என்பது தெரிகிறது. இப்பாடலானது வணக்கம் கூறுமிடத்து அவ்வை யார் பாடிய விநாயகக் கடவுளின் காப்புச் செய்யுளாகிய 'பாலும் தெளிதேனும்' என்பதைத் தழுவிச் செய்யப்பெற்றிருப் பதும் புலப்படும். நாலடியார் அதிகார வகுப்பைக்கூறும் இவர் உரைக்குரிய (பின்னே காட்டப்பெறும்) சிறப்புப் பாயிரத்தின் இறுதிவரி 'சான்றோர் ஏத்தும் தருமத் தலைவனே' என்பது. இதனால் இவர் பெயர் தருமர் என்பதும், சமயத்துறையில் இவர் ஒரு தலைவராய் விளங்கியிருந்தார் என்பதும் யூகிக்கத்தக்கன.

பதுமனார் உரையை அப்படி அப்படியே பலவிடங்களில் பெயர்த்து எழுதிக்கொண்டு செல்கிற இவர் பதவுரையிருந்து பதுமனாரின் மாணாக்கர் என்று இவரை நாம் கருதலாம். இங்ஙனம் பதுமனாரிடம் சைவராகிய இவரும் பின்னால் குறிப்

பிடும் வைணவராகிய மதிவரரும் சமய வேறுபாடில்லாமல் கல்வியொன்றையே நாடி, மாணாக்கராயிருந்து பயின்றார்கள் என்று கொள்ளலாம். 'யதீனாம் கோபி சண்டாளி' என்றார் வடமொழியாரும் என இவர் காட்டுவது இவரது வடநூற் பயிற்சியைப் புலப்படுத்தும்.

## காலம்

பதுமனார் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டாகவே, இவர் காலமும் அதே நூற்றாண்டாகும். அன்றியும், இவருடைய விநாயகர் பாடல் அவ்வை பாட்டைத் தழுவியிருக்கிறது. நல்வழி பாடிய அவ்வையார் பன்னிரண்டாம் நூற்றாண்டினர் ஆதலாலும், இவர் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டு என்பது தெளிவாகும்.

## நாலடியார் உரை

தருமர் பதுமனார் உரைகூறிய வழியே தம் உரையை அமைத்திருக்கிறார். இவர் உரைக்குரிய சிறப்புப்பாயிரப் பாடல் பல செய்திகளை உணர்த்துகிறது:

வளங்கெழு திருவொடு வையக முழுதும்
உளங்குளிர் இன்பத்து இன்பம் உவப்ப,
வண்பெருஞ் சிறப்பின் மாதவம் புரிந்தா அங்கு,
எண்பெருங் குன்றத்து இருந்தவ முனிவரர்
அறம்பொருள் இன்பம் வீடெனும் இவற்றின்
திறம்பிறர் அறியும் திறத்தை நாடிப்
பண்புற எடுத்துப் பாங்குறப் பகர்ந்த
வெண்பா இயல்எண் ணாயிரம்: இவற்றுள்
பாரெதிர் கொண்டு பரவி ஏத்த
நீரெதிர் வந்து நிரையணி பெற்ற
மேனூல் தகையின் விதிமுறை பிழையாஅ
நானூறு; அவற்றின் நயந்தெரிந்து ஓதிய
மதுமலர்த் தண்டார்ப் பதுமன் தெரிந்த
ஐயமில் பொருண்மை அதிகா ரம்தாம்
எய்யா நலத்த எண்ணைந்து; அவற்றுள்
அறவியல் பதின்மூன்று; அரசர்க்கு உரிய
பொருளியல் இருபத்தொரு நான்கு; இன்பம்
ஆன்ற வகையை மூன்றென மொழிந்தனன்:
சான்றோர் ஏத்தும் தருமத் தலைவனே.

எண்பெருங் குன்றத்து இருந்தவ முனிவர்க்கும் பகர்ந்த வெண்பா என்பது பண்டைய வரலாற்றை உட்கொண்டது. பாண்டிநாட்டில் பஞ்சம் வந்தபொழுது சமண முனிவர் எண்ணாயிரவர் செல்லுங்கால் விட்டுச் சென்ற வெண்பாக்களில் நானூறு பாடல்களை உடைய ஏடுகள் மட்டும் நீரில் எதிரேறிச் சென்று நாலடியார் எனப் பெயரிய நூலாயின என்ற வரலாறு முன்னம் சொல்லப்பட்டது. அவ்வரலாற்றுக்கு இவ்வரிகள் ஆதரவு தருகின்றன. எண்ணாயிரம் பாடல்களில் பலர் புகழும் படியாக நீர் எதிரேறிச் சென்று, நிலைபெற்றவை நானூறு என்று இத்தொடர்கள் தெளிவாகக் காட்டுகின்றன. பதுமனார் நாற்பது அதிகாரங்கள் வகுத்தார் என்றும் இவ்வரிகள் குறிப்பிடு கின்றன. பதுமனார் உரைப்பாயிரம், அதிகாரப் பாகுபாடு செய் தார் என்று கூறியபோதிலும்கூட, இச்சிறப்புப் பாயிரம் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பாலுக்கும் முறையே 13, 24, 3 ஆகத் தருமர் மொழிந்தார் என்று கூறுகின்றது. பதுமனார் சொல்லிய வழியே இவரும் சொல்லியமையை இக்கூற்றுக் குறிப்பிடுகின்றது போலும்.

இவர் உரையானது இரண்டு பகுதியாய் அமைந்துள்ளது. முதல் பகுதியில் பதுமனார் கூறிய கருத்தைப் பதவுரையாக அமைத்து இருப்பது; இரண்டாம் பகுதி பாடல்களின் கருத்துக் களுக்கு விளக்கம் கூறிக் கருத்துரையாக முடித்துக் காட்டுவது. இப்பகுதி சிறப்பானது. இவர்கூறும் விளக்கங்களில் சில காட்டு வோம். "மரம் வைத்தார்க்கே நிழலைக் கொடுக்க வேண்டுமன்றிப் பிறர்க்கு நிழலைக் கொடுக்கலாகாதென்பது, மரத்தினிடத்திலே இல்லையே. அதுபோல அரசரைச் சேர்ந்தவரும் அவர் செல் வத்தை அனுபவிப்பார். இங்கு நிழல் பெறுவதற்குச் சென்றார் தகுதியுடையவர் ஆகவேண்டா என்று பதுமனார் எழுத, இவர் அதை மறுப்பதைப்போல மரத்தின் இயல்புஅது என்று காட்டு வது நயம்.

அதிகாரங் கூறுவதில் பெரியோருக்குப் பகை, நட்பு என் னும் வேறுபாடில்லை யெனக் கூறி, "இவ்விடத்து மாறுபடக் கூறலாமோவெனில் இவை அவர்க்கல்ல. மற்றுள்ள உயிர் கட்குப் பகை செய்யில் அவர் தமக்கு நட்பாயினும், அவர்மேல் கூற்றுவனும் அஞ்சும்படிபோல அஞ்சுதல் பண்ணியதனை நீக்குவர். மற்றவையும் இப்படிக் கண்டு கொள்க" என்பார். இவ்வாறு பின்னும் சில இடங்களில் எழுதியுள்ளார்.

190ஆம் பாடலில் முற்றுற்றும் துற்று என்பதற்கு முற்பட உண்ணும் உணவு என்று பதுமனார் எழுத, இவர் முந்தித் தருமத்திற்கு உதவுக என்று சொல்கிறார். பெயர் பொறிப்பது தன்னுடைய முயற்சியினாலே அல்லது குடிப்பிறப்பினாலே ஆவதல்ல என்பார் (199). 'நற்சார்வு சார்ந்தார் மேற்செல்லா வாம் சினம்' என்றவிடத்து (178), பகைவர் சினம் செல்ல மாட்டாது என்று கூறிப் பின், "நல்லினத்தைச் சார்ந்தவர் அவர் தன்மையோடு ஒழுகுவாராதலின், அவரைச் சாருமுன் இவரைக் கெடுப்பதாகச் சினம் கொண்டிருந்த காமக்குரோதம் முதலாகிய அறுபகைகளும், நெறிகடவாது அவர் வசமாம் என்பது தோன்ற, செல்லாவாம் செற்றார் சினம் என்று நல்லினம் சேர்தற்கு வற்புறுத்தியது. பொருட்பாலாகலின் உலக இயற்கைக்குமாம்" என்று இவர் எழுதியிருப்பது சிறப்பு. 17ஆம் பாடலில் மறிகுள குண்டன்ன மன்னா மகிழ்ச்சி என்பதை, ஆட்டு மறியானது நிலைநில்லா உடம்பினாலே நுகரும் மகிழ்ச்சி என்று பிறர் எழுத இவர், குறிஞ்சித்திணையில் வெறியாடு மமர்க்களத்தில் ஆடுகளை வெட்டும்போது, கையிலே தளிராற் சேர்த்து வாளைக் கைப்பிடித்தசைக்க, ஆடு தனக்குணவென்று வந்துண்ணும் பொழுது தன் கையால் மெல்ல அந்த ஆட்டை வெட்டுவனாக லின் அவனை வேல்மகனென்றார்; வெட்டுந் தொழிலுக்காகிய வேல் உடனுள்ள தளிர் உணவு ஆதலால் அந்த மறியானது, அறிவின்மையினான் தன்னைக் கொல்லுமவன் என்றறியாமல் அவன் கையிற்றளிர் தனக்குணவென்று விரும்பியிருந்ததுபோல என்றெழுதுகிறார். 'இன்னினியே' என்பது அடுக்குப்பண்பு என்பார் (29). 'கூர்த்து நாய் கௌவிக் கொளக் கண்டும்' (70) என்ற பாடலுக்குப் பின்வருமாறு விளக்கம் எழுதுகிறார்: "கீழோரானார் தம்மை இந்நாய் கடிக்கலாமோவென்று அதற்கு இடர் செய்வர். மேலோர் அதன் அறிவின்மையால் வந்ததல்லவோ, அதற்கிடர் செய்யில் நம் விதனந் தீர்வதல்லவே, இது நாம் முற்செய் தீவினையென்று கருதி அதன்மேற் சின்னங்கொள் ளாதது போலக் கீழோர் தம்மை அவமானஞ் செய்தாலும், அவரை அசேதனமாக வெண்ணி அவர்மேற் சினங்கொள்ளா ரென்பதாம்; மரத்தார் (145) மரத்துள் வைத்து எண்ணக் கடவர் என்று பதுமனார் கூற, இவர் மரக்கலத்திலிருப்பாரைப் போலப் பார்த்தது பார்த்ததெல்லாம் அச்சம் என்று எழுதுகிறார். வேம்பின் நெய் (238): புல்லிய அறிவினார்க்கு வேப்பெண்ணெய் உவமையாயினும், அந்த வேப்பெண்ணெய் பிணிக்கு மருந்தாகிப்

பயன்படும்; புல்லிய அறிவினாரது நட்பால் அதுவுமில்லை. விரியன் பெடையொடு ஆடி விட்டற்று (239): விரியன் பெடையொடு நாகம் புணரில் அந்த விரியன் வயிற்றில் சர்ப்பம் உற்பவிக்க, நாகத்துக்கு ஆயுசு குன்றும். அருத்தம் செறிக்கும் 309: தேடிய பொருளைப் புதைக்கும் அறிவிலார் என்றும் பதுமனார் எழுத, இவர் பொருளுக்கியைந்த அறிவிலாதவர் என்பர். 306ஆம் பாடல்: "இஃது இரவச்சமானது எப்படி என்னில், இருக்கும் வரை இகழாதார் ஒருவருமில்லை; யாவரும் இகழ்தலினால் நிலையாத உடம்பினை விரும்பி இகழ்ச்சிக்கு இடங்கொடாமல் அவ்விரப்பினை அஞ்சி அதனைத் தவிர்க என அறிவுறுத்தும் பொருட்டு இப்பாட்டு இரவச்சத்திற் சேர்க்கப்பட்டது" என்று பாடலை அதிகாரத்தோடு பொருத்திக் காட்டுகிறார்; இப்படிப் பல இடங்கள் உள்ளன. 400ஆம் பாடலில், யார் யார் எப்படிப் பிழை செய்தார்கள் என்பதை விளக்கியுரைக்கிறார்: "கண் மூன்றுடையான் பிழைத்தலாவது காமனை உருவழித்தவன் பின்பும் அவனை உளனாக்கினான் என்பதால்; காக்கை பிழைத்தற்குக் காரணம் குயில் முட்டையிட அதனைத் தான் வளர்த்துக் கூவுவித்ததாம்; பை அரவு பிழைத்தல் - தான் விழுங்கிய மதியைச் செரிப்பித்து விடாமல் அதனை மீளவும் கான்று அதனால் வருத்துவித்ததாம்."

உலகியல் நீதிகளையொட்டித் திருத்தமாகவே எங்கும் உரை எழுதுவார். "ஆகாதெனினும்" (337) என்ற பாடல் விளக்கத்தில், "தாம் சென்று கேட்கு முன்னே, வந்த காரியம் இது என அறிந்து உபசரித்துக் கொடுப்பாரிடத்துச் சென்று இரப்பது இழிவாயிருக்கவும், கொடாதவரைப் பற்றிக்கொண்டு விடாதிருப்பது அறிவின்மை யாதலால் இது பேதைமையுள் சேர்க்கப்பட்டது." 328ஆம் பாடல் உரையில் சீவகசிந்தாமணிப் பாடலொன்றை மேற்கோள் தருகிறார். 75ஆம் பாடல் உரையில், அங்கணம் என்பதைக் குற்றம் என்றே பதுமனாரும் இவரும் பொருள் செய்திருந்தபோதிலும், 'அங்கணம் என்பதைத் தொட்டில் என்று சொல்லுவாரும் உளர்' என்று குறிப்பிடுகிறார். இதனால் இவருக்குமுன் பதுமனார் உரையன்றிப் பிறிதோருரையும் இருந்ததென்று எண்ணத்தோன்றுகிறது. 18ஆம் பாடலில், 'இருசிகை என்பதனை முற்சிகை பிற்சிகை நீக்காமல் உண்ணும் பலமுண்டோ என்பாருமுளர்' என்று இவர் எழுதியிருப்பதும் அதுபோன்றதே.

இனி, நாலடி உரைசெய்த இத்தருமனாரே குறள்உரை செய்த தருமர் என்று 'தருமர் மணக்குடவர்' என்ற பாடலில் குறிப்பிடப் பெற்றவர் என்ற கருத்துண்டு. இருக்கலாம். ஆனால் தருமர் குறளுரை இதுகாறும் கிடைத்ததில்லை. கிடைக்காத போது இதுபற்றி எதுவும் சொல்வதற்கில்லை. தாமத்தர் நச்சர் தருமர் ஆகிய மூவர்பற்றிய குறிப்பு முன்னர்க் காண்க.

## நாலடியார் விளக்கவுரை

இவ்வுரை தஞ்சை சரசுவதி மகால் பதிப்பில் அச்சிடப்பட்டுள்ள மூன்றாவது உரையாகும். சிற்சில பாடல்களுக்கு இவ்வுரை கிடைக்கவில்லை போலும். ஆசிரியர் பெயர் தெரியாமையால், அச்சிட்டோர் விளக்கவுரை என்று பெயர் சூட்டியுள்ளனர். இவ்வுரை பெரும்பான்மையும் தருமர் உரையை அப்படியே எழுதிச் செல்கிறது; சில இடங்களில் பதுமனார் கருத்தை அப்படி எடுத்தெழுதுகிறது. பல பாடல்களின் இறுதியில், இப்பாடல் இவ்வதிகாரத்தில் சேர்த்தது பொருத்தமே என்பதைக் காரணம் காட்டித் தனியே எழுதுகிறார்.

இவர் உரையில் சில சொற்களும் கருத்துக்களும் புதுமையாகவும் சிறப்பாகவும் உள்ளன. சோறு எப்படி இருத்தல் வேண்டும் என்பது பற்றிய விளக்கம் (206): சோறு புலியுகிர் போறல் - இடை முரிந்து மாறாது அங்கவீனப்படாது இரு மருங்கும் நேரிதாய் நின்று தண்டறவெந்து உத்தம இலக்கணத் தோடும் பீலிமுருந்து என்றும், முசியா அரிசி என்றும் சொல்லப் பட்டுப் புலியுகிர் போலப் பிடித்தால் உள்ளடங்கி விட்டால் தனித்தனியாதல். இதுகொண்டு இவர் சிறந்த வேளாளராவார் என்று நாம் யூகிக்கலாம். வாளாடு கூத்தியர்கண் - வாளைத் தெற்றியின் நோக்கிக் கூத்தியற்றுவார் கண்போலச் சபையும் தானமும் பகையும் நிலமும் பார்க்குமதுபோல (191). உறுபுலி ... தேரைபற்றியும் தின்னும் - ஒருநாள் ஒரு நாழிகை இதற்கும் பசிநோய் பொறாமல் உச்சிராயத்தினால் பனியானைத் தின்று அச்சத்திகொண்டு விருகம் பிடிக்க எண்ணும் (193); உச்சிராயம் - மனவெழுச்சி; பனியான் - தேரை (?). இன்னும் பல.

இவ்வுரையின் காலம் விளங்கவில்லை எனினும், இவ்வுரைகாரர் பதுமனாருடைய மாணாக்கராயும் தருமருடைய

மாணாக்கராயும் இருந்திருப்பாரோ என்று எண்ணுமாறு உரை உள்ளது. ஆதலால் அவ்விரு உரைகளையும் குறிப்பிட்ட இடத்தில் இவர் உரையையும் குறிப்பிட்டோம். இதே காலமாகலாம்.

## மதிவரர்

நாலடியார் உரைப் பிரதியேட்டில் காணப்படும் சிறப்புப் பாயிரப் பாடல்களுள் பின்வருவது ஒன்று:

> நல்லோர் அருள்செய் நாலடி நானூற்றின்
> சொல்லோர் பொருளனைத்தும் தோன்றியதே – கல்வி
> வரும்பத நூல்கொண்ட மதிவரன்தன் வாக்கால்
> அரும்பத மிட்ட அழகு.

இதனால் மதிவரர் என்பவர் நாலடி நானூற்றுக்கு எல்லாப் பொருள்களும் நன்கு விளங்கும்படியாக அரும்பதவுரை ஒன்று செய்ததாகத் தெரிகிறது. கல்விச் சிறப்பனைத்தும் அமையும் படியாக அழகான உரையென்று இதை ஆன்றோர் பாராட்டி இச்சிறப்புப் பாயிரம் பாடியிருக்கிறார்கள். ‘அரும் பதமிட்ட’ என்ற தொடர் சிறப்பாக வைணவ உரையாசிரியர் சூழ்நிலையில் பெரிதும் வழக்கிலிருந்த தொடர். இவ்வுரை இன்று கிடைக்க வில்லை. காலமும் திட்டமாகத் தெரியவில்லை. முன்னமே குறிப்பிட்ட ஆசிரியர் பெயர் தெரியாத விளக்கவுரையே இந்த வுரை என்று கருத இடமில்லை. ஏனெனில் அவ்வுரை பொழிப் புரையாக உள்ளது; பதுமனார், தருமர் இருவர் உரைகளையும் கலந்து எழுதிய உரையாக உள்ளதேயன்றி, இச்சிறப்புப் பாடல் கூறுகின்ற அளவு தனிச்சிறப்பு உள்ளதாக இல்லை. மதிவரர் காலம் தெரியாவிட்டாலும் கூட, ஏடுகளில் இச்சிறப்புப் பாயிரப் பாடல் எழுதப்பட்டுள்ள தொடர்களை நோக்கும்பொழுது, இவரும் பதுமாசாரியருடைய சீடர்களில் ஒருவராய் வாழ்ந் திருந்தார் என்று கருதக்கூடும். பதினெண் கீழ்க்கணக்கு இலக்கிய நூல்கள் உரை எழுதப்பெற்ற காலம் பெரும்பான்மை பதின் மூன்றாம் நூற்றாண்டு என்று கொள்ளத்தகும். ஆதலால் இவர் காலமும் இதுவே என்று கூறுவது பொருத்தமாகும்.

ooo

அத்தியாயம் 4

# இலக்கண ஆசிரியர்

## முன்னுரை

தமிழ் இலக்கியப் பரப்பினுள், மிகவும் பழமையான காலம் முதலே முத்தமிழ் இலக்கியங்கள் சிறப்பாக எழுந்திருந்தமை யால், அவற்றிற்கான இலக்கணங்களும் சிறப்பாகத் தோன்றி யிருந்தன. எனினும், முத்தமிழ் இலக்கியங்களுள் பெரும்பகுதி இறந்துபோனமை போலவே, இலக்கணங்களுள் பெரும்பகுதி யும் இறந்துபோயிற்று. கிடைக்கின்ற ஒரே இலக்கணம் தொல் காப்பியம்; அதுவும் இயற்றமிழ் ஒன்றுக்கே உரியது. அதனோடு ஒத்த சிறப்புடைய பண்டை இலக்கண நூல்கள் பல இருந்தன வென்று உரைகளால் அறிகிறோம்; அவை வெவ்வேறு இலக்கிய இலக்கண மரபுகளை வளர்த்தன என்றும் அறிகிறோம்; சிறப் பான ஒன்று அவிநயம்; எனினும், இவை யாவும் காலகதியில் மறைந்து போயின. சுமார் 13ஆம் நூற்றாண்டு வரையில் இவை இருந்து அந்நூற்றாண்டின் பின்தான் மறைந்துபோயின என்று எண்ணுவதற்கு ஆதாரங்கள் உள்ளன. இவ்வாறு அவை மறை வதற்கு உரிய காரணங்கள் விரிவான தனிச் சரித்திர ஆராய்ச்சிக் கான பொருளாகும்.

தொல்காப்பியத்தின் பின்னர், 10ஆம் நூற்றாண்டு தொடங் கியே, இலக்கியங்களோடுகூட, இலக்கண நூல்கள் எழுதும் முயற்சியும் சிறப்பாக வளர்ந்திருப்பதைக் காண்கிறோம். தொல்காப்பியர் காலத்திலேயே இறையனார் அகப்பொருள் தோன்றியிருக்க வேண்டும். இதன் உரை அக்காலத்திலேயே சொல்லப்பட்டு, பல நூற்றாண்டுகள் வாய்மொழியாக வழங்கி வந்ததென்பதும், பத்தாம் நூற்றாண்டளவில்தான் ஏட்டில் எழுதப்பட்டது என்பதும், பொதுவாக வழங்கும் வரலாறுகள்.

நமக்கு இன்று கிடைக்கின்ற நூல்களில் புறப்பொருள் வெண்பா மாலையும் திவாகர நிகண்டும், இத்துறையில் பத்தாம் நூற்றாண்டுக்கு முந்திய நூல்களாகக் கருதத்தக்கன. தொல்காப்பியர் காலம் தொடங்கிப் பத்தாம் நூற்றாண்டு வரையுள்ள நீண்ட காலப் பகுதியில் வேறெந்த இலக்கண நூலும் எழுந்ததாக நமக்குக் கிடைக்கவில்லை.

இனி, பத்தாம் நூற்றாண்டு தொடங்கி இருபதாம் நூற்றாண்டு வரையில், சிறப்புடையனவும் அல்லாதனவுமான பல் துறை இலக்கண நூல்கள் தோன்றிக்கொண்டே இருந்திருக்கின்றன. காலமுறைப்படி எவ்வெக் காலங்களில் எவ்வெத் துறைகளில் இந்த நூல்கள் தோன்றி வளர்ந்தன என்று ஆராய்வது மிகவும் பயனுள்ள ஆராய்ச்சி.

நாம் இங்கு ஆராய்கின்ற பதின்மூன்றாம் நூற்றாண்டை மட்டும் இப்போது கருதினோமானால், இங்கு மிகவும் சிறப்பான இலக்கண நூல் வளர்ச்சி ஏற்பட்டிருப்பது தெரியவருகிறது. தொல்காப்பியத்திற்குப் பிறகு, அதனினும் மிக்க ஆட்சியும் பயனும் உடையதாய் இன்றளவும் இருந்து வருகின்ற நன்னூல் இக்காலத்தில் தோன்றிற்று. இதன்பெயரே இதற்குரிய சிறப்பை நன்கு விளக்கும். பிறநூலே தனக்கு இணையில்லை என்ற பெயரை இது பெற்றது. எழுத்து, சொல் என்ற இரு அதிகாரங்களை மட்டும் உடையது. தொல்காப்பியத்திற்கும் நன்னூலுக்கும் இடையில் கால இடைவெளி ஓராயிரம் ஆண்டுகளுக்குமேல் இருக்கும். இவ்வளவு பிற்பட்டு எழுந்தும்கூட இந்நூல், எல்லா விதத்திலும் பெருஞ்சிறப்புப் பெற்றிருப்பது இதன் ஆசிரியரின் நுட்பமான புலமையைப் புலப்படுத்துகிறது. இது தொல்காப்பியத்தின் முடிவுகளுக்கு இயையக் கால மாறுதல்களுக்கேற்பத் தோன்றிய மொழி விகற்பங்களையெல்லாம் தன் அகத்தே கொண்டு இலக்கிய வரம்பு கோலுவதாய், இன்று வரையிலும் மிகவும் சிறப்புப் பொருந்திய ஓர் இலக்கண அளவுகோலாய் விளங்கி வருகிறது. இதற்கு முந்திய நூற்றாண்டுகளில் சில இலக்கண நூல்கள் தோன்றியிருப்பினும் அவற்றின் புகழ் மங்கியே போய்விட்டது. மிகச்சிறந்த ஆட்சியும் பொருத்தமும் புகழும் பெற்றது இதைப்போன்று வேறொன்றில்லை. இதன் ஆசிரியர், மூன்றாம் குலோத்துங்க சோழமன்னனிடம் சிறப்புப் பெற்றிருந்த சீயகங்கன் என்ற ஒரு தலைவனுடைய ஆதரவைப் பெற்றவர். அவனே இந்நூல் செய்வித்தான் என்று அறிகிறோம்.

தொல்காப்பியத்துக்குப் பின், பத்தாம் நூற்றாண்டில் இறையனார் அகப்பொருள் நூல், ஏட்டில் முதன்முதலாக எழுதி வைக்கப்பட்டது என்ற செய்தியை முன்னரே குறிப்பிட்டோம். சில செய்திகளைத் தொகுத்து ஒரு கோவைப்பட நோக்கும் போது, வியப்பூட்டவல்ல சில செய்திகள் விளக்கமாகின்றன. சிறப்பான ஒன்றை இங்குக் குறிப்பிடுவோம்.

தமிழ் ஐந்திலக்கணம் என்பது ஒரு மரபு. ஐந்தாவன எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன. இம்மரபு மிகவும் பிற்பட்டுத் தோன்றியது. எனினும் தொல்காப்பியத்தினுள்ளும் இவ்வைந்து இலக்கணப் பகுதிகளும் அமைந்திருப்பதாகக் கருதுதலும் உண்டு. எழுத்தும் சொல்லும் தனி அதிகாரப்பிரிவு களாக அதன்கண் அமைய, பொருள் என்ற அதிகாரப்பிரிவு, தன் செய்யுளியலில் யாப்பிலக்கணத்தையும், மரபியல் உவம இயல்களில் அணியிலக்கணத்தையும் அடக்கியிருப்பதாகப் பொதுவாய்க் கருதப்படும். எனினும், ஐந்திலக்கணங்களையும் தனி நூல்களாக எழுதிவைக்கும் ஒரு பெருமுயற்சியும் பல தலை முறைகளில் இருந்து வந்திருக்கிறது.

முதன்முதலாக, வீரசோழியம் ஐந்திலக்கணங்களையும் சொல்லமுயன்று வெற்றிபெறவில்லை; அதாவது தமிழ் மக்கள் அதை மிகுதியும் விரும்பிப் பயின்றதில்லை. அடுத்து, முதலாவ தாக எழுத்து சொல் என்ற இரண்டையும் எடுத்துக்கொண்டோ மானால், நேமிநாதம் இவற்றை மட்டும் தனியே சொல்கிறது; ஆனால் அந்நூலுக்கும் பிரசாரமில்லாது போயிற்று. பொருளில் புறப்பொருளையும், யாப்பையும் அணியையும் தனியே விரித்துக் கூறும் இலக்கணங்கள் பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்ன தாக உள்ள காலப்பகுதியில் செய்யப் பெற்றிருந்தனவாகும். இவற்றுள், புறப்பொருள் இலக்கணம் தழுவிய புத்திலக்கியங்கள் எழவில்லை; எனினும், புறப்பொருள் வெண்பாமாலையும் யாப்பருங்கலக்காரிகையும் தண்டியலங்காரமும் இன்றுவரை தமிழ் பயில்வோர் விரும்பிக்கற்கும் இலக்கணங்களாக இருந்து வருகின்றன. (யாப்பருங்கலம் சிறப்புடைய பெருநூலாயினும், அதிகம் ஆட்சியில் இல்லை.) மேலும் யாப்பின் ஒரு பகுதியாக, செய்யுள் நூல்களின் அமைப்பையும் பொருளையும் பலவகை யாக விரித்துணர்த்தும் இலக்கணமாகப் பாட்டியல் என்ற ஒரு பிரிவு இக்காலத்தே கிளைத்தது. இப்பிரிவில் பன்னிரு பாட் டியல், வச்சணந்தி மாலை என்ற சிறப்பான நூல்கள் தோன்றின;

இரண்டினுள்ளும், வச்சணந்தி மாலையே பெருமளவு ஆட்சி யுடையதாய் உள்ளது. எழுத்துக்கும் சொல்லுக்கும் சிறப்பான வேறு இலக்கணம் எழாதகுறையை நீக்கவேண்டியே நன்னூ லார் தம் நூல் செய்தார் என்று கருதும்படி உள்ளது.

இவற்றுள் எஞ்சியிருப்பது அகப்பொருள். தொல்காப்பியம் இறையனார் அகப்பொருள் ஆகிய இவற்றுள் சிறப்பான அகப் பொருள் சொல்லப்பட்டிருப்பினும், இத்துறையில் பிற்கால நூல் இல்லாத குறையைப்போக்க வேண்டித்தான் போலும், இந்த நூற்றாண்டில் புதிதான ஓர் அகப்பொருள் இலக்கணம் எழுந்தது. நாற்கவிராச நம்பி என்பவர் பாண்டியர் ஆதரவில் அகப்பொருள் விளக்கம் என்ற பெயர்வாய்ந்த ஒரு புதிய அகப்பொருள் இலக்கணம் செய்தார். தொல்காப்பியத்திலும் பிற்பட்ட இலக்கியங்களிலும் பரந்துகிடந்த இலக்கணங்களைத் தொகுத்து சூத்திரம் செய்து இவர் தாமே உரையும் வகுத்தமைத் தார். இந்நூலும், பிற்கால ஐந்திலக்கண நூல் தொகுப்பைப் பூர்த்தி செய்வதாய், ஏனைய நன்னூல், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம் ஆகியவற்றோடு ஒத்த சிறப்பும் ஆட்சியும் பெற்றதாய் விளங்குகிறது. பிற்காலத்தில் எத்தனையோ இலக் கண நூல்கள் எழுதப் பெற்றிருப்பினும் இன்றுவரையில் இப் பிரிவில் இந்த நான்கு நூல்களுக்கும் இணையான நூல்கள் எழவே இல்லை.

சென்ற நூற்றாண்டில் நன்னூல், நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம் ஆகிய ஐந்தும் இலக்கண பஞ்சகம் என வழங்கும் ஒரு வழக்கம் இருந்தது. இவை முறையே 13, 13, 10, 11, 12 நூற்றாண்டுகளுக்குரியன. இவற்றுள் முதல் மூன்றும் ஒரு தொகுப்பாக மூலம் மட்டும் 1835இல் அச்சிடப்பட்டன. இவ்வைந்தில் 1, 2, 4 சைனர் செய்தவை; 3, 5 சைவர் செய்தவை. வைணவர் இலக்கணம் எழுதவில்லை.

இவ்வாறு இந்தப் பதின்மூன்றாம் நூற்றாண்டு, இலக்கணப் பகுதியில் மூன்று பிரிவுகளில் இரண்டு பேரிலக்கணங்களைத் தோற்றுவித்த சிறப்புடையது. இவ்விரு நூல்களையும் இனி ஆராய்வோம். இவ்விரு இலக்கண நூல்களையும் எழுதிய இரு பேராசிரியர்களும் சைனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதி லிருந்து எழும் ஒரு கருத்தைச் சொல்லாமலிருக்க முடியவில்லை.

இலக்கணம் என்பது, (பின் வந்த காலத்தில்) ஒரு சட்ட புத்தகம் போன்றது; ஒரு சட்டத்துக்கு உட்பட்டு அதிலேயே உழல்பவர்களுக்கு, அச்சட்டத்தின் நுட்பங்களையும் அதன் ஆட்சியையும் எளிதில் தனிப்படுத்திப் பார்க்க முடிவதில்லை; அதாவது, அவர்களால் அச்சட்டம் வகுத்தல் எளிதில் முடியாது. அச்சட்டத்துக்கு உட்படாத அன்னியராயிருந்தால், சட்டம் அவர்களுக்கு எளிதில் விளங்கும், அவர்களால் எளிதில் சட்டம் செய்யவும் முடியும். இதுவேதான் இலக்கணமும்; மொழிக்கு அன்னியராயுள்ளவர்களுக்கு மொழியின் பொதுவான உண்மைகளான மொழி இலக்கணம் எளிதில் விளங்கும்; அவர்களே அவ்விலக்கணமும் சிறப்பாகச் செய்யமுடியும். சைனர் இவ்வளவு அழகாகவும் பொருத்தமாகவும் நீடித்து நிற்கும்படியும் இலக்கணம் செய்ய முடிந்தது என்றால், அவர்கள் மொழிக்கு அன்னியராயிருக்கலாமோ என்ற கருத்து ஊன்றி ஆராயத்தகுந்தது. ஆனால், அதற்கு இங்கு இடமில்லை; நாம் எடுத்துக்கொண்டது இலக்கிய வரலாற்று ஆராய்ச்சியொன்றே; ஆதலால் அவ்வாராய்ச்சியினுள் இப்போது புகவில்லை.

## பவணந்தி முனிவர்

இலக்கிய வளமும் திருத்தமும் வாய்ந்த சிறப்பு மொழிகளில் வரம்பு கோலுகின்ற பெருநூல்கள் காலந்தோறும் தாமே உதிக்கின்றன. தமிழ்மொழிக்கு, இருபது நூற்றாண்டுகளுக்கு முன் அத்தகைய ஒரு சிறப்பு நூலாகத் தொல்காப்பியம் தோன்றிற்று. அது, மொழிக்கு, ஒருவகையில் தமிழின் பிற எல்லாத் துறைக்கும், வரம்புகோலித் தந்தது. பின்னும் ஓர் ஆயிரம் ஆண்டுகள் செல்ல, மற்றொரு சிறப்பு நூலாகிய நன்னூல் தோன்றிற்று. இந்நூல் செய்தவர் பவணந்தி முனிவர். இவர் செய்தநூல், செய்த காலத்தில் மட்டும் அன்றி இன்றுவரை தமிழுக்கு வரம்பாகி நிலவுகிறது. இதை ஒத்த ஒருநூல் இன்னும் தோன்றவில்லை. இது தோன்றி எழுநூறு ஆண்டுகளே ஆயின: ஆயிரம் ஆண்டுகள் ஆனபின்தான் இதை ஒத்த மற்றொரு நூல் தோன்றக்கூடும் போலும்.

### பவணந்தி முனிவர்

இம்முனிவர் சைன மதத்தினர். பவணந்தி என்ற பெயரே இதை உணர்த்தும். இவர் துறவி ஆவார். பண்டைக் காலத்துச் சமண சமயத்தில் துறவிகள் நந்தி என வழங்கப்பட்டனர். குண

வீர பண்டிதரின் ஆசிரியர் வச்சணந்தியடிகள்; இன்னும் பழங் காலத்தில், திருஞானசம்பந்தர் 'மானின் நேர்விழி மாதராய்' என்ற பதிகத்தின் ஆறாம்பாட்டில் 'கனகநந்தியும் புட்பநந்தியும் பவணநந்தியும் குமணமா - சுனகநந்தியும் குணகநந்தியும் திவண நந்தியும் மொழிகொளா - அனகநந்தியர் ... சினகர்' (3216) என்று கூறுமிடத்தும் இவ்வாட்சியைக் காணலாம். பவணநந்தி - பவணந்தி ஆயிற்றுப்போலும். (பவணம் - நாகலோகம்; பவணன் - பவணேந்திரன், இந்திரருள் ஒருவன்.)

இவருடைய வரலாறு தெரிவதற்கு ஆதாரமாய் இருப்பது நன்னூலின் சிறப்புப்பாயிரம். இதைப்பின்னே காணலாம். இப் பாடல் செய்தார் யார் என்பது தெரியவில்லை. இதன் இறுதி வரி 'பவணந்தி என்னும் நாமத்து இருந்தவத்தோனே' என்பது; இது இவர் துறவி என்பதைக் காட்டும். இவர் சைனமதத்தினர் என்பதற்கு ஆதாரங்கள் பல. இரண்டு அதிகாரத்தின் தொடக்கத் திலும் இவர் செய்துள்ள கடவுள் வணக்கப் பாடல்கள் பின் வருவன:

பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த
நான் முகன்தொழுது நன்கு இயம்புவன் எழுத்தே.

முச்சகம் நிழற்று முழுமதி முக்குடை
அச்சுதன் அடிதொழுது அறைகுவன் சொல்லே.

நான்முகன் அச்சுதன் என்ற பெயர்கள் சைனசமயத்தார் அருகனைக் குறிக்கச் சொல்லும் சொற்கள். அன்றியும், அசோகு, முக்குடை என்ற சொற்களால் அருகதேவன் குறிக்கப்பட்டான் என்பதில் ஐயமில்லை. மொழிக்கு முதற்காரணம் அணுத்திரள் என்ற கொள்கை சைனருக்கு உரியது. சூத்திரங்கள் 58, 74 இல் இக்கருத்தை இவர் கூறுகிறார். அன்றியும் உரியியல் ஓர் அறிவுயிர் முதல் ஐயறிவுயிர் வரையில் இவர் அமைத்திருக்கின்ற முறை சைன சமயத்துக்கே உரியது. உதாரணமாக ஐயறிவுயிரைக் கூறும் சூத்திரம்,

வானவர் மக்கள் நரகர் விலங்கு புள்
ஆதி செவி அறிவோடு ஐயறி உயிரே. (440)

தொல்காப்பியர், 'மக்கள் தாமே ஆறறி வுயிரே' என்று சொல்லியிருக்கிறார். ஆனால் இவர் மக்களையும் ஐயறிவு உயிராக விலங்கோடும் புள்ளோடும் சேர்த்துச் சொல்லியிருப்பது தமது சைனசமயத்துக் கொள்கையினால். அன்றியும், சுப்பிர

மணிய தீக்கிதர் தம் பிரயோகவிவேக உரையில், 'செயப்படு பொருளை ஆக்கல் அழித்தல் அளித்தல் முதலாகச் சினேந்திரன் மதம் பற்றி நன்னூலார் பலவாகக் கூறுவர்' என்றும், 'நன்னூலார் வாமனன் சினேந்திரன் செய்த சத்தநூல் பற்றிக் கூறுவர்' என்றும் (12, 49) கூறுவது காண்க.

இவரைக் குறித்த செய்திகள் சில கல்வெட்டுக்களால் தெரிய வருகின்றன. திருவல்லம் அருகிலுள்ள வள்ளிமலைக் குகையில் அமைந்த ஒரு சைனச்சிலையின் கீழ்க்காணும் கல்வெட்டு, பவணந்தி பட்டாரர் என்று குறிப்பிடுகின்றது:

"ஸ்வஸ்தி ஸ்ரீ பாணராயர் குருகளப்ப பவணந்தி பட்டாரர் சிஷ்யரப்ப தேவஸேன பட்டாரர் பிரதிமா". இந்தக் கல்வெட்டின் காலம் விளங்காமையால், இதுபற்றி ஒன்றும் உறுதியாகச் சொல்ல இயலவில்லை.

இவருடைய ஆசிரியர் சனகை என்னும் ஊரிலிருந்த சன்மதி முனிவர் என்பவர். சிறப்புப்பாயிரம் இதை உணர்த்துகிறது:

மலர்தலை உலகின் மல்கிருள் அகல
இலகு ஒளி பரப்பி யாவையும் விளக்கும்
பருதியின் ஒரு தானாகி முதல் ஈறு
ஒப்பள வாசை முனிவிகந்து உயர்ந்த
அற்புத மூர்த்தி தன் அலர் தரு தன்மையின்
மன இருள் இரிய மாண் பொருள் முழுவதும்
முனிவற அருளிய மூவறு மொழியுளும்
குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனும்நான் கெல்லையின் இருந்தமிழ்க் கடலுள்
அரும்பொருள் ஐந்தையும் யாவரும் உணரத்
தொகை வகை விரியில் தருக எனத் துன்னார்
இகலற நூறி இரு நிலம் முழுவதும்
தனது எனக் கோலித் தன்மத வாரணம்
திசை தொறும் நிறுவிய திறலுறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்
திருந்திய செங்கோற் சீய கங்கன்
அருங்கலை விநோதன் அமரா பரணன்
மொழிந்தன னாக, முன்னோர் நூலின்
வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்:

பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னரும் சிறப்பிற் பவணந்தி
என்னும் நாமத்து இருந்தவத் தோனே.

சனகை என்பது சனநாதபுரம். மயிலைநாதர் உரை இதைத் தெரிவிக்கின்றது. இச்சனநாதபுரம் எது என்பதைப் பற்றி ஐயப்பாடு உண்டு. மண்டல சதகங்கள் இரண்டு இது எங்கள் மண்டலம் என்று சொல்லுகின்றன. இவற்றின் பொருத்தத்தையும் சிறிது இங்கே குறிப்பிடுவோம். தொண்டைமண்டல சதகம், சனகையில் சன்மதிமாமுனியின் மாணாக்கராகிய நன்னூல் செய்த பவணந்திமா முனியின் ஊரும், சின்னூல் (நேமிநாதம்) உரைத்த குணவீர பண்டிதர் ஊரும் தொண்டைமண்டலத்தில் உள்ளன என்று கூறுகிறது:

தன்னூர்ச் சனகையிற் சன்மதி மாமுனி தந்தமைந்தன்
நன்னூல் உரைத்த பவணந்தி மாமுனி நற்பதியும்
சின்னூல் உரைத்த குணவீர பண்டிதன் சேர்பதியும்
மன்னூ புரத்திரு அன்னமின் னே தொண்டை மண்டலமே. (65)

தொண்டை நாட்டில் அரக்கோணம் தாலுக்காவில் சோழ சிங்கபுரத்தை அடுத்த சனகாபுரம் என்று வழங்கும் ஊர் இச் சனகை ஆகலாம் என்பது சிலர் கருத்து.

இவ்வூர் பவணந்தி முனிவரின் ஊர் என்று கொள்வதில் ஒரு பொருத்தம் காணப்படுகிறது. அதாவது, திருவல்லம் என்ற சிவத்தலத்தின் அருகில் உள்ள குகையில் பவணந்தி என்ற பெயர் பொறிக்கப்பட்ட ஒரு சைன குருவின் சீடர் சிலை காணப்படுகிறது. இந்தப் பிரதேசத்தில் பவணந்தி பிறந்தார் என்பது பொருத்தம்; பாடலில் மைந்தன் என்பது பெற்றமகன் என்று பொருளல்ல; மாணாக்கன், ஞானபுத்திரன் என்றே பொருளாகும். அன்றியும், திருவல்லம் கோயிலில் பவணந்தியை ஆதரித்த சீயகங்கன் மனைவி நிபந்தம் அமைத்தாள் என்ற சரித்திரச் செய்தியும் இங்குக் கருதத்தக்கது. (இச்செய்தி பின்னால் விளக்கப்பெறும்.)

இதற்கு மாறாக, கொங்கு மண்டலத்தில் இவ்வூர் உள்ளது என்பதைக் குறிப்பிடுகின்ற இரண்டு பாடல்கள் கொங்குமண்டல சதகத்தில் காணப்படுகின்றன:

கங்கக் குரிசில் உவக்கநன் னூலைக் கனிந்துபுகல்
துங்கப் புலமைப் பவணந்தி மாமுனி தோன்றிவளர்
கொங்கிற் குறும்பு தனிலாதி நாத குருவிளங்கும்
மங்குற் பொழிற்சன காபுர முங்கொங்கு மண்டலமே. (46)

சொல்காப் பியத்தின் குணதோடம் தேர்ந்து சொல்லுவதற்குத்
தொல்காப்பியம் கற்க நீண்டது அதனைச் சுருக்கியிசை
ஒல்காப் பெரும்பவ ணந்தீ என் றோதி உபகரித்த
வல்கா வலன்சீய கங்கனுந் தான்கொங்கு மண்டலமே. (47)

முதல்பாட்டில், கொங்கில் குறும்பு நாட்டில் ஆதிநாதனாருடைய கோயில் உள்ளஇடம் சனகாபுரம் என்று சொல்லப்பட்டுள் ளது. கொங்கு மண்டலத்தின் இருபத்துநான்கு பகுதிகளில் குறும்புநாடு என்பது ஒன்று. “கொங்கில் குறும்பில் குரக்குத் தளியாய்” என்பது சுந்தரர் தேவாரம் (7703). இவ்வூர் இப்போது சீனாபுரம் என்று வழங்குகிறது என்பது ஐயரவர்கள் குறிப்பு. இங்கு, பாடலில் சொன்னபடி முதல் தீர்த்தங்கரராகிய ஆதி நாதர் கோயில் உள்ளது. மேலும், இந்தவூர் சீயகங்கனுடைய தலைநகரான கோலாருக்கு அயலதாகவும் இருக்கிறது.

இவ்விரண்டையும் அன்றி, மற்றொரு சனநாதபுரம் மைசூரில் நரசிபுரம் தாலுக்காவைச் சேர்ந்த கிராமம் என்றும், இது மாவிலங்கைச் சனநாதபுரம் என்று வழங்குகிற தென்றும், இது சீயகங்கன் ஆட்சிபுரிந்த கங்கநாட்டின் கண் உள்ளதென்றும் செந்தமிழ்ப் பத்திரிகை ஐந்தாம் தொகுதியில் து.அ. கோபிநாத ராவ் எடுத்துக்காட்டியிருக்கிறார். இதைக் குறித்த சாசனத் தொடர்கள் பின்வருவன: கங்கபாடியான முடிகொண்ட சோழ மண்டலத்துத் தென்கரை இடைநாட்டு மாவிலங்கையான சன நாதபுரம்; முடிகொண்ட சோழமண்டலம், சனநாதபுரம், கங்கபாடி, தென்கரை இடைநாட்டு மாவிலங்கை ஆகிய தொடர் கள் எல்லாவற்றையும் நோக்கும்போது, இந்தச் சனநாதபுரமே பவணந்தி முனிவருக்குரிய சனநாதபுரம் என்று கொள்ளத்தக்கது.

அமராபரணன் என்ற சிறப்புப்பெயர் வாய்ந்த சீயகங்கன், தமிழ் இலக்கிய அறிவுக்கு அவசியமான தொல்காப்பியம் மிகவும் விரிவாக இருத்தலால் அதைச்சுருக்கி விளக்கமாக ஒருநூல் செய்து தரும்படி பவணந்தி முனிவரை வேண்டிக்கொள்ள, அவரும் அவ்வாறே நன்னூல் செய்து கொடுத்தார் என்பது கடைசிப்பாடலின் கருத்து. கொங்குமண்டல சதகம் பதிப்

பித்த முத்துசாமிக் கோனார் (1923) இவ்விருமண்டல சதகப் பாடல்களுக்கும் ஓர் அமைதி கூறுகிறார்: "எனவே, பவணந்தி பிறந்து வளர்ந்தது கொங்கு மண்டலமும், சன்மதி முனிவரிடம் உபதேசம் பெற்றுத் துறவு பூண்டிருந்தது தொண்டைமண்டல முமாகக் கொள்ளல் வேண்டும்."

### நன்னூல்

நன்னூல் என்ற பெயரே இந்நூலின் சிறப்பை உணர்த்துவ தாகும். நூல், நூற்பாவால் ஆனது, முன்னோர் நூலின் வழியே - நன்னூற் பெயரின் வகுத்தனன் என்பது சிறப்புப்பாயிரம். எனவே இது முதனூலன்று. தொல்காப்பியத்தின் வழிவந்த ஒரு வழிநூல்; அகத்தியத்தை நோக்க ஒரு சார்புநூல். பல சூத்திரங்களின் இறுதியில், என்ப என்று இவர் கூறியிருப்பது இதற்குச் சான் றாகும் எனக் கருதினாலும்கூட, இவ்வாறு என்ப, என்மனார் புலவர் என்றுகூறி முடிப்பது ஓர் இலக்கண மரபாக ஆகி யிருந்தது என்பதையும் மறத்தல் கூடாது.

தன்மையாற் பெயர் பெற்றதற்கு உரைகாரர் இந்நூலையே உதாரணமாகக் காட்டியிருப்பது இதன் பெருமையைப் புலப் படுத்துவதாகும். நன்னூல் என்றொரு சாஸ்திரம் என்று வைணவ ஆசாரியர் இதைக் கூறுவதும் இதன் பெருமையை யுணர்த்தும் குறிப்பாகும்.

நன்னூலுக்கு முதன்முதலில் உரைசெய்த மயிலைநாதர் நன்னூலில் ஐந்ததிகாரங்களும் உள்ளன என்று கருதியிருந்தார் என்பதற்கு அவர் உரையுள் சில குறிப்புக்கள் காணப்படுகின்றன. நூலின் இறுதிச் சூத்திரமாகவுள்ள 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்ற சூத்திரத்தின் உரையில், "இந்நூலிற் சொன்ன ஐந்ததிகாரத்திற்கும் சிங்கநோக்காய் நிற்பதொரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று ... இவ்வாறே மேல்வரும் அதிகாரங் களிலும் கண்டுகொள்க" என்று எழுதுகிறார். நூலினிடையிலும், இவர் இக்கருத்துக் கொண்டிருந்தார் என்பதற்கான குறிப்புக்கள் காணப்படுகின்றன. 'நுதலிய பொருள் அரும்பொருள் ஐந்தென உணர்த்தினமையின் இந்நூலுக்குரிய பொருள், யாப்பு, அணி என்னும் மூன்று அதிகாரங்களும் அக்காலத்து உள்ளன போலும்' என்பது சங்கர நமசிவாயர் விருத்தியுரை. சென்ற நூற் றாண்டில் புதியஉரை எழுதி அச்சிட்ட இராமானுச கவிராயரும், 'இதனுள் அரும்பொருளைந்தையும் வகுத்தனன் என்பதனால்,

எழுத்திலக்கணம் சொல்இலக்கணம் தவிர மற்ற மூன்றிலக்கணங் களும் அக்காலத்து இருந்தனபோலும்' என்றெழுதுகிறார்.

இக்கருத்துக்கு மற்றோர் ஆதரவும் அக்காலத்திலேயே கிடைத்தது. நாலாயிர திவ்வியப் பிரபந்தங்களுக்கு உள்ள சிறப்புப் பாயிரமாகிய 'தனியன்' என்னும் பாடல்களுக்கு உரை யெழுதிய பிள்ளைலோகஞ் ஜீயர் எழுதியுள்ள ஒரு குறிப்பு இங்குச் சொல்லத்தகுந்தது:

**நெஞ்சுக் கிருள்கடி தீபம், அடங்கா நெடும்பிறவி**
**நஞ்சுக்கு நல்ல அமுதம், தமிழ் நன் னூல்துறைகள்**
**அஞ்சுக்கு இலக்கியம், ஆரண சாரம், பரசமயப்**
**பஞ்சுக் கனலின் பொறி; பர காலன் பனுவல்களே.**

என்பது கூரத்தாழ்வார் செய்த பெரியதிருமொழித் தனியன். இதன் உரையில், 'தமிழ் நன்னூல் துறைகள் அஞ்சுக்கு' என்ற தொடரின் பொருளை விளக்குமிடத்து, "த்ராவிட சாஸ்திரம், எழுத்து சொல் பொருள் யாப்பு அலங்காரம் என்கிற விலக்ஷண மான பஞ்ச லக்ஷணத்தோடே கூடியிறே இருப்பது; அன்றிக்கே, தமிழுக்கு எழுத்து முதலான அஞ்சு லக்ஷணத்தையும் அறுதி யிடுவதான நன்னூல் என்று ஒரு சாஸ்திரம் உண்டு, அத்தைச் சொல்லிற்றாதல்; ஏவம் விதமான த்ராவிட சாஸ்திர மார்க்க பஞ்சகத்துக்கு" என்று பிள்ளை லோகார்யஞ்ஜீயர் எழுதுகிறார். இதுபற்றி ஐயரவர்கள் பின்வருமாறு குறிப்பெழுதி இருக் கிறார்கள்: "பவணந்தி முனிவர், எழுத்து முதலிய ஐந்திலக்கணங் களையும் தொல்காப்பியத்திற்போல எழுத்துச் சொற்பொரு ளென்னும் மூன்றதிகாரத்தினுள் அடக்கினரென்றும் அவற்றின் முதற்படைப்பு முதலிய முத்தொழிற்கும் உரிய நான்முகன் முதலான கடவுளராயுள்ளான் அருகதேவனே யென்னும் தமது சமயக்கொள்கைக்கு இயைய நான்முகன் முதலிய மூவர்க்கும் முறையே பொருந்துமாறு சமற்காரமாக அருகக் கடவுள் வணக்கங் கூறினரென்றும், பின்னது இறந்துபோகவே முன்னவை இரண்டு மட்டும் வழங்கலாயினவென்றும் சைனரிற் சிலர் கூறு கின்றனர்."

இவ்வாறு பண்டை ஆசிரியர் பலர் நன்னூலில் ஐந்து அதிகாரம் கூறினும், அது உண்மையென்று தோன்றவில்லை. தனியன் பாடலில் சொல்லப்பட்ட பொருள், தமிழ் நன்னூல் துறை அஞ்சு என்பதே. இது தமிழில் ஐந்திலக்கணம் என்று

சொல்லிற்றே தவிர, நன்னூல் என்ற நூற்பெயரைச் சொல்லியது ஆகாது. இப்பாடல் பாடிய கூரத்தாழ்வார் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கம். எனவே, இவ்ஆழ்வார் நன்னூலைக் குறிப்பிட்டிருத்தல் முடியாது என்பது தெளிவு. உரை செய்த பிள்ளை லோகஞ்ஜீயர் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தவர். அவர் காலத்தில் நன்னூல் தோன்றிவிட்டது. இச்சொற்றொடரைக் கண்ட மாத்திரத்திலேயே அவர் நன்னூல் என்று ஒரு சாஸ்திரமுண்டு என்று எழுதியிருப்பது பிழை;* தமிழினிடத்து அவருக்குள்ள பக்தியைக் காட்டுகிறது என்று மட்டுமே இதைக் கொள்ளவேண்டும்.

உண்மையில் நன்னூலில் எழுத்து சொல் என்ற இரண்டு அதிகாரங்கள் மட்டும் உள்ளன.❖ பவணந்திக்கு முன்னிருந்த மற்றொரு சைன இலக்கிய ஆசிரியரான குணவீர பண்டிதர் (12 நூ.) செய்த நேமிநாதம் எழுத்து, சொல் என்ற இரண்டே பகுதிகள் கொண்டது. அதற்குச் சின்னூல் என்ற ஒரு பெயரும் உண்டு. அதுபோல, நன்னூலும் இரண்டே அதிகாரங்கள் கொண்டது; இதுபற்றிச் சிற்றதிகாரம் என்ற பெயரும் இதற்கு வழங்கிற்று. மேலும் 18ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் தருக்க; சங்கிரக உரை எழுதிய சிவஞான சுவாமிகள், நன்னூல் முடிவு பெறாத நூல் என்று சொல்லுவதும் இங்கு குறிப்பிடத்தகும்: "மங்கலங்கூறிய வழியும் நன்னூல் முதலியவற்றின் முடிவு காணாமையின், மங்கலங்கூறாத வழியும் தொல்காப்பியம் முதலியவற்றின் முடிவு காண்டலின், உடன்பாட்டினும் எதிர் மறையினும் நியமந்தப்புதலின் எனின், நன்று சொன்னாய்; நன்னூல் முதலியவற்றில் இடையூற்றின் மிகுதிப்பாட்டால் முடிவு பேறு இன்று ....."

எனவே, நன்னூலார் இரண்டே அதிகாரங்கள் செய்தார், பொருள், யாப்பு, அணி செய்யவில்லை என்பது தெளிவு. தமிழ்

---

* வியாகரணமும் ஒரு வேதாங்கமான சாஸ்திரம் என்ற கருத்தில் ஒருகால் இது பொருந்தலாம்.

❖ சீயகங்கன் அரும்பொருள் ஐந்தையும் செய்து தருக என்று கேட்பினும், பவணந்தி முனிவர், தமக்கு முன்னும், தொல்காப்பியத்தின் பின்னும் புறப்பொருள் வெண்பாமாலை, இறையனார் களவியல், யாப்பருங் கலகாரிகை, தண்டியலங்காரம் ஆகிய சிறப்பு நூல்கள் இருத்தல் பற்றி அவ்விலக்கணங்கள் எழுதாமல், எழுத்து சொல் இரண்டும் கூறும் நேமிநாதம் சின்னூலாயிருத்தல் பற்றி, இவ்விரு பகுதிகளுக்கு மட்டும் தாம் பெருநூல் செய்தார் என்று கொள்ளலாம் போலும்.

மக்கள் இந்தநூலைச் சிறப்பாகப் போற்றுகிறார்கள். தமிழ் நூற்பரப்பில் பிற மூன்று அதிகாரங்களைப் பற்றிய பேச்சு வந்த தில்லை. ஒரு சூத்திரத்தைக்கூட யாரும் குறிப்பிட்டதில்லை. உண்மையில் இவர் பின்மூன்றையும் செய்திருந்தால், தமிழ் மக்கள் அவற்றைக் கைவிட்டிருக்க மாட்டார்கள். ஆகவே, நன்னூலில் இரண்டே அதிகாரங்கள் தான் இருந்தன என்பது மிகவும் தெளிவு. ஆயின், பவணந்திக்கு அடுத்த நூற்றாண்டில் வந்த மயிலைநாதர் ஏன் இவ்வாறு ஐந்து அதிகாரங்களையும் குறிப்பிட்டார் என்பது விளங்கவில்லை.

நன்னூலின் பொதுப்பாயிரம், 'முகவுரை பதிகம்' என்ற சூத்திரத்தில் தொடங்கி, 'மாடக்குச் சித்திரமும்' என்ற வெண்பா முடிய, ஐம்பத்தைந்து சூத்திரங்கள் கொண்டது. இவற்றுள் நான்கு, வெண்பாக்கள். இப்பாயிரப் பகுதி முழுதும் பவணந்தி முனிவர் செய்யவில்லை, முந்தையோர் செய்திருந்த சூத்திரங் களை இவர் எடுத்து அமைத்துக் கொண்டார் என்ற ஒரு கருத்து வழங்குகின்றது. அது உண்மையே. மயிலைநாதர் பாயிரப் பகுதியைச் சூத்திரங்களோடு கணக்கிட்டுச் சேர்க்கவில்லை. சூத்திரத்தொகை கூறும் இரண்டு வெண்பாக்களும், பாயிரத் தைச் சேர்த்துச் சொல்லவில்லை.

எழுத்ததிகாரம்:

> எழுபா னிரண்டெழுத்தி னேற்றபதத் தைஞ்ஞான்
> கொடுமூன் றுயிரீறைம் பான்மூன் – றருமெய்யீ
> றாறா றுருபியன்மூ வாறா மெழுத்துரைநூற்
> பாவிருநூற் றோரிரண்டாப் பார்.

சொல்லதிகாரம்:

> பேரறு பத்திரண்டு பின்வினையெண் ணான்குபொது
> ஓரறுபத் தெட்டிடை மூவேழின் – மேலொன்
> றுரியிருபத் தொன்றாகச் சொற்சூத் திரத்தின்
> விரியிருநூற் றோரைந்தா வேண்டு.

எழுத்து - எழுத்தியல் 72, பதவியல் 23, உயிரீற்றுப் புணரியல் 53, மெய்யீற்றுப் புணரியல் 36, உருபுப்புணரியல் 18 - ஆக மொத்தம் 202; சொல் - பெயரியல் 62, வினையியல் 32, பொதுவியல் 68, இடையியல் 22, உரியியல் 21 - ஆக மொத்தம் 205.

இப்பாயிரச் சூத்திரங்கள் இறையனார் அகப்பொருள் உரை, யாப்பருங்கலம் முதல்சூத்திர உரை, தொல்காப்பியப் பாயிரஉரைகள் முதலியவற்றுள், வேறுபட்டும் வேறுபடாமலும், சூத்திரங்களாகவும் உரைநடையாகவும், காணப்படுகின்றன. குணசாகரர் யாப்பருங்கலக் காரிகை உரையில் ஐந்து சூத்திரங் களை எடுத்துக்காட்டி 'இவ்வாறு சொன்னார் பாடலனார் என்னும் ஆசிரியர்' என்பார். மூன்று சூத்திரங்கள் தொல்காப் பியம்; இரண்டு பனம்பாரம் (மயிலைநாதர் குறிப்பு). மேலும், நன்னூலார் பாயிரத்தின் ஒன்பதாம் சூத்திரமாக வைத்த 'முன்னோர் மொழிபொருளே' என்ற வெண்பாவை மயிலை நாதர் சூத்திரமாகக் கொள்ளாமல் மேற்கோள் பாடலாகக் காட்டுகிறார். இவ்வாறு பாயிரப்பகுதி முழுமையும் தானெடுத்து மொழிதலாகப் பவணந்தி முனிவரால் எடுத்தாளப் பெற்றன. பாடலமும் பனம்பாரமும் இக்காலத்து இல்லை. அவிநயச் சூத்திரங்கள் சிலவும் இங்கு இருத்தல் கூடும்.

ஒன்பது சூத்திரங்கள் யாப்பருங்கல விருத்தியுரையில் (11 நூ.) அப்படியே உள்ளன. சூத்திர இலக்கணம் கூறும் சூத்திரம்: "சில்வகை எழுத்தில் பல்வகைப் பொருளைச் - செவ்வன் ஆடியின் செறித்தினிது விளக்கித் - திட்ப நுட்பம் சிறந்தன சூத்திரம்" (18) என்பது. 'வடமொழியில் சூத்திர இலக்கணம் கூறப்பட்டவழிக் கண்ணாடி யுவமை இல்லை என்பர்' என்பது ஐயரவர்கள் குறிப்பு. தொல்காப்பியர் (பொருள், 471 சூத்திரம்) கண்ணாடியைக் கூறுகிறார்:

> அவற்றுட் சூத்திரந் தானே
> ஆடி நிழலின் அறியத் தோன்றி
> நாடுத லின்றிப் பொருள்நனி விளங்க
> யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே.

பவணந்தி முனிவர் எழுத்ததிகாரத்தின் தொடக்கத்திலும் சொல்லதிகாரத்தின் தொடக்கத்திலும் தனித்தனி அருகன் வணக்கம் கூறியிருக்கிறார். இவ்வாறு கூறியிருந்தும் பாயிரத்துள் வணக்கம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பாயிரம் இவர் செய்திருந்தால் அங்கு இவர் வணக்கம் கூறியிருப்பார். ஆகவே பாயிரம் இவர் செய்யவில்லை என்பது கருத்து; முழுமையும் தானெடுத்து மொழிதலாக அமைந்ததேயாகும். இதுமட்டுமன்று.

நூலகத்தும் இவர் தொல்காப்பியச் சூத்திரங்கள் ஏழு (நன்னூல் 90, 252, 317, 396, 404, 408, 489) எடுத்து அமைத்துக் கொண்டிருக் கிறார். திருக்குறள் நுண்பொருள் மாலையுடையார் குறிப்பால், 398ஆம் சூத்திரமாகிய 'ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா' என்பது பவணந்தி வாக்கன்று என்று தெரிகிறது. மேலும் பவணந்திமுனிவர் தொல்காப்பியச் சூத்திரங்களை எடுத்துக் கொண்டது போலவே, தாம்கருதிய சுருக்கமும் தெளிவும் பொருட்செறிவும் வேண்டியும், பிற்காலத்து இலக்கண நுட்பங் களைக் காட்டவும், பண்டை இலக்கணங்களுள் இறந்தவற்றை நீக்கவும் எதிர்காலத்துக்கும் நின்று பயன்தரவும் வேண்டியும், புதிதாகத் தாம் எல்லாச் சூத்திரங்களையும் செய்வதற்குப் பதிலாக, தம் காலத்தில் வழங்கிய அகத்தியச் சூத்திரங்களிலும் அவிநயம் முதலான சிறப்பான இலக்கண நூல்களிலும், வழங்கு வனவற்றைத் தழுவி, மரபு வழுவாமல் இந்நூலை இயற்றினா ரென்று அறிகிறோம்.

நன்னூலின் சிறப்புநோக்கி இலக்கணம் கற்கப் புகுவோர் இன்றுவரை இந்நூலையே கற்கிறார்கள். தொல்காப்பியர் காலத்திற்குப் பின் 13ஆம் நூற்றாண்டு வரை விளைந்த தமிழ் வளர்ச்சிக்குப் பொருந்தவல்ல இலக்கணம் அமையப் பவணந்தி முனிவர் தம்நூலைச் செய்திருக்கிறார். 17ஆம் நூற்றாண்டில் இலக்கண விளக்கம் செய்த வைத்தியநாத தேசிகர் இதிலிருந்து 250 சூத்திரங்களை எடுத்து அமைத்துக்கொண்டிருப்பது, இந்த நூலின் சிறப்பை மட்டும் அல்லாமல், இச்சூத்திரங்களின் நயத்தையும் நன்கு உணர்த்துகிறது. இலக்கணக்கொத்து பாடிய சுவாமிநாததேசிகர்,

> **முன்னூ லொழியப் பின்னூல் பலவினுள்**
> **எந்நூலாரும் நன்னூ லாருக்கு**
> **இணையோ என்னுந் துணிவே மன்னுக.**

என்பதும், நன்னூல் உரைசெய்த சங்கரநமசிவாயர், பல்கலைக் குரிசில் பவணந்தி என்னும் புலவர் பெருமாள் என்று எழுது வதும், சுப்பிரமணிய தீக்கிதரும் சிவஞான சுவாமிகளும் தங்கள் இலக்கண நூல்களில் நன்னூலைப் போற்றுவதும், இங்கு அறியத் தக்கவை.

நன்னூலின் பகுதிகளான எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஒவ்வொன்றும் ஐந்து இயல்கள் உடையது. பவணந்தி முனிவர்

அவிநயம் என்ற இலக்கண நூலையும் தழுவி இலக்கணம் செய்தார். அந்நூல் அவர் காலத்தில் வழக்கில் இருந்து பின்னர் இறந்தது போலும். இளம்பூரணர் உரையையும் தழுவி எழுது கிறார். எழுத்ததிகாரத்திலுள்ள பதவியல் என்னும் பெயரும் பொருளும் வடமொழி இலக்கணத்தை நோக்கி அமைக்கப் பட்டுள்ளது.

“நன்னூலார் பதவியல் கூறியதற்கு முதனூல் வடநூலாக லின், அதுதோன்ற மொழியியலென்னாது பதவியலென வட சொல்லான் அதற்குப் பெயரிட்டு, அவ்வோத்துள் வடவெழுத்துத் தமிழில் வருமாறுங் கூறினார்” என்று இலக்கணவிளக்கச் சூறா வளியில் சிவஞான சுவாமிகள் கூறுவது காண்க.

உரிஇயலுக்குப் புறனடை கூறும் சூத்திரத்தில் இவர் ‘பிங்கலம் முதலா உரிச்சொல்’ என்று பிங்கல நிகண்டைக் குறிப்பிடுகின்றார். இதனால் பிங்கல நிகண்டு இவர் காலத்திற்கு முந்தியது என்றும், இவர் காலத்தில்கூட நிகண்டு என்றபெயர் வழக்கத்தில் வரவில்லை. உரிச்சொல் என்ற வழக்கே இருந்தது என்றும் அறிகிறோம்.

இந்நூல் அளவில் சுருங்கியதாயினும் மிகவும் திட்பமாகவும் செறிவு உடையதாகவும் அமைந்திருக்கிறது. சுருக்கமாயினும் விளக்கமானது. தொல்காப்பியத்தில் விரிந்துள்ளவை இங்கு சுருக்கமாய் உள்ளன. ஆகவே, கற்போருக்கு இது எளிதானது. சில கருத்துக்களை இவர் தொல்காப்பியருக்கு மாறாகவும் எழுதி யுள்ளார். அங்கு கூறப்படாமல் சங்க இலக்கியங்களுள்ளும் பிற இலக்கியங்களுள் காணப்படும் அமைதிகளையும் இதில் சேர்த்துள்ளார். இலக்கணம் கற்க விரும்புவோருக்கு இதுபோன்ற தெளிவான நூல் வேறில்லை. அறிஞர் சிலர் தொல்காப்பியத்தை உயர்த்தியும் நன்னூலைத் தாழ்த்தியும் தம் அபிமானம் காரண மாகப் பேசுவது உண்டு. இது பொருந்தாது. தமிழ் இலக்கிய வர லாற்றில் மிகவும் புகழ் வாய்ந்த ஓர் இடம் நன்னூலுக்குரியது.

**சீயகங்கன்**

நன்னூலை ஆக்குவித்தவன் சீயகங்கன். இவன் கங்கர் மரபினன். சைன ஆசாரியர்களுள் ஒருவரான சிம்மநந்தி என் பவர் கங்கராச்சியத்தை ஸ்தாபித்தார் என்றும் அதனால் இம் மரபில் வந்த தலைவர்கள் சைன மதத்தை தழுவி ஒழுகினார்கள்

என்றும் சொல்வர். இவன் கி.பி. 1178 - 1218இல் ஆட்சிபுரிந்த மூன்றாம் குலோத்துங்க சோழனுக்கு அடங்கி வாழ்ந்த ஒரு குறுநில மன்னன். கல்வெட்டுக்களில் இவன் குவளாலபுர பரமேசுவரன், கங்ககுலோத்தமன், சூரநாயகன், திருவேகம்ப முடையானான அமராபரண சீயகங்கன் என்று வழங்கப் பெறுகிறான். அகநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் கங்கர் போற்றப்பெற்றுள்ளனர். அன்றியும், முதற் குலோத்துங்கசோழன் காலத்திலும், இரண்டாம் குலோத்துங்கசோழன் காலத்திலும், இவனுடைய முன்னோர் இதே இடத்தில் அரசுபுரிந்து இருந் தனர் என்பது கல்வெட்டுக்களால் தெரியவருகிறது. இவர்கள் அனைவருமே சிறந்தவீரர்கள் என்று வரலாற்றால் அறிகிறோம். இவனுடைய வீரத்தைச் சிறப்புப்பாயிரப் பாடல் நன்கு எடுத்துக் கூறுகின்றது. "திறல்உறு தொல்சீர்" என்று சிறப்புப்பாயிரம் கூறுகின்ற தொடருக்கு சங்கரநமசிவாயர் எழுதும் உரையில், "வெற்றி மிகுந்த தன்னளவே அன்றித் தன்தாதை மூதாதை முதலியோரைத் தொட்டும் வரும் கீர்த்தி" என்று எழுதுகிறார். வரலாற்றின்படி இது உண்மையே.

உரைசெய்த மயிலைநாதர் கங்கர் குலத்தினர்பால் மிக்க ஈடுபாடுடையவர் போலும்; சீயகங்கன் என்ற சொல்லுக்கு, தங்கலர் குலமாம் வெங்கயம் அனுங்கும் - சிங்கமாகிய கங்க னென்பான் (சீயம் - சிங்கம்) என அவர் எழுதுவதையும், செய்யு ளுக்கு எடுத்துக்காட்டாக அவர்,

**கங்கன் அகன்மார்பன் கற்றோர்க் கினிதளிக்கும்**
**செங்கனகம் வெள்ளைச் செழுமணிகள் – எங்கும்**
**தெறித்தனவே போல்விளங்கு மீன்சூழ்ந்த திங்கள்**
**எறிக்குநிலா அன்றோ இனி.**

என்று கங்கனைப் புகழும் வெண்பாவொன்றை எடுத்துக் காட்டுவதையும் காண்க.

சீயகங்கனுடைய கல்வெட்டுக்கள் 1181 முதல் 1212 வரை யில் கிடைக்கின்றன. இவன் தந்தை பெயர் சோழேந்திர சிங்கன் என்றும் அறிகிறோம். இவனுடைய தலைநகர் குவளாலபுரம், இக்காலத்தில் மைசூர் மாநிலத்தில் உள்ள கோலார் என்ற நகர மாகும். இவன் புதல்வன் அருங்குன்றைப் பிள்ளையான சீயகங்கன் என்பான், 1181இல் திருக்காளத்தியில் விளக்குக்கு நிபந்தம் அளித்தான். இச்சீயகங்கனே திருக்காளத்தியிலும், காஞ்சி

யிலும் நுந்தாவிளக்கு வைத்தான். 1212இல் 'அமராபரண சீய கங்கன் நம்பிராட்டியான அரிய பிள்ளை திருவல்லமுடைய நாயனார்க்கு வைத்த சந்தி விளக்கு ஒன்றும்' என்ற கல்வெட்டுச் செய்திகளால், இவனும் இவன் குடும்பத்தினரும் சிவபக்தி உடையவர்களாக வாழ்ந்தார்கள் என்று தெரிகிறது. சோழப் பேரரசன் மிகுந்த சிவபக்தி உடையவன். ஆதலால், அவன் கீழ் தலைவனாக இருந்த சீயகங்கன், தான் சைனனாக இருந்தும், பேரரசனுக்காகத் தானே சிவப்பணிகள் செய்திருத்தல் நிகழக் கூடியதே. இவன் ஆண்டநாடு கன்னடப் பகுதியில் உள்ளது. இவன் தமிழனாய் இருக்கலாம். சைன முனிவனான பவணந்தி முனிவருக்கு ஆதரவு தந்து அவரை வேண்டி இந்நன்னூலாகிய இலக்கண நூல் செய்வித்தான் என்பது இவனுடைய தமிழ்ப் பற்றைப் புலப்படுத்தும். இதனோடு, கன்னடமொழிக்குரிய நாட்டில் இத்தலைவனுடைய ஆதரவுபெற்றுப் பவணந்தி முனிவர் இவ்விலக்கணநூல் செய்தார் என்ற வரலாறு, தொடக்கத்தில் குறிப்பிட்டபடி இலக்கணநூல் செய்த சமணசமயத்தினர் அன்னிய மொழிக்குரியவர் என்ற கருத்துக்கு ஆதரவு தருமா என்பதும் சிந்திக்கத் தகுந்தது.

சீயகங்கனைக் குறித்த மற்றொரு செய்தி, சித்தூர் தாலுக்கா மேல்பாடி கிராமத்துச் சோமநாதேசுவரர் கோயில் மகா மண்டபத்துச் சுவரிலுள்ள சாசனம் தெரிவிக்கிறது. "இராசராச தேவற்கு யாண்டு எட்டாவது சிறைமீட்ட பெருமாளான சீயகங்கதேவர் மாமன் மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன்* புடோலி அரசன் இத்திருமண்டபம் செய்வித்தோன்.

பொத்தப்பிச் சோழன் புடோலிஅர சன்புவிமேல்
எத்திசையும் செல்லும்எழில் மேற்பாடி – மெய்த்தவத்தால்
சோளேந் திரசிங்க நாயகத்துத் துங்கமணித்
தாளேந்து மண்டபம் செய் தான்.

இக்கோயில் முற்காலத்தே சோளேந்திர சிங்கர் கோயில் என்று வழங்கியது போலும். இவ்விராசராசதேவன், மூன்றாம் குலோத்துங்கசோழன் மகன் மூன்றாம் இராசராசசோழன்; இதில் குறிப்பிட்ட காலம் கி.பி. 1224.

---

* மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் சாசனம், காஞ்சி காமாட்சி கோயில் கோபுரத்துக்கு உள் மேல்பால் மதிற் சுவரிலும் காணப் படுகிறது.

## காலம்

பிறநூல்கள் பலவற்றைப் போலன்றி நன்னூலின் காலம் மிகவும் திட்டமாய்த் தெரிகிறது. சீயகங்கன் வேண்ட இந்நூல் செய்தார் எனவே, இருவர் காலமும் ஒன்றே. ஆதலால், சீயகங்கனது கல்வெட்டு 1212இல் கிடைக்கிறது என்று குறிப்பிட்டமையால், அவனது காலம் 13ஆம் நூற்றண்டின் தொடக்கப் பகுதியாகும். பவணந்தி முனிவரின் காலமும் இதுவே. அதாவது 13ஆம் நூற்றாண்டின் தொடக்கமாகும். அடுத்த நூற்றாண்டில் உரைசெய்த மயிலைநாதர் நன்னூலுக்கு உரைசெய்தார்; நச்சினார்க்கினியர் (14நூ.) சில நன்னூல் கருத்துக்களை மறுத்திருக்கிறார். இவற்றாலும் காலப்பொருத்தம் நன்கு உணரப்படும். மேலும், பவணந்தி பிங்கலநூலைக் குறிப்பிடுகிறமையால் அந்நூல் இவருக்குக் காலத்தால் முற்பட்டது என்றசெய்தி அறியப்படுகின்றது.

சிறப்புப்பாயிரமானது, சீயகங்கனைச் சொல்லும்போது, "... கார்நிகர் வண்கைத் திருந்திய செங்கோற் சீயகங்கன், அருங்கலை விநோதன் அமராபரணன்" என்று கூறுகிறது. இவன் பவணந்தி முனிவருக்கு ஆதரவு தந்து, நூல் செய்வித்தமையினாலே இவனுடைய கொடைத்திறம் நன்கு புலப்படும். மற்றும் இங்குக் கருதத்தக்கது, அருங்கலை விநோதன் என்ற தொடர். இது சொல்நயமும் பொருள்அழகும் கொண்ட ஓர் அரியதொடர். சீயகங்கனுடைய கலையுணர்வைச் சிறப்பிப்பதற்கு இதனினும் மேலான ஒரு தொடரைப் படைக்கமுடியாது. அருங்கலை விநோதன் - கலையே பொழுதுபோக்காகக் கொண்டவன், கலாரசிகன், கலைஞர்களைப் பேணுபவன் என்ற பொருள்களெல்லாம் இதனுள் அடங்கியுள்ளன. இக்காலத்தில் தமிழ் ஆங்கிலம் என்ற இருமொழிவாணர், சில ஆங்கிலக் கருத்துக்களையும் தொடர்களையும் தமிழில் சொல்ல மிகவும் திண்டாடுகிறார்கள். பைன் - ஆர்ட்ஸ் என்பன இருசொற்கள்; இவ்வாங்கிலத்தைத் தமிழில் சொல்ல அறியாமல் அனேகர் மிக்க இடர்ப்பட்டு என்னென்ன பெயரோ சொல்கிறார்கள்.[1] இந்திய மத்திய அரசில், பைன் - ஆர்ட் - அகாடெமி என்பதை என்ன சொல்வதென்று தெரியாமல் - லலித் - கலா - அகாதெமி என்று விசித்திரமாகப் பெயர் சூட்டியிருக்கிறார்கள். ஆனால் நன்னூற் சிறப்புப்பாயிரம் செய்த ஆசிரியர் - அவர் பெயர்கூடத் தெரியவில்லை - எவ்வளவு அழகான ஆனால் எளிதான தொடரைச் சிருஷ்டித்திருக்கிறார்! பைன் - ஆர்ட் என்பதை

முழுமையும் வெளியிடக்கூடிய தொடர் அருங்கலை;* நன்னூல் தோன்றிய காலத்தில் ஆங்கிலேயர் நாட்டில் அருங்கலையும் இல்லை; இந்த ஆங்கிலத் தொடரும் இல்லை. ஆனால் பெயர் தெரியாத நம் ஆசிரியர் படைத்த இத்தொடர் எவ்வளவோ பொருள் பொதிந்ததாய் இருப்பதால் அன்று மட்டுமல்லாமல், இன்றும்கூட எவ்வளவோ பொருளை விளக்குவதாயும் உள்ளது. சிறப்புப்பாயிரக்காரர் இணையற்ற ரசிகராயிருந்தமையால் தான் இத்தகைய ஒரு தொடர் அவர் சொல்லில் உருக்கொண்டது. இத்தொடர் எழுவதற்கு, சீயகங்கன் எவ்வளவு சிறந்த ரசிகனாயிருக்க வேண்டும்❖!

**நன்னூல் உரைகள்**

கிடைக்கின்ற உரைகளுள் காலத்தால் முந்தியது மயிலை நாதர் உரை (14 நூ.)✞ (இவருக்கு முன்பும் நன்னூல் உரைகள் இருந்தன போலும்.) பவணந்தி முனிவரைப் போலவே இவரும் சைனர். சீயகங்கன் மரபையும் சைன ஆசிரியர்களையும் பெரிதும் போற்றுகின்றவர். 18ஆம் நூற்றாண்டில் சங்கர நமசிவாயர் புதிய விருத்தியுரை எழுதினார். அது மிகவும் சிறப்பாக ஆட்சி பெற்றது. அதே நூற்றாண்டின் இறுதியில் திருவாவடுதுறை ஆதீனத்துச் சிவஞான சுவாமிகள் இவர் உரையைச் சில இடங்களில் மாற்றியும் திருத்தியும் புத்துரையொன்று செய்தார். 19ஆம் நூற்றாண்டில், சிவஞானசுவாமி உரையை ஆதாரமாய்க் கொண்டு அனேகர் புதிய காண்டிகையுரையும் விருத்தியுரையும் செய்திருக்கிறார்கள். இவை முகவை இராமானுச கவிராயர் உரை (1847), வேதகிரி முதலியார் (1851), விசாகப்பெருமாளையர் (1880), ஆறுமுக நாவலர் காண்டிகையுரை, பவானந்தம் பிள்ளை யுரை, வை.மு. சடகோப ராமானுசாசாரியர் உரை போன்ற பல. மயிலைநாதருரையும் சங்கரநமசிவாயர் உரையும் ஐயரவர்களால் பலமுறை அழகுறப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. ஆசிரிய நிகண்டு செய்த ஆண்டிப்புலவரும் கூழங்கைத் தம்பிரான் என்பவரும் உரை செய்தார்கள் என்று வரலாறு உண்டு. அவ்வுரைகள் கிடைப்பதாகத் தெரியவில்லை. அச்சான சமீபகால உரைகளில் பள்ளிகளுக்கென்று எழுதப்பெற்ற சடகோபராமானுசாசாரியர் உரை மிகவும் தெளிவானது.

---

* புத்தகமும் வித்தகமும் என்ற எமது நூல் 1956, அருங்கலை என்ற கட்டுரை, பக்கம் 5 - 8 பார்க்க.

❖ அருங்கலை விநோதன் - Patron of Fine Arts.

✞ எமது தமிழ் இலக்கிய வரலாறு 14ஆம் நூற்றாண்டு.

## நாற்கவிராச நம்பி

### இலக்கண நூல் வளர்ச்சி

இவர் செய்த அகப்பொருள் விளக்கம் தமிழ் இலக்கிய வரலாற்றில் மிகவும் சிறப்பான இடம் பெற்றிருக்கிறது. தொல் காப்பியம் தோன்றிய பின்னர், அதுகூறும் இலக்கணப் பாகுபாடு களை விரித்து முழுமையும் அல்லது ஒவ்வொரு பகுதியாகவும் செய்யப்பெற்ற இலக்கண நூல்கள் பல. 12ஆம் நூற்றாண்டில் தோன்றிய வீரசோழியம் தொல்காப்பிய அதிகாரம் மூன்றையும் ஐந்தாக விரித்துக் கூறும். அடுத்துவந்த காலப்பகுதியில் குணவீர பண்டிதர் எழுத்து, சொல் இரண்டை மட்டும் நேமிநாதத்தில் கூறினார். பொர்ருளதிகாரம் பல பகுதிகளாகப் பிரிந்தது. புறப் பொருள் மட்டும் ஐயனாரிதனாரால் புறப்பொருள் வெண்பா மாலையாக விரிக்கப்பட்டது. அகப்பொருள் கூறவந்த இறை யனார் களவியல் மிகவும் பிரசித்தி பெற்றது. தமிழ்நெறி விளக்கம் என்ற சிறப்பான நூல் 10ஆம் நூற்றாண்டில் தோன்றி அகம் ஒன்றையே விளங்கக் கூறிற்றுப் போலும்; நூலின் ஒரு பகுதி ஐயரவர்களால் அச்சிடப்பட்டுள்ளது; முழுநூலும் கிடைக்க வில்லை. அடுத்துத் தோன்றியதே இந்த நம்பியார் செய்த அகப் பொருள் விளக்கம். முந்திய நூற்றாண்டுகளில் தோன்றிய யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்பன, யாப்பிலக் கணம் ஒன்றை மட்டும் விரித்து உரைத்தன. 12ஆம் நூற்றாண் டிலேயே யாப்பின் பிரிவாக பாட்டியல் என்ற ஒரு புதுநெறி வளர்ந்தது. இதற்கு மூலம் 11ஆம் நூற்றாண்டுக்கு உரிய பன்னிரு பாட்டியலாகும். 12இல் வச்சணந்திமாலை தோன்றிற்று. உவமான சங்கிரகம் முதலியன, இதனினும் பிற்காலத்தில் பாட்டியலுக்கு இன்றியமையாத சில உறுப்புக்களைக் கூறுவனவாக அமைந்தன. ஐந்தாம் பகுதியாகிய அணியிலக்கணம் 12ஆம் நூற்றாண்டி லேயே தண்டியலங்காரமாக விளக்கம்பெற்றது. இதற்கும் முன்னமே ஓர் அணியியல் இருந்தது போலும்.

### ஆசிரியர்

இவ்வாறு வளர்ந்த ஐந்திலக்கண நெறியில் நம்பியார் நூல் மிகவும் சிறப்பான இடம் பெற்றிருக்கிறது. தமிழ் பயில்வோர்

அனைவரும் இந்நூலையே அதிகம் பயில்கிறார்கள். இவ்வாசிரியரைக் குறித்த வரலாறு நாம் அறிவதற்கு, இதன் சிறப்புப் பாயிரமொன்றே துணையாக உள்ளது.

பூமலி நாவல் மாமலைச் சென்னி
ஈண்டிய இமையோர் வேண்டலிற் போந்து
குடங்கையின் விரிந்த நெடுங்கிரி மிகை தீர்த்து
அலைகடல் அடக்கி மலயத் திருந்த
இருந்தவன் தன்பால் இயற்றமிழ் உணர்ந்த
புலவர்பன் னிருவருள் தலைவ னாகிய
தொல்காப் பியனருள் ஒல்காப் பெரும்பொருள்
அகப்பொருள் இலக்கணம் அகப்படத் தழீஇ,
இகப்பரும் சான்றோர் இலக்கியம் நோக்கித்
தொகுத்துமுறை நிறீஇச் சூத்திரம் வகுத்தாங்கு,
அகப்பொருள் விளக்கமென் றதற்கொரு நாமம்
புலப்படுத்து, இருளறப் பொருள்விரித் தெழுதினன்:
மாந்தருந் தேவரும் வாழ்த்தமுக் குடைக்கீழ்
ஏந்தொழில் அரிமான் ஏந்துபொன் னணைமிசை
மதிமூன்று கவிப்ப உதய மால்வரைக்
கதிரோன் றிருந்தெனக் காண்தக இருந்து
தத்துவம் பகர்ந்தோன் சரணம் பொருந்திய
உத்தமன் புளிங்குடி உய்யவந் தானெனும்
முத்தமி ழாசான் மைந்தன்: இத்தலத்து
இருபெருங் கலைக்கும் ஒருபெருங் குரிசில்,
பாற்கடல் பல்புகழ் பரப்பிய
நாற்கவி ராச நம்பிஎன் பவனே.

ஆசிரியருடைய தந்தை ஊர் முதலான விவரங்கள் அனைத்தையும் இச்சிறப்புப் பாயிரம் கூறுவதால், இதைச் செய்தவர் உடன் காலத்தவர், ஆசிரியரின் மாணாக்கராயிருக்கலாம் என்று நாம் கொள்ளக் கிடக்கிறது. இதனால் பின்வரும் செய்திகளை அறிகிறோம். இந்நூல் செய்தவர் நாற்கவிராச நம்பி என்பவர். இவர் அகத்தியர் மாணாக்கர் பன்னிருவருள் ஒருவரான தொல் காப்பியர் செய்த தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் அடங்கிய அகப்பொருளை ஆராய்ந்து நூல்செய்தார்; அதற்கு அகப்பொருள் விளக்கம் என்று பெயரிட்டார்; மயக்கந்தீர

அதற்கு விரிவாக உரை எழுதினார்; இந்நம்பி அருகக் கடவுளை வழிபட்ட உய்யவந்தார்* என்னும் உத்தம குணங்கள் அமையப் பெற்ற முத்தமிழாசானுடைய மைந்தர். திருப்புளிங்குடி என்னும் ஊரினர். இவர் ஆரியம் முத்தமிழ் என்னும் இரண்டு கலையிலும் வல்லவர். ஆசு மதுரம் வித்தாரம் சித்திரம் என்னும் நாற்கவி யிலும் இவர் வல்லவரானமையால் நாற்கவிராச நம்பி எனப் பெயர் பெற்றார். நம்பி என்பது இவர் தம் இயற்பெயர் என்றும், நம்பி நயினார் என வழங்கப்பெற்றார் என்றும் சொல்வர்.

இத்திருப்புளிங்குடி என்பது பாண்டி நாட்டுள் பொருநை யின் வடகரையிலுள்ள திருப்புளியங்குடியாகும். இவர் சைன சமயத்தினர். சிறப்புப்பாயிரம் கூறுமாறு, நம்பியார் அகப் பொருள் விளக்கமும் அதன் உரையும் செய்தார். இந்நூலுக்குச் சுருக்கமான மற்றொரு சிறப்புப்பாயிரமும் உள்ளது❖:

**பூமிசை நடந்த**
**வாமனை வாழ்த்தி வடமலைச் சென்னி**
**ஈண்டிய கடவுளர் வேண்டலிற் போந்து**
**குடங்கையின் அலைகடல் அடக்கி ஈண்டிய**
**தென்மலை யிருந்த இருந்தவன் இயற்றமிழ்**
**கெழீஇய அகப்பொருள் தழீஇ நோக்கி**
**வழி கொடுத்து நிறீஇ வகுத்துப் புலப்படுத்தாங்கு**
**இகப்பில் அகப்பொருள் விளக்கம் பகர்ந்தனன்:**
**வழுதிச்**
**செந்தமிழ் நாட்டு மைந்தன், குரிசில்**
**பாற்கடற் பல்புகழ் பரப்பிய**
**நாற்கவி ராச நம்பி என் பவனே.**

இந்நூல் தொல்காப்பியத்தின் வழியென்றும், அது வழி நூலாத லின் இது சார்பு நூலென்றும், சிறப்புப் பாயிரவுரை கூறும்.

---

* இதற்கு முந்தியதான பன்னிரண்டாம் நூற்றாண்டில், உய்யவந்தார் என்ற பெயருடைய சைவ சித்தாந்த சமயாசாரியர் இருவர் இருந்து, திருவுந்தியார், திருகளிற்றுப்படியார் என்ற இரு சமயநூல் செய்திருக் கிறார்கள். இப்பெயர் அப்பெயர்களின் எதிரொலியாக இருக்கும் போலும்.

❖ முதல் சிறப்புப்பாயிரம் எல்லாப் பதிப்புக்களிலும் உள்ளது. இப் பாடல்கள் சுன்னாகம் குமாரசாமிப் புலவர் புத்துரைப் பதிப்பில் (1912) மட்டும் உள்ளது.

நாற்கவிராச நம்பி, தொல்காப்பியத்தையும் களவியலையும் அதன் உரையையும் இளம்பூரணர் தொல்காப்பியர் உரையையும் தழுவி, பின்வந்த சான்றோர் செய்யுளுக்கும் மக்கள் ஒழுக்கத் துக்கும் பொருந்தத் தம் நூலைச் செய்தார். ஓர் எடுத்துக்காட்டை மட்டும் இங்கு தருவோம். பரத்தையிற் பிரிந்த தலைவன், பூப்பின் காலத்துத் தலைவியோடு உறைய வேண்டியவன் என்பதை நூல்கள் சொல்கின்றன. தொல்காப்பியம் சூத்திரம் 185 கற்பியல்,

> பூப்பின் புறப்பாடு ஈரறு நாளும்
> நீத்தகன் று உறையார் என்மனார் புலவர்
> பரத்தையிற் பிரிந்த காலை யான.

இக்கருத்தை இறையனார் களவியலும் இதேமுறையில் கூறுகிறது:

> பரத்தையிற் பிரிந்த கிழவோன் மனைவி
> பூப்பின் புறப்பாடு ஈரறு நாளும்
> நீத்தகன் று உறைதல் அறத்தாறு அன்றே. (42)

இதன் உரைகாரர், பூப்புப் புறப்பட்ட நாள் முதல் பன்னிரு நாளும் என்று எழுதிவிட்டு பின்வருமாறு மேல் விளக்கம் எழுதுகிறார்: "பூப்புணர்த்தப்பட்ட தலைமகன் வாயில்களோடும் சென்று தலைமகளிடத்தானாய், முந்நாளும் சொற்கேட்கும் வழி உறைவானாக; உறைந்த பின்னை ஒன்பது நாளும் கூடி உறைவானாக." ஆனால் இவ்வுரைகாரருக்குப் பின் தொல் காப்பிய உரை எழுதிய இளம்பூரணர், சூத்திரத்தில் பூப்பின் புறப்பாடு என்று இருப்பினும், பூப்பினது புறம்பு பன்னிரண்டு நாளும் விட்டகன்று உறைவாரல்லர் என்று எழுதிப் பின் வருமாறு விளக்கம் கூறுகிறார்: 'பரத்தையர் சேரியானாயினும், பூத்தோன்றி மூன்று நாள் கழித்த பின்பு பன்னிரண்டு நாளும் நீங்குதல் அறமன்று என்றவாறு. இதனாற் பயன் என்னை யெனின் அது கருத்தோன்றுங் காலம் என்க." இக்கூற்றை நாற்கவிராச நம்பி அப்படியே தழுவிக் கொண்டு சூத்திரம் செய்திருப்பது இங்கு கருதத்தக்கது:

> பூத்த காலைப் புனையிழை மனைவியை
> நீராடிய பின் ஈராறு நாளும்
> கருவயிற்று உறூஉம் காலம் ஆதலின்
> பிரியப் பெறாஅன் பரத்தையிற் பிரிவோன். (91)

இங்கு நம்பி இளம்பூரணரைப் பின்பற்றி, நீராடிய பின் ஈராறு நாள் என்றும் கரு வயிற்று உறூஉம் காலம் என்றும் கூறிய கூற்றுக்கள், இன்றைய உயிர் நூல் தத்துவத்தின் படியும் சிறப்புடைய கருத்துக்கள்.

**நூல்**

தொடக்கத்தில் சொல்லப்பட்ட முறையில் இந்த நூலானது, அகப்பொருள் இலக்கணத்தைத் தொகுத்தும் விளக்கியும் சொல் வதால் விளக்கம் என்று பெயர் பெற்றது. தொல்காப்பியத்திலும், வேறு இடங்களிலும் விரிந்து பரந்து கிடந்த அகப்பொருளிலக் கணங்களைத் தம் காலத்துக்கும் முன்வந்த தமிழ்ச் சான்றோர் இலக்கியங்களுக்கும் இயையுமாறும் முறைப்படத் தொகுத்தும், பொருள் நன்கு விளங்குமாறு சூத்திரம் வகுத்தும், தாமே உரை எழுதியும், நாற்கவிராச நம்பி இந்நூலைச் செய்தார். இதனுடைய சிறப்பும் தெளிவும் பற்றி, பிற்காலத்தில் இலக்கண விளக்கம் செய்த வைத்தியநாத தேசிகர் அகப்பொருளிலக்கணம் கூறு மிடத்தில், பெரும்பாலும் இந்நூற் சூத்திரங்களைக் கொண்டே தம் நூலில் இலக்கணம் விதித்திருப்பது அறியத்தக்கது.

நூலானது அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்ற ஐந்து இயல்களும், முறையே 115, 54, 29, 10, 43 சூத்திரங்களும், பாயிரம் ஒன்றும், ஆக 252 சூத்திரங் களுமுடையது. பின்வரும் இரு பழம் பாடல்களும் சூத்திரத் தொகை கூறுவன:

> ஏற்ற அகத்திணைச் சூத்திரம் நூற்றுப்பத் தேழ்; அதன்பின்
> சாற்றும் களவியல் ஐம்பத்து நாலு; அன்றிச் சார்வரைவு
> போற்றும் இருபதினொன்பான் ; கற்பு ஈரைந்து; பொங்கொழிவு
> கூற்றியல் நாற்பத்து மூன்றாம், அகப்பொருட் கொள்கையதே.

> அகத்திணை நூற்றுப் பதினேழ்; அடங்கா
> மிகுத்த கள வைம்பதுடன் மேல்நான்கு; – இகுத்த
> வரைவுஇருபத் தொன்பது; மன்னும்கற்பு ஈரைந்து
> உரைஒழிபு நாற்பஃதோ டொன்று.

பாடல்களில் கூறியபடியல்லாது அகத்திணையியலுள் 115 சூத் திரங்களே உள்ளன.

இவ்வகப்பொருள் விளக்கத்துக்கு ஆசிரியரே உரை செய்தார் என்பது முன்னமே சொல்லப்பட்டது. இதன் துறைகளுக்கு இலக்கியமாக 13ஆம் நூற்றாண்டில் பொய்யாமொழிப் புலவர் தஞ்சைவாணன் கோவை என்ற நூலைப் பாடினார் என்பது அறிஞர் கருத்து. பழைய ஏட்டுப் பிரதிகளுள் ஒன்று துறைகளுக்கு மேற்கோளாக இக்கோவைப் பாட்டுக்களை மட்டுமே கொண்டிருந்தது. வேறுபல சுவடிகளில் கோவையோடு கூடப் பழந்தமிழ்ச் செய்யுட்கள் பலவும் சேர்க்கப் பெற்றிருந்தன. இங்ஙனம் சேர்க்கப்பெற்ற பாடல்கள், எட்டுத் தொகையுள் புறத்திணைக்குரிய இரண்டும் நீங்க ஏனைய ஆறும், பதினெண் கீழ்க்கணக்கில் குறள், நாலடி, கார் நாற்பது, ஐந்திணை எழுபது திணைமாலை நூற்றைம்பது என்பனவும், காப்பியங்களுள் சிலப்பதிகாரமும் சிந்தாமணியும், இலக்கண நூல்களுள் தொல் காப்பியமும், புறப்பொருள் வெண்பாமாலையும் ஆகும். சிற்றட்டகப் பாடல்கள் பல இதனுள் தரப்பட்டுச் சங்கநூல் என்று பொருள்படச் 'சான்றோர் செய்யுள்' என்றும் சொல்லப் பட்டுள்ளது. உரைசெய்த காலத்து இந்நூல் வழக்கில் இருந்தது போலும்; இக்காலத்துக் கிடைக்கவில்லை. இவ்விதம் வளையா பதிச் செய்யுளொன்றும் காணப்படுகிறது. கண்டனலங்காரம் என்ற ஓர் அகப்பொருள் இலக்கியம் காட்டப்பட்டுள்ளது. இது 12ஆம் நூற்றாண்டுக்குரியது; இக்காலத்து இல்லை. தமிழ்நெறி விளக்கம் பொருளியற் பாடல்கள் சில வந்துள்ளன; இதுவும் இன்று கிடைக்காத நூல்; இதன் காலம் 10ஆம் நூற்றாண்டு. ஆசாரக்கோவையும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

தஞ்சைவாணன் கோவை யொழிந்த ஏனைய நூல்கள் நம்பியாரே தொகுத்தன போலும். பிற்காலத்தில் தஞ்சைவாணன் கோவைப் பாடல்களை மேற்கோள் காட்டிச் சேர்த்தபோது, இதனுள் கிடைக்கப்பெறாத துறைகளுக்குத் திருக்கோவையார், அம்பிகாபதிக் கோவை, குலோத்துங்க சோழன் கோவை என்ற கோவைப் பாடல்கள் காட்டப்பட்டுள்ளன. நம்பியார் காட்டி யவை வெண்பா, நூற்பாக்கள் மட்டுமே. இம்மூன்று கோவை களுள், முதல் இரண்டும் நம்பியின் காலத்துக்கு மிக முற்பட்டவை, அடுத்த ஒன்று குலோத்துங்க சோழன் கோவை மட்டும் உடன் அல்லது சற்றே முற்பட்ட காலம் என்று கருதவேண்டும். (ஒரு பதிப்பில் 16ஆம் நூற்றாண்டுக்குரிய திருவாரூர்க்கோவையும் காண்கிறோம்.)

பண்டைய சான்றோர் நூல்களில் மேற்கோள் கிடைக்காத போது, இவற்றுள் சான்றோர் செய்யுள் இல்லாதவற்றிற்குச் சூத்திரம் தன்னையே இலக்கியமாகக் கொள்க என்று எழுது கின்றார் (144 சூத்திரம்). மேலும், நடுங்க நாட்டத்திற்குச் சான் றோர் செய்யுள் இல்லை ஆதலின் அஃது இலக்கணம் அன்று என்று எழுதுகிறார் (139 சூ.). பிற்காலத்துப் புதுப்பித்தோரும் உரை எழுதினோரும் ஆசிரியர் கருத்துக்கு ஒவ்வாதவற்றையும் சேர்த்து விட்டார்கள் என்று தெரிகிறது.

சிற்றட்டகம் என்ற நூல் பற்றிய விளக்கம் இந்நூல் உரை யால் கிடைக்கிறது. இந்நூலின் இறுதிச் சூத்திரத்தின் முந்திய சூத்திர உரையில் இவர் திணை மயக்கம் கூறுகின்றார். இங்கு இவர் காட்டும் பாடல்கள் திணைமொழி ஐம்பது, ஐங்குறு நூறு, திணைமாலை, கலித்தொகை என்பன; இவற்றோடு சிற்றட்டகத்தையும் குறிப்பிடுகின்றார். இவற்றைக் குறிப்பிடும் போது, இந்நூலில் இன்ன திணைக்குரிய பாட்டு என்று சொல் வது இவருடைய இயல்பு. அப்படியே 'இது சிற்றட்டகத்துக் குறிஞ்சிப் பாட்டினுள் ஊடல் என்னும் உரிப்பொருள் மயங் கியவாறு கண்டுகொள்க'; சிற்றட்டகத்துப் பாலைப் பாட்டு'; 'சிற்றட்டகத்து நெய்தல் பாட்டு' என்று குறிப்பிடுகின்றார். இவர் குறிப்பினால் ஒரு சிறந்த பயன் உண்டு. சிற்றட்டகம் என்பது ஒரு சிறந்த அகப்பொருள் நூல். இது சங்க காலத்துக்குரியது என்று ஓரளவு கருதத்தக்க சிறப்பு வாய்ந்தது: ஆறாம் சூத்திர உரையில் "பத்துப்பாட்டும் கலித்தொகையும் ஐங்குறுநூறும், கீழ்க்கணக்கும், சிற்றட்டகம் முதலான சான்றோர் செய்யுட்கள்" என்று; இவர் எழுதுவதால் இதுவும் ஒரு சங்கநூல் என்று கருதப் பட்டது போலும். நூல் ஆசிரியப்பாவால் இயன்றது. பல உரை களிலிருந்து சில பாடல்கள் கிடைக்கின்றன; எனினும், இந்நூல் முழுமையும் இன்று இறந்ததென்று கருதவேண்டியிருக்கிறது.

இந்நூற்பெயர் பற்றி இங்கு ஒரு குறிப்புக் கூறலாம். இதன் பெயர் சிற்றட்டகம், சிற்றடக்கம் எனப் பலவாறாகக் காணப் படுகிறது. களவியற்காரிகை பதிப்பித்த வையாபுரிப்பிள்ளை அவர்கள் சிற்றெட்டகம் என்றே பெயர் குறிப்பிட்டுள்ளார்கள். அகத்துறை பற்றி எட்டுச் சிறுபாடல்கள் கொண்ட சிறுநூல் என்று இதைக் குறிப்பிடலாம். சிறு + எட்டு + அகம் என்பது அவர்கள் கருத்துப்போலும். இவ்வாறு கூறுவதைவிட, சிறு +

அட்டகம் = சிற்றட்டகம் என்பது பொருத்தமாய் இருக்கிறது; ஐயரவர்களும் இப்படியே குறிப்பிடுகின்றார். அட்டகம் (வடமொழி) என்பது எட்டுப்பாட்டு. இவ்வுரையில் காணும் மேற்கோள் குறிப்பால், இந்நூல் திணைக்கு எட்டுப்பாட்டாக, நாற்பது பாடல் கொண்டதாய் இருக்கும் என்று தெரிகிறது. இவ்வாறு நம்பியின் நூல் இந்நூலுக்குச் சிறந்த விளக்கம் கொடுக்கின்றது.

### காலம்

முதல் சிறப்புப்பாயிர உரையானது, சிறப்புப்பாயிர இலக்கணப்படி பதினொரு உறுப்புக்களையும் கூறத் தொடங்கி, "காலம் - பாண்டியன் குலசேகரன் காலம்" என்று கூறுகிறது. எந்தக் குலசேகரன் என்பதை விளக்கவில்லை. 12ஆம் நூற்றாண்டில் குலசேகரன் என்ற பெயரோடு இருவர் பாண்டியர் அரசு புரிந்தனர். முதல் குலசேகரன், மாறவர்மன் ஸ்ரீ வல்லபனுடைய புதல்வன், ஆட்சிக் காலம் 1162-72. இவன் பாண்டி நாட்டின் தென்பகுதியைத் திருநெல்வேலியிலிருந்து அரசு புரிந்து வந்தான். மதுரையை அப்போது ஆண்டவன் பராக்கிரம பாண்டியன். இவன் அவனைக் கொன்று மதுரையைக் கைப்பற்றி அரசு புரிந்தான். இவன் பகைவனாகிய இலங்காபுரித் தண்ட நாயகன் படை எடுத்து வந்து இவனோடு போர்புரிந்து இவனை வென்று துரத்திவிட்டான். முடிவில் குலசேகரன் 1167இல் சோழ நாட்டில் ஆட்சிபுரிந்த இராசாதிராசனுடைய உதவிபெற்று, இலங்காபுரித் தண்டநாயகனையும் அவனால் மதுரையில் அரசனாக வைக்கப்பெற்றிருந்த வீரபாண்டியனையும் வென்றான். 1175இல் அவ்வீர பாண்டியன் இவனிடமிருந்து ஆட்சியைப் பெற்று 1180 வரை ஆண்டான். அவனுக்குப் பின் ஆண்டவன் விக்கிரம பாண்டியன் 1180 - 1190. இவன் மூன்றாம் குலோத்துங்க சோழனுடைய ஆதரவைப்பெற்று ஆண்டவன். இவனுக்குப் பின் பட்டமேற்றவன் முதல் சடையவர்மன் குலசேகர பாண்டியன் (1190-1218). இவன் ஆட்சியில் பிற்பகுதியில் குலோத்துங்க சோழனுடன் பெரும்பகைமை கொண்டு பலமுறை போரிட்டுத் தோற்று ஓடினான்; சோழன் 1202க்கு முன்னமே மதுரையில் வீராபிடேகம் செய்துகொண்டான்.

இவ்விருவர் வரலாறுகளையும் ஆராயும்போது, முதலாவது சொன்ன சடையவர்மன் குலசேகர பாண்டியன் ஆட்சி முழுமை

யும் போர் நிகழ்ச்சிகளே மலிந்திருக்கின்றன. இரண்டாவது சொன்ன குலசேகர பாண்டியன் ஆட்சியின் பின்பகுதியிலும் போர் மலிந்திருந்தது. இவ்விரு குலசேகர பாண்டியர் காலத்திலும் பாண்டியர் சிறப்பான தனியாட்சி பெறவில்லை. இவர்கள் சோழருடைய உதவிகொண்டோ அல்லது அவர்களுக்கு அடங்கியோ ஆண்டு வந்தார்கள். ஆனால், பின்னர் 13ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த மாறவர்மன் குலசேகர பாண்டியனுடைய ஆட்சி, மிகவும் சிறப்பான ஆட்சி என்று வரலாறு தெரிவிக்கிறது. இக்குலசேகர பாண்டியன் 1268 முதல் 1311 வரையில் அரசாண்டவன். ‘தேர்போலல்குல் திருமகள் புணரவும்’ என்பது இவனுடைய மெய்கீர்த்தியின் தொடக்கம். இவனுடைய ஆட்சி, பிற்காலப் பாண்டியர்களில் மிகவும் சிறப்பான ஆட்சிக் காலமாகும். அயல்நாட்டு யாத்திரிகர் பலர் இவன் ஆட்சியைக் குறிப்பிட்டிருக்கின்றனர். மார்க்கோ போலோ முதலானவர்கள் எடுத்துக்காட்டாகும். இவன் தன் படைத்தலைவனைக் கொண்டு ஈழநாட்டை வென்றது, அங்கிருந்த புத்ததேவரது பல்லைக் கைப்பற்றிக் கொணர்ந்தது, சேரநாட்டின் மீது படையெடுத்துக் கொல்லத்தைக் கைப்பற்றியது முதலியன இவனுடைய ஆட்சியின் சிறப்பு நிகழ்ச்சிகளாகும். இவனுடைய கல்வெட்டுக்கள் பாண்டிநாடு மட்டுமன்றி, சோழநாடு, நடுநாடு, தொண்டை நாடுகளிலெல்லாம் காணப்படுகின்றன. இவை இவனது ஆட்சிச் சிறப்புக்குச் சான்று பகரும். இப்பாண்டியனே 12-13 நூற்றாண்டுகளில் ஆட்சிபுரிந்த பாண்டியர் அனைவருள்ளும் புலவரை வைத்து ஆதரிக்கத் தகுந்த சிறப்புக்கு உரியவன். இவனுடைய மெய்க்கீர்த்தி ‘முத்தமிழும் மனுநூலும் நான்மறை முழுவதும் எத்தவச் சமயமும் இனிதுடன் விளங்கவும்’ என்று கூறுவதும் கருதத்தக்கது. எனவே, குலசேகர பாண்டியன் அவைக்களம் என்று கூறும்போது, சிறப்புமிக்க இக்குலசேகர பாண்டியனையே நாம் கருதுதல் வேண்டும்.

நாற்கவிராச நம்பி சமயத்தால் சமணர். இவருடைய விரிவான சிறப்புடைய புதிய அகப்பொருள் நூலுக்கு இவ்வரசனுடைய ஆதரவு இருந்திருக்கக் கூடும் என்பதை ‘எத்தவச் சமயமும் இனிதுடன் விளங்கவும்’ என்ற தொடர் நன்குணர்த்தும். எனவே, எல்லா வகையாலும் நாம் பார்க்கும்போது, முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியனாகிய இப்பாண்டியன் அவைக்களத்தே நம்பியகப்பொருள் அரங்கேற்றப்பட்டது என்று துணிந்து

கூற முடியும். வேறுவகையால் துணிவதற்கு ஆதரவு இல்லை. இந்நூல் 1300க்குச் சில ஆண்டுகள் முன்னதாகச் செய்யப் பெற்றிருக்கலாம் என்று நாம் கொள்ளவேண்டும்.

(பாண்டியர் வரலாறும் 13ஆம் நூற்றாண்டுப் புலவர் வரலாறும் எழுதிய சதாசிவ பண்டாரத்தார், இந்நூலின் சிறப்புப் பாயிரவுரையில் காலம் பாண்டியன் குலசேகரன் காலம் என்று குறிப்பிட்டிருந்தும்கூட, இதன் பெயரைக் கூடச் சொல்ல வில்லை.)

**பதிப்பு:**

யாழ்ப்பாணம் வல்லை வைத்திலிங்கம் பிள்ளை உரைப் பதிப்பு 1878; யாழ்ப்பாணம் சிவானந்தையர் பதிப்பு 1907; சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரும் திருக்கோணமலை கனக சுந்தரம் பிள்ளையும் எழுதிய புத்துரையுடன் கூடிய பதிப்பு 1912. மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பு, பாண்டித்துரைத் தேவர் பரிசோதித்தது, உரையும் உதாரணச் செய்யுட்களும் கொண்டது 1913, 1926. கழகப் பதிப்பு 1943, 1951. தஞ்சைச் சரசுவதி மகால் பதிப்பு 1962.

ooo

அத்தியாயம் 5

# இலக்கண உரையாசிரியர்

## முன்னுரை

தொல்காப்பியர் ஏறக்குறைய இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னர் தொல்காப்பியம் என்ற நூலை எழுதினார். அவருக்கும் நமக்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ்நாடு எவ்வளவோ மாறுதலையடைந்துள்ளது. மொழி ஒன்றில் மட்டும் நிகழ்ந் துள்ள மாறுதல் இன்னதுதான் என்று வரையறை செய்ய முடியாதபடி அவ்வளவு அதிகமாயுள்ளது. நாட்டில், வாழ்வில், அரசியலில், சமயத்தில் என எல்லாத் துறைகளிலும் எண்ண முடியாத மாறுதல்கள் விளைந்துள்ளன. இவ்வளவுக்கும் இடையில் அன்று எழுந்த நூலை முழுமையும் நாம் உணர்ந்து கொள்வது இயலாததொன்று. வாழ்வு மாறியதோடு, வாழ்வின் நோக்கங்களும் அடிப்படையில் கூட மாறியிருக்கின்றன. இந்த இரண்டாயிரம் ஆண்டுக் காலத்தைக் கடந்து அவர் செய்த நூலை உணர்வதென்பது எவ்வளவோ அருமை. இதில் நமக்கு அனுகூலமான ஒரு நல்ல தன்மை என்னவென்றால், தொல் காப்பியரின் தமிழை நாம் நன்கு புரிந்துகொள்ள முடிகிறது என்பதே. பிறநாடுகள் பலவற்றின் நிலைமை இப்படி இல்லை. உதாரணமாக, ஆங்கில மொழியை எடுத்துக்கொண்டால், 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆங்கிலநாட்டு மொழியை இன்றுள்ள ஆங்கிலேயர் எவருமே புரிந்துகொள்ள முடியாது. நம் தமிழ் மொழியிலோ, முற்கூறியவாறு, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் நாம் இன் றும் நன்கு புரிந்து கொள்ளமுடிகிறது.

மொழியை நாம் புரிந்து கொண்டாலும், மொழியில் அடங்கிய நோக்கங்களையும் தருமங்களையும் உண்மைகளை யும் மரபுகளையும் குறிப்புக்களையும் உணர்ந்து கொள்வது

மிகவும் கடினம். இந்தக் கடினநிலையை மாற்றி, பண்டை நூல்களை எளிதாக நாம் உணர்ந்துகொள்ளச் செய்வதுதான் உரையாசிரியர் செய்யும் உதவி. காலமாகிய பேராற்றைக் கடக்க அவர்கள் ஒரு தோணியாக உதவுகிறார்கள். நமக்கும் பழந்தமிழர் காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் இவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அக்காலத்தில் அரசியலும் சமயத்திலும் மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன என்பது உண்மை; ஆனால் மக்கள் வாழ்க்கை நோக்கங்களிலும் வாழ்வின் தருமங்களிலும் பெரும் மாறுதல்கள் அப்போது ஏற்படவில்லை. ஆதலால் அன்றிருந்த ஆசிரியர்கள் ஓரளவு பண்டைய ஆசிரியர்களை நம்மைவிட நன்றாய்ப் புரிந்துகொண்டு நமக்கு விளக்கம் சொல்லமுடியும். இதுவே அவர்கள் நமக்குச் செய்த உதவி.

இங்கு இலக்கண உரைசெய்த ஆசிரியர்களைத் தனியே பார்க்கும்பொழுது, மிகச்சிறந்த தொல்காப்பிய உரையாசிரியர் இருவரைக் காண்கிறோம். தொல்காப்பிய உரையாசிரியர்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்த பேராசிரியர் இக்காலத்தினர். இவர் உரையில் மிகச்சிறு பகுதிதான் இப்பொழுது கிடைப்பது. வடநூலும் தென்மொழியும் வல்ல பண்டிதராய் இருந்த சேனாவரையர் இக்காலத்தே தொல்காப்பியச் சொல்லதிகாரவுரை செய்தார். இவருடைய பெருமையைச் சிவஞானசுவாமி மிகவும் வியந்து பாராட்டுகிறார்.

நன்னூல் உரைசெய்த மயிலைநாதர் கூற்றால் தொல்காப்பியத்தை ஒப்ப மிகவும் சிறப்புடைய ஓர் இலக்கண நூலாக அவிநயனார் செய்த அவிநயம் விளங்கிற்று என்று அறிகிறோம். இவர் தொல்காப்பியருடைய மாணாக்கர் என்ற வரலாறு உண்டு. அங்ஙனமாயின் இவர்செய்த நூல் மிகவும் பழமை உடையதாக இருந்திருக்கவேண்டும். நன்னூலார் தமக்கு நூலாக இதையும் கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது. சுமார் 13 - 14 நூற்றாண்டுகள் வரையில் இந்தநூல் புலவரிடையே சிறந்த ஆட்சி பெற்றிருந்தது. ஆனால் 14ஆம் நூற்றாண்டில் இந்த நூல் இறந்து போயிற்றுப் போலும்.

இவ்வாறு மிகப் பலவான நூல்கள், இலக்கியங்களும் இலக்கணங்களும் உரையும் 12 - 13 நூற்றாண்டுகள் வரையில் நிலவியிருந்து 14ஆம் நூற்றாண்டில் அடியோடு மறைந்து போய்விட்டன. இதற்குக் காரணம் மிகவும் தெளிவாக விளங்குகிறது. மதுரையில் தமிழ்ச்சங்கம் இருந்தது என்ற தொடர்பினால்,

தமிழ்நூற் பெருக்கத்துக்கும் தமிழ் நூற்கல்விக்கும் மதுரையே நிலைக்களனாக இருந்தது. புலவர்கள் தமிழ்நாடு முழுவதிலும் பரவியிருந்த போதும்கூட, எல்லாப் புலவர்களிடத்தும் எல்லா நூல்களும் இருந்தன என்று சொல்லமுடியாது. ஆனால் எல்லா நூல்களும் மதுரையில் இருந்தன. அந்நகரிலேயே இவை பிரதி செய்யப்பட்டும் உரை செய்யப்பட்டும் விரிவுரை கூறப்பட்டும் வந்திருக்கின்றன. 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டிய அரசுரிமைபற்றி இருபாண்டிய சகோதரர்களிடத்தில் ஏற்பட்ட பூசல்களின் விளைவாக, முகம்மதியர் மதுரையில் புகுந்து எல்லாக் கோயில்களையும் இடித்து விட்டார்கள்; கலைகளையும் கலைப்பொருள்களையும் அழித்தார்கள். புத்தகங்களைக் கொளுத்துதல் வெறிகொண்ட அன்னியர்களுடைய நாசவேலைகளில் ஒன்று.*

இப்படி அழிந்த நூல்களில் ஒன்று அவிநயமும் அதற்கு இராச பவித்திரப் பல்லவதரையர் என்பவர் செய்திருந்த உரையும் என்று எண்ணுகிறோம். மயிலைநாதர் இவ்வுரையாசிரியர் பெயரைக் குறிப்பிடுகிறார். இவர் இளம்பூரணரைப் பின்பற்றி உரைசெய்தார் என்று கருத இடமுண்டு. அவிநயனார் நூலில் பாட்டியற் பகுதி ஒன்று தனியாக இருந்தது போலும். பின்வந்த பாட்டியல் உரைகளால் இதுபற்றிச் சில குறிப்புக்கள் கிடைக்கின்றன.

பாட்டியல் நூல்களுள் இன்று கிடைப்பவற்றுள் பழமையானது பன்னிரு பாட்டியல். இதை அடுத்துத் தோன்றியது பன்னிரண்டாம் நூற்றாண்டில் குணவீர பண்டிதர் செய்த வெண்பாப் பாட்டியல் என்னும் வச்சணந்திமாலை. ஓரளவு ஆட்சியிலுள்ளது, இந்தப் பாட்டியலே ஆகும். இதற்குப் பதின் மூன்றாம் நூற்றாண்டில் ஓர் உரை எழுந்தது. உரை செய்தார் பெயர் தெரியவில்லை.

இங்கு குறித்த உரையாசிரியர்களை இவ்வத்தியாயத்தில் காண்போம்.

---

* சமீப காலத்தில் எம்முடைய உறவினர் ஒருவரிடமிருந்து சில ஏடுகளை யாம் பெற்றுவந்த பொழுது, அவருடைய காரியஸ்தர் சொன்னார் இங்கு வண்டி வண்டியாக ஏடுகள் இருந்தன, வைக்க இடமில்லாமையால் அவற்றை என்ன செய்வது என்று தெரியாமல், உதிரியாயும் சிதிலமாயும் இருந்த பல புத்தக ஏடுகளையும் கணக்கு ஏடுகளையும் கொண்டுவந்து போட்டுக் குவித்துக் கொளுத்திவிட்டோம். சுவாலை ஆகாயம் வரையில் எழும்பிற்று.

## பேராசிரியர்

### பேராசிரியர் பலர்

இப்பெயருடைய தமிழாசிரியர் ஐவர் பெயர்கள் பண்டைத் தமிழ் நூல்களால் தெரியவருகின்றன. அவர்களாவார் பின் வருவோர்:

1. தொல்காப்பியப் பொதுப்பாயிரம் எழுதிய ஆத்திரையன் பேராசிரியன் என்பவர். இவர் 33 வரி கொண்ட தொல் காப்பியப் பொதுப்பாயிரமும் அதன் உரையும் செய்தார் என்று தெரிய வருகிறது. இப்பொதுப்பாயிரம் அச்சாகி யுள்ளது. (சதாசிவ பண்டாரத்தார் பதிப்பு, 1923.)
2. யாப்பருங்கல விருத்தியில் பிறைநெடுமுடிக் கறைமிடற்றர னார் பெயர் மகிழ்ந்த பேராசிரியர், நீர்மலிந்த வார்சடை யோன் பேர் மகிழ்ந்த பேராசிரியர், காமவேளைக் கறுத்த புத்தேள் நாமந்தாங்கிய நல்லாசிரியர், பெண்ணொரு பாகன் பெயர் மகிழ்ந்த பேராசிரியர் என்பன போன்ற பல தொடர்களால் அவ்வுரைகாரர் பலவிடத்தும் கூறுகின்ற பேராசிரியர்.
3. தொல்காப்பிய உரைசெய்த பேராசிரியர், 13ஆம் நூற் றாண்டின் முற்பகுதி.
4. திருக்கோவையாருக்கு உரை எழுதிய பேராசிரியர், 13ஆம் நூற்றாண்டு பிற்பகுதி.
5. தமிழ் நாவலர் சரிதையில் குறிப்பிட்ட பேராசிரியர்: "ஒட்டக் கூத்தர் உலாப் பாடியபோது பேராசிரியர் நேமிநாதர் பட்டோலை பிடிக்கப் பாடியது" என்னும் தலைப்புடன் பின்வரும் பாடல் காணப்படுகிறது:

செங்கால்மட வன்னம்படர் தீயாமென வெருவிச்
　　சிறையிற் பெடை மறையக்கொடு திரியத்திரள் கமுகின்
பைங்காய்மர கதமீது படர்ந்தேறி நறுந்தண்
　　பாளைக்கிடை பவளக்கொடி படர்காவிரி நாடா!
தங்காதலி யருமைந்தரும் உடனாக வணங்கித்
　　தலைகா, எம துடல்கா, எம துயிர்கா, அகளங்கா!
கொங்கா! மனதுங்கா! என மதுரேசர் வணங்கும்
　　கொல்யானை யபங்கா! இவள் குழலோசை பொறாளே.

பேராசிரியர் என்று பெயர் கூறப்பட்டவர் இவ்வாறு ஐவர் தெரியினும், இவர்கள் ஒருவரா, பலரா என்பது தெளிவாக முடிவு செய்யப் பெறவேண்டியதொன்று. இங்கு நாம் கருதுவது தொல்காப்பிய உரைசெய்த பேராசிரியரை. பொதுவாக வழங்கும் கருத்து, இவரே திருக்கோவையார் உரைசெய்தார் என்பதாகும். இக்கருத்தையும் பிறவற்றையும் இப்போது ஆராய்தல் தகும்.

முதலாவதாக, தொல்காப்பியப் பொதுப்பாயிரம் செய்த ஆத்திரையன் பேராசிரியன். ஆத்திரையன் என்ற சொல் ஆதிரையன் என்றும் ஏடுகளில் காணப்படுகிறது. இது கோத்திரப் பெயர் போலும். பொருளதிகாரம் மரபியல் 98ஆம் சூத்திரம் "ஒத்த சூத்திரம் உரைப்பின்" என்பதற்கு உரை எழுதுமிடத்து, "வடவேங்கடம் தென்குமரி என்றும் சிறப்புப்பாயிரம் செய்தார் பனம்பாரனார் எனவும், வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும் என்னும் பொதுப்பாயிரம் செய்தான் ஆத்திரையன் பேராசிரியன் எனவும், பாயிரம் செய்தான் பெயர் கூறியவாறு" என்று பேராசிரியர் எழுதியிருக்கிறார். பாயிரம் தாமே செய்ததாயின், அச்செய்தியை இவர் இவ்வாறு படர்க்கையில் வைத்துக் கூற மாட்டார். மேலும், "யாழோர் கூட்டத் தொன்மையும் தோலும் போலப் பொருள் தொடர்நிலையாக்கி உரைப்பாரும் உளர். அஃது ஆகாமைக்குக் காரணம், களவியலுள் கூறினாம் (266 உரை). அது நிலத்தால் முல்லையாயிற்று என்பது அகத்திணை இயலுள் கூறினாம் (267). அவற்றது வேறுபாடு முன்னர் அகத் திணை இயலுள் கூறிவந்தாம் (313). இவை நாடக வழக்கத்தின் ஆம் என்பது, முன்னர் அகத்திணை இயலுள் கூறினாம் (392)" என்று வேறு பல இடங்களில் இவர் தாம்செய்த உரையைத் தன்மைப் பன்மையில் வைத்துக் கூறுகிறார். ஓரிடத்தில் படர்க்கை ஒருமையிலும் மற்றோரிடத்தில் தன்மைப் பன்மை யிலும் ஒருவரே தம்மைக் குறிப்பிடுவது இயல்பன்று. ஆதலால், 'பொதுப்பாயிரம் செய்தான்' என்று படர்க்கை ஒருமையில் கூறுமிடத்து, அது இவர் எழுதவில்லையென்றும், வேறொருவர் எழுதினார் என்றும் தெளிவாகும். எனவே, ஆத்திரையன் பேராசிரியன் இவரினும் வேறானவர், காலத்தால் முற்பட்டவர் என்றும் முடிவு செய்கிறோம். (11ஆம் நூற்றாண்டாகலாம்.)

இனி இரண்டாவது, யாப்பருங்கலவிருத்தி உரையாசிரியர் குறிப்பிடுகின்ற பேராசிரியர்: இவர் மயேச்சுரர் எனப்படுவார். இவரைச் சிவபெருமான் பெயரைத் தாங்கிய பேராசிரியர் என்று

கூறி, இந்தப் பெயரையே 11 பேதங்கள் ஆக்கி அப்பெயர்கள் அவ்விருத்தியுள் குறிப்பிடப்பட்டுள்ளன. பேராசிரியர் என்ற பெயருக்குப் பதிலாக சில இடங்களில் மயேச்சுரர் என்ற பெயரும் ஏட்டில் காணப்படுகிறது. எனவே, இங்கு குறிப்பிட்டவர் காலத்தால் யாப்பருங்கல விருத்திக்கு (11 நூ.) முற்பட்டவரான மயேச்சுரரேயாவார். இவர் யாப்பிலக்கணம் ஒன்று செய்திருக்கிறார் என்றும் அறிகிறோம். இவர் மற்றுமொருவர் (10ஆம் நூற்றாண்டாகலாம்).

அடுத்து, தொல்காப்பிய உரைசெய்த பேராசிரியர். இவர் ஒட்டக்கூத்தர் காலத்தில் சோழனைப் பாடிய பாட்டு என்று தமிழ்நாவலர் சரிதை கூறிய பாடல் மேலே காட்டினோம். ஒட்டக்கூத்தர், விக்கிரமசோழன் (1118-35) இரண்டாம் குலோத்துங்கன் (1135 - 50) இராசராச சோழன் (1146 - 63) ஆகிய மூன்று சோழ அரசர் அவைக்களத்தில் புகழோடு விளங்கியவர். பின்னால் பேராசிரியர் காலம் 13ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என்று முடிவு செய்யநேரும். இவர், 12ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் ஒட்டக்கூத்தரைப் புகழ்ந்து பாடி உடன் இருந்திருக்க முடியாது. எனவே இப்பேராசிரியர் வேறானவர்*. (12 நூ.)

தொல்காப்பிய உரைசெய்த பேராசிரியரே திருக்கோவை யாருக்கு உரை எழுதிய பேராசிரியர் என்று தமிழ் உலகம் இது காறும் நம்பி வந்திருக்கிறது. எனினும் இரண்டு நூல்களையும் நன்கு ஆராய்ந்த அறிஞர், இவ்விருவரும் வெவ்வேறானவர் என்று முடிவு செய்திருக்கிறார்கள். இருவரும் சிறப்பாக உரை எழுதும் ஆற்றல் வாய்ந்தவர்கள். திருக்கோவையில் பேராசிரியர் ஒவ்வொரு பாடலுக்கும் அவதாரிகை, சொற்பொருள் விளக்கம், இலக்கணக் குறிப்பு, பாடபேதம், துறைதோறும் மெய்ப்பாடு, பயன் ஆகிய பல பகுதிகளை விளக்கி எழுதுகிறார். இவ்வாறு இவர் தெளிவு செய்திருக்க, தொல்காப்பியச் செய்யுளியல் உரையில், கோவையைக் குறிப்பிட வந்த இடத்து, "இனிக் கோவையாக்கி, எழுத்தெண்ணி, அளவியற்படுத்துச் செப்பினும்

* தமிழ் நாவலர் சரிதை தொடரானது, குழப்பத்துக்கு இடங்கொடுக்கிறது பேராசிரியர் வேறு, நேமிநாதர் வேறா, இருவரும் ஒருவரேயா என்றெல்லாம் திட்டமாகச் சொல்லமுடியாது. முன்காட்டிய தொடரை, பேராசிரியராகிய நேமிநாதர் பட்டோலை பிடிக்க ஒட்டக்கூத்தர் பாடியது என்று கொள்ளவும் இடமிருக்கிறது.

அவையேயாம் (தரவு கொச்சகமேயாம்)" என்று உரைகாரர் இங்கு கூறுகின்றாரேயன்றி, ஒரு திருச்சிற்றம்பலக் கோவைப் பாடல்கூட எடுத்துக்காட்டவில்லை; பிற இடங்களிலும் இவ்விதமே வேறு பாடல்கள் காட்டுகின்றாரேயன்றித் திருக் கோவையைக் காட்டவில்லை. இதனாலேயே தொல்காப்பிய உரைசெய்த பேராசிரியர், கோவை உரை செய்தவரல்லர், இவ்விரு உரைகாரரும் வெவ்வேறானவர் என்று திட்டமாய்க் கூறலாம்.

மற்றொரு கருத்தும் இங்கு குறிப்பிடுதல் ஆகும். தொல் காப்பிய உரைகாரர், நூலாசிரியரை எப்போதும் படர்க்கை ஒருமையிலேயே குறிப்பிடுகின்றார். உவமை எட்டெனப்படு மென்று அறிந்து கூறினான்; உள்ள நிகழ்ச்சியை இரண்டாவ தென்றான்; முதல் வினையாற் கூறினான்; உவமத்திலும் உயர்ந்த வாகச் சிறப்பித்து உரைத்தான்; உவமையென்றான்; இக்கருத்தி னாலே இதனை ஈண்டு வைப்பான்; எதிர் மறுத்துக் கொள்ள வைத்தான் - என்பனபோல எல்லா இடங்களிலும் உள. ஆனால் திருக்கோவை உரைகாரர், எப்போதும் நூலாசிரியரைப் பன்மை யிலேயே குறிப்பிடுவார். பன்மைபற்றிக் கடம் என்றார்; அவ்வாறு கூறினார்; பொய்வானவரென்றார்; துணிந்துண வாக்கினார் - எல்லாவிடங்களிலும் இவ்வாறு கூறுவதோடு, பிற ஆசிரியரை யும் பன்மையிலேயே இவர் குறிப்பிடுகின்றார்:

> **புனவர் தட்டை புடைப்பின் அயல**
> **திறங்கு கதிர் அலமரும் கழனியும்**
> **பிறங்கு நீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங்கு எழுமே. (புறம் 49)**

என்று சொன்னார் ஆதலின் என்பது காண்க.

இவற்றால், தொல்காப்பிய உரைசெய்த பேராசிரியர் திருக்கோவையாருக்கு உரை செய்யவில்லை என்றும், அவ்வுரை செய்த பேராசிரியர் பிறிதொருவர் என்றும் நாம் முடிவு செய்ய வேண்டும்.

குறுந்தொகைப் பாடலில் 380க்கு உரைசெய்தார் ஒரு பேராசிரியர் என்பது வரலாறு. இது நச்சினார்க்கினியர் செய்த சீவக சிந்தாமணியுரையின் சிறப்புப்பாயிரத்தில் சொல்லப் படுவது:

> **நல்லறி வுடைய தொல்பே ராசான்,**
> **கல்வியுங் காட்சியும் காசினி யறியப்,**

பொருள் தெரி குறுந்தொகை இருபது பாட்டிற்கு
இது பொருள் என்றவன் எழுதா தொழிய,
இது பொருள் என்றதற்கு ஏற்ப உரைத்தும்.

பேராசான் பேராசிரியர்; தொல்பேராசான் என்றமையால், இவர் நச்சினார்க்கினியருக்குக் காலத்தால் முற்பட்டவர் என்பதும் பெறப்படும்; இவர் குறுந்தொகையுள் உரை எழுதாது ஒழிந்த இருபது பாட்டுக்கும் நச்சினார்க்கினியர் எழுதினார் என்று இப்பாடல் சொல்லுகிறது; ஆகவே பேராசிரியர் உரை செய்தது 380 பாடல் என்பது பெறப்படும். இவ்விருவரும் செய்து முற்றுவித்த குறுந்தொகை உரை இன்று கிடைக்கவில்லை. இங்கு, குறுந்தொகை உரை செய்தவர் ஒரு பேராசிரியர் என்று தனியே மற்றொரு பெயரைக் கணக்கிட்டோரும் உளர். யாம் அவ்வாறு கணக்கிடவில்லை. உரையாசிரியர்களில் சிலர் இலக்கணம் இலக்கியம் இரண்டு துறையிலும் சிறப்பான உரை செய்திருக்கிறார்கள். அவ்வாறு செய்தோருள் தலையாயவர் நச்சினார்க்கினியர். பிற்காலத்தில் இவ்வாறு உரைசெய்தவர் சிவஞான சுவாமிகள். பேராசிரியரும் இந்த மரபில் நச்சினார்க்கினியருக்கு முன் வாழ்ந்து, குறுந்தொகை - தொல்காப்பியம் ஆகிய இலக்கிய இலக்கணங்களுக்கு உரை செய்திருத்தல் கூடியதே. ஆகவே, இங்கு ஒரே பேராசிரியரை யாம் கருதுவோம்.

## தொல்காப்பிய உரைசெய்த பேராசிரியர்

இப்பேராசிரியர் வரலாற்றை இவர்செய்த தொல்காப்பிய உரை ஒன்று கொண்டே அறிய முற்படுகிறோம்; இவர் செய்த குறுந்தொகையுரை இல்லை என்பதை முன்னே குறிப்பிட்டோம். பேராசிரியர் என்ற பெயர் இவருக்குப் புலமைச் சிறப்பால் அமைந்தது. நச்சினார்க்கினியர் போன்றார் இவரைப் பேராசிரியர் என்றே குறிப்பிடுகிறார்கள். 'புகுமுகம் புரிதல் என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திரத்தான் உணர்க; 'அதற்குப் பேராசிரியர் கூறிய உரையானும் உணர்க' (96), 'பேராசிரியர் தாமே மறுத்த வாறு காண்க' (238), 'இது வெள்ளடி முழுவதும் வந்ததென்று பேராசிரியர் காட்டினார்' (324) என்று அவர் கூறியிருப்பன காண்க.

தொல்காப்பியம் பொருளதிகாரம் ஒன்பது இயல்களுள், முதல் ஐந்து இயல்கள் நச்சினார்க்கினியர் உரையுடனும், பின்

நான்கு இயல்கள் பேராசிரியர் உரையுடனும் தாமோதரம் பிள்ளையும் பவானந்தம் பிள்ளையும் பதிப்பித்தார்கள். பின்னர் 1917இல் எட்டாவது இயலாகிய செய்யுளியலை மட்டும் ரா. ராகவையங்கார் நச்சினார்க்கினியர் உரையோடு பதிப்பித்தார். அவர் ஆறு, ஏழு இயல்களுக்கு உரையெழுதாமல் எட்டாவது இயல் உரை எழுதியிருக்கமாட்டார். ஆறு, ஏழு ஒன்பது இயல்களுக்கு உரை கிடைக்கவில்லை. அப்படியே முதல் ஐந்து இயல்களுக்குப் பேராசிரியர் எழுதிய உரை கிடைக்கவில்லை. செய்யுளியல் ஒன்றிற்கே இருவர் உரையும் கிடைத்துள்ளது. இவற்றை ஒப்புநோக்கி இருவர் உரைகளையும் ஆராயமுடிகிறது.

அகத்திணை இயல் 46ஆம் சூத்திர உரையில், "யானே யீண்டையேனே" என்ற குறுந்தொகை 54ஆம் பாடலை நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டும்போது, "பேராசிரியரும் இப்பாட்டில் 'மீனெறி தூண்டில்' என்பதனை ஏனை உவமம் என்றார்" என்று எழுதுகிறார். இது பேராசிரியர் எழுதிய குறுந்தொகை உரை உண்டு என்பதை உணர்த்துகின்றது. அன்றியும், பேராசிரியர் தமது தொல்காப்பிய உரையுள் ஏனைய பாடல்களைக் காட்டிலும் குறுந்தொகைப் பாடல்களையே அதிகமாக மேற்கோள் காட்டியிருப்பதால் அக்கூற்று வலியுறுகின்றது.

**சமயம்**

இந்நூலிலுள்ள பல குறிப்புக்களால் இவர் சைவர் என்பதை உணரலாம். இறையனார் களவியல் உரையை இவர் குறிப்பிடும் போது பெருமானடிகள் களவியல் செய்தாங்கு என்று கூறுவது காண்க (649). இவர் உரையில் சூரியன், சந்திரன், சங்கர நாராயணமூர்த்தி, திருமால், பிரமன், கொற்றவை, முருகன், விநாயகன் முதலான தெய்வத் துதிப்பாடல்கள் மேற்கோளாகப் பயில்கின்றன. பெரும்பான்மையான பாடல்கள் கொச்சக உறுப்பு என்பதை விளக்குவதாக வருகின்றன. இப்பாடல்களால் இவர் வைதிக சமயத்தார் என்பது விளங்கும். ஆனால் மிகப் பலவான பாடல்கள் சிவபிரான் தோத்திரமாக உள்ளன; இதுவே இவர் சைவர் என்பதை உறுதிப்படுத்துகிறது. நான்கு வருணத்தாரையும் கூறுகின்றார். அன்றியும், ஆங்காங்கு உள்ள குறிப்புக்களால் இவர் வேளாளர் மரபு என்பதையும் அறியமுடிகிறது. இவர் காட்டும் துதிப் பாடல்களுக்குப் பின்வரும் பாடல் ஓர் எடுத்துக் காட்டாகும்:

பூணாக என்பணிந்தான் பூதத்தான் வேதத்தான்
கோணாகக் கச்சையான் கோடேந்து கொல்லேற்றான்
மாணாக வெண்ணூலான் வாணுதலாள் பாகங்கொண்டு
ஊணாரும் பிச்சையான் உண்ணாத நஞ்சுண்டான்
வானாறு தோய்ந்த சடையான் மழுவலத்தான்
யானார்வஞ் செய்யும் இறை:
எனவாங்குப் பாடி இறைஞ்சுவோர்க்கு எல்லாம்
வினைமாசு தீரும் விளக்காகுந் தோற்றத்து
அனையோய், மறலிக்கும் அச்சம் பயந்த
புனைபூங் கழற்கால்மேற் பூவொடு நீர்தூஉய்
மனைமாண்ட பாகம் உளப்பட வாழ்த்தி
எனைநாளும் ஏத்துதும், எந்தையே, நின்னை
நினையாது ஒழியற்க நெஞ்சு.

603ஆம் சூத்திர உரையில், 'ஆண்பாற் பறவைக்குச் சேவல் என்ற பெயர் உரியது; அவற்றுள் மயிற்காயின் ஆகாது; அவை தோகையுடையவாகிப் பெண்போலும் சாயலவாகலான் ஆண் பாற்றன்மை இலவெனக் கொள்க; எனவே, செவ்வேள் ஊர்ந்த மயிற்காயின் அதுவும் நேரவும் படும்' என்று இவர் எழுதுவது இவருடைய முருக பக்தியைப் புலப்படுத்துகிறது.

பேராசிரியர் 'பொன்மேனி' என்ற தொடரை உதாரண மாக எடுத்துக்காட்டுகிறார். 'புண் சுமந்த பொன் மேனி பாடு துங்காண் அம்மானாய்' என்பது திருவாசகத்தில் திருஅம்மானை எட்டாம் பாடல். பேராசிரியர் சைவர் என்ற கருத்துக்கு இந்த மேற்கோள் ஆதரவு தருகிறது. பொதுவாக, தேவார திருவாசகங் களையோ, ஆழ்வார் பிரபந்தங்களையோ, உரையாசிரியர்கள் மிகவும் பிற்பட்டு வந்திருந்த போதிலும்கூட, மேற்கோளாக எடுத்துக்காட்டுவதில்லை. அருட்பாசுரங்களைக் காட்ட வேண் டாம் என்ற எண்ணம்போலும். இருப்பினும், பரிமேலழகர் திருவாய்மொழியையும், பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் திருவாசகத்தையும் காட்டுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கோள் நூல்களில் சிந்தாமணி மணிமேகலையை இவர் காட்டவில்லை: சிலப்பதிகாரத்தை முத்தமிழ் நூல் என்று ஏற்றுக் கொண்டு, மற்றவை பிறசமயநூல் என்று ஒதுக்கி விட்டார் போலும். ஆதிரையானைப் புகழ்கின்ற முத்தொள்ளாயிரத்தை அதிகம் எடுத்தாள்கிறார்.

### நாடு

பேராசிரியர் சோழ நாட்டினர் என்றும், அந்நாட்டினிடத்து மிக்க பற்று உடையவர் என்றும், சோழனைப் புகழ்ந்த பாடல்களை இவர் மிகுதியாகக் காட்டுவதால் அறிகிறோம். பொன்னி நன்னாட்டுப் பொருநன், வென்வேற்சென்னி, காவிரி பரக்கும் தண்டலை - மூதூரோனே பேரிசை வளவன், நீ பல வாழிய வாய்வாட்சென்னி என்ற தொடர்கள் கொண்ட பாடல்களை இவர் காட்டுகிறார். அழகிய கருத்தமைந்த ஒரு பாடலை முழுமையும் இங்கே காட்டுவோம்.

வான் பொய்யாது தீம்பெயல் பெய்து
மால்யாறு போந்து கால்சுரந்து பாய்ந்து
சுரைபொய்யாது தந்து நிரைவளஞ் சான்று
வரையாது தந்து பலாப்பழுத்து வீழ்ந்து
பாம்பு கொள்ளாது வீங்குசுடர் நீண்டு
வித்துநாறு வாய்த்து முத்துக்கரும்பு பூத்து
வரம்பு கொள்ளாது நிரம்பு பெருங்கூட்டு
வாழை ஓங்கிய கோழிலைப் பரக்குந்
தண்டா யாணர்த்து என்ப; என்றும்
படுவது கூட்டுண்டு கடவது நோக்கிக்
குடிபுறந் தரூஉம் வேந்தன்
நெடுநிலைத் தண்குடை நிழற்று நாடே.

இப்பாடல்கள் இவ்வுரையாசிரியர் தாமே செய்தார் என்ற கருத்தும் உண்டு. பின்வந்த நச்சினார்க்கினியர் இவ்வுரையிலிருந்து இவற்றை அப்படியே எடுத்துத் தருகிறார்.

### காலம்

நச்சினார்க்கினியர் காலம் 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.* அவர் பேராசிரியர் பெயரைச் சுட்டி எழுதுவதை முன்னமே காட்டினோம். ஆதலால், இவர் அவருக்குக் காலத்தால் முந்தியவர் என்பது தெளிவு. பின்னும், இவர் உரையில் வல்லமன் என்ற ஒரு படைத்தலைவனைப் புகழ்கின்ற பாடற்பகுதி வருகின்றது:

---

* எமது தமிழிலக்கிய வரலாறு 14ஆம் நூற்றாண்டு.

நன்னர் நன்னா டென்னா குவகொல்
பொன்னிநன் னாட்டுப் பொருநன் எங்கோன்
தாள்தோய் தடக்கை வல்லமன்
நாடுகெழு திருவிற் பீடுகெழு வேந்தே.

இவ்வல்லமன் நுளம்பர் தலைவன் என்பதும், இவன் விக்கிரம சோழனுடைய படைத்தலைவருள் ஒருவன் என்பதும், 'மீனவர் தம் - கோட்டாறும் கொல்லமும் கொண்ட கொடை நுளம்பன் - வாட்டார் மதயானை வல்லமனும்' என்ற விக்கிரம சோழன் உலாக் கண்ணிகளால் விளங்கும். இந்நுளம்பன் சோழனோடு போர்புரிந்து தோற்ற நுளம்பப்பாடிப் பாண்டியருள் ஒருவனாயிருந்து பின்னால் விக்கிரம சோழனிடம் சிறப்புப் பெற்றிருக்கலாம். இவன் காலத்தில் (1128) விக்கிரமசோழ வீர நுளம்பன் செய்த திருப்பணியை ஒரு சாசனம் கூறுகிறது. சோழன் காலம் (1118-1132). இதனால் பேராசிரியர் காலம் இதற்குப் பிற்பட்டது என்பது தெளிவு. மேலும், இப்பேராசிரியர் 13ஆம் நூற்றாண்டினரான பரிமேலழகருக்கும் முந்தியவர் என்று கொள்வதற்கான சில குறிப்புக்கள் கிடைக்கின்றன.

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு.

என்ற 632ஆம் குறளை மெய்ப்பாட்டியல் (273) உரையில் எடுத்துக்காட்டி, 'என்புழி, கற்றறிதல் என்பதனை இரண்டாக்கி ஐந்தென்பவாகலின்' என்று பேராசிரியர் எழுதுகிறார். பரிமேலழகர் இதை மறுத்து, முன் குறளாகிய 631ஆம் குறளில் கூறிய கருவி - தானையும் பொருளும் காலம் செய்கை அரு வினை ஆகிய ஐந்து அங்கங்களோடு, 632ஆம் குறளில் கூறிய நான்கையும் கூட்டி அமைச்சு மாட்சிமைப்பட வேண்டும் என்று எழுதுகிறார். "கற்றறித லென்பதனைக் கற்றலும் அறிதலுமெனப் பகுப்பாரும் உளர். அவர் உடன் என்பதனை முற்றும்மைப் பொருட்டாக்கியும் 'குடி' யென்பதனை ஆகுபெயராக்கியும் இடர்ப்படுப" என்பது அவர் உரை, மேலும், "வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின், துறவற மாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது இலக்கண வகை யாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனைய மூன்றுமேயாம்" என்ற பரிமேலழகர் உரைப்பாயிரம், 418ஆம் சூத்திர உரையில் "வீடென்னும் பொருண்மை செய்யுட்கண்

வாராமை" என்னும் பேராசிரியர் கருத்தை மறுத்துரைத்தது போலத் தோன்றுகிறது. 440ஆம் சூத்திரவுரையில் "துகளாவது, படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் என்னும் இவற்றைப் பாதுகாவா திருத்தல்" என்ற பேராசிரியர் கருத்தை 381ஆம் குறள் உரையில், "அமைச்சு நாடு அரண் பொருள் படை நட்பு என்பதே முறையாயினும், ஈண்டுச் செய்யுள் நோக்கிப் பிறழ வைத்தார்" என்ற சொற்களால் மறுத்தெழுதினார் போலத் தோன்றுகிறது. பரிமேலழகர் காலம் 1276ஐ ஒட்டியிருக்கலாம் என்று இரண்டாம் அத்தியாயத்தில் முடிவு செய்திருக்கிறோம். ஆதலால், பேராசிரியர் இதற்கு முற்பட்டவராகிறார் என்பது உறுதி.

இனி, பேராசிரியர் இறையனார் களவியலுரைகாரருக்கும் (10 நூ.) இளம்பூரணருக்கும் (11நூ.) யாப்பருங்கல விருத்தி செய்த உரையாசிரியருக்கும் (11 நூ.) தண்டியலங்காரவுரைக்கும் (12 நூ.) காலத்தால் பிற்பட்டவரென்று, இவர் உரையகத்துக் காணும் குறிப்புக்களால் அறிகிறோம்.

சில இடங்களில் பேராசிரியர் நன்னூற் பொதுப்பாயிரத்துட் கூறிய கருத்துக்கள் சிலவற்றைக் குறிப்பிட்டும் சிலவற்றை மறுத்தும் எழுதிச் செல்கிறார். சூ. 600 - நன்னூல் பாயிரம் 7; 663 பதமுடிப் பென்பதோர் இலக்கணம் படைத்துக் கோடல், 665 - நால்வகைச் சூத்திர நிலை, ந. பாயிரம் 19; 665 - சிறப்புப் பாயிரத் திலக்கணம் ந. பாயிரம் 47 என்ற பகுதியில் காண்க. இவை நேரே நன்னூற் பாயிரத்தைக் குறிப்பிடுவனவாயினும், நன்னூற் பாயிரம் பவணந்தி முனிவர் செய்யவில்லை, பண்டைய சூத்திரங்களை எடுத்து அவர் பாயிரமாக அமைத்துக் கொண்டார் என்பது அறிஞர் கருத்து; ஆதலால், பேராசிரியர் இங்குப் பவணந்தி முனிவரையே குறிப்பிடுகிறார் என்றும் அவருக்குப்பின் வாழ்ந் தார் என்றும் இது கொண்டு நிச்சயமாகக் கூற முடியாது.

கலிவெண்பாவைக் குறித்து இவர் கூறும் கருத்துக்கள் ஒட்டக்கூத்தரைக் குறிப்பிடும் என்று எழுதினோரும் உளர்: "இக்காலத்தார், 'ஏறிய மடற்றிறம்' (51) என்னும் பெருந்திணைப் பொருள் மேலும் 'காமஞ்சாலா இளமையோளை' (50) ஒழிந்த மகளிரொடுங் கூட்டியுரைக்கும் கைக்கிளைப் பொருள் மேலும் கலிவெண்பாட்டெனப் பெயர்கொடுத்துச் செய்யுள் செய்பவால். அவை அவ்வாறு செய்தற்கும், அவை முப்பதிற்றடி

யின் இகந்து எத்துணையடியினும் ஏற்குமென்றற்கும் என்னை யோத்தெனின், அவ்வாறு வருமென்பது இந்நூலுட் பெற்றில மாயினும், இருபதின்சீர்க் கழிநெடிலடி யானும் இதுபொழுது செய்யுள் செய்யுமாறுபோலக் காட்டலான் அமையும்" என்பது ஒட்டக்கூத்தரைச் சுட்டுமென்று ஊகித்தல்." (நாகமணி முதலியார், பொருளதிகார அகராதி.) இங்கு கருதப்பெறுவது ஒட்டக்கூத்தர் பாடிய உலா. ஆனால் இவருக்கு முன்பும் கலி வெண்பாவில் முப்பதடியினிகந்து பாடல் பாடினோர் பலர் உளர்; சேரமான் பெருமாள், திருமங்கையாழ்வார், நக்கீரதேவ நாயனார், நம்பியாண்டார் நம்பி முதலியோர். ஆதலால், பேரா சிரியர் ஒட்டக்கூத்தரையே குறிப்பிடுகிறார் என்று கொள்ள முடியாது.

எனினும், முன்னமே குறிப்பிட்ட காரணங்களால் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தண்டியாசிரியர் முதலியோருக்கு இவர் பிற்பட்டவரென்று இவரைக் கொள்ளுதலில் பிழையில்லை; 13ஆம் நூற்றாண்டின் தொடக்கமென்று கருதலாம். பவணந்தி யின் காலம் கி.பி. 1212 என அறிகிறோம். இதற்குச் சில ஆண்டுகள் பிற்பட்டுப் பேராசிரியர் வாழ்ந்தார் என்று கருதுவது எல்லா வகையாலும் பொருந்தும்; சுமார் கி.பி. 1220 - 25.

### தொல்காப்பிய உரை

பேராசிரியர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரைசெய் தாரா என்பது தெரியவில்லை. ஆனால், அவர் பொருளதிகாரம் முழுமைக்கும் உரை செய்தார் என்பது, கிடைக்கிற நான்கு இயல்களிலும் உள்ள குறிப்புக்களால் தெரிகிறது; 'களவியலுள் கூறினாம்' (266), அகத்திணை இயலுள் கூறினாம் (267, 313, 392), அவை வெட்சியுள்ளும் ஒழிந்த திணையுள்ளும் காட்டப்பட்டன (500) என்பன காண்க. நச்சினார்க்கினியர் குறிப்பும் (மீனெறி தூண்டில்) முன்னமே காட்டப்பட்டது. பேராசிரியரைப் பின் பற்றியே நச்சினார்க்கினியர் உரை எழுதுகிறார்.

பொருள் 114ஆம் சூத்திர உரையில் எழுதும்போது அவர் (வரி ஒன்பது), 'அவள் அறிவுறுத்து' என்பதை 'அவன் அறிவுறுத்து என்று பாடம் ஓதுவாரும் உளர்' என்று எழுதுகிறார்; இளம் பூரணர் அவள் அறிவுறுத்து என்றே பாடம் கொண்டார்; ஆதலால் மற்றோர் உரையாசிரியர் இருந்து இப்பாடம் கொண் டிருக்கிறார்; அவர் பேராசிரியரே ஆகலாம்.

எழுத்தோத்து, சொல்லோத்து என்றும் இவர் வழங்குவார்; இயலையும் ஓத்து என்றே வழங்குகிறார். அதிகாரங்கள் படலம் எனப்படும் என்றும் இவர் குறிப்பிடுகிறார். பாட பேதங்களைப் பல இடங்களில் சொல்லுகிறார் (சூ. 255: புதுமை - முதுமை. 304, 368, 413, 440); பழம் பாடம், பாடம் திரிப்பார் என்பர்.

செய்யுளியலுள் பல இடங்களில் தாம் கூறும் செய்யு ளுறுப்புப் பற்றிய கருத்துக்களை எளிதில் நினைவில் வைத் திருக்கும் பொருட்டு இவரே பல சூத்திரங்களைச் செய்து காட்டு கிறார் என்று அறிஞர் கருதுவர். (சூ. 369, 404, 406, 409, 411-3 என்பவற்றின் உரையிற் காண்க.) இவ்வாறு இவர் செய்து அமைக்கும் சூத்திரங்களைத் தாமே உரைச்சூத்திரம் என்று கூறுகிறார் (411 முதலாயின). 312ஆம் சூத்திரவுரையில் இவர் காட்டும் 'அகனமர் கேள்வன்' என்ற நூற்பாவையும் காண்க. இவ்வாறு இவர் செய்துள்ள சூத்திரங்கள் யாவும் வெண்பா அல்லது குறட்பா. வஞ்சியுரிச்சீர் 224 என்று எழுதுமிடத்து, இவரும் நச்சினார்க்கினியரும் வெவ்வேறு வெண்பாக்களைச் சொல்லுகிறார்கள். இதனால் அவரவர் தாமே ஒரு வெண்பாப் படைத்து மொழிந்தார் எனக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இவரும் வடநூற் பயிற்சி மிக்கவர்; இது காலத்தின் இயல்பு. பத்தாம் நூற்றாண்டின்பின் உரைசெய்த சிறந்த ஆசிரியர் அனைவரும் வடமொழி பயின்றவராகவே இருந்திருக்கிறார்கள். முத்தமிழிலும் இவர் வல்லவர் என்பதையும் உரைக்கண் வரும் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. இயல் இசை நாடகம் என்ற வைப்புமுறையை நன்கு விளக்குகிறார் (சூ. 665); 'வழக்கியலும் வழக்கியலாற் செய்யப்பட்ட பொருளியலும் பற்றி எழுந்த இலக்கணம் இயற்றமிழ் எனப்படும்; அச்செய்யுளின்றியமை யாத இசையிலக்கணம் இசைத்தமிழ் எனப்பெயரெய்தி அவ் வியற்றமிழ்ப் பின்னர் வைக்கப்பட்ட தெனப்படும். இவ்விரண் டன் வழி நிகழ்த்துங் கூத்தின திலக்கணம் கூறிய நாடகத்தமிழ் அவற்றுப் பின்னர்த்தாம் என முறைமை கூறுதலும்'. அகத்தியர் யாழ்நூல் செய்தார் என்பது இவர் கருத்து. இசைநூல், கூத்த நூல், கந்திருவநூல் என்பன குறிப்பிடுகிறார்.

பண்டைய ஆசிரியர் கருத்தைத் தக்க நியாயத்துடன் மறுத்தும் போற்றியும் எழுதிச்செல்வது இவர் இயல்பு; ஆனால் பெயர் சொல்வதில்லை. இவ்வாறு இவரால் சுட்டப்பட்ட

ஆசிரியர் அமிதசாகரர், இளம்பூரணர், தண்டியாசிரியர் என்போர். இன்று வழங்காத நூலாசிரியர் பலரைப் பெயர்சுட்டிக் குறிப்பிடுகிறார். கடியநன்னியார், காக்கை பாடினியார், சிறு காக்கைபாடினியார், சங்கயாப்புடையார், செய்யுளியலுடையார், நத்தத்தனார், பல்காப்பியனார், பல்காயனார் முதலியோர். இளையரான காக்கைபாடினியார் எனச் சிறுகாக்கை பாடினி யாரைக் குறிப்பிடுகிறார். தாம் இலக்கியம் காணாதவிடத்து, 'இவற்றுக்கு உதாரணம் காணாமையின் காட்டாமாயினாம்; இலக்கணம் உண்மையின் அமையும்'; இலக்கியம் பெற்றவழிக் கண்டுகொள்க; இக்காலத்து வீழ்ந்தது போலும் - என்பன இவருடைய குறிப்புக்கள்.

இவர் உரையால் பெறப்படும் இலக்கிய வரலாற்றுச் செய்திகள் பின்வருவன: தொல்காப்பியம் இடைச்சங்கம் முதலாக இன்றுகாறும் உளதாயிற்று. அகத்தியன் செய்தது முதனூல்; அது மூவகைத் தமிழும் அடக்கி நிற்பது. தொல்காப்பியம் அதன் வழிநூல். அகத்தியர் வழித்தோன்றிய எல்லா ஆசிரியருள்ளும் தொல்காப்பியரே தலைவர். பன்னிருபடலம் முதல் நூலாக வழி நூல் செய்த ஐயன் ஆரிதனாரும் இது கூறினார். பல்காயனார் முதலியோர் எழுத்தும் சொல்லும் பொருளும் செய்திலர்; செய்யுளிலக்கணம் அகத்தியத்துட் பரந்து கிடந்ததனைத் தொல்காப்பியர் சுருங்கச் செய்தலின், அருமை நோக்கிப் பல் காயனார் பகுத்துக்கூறினார். தொல்காப்பிய வழிநூல் செய்த ஆசிரியர் நத்தத்தனார். மிறைக்கவி செய்தல் மரபன்று; இவை சக்கரம் சுழிகுளம் கோமூத்திரிகை ஏகபாதம் எழுகூற்றிருக்கை மாலைமாற்று என்றாற்போல்வன. இவை மந்திர வகையான் அன்றி, வாளாது மக்களைச் செய்யுள் செய்வார்க்குரிய அகனைந்திணைக்கு மரபன்று. உவமவியல் பொருளைப் புலப் படுத்துவதற்கு எழுந்ததேயன்றி, அணியை உணர்த்துவதற்கு எழுந்ததன்று. உவம இயல் கூறுகின்ற உவமங்களுள் சிலவற்றையும் சொல்லதிகாரத்தினுள்ளும் செய்யுளியலுள்ளும் சொல்லு கின்ற சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு மற்று அவை செய்யுட்கணியோ அணியாம் என இக்காலத்து ஆசிரியர் நூல் செய்தாரும் உளர் (இது தண்டியலங்காரத்தை மறுத்தவாறு). புறநானூற்றரையைத் தழுவி உரை சொல்கிறார்; புறம் 5 உரை. இவர் அளியவாது அன்பு காரணத்தால் தோன்றும் அருள். அன்பாவது மனைவியர் கண்ணும் தாய் தந்தை புதல்வர் முதலிய

சுற்றத்தின் கண்ணும் மனை மகிழ்ச்சி நிகழ்த்திப் பிணைப்பித்து நிற்கும் நேயம் என்று உரை எழுதுகிறார். ஆகவே புறநானூற்று உரைகாரர் இவருக்கு முன் என்பது தெளிவு.

இவர் குறிப்பிடும் இலக்கியச் செய்திகள் பல. ஏழிற் கோவை அவ்வை முனிந்து பாடியது 437. அட்டாலும் பால் சுவையில் என்ற மூதுரைப் பாட்டில் மூவடி இடையில் வந்தது 384. குடவாயில் - குடந்தை; உறையூர் - உறந்தை; களந்தை என வருவன 392. அறம் பொருள் இன்பமென அவற்றுக்கு இவர் கூறிய பாட்டும் பயின்று வருமாறு கார் நாற்பது களவழி நாற்பது முதலாயின 547. மூவடி முப்பது முதலாயின ... தாய பனுவ லின்மையின் அம்மை எனப்படும் 548. பழமையவாகிய கதைப்பொருளாகச் செய்யப் படுவது ... பெருந்தேவனாராற் பாடப்பட்ட பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன 549. (இதனால் நாம் அறிவது, தகடூர் அதிகமானை மற்ற அரசர் கூடிப் போரிட்டுத் தகடூரை அழித்த கதை, உடன்காலத்தில் பாடப்படவில்லை, பிற்காலத்தில், பாரதம் போல, பழங்கதையாகப் பாடப்பட்டது என்பது.) புதிதாகத்; தாம் வேண்டியவாற்றாற் பல செய்யுளும் தொடர்ந்து வரச் செய்வது - அது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளும் எனவுணர்க; கலம்பகம் முதலாயினவும் சொல்லுப 551. இயைபென்றதனானே பொருளும் இயைந்து சொல்லும் இயைந்து வரும் என்பது கருத்து; சீத்தலைச் சாத்தனாராற் செய்யப்பட்ட மணிமேகலையும் கொங்குவேளிராற் செய்யப்பட்ட தொடர்நிலைச் செய்யுளும் போல்வன 552.

இவர் மேற்கோள் தரும் நூல்கள்: இலக்கணம் - தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களும், இறையனார் களவியல், புறப்பொருள் வெண்பாமாலை. இலக்கியம் - எட்டுத்தொகையுள் எட்டும், பத்துப்பாட்டுள் குறிஞ்சிப்பாட்டு தவிர, கீழ்க்கணக்கில் ஐந்திணை ஐம்பது, களவழி, திணைமாலை நூற்றைம்பது, வள்ளுவப்பயன், நாலடி, முதுமொழிக்காஞ்சி, பிற - சிலப்பதிகாரம், முத்தொள்ளாயிரம். பெயர் குறிப்பிடும் இலக்கணம் - காக்கை பாடினியம், பல்காப்பியம், பன்னிரு படலத்துள் கைக்கிளைப் படலம், பூதபுராணம், மாபுராணம், செயிற்றியம், பொருளியல் (தமிழ்நெறி விளக்கம்); இலக்கியம் - இடைக்காடனார் ஊசிமுறி, கடகண்டு, பருப்பதம், சிற்றட்டகம், சிறுகுரீ இ உரை, தந்திர வாக்கியம், நக்கீரனார் அங்கதம் அடி நூல்,

பூதத்தார் அவையடக்கு, விளக்கத்தனார் கூத்து; பாட்டு - பாவைப் பாட்டு, அம்மனைப் பாட்டு, மோதிரப்பாட்டு, வஞ்சிப்பாட்டு.

கொன்றை வேந்தன் என்ற ஒரு சிறு நீதிநூல் பண்டைக் காலம் முதல் பெரிதும் வழக்கில் உள்ளது. இதன் காப்புச் செய்யுளைப் பேராசிரியர் பலமுறை எடுத்து ஆளுகிறார்:

> **கொன்றை வேய்ந்த செல்வன் அடியிணை**
> **என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.**

இந்நூல் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அவ்வையார் செய்தது. இதைப் பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த பேராசிரியர் குறிப்பிடுவது ஏற்கத்தக்கதே. எனினும், கொன்றை வேய்ந்த என்ற காப்புச் செய்யுள் மட்டும், இளம்பூரணராலும் காட்டப் பெற்றுள்ளது. ஆதலால் பன்னிரண்டாம் நூற்றாண்டில் இருந்த ஆசிரியர் இதைச் செய்திருக்கவியலாது (இளம்பூரணர் காலம் பதினொராம் நூற்றாண்டு). எனவே, இக்காப்பு மட்டும், ஒரு பழம்பாடல் என்றும், பிற்காலத்தில் இந்நீதிநூலின் தலைப்பில் பெய்யப்பெற்றது என்றும் கருதவேண்டும்.*

பேராசிரியர் உரைச்சூத்திரம் தாமே செய்தாரென்று முன்னமே குறிப்பிட்டோம். அப்படியே அவர் மேற்கோள் இலக்கியச் செய்யுட்கள் பலவற்றைத் தாமே படைத்துக் கொண் டிருந்தாரென்றும் தெரிகின்றது. சூ. 261 முதல் 266 வரையில், புகுமுகம் புரிதல் தொடங்கி, புறஞ்செயச் சிதைத்தல் வரையுள்ள ஆறு கூறுகளிலும் ஒவ்வொன்றிற்கும் உரிய மெய்ப்பாடுகளை இச்சூத்திரங்கள் கூறுகின்றன. உரையாசிரியர் ஒவ்வொன்றுக் கும் விளக்கவுரை எழுதிய பின்னர், ‘இவற்றுக்குச் செய்யுள்’ என்று ஒரு பாடல் காட்டுகிறார். ஒவ்வொரு பாடலும் அவ்வச் சூத் திரத்திற்கூறிய மெய்ப்பாடுகளுக்கென்றே முறையாகச் செய் யப்பட்ட பாடலாக உள்ளது; எல்லாப் பாடல்களும் ஆசிரியப் பாக்கள். இவற்றின் அமைப்பைப் பார்க்கும்போது, இவை சூத்திரக் கருத்து விளக்கத்துக்காக இவரே செய்து கொண்டன என்று நன்கு தெரிகின்றது. இவை அப்படியப்படியே நச்சினார்க் கினியராலும் இலக்கண விளக்கவுரைகாரராலும் எடுத்துக் காட்டப்பட்டு உள்ளன.

---

* இதுபற்றிய விளக்கத்தை எமது பன்னிரண்டாம் நூற்றாண்டுத் தமிழிலக்கிய வரலாற்றில் காண்க.

பின்னும் செய்யுளியலில், (சூ. 332) வஞ்சியுரிச்சீர் அறுபதைக் காட்டி, அவற்றை நான்கு வகையாக்கி, ஒவ்வொன்றுக்குமுரிய வஞ்சியுரிச்சீர்கள் முறையே 12, 16, 16, 16 ஆக 60 வருமாறு நான்கு ஆசிரியப்பாக்களைச் செய்து காட்டியிருக்கிறார். இவை நான்கும் சோழ மன்னரைப் புகழ்வன. இவற்றுள் ஒவ்வொன்றிலும், இவர் கூறுகின்ற வஞ்சியுரிச் சீர்கள் அத்தனையும் தவறாது அமைந்திருப்பது காணும்போது, இவரே இவற்றைத் தொல்காப்பியச் சூத்திரங்களுக்கு இலக்கியமாகத் தாமே படைத்துக் காட்டினார் என்று கருதுவதில் தவறில்லை. இவை போலவே பிறவிடங்களிலும் பலவுள்ளன. இவ்வாறு தாமே இலக்கிய மேற்கோளை அமைத்துக்கொள்வதில், இவர் தண்டியாசிரியர் வழியைப் பின்பற்றினார் என்று தோன்றுகிறது.

இவைபோலவே, சூ. 369 உரையில், ஆறெழுத்தடி முதலாக இவர் காட்டுகின்ற உதாரண வாய்பாட்டுத் தொடர்களெல்லாம், ஈரடிகளாக அமைந்து ஓசைபெற்றிருப்பது, மிக்க சுவையுடைய ஓர் அமைப்பு:

கால் காய்ந்தது காம்பு நீடி,
நல் கூர்ந்தது வில்லோர் சுரம்.

வான் பெய்தது மண்குளிர்ப்புற,
தேன் பெய்தது செழுநகர்தொறும்.

மண்பாய்ந்தென உள் வீழ்ந்தது,
விண் பாய்ந்தென மேற்றொடுத்தது.

காடோங்கிய கல்கெழுசுரம்,
கோடோங்கிய குறும் பொறைமருங்கு.

மழைபெய்தென வான்வெள்ளென்று,
தழைபச்செனும் தண்ணென்காவு.

கமழ்பூந்துணர் கள்ளவிழ்தொறும்
இமிழ் தூங்கிசை இசைசுரும்பு வர.

அமைவிடுகொடி யஞ்சியோர்ந்து,
கனைகுரலன கானத்தளகு,

தினைப்புனத்தித ணயற்பிரியாது
மனைக் குறமகள் கடைப்புறந்தரும்.

இத்தகைய சொல்லாட்சிகள் இவருடைய சிறந்த சொல்வன்மையையும் புலமைத் திறனையும் உணர்த்துகின்றன.

இவர் எழுதுகின்ற சிறப்புக் கருத்துக்கள் சிலவற்றை இங்கு குறிப்பிடலாம். காலம் என்ற உறுப்பைக் கூறும்போது (516) அஃது ஈண்டு ஆராய்ச்சி இன்று, நியாயநூல் ஆராய்ச்சி என்பர் (514). மொழிபெயர்ப்பைப்பற்றி விரிவாகக் கூறுகின்றார் (652). சுவை எட்டின் மெய்ப்பாட்டைக் கூறுமிடத்து (251), "எட்டனோடும் சமநிலை கூட்டி ஒன்பது என்னாமோ நாடகநூல் போல் எனின், அதற்கு ஓர் விகாரமின்மையின் ஈண்டுக் கூறிய திலன் என்பது ...; அஃது உலகியல் நீங்கினார் பெற்றியாகலின் ஈண்டு உலக வழக்கினுள் என்பது". கொடுப்பவை - தலைமகனால் கொடுக்கப்பட்ட தழையும் கோதையும் தாரும் கண்ணியும் தோள்மாலையும் முதலாயின (264.) 502 உரையில் 'முன்னுறக் கிளந்த கிளவி' என்பது, பொருணோக்கிற்று; இசையின் பின்னரது நாடகமாகலிற் பாணன்பின் கூத்தனை வைத்தும், பெண்பாலாகலான் விறல்பட ஆடும் விறலியைக் கூத்தன் பின் வைத்தும், அவ்வினத்துப் பரத்தையரை அதன்பின் வைத்தும், பொருட்குச் சிறந்தாராகலின் நற்பொருள் உணரும் அறிவரை அவர்பின் வைத்தும், ஏதிலராகிய கண்டோரை அவர்க்குப் பின்வைத்துங் கூறினானென்பது (502). "தச்சுவினை மாக்கள் கண்ணும், களம்பாடும் வினைநர் கண்ணும் கட்டுங்கழங்கு மிட்டுரைப்பார் கண்ணும், தம்மில் உறழ்ந்துரைப்பார் கண்ணும், பூசலிசைப்பார் கண்ணும், கேட்கப்படும்" (393, 461); ஓலைப் பாயிரம் என்பார் 461; ஆரியர் கூறும் தமிழும், குருடரும் முடவருஞ் செல்லும் செலவும், பித்தரும் களியரும், சுற்றத்தாரை இகழ்ந்தாரும் குழவி கூறும் மழலையும் போல்வன (249) என்று நகைச்சுவைக்குப் பொருள் காட்டுவார். மேலும், இவரது எழுத்திலேயே நகைச்சுவை நிரம்பப் பயிலும். நாலசைச்சீர் கொண்டாரும் உளர், ஐயசைச்சீர் கொண்டாரைக் கண்டிலம் (324); அன்னது கட்டளை அழிந்த கலியடி எனினும், வஞ்சியடி யாதலுக்கு ஒரு வழியும் இல்லை: தலை குலுக்கி வலியச் செய் தாலும் தன்சீர் இன்மையின் என மறுக்க (420). இவை அக்காலம் இருந்து பாடம் சொல்லிவந்த சில ஆசிரியரைக் கருத்திற் கொண்டு சொல்லியன போலும்.

இவர் அணியிலக்கணத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்பதை முன்னமேயே குறிப்பிட்டோம். புறநானூற்றுப் பாடல் ஐந்து பாடிய நரிவெரூஉத்தலையார் வரலாறு நன்கு விளங்க வில்லை. "சேரமானைக் கண்ட ஞான்று நின் உடம்பு பெறு

வாயாக என அவனைச் சென்று கண்டு தம் உடம்பு பெற்று நின்றார்" என்பது பாடலின் குறிப்பு. இதைப் பேராசிரியர், நரிவெரூஉத்தலையார் தம் உடம்பு பெற்று வியந்து கூறிய பாட்டாதலின் என்று தெரிந்து எழுதுகிறார். ஆயினும் நமக்கு இதிலுள்ள வரலாறு விளங்கவில்லை. ஒருகால் அச்சேரமானால் அவர் உடம்பிலிருந்த நோய் நீங்கி இருக்கலாம்.

உவம இயலில் ஐவகை உவமப் போலியை இவர் விளக்கி யிருப்பது, உரை செய்யும் முறைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. அப்படியே சில இடங்களில் மேற்கோள் பாடல்களுக்கு நயமான விளக்கம் கூறுகிறார். மரபியலில் பிராணிகளின் இளம்பால் பெயர்களைக் கூறியவிடத்தில் மேற்கோள் காட்டுதலும் தம் காலத்துள்ள ஆட்சி ஆட்சியின்மை முதலியவற்றை இவர் விளக்கிக் கூறியிருத்தலும் மிக்க பயன் உடையன. கொச்சகம் ஒப்பினாகிய பெயர்; பல கோடுபட அடுக்கியுடுக்கும் உடை யினைக் கொச்சகமென்ப; அதுபோலச் சிறியவும் பெரியவும் விராயடுக்கியும் தம்முளொப்ப அடுக்கியும் செய்யப்படும் பாட்டுக்களைக் கொச்சகமென்றா னாகலினென்பது. இக்காலத் தார் அதனைப் பெண்டிர்க்குரிய உடையுறுப்பாக்கியும் கொய்சக மென்று சிதைத்தும் வழங்குப."

சுருங்கக்கூறின், இப்பேராசிரியர் மிகச்சிறந்த தமிழ்நூல் உரையாசிரியர்களாகிய அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், நச்சினார்க்கினியர் ஆகியோரோடு உடன்வைத்து எண்ணத் தக்கவர் என்று கூறலாம். இம்மூவருடைய இலக்கியவுரைகள் நமக்குக் கிடைத்திருக்க, இவருடைய குறுந்தொகை உரை கிடைக்காமற்போனது நம் தவக்குறையே.

பண்டைத் தமிழ் இலக்கண மரபுகள் பலவாக இருந்தன வென்று வச்சணந்திமாலையுரை வீரசோழியவுரை முதலியவற் றால் அறிகிறோம். தொல்காப்பிய மரபுபோல, ஒத்தவேறு மரபுகள் இந்திரகாளியம், அவிநயம் என்பன; அவிநயத்துக்குச் சிறப்பானவுரை 14ஆம் நூற்றாண்டு வரையில்கூட இருந்தது என்று நன்னூல் மயிலைநாதருரையால் அறிகிறோம்; ஆனால் அதுவும் காலகதியில் இறந்துபோயிற்று. அப்படியே, தொல் காப்பியம், பல்காயம், காக்கை பாடினியம் என்ற நூல்கள் ஒன்றைத் தழுவி மற்றொன்றாகப் பெருந்தேவனார் காலம் வரையில் வந்தன; பின்னால் இல்லாது போயின. இதைப்பார்க்கும் போது, இம்மூவரும் ஒருவர் பின் ஒருவர் மாணாக்கராய் வந்தன

ரென்று கருதலாம். காக்கை பாடினியார் (சங்கச் செய்யுள் செய்த காக்கை பாடினியார், சிறுகாக்கை பாடினியார் - இருவரும் வேறாவர்) இருவர்; ஒருவர் தொல்காப்பியரின் ஒரு சாலை மாணாக்கராய் அகத்தியரிடம் பயின்றவர்; மற்றவர் மேற்கூறிய படி தொல்காப்பிய மரபை வளர்த்து வந்த பல்காயனாரின் மாணாக்கர் (இப்படி மாணாக்கர் வழிவருவதை 'ஓரான் வழி' எனல் வைணவ மரபு).

"இப்படி வந்ததில் நேர்ந்த பிறழ்ச்சியால் பிற்காலத்தில் தொல்காப்பியச் சூத்திரங்களுக்குப் பொருள் கண்டவர்களுள் மாறுபாடு தோன்றி இரு பிரிவினராகப் பிரிந்தனரென்ப. அவர் களுள் வரலாற்று முறையில் வந்த ஒரு சாராசிரியரின் கருத்தே பேராசிரியரால் விளக்கப்பட்டுள்ளது. இக்கருத்தைப் பின்பற்றிய நூல்கள் எக்காரணம் பற்றியோ பிற்காலத்தில் தோன்றா தொழிந்தன. மற்றொரு பிரிவினரே யாப்பருங்கலம் முதலிய வற்றை எழுதியவராவார். இவர்கள் கருத்தையே இளம்பூரணர் முதலியோர் பின்பற்றினர். இதுவே பிற்காலத்தில் பயில எளிதா யிற்று; எனினும் வழிவழிவந்த உரைப்பொருளே பேராசிரியர் எழுதியதென்பதும், அவராகச் செய்தது எதுவுமில்லை என்பதும் காய்தல் உவத்தலகற்றி ஆராய்வார்க்குப் புலனாமென்பர் அறிஞர்."*

## வச்சணந்திமாலை உரையாசிரியர்

### வச்சணந்திமாலை

குணவீரபண்டிதர் என்ற சைனப்புலவர் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் வாழ்ந்து இரண்டு இலக்கண நூல்கள் செய்தார். ஒன்று எழுத்தும் சொல்லும் மட்டும் கூறுகிற நேமிநாதம் என்பது; இது நேமிநாத தீர்த்தங்கரர் பெயரால் செய்யப்பட்டது. மற்றொன்று, பாட்டியலை மட்டும் கூறுகின்ற வச்சணந்திமாலை என்பது. இது வெண்பாவால் இயன்றது; குணவீர பண்டிதருடைய ஆசிரியராகிய வச்சணந்தி முனிவ ருடைய பெயர் சூட்டப்பெற்றது; இதை, 'கலந்தை வச்சணந்தி முனிவரன் - கொள்கையின் வழாக் குணவீரபண்டிதன்' என்னும் நேமிநாத உரையாலும், இப்பாட்டியல் உரையாசிரியர், "இந்நூல் என்ன பெயர்த்தோ எனின்,

---

* நாகமணி முதலியார், பொருளதிகாரப் பொருட்குறிப்பகராதி, 1935.

எய்திய மணிப்பூண் இலங்குமணி நெடுந்தேர்
வேந்தர் சூடும் விரைகெழு மலர்த்தாள்
வளங்கெழின் மாடத்துக் களந்தையெம் பெருமான்
வளர்ந்த கீர்த்தி வச்சணந்தி தேவன்
என்னும் மாமுனி செய்வித் ததனால்
வச்சணந்தி மாலை என்னும் பெயர்த்து.

என்று கூறுவதனாலும் அறிகிறோம்; பின்னே காட்டப்படும் 'பூமகளும் நல்வாழ்வு பெற்றாள்' என்ற பாடலையும் காண்க. நூல் அந்தாதித் தொடை.

## பாட்டியல் வரலாறுகள்

இங்கு பாட்டியலைக் குறித்துச் சில சொற்கள் கூறுவது பொருந்தும். இலக்கணங்கள் எவ்வாறு தொல்காப்பியத்தின் காலத்திற்குப் பிறகு பெருகி வளர்ந்தன என்பதை விளங்கக் கூறினோம்; பாட்டியலையும் அங்கு குறிப்பிட்டோம். அகத்தியர் பாட்டியல் என ஒரு பாட்டியல் ஆசிரியர்களால் சொல்லப்படுகின்றது. பாட்டியல் என்ற இலக்கணப்பிரிவு மிகவும் பிற்காலத்தது*. தொல்காப்பியருடைய ஆசிரியர் என்று சொல்லி வருகின்ற அகத்தியர் காலத்தில் பாட்டியல் தோன்றியிருக்க முடியாது என்பது உறுதி. எனவே, இவ்வகத்தியர் பாட்டியல் பின் வந்ததொன்றாகும். ஆகவே, இவ்வகத்தியரும் பிற்காலத்தவர். 9-10 ஆகிய நூற்றாண்டுகளில் இவர் தோன்றியிருக்கலாம். பார்க்கும்போது இக்கருத்து, அகத்தியர் பற்றியுள்ள செய்திகளில் பின்னும் குழப்பம் உண்டுபண்ணுவது போலத் தோற்றலாம்; அஃதன்று; அகத்தியர் என்ற பெயருடையார் பலர் இருக்க, நாம் கூறுபவற்றால் பாட்டியல் செய்த ஓர் அகத்தியர் இந்தக் காலத்தில் இருந்தார் என்பது உண்மையைத் தெளிவுபடுத்துவதற்கு அருந்துணையாகும். (அப்படியே மற்றோர் அகத்தியர் 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து தேவாரத்திரட்டுச் செய்து கொடுத்தார் என்றும் தெளிவாகக் காட்டியிருக்கிறோம்.)❖ அகத்தியர் பாட்டியல் இன்று இல்லை. அதுபோலவே பெயரளவில் அறியப்படுகின்றனவாகிய பரணர் பாட்டியல், கல்லாடர்

---

* பாட்டியல் வளர்ச்சிபற்றி ஒரு விரிவான குறிப்பை எமது தமிழ் இலக்கிய வரலாறு 14ஆம் நூற்றாண்டு, நவநீதப்பாட்டியல் என்ற தலைப்பில் காணலாம்

❖ 14ஆம் நூற்றாண்டு வரலாறு பார்க்க.

பாட்டியல், தத்தாத்திரேயப் பாட்டியல், பண்டாரப் பாட்டியல் முதலாயின பல; எவையும் இன்று இல்லை; இறந்து போயின.

கிடைக்கின்ற பாட்டியல் நூல்களையும் அவற்றின் யாப்பையும் காலத்தையும் பற்றிய ஒரு குறிப்பைக் கீழே காணலாம்:

| எண் | நூற்பெயர் | யாப்பு | காலம் |
|---|---|---|---|
| 1. | பன்னிரு பாட்டியல் | நூற்பா | 11ஆம் நூற்றாண்டு |
| 2. | வச்சணந்திமாலை என்னும் வெண்பாப் பாட்டியல் | வெண்பா | 12 |
| 3. | நவநீதப் பாட்டியல் | கட்டளைக் கலித்துறை | 14 |
| 4. | வரையறுத்த பாட்டியல் ஒரு பகுதி மட்டும் | கட்டளைக் கலித்துறை | 14 |
| 5. | சிதம்பரப் பாட்டியல் | விருத்தம் | 16 |
| 6. | இலக்கண விளக்கப் பாட்டியல் | நூற்பா (பிற்காலம்) | 18 |

இவற்றுள், பன்னிரு பாட்டியல் காலத்தால் மிகவும் பழையதாயினும், அதற்குப் பழையஉரை இல்லை; மற்றவற்றுக்கு உண்டு.

வச்சணந்தி மாலையுரையால் சில செய்திகள் விளக்கமாகின்றன. அவற்றுள் முக்கியமானது. இந்நூல் இந்திரகாளியத்தின் வழியே செய்யப்பட்டது என்பது; இது இவ்வுரையாலும், பிற பாட்டியல் உரைகளாலும் நாம் அறிகின்ற ஒரு செய்தி. அதாவது தொல்காப்பியர், அவிநயனார், யாமளேந்திரர் ஆகியோர் தனித் தனி நூல்களான தொல்காப்பியம், அவிநயம், இந்திரகாளியம் என்ற நூல்கள் செய்தார்கள் என்பதும், இவை மூன்றும் வெவ்வேறான நூல் மரபுகளை நிலைநாட்டின என்பதுமாகும். இம்மூன்றினுள், தொல்காப்பியமே இன்று முழுமையும் வழங்குகின்ற நூலும் மரபுமாகும். மற்ற இரண்டும் சில நூற்பாக்கள் கிடைப்பனவன்றி, நூல்கள் முழுமையும் இறந்துபோயின. எனினும், ஏனை இரு நூல்களுமே தனியாகப் பாட்டியற் பிரிவைக் கொண்டிருந்தன என்பது, கிடைக்கின்ற இந்நூல்களின்

சூத்திரங்களால் புலப்படுகின்றது. அவிநயர் பாட்டியற் பகுதி யானது 'அவிநயனார் கலாவியல்' என்றும் நவநீதப் பாட்டியல் உரைகளில் கூறப்பெற்றுள்ளது.

அடுத்து, யாமளேந்திரர் செய்த நூல் இந்திரகாளியம் என்ற பெயருடையது. 12ஆம் நூற்றாண்டில் சிலப்பதிகார உரை செய்த அடியார்க்கு நல்லார், "யாமளேந்திரர் செய்த இந்திரகாளியம்" என்று கூறுகிறார். இது இசைத்தமிழ் இலக்கண நூல் என்றும் அவ்வுரையால் அறிகிறோம். அவிநயம் இந்திரகாளியம் என்ற இரண்டும் 10ஆம் நூற்றாண்டு வரையில் சிறப்பான இரு இலக்கண நூல்களாயிருந்தனவென்று கொள்ளத் தோன்றுகிறது. அக்காலத்தில் பாட்டியல் என்பது, இயல் தமிழில் மட்டுமன்றி, இசைத்தமிழிலும் ஒரு பகுதியாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. பாட்டியலில் பொருத்தவியல், முதன் மொழியியல் என்பன ஆராயும்போது, இவை இசைத்தமிழுக்கும் எவ்வளவு முதன்மை வாய்ந்தவை என்பது விளங்கும். வச்சணந்திமாலையின் உரை யாசிரியர், "இந்திரகாளி" என்று பெயர் குறிப்பிட்டுச் சில சூத்திரங்களை எடுத்துத் தருவதோடன்றி, பாயிரப்பகுதியின் உரையில், "வழியே என்பது இன்னதின் வழித்து என்றல்; இஃது எந்நூல் வழித்தோ எனில் இந்திரகாளி என்னும் பாட்டியல் மரபின் வழித்து" என்று எழுதுகிறார். "இந்நூல் செய்வதற்குக் காரணம் யாதோவெனின், பரந்த பாட்டியல் மரபுகளிற் கரந்து கிடந்த பொருளையெல்லாம் ஒரு கோவைப்படுத்தல் காரண மென்றுணர்க" என்றும் கூறுகிறார்.

இவ்வாறு இவ்வாசிரியர் கூறுவது அன்றுள்ள மரபை விளக்கமாகத் தெரிவிக்கிறது. பாட்டியல் மரபு சிறப்பாகத் தனியே வழங்கிற்று. 'பாட்டியல் மரபு' என்றே ஒருநூல் இருந் தது. பிற நூல்கள் பன்னிரு பாட்டியல், அவிநயம், இந்திர காளியம் ஆவன.

**வச்சணந்திமாலை உரை**

இவ்வுரை செய்தார் பெயரோ, வரலாறோ, பிறவோ புலப் படவில்லை. நூலாசிரியரினும் உரையாசிரியர் வேறானவர் என் பதை, "இந்நூல் யாரால் செய்யப்பட்டதோ வெனின்,

> கற்றவர் புகழும் களந்தையென் பெரும்பதிக்
> குற்றமில் வாய்மைக் குணவீர பண்டிதன்

என்னும் ஆசிரியனால் செய்யப்பட்டது" என்று உரைகாரர் எழுதியிருப்பதால் அறிகிறோம். இவர் குணவீரபண்டிதருடைய மாணாக்கர் என்று கருதுவதற்குச் சான்றுகள் சில உள்ளன. சிறப்புப்பாயிரம் செய்தற்குரியாருள் மாணாக்கரும் ஒருவர். இந்நூலுக்கு இவ்வுரைகாரரே சிறப்புப்பாயிரம் கூறுகிறார்:

பண்பார் கவிஞர் வியந்தேத்தப் பாட்டியலாம்
வெண்பாவந் தாதி விளம்பினான் – நண்பாரும்
கோடாத கீர்த்திக் குணவீர பண்டிதனாம்
பீடார் களந்தைப் பிரான்.

கூறுவது மாத்திரமல்ல, 'கோடாத கீர்த்திக் குணவீர பண்டித னாம் பீடார் களந்தைப் பிரான்' என்று மிகவும் பாராட்டுகிறார். அன்றியும், மதுரகவிக்கு எடுத்துக்காட்டாக இவர் வச்சணந்தி யைப் புகழும் பாடலொன்று சொல்கிறார்; இது இவரே செய்த தாயும் இருக்கலாம்; இவ்வாறு தாமே சொல்வதும் ஒரு மரபு:

பூமகளும் நல்வாழ்வு பெற்றாள் புரைதீர்ந்த
நாமகளும் பல்கலையும் நண்ணினாள் – தோமகல்சீர்
வையம் புகழ் களந்தை வச்சணந்தி மாமுனிவன்
செய்ய பதகமலம் சேர்ந்து.

இவ்வளவு ஈடுபாட்டோடு இவர் வச்சணந்தியைக் குறிப்பிடுவ தால், குணவீரபண்டிதரின் மாணாக்கரான இவர், அவருடைய குருவாகிய வச்சணந்தியையும் நன்கறிந்திருந்தார் என்று கருது கிறோம்.

பாயிர வெண்பாவுக்கு இவர் செய்திருக்கும் உரை மிகவும் விரிவானது. ஆசிரியன் மாணாக்கன் நூல் முதலிய இலக்கணப் பகுதிளை இங்கு உரைக்கிறார். பல மேற்கோட் பாடல்களைத் தருகிறார். இவற்றுட் பல நூற்பா. இவை நன்னூற் பொதுப் பாயிரத்தைத் தழுவியுள்ளன: பாடவேறுபாடுகள் அதிகம். வேறு குறட்பாவும் வெண்பாவும் தருகிறார்.

மலைநிலம் பூவே துலாக்கோலென் றின்னர்
உலைவில் உணர்வுடை யார்.

மடிமானி பொச்சாப்பான் காமுகன் கள்வன்
அடுநோய்ப் பிணியாளன் ஆறாச்சினத்தன்
தடுமாறு நெஞ்சத் தவனுள்ளிட் டெண்மர்
நெடுநூலைக் கற்கலா தார்.

என்பன காண்க. இவையொருகால் அவிநயம் போன்ற நூலில் இருந்திருக்கலாம். இவ்வுரையுள் காணப்படும் இந்திரகாளிய மேற்கோள் செய்யுட்கள் அந்நூற் பெயரோடு பன்னிரு பாட்டியலில் காணப்படுகின்றன.

இவ்வுரை சுருக்கமான பழையவுரை. நூலுக்குப் பெயரிடு மாற்றை உரைக்கும்போது, இவர் உரையுள் சங்க நூல்களோடு யானைத்தொழில்,* அங்கமாலை, நயனப்பத்து, பயோதரப்பத்து, கலைக்கோட்டுத்தண்டு, அவிநயம் என்பன கூறுகிறார்: இவை இன்று கிடைக்காத நூல்கள். கல்லாடம், பாண்டிக்கோவை என்பனவும் கூறுகிறார். காந்தபுராணம், கூர்மபுராணம்❖ என்பனவும் குறிப்பிடுகிறார்; இவை வடமொழி நூல்கள் என்றே கருத வேண்டும். உரைகாரர் வடமொழி நூலைக் கூறுவாரா என்ற ஐயம் எழுதல் இயல்பே. காந்தபுராணம் என்பது வடமொழி ஸ்காந்தம். தமிழாயிருப்பின் இவர் கந்தபுராணம் என்று சொல்லியிருப்பார். தமிழ்க் கந்தபுராணத்தின் காலம் 14ஆம் நூற்றாண்டு. அதிவீரராம பாண்டியர் செய்த தமிழ்க் கூர்மபுராணத்தின் காலம் 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. 16ஆம் நூற்றாண்டில் அவிநயம், இந்திரகாளியம் முதலான நூல்களின் நினைவுகூட இல்லாதபடி மறைந்துபோயின என்று வரலாறுகள் சொல்கின்றன. அவற்றின் மரபும் தெரியாது. ஆனால் உரையாசிரியர் இம்மரபுகளை நன்கு தெரிந்து எழுதுகிறார். இப்பொருளை இவ்வளவு தெளிவாக வேறு யாரும் எழுதவில்லை. ஆகவே இவ்வுரையாசிரியர் பழங்காலத்தினர் என்றே கொள்ள வேண்டியிருக்கிறது. இவர் ஏன் வடமொழி நூல்களைக் குறிப்பிட்டார் என்பது விளங்கவில்லை.

சங்க நூல்களுள் ஆற்றுப்படையைக் கூறும்போது, புலவராற்றுப்படை, பாணராற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை என்பன கூறுகிறார்; புலவராற்றுப்படை என்பது முருகாற்றுப்படை போலும், இரவலனாகிய புலவனை முருகனிடத்து ஆற்றுப்படுத்தலால். அகலக் கவியின் பிரிவுகளை விளக்கியபின், புன்கவிஞர் நாற்பகுதியர் என்று அடுத்த பாடலை இவர் நன்கு விளக்கியிருப்பது புதுமையாகவுள்ளது:

---

* தஞ்சை - சரசுவதி மகால் வெளியீடாக 'கஜ சாத்திரம்' என்ற ஒரு வடமொழிநூல் வெளிவந்திருப்பது அறியத்தக்கது.

❖ கூர்மபுராணம் என்பதைச் சென்னகேசவலு நாயுடு பதிப்பில் இராமாயணம் என்று மாற்றியிருக்கிறார்.

ஆரொருவன் பாக்களை யாங்கொருவ னுக்களிப்போன்
சோரகவி, சார்த்தொலியிற் சொல்லுமவன், – சீரிலாப்
பிள்ளைக் கவிசிறந்த பின்மொழிக்காம், புன்மொழிக்காம்
வெள்ளைக் கவியதனின் வேறு.

"ஒருவன் பாட்டை மற்றொருவனுக்குக் கொடுப்போன் கள்ளக்கவியாம். ஒருவன் கவியிசையில் வேறொரு செய்யுட் புணர்ப்போன் சார்த்துகவியாம். தனக்கென ஒன்றின்றி முன்னோர் மொழிந்த சொன்னடை பொருணடை கண்டு கவிபாடுவோன் பிள்ளைக்கவியாம். புன்மொழிகளால் கவிபாடுவோன் வெள்ளைக்கவியாம்". கொடுப்பவனையே இவர் கள்ளக்கவி என்கிறார்! தெரிந்தோ தெரியாமலோ எடுத்துப் பெய்து கொள்பவர் பலர். கொடுப்பவருங்கூட, வடமொழி வரலாற்றிலும், ஆங்கில வரலாற்றிலும், தமிழ் வரலாற்றிலும் பலர் உளர். இந்த நூற்றாண்டின் முற்பாதியில்கூட, புகழ்வாய்ந்த ஆசிரியர் ஒருவர் நூலெழுதி மற்றவருக்குக் கொடுத்துவிட்ட செய்தி, தமிழ்ப் புலவருலகம் நன்கறியும்.

இவ்வுரையாசிரியர் நூலின் இறுதிப்பகுதியில் விரிவாக உரையெழுதவில்லை. இவ்வெண்பாப் பாட்டியல் அந்தாதியாக இருந்தமையால், தமிழ் கற்றோர் மனப்பாடம் செய்வது எளிமையாக இருந்தது. இதுபற்றியே இதன் பொருளை வரையறை செய்யும் அவசியம் எழுந்தது போலும்.

## காலம்

முன்னமே இவ்வுரையாசிரியர் குணவீர பண்டிதருடைய மாணாக்கராக இருக்கலாம் என்று குறிப்பிட்டோம். அவர் தம் நூலை மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் செய்தா ரென்று அறியமுடிகிறது: "இந்நூல் யார் காலத்தில் செய்ததோ வெனின்,

குருத்தவா மணிமுடிக் கொற்றவர் கோமான்
திருத்தகு மணிமுடித் திரிபுவன தேவன்.

என்னும் அரசன் காலத்தில் செய்தது என்றுணர்க." திரிபுவன தேவன் என்பது இச்சோழனைக் குறிப்பிடும். இவன் ஆட்சிக் காலம் 1178 - 1218. ஆதலால் வச்சணந்தி மாலை 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் செய்யப்பெற்றது எனக் கொள்ளவே, உரையின் காலம் அடுத்த 1200 - 1225 என்ற காலப்பகுதி என்று கருதுதல் பொருந்தும். திரிபுவன தேவன் என்று தெரிந்து கூறு

வதனாலும், இவர் மாணாக்கராதலாலும், நூலாசிரியரையும் உரையாசிரியரையும் அச்சோழன் ஆட்சிக்காலத்தில் முன்னும் பின்னும் கூறியிருக்கிறோம்.

**பதிப்பு:**

தில்லையம்பூர் சந்திரசேகர கவிராச பண்டிதர் திருத்தணிகை விசாகப்பெருமாளையர் முன்னிலையில் பரிசோதித்துப் பதிப் பித்தது, 1860. சென்னகேசவலு நாயுடு பதிப்பு 1908. கழகப்பதிப்பு, கோ. இராமலிங்கத் தம்பிரான் விளக்கவுரையோடு, 1936; இப்பதிப்பில் பழைய உரையோடு புதியவுரையும் கலந்து, எது பழையவுரை எது பிற்சேர்க்கை என்று புலப்படாதபடி அச்சிடப் பட்டு, ஆராய்ச்சிக்குப் பயன்படாத முறையில் உள்ளது. எல்லாப் பதிப்புக்களும் வரையறுத்த பாட்டியலை (14 நூ.) உடன் சேர்த்துப் பதிப்பித்துள்ளன.

## சேனாவரையர்

தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்கு அறுவர் உரை எழுதினர் என்று சொல்வதுண்டு; அவர்களாவார் இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், கல்லாடர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் என்போர். இவர்களுள் பேராசிரியர் உரை இன்று இல்லை. (வேறோர் பழைய உரையின் பகுதி கிடைத்து அச்சிடப்பட்டுள்ளது.) கிடைக்கின்ற உரைகளுள் மிகவும் சிறப் பானது சேனாவரையர் உரை.

**ஆசிரியர்**

சேனாவரையர் என்ற சொல்தொடர், படைத்தலைவர் என்று பொருள்படும். படைத்தலைவராய் விளங்கினோருக்கு அரசர்தரும் சிறப்புப் பட்டங்களுள் சேனாவரையர் என்பது ஒன்று. "கிளையெண் குழூஉ" என்ற நன்னூல் சூத்திர (275) உரையுள், மயிலைநாதர், சிறப்பால் பெறும் பெயருக்கு உதாரண மாக ஆசிரியன், படைத்தலைவன், சேனாவரையன் என்று காட்டுகின்றார். சேனாவரையன் என்ற பெயர் கல்வெட்டுக் களில் பல இடங்களில் வருகிறது: "திருவழுதி வளநாட்டுத் திரு வள்ளூர்ச் சேனாவரையனான தத்தன்," "புவனேக சுந்தரநல்லூர் அரையன் ஆண்டானான சேனாவரையன்", "ஆற்றூர்ச் சேனா வரையன்" "மிழலைக் கூற்றத்து நடுவிற்கூறு பராந்தக நல்லூர்ப் புதுக்குடியினரான சேனாவரையர்", பராந்தக நல்லூர்ச் சேனா

வரையர் ஆயின அழகப்பிரான் இடைக்கரை யாழ்வான்" முதலாயின. இப்பெயர்களுள், பின் மூன்றாகிய ஆற்றூர்ச் சேனாவரையன் முதலான மூன்று தொடர்களும் தொல் காப்பிய உரைகாரராகிய சேனாவரையரைக் குறிப்பிடுகின்றன என்று மு. இராகவையங்கார் அவர்கள் தமது 'சாசனத் தமிழ்க் கவி சரிதம்' என்னும் நூலுள் முடிவு செய்திருக்கிறார். அவர் குறிப்பிடும் காரணங்கள் ஏற்கத் தக்கனவே ஆகும்.

முதலாவது 164ஆம் சூத்திரத்தில் "பெண்மையடுத்த மகன் என் கிளவி" என்றதொடர் வருகிறது. இங்கு பெண்மகன் என்பது பொருள்; இது எப்பருவத்துப் பெண் என்று நூலா சிரியர் குறிப்பிடவில்லை. ஆயினும், இளம்பூரணரும், தெய்வச் சிலையாரும் இதைச் சிறிது விளக்கினார்கள். முன்னவர், "புறத்துப்போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண் பாலாரை, பெண்மகன் என்று வழங்குப" என்றார். மற்றவர், "விளையாடும் பருவத்துப் பெண்மகளைப் பெண்மகன் என்றல் பண்டையோர் வழக்கு" என்றார். ஆனால் இருவரும் இது எந்த நாட்டு வழக்கு என்று கூறவில்லை. காரணம், அவர்கள் இவ் வழக்கை நேர்முகமாய் அறிந்திலர் போலும். சேனாவரையரே இதைத் தெளிவுபடுத்துகிறார். "புறத்துப் போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண்மகளை, மாறோக்கத்தார்* இக் காலத்தும் பெண்மகன் என்று வழங்குவர்" என்பது இவர் உரை; மாறோக்கம் என்பது தென்பாண்டி நாட்டில் கொற்கையைச் சார்ந்த பகுதியாகும். மேலும், செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம் என்ற (400) சூத்திரவுரையில், இளம்பூரணர் முதலியோர் திசைச்சொல்லுக்கு எடுத்துக்காட்டாக வடுகுநாடு, பூழிநாடு முதலிய நாட்டுச் சொற்களைக் காட்ட, இவர் மட்டுமே தென் பாண்டிநாட்டு வழக்கை எடுத்துரைக்கின்றார். 'திசைச்சொற்கள், இயற்சொற்கள்போல எந்நிலத்தும் தம்பொருள் விளக்கா, அவ் வந்நிலத்தில் மட்டுமே விளக்கும் என்று கூறி, தென்பாண்டி நாட்டார் ஆ, எருமை என்பவற்றைப் பெற்றம் என்றும், தம்மாமி என்பதைத் தந்துவை என்றும் வழங்குப' என்று காட்டுகிறார். இவற்றால் இவரும் தென்பாண்டி நாட்டவராயிருந்து, இவ் வழக்குக்களை நன்கு தெரிந்தே குறிப்பிடுகின்றார் என்று கருது வது பொருந்துவதாகும். எனவே, ஆற்றூர் பாண்டி நாட்டு ஊர்

* மாறோக்கத்து நப்பசலையார் புகழ்வாய்ந்த ஒரு சங்கப்புலவர்; மாறோக்கம் என்பது கொற்கையைச் சூழ்ந்துள்ள நாடு என்பது ஐயரவர்கள் குறிப்பு.

ஆனமையால், ஆற்றூர்ச் சேனாவரையர் என்பவர் இச்சேனா வரையரே ஆவர் என்று ஐயங்கார் அவர்கள் முடிபு செய்திருப் பது, நூலின் ஆதாரங்களைக் கொண்டும் நாம் ஒப்புக்கொள்ள கூடியதே. ஆற்றூர் என்பது தாமிரவருணியின் கரையிலுள்ள ஊர். அங்குள்ள திருமால் கோயிலில் மேற்குறித்த கல்வெட்டுக் களுள் கடைசியிரண்டும் காணப்படுகின்றன. முன்னே காட்டிய கல்வெட்டுத் தொடர்களால், இவருடைய முன்னோர் மிழ லைக் கூற்றத்துப் பராந்தக நல்லூரில் படைத் தலைமையேற்று, புதுக்குடியாகக் குடியேறி வாழ்ந்தார்கள் என்றும், அவர்களுள் இவரது இயற்பெயர் அழகப்பிரான் இடைக்கரையாழ்வான் என்றும், தம் முன்னோர் போல இவரும் படைத்தலைவராக வாழ்ந்திருந்தார் என்றும் அறியலாகும்.

இவர் தம் உரையுள் யானையை அடிக்கடிக் குறிப்பிடு வதும் கருதத்தக்கது. யானையிடத்துப் பழகுதல் யாருக்கும் எளிதில் வாய்ப்பதன்று, ஒரு குறிப்பை மட்டும் காட்டுவோம். 37ஆம் சூத்திரவுரையில், 'யானைநூல் வல்லானொருவன் காட்டுட்போவுழி ஒரு யானை யடிச்சுவடு கண்டு இஃது அரசுவா ஆதற்கேற்ற இலக்கணமுடைத்து என்ற வழி ...' என்று எழுது கிறார். இக்குறிப்புக்கள் ஓரளவு யானைப்படை கண்டோருக்கும் நடத்தினோருக்குமே சொல்லவரும்; யானைநூல், யானை அடிச்சுவடு, அரசுவா - இவையெல்லாம் பிறர் அறிந்து குறிப்பிடு தல் இயலாது. இவர் தம் உரையுள் போர் வீரர்க்குரிய பொருள் கள் பலவற்றை, சொற்களைக் கூறுமுகத்தான் உணர்த்துகிறார். கதியாறும் உடைத்து இக்குதிரை, அரசர்க்குத் துப்பு, யானை, குதிரை, தேர், காலாள், கவசம், படைத்தலைவன், வென்ற வேல் என்ற சொற்களைக் காண்க. ஏனாதி நல்லுதடன், மாந்தக் கொங்கு ஏனாதி, காவிதி கண்ணந்தை என்ற பெயர்களைக் கூறுகிறார். இங்கு வரும் பட்டங்கள், படைத்தலைவர், அரசியல் தலைவருக்குரியன. எனவே இவற்றாலும், இவர் படைத்தலைவ ராயிருந்தார், அல்லது அண்மையில் இவர் முன்னோர் படைத் தலைவராயிருந்தனர் என்ற கருத்து பின்னும் உறுதியாகின்றது.

இவர் சைவ சமயத்தவர் என்றும் நாம் அறிகிறோம். இவ் வாறு கருதுவதற்கு இரண்டு ஆதாரங்கள் உள்ளன. ஆற்றூர்ச் சோமநாதசுவாமி கோவிலில் வரையப்பட்ட சாசனமொன்றி னால், "ஆற்றூர்ச் சேனாவரையன் என்பார், ஆசிரியர் மாணாக்கர் முறையில் தம் முன்னோரிடமிருந்து தமக்குக் கிடைத்த நிலம்

மனைகளைத் தம்மூர்ச் சோமநாத சுவாமிக்கு உதவிய செய்தி கூறப்பட்டுள்ளது. பராந்தக நல்லூர்ச் சேனாவரையர் ஆயின அழகப்பிரான் இடைகரை யாழ்வான் என வழங்கப்பட்டா ரொருவர் அவ்வாற்றூர்ச் சோமநாதசுவாமிக்குப் பஞ்சகவ்வியப் புறமாக விலைக்குப் பெற்று உதவிய நிலத்தை அப்பிரதேசத்து மகாசபையார் ஏற்றுக்கொண்டு இறையிலி செய்த செய்தி தெரியவருகின்றது." சிவாலயத்துக்குப் பஞ்சகவ்வியத்துக்காக நிலம் அளித்த இவர் சைவர் எனக்கொள்ளத் தடையில்லை. மேலும், உரையின் தொடக்கத்தில் இவர் நான்கு* கடவுள் வணக்கப் பாடல்களை எழுதி உரையைத் தொடங்குகிறார். இந்நான்கினுள் முதற்பாடலான 'தன்தோள் நான்கின் ஒன்று கைம்மிகூஉம்' என்பது, இவருக்குமுன் உரையெழுதிய இளம் பூரணர் கூறும் பாடல்; இது விநாயகர் வணக்கம் கூறுவது. 'தவளத் தாமரை' என்ற பாடல் நாமகள் வணக்கம் கூறுவது; புறப்பொருள் வெண்பாமாலை முதலிய பிற்கால உரைகளின் தொடக்கத்திலும் காணப்படுவது. மற்றும் இரு பாடல்கள் முறையே மாதொரு பாகனையும் அகத்தியரையும் துதிப்பன.

ஆதியில் தமிழ்நூல் அகத்தியற் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்
போதமெய்ஞ் ஞான நலம்பெறற் பொருட்டே.

சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்
பரமா சாரியன் பதங்கள்
சிரமேற் கொள்ளுதும் திகழ்தரற் பொருட்டே.

இவ்விரண்டையும் சேனாவரையரே செய்தார் என்று அறிஞர் கருதுவர். மாதொரு பாகனைத் துதிப்பவர் சைவர் என்று கொள்வது பொருத்தமாகும்.

சேனாவரையரை இலக்கணக்கொத்து எழுதிய சுவாமி நாததேசிகரும், சிவஞான சுவாமிகளும் நன்கு பாராட்டிச் சொல்வர். 'ஆனா இயல்பிற் சேனாவரையர்' என்பர் தேசிகர். 'வடநூற் கடலை நிலைகண்டறிந்த சேனாவரையர் எழுத்ததி காரத்திற்கு உரை செய்தாராயின் இன்னோரன்ன பொருள

* இந்நான்கு பாடல்களும் தாமோதரம்பிள்ளை பதிப்பில் காணப்படு கின்றன. இராசகோபாலப் பிள்ளை பதிப்பில் இல்லை; இவர் கொடிய வைணவரானமையால், இப்பாடல்களை நீக்கிப் பதிப்பித்தார் என்றே நாம் கருதுகிறோம்.

னைத்தும் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந்து உரைப்பர். அவர் சொல்லதிகாரம் போலப் பெரும் பயன்படாமை கருதி எழுத்ததிகாரத்திற்கு உரை செய்யாதொழிந்தார்' என்று சிவஞான சுவாமி கூறுகிறார்; இவருக்கு முன்னிருந்த சுப்பிரமணிய தீக்கிதர் 14க்கு மேற்பட்ட இடங்களில் சேனாவரையரைக் குறிப்பிடுகிறார். இரண்டிடங்களில் அவருடைய வடமொழிப் புலமையைச் சுட்டி எழுதுகிறார். 'இனி வாக்கிய தீபத்துள்ளும் கையடத்துள்ளும், நிர்வர்த்தியம் விகாரியம் பிராப்பியம் எனக் கூறிய வண்ணம் சேனாவரையர் முதலாயினார் இயற்றப்படுவதும், வேறுபடுக்கப்படுவதும் எய்தப்படுவதும் எனச் செயப்படு பொருளை மூன்றாக்குவர்' (12); 'வாக்கிய தீபம், அரிபீடிகை, ஏலாராசியம் முதலாயின வழங்குங்காலத்து அவ்வுரை நோக்கிச் சேனாவரையர் முதலாயினார் தொல்காப்பியத்துக்கு உரையெழுதினார் என்க'(50). இக்கூற்றுக்கள் சேனாவரையரது வடமொழிப் புலமையையும் பின்வந்தோர் அவரிடத்துக் கொண்டிருந்த பெருமதிப்பையும் புலப்படுத்தும்.

சேனாவரையர் தம் காலத்தில் ஆசிரியத்தொழிலில் ஈடுபட்டிருந்தார் போலும். பொதுவாக உரையாசிரியர் அனைவருமே வினாவெழுப்பி விடைகூறும் முகமாகத் தம் உரை கூறிச் செல்கின்றார்கள் எனினும், இவர் இன்னும் சிறப்பாக ஆசிரியத்தொழில் அனுபவத்தையே நூலெங்கும்' காட்டுகிறார். 'உறுகால்' என்ற தொடரின் பொருளை எப்படி மாணாக்கருக்கு உணர்த்துவது எனக் காட்டுமிடத்து, இவர் கூறும்முறை இன்றைய நேர்முகக் கல்வி முறையை அப்படி எடுத்துச் சொல்லியது போலிருப்பது பெரிதும் வியப்புக்கிடமாகும்: "ஒரு சொற்குப் பொருளுரைப்பது பிறிதோர் சொல்லானன்றே; அச் சொற்பொருளும் அறியாதானை உணர்த்துமாறென்னை: உறுகால் என்புழி, உறுவென்னுஞ் சொற்குப் பொருளாகிய மிகுதியென்பதன் பொருளும் அறியாத மடவோனாயின், அவ்வாறு ஒருபொருட்கிளவி கொணர்ந்துணர்த்தலுறாது கடுங்காலது வலிகண்டாய், ஈண்டு உறுவென்பதற்குப் பொருள் என்று தொடர்மொழி கூறியானும், கடுங்காலுள்வழிக் காட்டியானும், அம்மாணாக்கனுணரும் வாயிலறிந்து உணர்த்தல் வல்லனாயின் அப்பொருள் திரிபுபடாமல் அவனுணரும் ... அவற்றானும் உணர்தலாற்றாதானை உணர்த்துமாறென்னை ... வெளிப்படத் தொடர்மொழி கூறியானும் பொருளைக் காட்டியானும் உணர்த்தவும் உணராதானை உணர்த்தும் வாயிலில்லை."

முதற் சூத்திரவுரையிலேயே மாணாக்கரைக் குறிப்பிடு கின்றார்; 'மாணாக்கர்க்கு உணர்வு பெருகல் வேண்டி வெளிப் படக் கூறாது உய்த்துணர வைத்தல் அவர்க்கு இயல்பாகலான்'. உரை முழுமையும் இவ்வாறே மாணாக்கரை நோக்கி வினாவும் விடையுமாக அமைந்திருப்பது காணத்தகும்.

செயற்கைப் பொருளுக்கு ஆக்கமும் காரணமும் கூறிய விடத்து, இவர் 'எருப்பெய்து இளங்களை கட்டு நீர்கால் யாத்தமையால் பைங்கூழ் நல்லவாயின' என்று பயிர் பற்றிய எடுத்துக்காட்டுத் தருகின்றார். பின்னும் பல இடங்களில் எருது, ஏர் என்பன கூறுகிறார். இதனால் இவர் அரசியல் வாழ்க்கை போக, ஏனைய தனிப்பட்ட வாழ்க்கையில் வேளாளர் குடியின ராயிருந்தார் எனக் கருதமுடியும். வேளாளரே படைத்தலைவ ராயும், அரசியலில் பெருந்தலைவராயும் இருந்த வரலாறுகளை சோழப்பேரரசின் வரலாற்றில் பரக்கக் காணலாம்.

இவ்வாறு இவர் வேளாளரும் படைத்தலைவருமான மரபில் வந்து, செல்வம் நிரம்பப்பெற்று, அதனால் சில தருமங்களும் செய்து, மாணாக்கருக்குக் கல்வி போதித்த ஆசிரியராயுமிருந்து, தம்புலமை மிகுதியால் சொல்லதிகாரத்துக்குச் செப்பம் மிக்க தோர் உரையும் செய்தாரென்பதைக் காண்கிறோம்.

**காலம்**

தொடக்கத்தில் சேனாவரையர் ஆற்றூர்ச் சோமநாத சுவாமிக்கு நிலம் அளித்த செய்தியைக் குறிப்பிட்டோம். அங்கு காட்டிய இரு கல்வெட்டுக்களும் மாறவர்மன் குலசேகர பாண்டி யனது (1268 - 1311) ஆட்சியாண்டு ஏழிலும் பதின்மூன்றிலும் பொறிக்கப் பெற்றவை; அதாவது கி.பி. 1275, 1281 ஆகும். ஆதலால் சேனாவரையர் இக்காலத்தில் வாழ்ந்தவர் என்பது தெளிவு.

மேலும் இவர் அலங்காரங்களைக் குறிப்பிடுகிறார். அடியார்க்கு நல்லார் தண்டியலங்காரத்துக்குப் பிற்பட்டவர்; அணியியல் என்ற ஓர் அணியிலக்கண நூலை அவர் குறிப்பிடுவது உண்மையே. எனினும், இவர் எழுதும்போது 12ஆம் நூற்றாண் டின் முற்பாதியில் தண்டியாசிரியர் செய்த அணியிலக்கண நூலை மனத்துள் கொண்டே எழுதுகிறார் என்று கருதவேண்டும். அன்றியும், 'விரை சொல்லடுக்கே மூன்று வரம்பாகும்' என்ற (424) சூத்திர உரையில், மூன்றடுக்கி வருவதற்கு உதாரணமாக

'தீத்தீத்தீ' என்ற தொடரை எடுத்துக்காட்டுகிறார்; தீத்தீத்தீ என்ற தெலுங்குத் தொடரின் பொருள் விலகு விலகு என்பதாகும். கலிங்கர் தங்கள் மொழியில் இவ்வாறு சொல்வதாகப் பாடல் கூறுகிறது; அருவர் என்பது இன்றும் தெலுங்கர் தமிழரைக் குறிப்பிடும் சொல்லாக இருப்பதும் அறியத்தக்கது. இது குலோத்துங்கசோழன் பெற்ற கலிங்கவெற்றியின் பின் அவ் வெற்றியைச் சிறப்பித்த பல தனிப்பாடல்களில் ஒன்றில் வருவது:

**ஒருவர் ஒருவர் மேல் வீழ்ந்து வடநாடர்**
**அருவர் அருவர் என அஞ்சித் – தெருவந்து**
**தீத்தீத்தீ என்றயர்வர் சென்னி படைவீரர்**
**போர்க் கலிங்க மீதெழுந்த போது.**

கலிங்கப்போர் 1112இல் நடந்ததாகும். இப்பாடலைத் தண்டி யாசிரியர் முதன்முதலில் காட்டுகிறார்; இவர் காலம் இரண்டாம் குலோத்துங்கன் காலமே. எனவே, இதை எடுத்துக்காட்டும் சேனாவரையர் 13ஆம் நூற்றாண்டினர் என்பதும் பொருத்த மாகும். இளம்பூரணர் தொல்காப்பிய உரையுள் ஓரிடத்தில் மூன்றடுக்கி வருவதற்கு உதாரணமாகத் தீத்தீத்தீ என்பதைக் குறிப்பிடுகிறார்; இங்கு தீ (நெருப்பு) என்பதே பொருளாகும். அவர் காலத்தில் கலிங்கப்போர் எழவில்லை; தீ என்பது தெலுங்கு மொழிச் சொல்லாக இலக்கியத்துள் வரவுமில்லை.

அன்றியும், நன்னூலார் இளம்பூரணர் கருத்தைக் கொண் டுள்ளாரேயன்றி இவர் கருத்தை எங்கும் கொள்ளவில்லை. மேலும், சிலவிடங்களில் இவர் காட்டும் உதாரணச் சொற்கள் (202, 229) நன்னூலில் காட்டப்பட்ட சொற்களே. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் - வழுவல கால வகையினானே' என்றுள்ள நன்னூற் சூத்திரக் கருத்தை, இவர் 'கடிசொல் இல்லை காலத்துப் படினே' (452) என்ற சூத்திரத்துக்கு உரை எழுதிய பின், 'புதியன தோன்றினாற்போலப் பழையன கெடு வனவும் உளவெனக் கொள்க என்று எழுதுகிறார். இவை, சேனா வரையர் நன்னூல் செய்த பவணந்தி முனிவருக்குப் பிற்பட்டு வந்து, அந்நூலை ஆராய்ந்திருத்தலும் கூடுமென்று காட்டுகின்றன. பவணந்தி முனிவர் காலம் 13ஆம் நூற்றாண்டின் தொடக்க மாதலால், சேனாவரையர் காலம், சாசனங் கண்டு முன் குறிப் பிட்ட காலமாகிய 1275 - 1281 ஆண்டுகளை உள்ளடக்கிய காலப்பகுதி என்பது வலியுறுகின்றது.

சொல்லதிகார உரை

சேனாவரையர் உரை இருப்புக்கடலை என்று கூறினோர் உளர். இதுபற்றியே போலும் மற்றோர் இருப்புக் கடலையாகிய சிவஞான சுவாமிகளுக்கு இவரிடத்து மிக்க ஈடுபாடு. இவரது நடை எளிய நடையன்று. ஆனால் சுவைத்து எழுதுகின்ற நயம் மிக்க நடை. இவருடைய இருமொழிப் புலமையையும், ஆராய்ச்சித் திறத்தையும், கருத்துத் தெளிவையும் பண்பாட்டையும், உரையுட் பரக்கக் காணலாம்.

இலக்கணப் பகுதிகள் அனைத்தையும் ஒரு பொதுநோக்காகக் கருதியே இவர் சொல்லதிகாரத்துக்கும் அதன் ஒவ்வோரியலுக்கும் உரை எழுதுகிறார். இயல்களைத் தொடர்புபடுத்தி இவர் எழுதும் அவதாரிகைகளாலும் இது விளங்கும்.* இனி, உரையெழுதுங்கால் முன்னோர் கொண்ட சூத்திர அமைப்புக்களைச் சில சேர்த்தும் சில பிரித்தும் தக்க காரணத்தோடு எழுதுவார். சில இடங்களில் இவ்வாறு முன்னோர் கூறினர் என்று இவர் எழுதும் இடங்கள் பல இளம்பூரணர் உரையுள் இருப்பினும், பின்னும் பல அங்கு இல்லை. இதனால் வேறோர் உரையும் இருந்ததோ என்று கருதுமாறு உள்ளது. சூத்திரத்தின் தேவையையும், கட்டுரைச் சுவை, செய்யுளின்பம் ஆகியவற்றையும் ஆங்காங்கு உணர்த்திச் செல்வார்.

தொல்காப்பியரை எங்கும் போற்றியே உரை எழுதுவார்; அவர் வடநூற் கருத்தையும் தழுவியே நூல் செய்தார் என்பது இவர் கருத்து. சில சமயம் இவர் அவர் கருத்திலிருந்து மாறுபடுவது உண்டு; இது காலத்தின் இயல்பேயாகும். மூல ஆசிரியர் நூல் செய்து ஆயிரம் ஆண்டுகள் சென்றல்லவா இவர் உரை எழுதுகிறார்? அத்தகைய இடங்களிலும் இவர் மறுத்தெழுதாது, தழுவியே உரை எழுதுவார். 'எல்லே இரக்கம்'(269) என்ற சூத்திரம் இடையியலில் உள்ளது. எல்லென்ற சொல் உரிச்சொல் என்பது இவர் கருத்து. எனினும் ஆசிரியரைத் தழுவிப் பின்வருமாறு எழுதுகிறார்; "எல்லென்பது உரிச்சொல் நீர்மைத் தாயினும், ஆசிரியர் இடைச்சொல்லாக ஓதினமையின், இடைச் சொல்லென்று கோடும்." ஒடு என்னும் உருபு உயர் பொருளோடு வழங்கவேண்டும் என்று இலக்கணம் கூற, நாயொடு வந்தான்

* இயலுக்கு அவதாரிகையாக இவர் எழுதியுள்ள பகுதி, பதிப்புக்களுள் அங்ஙனம் பதிப்பிக்கப் பெறாமல், இயலின் முதற்சூத்திரத்தின் கீழ்ப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. வேற்றுமை இயல், வேற்றுமை மயங்கியல், உரி இயல், எச்சவியல் என்பன காண்க.

என்ற வழக்கம் இருப்பதைக் காட்டி இதற்கு இலக்கணத்தைப் பொருத்துவதும் அத்தகையதே. அப்படியே சூத்திரங்கள் உரிய இடங்களில் அமையாது வேறிடங்களில் அமைக்கப்பெற்றிருந் தால், காரணத்தை விளக்கிக் காட்டுகிறார்.

தொல்காப்பிய முதல் உரைகாரரான இளம்பூரணருக்கும் இவருக்கும் இருநூறு ஆண்டுக்கால இடையீடு ஏற்பட்டிருந்தது. இக்காலத்தில் தமிழ்நாட்டில் அரசியல் துறை, சமயத்துறை, இலக்கியத் துறை போன்றவற்றில் எத்தனையோ மாறுதல்களும் வளர்ச்சியும் தோன்றின. நூல்களும் உரைகளும் மிகப் பல. இவற்றால் சேனாவரையர் தம் கருத்துக்களைச் செப்பனிட்டுக் கொண்டிருக்கிறார். இதுபற்றி இளம்பூரணர் கருத்தைப் பல சமயம் மறுத்தெழுதவேண்டிய நிலைமை உண்டு. உரையாசிரியர் என்றால் அன்றைய இலக்கிய உலகில் இளம்பூரணரே; இப்பெயர் சொல்லி இவர் மறுக்குமிடங்கள் பல. பெயர் சொல்லாது மறுக்குமிடங்களும் பல. தம்புலமை மிகுதியால் இவர் எவரை யும் வன்மையாகக் கண்டித்ததில்லை; அவர் உரை போலியுரை; அவர்க்கு அது கருத்தன்றென்க; பிறர்மதம் மேற்கொண்டு கூறி னார்; நூலாசிரியர்க்குக் கருத்தன்மையின் உரையாசிரியருக்கும் அது கருத்தன்று - என்பனபோன்ற தொடர்களைக் காண்க.

இவர் தருக்கம் வல்லவர்; அதுபற்றித் தம் உரையைத் தருக்க முறையிலேயே எழுதிக்கொண்டு போவார். இதுபற்றியும், தருக்கம் வல்லவரான சிவஞான சுவாமிகளுக்கு இவரிடம் ஈடுபாடு பின்னும் அதிகம். ஆனால் கடுமையான கண்டனக்கார ராகிய அவர் இவரிடம் கண்டன நயத்தைக் கற்றுக்கொள்ள வில்லை. மறுக்குங்கால், சேனாவரையர் முதலில் பிறர் கருத்தைத் திட்டமாக எடுத்துச்சொல்லி, அதனால் விளையும் பிழையைக் காட்டி, பின்னரே தமது கருத்தை உரைப்பார். சிலசமயம் வேறு பாடங்கள் உள என்பதையும் குறிப்பார். இரண்டு உரைகளைச் சில இடங்களில் கூறுகிறார்.

இலக்கண நூலுக்கு உரை எழுதுகின்ற இவர், பல இடங் களில் தாம் மேற்கோள் காட்டுகின்ற இலக்கியப் பகுதிகளிலுள்ள பொருத்தமான இலக்கணப் பகுதியையும் நன்கு விளக்கி எழுது கிறார். ‘ஊன்சுவை கறிசோறு உண்டு வருந்து தொழில் அல்லது’ என்ற புறப்பாட்டைச் சுட்டி, ‘உண்டென்பது ஒன்றற்கே உரிய வினையாதலின் வழுவாம் பிறவெனின், உண்டல் என்பது உண்பன தின்பன எனப் பிரித்துக்கூறும் வழிச் சிறப்பு வினை

யாம்; பசிப்பிணி தீர நுகரப்படும் பொருளெல்லாம் உணவு எனப் படுமாதலின், பொதுவினையுமாம்; அதனான் அது வழுவன் றென்பது. கறியொழித்து ஏனையவற்றிற்கெல்லாம் உண்டற் றொழில் உரித்தாகலின் பன்மை பற்றிக் கூறினார் எனினும் அமை யும்' என்ற விளக்கம் காண்க. இவ்வாறு இவரால் விளக்கம் கூறப் பட்ட நூல்கள் குறள், குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம் என்பனவும், பல தனிப் பாடல்களுமாகும்.

பொருளதிகாரப் பகுதிகளான செய்யுளும் உவமமும் தம்முள் யாப்பிலக்கணத்தையும் அணியிலக்கணத்தையும் அடக்கியுள்ளன என்பது உண்மை; அவர் காலத்தில் இவ்விரு இலக்கணங்களும் தனிப்பகுதிகளாக வழங்கவில்லை. பேரா சிரியர் இக்கொள்கையுடையவர்; அவரது தொல்காப்பிய உரை வரலாற்றில் இதைக் குறிப்பிட்டோம். ஆனால் அவருக்குச் சுமார் அரை நூற்றாண்டு பிற்பட்டு வந்த சேனாவரையர் அணி என்றதொரு தனியிலக்கணத்தை உடன்பட்டே எழுதுகிறார். 'பிறிதோரலங்காரம் என்பர்' என்றும், 'அணியிலக்கணம் கூறுவார் இன்னோரன்னவற்றைப் பிறிதுமொழிதல் என்பதோர் அணி என்ப' என்றும் எழுதுகிறார்.

சகர முதன்மொழி தொல்காப்பியத்தில் இல்லை. ஆதலின் இவர், சம்பு சள்ளை சட்டி சமழ்ப்பு என்பன பிற்காலத்துத் தோன் றிய சொல்லேயாம் என்று காட்டுகிறார். அடுத்த நூற்றாண்டில் மயிலைநாதர் இவற்றைப் பின்னும் பெருக்கிச் சொல்கிறார்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் மக்களின் நாகரிகத் தையும், வாழ்க்கை முறைகளையும் நோக்கங்களையும் ஆராய் கின்றவருக்கு, சேனாவரையரும் பேராசிரியர் போல, அளவில் லாத செய்திகளை உணர்த்துபவராவார்.

இவர் பண்டை இலக்கியச் செய்திகள் பல குறிப்பிடுகிறார். அகத்தியர் முனிவர். அவர் தமிழ் உரைத்தார். அவர் மாணாக்கர் பன்னிருவர். தெய்வப்புலவன் திருவள்ளுவன். சாத்தனார் சீத்தலையுடையவர். கபிலராற் செய்யப்பட்டது கபிலம். கபில பரண நக்கீரர். மாமூல பெருந்தலைச் சாத்தர். ஆசிரியர் பேரூர் கிழான் செயிற்றியன் எனஇவர் கூறுவது, செயிற்றியம் செய்த ஆசிரியரான செயிற்றியனார் பேரூரினர் என்று தெரிவிக்கிறது.

சாத்தன் கையெழுதுமாறு வல்லன் என்ற தொடரை இவர் கூறுகிறார். இதே நூற்றாண்டில், நஞ்சீயர் கையெழுத்து அழகாய் எழுதுவதற்கு ஒரு மாணாக்கனைத் தேடினார் என்றும்

வைணவ வரலாறு கூறுகிறது. இந்தக் காலத்தில் புலவர்கள் திருத்தமான கையெழுத்தை விரும்பிய ஒரு மரபு தெரிகிறது.

விடுகதையாக ஒரு வெண்பா கூறுகிறார்; இவருடைய உரைச்செய்யுள் போலும்:

> எழுதுவரிக் கோலத்தார் ஈவார்க் குரியார்
> தொழுதிமைக் கண்ணணைந்த தோட்டார் – முழுதலகா
> நாணிற் செறிந்தார் நலங்கிள்ளி நாடோறும்
> பேணற் கமைந்தார் பெரிது.

புத்தகம் என்ற அஃறிணைப் பொருள் உயர்திணையாகத் திரிந்து வந்தமைக்கு இது உதாரணம்.

இவர் உரையுள் பத்துப்பாட்டு முழுமையும் மேற்கோளாக வருகின்றது. எட்டுத்தொகையுள் பரிபாடலைப் பெயர் குறிப்பிடுகிறார். மற்ற ஏழையும் எடுத்தாள்கிறார். கீழ்க்கணக்குக்கு வரும்போது குறள், நாலடி, களவழி, ஆசாரக்கோவை, ஐந்திணை எழுபது என்ற ஐந்தையும் இவர் சொல்லக் காண் கிறோம். இவற்றுள் குறளும் களவழியும் காலத்தால் முந்தியவை; மற்றவை பிந்தியவை. ஓரளவு இவர் பண்டைய நூல்கள் மட்டும் குறிப்பிடுவதை இதனால் நாம் அறியலாம். ஐம்பெருங் காப்பியங் களுள் சிலப்பதிகாரம் ஒன்று மட்டுமே இங்கு வந்துள்ளது. இறந்துபோன பண்டைய நூல்களுள் இவர் உரையில் பயில்வன இந்திரகாளியமும், காக்கை பாடினியமும், 'ஏவலிளையர்' என்ற பழைய மேற்கோள் பாடலைக்கொண்ட தமிழ்நெறி விளக்கமும் ஆகிய இலக்கண நூல்கள்.

**பதிப்பு:**

கோமளபுரம் இராசகோபால பிள்ளை 1868. ஆறுமுக நாவலர் சோதித்த தாமோதரம் பிள்ளை பதிப்பு 1886. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1923. யாழ்ப்பாணம் சி. கணேசையர் 1938. திருப்பனந்தாள் கு. சுந்தரமூர்த்தி 1966; இப்பதிப்பு விரிவான ஆராய்ச்சி முன்னுரை, சொல்லதிகார விளக்கக் கட்டுரை, விளக்கவுரை ஆகியன (184 பக்கம்) கொண்டுள்ளது.

## இராசபவித்திரப் பல்லவதரையர்

தமிழில் தொல்காப்பியத்தின் பின் அவிநயம் என்ற ஓர் இலக்கண நூல் செய்யப்பெற்றிருந்தது. யாப்பருங்கலம்,

யாப்பருங்கலக் காரிகை, வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், நவநீதப் பாட்டியல் ஆகிய இலக்கணங்களின் உரைகளும், தக்க யாகப் பரணியுரையும், பன்னிரு பாட்டியலும் இதைக் குறிப்பிடு கின்றன. உரைகளில் சுமார் நூறு சூத்திரங்கள் பயின்றுள்ளன. நூற்பெயர் அல்லது நூற்பகுதிகளின் பெயர் அவிநயனார் யாப்பு, அவிநயனார் கலாவியல் என்றும் வழங்கிற்றுப் போலும்.

நன்னூல் உரைசெய்த மயிலைநாதர் (14ஆம் நூ.) பத்து இடங்களில் அவிநயனாரைக் குறிப்பிடுகிறார். தொல்காப்பியர், அதற்குரைசெய்த இளம்பூரணர் இருவரையும் குறிப்பிடுவது போலவே, அவர் அவிநய நூலையும் அதன் உரையாசிரியரையும் குறிப்பிடுகிறார். 359ஆம் சூத்திரவுரையில் சொல்லெச்சம் ஒன்பது, குறிப்பெச்சம் ஒன்று ஆகப் பத்தென்று கணக்கிட்டு, இவற்றுக்கு வரலாறு (எடுத்துக்காட்டு) கூறுமுகத்தால் குறள், நாலடி, புறப் பொருள் வெண்பாமாலைப் பாடல்களைத் தந்து, பின்வரு மாறு கட்டுரை சுவைபட எழுதுகிறார்: “இப்பத்தெச்சமும்,

**புவிபுகழ் புலமை அவிநய நூலுள்**
**தண்டலங் கிழவன் தகைபெறு நேமி**
**எண்திசை நிறைபெயர் இராச பவித்திரப்**
**பல்லவ தரையன் பகர்ச்சி என்றறிக.**

இவ்வாறு இவர் எழுதியதனாலேயே, அவிநய நூலுக்கு உரை செய்தார் இராசபவித்திரப் பல்லவதரையர் என்பார் என்றும், இவர் தண்டலம் என்ற ஊருக்குரியவராக வாழ்ந்தார் என்றும் அறிகிறோம். அவிநயம் என்ற நூலும் இறந்தது, அதன் உரையும் மறைந்தது. உரையாசிரியர் குறித்து வேறு எச்செய்தியும் தெரிய வில்லை.

ஆயினும், மயிலைநாதர் உரைக் குறிப்புக்களால் அவி நயவுரை இளம்பூரணருரைக்குப் பின் தோன்றியதெனக் கருத இடம் உண்டு. இளம்பூரணர் காலம் 11ஆம் நூற்றாண்டு; மயிலைநாதர் காலம் 14ஆம் நூற்றாண்டு; எனவே அவிநய உரை காரரான பல்லவதரையர் காலம் 13ஆம் நூற்றாண்டு என நாம் கருதலாம். இவ்வுரைகாரரை மயிலைநாதர் மிகவும் போற்றிக் கூறுவதை அவ்வுரையுட் காணலாம்; அவர் உரையால் இவர் மிகவும் நெருங்கிய காலத்தில் இருந்திருக்க வேண்டுமென்று தோற்றுகிறது. ஆகவே இந்த நூற்றாண்டு என்று குறிப்பிட்டோம்.

ooo

அத்தியாயம் 6

# புராண இலக்கியம்

## முன்னுரை

புராணம் என்பது பழங்கதை.* இவ்வாறு பழங்கதையை உயர்த்துச் சொல்லி அதைச் சமயத்துறையில் மதிக்க வேண்டிய ஒரு பெருங்காவிய சரித்திரமாக ஆக்கினோர் சைனர் என்று கருதவேண்டியிருக்கிறது. இவர்கள் ஆதியில் அன்னிய நாட்டிலிருந்து வந்தவர்களாதலாலும், தமிழுக்குப் புறம்பான ஒரு சமயத்தையும் நாகரிகத்தையும் தமிழ்நாட்டில் புகுத்த முற்பட்டவர்களாதலாலும், இவ்வாறு இவர்கள் தங்களுக்கென்று பழம் பெருமையும் சரித்திரப் பழமையும் தேடிக் குறிப்பிடும் முயற்சி மேற்கொண்டது இயற்கையே. சீவக சிந்தாமணியே ஒரு புராணம் என்பது நினைவு கூர்த்தக்கது. புராணம் என்ற பெயரோடு நாம் அறிவன, புராண சாகரமும் சாந்தி புராணமும் ஆகும். புராண சாகரம் வெண்பாவினால் ஆனது, காலம் 10ஆம் நூற்றாண்டு என்று யாப்பருங்கல விருத்தியால் அறிகிறோம். சாந்தி புராணமும், சாந்திநாதர் என்ற பதினாறாவது சைன தீர்த்தங்கரர் வரலாற்றைக் கூறும் ஒரு விரிந்த புராணம் போலும்; இதன் பாடல்கள் சில புறத்திரட்டுள் தொகுக்கப்பெற்றுள்ளன; இதன் காலமும் பத்தாம் நூற்றாண்டாகலாம். இவ்விரு நூல்களும் இன்று இல்லை.

புராண கவிஞராற் பாடப்பட்ட இலக்கியங்கள் என்று குணசாகரர் யாப்பருங்கலக் காரிகையுரையில் எழுதுகிறார். இவர் காலம் 1025-50 ஆகலாம். ஆகவே, இவருக்குமுன் கவிஞர் புராணம் பாடியிருந்தார்கள். சைவ வைணவப் புராணங்கள்

* புராண சிந்தாமணி - திருவிசைப்பா, 50.

இக்காலத்துக்கு முன் இல்லை. சைனப் புராணங்களான புராண சாகரம் சாந்திபுராணம் (ஒருகால் நாரத சரிதை) என்பவற்றைக் கருதியே இவர் இவ்வாறு கூறினார் போலும்.

அப்பர் பதிகங்களுள் ஒரு குறுந்தொகைப் பதிகம் இலிங்க புராணம் என்றும், மற்றொன்று பழம் பஞ்சுரப் பண்ணில் தச புராணம் என்றும் பெயர் அமைந்திருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது. இலிங்க புராணக் குறுந்தொகை, அடிமுடி தேடிய வரலாற்றைப் பதினொரு பாடல்களிலும் கூறுகிறது; தசபுராணம் வெவ்வேறான பதினொரு பராக்கிரமச் செயல்களைக் கூறுகிறது.

இவற்றை விட்டுத் தனிப் புராணங்களைச் சைவமரபில் பார்க்கும்போது, புராணம் என்பது மூன்று வகையாக இருப்பதைக் காண்கிறோம். ஒன்று, தெய்வத்தின் பராக்கிரமத்தைப் பொதுவாக ஒரு தலச்சார்பின்றிப் புனைந்து கூறும் நூல்; இது புராணம் என்றபெயர் பெறாவிட்டாலும் சில சமயம் வடமொழி நூற்பகுதியை மொழிபெயர்த்த காரணத்தால் அப்படியே பகுதி (காண்டம்) என்று சொல்லப்பெற்றும் இருக்கும். இவ்வகைக்கு உதாரணம்: மச்சபுராணம், கூர்ம புராணம்; சிவ மகா புராணம், கந்தபுராணம்; உபதேச காண்டம், பிரமோத்தர காண்டம், காசி கண்டம். இவையாவும் சைவ இதிகாசம் என்ற பெயரும் பெறும். இரண்டாவது வகை, சிவபெருமான் புகழை ஒரு தலத்தைச் சார்ந்து சொல்வது; தலத்தின் பெருமையையும் தீர்த்த மூர்த்தி பெருமையையும் அம்மூர்த்தியின் அரும்செயல்களையும் காவிய நயம்படச் சொல்வது; இது தலபுராணம் எனப்படும். தலபுராணங்களில் மிக்க சிறப்புடையவை மதுரைத் திருவிளையாடற் புராணம், காஞ்சிப்புராணம் என்பன. மூன்றாவது வகை, பெரியார் வரலாற்றைச் சிறப்பித்துக் கூறுவன:

சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணம், சேக்கிழார் புராணம், திருவாதவூரடிகள் புராணம் போன்றன.

தமிழிலுள்ள அரிச்சந்திர புராணம் (16 நூ.) ஒரு புராணமன்று; அரிச்சந்திரன் கதை கூறுகின்ற ஓர் உபாக்கியானம் (வடமொழி; கிளைக்கதை). இந்நூலின் முதற்பதிப்பு அரிச்சந்திர சரித்திரம் என்றே அச்சாகியுள்ளது.

சைனப் புராணங்களைத் தொடக்கத்தில் குறிப்பிட்டோம். 15ஆம் நூற்றாண்டில் உரைநடையாகவும் மணிப்பிரவாள மாகவும் சைனருடைய ஸ்ரீபுராணம் எழுந்தது. வைணவத்தில் ஆழ்வார் ஆசாரியர் வரலாற்றைக் கூறுகின்ற மணிப்பிரவாள உரைநடை நூலாகிய குருபரம்பரை ஆறாயிரப்படி (13ஆம் நூற்றாண்டு) மூன்றாவது வகைக்குரிய ஓர் உரைநடைப் புராணமேயாகும். இதை வைணவ இலக்கியம் என்ற அத்தி யாயத்தில் விவரிப்போம்.

சைவமரபில், உரைநடைப் புராணமோ மணிப்பிரவாளப் புராணமோ எழவில்லை. சிவ மகாபுராணம் என்பது 19ஆம் நூற்றாண்டில் எழுந்த உரைநடை மொழிபெயர்ப்பு நூலாகும்.

பூதபுராணம் மாபுராணம் என்ற இரண்டும் இடைச் சங்கத்து நூல்களென்று, சிலப்பதிகார ஏட்டில் கண்ட ஒரு பாடலால் தெரிகிறது. ஆனால் இவை இலக்கண நூல்கள்.

இனி, இச்சைவ புராணங்களுள் நாம் கருதும் 13ஆம் நூற் றாண்டுக் காலத்துக்கு முன் இருந்தவை யாவை என்று ஆராயும் போது, சில நூல்கள் தெரிய வருகின்றன. முதற்குலோத்துங்க சோழன் காலத்தில் வீரைத்தலைவன் பரசமய கோளரி என்பவன் இருந்து செய்த நூல்களுள் திருப்பாதிரிப்புலியூர்த் தல புரா ணங்கள் இரண்டு: அட்டாதச புராணம் கன்னிவன புராணம் என்பன. இவை சாசன வாயிலாக அறிகிறோமேயன்றி, நூல்கள் கிடைக்கவில்லை. இவற்றின் காலம் 12ஆம் நூற்றாண்டின் தொடக்கம். அதே நூற்றாண்டின் இடைப்பகுதியில் சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடினார். இவைகளே இப்போது புராணம் என்ற பெயரில் நாம் அறிவன. சேக்கிழார் நூல் சைவத் திருமுறைகளில் பன்னிரண்டாவதாக உடன் காலத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடல் என்பது மதுரைத் தலபுராணமாகும். தலபுராணமாக இன்று நமக்குக் கிடைக்கும் முதல்நூல் இதுவே. இது நாம் கருதும் நூற்றாண்டுக் குரியது. இதன் பின்னால் தலபுராணங்கள் மிகப்பல எழுந்தன. 14-15 நூற்றாண்டுகளில் இல்லாவிட்டாலும், 16 முதல் இவை நூற்றுக்கணக்கில் எழுந்துள்ளன.

## பெரும்பற்றப் புலியூர் நம்பி

இவர் செய்தநூல் பழைய திருவிளையாடல் என்று வழங்குகிற திருவாலவாயுடையார் திருவிளையாடல்; இவர் பெயரால் நம்பி திருவிளையாடல் எனவும் இதுவழங்கும்; மதுரைப் புராணம் என்றும் ஆசிரியர் இதைக் குறிப்பிடுகிறார் (பாடல் 1752.) பிற்காலத்தில் (17ஆம் நூற்றாண்டின் இறுதி) பரஞ்சோதி முனிவர் செய்த திருவிளையாடற் புராணம், தனது பத்தி விசேடத்தாலும், இலக்கியச் சுவையாலும், சமயக்கருத் துக்களின் நுட்பத்தாலும், தோன்றிய நாள்தொட்டே தமிழ் நாடெங்கும் மிக்க பிரசித்தி பெற்றுவிட்டது. திருவிளையாடற் புராணம் என்று சொன்னால், பரஞ்சோதி திருவிளையாடற் என்பதே பொருள். இதனின்றும் வேறுபிரித்துக் காட்டுவதற் காகவே நம்பி திருவிளையாடல் என்று அடைகொடுத்துப் பழைய திருவிளையாடற் புராணத்தைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. இரண்டுக்கும் கால இடையீடு சுமார் நானூறு ஆண்டுகளாகும்.

### வரலாறு

நம்பி திருவிளையாடல் ஐயரவர்களால் இருமுறை பதிப் பிக்கப்பட்டுள்ளது (1906, 1927). அவர்கள் தரும் குறிப்புக்களே இங்குள்ள செய்திகளுக்கு ஆதாரம்.

இவரது இயற்பெயர் பெரும்பற்றப் புலியூர் நம்பியேயாகும். பெரும்பற்றப் புலியூர் என்பது சிதம்பரம். இவர் முன்னோர் ஒருவர் ஆனந்தத் தாண்டவ நம்பி என்றுபெயர் பெற்றிருந்தார்; தில்லையில் பெருமானுடைய நடனம் ஆனந்தத் தாண்டவம் எனப்படும். திருவிளையாடலுள் பெரும்பற்றப் புலியூருக்கென்றே இவர் தனியானதுதி அமைத்திருக்கிறார். தில்லைநம்பி, ஆண் டான் என்பன இவருக்கு வேறுபெயர்கள். அனேகருடைய இயற் பெயரின் பின் நம்பி என்றபெயர் சார்ந்து வழங்கப் பெற்றது என்பதை நம்பியாண்டார் நம்பி, நாற்கவிராச நம்பி முதலிய நூலாசிரியர் பெயராலும் அறியலாம்.

இவரது ஊர் செல்லி நகராயினும், இவர் வேம்பத்தூர்க் கவுணிய கோத்திரம் சோழியப் பிராமண வகுப்பினராவார். வேம்பத்தூரர் பலர் தமிழில் பலநூல்கள் செய்து புகழ்படைத் தவர்கள். இவரது புராணம் வேம்பத்தூரார் திருவிளையாடல்

*என்று வழங்குவதும் உண்டு. இவ்வூரில் குலசேகர பாண்டியன் பிராமணரைக் குடியேற்றினான் என்பது வரலாறு. செல்விநகர் இக்காலத்துப் பனையூர் என வழங்குகிறது என்பது ஐயரவர்கள் குறிப்பு. நூல் இறுதியில் இருபாடல்கள் ஆசிரியர் பெயரும், நூல் இயற்றிய இடமும் குறிப்பிடுகின்றன:*

அம்பதுமத் தார்ச்செல்லி யாண்டான் கவுணியர் கோன்
நம்பெரும்பற் றப்புலியூர் நம்பிவியந்து – எம்பெருமான்
ஆதிவிளை யாடல் அறுபத்து நான்கினையும்
ஓதி முடித்தான் உவந்து.

கார்வளங்கொள் மண்டலத்துக் கப்பிஞ்சி நாட்டுரைத்தோன்
சார்பரசு ராமச் சதுர்வேதி மங்கலமாம்
சீர்தகுதென் செல்லிநக ராண்டான் சொற்றில்லை நம்பி
யார்புனைவான் விளையாடல் அறுபத்து நான்கன்றே.

*இவற்றால், இவர் கவுணிய கோத்திரம் என்றும், கார் வளங் கொள் கப்பிஞ்சி நாட்டில் இப்புராணம் செய்தார் என்றும் அறிகிறோம். இப்பகுதி மதுரைக்குக் கிழக்கேயுள்ள நாடென்று சொல்வர்; கப்பிஞ்சி நாடு என்பது திருச்சிராப்பள்ளி மருங்கா புரிச் சமீனின் பகுதி என்றும், இது முற்குறித்த பாண்டியன் சாசனம் அமைந்துள்ள திருப்பத்தூருக்கு அருகில் உள்ளதென்றும் மு. இராகவையங்கார் குறிப்பிட்டிருக்கிறார். குலசேகரன் என்ற பாண்டியன் இவரைக்கொண்டு இந்நூல் செய்வித்தான்; அரங் கேறியபோது பல விருதுகளை அளித்தான்; சிறப்பினால் மகிழ்ச்சி யடைந்த நம்பி, பின்வரும் வெண்பாப் பாடினார்:*

பல்லக்கு மேலேறிப் புல்லக்கு மேலிட்டோம்
பல்லக் கணிசொக்கைப் பாடினோம் – பல்லக்கு
மன்னும் குறையுண்டு மண்மதிக்கும் விண்மதிக்கும்
என்ன குறையுண்டு எமக்கு.

*இவர் வாழ்ந்த செல்லி நகரையும் அதையுள்ளடக்கிய செல்லி நாட்டையும் அரசன் இவருக்கு முற்றூட்டாக அளித் தான்; பின்னர் இவர் பரம்பரையினர் செல்வராக விளங்கினர் என்பன வரலாறுகள்.*

*பாயிரப்பகுதிகள் 23ஆம் பாடல் நம்பியினுடைய ஆசிரி யரைக் குறிப்பிடுகின்றது:*

வரந்தருந் தொல்லைத் தில்லை மாளிகை மடத்து மன்னும்
அருந்தவ முனிவெண் காட னருள்விநா யகன்ம னத்தாற்
பரிந்தெனை யாண்டு கொண்ட படர்சடைக் கடவுள் நீதி
திருந்திய பரமஞான சிவனடி சென்னி சேர்ப்பாம்.

சிதம்பரத்தில் மாளிகை மடம் என்ற மடத்தில் இருந்த வெண்காட முனிவருடைய சீடரான விநாயக முனிவர் இவருக்கு ஞானாசாரியார் என்று அறிகிறோம். இவர்கள் வரலாறு ஒன்றும் புலப்பட்டிலது. திருவிசைப்பாவில் முதல்நான்கு பதிகங்களையும் தில்லை நடராசப்பெருமான் துதியாகப் பாடியவர் திருமாளிகைத்தேவர். இவர் ஒருகால் தில்லையில் வாழ்ந்து ஒரு மடமும் அமைத்திருக்கலாம். விளக்கம் கிடைக்கவில்லை.*

இவ்வாசிரியர் மிகச் சிறந்த பக்திமான் என்று நன்கு தெரிகிறது. சந்தர்ப்பம் நேர்ந்தபோதெல்லாம் துதிப் பாடல்களை ஏராளமாக அமைத்திருக்கிறார். பிற்காலத்தில் பிரசித்தமான திருவிளையாடற்புராணம் பாடிய பரஞ்சோதி முனிவரை இவருடைய வாக்கு பெரிதும் பக்குவப்படுத்தியிருக்கிறது என்று சொல்லத் தடையில்லை. இவர் முதல் திருவிளையாடலின் முடிவில் ஒரு பாடலில் தம் நூலுக்குரிய வடமொழி மூலத்தைக் குறிப்பிடுகிறார். 'ஓதரிய உத்தரமா புராணந்தன்னுள் உண்மை தரு சாரசமுச்சயத்து முன்னம், மேதகுநன் கதை' (35); சாரசமுச்சயம் என்பது அப் புராணத்தின் ஒரு பகுதி. அப்புராணம் இப்பொழுது கிடைக்கவில்லை. இவருடைய நூலே நெடுங் காலம் வரையில் மதுரைத் தலவரலாறு அறிவதற்கான புராணமாக இருந்தது. பல ஆசிரியர்கள் இதைப் பார்த்தே நூல் செய்தார்கள். திருவிளையாடற் பயகரமாலை, கடம்பவன புராணம், திருவுசாத்தான நான்மணிமாலை போன்றவற்றின் பகுதிகளால் இது விளங்கும். 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருப்போரூர் - சிதம்பர சுவாமிகள் கொலைமறுத்தல் (7, 19) உரையில் இதன் பாடல்களை எடுத்துக்காட்டுகிறார். அன்றியும், இதனுள் 18 பாடல்களுக்கு மேலாகப் பல ஏட்டுப் பிரதிகளில் காணப்படவில்லை எனினும், இவை 'வெள்ளி பாடல்' என்று ஓர் ஏட்டுப்பிரதியில் குறிக்கப்பட்டிருந்தன வென்றும் ஐயரவர்கள்

* இம்மடம் 17ஆம் நூற்றாண்டிலும் இருந்தது. இதன் தலைவராயிருந்த மாளிகைத்தேவரை அகோரமுனிவர் தாம்செய்த குடந்தைப் புராணம் கானப்பேர்ப் புராணம் வேதாரணிய புராணம் ஆகிய மூன்றிலும் துதித்திருக்கிறார்.

குறிப்பிட்டிருக்கிறார்கள். இவற்றால் நாம் அறிவது, இந்நூல் கற்றோரால் ஓரளவு பயிலப்பட்டு வந்தது என்பதும், அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் முறையாகக் கதைசொல்லி வரும் சம்பிரதாயம் இருந்ததென்பதும், வெள்ளியம்பலவாணத் தம்பிரான் பெயரால் இதனுள் பாடல்கள் இடைமடுக்கப்பட்டிருந்தன என்பதுமாகும்.

### நம்பி திருவிளையாடல்

இவர் பாடிய திருவிளையாடல் 1753 விருத்தம் உடையது. பாயிரம், கடவுள் வாழ்த்து, அவையடக்கம், பதிகம், நூல் வரலாறு, திருநகரச் சிறப்பு, நூற்பயன் என்ற பகுதிகளின் பின் 64 திருவிளையாடல்களும் சொல்லப்படுகின்றன. நூலிறுதியில் மிகைப் பாடல்களும் உள்ளன. நம்பிக்குச் சந்தம் பாடுவதில் விருப்பு அதிகம். சந்தப் பாடல்கள் யாவும் இனிய ஓசையுடையன. கடவுள் வாழ்த்துப் பகுதியில் பல பாடல்கள், மிகவும் நயமாக, துதிக்கப்பெறும் தலம் அல்லது மூர்த்தி பெயரின் சந்தத்திலேயே அமைக்கப்பெற்றிருப்பது மிக்க அழகுடையது:

**திருச்சிற்றம்பலம்:**

பொருப்பைப் பண்பொடுங் குனித்துச் சண்டவெம்
    புரத்தைப் பொன்றமுன் சிரித்துக் கண்டவன்
கரப்பொற் குன்றடுந் திறத்துச் சிங்கமென்
    கருத்துட் டங்குமஞ் செழுத்துச் சம்புவண்
தரக்குக் கொண்பதஞ் சலிக்குத் தென்றலந்
    தழைப்பத் தொந்தொமென் றிசைத்துச் சந்ததம்
திருத்தச் செம்பதம் புரிப்பித் தன்புறும்
    திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம்.

**திருவம்பலம்:**

அருளுந்தொகும் பொருளுந்திருந்
    தழகுந்தொகுங் குலமுந் தரும்
பரிவொன்றுசந் ததியும்புகும்
    பழியஞ்சுமொண் பொடியும்பொருந்
துருவுந்திறம் பிறவுந்துளங்
    கொளியும்பிறங் கறிவுஞ்செழுந்
திருவும்பெரும் புகழுந்தருந்
    திருவம்பலம் திருவம்பலம்.

பொன்னம்பலம்:

முன்னங்கருங் கண்ணன்கிடந்
 திம்மண்குடைந் துண்ணைந்துறும்
தன்னண்டமென் றன்னம்பறந்
 தின்னம்பெருங் கின்னம்படும்
பன்னும்பழஞ் சொன்மந்திரம்
 பன்னுங்களென் றுன்னும்பதம்
பொன்னஞ்சிலம் பின்னந்தரும்
 பொன்னம்பலம் பொன்னம்பலம்.

இப்படியே துதிப்பாடல்களை நிரம்பச் சொல்வதில் இவருக்கு ஒரு தனியான ஆர்வம். பாயிரப் பகுதியில் பாண்டி நாட்டுக்கே வணக்கம் கூறுகிறார். பின் மதுரைக்கு இருமுறை, மதுரைத் திருச்சிற்றம்பலம், மதுரையின் பெயர்களான மதுரை கூடல் ஆலவாய், பெரும்பற்றப் புலியூர் என இடங்களுக்கே வணக்கத் தைத் தம் ஈடுபாட்டு மிகுதியால் பாடுகிறார். அப்படியே பின்னரும் ஓரிடத்தில் மதுரை கூடல் ஆலவாய் என்று ஒவ்வொன்றையும் சில படலங்களின் இறுதியில் துதிப் பாடல்களில் அமைத்திருக் கிறார் (5, 7, 32, 49, 56). நடுவில் சில இடங்களில் பாத்திரங் களின் கூற்றாக (36, 37) சிவ சின்னங்கள் மூன்றையும் இவர் முறையே போற்றியுரைத்திருப்பது மிக்க சிறப்பாயுள்ளது:

பவங்கள் நீக்கும், வெம் பாதகம் ஆற்றும், நல்
தவங்கள் நல்கும், தலைமை தரும், தொழுஞ்
சிவந்த தாள்நிழல் சேர்த்திடும், – காத்திரத்து
உவந்து பூணின் உருத்திர சாதனம்.

நினைவினை முடிக்கும், தூய்மை ஆக்கும், வெம் பாவம்நீக்கும்,
மனவிடர் விடம்பேய் தெவ்வு மறலி வாராமற் காக்கும்,
புனையறம் இன்பம் வீடு பொருள் முதல் எவையும் நல்கும் –
வினைகடி நால்வே தத்து மிக்கமந் திரவெண் ணீறு.

குலந்தரும், நீதி மிக்க குணந்தரும், வேதம் சொல்லும்
பலந்தரும், உயர்ந்த சாயுச் சியந்தரும், பழுது இலாத
தலந்தரும், எல்லாம் வல்ல சயந்தரும், நிறைந்த செல்வ
நலந்தரும், பெருமை குன்றா நயந்தரும் – நமச்சிவாய.

சம்பந்தர், மூர்த்தியார் துதிகளையும் அவ்வப் படல இறுதி யில் (37, 51) கூறுகிறார். ஒரே பாடலில் இவர் நால்வருக்கும் துதியாக அமைத்திருப்பது சுவையுடையது:

படிபுகழ் சண்பை வேந்தர் மலரடி போற்றி; பத்தி
வடிவுடை இயல்தேர் நாவுக் கரசடி போற்றி; மாலை
முடிகொள் சுந்தரர்தாள் போற்றி; மூதுரை வாத வூரர்
அடியிணை போற்றி; மற்றோங்கு அடியவர் அடிகள் போற்றி.

*இவரே முதன்முதல் கதைகளைக் கண்டறிந்து தொகுக்கிறார். முன்னூல் இல்லை. சம்பந்தர், மாணிக்கவாசகர், தருமி, நக்கீரர் கதைகள், பாணபத்திரர் வரலாறு போன்றவை. புராணத்தில் வரும் கதைகளை ஒட்டிச் சில இலக்கியச் செய்திகளையும் கூறுகிறார்: பொருளதிகாரம் பிறங்கிற்று இறையனார் பொருள் எனவே (15: 19). சோமசுந்தரக் கடவுள் சங்கப் புலவராயிருந்த போது கொண்ட நாமம் பேராலவாயார் என்பது (15, 19, 18: 8). சங்கப் புலவருள் ஒருவராயிருந்த இறையனார் தருமிக்குப் பாடிக்கொடுத்த கொங்குதேர் வாழ்க்கை என்ற பாடல் குறுந்தொகையில் சேர்க்கப்பட்டுள்ளது. இறையனார் அன்றி, மதுரைப் பேராலவாயார் என்ற பெயரோடு சங்கப்புலவர் ஒருவர் இருந்திருக்கிறார் என்பது இங்கு அறியத்தக்கது. இவர் அகநானூற்றில் 2, நற்றிணையில் 2, புற நானூற்றில் 2 பாடல்கள் பாடியிருக்கிறார். 'அங்கங் குலுங்க அரிவாளின் நெய்தடவி', 'சங்கறுப்ப தெங்கள் குலம்' என்று முறையே இறையனார் பெயராலும் நக்கீரர் பெயராலும் வழங்கும் பாடல்கள் (16: 22); இடைக்காடர் - 'எனையந்தாதி சொன்னவன் கபிலன் தோழன்' (20: 11); இங்கு குறிப்பிட்டது கபிலதேவ நாயனார் பாடிய சிவபெருமான் திருவந்தாதி (பதினொராந் திருமுறை); கபிலர் பிறந்த ஊர் வாதவூர்:*

நீதிமா மதூக நீழல் நெட்டிலை இருப்பை என்றோர்
காதல்கூர் பனுவல் பாடும் கபிலனார் பிறந்த மூதூர்
சோதிசேர் வகுள நீழல் சிலம்பொலி துலங்கக் காட்டும்
வேதநா யகனார் வாழும் வியன்திரு வாத வூரால். **(27:3)**

*மாணிக்கவாசகர் திருக்கோவை பாடியதை வேறுவிதமாகச் சொல்கிறார்:*

உத்தர கோச மங்கை கழுக்குன்றாங்கு உருவம் கண்டு
சித்திரக் கோவை பாடித் தில்லையம் பலத்து வாவென்று
அத்தன்வா னத்து உரைப்பப் போந்துஅருந்தமிழ்கள் பாடி.

நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடிய கதையையும் அதில் 'குன்றம் எறிந்தாய்' என்ற பாடலையும், அவர் பாடிய அந்தாதியையும், இந்நூல் குறிப்பிடுகிறது. இவை பிற்காலத்து இடைச் செருகல் போலும்.

இவரே முதன்முதல் வாதவூரடிகள் சரிதத்தைத் தனியே நான்கு படலங்களில் 241 பாடல்களால் கூறுகிறார். இதுவே தனியாக ஒரு புராணம் என்று கருதக்கூடிய அளவு உள்ளது. திருவாசகப் பதிகங்கள் சில இன்ன சந்தர்ப்பத்தில் பாடப் பெற்றன என்பதைத் தெளிவாக உணர்த்திச் செல்கின்றார். திருவாதவூரர் வரலாறு கூறும்போது ஆங்காங்கு, திருவாசகத்தை நன்குணர்ந்து அவ்வுணர்ச்சியைப் புராணத்தில் அமைத்துப் பாடுகிறாரென்று தெரிகிறது. 'வாதவூரில் வந்தினிதருளிப் பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்' என்ற கீர்த்தித் திருவகவல் அடிகளை மனத்துட் கொண்டு, வாதையம்புரத்து நண்ணி மணிச் சிலம்போசை காட்டத் - தீதற ஆண்ட எந்தை திருச்சிலம்போசை என்றே - 'ஏதமா முனிவர் தேறி' (28: 14) என்று இவர் பாடுகிறார். இது போன்றன மிகப்பல இடங்கள். இவை இவருக்கு மாணிக்கவாசகரிடம் உள்ள பேரன்பையும் சைவப்பற்றையும் நன்கு புலப்படுத்துகின்றன.

பழியஞ்சின திருவிளையாடல் இறுதிப்பாடல், அவ் வரலாறு 'முட்டிப் பார்ப்பான் முறையீடு - மொட்டைப் பசுவின் பாய்ச்சலொடும் - விட்டுப்போனது' என ஒரு பழமொழியானதைக் குறிப்பிடும். 'இன்று போய் நாளை வா' என்றது (39:10) இராமாயணத் தொடரை நினைவூட்டுவது.* ஓசையியல்பைக் கூறுகின்ற,

> இன்று பூசை குடமுழக்கம் பருந்து மூங்கில் இலைவீழ்ச்சி
> ஒன்றும் உயர்சிச் சிலிபறவை உச்சி மலைநீர் விழுக்காடு
> நின்ற ஓசை இசையனைத்தும் நெறியிற் பாடுகேன். **(54:9)**

என்ற பாடல் இத்துறையில் முன்பிருந்த இலக்கண நூற் கருத்துக்களைக் கொண்டது.

இவர் ஆளும் சில சொற்கள் மிக்க சுவையுடையன. ஞானப் பூங்கோதை-சிற்புட்பகேசி, பூவாசகேசி, பிரதக்ஷிணம்-பதக்கணம்.

---

* இப்பாடலை இந்நூல் பக்கம் 49இல் காண்க.

*மிருத்தியுஞ்சயம்-மத்தியஞ்சயம். வேதம்-சாத்தல். சுந்தரம்-சொக்கு. வாடா-வாரடா. இராவுத்தன்-குதிரைச் சேவகன் (இதன் பாடபேதம் இராகுத்தன் என்றும் உண்டு. இராஜபுத்திரன் என்ற பெயரிலிருந்து இச்சொல் வந்தது என்று ஐயரவர்கள் சொல்வார். மானமங்கலம் - திருவாதவூரருடைய முன்னோர் இவ்வூரில் வாழ்ந்தனர் என்பதும், இவ்வூர் மானபுரம் என்று வழங்கப்படும் என்பதும் இவர் கூறும் புதுச் செய்திகளுட் சில. (பாடல் 27: 6, 28: 8).*

*வாதவூரடிகள், நீராடிப் பிள்ளையாரை வணங்கிப் பின் அம்மையாரை வணங்கித் துதித்தார் என்னுமிடத்தில் அம்மையை ஐந்துவிதமான பறவைகளாக உருவகித்துப் போற்றுமிடத்து, அவை தங்குமிடத்தை மிகப் பொருத்தமாக உரைப்பது கற்று மகிழத்தக்கது:*

**என்றார் வரைமயிலே, ஏழ்பொழில் வாழ் கோகிலமே,**
**ஒன்றாய வேதஆகம வாவி ஓதிமமே,**
**பொன்றாத எண்ணெண் கலைபேசும் பூவையே,**
**மன்றார் கடம்பவன மானே, அடிபோற்றி.**

*அடியார்க்கு நல்லவர் என்ற பெயரைப் பலமுறை கூறுகிறார் (35: 6, 16, 32). இதனால் தமக்கு முன்பு (12 ஆம் நூற்றாண்டில்) இருந்த அடியார்க்கு நல்லார் என்ற உரையாசிரியர் பெயரைத் தெரிந்திருந்தமையால் இத்தனை முறை சொல்லுகிறாரோ என்ற ஐயம் எழுகிறது. மேலும், 'நீலமணியின் குற்றம் வந்தவழிக் கண்டு கொள்க' என்பது சிலப்பதிகார ஊர்காண்காதை, 190ஆம் அடி, அடியார்க்கு நல்லாருரை; நீலத்தின் குற்றம் பன்னிரண் டென்றும் அவற்றின் பெயர்கள் இவையென்றும் இந்நூல் (25:19ஆம்) செய்யுளால் விளங்குகின்றது என்பது ஐயரவர்கள் குறிப்பு. சம்பந்தரைச் சத்திமான் என்று சில இடங்களில் குறிப் பிடுகிறார். பின்னும் மறைஞானி, மறைஞான சம்பந்தர் என்றும் பல இடங்களில் கூறுகின்றார். இவருடைய வாக்கு விசேஷத்தி னால் போலும், அடுத்த நூற்றாண்டிலிருந்து மறைஞான சம்பந்தர் என்றபெயரில் சைவ நூலாசிரியர் பலர் தோன்றியிருக்கின் றனர். சைவசித்தாந்தம் என்றும் கூறுகிறார். பின்னும் சொக்கன் என்ற இறைவன் பெயரில் இவருக்கு ஈடுபாடு மிகுதி. (சொக்கன் தமிழ், சுந்தரன் வடமொழி. 'திருவளர் செந்தமிழ்ச் சொக்கன்*

திருவடித் தாமரை போற்றி' என்று எல்லாம் அழகாகச் சொல்வார். 'அமண்கையருக்கு எளியேனலேன் - சொக்கன் என்னுள் இருக்கவே' - சம்பந்தர் தேவாரம் 3221.

இசை இலக்கணம், மணிகளின் இலக்கணம், குதிரை இலக்கணம் என்ற பல செய்திகளை இவர் தெரிந்து கூறியிருப்பது இவருடைய பலதுறைப் புலமைக்குச் சான்று. வடமொழிப் புராண ஆசிரியர் கூறாத பல செய்திகளை இவர் நன்கு விளக்கிச் சொல்கிறார்.

இவருடைய பாடல்களில் சொல்லணிகள் மிக அதிகம். எங்கும் மடக்கணியாகப் பாடுவார். ஒரு கருத்துத் தோன்றியவுடனே அதே தொடர்புடைய பல கருத்துக்களைச் சொல் நயமும் பொருள் நயமும் பொருந்தப் பாடுவது இவர் இயல்பு. யானையை எய்தார் என்றவிடத்தில் யானை பற்றிய தொடர்பான பல வரலாறுகளைச் சேர்த்துக் கூறுவது காணத்தக்கது:

> யானையாழ் துயரந் தீர்த்தோன் யானைதாங் கண்டங் கண்டோன்
> யானைவா கனத்தோன் போற்ற யானையா லயத்திருந்தோன்
> யானையா னனனைத் தந்தோன் யானைவந்தனை உவந்தோன்
> யானையை யுரித்த தன்றி யானையை எய்தான் அன்றே.

கரிக்குருவி கூவுவதை மிருத்தியுஞ்சய மந்திரம் சொல்வதுபோல இவர் கருதுகிறார். மேலும், மதுரையில் வாகீசமடம் என்ற ஒரு மடம் இருந்தது என்றும், அங்கு ஞானசம்பந்தர் தங்கினார் என்றும் இவர் கூறுகிறார். கூலியாளாக வந்த இறைவனைப் பாண்டி மன்னன் பிரம்பாலடித்தான் என்றுசொல்ல மனம் வராமல், அரசனுடைய ஏவலாளர் புளிமாறு கொண்டு அடித்தனர் என்று சொல்கின்றனர். வரகுண பாண்டியன் சிறந்த சிவ பக்தன்; பட்டினத்தார் அவனை 11ஆம் திருமுறையில் மிகவும் புகழ்கிறார். அவனுடைய வரலாறு விளங்குவது இவர் ஒரு படலத்தில் விளக்கமாகக் கூறியிருப்பதால்தான்.

புராணம் படிப்பதன் பயனைப் பல இடங்களில் கூறுகிறார். நூல் தொடக்கத்தில் நூற்பயன் என்ற தலைப்பில் 9 பாடல்களும் இறுதியில் 5 பாடல்களும் உள்ளன. அன்றியும், இடையில் வாதவூரடிகள் வரலாற்றிறுதியில் இருபாடல்கள் (31: 55, 56):

மறைபறை இறைவன் பிட்டுண்டு அடியுண்டு மண் சுமந்த
உறுகதை கற்போர் கேட்போர் உயருலகு ஆள்வரன்றே.

சுந்தரன் அவதானங்கள் சொல்லுவோர் நினைப்போர் கேட்போர்
சந்ததம் முனிவர் வானோர் சாரணர் சித்தர் ஏத்த
முந்தொளி விமானத்து எய்தி மூவுல கத்தினோடும்
இந்திரன் முடிமேல் தாள்வைத்து ஏறுவர் சிவலோகத்தே.

பின்னும் சில இடங்களில் படல முடிவில் இவ்வாறு பல சுருதிப் பாடல் அமைத்திருக்கிறார் (38: 72, 56: 19).

பிற்கால நூல்களில் பதிகம் காணப்படுவதில்லை. இவர் தமக்கு முன்னிருந்த நூல்களையொட்டிப் பதிகம் அமைத்திருக் கிறார். அதுமட்டுமல்லாது, பதிகப் பாடல்களில் முதல் நினைப் பைக் கடைசியில் ஒரு பாடலாகக் கோத்துமிருக்கிறார் (அடி வரவு.) இது, அக்காலத்தில் சைவமக்கள் இந்நூலைப் பாரா யணம் செய்யும் நியமம் உடையவராயிருந்தார்கள் என்பதை யுணர்த்தும்.

பழமொழிகளை இவர் போற்றிக் கூறுவார். பசுவினிடத்து இவர் அன்புடையவர் என்பதை, 'அறமறக் கொல்ல வந்த தாயினும், பசுவைக் கோறல் மறை வழக்கல்ல' என்று கூறுவது நன்குணர்த்தும். வரலாற்றை இவர் சொல்லிக்கொண்டே போகும் போது பெருமானுடைய திருவருளின் பெருமையை நினைந்து மனமுருகிச் செயலற்றுப் பாடும் பாடலையும் பார்க்கலாம்.

குதிரை வாங்கச் சென்ற மாணிக்கவாசகர் கானப்பேர் வழியாகச் சென்றார் என்று இவர் சொல்வது புதியசெய்தி. திரு விளையாடல்களுள் இந்நூலுக்கும் பின்வந்த பரஞ்சோதியார் புராணத்துக்கும் வேறுபாடுகள் உள்ளன. நாயன்மாருள் ஒரு வரான மூர்த்தியார் வரலாறு இங்கு தனிப்படலமாக உள்ளது; மும்மையாலுலகாண்ட மூர்த்தி என்ற சுந்தரர் தொடரை இவர் கூறுகிறார். இவ்வரலாறு மற்றதில் இல்லை. அங்ஙனமே காரி யார் நாரியார் பாப் பகுந்தது, பதஞ்சலிக்கு நடஞ் செய்தது ஆகி யனவும் பின்வந்த புராணத்தில் இல்லை. அதிலுள்ள பிற திரு விளையாடல்கள் இதில் மற்றவற்றோடு சேர்த்துச் சொல்லப் பட்டுள்ளன. இந்நூல் அதிகம் பயிலப்படாதது எனினும், ஆராய்ச்சியாளர்க்கு அரிய செய்திகளையெல்லாம் உணர்த்திக் கொண்டிருப்பது, எத்தனையோ பழஞ்செயல்களும் மதுரை

*பற்றிய அரிய செய்திகளும் சொற்களும் தொடர்களும் இந் நூலால் தெரியவருகின்றன. மதிச்சயம், வண்டியூர் முதலியன பழைய ஊர்கள் என்று அறிகின்றோம். தும்மினால் நூறு ஆயுள் என்று சொல்வது குறளிலிருந்தும் கூட அறிகின்றோம்; ஆனால் தும்மினால் சிவாய என்று சொல்லுவது மிகவும் சிறப்பான செய்தி. "இறைவன் உதவினன் இரங்கி, தும்மினாற் சிவாயபோல் தொடர்ந்து" என்று (49:10) இவர் கூறியிருப்பது இவருடைய சைவப்பண்பை உயர்த்திக் காட்டுகிறது.*

*நம்பி சிறந்த பக்திமான் என்பதை, முன்னமே காட்டி யுள்ளபடி, பாயிரப்பகுதியிலுள்ள பாடல்களாலும், நூலெங்கும் உள்ள பக்திச்சுவை நிரம்பிய பாடல்களாலும் அறியலாம். நூல் இறுதியிலுள்ள நூற்பயன் உரைக்கும் பின்வரும் பாடல்களும் கருதத்தக்கன:*

சொக்கனென் றொருகா லோதில்
துயர் கெடும் பகையும் மாளும்;
சொக்கனென் றொருகா லோதில்
தொலைவிலாச் செல்வம் உண்டாம்;
சொக்கனென் றொருகா லோதில்
சுருதிசொல் யாண்டுஞ் செல்லும்;
சொக்கனென் றொருகா லோதில்
சொர்க்கமும் எளிதாம் அன்றே.

திருந்திய இறைவன் எண்ணெண்
திருவிளை யாட்டி லொன்றைப்
பொருந்தி முன் கற்போர் கேட்போர்
புவிபுகழ் அரச ராகிப்
பெரும்பயன் துய்த்து நீங்காப்
பிறப்பிறப் பொழிந்திங் கெய்தா
அரும்பெருஞ் சிவலோ கத்தில்
அணைவதற் கைய மின்றே.

**காலம்**

*சில குறிப்புக்களால் இந்நூலாசிரியர் காலம் 13ஆம் நூற் றாண்டென்று கருதுமாறுள்ளது. திருப்புத்தூர்ச் சிவாலயத்தின் தெற்கு மதிலில் கண்ட கல்வெட்டொன்று, கி.பி. 1267இல் பட்ட*

மெய்திய மாறவர்மன் குலசேகர பாண்டியனது 36ஆம் ஆட்சி யாண்டில், அக்கோயில் அருச்சகர்கள் பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பாருக்கு நிலம் அளித்தார்கள் என்ற செய்தி கூறுகிறது. இந்நம்பி நம் புராணஆசிரியர் என்று கருதலாம். இதில் குறிப் பிட்ட ஆண்டு 1303 ஆகும். புலவரின் பாடல்பெறும் பொருட்டே கோயிலார் புலவருக்கு நிலம் அளித்தனர் என்று சாசன வாயி லாக அறிகிறோம். இவர் திருவிளையாடற் புராணம் செய்த சிறப்பினாலேயே இந்நிலம் அளிக்கப்பெற்றது என்று நாம் கொள்வது முறையாகும். எனவே, 1303க்குச் சில ஆண்டுகள் முன்னதாக இவர் நூல் செய்திருக்கலாம். ஆகவே 13ஆம் நூற் றாண்டின் இறுதி என்பது பொருத்தமாகிறது.

மதுரைத் திருப்பணிமாலையின் செய்யுளொன்றினால், இவரது முன்னோராகிய ஆனந்தத் தாண்டவ நம்பியின் மனைவி, மதுரை மீனாட்சியம்மை சந்நிதிக்கோபுரம் கட்டினார் என்று தெரிவிக்கிறது:

**கன்னலுஞ் செந்நெலுஞ் சூழ்செல்லி நாடன் கவுணியன் கோன்**
**நன்னர்க ளெண்ணிய ஆனந்தத் தாண்டவ நம்பிகற்பாள்**
**தென்னவர் போற்றிய அங்கயற் கண்ணம்மை செல்விதிருச்**
**சன்னிதிக் கோபுரங் கட்டினாள் தன்மந் தழைக்க என்றே.**

மதுரைக் கோயிலொழுகும் இதையே தெரிவிக்கிறதென்பர். இது சகம் 1150 (கி.பி. 1227)இல். இந்நம்பி நம் நூலாசிரியருக்கு ஒன்றிரண்டு தலைமுறை முன்னதாக, அவர் மரபில் வாழ்ந்தவ ராகலாம்.

ooo

அத்தியாயம் 7

# சைவ இலக்கியம்

## முன்னுரை

இந்த நூற்றாண்டில் தோன்றிய சைவநூல்களை ஆராயப் புகுமுன், இதற்கு முந்திய காலத்தில் எழுந்த சைவநூல்களை மேலெழுந்தவாரியாகக் கண்ணோட்டமிடுவது பயனுடைய தாகும். சங்க இலக்கியங்களுள் சிவபெருமானைப் பற்றிய குறிப்புக்கள் சில ஆங்காங்கு காணப்படுகின்றன. சைவத்தைக் குறித்த தனிநூலாக எதுவும் கிடைக்கவில்லை. திருமுருகாற்றுப் படை ஒருதனிப்பாடல்; தனிநூல் என்றும் சொல்லலாம். இது முருகனைத் துதிக்கின்ற சைவநூல் என்று நாம் கொள்ளலாம்.

சங்க இலக்கியத்தை அடுத்துத் தோன்றிய பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் சிலவற்றிலும் சிவபெருமானைப் பற்றிய குறிப் புக்கள் ஆங்காங்கு கிடைக்கின்றன. அப்பர், ஞானசம்பந்தர் காலத்துக்கு முன்வாழ்ந்த திருமூலரும் காரைக்கால் அம்மை யும், ஐயடிகள் காடவர்கோன் இளம்பெருமான் அடிகள் முதலியோரும் தனித்தனி நூல் செய்திருக்கிறார்கள். இவை யாவும் சைவத் திருமுறைகளில் சேர்க்கப்பெற்றுள்ளன. இவ் வாசிரியர்களின் காலம் 5-6, 7-8 நூற்றாண்டுகள் என்று கருதக் கூடும்.

அடுத்துத் தோன்றியவர்கள் சைவசமய ஆசாரியர்களான நால்வர். இவர்கள் காலம் 7, 8, 9 ஆகிய நூற்றாண்டுகள். இக் காலத்தில் இவர்களையன்றி வேறு பலரும் சைவநூல் செய் திருக்கிறார்கள். 10ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 11ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நம்பியாண்டார் நம்பி வாழ்ந்

திருந்து சைவத் திருமுறைகளைத் தொகுத்து ஒழுங்குபடுத்தி னார். இதேகாலத்தில் கருவூர்த்தேவரும் பிறதிருமுறைப்பிரபந்த ஆசிரியர் பலரும் வாழ்ந்திருந்தார்கள். 11ஆம் நூற்றாண்டில் கல்லாடம் தோன்றியது; அதனுள் மதுரைச் சோமசுந்தரக் கடவுளுடைய திருவிளையாடல்கள் மிகவும் சிறப்பித்துச் சொல்லப்பட்டுள்ளன.

இவை அனைத்துக்கும் சிகரமாய் 12ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சேக்கிழார் பெருமான் தோன்றிச் சமயா சாரியர் மூவர் வரலாறுகளையும் பிற நாயன்மார் வரலாறு களையும் விரிந்த பெரிய திருத்தொண்டர் புராணமாகப் பக்திச் சுவை சொட்டச்சொட்ட பாடியளித்தார். அவர் காலத்திலேயே சைவப்புலவர் பலர் வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் ஒட்டக் கூத்தர் நெற்குன்றவாணர் முதலியோர். இப்புலவர் செய்த நூல் களேயன்றி, தனிச் சாத்திரங்களாகவே பல நூல்கள் இக்காலப் பகுதியில் எழுந்தன. உய்யவந்தார் இருவர் பாடிய திருவுந்தி யாரும் திருக்களிற்றுப்படியாரும் இக்காலத்தே தோன்றின. இவை சைவ சாத்திரங்களாகவே கொள்ளப்பெற்று வருகின்றன. இவற்றோடுகூட, வாகீசமுனிவர் செய்த ஞானாமிர்தமும் இக் காலத்தே எழுந்தது. இதுவே 12ஆம் நூற்றாண்டு முடிந்து 13ஆம் நூற்றாண்டு தொடங்குகின்ற சமயத்தில் உள்ள சைவ சமய நூல்களின் வளர்ச்சி நிலையாகும்.

இவற்றோடுகூட, மக்கட் சமூகத்தில் சைவ உணர்வு வளர் வதற்குப் பெருந்துணையாக, மன்னர்கள் அமைத்த பெரும் கோயில்கள் விளங்கி வந்தன. அப்பர் சுவாமிகளால் தடுத்தாட் கொள்ளப்பெற்ற மகேந்திரவர்ம பல்லவன் பல சிவாலயங் களைக் கட்டினான். 9ஆம் நூற்றாண்டின் மத்தியில் இருந்து புத்துயிர்பெற்று வளர்ந்தோங்கி வந்த சோழமன்னர்குலம் எண்ணிக்கையில் அடங்காத பெரும் கோயில்களை அமைத் திருந்தது. இவை யாவும் ஒருங்குகூடி வடமொழியில் பலவகை யான சைவசாத்திர நூல்கள் தோன்றக் காரணமாயிருந்தன. சைவ வழிபாடும் பக்தி உணர்வும் ஒழுக்கமும் மிக்கு ஓங்கவே, இவற்றை வரையறைப் படுத்துவதற்கான தமிழ்ச் சாத்திரங்களும் இப்போது எழலாயின. இவ்வாறு முதன்முதலாக எழுந்த நூல் சிவஞான போதமாகும்.

13ஆம் நூற்றாண்டில் தோன்றிய சைவ இலக்கிய சரித்திரம் என்பது சைவசித்தாந்த சாத்திரங்களின் தோற்றத்தின் சரித்திரம் என்றே கூறவேண்டும்.

திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டார் இந்த நூற்றாண்டில் திருவெண்காட்டில் தோன்றினார் என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்து. தமிழ்நாட்டில் மக்களிடையே வழங்கிய தெய்வக் கொள்கையையும், சிவபரம் பொருளைப் பற்றிய தத்துவக் கருத்துக்களையும், முந்தி எழுந்த சமயாசாரியர்களாகிய சம்பந்தராதியோர் தங்கள் அருட் பாசுரங்களில் கூறிய சமய உண்மைகளையும் தொகுத்து மெய்கண்டார் சுருங்கிய அளவில் நாற்பதே வரிகள் கொண்ட சிவஞானபோதம் என்ற சிறுநூல் செய்தார்.

இது தமிழ் முதல் நூல். இது மூலநூலாக இருந்து, பின்னர் தன்வழியே சிறந்த சமய சாத்திர மரபைத் தோற்றுவித்திருக்கிறது. சைவசித்தாந்த சாத்திரங்கள் இவர் பெயரால் மெய்கண்ட சாத்திரம் எனப்பட்டன.

இவர் மாணாக்கராகிய அருள்நந்தி சிவாசாரியர் மூலம் சைவ சமயக் கருத்துக்கள் விரிவடைந்தன. சிவஞானபோதமும் அருள்நந்தி செய்த சிவஞானசித்தியாரும், மூலமும் பாஷ்யமும் போல இருந்து, சைவ சமயத்தையும் ஆசாரிய பரம்பரைகளையும் இன்றுவரையும் வளர்த்து வந்திருக்கின்றன.

மெய்கண்டாரின் மற்றொரு சீடரான மனவாசகங்கடந்தார் உண்மை விளக்கம் என்றொரு சிறப்பான சிறுநூல் செய்தார். இவருடைய ஏனைய வரலாறு புலப்படவில்லை. அடுத்த நூற்றாண்டில் இவர்கள் பரம்பரையில் தோன்றிய ஆசாரியர்கள் பின்னும் பல சைவ சாத்திரங்கள் செய்தனர். யாவும் சேர்ந்து மெய்கண்ட சாத்திரம் 14 என்ற தொகையை வழக்கத்துக்குக் கொண்டுவந்தன.

இனி இக்காலப் பகுதியில் தோன்றியது நம்பி திருவிளையாடல் புராணம். இதுவும் சிறப்புடைய ஒரு சைவநூல். இதைப் புராண இலக்கியம் என்ற அத்தியாயத்துள் ஆராய்ந்தோம். இங்கு கூறிய சாத்திரங்களை மட்டும் இனி நாம் ஆராய்வோம்.

# மெய்கண்டார்

## வரலாறு

இன்றைய சைவசித்தாந்த சாத்திர மரபைத் தோற்று வித்தவர் மெய்கண்டார். இவருடைய வரலாறு தமிழ்நாடு நன்கறிந்தது. இவர் நடுநாடாகிய திருமுனைப்பாடி நாட்டில் கடந்தை என்னும் திருப்பெண்ணாகடத்தில் வேளாளர் குலத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் அச்சுத களப்பாளர். மெய் கண்டாருடைய பிறப்பு வரலாறே திருவருள் நிகழ்ச்சியோடு தொடங்குகிறது. களப்பாளர் நெடுநாளாகப் புத்திரப் பேறின்றி யிருந்து, புத்திரப்பேறு பெறுவதற்கு மார்க்கங்கள் தேடினார். திருத்துறையூரில் வாழ்ந்த சகலாகம பண்டிதர் என்ற சிவாசாரியர் அவருக்குக் குலகுரு. அவரிடம் சென்று தம் குறையைத் தெரிவித்த போது அவர், இறைவன் திருவுள்ளம் எவ்வாறு இருக்கிற தென்று அறிய எண்ணினார். அடங்கன் முறையாகிய தேவார ஏட்டில் கயிறுசாத்திப் பார்ப்பது இறைவன் திருவுள்ளத்தை அறிவதற்கு அக்காலத்தார் மேற்கொண்ட வழக்கம். அதன்படி, சகலாகம பண்டிதர் ஏட்டைப் பூசித்துக் கயிறு சாத்திப் பார்த்தபோது, சம்பந்தருடைய திருவெண்காட்டுத் தேவாரப் பதிகம் இரண்டாவது திருப்பாடல் காணப்பட்டது:

> **பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவு**
> **ஆயினவே வரம்பெறுவர், ஐயுறவேண்டா ஒன்றும்;**
> **வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்**
> **தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே.**

என்ற இந்த அருமைப்பாடல் கிடைத்தது. இதைப்பார்த்த போது கவலையிலே தோய்ந்திருந்த குருவும் சீடரும் ஆனந்தக் கண்ணீர் பெருக்கினர். இப்பாடலில் 'பிள்ளையினோடு உள்ள நினைவு ஆயினவே வரம்பெறுவர்' என்ற சொற்கள் இவர் களுக்கே வரம் கொடுத்ததுபோல இருந்தன; 'ஐயுறவேண்டா ஒன்றும்' என்றதொடர் பின்னும் அதிக உறுதியைத் தந்தது. ஆசிரியர் மிகவும் மகிழ்ந்து, திருவெண்காடு சென்று மனைவி யோடுகூட அங்குள்ள முக்குள நீரில் நீராடி இறைவனை நாள் தோறும் வழிபடுமாறு களப்பாளருக்கு அறிவுறுத்தினர். (இக் குளங்கள் சூர்ய தீர்த்தம், சோம தீர்த்தம், அக்கினி தீர்த்தம் என

வழங்கும். முதல் இரண்டும் இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் கனாத்திறமுரைத்த காதையில் கூறிய சூரியகுண்டம் சோம. குண்டம் என்றும், இத்திருவெண்காடு பண்டைய புகார் நகரத்தின் ஒரு பகுதி என்றும் ஆன்றோர் கூறுவர்*) களப்பாளர் அவ்வாறே தம் மனைவியோடு திருவெண்காடு சென்று முறை யாக வழிபட்டு வந்த நாளில், அவர் மனைவியார் கருவுற்று உரிய காலத்தில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றார். குழந்தைக்குச் சுவேதவனப் பெருமாள் (திருவெண்காடர்) என்று பெயரிட்டு வளர்த்தார்கள். சிலநாள் சென்று திருப்பெண்ணாகடத்துக் குத் திரும்பினார்கள். பின்னும் சிலநாள் சென்று. இக்குழந்தை, தம்முடைய மாமன் ஊராகிய திருவெண்ணெய் நல்லூர் அடைந்து, அங்கு வளர்ந்து வரலாயினர். அப்போது இவருக்கு வயது இரண்டிலிருந்து மூன்று தொடங்கிற்று.

குழந்தைக்கு நல்லூழின் பயனாகத் திருவருள் வந்து பதியும் காலம் நெருங்கியது. கயிலாயத்தில் சிவஞான உபதேசம் பெற்ற பரஞ்சோதி முனி என்ற சிவஞானி ஒருவர் அப்பகுதியில் வான வீதி வழியாகச் சென்றார். கயிலாயத்தில் திருநந்தி தேவரிடம் சிவஞான உபதேசம் பெற்றவர் சனற்குமார முனிவர். அவரிடம் உபதேசம் பெற்றவர் சத்தியஞான தரிசனிகள். அவரிடம் உபதேசம் பெற்றவர் பரஞ்சோதி முனிவர்: அவரே ஆகாய வீதி வழியாக வந்தவர். குழந்தை வீதியில் விளையாடிக் கொண் டிருந்த இடத்தை நெருங்கியபோது அவருடைய வான்வழிச் செலவு தடைப்பட்டது. உடனே அவர் நிகழப்போவதை உணர்ந்து, கீழே பூமியில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை யைக் கண்டு குழந்தையினிடம் வந்து, தாம் பெற்றிருந்த சிவ ஞானத்தை அதற்கு உபதேசம் செய்து, தமிழுலகில் சைவ சித்தாந்த மெய்பொருள் விளங்குமாறு சாத்திர நூல் செய்யும்படி உரைத்து, அப்பால் பொதியமலை நோக்கிச் சென்றார். குழந்தைக்கு அவர் தமது குருவின் பெயரான சத்தியஞான தரிசனி என்பதன் தமிழ் வடிவமாகிய மெய்கண்டார் என்ற பெயரை இட்டார்.

மெய்கண்டார் உபதேசம் பெற்றபின் மாமன் காங்கேய பூபதி கொண்டு சென்று வெண்ணெய் நல்லூரில் வளர்த்தார் என்பதை - 'ஐந்து கைக்களிறு வரங்கொடுக்கும் வெண்ணெய்

---

* சிலப்பதிகாரம். கனாத்திறமுரைத்த காதை, வரி 59, ஐயரவர்கள் அடிக்குறிப்புப் பார்க்க.

நல்லூர் காங்கேய பூபதி மனையிற் கலப்பதிதானே' என்று திரு வெண்காட்டுப்புராண மெய்கண்டார் துதி குறிப்பிடும். குழந்தை யாகிய மெய்கண்டார், தாம் வழிபடுகின்ற திருவெண்ணெய் நல்லூர்ச் சிவாலயத்திலுள்ள பொல்லாப் பிள்ளையார் சந்நிதி யில் சென்றிருந்து, ஞானநிட்டைகூடிச் சிவானுபவம் பெற்று, அதன் பயனாக ஏது திருட்டாந்தங்களோடு சிவஞானபோதம் என்ற சைவசித்தாந்த சாத்திரத்தைத் தமிழ் மொழியில் முதன் முதலாகச் செய்தார். சிலநாளில் இவரிடம் விளங்கிய சிவஞானப் பொலிவைக் கண்டோர் அனேகர், உபதேசத்தை நாடி இவரிடம் வந்தார்கள். இவரும் சைவசமய நுண்பொருளை எல்லோருக்கும் உணர்த்தி இருந்து வந்தார்.

இவ்வாறு இருக்கும் நாளில், துறையூரிலிருந்து களப் பாளரைக் காணவந்தார் சகலாகம பண்டிதர். முதியவரான சகலாகம பண்டிதரும், மெய்கண்டாரால் ஆட்கொள்ளப்பட்டு இவருக்கு மாணாக்கராகி அருணந்தி சிவாசாரியர் என்று பெயர் பெற்றார். மெய்கண்டாரிடம் நாற்பத்தொன்பது மாணாக்கர் இருந்தார்கள் என்பது வரலாறு. தமக்குப் பின் சிவஞானத்தைப் பரப்பி, சைவ ஆசாரிய பரம்பரையை வளர்த்து வருமாறு அருணந்தி சிவாசாரியருக்குப் பணித்துவிட்டு, உரியகாலத்தில் மெய்கண்டார் ஐப்பசி-சுவாதியில் இறைவன் திருவடி நிழ லடைந்தார்.

## காலம்

மெய்கண்டாருடைய காலத்தைத் திட்டமாக அறிய முடிகிறது. திருவண்ணாமலையில் அருணாசலேசுவரர் ஆலயத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று இவரைக் குறிப்பிடுகிறது. கி.பி. 1216 முதல் 1256 வரை அரசாண்ட மூன்றாம் இராசராச சோழனது 16ஆம் ஆட்சி ஆண்டில் (1232) திருவண்ணாமலை யைச் சேர்ந்த மாத்தூர் என்று வழங்குகின்ற இராசராச நல்லூரில் திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவர் என்பவர் மெய் கண்ட தேவப்புத்தேரி என்ற ஏரி வெட்டுவித்தார் என்பதும், அங்கு தம் பெயரால் மெய்கண்ட தேவேச்சரம் என்ற ஒரு சிவாலயம் அமைத்து அதில் தினசரி வழிபாட்டிற்காக ஐந்து வேலி நிலத்தைத் தேவதான இறையிலியாக வழங்கினார் என்பதும், கல்வெட்டுக் கூறும் செய்திகள். கல்வெட்டின் காலம் கி.பி. 1232, மே 22. இது நம் சைவசித்தாந்த ஆசாரியராகிய

மெய்கண்டாரைக் குறிப்பிடுகிறது என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. கி.பி. 1235இல் மெய்கண்டார் சிவஞானபோதம் செய் தார் என்று ஒரு பரம்பரைச் செய்தி வழங்கிவருகிறது. அதற்கு இது பொருத்தமாய் உள்ளது.

மெய்கண்டார் சந்ததியில் அடுத்த மூன்றாம் தலைமுறையில் வந்த உமாபதி சிவாசாரியர் "ஏழஞ்சு இருநூறு எடுத்த ஆயிரம் - வாழும் நற்சகனம் மருவா நிற்ப" தாம் சங்கற்ப நிராகரணம் செய்ததாக அந்நூலில் ஒரு குறிப்புத் தருகிறார். இது சகம் 1235 - கி.பி. 1313 ஆகும். மெய்கண்டார் இதற்கு மூன்று தலைமுறை முந்தியவர்: அதாவது சுமார் 75 ஆண்டுகள் முற்பட்டவர் என்று சொல்லும்போது, மெய்கண்டாரின் காலம் கி.பி. 1238. இது சாசனத்தில் கண்ட தேதிக்கு அரண் செய்கிறது.*

மெய்கண்டார் தொடங்கி வருகின்ற ஆசாரிய பரம்பரை யைச் சைவசித்தாந்த சந்தான பரம்பரையென்றும், இவரை இப்பரம்பரையின் முதல் சந்தானகுரவர் என்றும், சொல்லு வார்கள். இவரை முதலாக வைத்து மெய்கண்ட பரம்பரை என்றும், இவர் முதலாகச் செய்த சாத்திரத்தை மெய்கண்ட சாத்திரம் என்றும் சைவமக்கள் வழங்குகிறார்கள். இன்றுள்ள சைவசமய தத்துவ சாத்திரம் மெய்கண்டார் வரம்பு கோலிக் கொடுத்த சாத்திரமாகும்.

### சிவஞானபோதம்

மெய்கண்டார் செய்த ஒரே நூல் சிவஞானபோதம். இது நாற்பது வரிகள் உடைய நூற்பாவாலாகிய 12 சூத்திரங்களும், பொல்லாப் பிள்ளையார் வணக்கம் அவையடக்கம் என்ற இரண்டு பாடல்களும் அடங்கியது. சூத்திரங்களை ஏதுக்கள் கொண்டு விரித்துக்கூறும் அதிகரணங்கள் 39, உதாரண வெண்பாக்கள் 81. இவையனைத்தையுமே மெய்கண்டார் செய் தார் என்பது வரலாறு. ஏதுக்களும் எடுத்துக்காட்டும் வைத்து இவரே தம் கருத்தை விரித்துரைக்காவிடில், பின்வந்தோர் எவரும் அவற்றை விரித்துப் பொருள்காண்டல் அருமையினும் அருமை.

சூத்திரப் பாகுபாடும் பொருளும் இங்கு அறியத் தகுந்தவை. முதல் ஆறும் பொது அதிகாரம்; பின் ஆறும் உண்மை அதிகாரம். முதல் மூன்று சூத்திரங்கள் முறையே பதி உண்மை,

---

* இவ்வத்தியாயத்தின் இறுதியில் உள்ள குறிப்பைக் காண்க.

பாச உண்மை, பசு உண்மை என்னும் பொருள்கூறும்; இவை பிரமாண இயல். அடுத்த மூன்றும் முறையே பசு இலக்கணம், பாச இலக்கணம், பதி இலக்கணம் என்னும் பொருள் கூறும்; இவை இலக்கண இயல் எனப் பெயர்பெறும். அடுத்து உண்மை அதிகாரத்து முதன் மூன்று சூத்திரங்களும் சாதனஇயல்: இவை முறையே பசுவின் சிறப்பிலக்கணம், குரு உணர்த்தும் முறைமை, ஆன்மசுத்தி என்னும் பொருளைக் கூறும். இறுதி மூன்று சூத்திரங்களும் பயன் இயல் எனப்பெறும்: இவை பாச நீக்கம் சிவப்பேறு சீவன் முத்தி என்னும் பொருள்கூறும்.

சிவஞானபோதம் கூறும் தத்துவக் கருத்தைப் பின்வருமாறு சுருங்கக் கூறலாம். புலன்களால் அறியப்படும் உலகம் தோன்றி நின்று அழிகிறது. உயிர் தோன்றி நின்று அழிதல் இல்லை. உயிர் உலகத்தைத் தொழிற்படுத்தவில்லை. எனவே, இவ்விரண்டையும் கடந்த ஒரு பொருள் உலகத்தைத் தொழிற்படுத்துகிறது. அனைத்தையும் தனக்குள் ஒடுக்கி மீண்டும் எது தோற்றுவிக்கிறதோ அதுவே பரம்பொருள். உயிர்களை அனாதியாகப் பாசம் பந்தித்து நிற்கிறது. பாசத்திலிருந்து உயிரை விடுவித்து அதற்குரிய மெய்ஞ்ஞானம் மீண்டும் அதனிடத்துப் பிரகாசிக்கச் செய்வதற்காகப் பரம்பொருள் முத்தொழில் புரிகிறது. இதன் நோக்கம் உயிர் உய்யவேண்டும் என்ற பேர்அருளே ஆகும். பாசச் சேர்க்கையால் விளையும் கருவிகரணங்களோடு கூடித்தொழில் நடத்துகின்ற ஆன்மா தன் உயிர்க்கு உயிராய் உள்ள பரம் பொருளை அறிவதில்லை. அதைப் பீடிக்கின்ற பாசம் நீங்கும் பொருட்டு பரம்பொருளானது வினையைக் கூட்டுகிறது. வினை அனுபவித்துக் கழியவே பரம்பொருளே குருவாய்த் தோன்றிப் பசு ஞானம் பாச ஞானத்தைக் கழிக்கச் சிவஞானத்தை வழங்குகிறான். ஆன்மா சிவஞானம் பெற்று அனைத்தையும் பரம் பொருளின் செயலாகக் காண்கிறான். காணவே, பாசங்கள் விலகுகின்றன. திரு ஐந்தெழுத்தையும் திருவேடத்தையும் கோயிலையும் தன்னுடைய பாச நீக்கத்திற்குச் சாதனங்களாகக் கொள்கிறான்.

தொண்டர் குழாத்தில் தன்னை மறக்கிறான். வேடமும் ஆலயமும் பரம்பொருளாகவே கொண்டு வாழ்கிற சீவன்முத்தி நிலையின் முடிவில் ஆன்மா பரம்பொருளோடு இரண்டறக் கலக்கிறான். இப்பரம்பொருளே சிவம்.

"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த நூற்பா" என்று சிவஞானபோதத்தைக் குறிப்பிடுவது எல்லாவகையிலும் பொருந்துவதாகும்.

இவ்வாறு மெய்கண்டார் வரையறை செய்து வெளியிட்ட தத்துவக் கருத்துக்கள் பற்றிச் சில கொள்கைகளை இங்கு சுருக்கமாக ஆராய்தல் பொருந்தும். மூன்று கருத்துக்களை இங்கு குறிப்பிடவேண்டும். ஒன்று மெய்கண்டார் திருக்கயிலாய பரம்பரையில் உபதேசம் பெற்றார் என்பது வரலாறு ஆயினும், தமிழ் நாட்டின் மரபை நாம் மறக்கலாகாது. தமிழ் இலக்கியம் தோன்றிய காலம் தொடங்கியே சிவபரம்பொருளின் வழிபாடு இருந்திருக்கிறது என்று சங்க இலக்கியங்கள் நமக்குத் திட்டமாய் எடுத்துக் காட்டுகின்றன. புறநானூறு சிலப்பதிகாரம் முதலியன இங்கு குறிப்பிடத்தக்கன. சில ஆயிரம் ஆண்டுகளாகவேனும் இச்சமய வழிபாடு தமிழ் மக்களிடையே தோன்றி வளர்ந்து விரிவடைந்து திட்டமான உருவம் பெற்றது என்பதைத் திருமூலர் காரைக்கால் அம்மையார் ஆகியோர் கூறும் சைவசமயக் கருத்துக்கள் நன்கு தெரிவிக்கின்றன. தேவாரம் பாடிய மூவர் மாணிக்கவாசகர் ஆகியோர் பாசுரங்களில் சைவ சமயக் கருத்துக்கள் இன்னும் நன்கு வளர்ந்து, சைவ மக்களிடையே உயிர்த் தத்துவமாக எங்கும் பரவி நின்று நிலவும் நிலைமையைத் தெரிவிக்கின்றன. இவற்றுக்கெல்லாம் மிகவும் பிற்பட்டு வாழ்ந்த மெய்கண்டார் இந்த ஆரா இன்ப அருங்கனிகளைப் பிழிந்து சைவ சித்தாந்த சாரம் கொண்டார் என்பது உண்மை. தோத்திர ரூபமாய் உள்ள திருமுறைகளை வடித்துச் சாத்திரமாகச் செய்த பெருமை மெய்கண்டாருக்கு உரியது. இந்த உண்மையை வரலாறானது மிகவும் சுவைபட மெய்கண்டார் திருக்கயிலாய பரம்பரையில் உபதேசம் பெற்றார் என்று கூறுகிறது.

மற்றொரு கருத்து இதையொட்டிக் கூறத்தக்கது. சங்கரருடைய அத்வைதமானது, வேதாந்தம் மாத்திரமாக இருக்க, அத்வைதமே கூறுகின்ற சைவ சித்தாந்தம் வேதத்தோடு ஆகமாந்தமும் கூடியது என்பார்கள். ஆகமங்கள் பல. அவற்றுள் சைவ ஆகமங்களின் சாரத்தை மெய்கண்டார் கொண்டிருக்கிறார் என்பர். ஆனால் ஆகமங்களின் காலம் பெரிதும் விவாதத்துக்கு இடமான பொருள். எனினும், சைவ சித்தாந்தத்தில் ஆகமமும் பங்கு கொண்டிருக்கிறது என்பது ஒப்புக்கொள்ள

வேண்டியதே. சைவ சித்தாந்தம் கருத்தளவில் அல்லது ஏட்டு அளவில் உள்ள வெறும் வறட்டு அத்வைதம் அல்ல. மக்கள் வாழ்க்கையில் செயல்பட்டு, அதையும் நெறிப்படுத்தி, மக்களை முத்தி நிலைக்குக் கைதூக்கி விடுவதே இதன் நோக்கமும் நடை முறையும். எனவே, வாழ்க்கையில் உதவுவதே நோக்கமாகக் கொண்ட சைவசமயம் ஆகமத்தையும் பயன்படுத்திக் கொண்டது.

இனி, மூன்றாவது கருத்து, சாத்திரம் என்றால் எதுவுமே வடமொழியில் இருந்து வந்தது என்பது தமிழ்நாட்டில் நிலவிவரும் ஒரு கருத்து. வேதாந்தத்தில் சங்கர பாடியமும் வைணவத்தில் இராமானுச பாடியமும் வடமொழியே ஆதலால், இக்கருத்து நன்கு ஊன்றிவிட்டது எனினும், வைணவர்கள் அப்படிக் கருதுவதில்லை. ஆனால் சைவர்கள் எல்லாமே வடமொழி மூலம் என்று கருதுகிறார்கள். இதன் விளைவாக, தமிழ்ச் சிவஞான போதத்துக்குக்கூட ஒரு வடமொழி மூலத்தைப் பிற்காலத்தில் சிருட்டித்தார்கள். இது "ரௌரவாகமத்தில் பாச விமோசனப்படலம் என்ற பெயரில் உள்ள பன்னிரண்டு சூத்திரங்களின் மொழிபெயர்ப்பு" என்ற கதை ஒன்று எழுந்தது. இது போலிக்கதை என்பதை ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் நூற்று இருபது காரணம் எடுத்துக்காட்டி, மெய் கண்டார் செய்த தமிழ்ச் சிவஞானபோதமே முதல்நூல்; வட மொழிநூல் என்று காட்டுவது தமிழிலிருந்து செய்த மொழி பெயர்ப்பே என்று நன்கு நிறுவியிருக்கிறார். அதிகம் சொல்வது மிகை. இந்த வடமொழிப் பாடல்களுக்குக் கி.பி. 1564இல் வாழ்ந்த சூரியனார் கோயில் ஆதீன ஸ்தாபகர் ஆகிய சிவாக்கிரயோகி களுக்கு இரண்டு தலைமுறைக்கு முந்திய ஆசாரியராக வாழ்ந்த சதாசிவ சிவாசாரியர் சுருக்கமான வடமொழி வியாக்கியானம் செய்திருக்கிறார். சதாசிவர் காலம் 1510 ஆகலாம். 1488இல் சிவப்பிரகாச உரை எழுதிய மதுரைச் சிவப்பிரகாசர் காலம் வரையில் வடமொழி நூலைப்பற்றிய பேச்சே இல்லை. ஆதலால், இவ் வடமொழி ஆக்கம் இரண்டுக்கும் இடைப்பட்ட கால மாகிய கி.பி. 1500க்குப் பின் செய்யப்பட்டிருக்கலாம். மேலும் வடமொழிப் பாடல்களின் இறுதிப் பாடலில் "ஏவல் வித்யாத் சிவஞானபோதே சைவார்த்த நிர்ணயம் - இவ்விதமாகச் சிவஞான போதத்திலே சைவார்த்த நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதைக் காண்க" என்ற தொடர் காணப்படுகிறது. இதனால் சிவஞான போதம் என்பது இந்த வடமொழிப் பாடலின் வேறானது என்பது தெளிவு.

கிடைத்துள்ள ரௌரவாகமப் பகுதிகளில் இப்பாடல்கள் காணப்படவில்லை. இதனாலும், மேற்குறிப்பிட்ட காரணங்களாலும் தமிழ்நூலே முதல்நூல் என்பதும், வடநூல் மெய்கண்டார் நூலின் மொழிபெயர்ப்பே என்பதும் நிச்சயமாகும். இதுபற்றி ரௌரவாகமம் வெளியிட்ட புதுச்சேரி பிரெஞ்சு நாட்டு இந்தியக் கலைக்கழகத்தின் ஆகம ஆராய்ச்சியாளரான பட் என்ற சாஸ்திரிகளை உசாவி, சில குறிப்புகளைத் தொகுத்து 1969 ஜனவரி சித்தாந்தம் இதழில் ஒரு கட்டுரை யாம் வெளியிட்டோம். அதன் பொருள் சுருக்கம் பின்வருவது: "ரௌரவாகம வித்தியா பாதத்தில் அமைந்துள்ள பாடல்களின் தலைப்புக்களை நோக்கும்போது, அங்கு பதி, பசு, பாசம், பாசநீக்கம், வீடுபேறு போன்ற சமயக் கருத்துக்கள் இடம் பெற்றிருக்க முடியாது. மெய்கண்டாருடைய சிவஞானபோத சூத்திரங்களின் அமைப்பு, நியாயம் என்ற தரிசன முறையில் அமைந்துள்ளது. ஆனால் இப்போது காட்டப்படுகின்ற ரௌரவாகமத்தின் பாச மோசன படலத்தின் பன்னிரண்டு சூத்திரங்களிலும் பயில்கின்ற பாஷை ஆகம பாஷையாக இல்லை. அன்றியும் இந்தப் பன்னிரண்டு சூத்திரங்களும், பிரெஞ்சுக் கழகத்தில் அச்சுக்குத் தயார் செய்து வைத்திருக்கும் ரௌரவாகமத்தின் ஏனைய பகுதிகளிலும் காணப்படவில்லை. ரௌரவாகம சூத்திரங்களில் மூன்று மட்டும் சுவாயபுவ சங்கிரகத்தில் காணப்படுகின்றன; மூலச் சுவாயம்புவத்தில் இல்லை. சங்கிரகம் மிகவும் பிற்காலம். பிற்காலத்தில் ஒருவர் இம்மூன்று பாடல்களையும் எடுத்து, வேறு ஒன்பது பாடல்களையும் சேர்த்து, பாசவிமோசனப் படலச் சூத்திரங்கள் எனப் பெயரிட்டு விட்டார்போலும்."

வடமொழிச் சிவஞான போதத்துக்குச் சதாசிவ சிவாசாரியர் செய்த வடமொழி உரையானது சித்தாந்த சூத்திரவிருத்தி என்ற பெயரோடு சென்னை அரசாங்கக் கையெழுத்து நூல் நிலைய வெளியீடாக 1963இல் வெளியிடப்பட்டது. வெளியிட்டோர் சைவசித்தாந்தம் பயின்றவர்கள் அல்லர் எனினும், இந்த அளவு வெளியிட்டமைக்கு நாம் நன்றி செலுத்தவேண்டும். இவ்வுரையுள் பதினெட்டு ஆகமங்கள், சித்தாந்த சாராவளி, கூர்மபுராணம், பூஜாஸ்தவம் போன்ற நூல்கள் மேற்கோளாகத் தரப்பட்டுள்ளன.

மெய்கண்டார் இச்சிறு நூலைப் பாடியநேரம் ஒரு சிறந்த நேரம். வட வேங்கடம் தென்குமரி இடைப்பட்ட தமிழ்நாட்டில் சைவசமயம் வளர்ந்தோங்குமாறு அவருடைய நூல் உதவிற்று.

சீடர் மூலமாக ஞான பரம்பரைகள் தோன்றி வளர்ந்து விரிந்து பல்கின. சைவமக்களின் சமய தத்துவங்களுக்கு மட்டும் அன்றி, வாழ்க்கைக்கே ஒரு வேலியாக அமைந்திருப்பது இதன் சிறப்பு. (மெய்கண்ட ஞானபரம்பரையின் விரிவை எமது 14 - 15 நூற்றாண்டு இலக்கிய வரலாற்று நூல்களில் விரிவாகக் காணலாம்.)

**உரை**

சிவஞான போதத்துக்கு ஏற்பட்ட உரைகள் பல. பாண்டிப் பெருமாள் விருத்தி என்பது பழையஉரை, 17ஆம் நூற்றாண்டு. சிவஞான சுவாமிகள் முதலில் பேருரையான சிவஞானபாடியமும் பின்னர் சிற்றுரையும் எழுதியிருக்கிறார்: 18ஆம் நூற்றாண்டு சிவாகமத் தேர்ச்சியுள்ள சைவர் உரை என்பது 1875இல் அச்சாயிற்று. திருவாவடுதுறை யாதீனத்துப் பழைய உரை என்பது 1952இல் வெளிவந்தது. ஏட்டு வடிவில் பல உரைகள் உள்ளன. பல்வேறு புத்துரைகளும் வெளிவந்துள்ளன. வேதாந்த உரையும் வெளிவந்திருக்கிறது. இன்னும் எத்தனையோ வகையான விளக்கங்களுக்கும் இத்தமிழ்ச் சூத்திரங்கள் இடங்கொடுத்துக் கொண்டிருக்கும்.

இச்சாத்திர நூலுக்குப் பதினோரடி உள்ள ஆசிரியப் பாவாலான சிறப்புப்பாயிரம் உள்ளது:

**மலர்தலை உலகின் மாயிருள் துமியப்**
**பலர்புகழ் ஞாயிறு படரின் அல்லதைக்**
**காண்டல் செல்லாக் கண்போல் ஈண்டிய**
**பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் இருள் தீர்ந்து**
**அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி**
**மயர்வற நந்தி முனிகணத் தளித்த**
**உயர்சிவ ஞான போதம் உரைத்தோன் –**
**பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்,**
**பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்,**
**பவநனி வன்பகை கடந்த**
**தவரடி புனைந்த தலைமை யோனே.**

எனினும், இதை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. "நூல் செய்தான் பாயிரஞ் செயற்பாலனல்லன் ..... இந்தப் பாயிரம் செய்தார் யாவரெனில், அவர் மாணாக்கராகிய, இதன்வழிச் சிவ ஞானசித்தி என்னும் நூலைச் செய்தாரும், நாற்பத்தொன்பது பெயரிற் சண்பைத் தலைவ நாயனாருமாகிய அருணந்தி தேவ தம்பிரான்" என்பது பாண்டிப்பெருமாள் விருத்தியுரை.

## அருணந்தி சிவாசாரியர்

### வரலாறு

இவர் சரித்திரமும் தமிழ்நாடு நன்கறிந்தது. இவர் சிவா சாரியர் மரபில் தோன்றியவர். நடுநாட்டில் உள்ள திருத்துறை யூரில் வாழ்ந்தார். இளமையில் சகல வேத ஆகமங்களையும் ஓதி, தக்கபுலமை பெற்றிருந்த காரணத்தினால் இவருக்குச் சகலாகம பண்டிதர் என்ற சிறப்புப்பெயர் வந்தது. இவரது இயற்பெயர் தெரியவில்லை. அக்கால முறைப்படி வேளாளருக்குச் சிவா சாரியர் குலகுருவாயிருந்தனர். இவர் திருப்பெண்ணாகடத்தில் வாழ்ந்த அச்சுத களப்பாளர் என்பவருக்குக் குலகுரு.

களப்பாளர் புத்திரப்பேறு இல்லாது கவலையுற்று இருந் தமையும், குருவாகிய இவர் திருமுறையில் கயிறு சாத்திப் பார்த்துத் திருவெண்காடு வழிபடும்படி அவரை ஆற்றுப்படுத்தி அவரும் அங்ஙனமே வழிபாடு ஆற்றியிருந்து மெய்கண்டார் என்ற புதல்வரைப் பெற்றமையும், மெய்கண்டார் வரலாற்றில் பார்த்தோம்.

இவர், மெய்கண்டார் பிறந்த சில ஆண்டுகள் கழித்து, தம் மாணாக்கரையும் அவரது குழந்தையையும் பார்க்க எண்ணி, அவர்கள் அப்போது தங்கி இருந்த திருவெண்ணெய் நல்லூ ருக்குச் சென்றார். சகலாகம பண்டிதர் செல்லுந்தோறும் தம் முடைய சாத்திரங்கள் அடங்கிய ஏட்டுச் சுவடிகளையெல்லாம் ஒரு வண்டியில் உடன் ஏற்றிக்கொண்டு சென்றார் என்று சொல்வார்கள். இவர் சென்றபோது இளம்பிள்ளையாகிய மெய்கண்டார், தம்முடைய மாணாக்கரோடும் சுற்றுப் பக்கத்தி லிருந்து தம்மிடம் உபதேசம் கேட்கவந்த பலரோடும் இருந்து, அவர்களுக்குச் சாத்திர உபதேசம் செய்து கொண்டிருந்தார். இதைப் பண்டிதர் கண்டார். தம்முடைய கல்விப் பெருக்கினாலே எதிரிலிருந்த மெய்கண்டாரை இவர் இளம்பிள்ளையாகக் கண்டாரே ஒழிய, இறைவனுடைய திருவருளைப் பெற்ற சிவானுபூதிச் செல்வராகக் காணவில்லை. ஆசாரியராக இருந்து பழகிய இவருக்கு மெய்கண்டாரைப் பார்த்த உடனே, கேள்வி கேட்கவே தோன்றிற்று. அப்போது அவர் உயிரைப் பந்தித்து நிற்கும் பாசங்கள், அவற்றுள்ளும் உடன் தோன்றியதாயுள்ள ஆணவம் என்பது பற்றி உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார்.

"ஆணவ மலத்தின் சொரூபம் யாது?" என்று இவர் அவரை நோக்கிக் கேட்டார். ஆணவம் எல்லாம் கழன்ற நிலையில் விளங்கிய மெய்கண்டார், நிதானமாக, சொல்லே இன்றி, எதிரில் வந்த பெரியவர் இன்னார் என்று அறியாமலே, இவரிடம் இயல் பாகத் தம் உள்ளத்தில் உதித்த அருள் பெருக்கினாலே, தம் வலக்கைச் சுட்டுவிரலால் வினவியவரையே சுட்டிக்காட்டித் தம்முடைய திருவருள் நோக்கத்தை இவர் மீது செலுத்தினார். இவ்வாறு நோக்கப்பெற்ற சகலாகம பண்டிதர் அந்நிலையில் தம்முடைய அகக்கண் திறக்கப் பெற்றவராய், தம்முடைய ஆணவ முனைப்பினை உணர்ந்து நடுங்கிப் பரம்பொருளே தம்மை ஆட்கொள்ளும் பொருட்டு இந்த ஆசாரியத் திருமேனி கொண்டு வந்தது என்பதை உணர்ந்து, அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். மெய்கண்டார் இவரை அப்போதே ஆட்கொண்டு, இவருக்கு ஞானதீட்சை செய்து அனுபவ ஞானத்தைத் தந்து, அருள்நந்தி எனத் தீட்சா நாமமும் சூட்டினார். அருள்நந்தியே மெய்கண்டார் மாணாக்கர் பலருள்ளும் முதல் மாணாக்கராய் இருந்து, அவர் சிவத்தொடு கலந்தபின் ஆசாரியத் தலைமையை ஏற்று, மாணாக்கருக்கு உபதேசம் செய்து, சைவசித்தாந்த நெறியை வளர்த்து வந்தார்.

மெய்கண்டாரின் திருவருள் நோக்கம் பெற்றதுமுதல் இவர் அருள்நந்தி என்ற பெயர் வழங்கப் பெற்றார். இவர் பின்னர் சண்பை என்ற மறுபெயருடைய சீகாழியில் தம் மாணாக்க ரோடு சிலகாலம் தங்கி இருந்தார் என்று தெரிகிறது. அது காரணமாக இவருக்குச் சண்பையர் தலைவர் என்ற பெயரும் உண்டு என்று பின்வந்தோர் குறிப்புக்களால் அறிகிறோம்.

இவரிடம் உபதேசம் பெற்றவர் பலர். அவர்களுள், கடந்தையிலிருந்து வந்த மாணாக்கரான பராசர மரபில் உதித்த மறைஞான சம்பந்தர் என்பவருக்கு ஞானோபதேசம் செய்து ஆசாரியத் தலைமை நல்கி ஒரு புரட்டாசிப் பூசத்தில் இவர் சிவத்தொடு கலந்தார். இதுவே சம்பிரதாயமாக வழங்கி வரும் அருணந்தி சிவத்தின் வரலாறு. இவர் காலம் 13ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் திருவாரூரில் வாழ்ந்த சாமிநாத தேசிகர் என்பவர் மெய்கண்டார் அருள்நந்தி மறை

ஞான சம்பந்தர் உமாபதி ஆகிய சந்தானகுரவர் நால்வருடைய சரித்திரத்தையும் 126 செய்யுளில் ஒரு புராணமாகச் சந்தானா சாரியர் புராணம் என்ற பெயரில் பாடியிருக்கிறார். பரம்பரை யாக வழங்கும் வரலாறுகள் இதனுள் சொல்லப்பட்டிருக்கின்றன.

அருள்நந்தி செய்த நூல்கள் இரண்டு; சிவஞான சித்தியார், இருபா இருபது. இவ்விரண்டும் மெய்கண்ட சாத்திரங்கள் என்னும் சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கின் பகுதியாகும்.

### சிவஞான சித்தியார்

சிவஞானசித்தி நூலானது, பக்குவான்மாவானவன் மெய் கண்டார் செய்த நூலினாலே சிவஞானபோதம் பெற்று இந்த நூலினாலே சிவஞானம் சித்திக்கப் பெறுகிறான் என்பதைத் தன் பெயரளவிலே உணர்த்துகின்றது. இது பரபக்கம் சுபக்கம் என்ற இரண்டு பாகமாக உள்ளது.

### பரபக்கம்

பரபக்கம் (பூர்வபட்சம்) என்ற பாகத்தில் பாயிரப் பாடல்கள் 11; பின்னர் உலகாயதன் தொடங்கி சௌத்திராந்தி கன் யோகாசாரன் மாத்தியமிகன் வைபாடிகன் நிகண்டவாதி ஆசீவகன் பட்டாசாரியன் பிரபாகரன் சத்தப்பிரமவாதி மாயவாதி பாற்கரியன் நிரீச்சுரசாங்கியன் பாஞ்சராத்திரி என்ற முறையில் பதினான்கு சமயவாதிகளின் வாதத்தைத் தர்க்கரீதி யாக எடுத்துக்கூறி, சித்தாந்தியின் மறுப்பைத் தெரிவிக்கிறது. இவற்றுள், இறுதியான பாஞ்சராத்திரி மதமும் மறுப்பும் மட்டும் தர்க்கரீதியாக இல்லாமல், புராணக்கதையைக் கூறிக் கண்டிப்பதாக உள்ளது. வாதங்களைக்கூறும் இடத்து வாதங்கள் அவ்வச் சமயத்தார் கொள்கைக்குச் சிறிதும் முரணாமல் அவருக் குரிய சாத்திரம் போலவே அமைந்துள்ளன. பிற்காலத்தில் சில சமயத்தார் தங்கள் சமயக்கருத்துக்கு மேற்கோளாக இந்தப் பாடல்களையே காட்டுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பரபக்கத்தின் பாடல் தொகை 301. பரபக்கத்துக்கு உரைசெய்தார் திருவொற்றியூர் ஞானப்பிரகாசர், திருவொற்றியூர் தத்துவப் பிரகாசர், வேலப்பபண்டாரம் என்போர். மதுரை ஞானப் பிர காசரும் சிவாக்கிரயோகியும் செய்ததாக அறிகிறோம்; ஆனால் இருவர் உரையும் கிடைக்கவில்லை. பெரிதும் வழங்குவது தத்துவப் பிரகாசர் உரையே.

**சுபக்கம்**

அருள்நந்தியார் தமது பக்கத்தைக் கூறுவதாகிய நூற்பகுதி சுபக்கம் என்ற பெயருடையது. இங்கு ஆசிரியர் தம் குருவாகிய மெய்கண்டாரின் நூலான சிவஞானபோதத்தை வைத்து அதன் பன்னிரு சூத்திரப்பாகுபாட்டை ஒட்டியே தம்நூலைப் பெரும் பாலும் எண்சீர் ஆசிரிய விருத்தங்களாலும் சிறுபான்மை அறு சீர் விருத்தங்களாலும் பாடியிருக்கிறார். இது, மூல நூலுக்குச் செய்யுளால் இயன்ற விரிவான பாஷ்யம் என்று கருதலாம். இதன் பாடல்தொகை 328.

சுபக்கத்தின் பாயிரப்பகுதி 6 பாடல். பின் நூலின் முகப்பில் ஆசிரியர் அளவை என்ற தலைப்பில் 14 பாடல்களில் தாம் தம்முடைய சமயவாதத்துக்குக் கருவியாகக் கொள்ளும் தர்க்க முறைகளான காண்டல் கருதல் உரை முதலான பிரமாணங் களை விளக்கிக் கூறுகிறார். தருக்க அறிவின்றிச் சமய நூலாராய்ச்சி கூடாது என்பது அக்காலத்தோர் கருத்து. எனவே, இவர் இங்கு அளவை கூறுகின்றார். இவரைப் பின்பற்றி, தத்துவப் பிரகாசமும் (14 நூ.) சிவநெறிப் பிரகாசமும் (16 நூ.) அளவை இலக்கணம் போன்ற தருக்கப்பகுதி கூறியே நூல் தொடங்குகின்றன.

இந்நூலின் சிறப்பு, இது ஒரு சிறந்த சாத்திர நூல் மட்டு மன்றி, முழு அளவு இலக்கிய நூலாகவும், ஓரளவு தோத்திர நூலாகவும் கொள்ளும் சிறப்புடையதென்பது. தொட்ட தொட்ட இடங்களெல்லாம் சிறப்பான இலக்கியமணம் கமழும். நூலில் பாதிக்கு மேற்பட்ட பாடல்களை உதாரணம் காட்டலாம்; அவை அனைத்தையும் இங்கு காணவும் முடியும், பிற மதங் களைக் கண்டிக்குமிடங்களில் நகைச்சுவையோடு இவர் கண்டிப் பதைப் பரபக்கத்தில் காணலாம். பாயிரப்பகுதி மிகவும் சிறப் பானது. மெய்கண்டார் துதி, ஆசிரியர் உள்ளத்தைப் பிழிந்து தருவதாக உள்ளது:

பண்டை மறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
    பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்ட இரு தயகமல முகைக ளெல்லாம்
    கண்திறப்பக் காசினிமேல் வந்தஅருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவும்
    மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
    பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்.

மிகுந்த அடக்கமுடையவர் என்பதை நூலின் அவையடக்கம் நன்கு உணர்ந்தும். பிற மதங்களை இவர் கண்டித்தபோதிலும் கூட, சமயப்பொறை இவர் உள்ளத்தில் நிரம்ப உண்டு என்பதை நூலெங்கும் காணலாம். சிவபெருமான் துதி இதற்கு எடுத்துக்காட்டு:

அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்வேறாம்
குறியது உடைத்தாய் வேதா கமங்களின் குறியி றந்தங்கு
அறிவினில் அருளால் மன்னி அம்மையோ டப்ப னாகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்.

எந்த வடிவத்தோடு யார் எங்கு தியானித்தாலும் அங்கு அம்மையப்பனே எழுந்தருளுகிறான் என்பது அனைவரும் அறிந்த அரிய பாட்டு:

யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி ஆங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படும்இறக்கும் பிறக்கும் மேல் வினையும் செய்யும்
ஆதலால் இவையி லாதான் அறிந்தருள் செய்வன் அன்றே.

எது சமயம், அதுகூறும் உண்மைப்பொருள் எது, எது சாத்திரம் என்ற கேள்வியைக் கேட்டு, இதுதான் சமயம் இதுதான் பொருள் இதுதான் சாத்திரம் என்று யாதொன்று வரையறை செய்து, வேறொன்றல்ல என்று மறுத்துச் சொல்லுகிறதோ அது அல்ல என்று வற்புறுத்தி இவர்கூறும் பாடல், சமயப் பொறைக்கே இலக்கணமாக உள்ளது:

ஓது சமயங்கள் பொருள் உணரும் நூல்கள்
　　ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும்; இவற்றுள்
யாது சம யம்பொருள் நூல் யாதிங் கென்னில்,
　　இதுவாகும் அதுவல்ல தெனும் பிணக்க தின்றி,
நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண
　　நின்றதுயா தொருசமயம், அதுசமயம் பொருள் நூல்;
ஆதலினால் இவையெல்லாம் அருமறைஆ கமத்தே
　　அடங்கியிடும், அவையிரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்.

இதேபோல ஈசனுக்கு அன்பில்லாதவர்களைப் பற்றி மிகவும் கோபமாகச் சொல்லும் பாடல் எல்லோர் உள்ளத்தையும் துணுக்கென் று விழிக்கச் செய்வது:

ஈசனுக் கன்பில்லார் அடியவர்க்கன் பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன் பில்லார்;
பேசுவதென்? அறிவில்லாப் பிணங்களை நாம் இணங்கில்,
பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர்; விடுநீ;
ஆசையொடும் அரனடியார் அடியாரை அடைந்திட்டு,
அவர்கருமம் உன்கரும மாகச் செய்து,
கூசி மொழிந்து அருள்ஞானக் குறியில் நின்று,
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே.

*வினை ஓடும் வழியை மிக நன்றாக ஒரு பாடலில் கூறுகின்றார்:*

யான்செய்தேன் பிறர்செய்தார் என்னது யான் என்னும்
இக்கோணை ஞானஎரி யால்வெதுப்பி நிமிர்த்துத்
தான் செவ்வே நின்றிட, அத் தத்துவன் தான் நேரே
தனையளித்து முன்நிற்கும், வினையொளித்திட் டோடும்;
நான் செய்தேன் எனுமவர்க்குத் தானங் கின்றி,
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்கும் கன்மம்;
ஊன்செய்யா ஞானந்தான் உதிப்பின் அல்லால்,
ஒருவருக்கும் யானெனதிங் கொழியா தன்றே.

*சிவஞானசித்தியின் சாரம் என்று சமயம் வல்ல அன்பர்கள் ஒரு பாடலைக் குறிப்பிடுவதுண்டு. சிவபிரான் நிராதாரமாய்த் தோன்றும் நிலையை இது விளக்குகிறது.*

அறியாமை அறிவகற்றி அறிவி னுள்ளே
அறிவுதனை அருளினான் அறியாதே அறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடும்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாகில்,
பிறியாத சிவன்தானே பிறிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெல்லாந் தானாய்த் தோன்றி,
நெறியாலே இலையெல்லாம் அல்ல வாகி,
நின்றென்றுந் தோன்றிடுவன், நிராதார னாயே.

*சிவஞான சித்தியின் சிறப்பைக்கூறும் பாடல்கள் மிகப் பல. 'தண்டமிழின் மேலாம் தரம்' கூறுகின்ற வெண்பா சொல்லும் ஆறு நூல்களில் இதுவும் ஒன்று.*

வள்ளுவர் சீர் அன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை – ஒன்றியசீர்த்

தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாம் தரம்.

பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
ஓர் விருத்தப் பாதிபோ தும்.

என்பது சிவபோகசாரம்.

பாதி விருத்தத்தால் இப்பார் முழுதும் ஆக உண்மை
சாதித்தார் பொன்னடியைச் சாரும் நாள் எந்நாளோ?

என்ற தாயுமானவர் பாடலும் சிவஞானசித்தியாரையே சுட்டு கிறது. இங்கு கூறிய பாதி விருத்தம் 'அறியாமை அறிவகற்றி' என்ற பாடலின் முதற்பாதி. சித்தியார் தோன்றிய பிறகு சித்தி என்றபெயர் வைத்துக்கொண்ட நூல்கள் மிகப் பல. பேரானந்த சித்தி, அறிவானந்த சித்தி, ஞான சித்தி என்பன காண்க. சிவத்தின் மேல் தெய்வம் இல்லை, சிவஞானசித்திக்குமேல் சாத்திர மில்லை என்பது பழமொழி.

சிவஞானசித்தியார் சைவசித்தாந்த ஞானசாத்திரங்களில் அளவால் மிகப்பெரியது. அன்று முதல் இன்று வரையுள்ள சைவ சமயக் கருத்தின் விரிவுக்கெல்லாம் இது இடங்கொடுப்பது; சமய ஆராய்ச்சியினுள் புகுவோருக்கு இது நன்கு விளங்கும்.

இராமானுசருக்குப் பின் 13ஆம் நூற்றாண்டில் வைணவ சமயமலர்ச்சி மிக்க விரிவாக அமைந்தது. சைவ சமயத்திலும் புதிய கிளர்ச்சி ஏற்பட்டு நாடெங்கும் சோழர்களால் கற்கோயில் அமைக்கப் பெற்றது போல் ஞானிகளால் ஞானசாத்திரக் கோயில்கள் அமைக்கப்பெற்றன. அவ்வளர்ச்சிக்கான முயற்சியில் ஓர் அங்கமே அருள்நந்தியாரின் நூல் என்று நாம் கருத வேண்டும்.

### உரைகள்

சித்தியார் சுபக்கத்துக்கு உரைகள் மிகப் பல. மறைஞான சம்பந்தர், சிவாக்கிரயோகி, நிரம்ப அழகிய தேசிகர், ஞானப் பிரகாசர், சிவஞானயோகிகள் ஆகியோர் எழுதிய விரிவுரைகளும், சுப்பிரமணிய தேசிகர் எழுதிய பதவுரையும், அறுவர் உரை என்று 1895இல் அச்சிடப்பட்டன. இவையன்றி அச்சாகாத பழைய உரைகளும் ஏட்டில் உள்ளன. யாழ்ப்பாணத்துத் திருவிளக்கம் எழுதிய புத்துரை மிக்க சிறப்புடையது. சிதம்பரம் சிவப்பிரகாசம் பிள்ளை சித்தியார் வினாவிடை எழுதியிருக்கிறார்.

## இருபா இருபது

வெண்பா ஆசிரியப்பா மாறி மாறி அந்தாதித்து வருகின்ற இருபது பாடல்களைக் கொண்ட சிறுநூல். மெய்கண்டாரைத் துதிக்கு முகமாக வினாவும் விடையுமாய்ச் சாத்திர நுண்பொருள் களை அருள்நந்தி இங்கு விளக்குகிறார். செய்யுள்நடை மிக்க சிறப்புடையது. ஆற்றல் மிக்கது. இதற்குச் சீகாழித் தத்துவநாதர், மதுரைச் சிவப்பிரகாசர், நமச்சிவாயத் தம்பிரான் முதலியோர் உரை எழுதியிருக்கிறார்கள். இவற்றுள் தத்துவநாதர் உரையே சித்தாந்த சாத்திரங்கள் அனைத்திலும் காலத்தால் மிகவும் முற்பட்ட உரை. பெரிதும் பயிலப்படுவது தம்பிரான் உரை.

> இருள் வெளி யாகும் மருளினை யறுத்து
> வந்து புகுதலும் சென்று நீங்கலும்
> இன்றி ஒன்றாய் நின்றஅந் நிலையில்
> ஒன்றா காமல் இரண்டா காமல்
> ஒன்றும் இரண்டும் இன்றா காமல்
> தன்னது பெருமை தாக்கா னாயினும்
> என்னது பெருமை எல்லாம் எய்தித்
> தன்னை எனக்குத் தருவதை யன்றியும்
> என்னை எனக்கே தந்து ........ நின்ற
> மன்னன். (20)

என்ற வரிகள் நூலின் தன்மையை உணர்த்தும்.

இருபா இருபதின் 12ஆம் பாடல் பின்வரும் அப்பர் தேவாரத்தைக் குறிப்பிடுகிறது. இப்பாடல் அடங்கன் முறை ஏடுகளில் காண்பதற்கில்லை. நமசிவாயத் தம்பிரான் உரை எழுதிய காலத்துப் பாடல் கிடைத்தது போலும்:

> பன்னி லூறும் பழத்தி லின்சுவை
> என்னி லூறி எனக்கே களிதரும்
> உன்னில் உன்னி உனாவிடில் விட்டிடும்
> என்னுள் ஈசன் இருந்த இயற்கையே.

## சிவஞானபோதச் சிறப்புப் பாயிரம்

'மலர்தலை உலகின் மாயிருள் துமிய' என்ற இப்பாடலை (பக்கம் 209 பார்க்க) அருணந்தி பாடியதாகப் பாண்டிப் பெருமாள் தம் சிவஞானபோத உறையுள் கூறுகிறார்: "இந்தப் பாயிரம் செய்தார் யாவர் என்னில் அவர் மாணாக்கராகிய சிவ

ஞானசித்தி என்னும் நூலைச் செய்தாரும் நாற்பத்தொன்பது பெயரில் சண்பைத் தலைவ நாயனாருமாகிய அருணந்திதேவ தம்பிரான்.” மாணாக்கர் சிறப்புப்பாயிரம் செய்தல் மரபு.

அருணந்தி சிவத்தின் மாணாக்கர் பலர். அவருள், மறை ஞான சம்பந்தர் வரலாறே சிறிதளவு இன்று தெரிகின்றது.

அருணந்தி சிவாசாரியரைச் சண்பையர் தலைவர் என்று தத்துவப் பிரகாசர் மதுரைச் சிவப்பிரகாசர் பாண்டிப்பெருமாள் ஆகிய மூவரும் குறிப்பிடுகிறார்கள். சண்பை என்பது ஒரு வகைப்புல். சண்பைப்புல் உள்ளமையால் சீகாழி சண்பையாயிற்று. ஆகவே, அருள்நந்தி முதலில் சண்பையாகிய சீகாழியில் பிறந்து, சகலாகம பண்டிதராகி, அச்சுத களப்பாளரின் குருவாக இருந்து, அவரைத் திருவெண்காட்டுக்கு அனுப்பினார். பின்னர் தாம் மெய்கண்டாரின் மாணாக்கராகி, சிவஞானசித்தியாரும் இருபா இருபதும் பாடி, மறைஞான சம்பந்தருக்கு உபதேசம் செய்து, திருத்துறையூரில் முத்தியடைந்தார் என்று நாம் கருதலாம். இது பல்லோர் குறிப்பையும் தழுவிக்கொண்ட வரலாறு. சண்பையர் தலைவர் சண்பையர்தம் நாதன் என்று குறிப்பிடுவதால், சண் பையர்குடி என்றொரு குடி உண்டென்றும் இவர் அக்குடிக்குத் தலைவர் என்றும் கருதமுடியும்: ஆனால் இக்கருத்துக்கு வேறு ஆதாரமில்லை.

## மனவாசகங் கடந்தார்

மெய்கண்ட சாத்திரங்களுள் ஒன்றான உண்மை விளக்கம் என்ற சிறுநூலைச் செய்தவர் மனவாசகங் கடந்தார்; சிறப்புப் பாயிரம் இதைத் தெரிவிக்கிறது:

> மன்னதிகை வாழும் மனவா சகங்கடந்தான்
> மின்னனைய வாழ்விலுறா மெய்கண்டான் – பன்னுமறை
> வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள்வழுவா
> உண்மைவிளக் கஞ்செய்தான் உற்று.

வண்மை தரும் ஆகமநூல் வைத்த பொருள்வழுவா - உண்மை விளக்கம் என்று இதில் வருவன, நூலின் காப்புச் செய் யுளுக்குத் தொடக்கமாயுள்ள வரிகள். இவர் மெய்கண்டாரின் மாணாக்கர் என்று இப்பாடல் குறிப்பிடுகிறது. மெய்கண்டாரின் மாணாக்கர் நாற்பத்தொன்பது பேர் என்பது வரலாறு. அருணந்தி சிவாசாரியர், மாணாக்கரும் அடுத்த ஆசாரியரும் ஆவார்.

ஆகவே, மனவாசகங் கடந்தார் இவருடைய ஒருசாலை மாணாக்கராகிறார். இவர் திருவதிகை என்ற ஊரினர் என்பதையும் இப்பாடல் தெரிவிக்கிறது. இவர் வரலாறுகள் வேறு எவையும் புலப்படவில்லை.

மனவாசகங் கடந்தான் என்பது சிவபெருமான் பெயராகத் திருவாசகம் கூறும்:

> எனைநான் என்பது அறியேன்பகல் இரவு ஆவதும் அறியேன்
> மனவாசகம் கடந்தான் எனை மத்த உன்மத்தன் ஆக்கி
> சினமால்விடை உடையான் மன்னு திருப்பெருந்துறை உறையும்
> பனவன் எனைச் செய்த படிறு அறியேன் பரம் சுடரே.

திருமந்திரம் (2575) 'மனவாசங்கெட்ட மன்னனை நாடே' என்று கூறும்.

வாக்கும் மனமும் கடந்திருத்தல் இறைவன் நிலை. இதையே உண்மை விளக்கத்தின் 49ஆம் பாடலில் இவ்வாசிரியர் கூறுகிறார்:

> வாக்குமன மிறந்த வான்கருணை யாளன் உருத்
> தாக்கறவே நிற்கும் தனி முதல்வா.

இந்நூல் வெண்பாவினால் ஆனது. காப்பு வெண்பா, நூல் 53, சிறப்புப்பாயிரம் ஒன்று, ஆக 55 பாடல்கள். ஆசிரியர் பெயர் விளங்காத பழைய பொழிப்புரை பதவுரைகளோடு பலமுறை அச்சிடப்பட்டுள்ளது. வேறுரை இருப்பதாகவும் சொல்வர்; அச்சிடவில்லை.

1, 2, 23, 27, 30, 39, 49 ஆகிய பாடல்கள் ஆசிரியர் தம் குருநாதரைக் கேட்கும் வினாக்கள்; மற்றவை ஆசிரியர் கூறும் விளக்கம்; 53ஆம் பாடல் உண்மை உணர்த்தப்பெற்ற மாணாக்கர் ஆசிரியருக்குக் கூறும் நன்றி - என்ற முறையில் நூல் செய்யப்பட்டுள்ளது.

> ஆறாறு தத்துவமேது ஆணவமேது அன்றேதான்
> மாறா வினைஏது மற்றிவற்றின் – வேறாகா
> நானேது நீ ஏது நாதன்நடம் அஞ்செழுத்துத்
> தானேது தேசிகனே சாற்று. (2)

என்ற பாடல் மாணாக்கரின் பொதுவான கேள்வி. நூல் முழுமையும் விடை.

இச்சிறுநூல் சைவசித்தாந்த சாத்திர நூல்களில் முதலாவது பயிலத்தக்க கருவி நூலாகும். தத்துவங்களின் செய்தியை இது கூறுவது. தத்துவம் - உண்மை. சைவசமயத்தில் தத்துவங்கள் 36 என்பது சைவசாத்திரம். ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சுத்த தத்துவம், பாசம், ஆன்மா, சிவரூபம், ஐந்தெழுத்து, முத்தி, வழிபாடு ஆகிய பொருள்களை இந்நூல் கூறுகிறது. நடராச தத்துவத்தை இதுபோல் மிகச் சுருக்கி மிக விளக்கிய நூல் வேறில்லை.

எட்டுப் பாடல்களில் இதைக் கூறுகிறார். பின்னிரு பாடல் களும் நூலின் இதயம் எனத்தக்கவை:

> தோற்றம் துடியதனில்; தோயும் திதி அமைப்பில்;
> சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்; – ஊற்றமா
> ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்; முத்தி
> நான்ற மலர்ப்பதத்தே நாடு.
>
> மாயை தனை உதறி, வல்வினையைச் சுட்டு, மலம்
> சாய அமுக்கி, அருள் தானெடுத்து – நேயத்தால்
> ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
> தான், எந்தை யார் பரதம் தான்.

சைவ சமயத்தின் அடிப்படைக் கருவி நூல்களில் இது மிகவும் முக்கியமானது. ஆகமப்பொருளை இது கூறுகிறது. இது தோன் றியபின் விளக்கம் என்று இதுபோன்ற பெயரை அமைத்துக் கொண்ட சைவநூல்கள் மிகப் பல.

இவர் மெய்கண்டாரின் மாணாக்கர் எனவே, அவர் கால மாகிய 13ஆம் நூற்றாண்டே (இடைப்பகுதி) இவர் காலமும் ஆகிறது. உண்மை விளக்கம் செய்தகாலம் சகம் 1177 (கி.பி. 1255) என்று பழைய வரலாறு கூறும். சாசன வாயிலாக மெய்கண்டார் காலம் கி.பி. 1232ஐ ஒட்டியிருக்கலாம் என்று தெரிகிறது. அவர் மாணாக்கராகிய மனவாசகங் கடந்தார் காலம் கி.பி. 1255ஆக இருக்கலாம் என்று கருதுவது பொருத்தமே.

கச்சிப்பதி மனவாசகங் கடந்தர் என்பவர், அனுட்டானாதி கிரியைகளின் பயன் யாது என்று தம் குருவை வினவுவதாக வுள்ள 65அடி கொண்ட குருமொழி என்ற பெயரமைந்த சிறு நூல் உரையுடன் பலமுறை அச்சாகியுள்ளது; இது காலத்தால் மிகவும் பிற்பட்டது என்று தெரிகிறது. மெய்கண்டார் மாணாக்க ரான மனவாசகங் கடந்தார் இதைச் செய்தாரல்லர்.

## காலம் பற்றிய குறிப்பு

இவ்வாறு மெய்கண்டாரும் மனவாசகங் கடந்தாரும் வாழ்ந்த காலத்தை அப்படியே ஒப்புக்கொள்வது பற்றிச் சில ஐயங்களும் எழுகின்றன. முன்னமே கூறிய இராசராச சோழன் III காலத்துத் திருவண்ணாமலைக் கல்வெட்டு பின்வருவது:

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீராசராச தேவர்க்கு யாண்டு 16வது இஷப நாயிற்று இருபத்தெட்டாந் தியதியும் சனிக்கிழமையும் பெற்ற மிருகசீரிஷத்து நாள் உடையார் திருவண்ணாமலையுடைய நாயனார் கோயில் ஸ்ரீமாகேஸ்வரக் கண்காணி செய்வார்களும் தேவர்கன்மி கோயிற் கணக்கனும் திருவெண்ணெய் நல்லூருடையான் மெய்கண்ட தேவன் ஊருடைய பெருமாளான எடுத்தது வலிய வேளார்க்குக் கல்வெட்டிக் கொடுத்த பரிசாவது: இந்நாயனார் தேவதானம் செங்குன்றநாட்டு மாத்தூரான இராசராச நல்லூரில் இவர் வெட்டுவித்த மெய்கண்டதேவப் புத்தேரிக்குக் கடமையிறுக்கு மிடத்து திருத்தின ஆண்டு குழி நாழியும் பாடி காவலும் கொள்ளக் கடவதாகவும். இதன் எதிராமாண்டு கால் வரிசையும் பாடி காவலும் இறுக்கக் கடவதாகவும். இதன் எதிராம் ஆண்டு முதல் காலே அரைக்கால் வரிசையும் பாடிகாவலும் உட்பட வேலி எண்பதின்கலம் இறுக்கக் கடவதாகவும். இவ்வேந்தலுக்கு எல்லை அரசுக்குக் கிழக்கு நீரேறின நிலம் திருத்திப் பயிர் செய்யக் கடவதாகவும். இவ்வேந்தலுக்குப் புன்செய் நிலம் அரசுக்குக் கிழக்குத் திருக்கோவலூர் பெருவழிக்கு வடக்கு இவ்வேந்தலைச் சூழ்ந்த நிலத்திலே அஞ்சுவேலிதரை எல்லையாய் பண்டாரத்துக்குக் கடமை இறுக்கக் கடவதாகவும். இவ் வேந்தலில் திருத்தப்பட்ட நிலத்திலே இவ்விராசராச நல்லூரில் எழுந்தருளுவிக்கிற உடையார் மெய்கண்டீசுவரமுடைய நாயனார்க்குப் பூசைக்கும் அமுது படிக்கும் மூன்றில் ஒன்று தேவதானமாகவும் இவ்வேரிக்கு ஏரிப்பட்டி மன்றாட்டுப் பட்டியுமாக ஐஞ்னூறு குழி விடக்கடவதாகவும். இவ்வேந்தல் தம் பொருளிட்டு வெட்டுகிற நிலம். இவ்வேரியும் நிலமும் குடி நீங்காத் தேவதானமாய் இவர்க்குச் சந்திராதித்தவரையும் காணியாய் விற்றெற்றிப் பரிக்கிரகஞ் செல்லக் கடவதாகவும்.

இப்படிச் சம்மதித்துக் கல்வெட்டிக் கொடுத்தோம் இவ்வனை வோம். இது பன்மாஹேஸ்வரரகைக்ஷ.

இராசராசனுடைய பதினாறாம் ஆண்டு, கி.பி. 1232. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மெய்கண்டதேவரே சிவஞானபோதம் பாடிய மெய்கண்டார் என்பதற்குச் சான்று இல்லை. இவர் பெயர் ஊருடைய பெருமாளான எடுத்தது வலிய வேளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவருடைய தந்தையைப் பற்றிய பேச்சே இங்கு இல்லை; வரலாறோ சுவேதவனப் பெருமாள் என்று சொல்கிறது. அன்றியும், இவர் மெய்கண்டீசுவரம் என்ற ஒரு சிவாலயம் அமைத்தார் என்றும் அதற்கு ஐந்து வேலி நிலம் வழங்கினார் என்றும் சொல்லப்பட்டுள்ளது. மெய்கண்டாரின் தந்தை பிரசித்தமான பெயருடைய அச்சுத களப்பாளர். மெய் கண்டாரே தம் பெயரால் ஒருகோயில் எடுத்தார் என்பது ஆராயத்தகுந்த செய்தி. அரசர் இவ்வாறு செய்திருக்கிறார்களே யன்றி, ஏனையோரில் பின்வந்தோர், முன்வந்தோர் பெயரில் கோயில் எடுப்பது மரபு. மெய்கண்டார் கோயில் கணக்கர் என்று சொல்லப்பட்டுள்ளது. இக்கருத்துக்கள் மரபாக வழங்கிவரும் மெய்கண்டார் வரலாற்றுக்கு வேறாக உள்ளன. எனவே, இம் மெய்கண்டதேவர் ஒருகால் சாத்திரம் பாடிய மெய்கண் டாருக்குப் பின்வந்தவராக இருத்தல்கூடுமா என்ற எண்ணம் எழுகிறது.

திருவதிகை மனவாசகம் கடந்தார் வரலாறும் இதுபோன் றதே. இவர் பெயரால் திருவதிகைத் தெற்கு வீதியில் ஒரு மடம் இருக்கிறது. "விக்கிரம சோழதேவர்க்கு யாண்டு ஆறாவது (கி.பி. 1124) பிரம்மதேசம் காய்வான் தண்டலமாகிய சதுர்வேதி மங்கலத்து .... பள்ளீசுரமுடையார்க்கு அர்ச்சனைக்கும் அமுது படிக்கும் நிமந்தமில்லாமையால் திருப்பணிசெய்கிற ஆண்டார் மனவாசகங் கடந்தார் எங்களிடையில் விலையிட்டுக் கொண்ட பூமியாவது ..." எனவே, இங்கு ஒரு சிவபக்தர், மனவாசகங்கடந் தார் என்பவர், இருந்தார் என்று தெரிகிறது. இவர் காலம் ஆசிரியர் மனவாசகங் கடந்தாருக்கு நாம் வரையறை செய் துள்ள காலத்துக்கு (1255) 130 ஆண்டுகள் முற்பட்டது என்றும் தெரிகிறது. இவரும் திருவதிகை என்பதனால் குழப்பம் ஏற்படு கிறது. இவரே உண்மை விளக்கம் செய்தவராகவும் இருக்கலாம். ஆனால் ஆராய்ச்சியாளர் அனைவரும் அடுத்த நூற்றாண்டையே

இவர் காலமாகக் கொள்கிறார்கள். இதற்கு ஆதாரம் இல்லை. ஆதலால், மெய்கண்டார் மனவாசகங்கடந்தார் இருவருடைய காலத்தையும் நன்கு நுனித்து ஆராயும்போது, இன்று ஒப்புக் கொள்ளுகின்ற காலத்திற்கு இவ்விருவரும் முற்பட்டவர்கள் என்றும் கருத இடமுண்டு.

மற்றோர் உண்மையும் உள்ளங் கொள்ளத்தக்கது. மெய் கண்டார் இளமையில் திருவருளால் உபதேசம் பெற்றார். ஆனால் இளமையில் இறைவனடி சேர்ந்தார் என்பதாக வரலாறு இல்லை. இவர் திருவெண்ணெய் நல்லூரில் நெடுங்காலம் சிவானந்த நிட்டையில் வீற்றிருந்தார் என்று கூறுகிறார்கள். வைணவமரபில், ஆசாரியர்கள் நீண்ட ஆயுளோடு வாழ்ந்தார்கள் என்று சொல்வர். இராமானுசர் 120 திருநட்சத்திரம், உய்யக் கொண்டார் மணக்கால்நம்பி பெரியநம்பி எம்பார் நஞ்சீயர் திருவாய்மொழிப்பிள்ளை முதலிய வைணவ ஆசாரியர் 105 திருநட்சத்திரம் வாழ்ந்தார்கள். நம்பிள்ளை பெரியவாச்சான் பிள்ளை 95; வைணவ வரலாற்றில் பட்டர் ஒருவரே குறைந்த ஆயுள் - 28 இவ்வாறு நோக்குங்கால், சைவ ஆசாரியர்களும் நீண்ட ஆயுள் பெற்றிருந்தார்கள் எனக்கொள்வது தவறாகாது. அச்சுத களப்பாளருடைய குருவாக இருந்த சகலாகம பண்டிதர் களப்பாளரைத் திருவெண்காட்டு இறைவனிடத்தில் ஆற்றுப் படுத்தி, மெய்கண்டார் அவதரித்தபின் அவருக்கு மாணாக்க ராகி, அவர் முத்தியடைந்த பின்னர் வாழ்ந்திருந்து, சைவ சித் தாந்தப் . பெருஞ்சாத்திரமாகிய சிவஞானசித்தியார் பரபக்கம் சுபக்கம் என்ற இரண்டையும் பாடிப் பின் மறைஞான சம்பந்தரை ஆசாரிய பதவியில் இருத்திச் சிவபரம்பொருளில் கலந்தார் என்று நாம் பேசும்போது, இவருடைய ஆயுள் மிக நீண்ட தாயிருக்க வேண்டும் இவர் நூற்றுஇருபது திருநட்சத்திரத்திற்கு மேல் வாழ்ந்தார் என்றுகொள்வது பிழையாகாது. நம் சைவ முன்னோர் இகத்தை முனிந்து பரமே பார்த்திருந்தவர்களாத லால் ஆசாரியர் வரலாற்றை விரிவாக எழுதிவைக்கவில்லை; வைணவக் குரு பரம்பரைபோல எழுதி வைத்திருந்தால் இதை நாம் விளங்க அறியமுடியும். இவ்வாறு பார்க்கும்போது, கி.பி. 1124இல் வாழ்ந்த மனவாசகங்கடந்தார் உண்மைவிளக்கம் செய் தவராக இருத்தல் கூடியதே. அப்படியானால் அவர் குருவா கிய மெய்கண்டார் காலமும் கி.பி. 1100க்கும் மிக முற்பட்டி ருக்கும். உமாபதியார் கி.பி. 1313இல் சங்கற்ப நிராகரணம்

செய்தது உறுதி. முற்கூறியவாறு பார்க்கும் போது, உமாபதி 1280 - 1330; மறைஞானசம்பந்தர் 1175 - 1300; அவர் குருவாகிய அருள்நந்தி 1080 - 1200; மெய்கண்டார் 1125 - 1175 இருக்கலாமல்லவா? மனவாசகங் கடந்தார் காலமும் 1100 - 1200 ஆக இருக்கலாம்.

மேற்குறித்த கால எல்லையை, நம் ஆசாரியர்கள் காலம் எவ்வளவு பழமையாக இருந்திருத்தல் கூடும் என்பதைச் சுட்டிக் காட்டவே குறிப்பிட்டோம். இது முடிவான வார்த்தையல்ல. மெய்கண்டார் அருணந்தி மனவாசகங் கடந்தார் மூவரும் பதின் மூன்றாம் நூற்றாண்டு என்று ஆராய்ச்சியாளர் கூறி வருகிறார்கள். து.அ. கோபிநாதராயரே முதன்முதலாக, சாசனம் கூறியபடி மெய்கண்டார் 1232இல் வாழ்ந்தார் என்று எழுதினார். இவர் கூற்றைத் தனிப்பட்டுப் பின்னர் ஒருவரும் ஆராயாமலே ஏற்றுக்கொண்டார்கள். அதன் பயனே, இச் சைவசந்தானாசாரியர் 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார்கள் என்று கருதுகின்ற மரபு.

இந்த மரபுணர்ச்சியை இப்போது நாம் குலைக்க விரும்பவில்லை. இருப்பினும், இந்த நெறியில் ஆராய்ச்சியாளர்கள் மனம் பின்னும் செல்லத்தக்கது என்பதற்காகவே இவ்விளக்கம் தந்திருக்கிறோம்.

ooo

*அத்தியாயம் 8*

# வேதாந்த இலக்கியம்

## *முன்னுரை*

சைவ பரமாகவும் வைணவ பரமாகவும் தமிழில் பண்டைக் காலம் முதலே நூல்கள் தோன்றியிருந்தன. சிறப்பாக, சைவத்தில் பன்னிரு திருமுறைகளும் வைணவத்தில் நாலாயிரப் பிரபந்தங் களும் இவ்விரு சமயங்களின் தனித்த பக்திநெறியை இலக்கியம் மூலமாக வளர்த்தன. 13ஆம் நூற்றாண்டில் தமிழிலும் வட மொழியிலும் செய்யப்பெற்ற தத்துவ நூல்கள் மூலமாகவே இந்த இருநெறிகளும் வரையறை செய்யப்பெற்றன.

ஆனால் , இவ்வித வரையறை எதுவும் வேதாந்த பரமாகத் தமிழில் ஏற்படவில்லை. ஒருகால் சங்கரர் தோன்றிய 9ஆம் நூற்றாண்டின் பின் பிராமணர்கள் சங்கரருடைய அத்வைத வேதாந்தத்தைப் பின்பற்றி வந்திருப்பார்கள். 9ஆம் நூற் றாண்டில் விசயாலயசோழன் தொடங்கி ஏற்பட்ட சோழ சாம்ராஜ்யமானது, 13ஆம் நூற்றாண்டின் இறுதிவரையில் நின்று நிலவியது. இக்காலத்தில் நாடெங்கும் எண்ணற்ற சிவா லயங்கள் பெருகலாயின; சில விண்ணகரங்களும் எழுந்தன. அத்வைத வேதாந்திகள் ஆலய வழிபாடு உடையவர் அல்லர். அவ்வேதாந்தத்துக்கு இக்காலத்தில் எவ்விதச் செல்வாக்கும் இல்லை. சோழமன்னர் அவைக்களத்தில் செல்வாக்குப் பெற் றிருந்தவர்கள் அனைவருமே சிவபூசை செய்யும் சிவாசாரியர்: இவர்கள் பிராமணரல்லர். சோழர் ஆதிக்கம் மறைந்த பிறகு தான் தமிழில் வேதாந்தம் தலையெடுத்தது. வேதாந்தத்துக்கு மிகப்பெரும் தத்துவசாத்திரகாரராக விளங்கியவர் தத்துவராய சுவாமிகள். அவர் பிராமணர்; ஆயினும் சைவசித்தாந்தியும் வேளாளருமான ஒரு சிவப்பிரகாச சுவாமி வழியே உபதேசம் பெற்றவர்; காலம் 15ஆம் நூற்றாண்டு; அந்த நூற்றாண்டின்

வரலாற்றில் அவரைப்பற்றி விரிவாகப் பேசியிருக்கிறோம்.* அவர் காட்டுகின்ற முக்கியமான மேற்கோள் நூல்களில் பரமார்த்த தரிசனம் ஒன்று. இது வடமொழி பகவத்கீதைக்கு அத்வைத வேதாந்த பரமாகச் செய்யப்பட்ட தமிழ் மொழிபெயர்ப்பாகும். இதுவே தமிழில் முதல் வேதாந்த நூல் என்று கருதவேண்டும். இந்த அத்தியாயத்தில் இம்மொழிபெயர்ப்புச் செய்த பட்டனார் வரலாறு ஒன்றுமே நாம் கருதற்குரியது.

வேதாந்த நெறி பற்றி ஒரு கருத்தை இங்கு கூறுவது பொருத்தமுடையது. சைவமரபில் குருலிங்க சங்கம வழிபாடு சாத்திரத்தில் விதிக்கப்பட்டது; இவையாவன ஆசாரிய வணக்கம், சிவாலய வழிபாடு, அடியார் பூசை என்பன. பெரியபுராணம் இம்மூன்றையுமே சொல்வது. இதுபோல, வைணவ சாத்திரங்கள் பகவத் கைங்கரியம், ஆசாரிய கைங்கரியம், பாகவத கைங்கரியம் என்ற மூன்றையும் வலியுறுத்திச் சொல்வன; பகவத் கைங்கரியம் அர்ச்சாவதார வழிபாடான ஆலய வழிபாடு; பாகவத கைங்கரியம், பாகவதர் சேவை, திருவோலக்கக் கோஷ்டிசேவை. வேதாந்த நெறியில் ஆலய வழிபாடும் இல்லை, கோஷ்டியும் இல்லை. சங்கரருடைய வேதாந்தம், நானே பிரமம் என்று சொல்வது, அன்றிருந்த சைவத்துக்கும், வைணவத்துக்கும் தீங்கிழைத்தது. இது, சம்பந்தர் காலம்முதல் சிவவேதியர்களாக ஒழுகிய பிராமணரைத் தனித்த ஓர் இனமாக ஆக்கிற்று. அவர்களுக்கு ஒரு தெய்வமும் வேண்டாம் என்ற நிலைமை வளர்ந்து, பின்னர் அவர்களுக்கென்றே அவர் (சண்மதம் என்ற) கணபதி, முருகன், சூரியன், திருமால், சக்தி, சிவம் ஆகிய அறுவர் வழிபாட்டைக் கூறியிருந்தும், அவர்கள் நாராயண (திருமால்) வழிபாடு ஒன்றையே பற்றிக் கொண்டு, சர்வம் பிரம்ம மயம் என்ற உயர்ந்த நிலையைத் தாழ்த்தி, தாங்கள் சாதியால் உயர்வு, பிறர் தாழ்வு என்றாக்கிக் கொண்டார்கள். இதுபற்றி இவர்கள் கருத்தை வைணவரிடைப் புகுத்த முற்பட்டபோது, வைணவம் இரண்டாய்ப் பிரிந்தது. ஒரு சாரார் பிராமண குலமே உயர்வு, ஆன்மகோடிகள் பிராமண குலத்தில் பிறந்துதான் பரமபதம் அடைய முடியும், இல்லையானால் இல்லை என்று சொல்ல, மற்றவர்கள் சாதியால் உயர்வு தாழ்வு கருதுவது வைணவத்துக்கே துரோகம் என்று கருதினார்கள். இந்தப் பிராமண (சங்கர) வேதாந்தமே வடகலை தென்கலைப் பிளவுக்கு வித்து.

---

* எமது தமிழ் இலக்கிய வரலாறு, 15ஆம் நூற்றாண்டு காண்க.

வேதாந்தத்தைப் பற்றிப் பேசும்போது, தமிழ்நாட்டில் இந்தக் கருத்து, அடிப்படையில் நினைவில் இருக்க வேண்டும். இது பற்றியே வேதாந்தம் பேசிய பிராமண வகுப்பார், நானே பிரமம் என்ற மொழி வடமொழியே என்ற கொள்கையோடு, வடமொழி தெரியாமலும் அம்மொழிச் சமயநூல்களைக் கல்லாமல் இருந்தும்கூட, தமிழில் சமயநூல்களைத் தொடுவதில்லை. இன்றுள்ள ஆசாரிய சுவாமிகள் தமிழ் படிக்கச் சொல்லலாம், பாவை பள்ளியெழுச்சி பாடச் சொல்லலாம்; இது அவர்கள் சொந்தக் கருத்து. அவர்கள் சமய சாத்திரத்தில் இதற்கு இடமில்லை. இது பற்றியேதான் தமிழ்மொழியில் செய்யப் பெற்றிருந்த ஸ்ரீ பட்டனாரின் பகவத்கீதை மொழிபெயர்ப்புக்குப் பிராமண சமூகத்தில் ஆட்சியே இல்லாது போயிற்று.

## *ஸ்ரீ பட்டனார்*

**ஆசிரியர்**

தமிழ் இலக்கியப் பரப்பினுள் சில ஆசிரியர்களைக் குறித்து எந்த வரலாறுமே தெரியாமல் இருக்கிறது. அவர்களுள் ஸ்ரீ பட்டனாரும் ஒருவர். வேதாந்த மார்க்கத்தின் பிரஸ்தானத் திரயங்களுள்* ஒன்றாகிய பகவத்கீதையை முதன்முதல் தமிழில் பாடியவர் ஸ்ரீ பட்டனார். இவர் பாடியது விருத்தப்பா. பிற்காலத்தில் வேறு பலர் வேறு யாப்பில் இதைப் பாடியிருக்கிறார்கள். எனினும், இவர் நூலே முதன்முதலாகத் தோன்றிய நூலாகும். இதன் சிறப்புப்பாயிரமானது, மாயனே வடமொழியில் கீதை செய்தது மட்டுமன்றி, சேம மாநகரந் தேடிவந்து பட்டனாராய்ப் பிறந்து இதைத் தமிழிலும் செய்தாரென்று கூறுகிறது. சேம மாநகரம் என்பது பல புலவர்கள் தோன்றியதாகிய வேம்பத்தூர் என்பர். 'சேயஆய்ப் பாடிதன்னில்' என்று பாடபேதமாகக் காணப்படுகிறது:

சேயமா மதுரை நின்றும் சேமமா நகரந் தேடி
ஆயனார் பட்ட னாராய் அவதரித் தருளி னாலே
போயநாள் மொழிந்த கீதை புலப்படுத் ததுவு மன்றித்
தூயமா தவர்க்கு மிந்தச் சுருதிநூல் தொடங்கி னாரே.

பட்டனாரைக் குறித்து வேறு வரலாறெதுவும் புலப்படவில்லை. எனினும், சில பதிப்புக்களின் இறுதியில் காணும் சில பாடல்கள்

---

* பிரஸ்தானத்திரயம் - உபநிடதம், பிரம்மசூத்திரம், பகவத்கீதை.

இரண்டொரு செய்திகளைத் தெரிவிக்கின்றன; இப்பாடல்கள் நூலகத்துள்ளன.

தேர்ப்பட்ட கன்றுக்கன்று சேயைச் சிதைவித்த சென்னிக்கு
நாற்பத்தி ரண்டாம் சன்மம் நல்லமா மரபு தன்னில்
மேற்பட்ட வேளாண்குடி முதல்வேதப் பட்டாகரனே என்னும்
பாற்பட்ட பத்தியால் அணைந்த பரமார்த்த தரிசனமே.

கட்டார் மயலிருட் காதபச் சோதி கலைநிரம்பி
எட்டா ததுபார்த் தின்பமாக் கலின்மதி எவ்வினையும்
விட்டார்கள் விட்டபின் வேதச் சுடரொளி மெய்யுணர்த்த
பட்டா கரனரு ளாம்பர மார்த்த தரிசனமே.

இவற்றால் இவர் பட்டாகரன் வேதபட்டாகரன் என்று வழங்கப்பட்டார் என்றும், வேளாண்குடிக்கு ஆசாரியராய் இருந்தார் அல்லது அக்குடியில் தோன்றினார் என்றும், இந்நூலுக்கு அமைந்த பெயர், பரமார்த்த தரிசனம் என்றும் நாம் அறிகிறோம். பட்டர் இந்நூலின் பாயிரப்பகுதியில் நூற் பெயர் பரமார்த்த தரிசனம் (யாவற்றுக்கும் மேலான பொருளின் காட்சி) என்றே கூறுகிறார்; பரம்பொருட் காட்சி எனவும் இப்பெயர் வழங்குகிறது.

உன்னும் நான்மறை மால்வரை உச்சிமேல்
மன்னும் மேகம் முழங்கிய வாக்கினை
பன்னு சீர்ப்பர மார்த்த தரிசனம்
என்னும் நாமத் திதனை இயம்புவாம்.

நூல் இறுதியில் இவர், சங்கரருக்குக் குருவாயிருந்த கோவிந்த பகவத் பாதருடைய பெருமையைக்கூறி, தாம் சங்கரபகவத் பாதர் அருளினால் இந்நூல் செய்ததாகவும் கூறுகிறார்.

வேத நூல்களின் முடிவினை வியாதனிற் பின்னாள்
ஓதமா கடல் உலகிலுண் டாக்கிய உரவோன்
கோதிலா நெறி உணர்ந்தகோ விந்தமா முனிவன்
பாத தாமரை பற்றிவீட் டின்பமே படைத்தான்.

ஆற்றியல் வழுவிய புலன்கள் ஐந்தையும்
பாற்றிய சங்கர பகவத் பாதனென்று
ஏற்றிய பெயரினான் அருளினால் யான்
சாற்றினன் இப்பெருந் தரும நூலையே.

நூல்

ஆசிரியர் இதற்குத் தமிழில் பரமார்த்த தரிசனம் என்று தாம் பெயர் சூட்டியபோதிலும், இதன்பெயர் பகவத்கீதை என்றே ஏடுகளில் காணப்படுகிறது. பழமையாகவே இதற்கு உரை ஏற்பட்டுள்ளது. ஏடுகளில், மூலமும் உரையுமாகவே நூல் உள்ளது; பல உரைகள் உள்ளன; உரைசெய்தார் பெயர் தெரிய வில்லை. பழைய உரை ஒன்று மட்டும் 1853இல் அச்சாயிற்று. சிறப்பாக வழங்குவது, இக்காலம் பொன்னம்பலசாமி செய்த உரை. பாடல்களில் பிரதிதோறும் பதிப்புத்தோறும் வேறுபாடு காணப்படுகின்றது. திருமால் வணக்கமும் சிறப்புப்பாயிரமும் முதல் 4 பாடல்கள்; இவற்றுள் முதல்பாடல், மரபு பற்றிய விநாயகர் வணக்கமாகவுள்ளது; பாதியோர் பெண்மையன் என்பது இரண்டாவது மூன்றாவது பாடல்கள் அரியயனோடு, ஒரு பதம் மடித்து என்று தொடங்குவன; இரண்டும் பார்த்த சாரதியைத் துதிப்பன. நான்காம் பாடல், 'சேயமாமதுரை நின்றும்' என்று முன்காட்டிய ஆசிரியர் பெயர் உரைக்கும் சிறப்புப்பாயிரப் பாடல். இந்நான்கும் பின்வந்தோர் செய்தன வாகலாம். அடுத்துப் பாயிரப்பகுதி, 4 பாடல்; இதன் பின்னர் நூல். நூலின் அத்தியாயங்கள் வடமொழி நூலின் தலைப்பிலேயே தரப்பெற்றுள்ளன. எனினும், தலைப்புக்களிலும் நிரம்ப வேறு பாடு காணப்படுகிறது. விசுவரூப அத்தியாயம் என்ற பதினொ ராம் அத்தியாயத்திலும், இறுதி அத்தியாயத்திலும், பாடல் வேறு பாடுகள் மிகவும் அதிகம், அச்சுப் புத்தகங்களிலேயே பாடல் வேறுபாடு காணப்படுகிறது. ஒரு பதிப்பில் மொத்தப் பாடல் 545; மற்றொன்றில் 569; ஏடுகளில் 570 காணப்படுகிறது.

நூலைப் பொறுத்தவரையில் வடமொழிக் கீதைக்குத் தான் எல்லாப் பெருமையுமே தவிர, தமிழ் நூலுக்கு எந்தப் பெருமையும் ஏந்த ஆட்சியும் இல்லை. இவ்வாசிரியர் சங்கரர் அருளால் இதைச் செய்தேன் என்று சொல்வதால் வைணவர்கள் இதைத் தொட்டவர்கள் அல்லர்; வடமொழி அறியாத வேதாந்த மார்க்கத்தார் சிலர் மட்டுமே இதை ஆட்சியில் வைத்திருக் கிறார்கள்.

இருப்பினும், நூல் மிகவும் நல்ல நடையில் இயன்றுள்ளது. மூலம்போலச் சொற்செட்டில்லாமல் ஆசிரியர் வருணனைக்கு அதிக இடம் .கொடுத்திருக்கிறார். ஆசிரிய விருத்தம், கலை

நிலைத்துறை, கொச்சகக் கலிப்பா, கலிவிருத்தம் முதலான பலவகைப் பாக்களும் பல்வேறு சந்தப் பாக்களும் இதனுள் பயில்கின்றன. மொழிபெயர்ப்பு, மூலத்தை ஒட்டியே செல்கிறது. எனினும், பாடல்கள் தமிழ் மரபும் பண்பும் குறையாமல் இயன்றுள்ளன. எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடல்களைக் காண்க (17: 12 - 15):

**தீக்குலாம் வேலினாய், தவத்தின் செய்கைதான்**
**வாக்கினால் பேசுதல் மனத்தி னாக்குதல்**
**ஆக்கையால் இயற்றுதலா யிருப்பது**
**நோக்கினான் இவற்றினை நுனித்துக் கூறுவாம்.**

**தீர்த்த, யார்க்கும் செவிக்கினி தாயின**
**வார்த்தை மாமருந்தே யெனல் ஆவதாம்**
**ஓர்த்து மெய்ம்மொழி கூறுதல் ஓதுதல்**
**வார்த்தையால் பண்ணும் மாதவ மாவதே.**

**தெளிவில் நெஞ்சைத் தெளியப் பிடித்தலும்**
**களி செயும்உளத் தைக்களி மாற்றலும்**
**குளிர்வி லாமை உளத்தில் கொளாமையும்**
**எளிதில் மானத மாதவம் என்பதே.**

**தலைமை அந்தணர் தேவர் குரவர்பால்**
**மலைத லின்றி வழிபடு வாழ்க்கையும்**
**கொலை துறத்தலும் காமம் குறைத்தலும்**
**தலைவ, காயத் தவமெனப் பட்டதே.**

நூலின் நடையும் சொல்நயமும் ஆராயும்போது நூல் இன்னும் அதிகப் பிரசாரம் பெறுதற்குரியதென்று சொல்லலாம். பிராமணரல்லாத வேதாந்திகளிடை மட்டுந்தான் இந்நூல் ஓரளவு ஆட்சியில் இருக்கிறது. நூல், காண்டமொன்றுக்கு ஆறு அத்தியாயம் கொண்ட கர்மகாண்டம், உபாசனா காண்டம், ஞானகாண்டம் என்னும் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பெற்றுள்ளது; துவம், தத், அசி என்ற பதார்த்த நிரூபணமென முறையே சொல்லப்பட்டுள்ளன.

அச்சான பழையவுரை சுருக்கமாயுள்ளதேனும், சிறப்பானது. இவ்வுரை எல்லா ஏடுகளிலும் காணப்படுகிறது. உரையாசிரியர் பெயர் தெரியவில்லை. மூலத்தை ஒட்டி உரை எழுதுகிறார். சில சொற்களை உபயோகிக்கும் காரணத்தையும் விளக்குகிறார். கருத்துரையாகத் தனியே எழுதுகிறார். ஆங்காங்கு இலக்கணக்

குறிப்புகளையும் தருகிறார். மிகைப் பாடல்கள் யாவைக்கும் இவர் உரை எழுதியுள்ளார். உரை மிகவும் பழமையானதென்றே கருதவேண்டும். எனவே, பின்னர் அச்சிட்டோர் சில பாடல் களை நீக்கி அச்சிட்டனர் போலும். முன்னமே குறிப்பிட்ட இரண்டு அத்தியாயங்களினும் அதிகமாக, ஏடுகளிலும் 1853 ஆம் ஆண்டு உரைப்பதிப்பிலும் உள்ள பாடல்கள் முறையே 9, 14. இவை முழுமையும் அருச்சுனன் கண்ணனைத் துதிப்பனவாக உள்ளன. வடமொழி நூலில் இத்துதிப் பாடல்கள் இல்லாமை யால், இவை பின்வந்த பதிப்புக்களில் விலக்கப்பட்டன போலும்.

விசுவரூப அத்தியாயத்துள் வரும் ஒன்பது பாடல்களும் 'அரசே உனை வேறறியேன் அடியேனே' என்று முடிவன. பின் வரும் பாடல் ஓர் எடுத்துக்காட்டு:

ஏகா அழகே இகழா உருவே எனதாவிப்
பாகா இமையோர் பருகா அமுதே பழையோனே
தீ கால் நிலன்நீர் உளவே றெவையும் தெரிகில்லா
ஆகாயமுமே உனைவே றறியேன் அடியேனே.

இதுபோலவே, நூலிறுதியில் அருச்சுனன் கண்ணனைத் துதிக்கும் பாடல்கள் உள்ளன. பின்வருவது ஓர் எடுத்துக்காட்டு:

ஆதித்தன் தானொருவ னாகி நின்றே
அகல் தோறும் அமர்ந்திருந்து புலன்கள் தோறும்
பேதித்துப் பலவாகித் தோன்றினாற் போல்
பிறிதின்றி நீயேயாய்ப் பிணக்கிறந்து நின்றே
வாதிக்க மதியாதி கரணந் தோறும்
மற்றவை போல் தோன்றுகின்ற மாயவனே மெய்ம்மை
சோதித்து நின்பெருமை சொல்லுதற்கு மேலைச்
சுருதிகள் தாம் வல்லவோ சொல்லிறந்த சோதீ.

உரைகாரர், பண்டை இலக்கிய உரையாசிரியர்கள் மரபை யொட்டி, வேறு பாடங்களையும், வேறு உரைகளையும் குறிப்பிடு கிறார்.

அத்தியாயப் பெயர்கள் வடமொழி நூற்பெயர்களுடன் மாறுபடுவதோடு, தம்முள்ளும் வேறுபடுகின்றன. வேறுபாடு களை மட்டும் பின்னுள்ள அட்டவணையில் காணலாம். வட நூற் பெயர்கள் யாவும் யோகம் என்றே முடிவன:

| அத். | வடமொழி | 1853 பதிப்பு | பொன்னம்பலசுவாமி |
|---|---|---|---|
| 1. | அர்ச்சுனவிஷாத யோகம் | சோகம் | சோகம் |
| 3. | ஞானயோகம் | தேவபூசை | கர்மயோகம் |
| 4. | ஞானவிபாகம் | சம்பிரதாயம் | சம்பிரதாயம் |
| 5. | கர்மசந்நியாசம் | சந்நியாசம் | ஞானகர்மம் |
| 6. | அத்யாத்மயோகம் | அப்பியாச யோகம் | யோகம் |
| 7. | ஞானயோகம் | ஞானயோகம் | மாயாரூபம் |
| 8. | அக்ஷரப்பிரம யோகம் | அக்ஷரயோகம் | எழுவகை வினா உரைத்தது |
| 9. | ராஜவித்யா ராஜகுஹ்யம் | மாயாவிசாரம் | மாயாவிசாரம் |
| 10. | விபூதி | விபூதிவித்தாரம் | விபூதி |
| 13. | க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞும் | பிரகிருதி புருடயோகம் | க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞும் |
| 14. | ஞானத்திரயம் | குணத்திரயம் | குணாதீதம் |
| 15. | புருஷோத்தமம் | புருஷோத்தமம் | பிரபஞ்சம் |
| 16. | தேவாசுர சம்பத் விபாகம் | தெய்வசம்பத் விபாகம் | தேவாசுர சம்பத்விபாகம் |
| 17. | சிரத்தாத்ரய விபாகம் | சிரத்தாத்ரய விபாகம் | குணவிசாரம் |
| 18. | சந்நியாசம் | சகலஉபநிஷத் பிரதி பந்த மோக்ஷம் | சஞ்சேபம் |

இவற்றைப் பார்க்கும்போது, வடமொழி நூலுக்கு வெவ்வேறு உரை ஆசிரியர் வெவ்வேறு தலைப்புக் கொடுத்திருக்கக்கூடும் என்று தோன்றுகிறது.

இந்நூல் தமிழிலக்கியவுலகில் ஆட்சியின்றியிருப்பதால், எடுத்துக்காட்டாகச் சில பாடல்கள் இங்குத் தருகிறோம். அருச்சுனன் கண்ணனைத் துதிக்கிறான்:

> வையமுழு துண்டதிரு வாய்மலர் திறந்திட்டு
> உய்யவடி யேன் முனுரை செய்தவுரை யாலே
> ஐயமொடு மோகமற விட்டெனறி வுற்றேன்
> செய்வதினி உன்றனரு ளின்செயல்க ளன்றோ.

பையரவி லேயினிது பள்ளியமர் வோனே
வையமுமிவ் வையமதின் மன்னுயிர்கள் யாவுஞ்
செய்யும்வகை யுற்றது சிதைத்தலது தானும்
மெய்தெரியின் நீமுன் விளையாடும் வகையன்றோ.

அணித்தகைய சோதிஅம லாவுனரு ளாலே
கணித்தலரி தாயபிற விக்கடல் கடந்தேன்
பிணித்தபெரு மாயைமயல் கெட்டது பிரானே
பணித்தபணி யல்லது செயத்தகுவ துண்டோ.

*மொழி, மனம், மெய் என்ற மூன்றினும் தவமெனப்பட்டது யாதென்று கூறுவதை முன்னமே காட்டினோம் (பக். 230). முடிவாக, எல்லாத் தருமங்களையும் துறந்து என்னொருவனையே சரண்புகுவாய் என்று உபதேசிக்கின்ற பாடல் (ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ - அஹம் த்வாம்ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச:):*

இருவேறு வகையாய வெவ்வேறு வினைகளையும்
மருவே னென்றறவிட்டு மாயையினான் மறைப்பரிய
ஒருவனையே பற்றுதிஅப் பற்றினால் உனைப்பிறவிக்
கருவேலை கடந்தேறக் கைதருவேன் கதிர்வேலோய்.

*இப்பாடல், மூலக்கருத்தைத் தமிழில் சற்று விரித்தே இவ்வாசிரியர் உரைக்கிறார் என்பதை நன்கு விளக்கும்.*

**காலம்**

*தத்துவராயர் தொகுத்த பெருந்திரட்டில் பரமார்த்த தரிசனப் பாடல்கள் 98 சேர்க்கப் பெற்றுள்ளன. வேதாந்த மார்க்கத்துக்கு இது எத்துணை முக்கியமான நூல் என்று அவர் கருதினாரென்பது இதனால் நன்கு விளங்கும். தத்துவராயர் காலம் 1475 ஆகலாம்* என்று தெரிகிறது. ஆகவே, பரமார்த்த தரிசனத்தின் காலம் இதற்கு முற்பட்டதென்பது தெளிவு. 13ஆம் நூற்றாண்டென்று ஆசிரியர் சிலர் எழுதியிருப்பது, பொருந்துமென்றே தோன்றுகிறது. சுமார் 1315இல்❖ வாதிகேசரி பகவத்கீதை வெண்பா செய்தார். பூதூர்மன் வழியே அதைச் செய்ததாக அவர் சொல்வதால், அவருக்கு முன் சங்கரர் வழியே மற்றொரு தமிழ்ப்*

* 15ஆம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாறு காண்க.

❖ 14ஆம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாறு காண்க.

பகவத்கீதை ஏற்பட்டிருந்தது, அது இதுவே என நாம் கருதலாம். ஆகவே, இந்நூலின் காலம் 13ஆம் நூற்றாண்டு என்பது பொருந்துவதே; சுமார் 1250ஆகக் கருதலாம்.

காலம் பற்றிப் பின்னும் ஒரு குறிப்பும் சொல்லமுடியும் நூல் அத்தியாயம் 11, பாடல் 26 பின்வருவது:

**கையும் பதமும் திருவாயும் கண்ணும் செய்ய கருமுகிலே,**
**ஐயம் பொருளும் அறிவரியாய், அயனார் தாயே அந்தமிலாய்,**
**மெய்யும் பொய்யும் இல்லாதாய், எல்லா மாகி, விரிந்தாயே,**
**உய்யும் பரிசுநினைந்தவர்கள் உன்னை வணங்காதவருளரோ?**

இதன் முதலடி, விக்கிரமசோழன் உலா இறுதியில் காணப்படும் தனி வெண்பாவைத் தழுவியது என்பது வெளிப்படை:

**கையும் மலரடியும் கண்ணும் கனிவாயும்**
**செய்ய கரிய திருமாலே! – வையம்**
**அளந்தாய், அகளங்கா! ஆலிலைமேல் பள்ளி**
**வளர்ந்தாய் தளர்ந்தாள் இம் மான்.**

இப்பாடலும் கூட, சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையில் 'பெரியவனை மாயவனை' என்ற பாடலில் வரும் 'விண்ணவனைக் கண்ணும் - திருவடியும் கையும் திருவாயும் செய்ய கரியவனை' என்ற சொற்களைக் கொண்டெழுந்ததாகலாம். ஆனால், பட்டனார் சிலப்பதிகாரத்தினும் பார்க்க, ஒட்டக்கூத்தர் செய்த உலாவைப் பயின்றவராயிருத்தல் இயல்பு. இக்கூத்தர் காலம் 12ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாதலால், பட்டனார் காலம் அடுத்ததாகிய 13ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்று கொள்ளுதல் பொருத்தமுடையதே.

○○○

அத்தியாயம் 9

# வைணவ இலக்கியம்

## முன்னுரை

வைணவ ஆசாரியர் வரலாறுகளைக் கூறும் நூல்கள் குரு பரம்பரை எனப் பெயர்பெறும்; "குருபரம்பரா ப்ரபாவம்" என இவை அச்சிடப்பெற்றுள்ளன. முதலாவதாகத் தோன்றியது, பின்பழகிய பெருமாள் ஜீயர் செய்த குருபரம்பரா ப்ரபாவம், ஆறாயிரப்படி; ஆறாயிரம் கிரந்தம்* கொண்டது. இவர் நம்பிள்ளையின் சீடர். ஆகவே இவர் தம் நூலில் பரமபதத்தில் வைகுந்தநாதன் தொடங்கித் தம் ஆசாரியரான நம்பிள்ளை வரை உள்ள ஆழ்வார் ஆசாரியர்களின் சரித்திரத்தைத் தாம் அறிந்த அளவு விளக்கமாக எழுதியிருக்கிறார். பிறகு வந்த குரு பரம்பரைகள் அனைத்துக்கும் இதுவே மூலமாக உள்ளது. சம்பிரதாயமான முறையில் இங்கு, கலியுகத்துக்கு முந்திய துவாபரயுகத்திலிருந்தே வரலாறுகள் தொடங்கின போதிலுங்கூட, நாதமுனிகள் தொடங்கி, ஜீயரின் ஆசாரியரான நம்பிள்ளை வரையிலுள்ள ஆசாரிய பரம்பரை ஓரளவு ஒப்புக்கொள்ளக் கூடிய வரலாறாகவும், காலமுறையாகவும் அமைந்துள்ளது.

---

* கிரந்தம் என்பது ஒற்றெழுத்துக்களை நீக்கி 32 எழுத்துக்கள் கொண்ட ஓர் அளவு. தமிழில் கட்டளைக் கலித்துறை என்பது, நிரை அசையில் தொடங்கினால் 17 எழுத்தும் நேர் அசையில் தொடங்கினால் 16 எழுத்தும் வரவேண்டும் என்பது ஒரு விதி; இதே போன்று எழுத்துக் கணக்கிடுகின்ற விதி வடமொழிச் சுலோகங்களுக்கு உண்டு. இந்த வைணவ ஆசாரியர்கள் வடமொழிப் பாடலுக்கு இருந்த இக்கணக்கைத் தமிழில் வசனத்திற்கும் வைத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு நூலையும் எழுத்தெண்ணி இத்தனைக் கிரந்தம் எனச்சொல்வது இவர்கள் மரபு. ஆறாயிரப்படி என்றால் ஆறாயிரம் கிரந்தம் என்று பொருள். (படி என்றால் அளவு.)

இந்த ஜீயர் காலம் சுமார் கி.பி. 1290 ஆதல் கூடும். 1267இல் வேதாந்த தேசிகர் பிறந்தார். ஆகவே பின்பழகியார் காலத்தில் வடகலை என்று தனியே பிரிவு ஏற்படவில்லை. இரு கலையாருக்கும் இவருடைய குருபரம்பராப் பிரபாவமே மூலநூலாயிருக்கும்.

நம்பிள்ளை முதிய பிராயமடைந்திருந்தபோது பிறந்து வாழ்ந்தவர் வேதாந்ததேசிகர். நம்பிள்ளையின் மாணாக்கருள் ஒருவரான பெரியவாச்சான் பிள்ளையின் வரலாறும் வடகலை மூல ஆசாரியரான வேதாந்ததேசிகர் வரலாறும் பெரிதும் தொடர்பு பட்டவை என்று தென்கலை நூல்கள் கூறும். இந்தக் காலமே, வடகலை தென்கலைப் பூசல் தொடங்குமிடம்; அதாவது 14ஆம் நூற்றாண்டின் தொடக்கம் அல்லது முதல் கால்பகுதி என்று கருதலாம்.

இக்காலத்திலும் பின்னரும் தோன்றியவை பிற குரு பரம்பரை நூல்கள். பிற்காலத்தில் எழுந்தவற்றுள் முக்கியமான ஒன்று, திருமழிசை - கோயில் கந்தாடை - அண்ணா அப்பங்கார் சுவாமிகள் அருளிச்செய்த 'பழநடை விளக்கம்' என்னும் மூவாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவம். ஆதியில் இருந்த குருபரம்பரை வரலாற்றை, வடகலையார் மாற்றி, தங்கள் சம்பிரதாயத்துக்கு ஏற்றபடி ஒரு மூவாயிரப்படி புதிதாய் எழுதிக் கொண்டமையால், அதை மறுக்கும் முகமாக இந்தக் குருபரம்பரை தோன்றியதென்று தென்கலையார் சொல்வர். 'பழநடை விளக்கம்' என்ற இதன் மறுபெயர் இதை நன்கு எடுத்துக் காட்டும். இதனுள் மணவாள மாமுனிகள் வரலாறு வரையில் சொல்லப்பட்டுள்ளது. இறுதியில் இது வடகலை தென்கலைப் பூசலைப் பற்றி விளக்கமாகப் பல செய்திகளைத் தெரிவிக்கின்றது.

பன்னீராயிரப்படி என்பது, முதலில் தோன்றிய ஆறாயிரப்படிக்கு இடையில் பல செய்திகளை விரித்துப் பெருக்கிச் செய்த ஒரு வரலாறு. யதீந்திரப் பிரவணப் பிரபாவம் என்பது மணவாள மாமுனிகளுடைய சரித்திரத்தைச் சொல்வதற்கு என்று வந்து, முன்னுள்ள ஆசிரியர் வரலாற்றையும் சுருக்கமாய்க் கூறி வருவது. ஒவ்வொரு வரலாற்றிலும் மற்ற நூலில் இல்லாத சில செய்திகள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

## வைணவ குருபரம்பரை நூல்களின் அட்டவணை

| எண் | பெயர் | ஆசிரியர் | அச்சிட்ட ஆண்டு | பிரிவு | பதிப்பித்தோர் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1. | குருபரம்பராப் பிரபாவம் ஆறாயிரப்படி | பின்பழகிய பெருமாள் ஜீயர் 13 நூ. | 1878 | பொது (தென்கலை) | இராமகிருஷ்ணப் பிள்ளை | நம்பிள்ளை வரையில் |
| 2. | .... மூவாயிரப்படி | பிரம தந்திர சுவதந்திர சுவாமி 15 நூ. | 1858 | வடகலை | திருக்குடந்தை - தட்டை கிருஷ்ணமாசாரியர் | கிடாம்பி நயினார் வரையில் |
| 3. | யதீந்திரப்பிரவணப் பிரபாவம் | பிள்ளைலோகம் ஜீயர் 15 நூ. | 1909 | தென்கலை | வைஷ்ணவ சம்பிரதாய புத்தகசாலை | மணவாளமாமுனி வரையில் |
| 4. | ஸ்த்ஸம்பரதாய முக்தாவளி (ஸ்ரீ ஸந்நிதி) குருபரம்பரை | ஸ்ரீ சடகோப யதீந்திரமகா தேசிகன் 23ஆம் ஆசார்யர் அஹோபில மடம் | | வடகலை | | தம் காலம் வரையில் |
| 5. | குருபரம்பரா ப்ரபாவம் பன்னீராயிரப்படி | பூர்வாசாரியர் அருளிச் செய்தபடி | | தென்கலை | செஞ்சி - இல்வீடு திருவேங்கட முதலி யார் முதலியோர் | பெரியவாச்சான் பிள்ளை வரையில் |
| 6. | ... ... மூவாயிரப்படி பழநடை விளக்கம் | திருமழிசை கோயில் கந்தாடை அண்ணா அப்பங்கர் | 1895 | தென்கலை | கோ. சீனிவாசாசாரி | மணவாளமாமுனி வரையில் |
| 7. | ... ... நன்னடை விளக்கம், தென்னடை விளக்கம் | மேல்நாட்டு ரங்கசாரியர் | | வடகலை | | இதுபழநடை விளக்கத்துக்கு மறுப்பு |

பிற்காலத்தில் வடிவழகிய நம்பிதாசர் என்பவர் ஆழ்வார் ஆசாரியர் வரலாறுகளைச் செய்யுளில் பெருநூலாகப் பாடியிருக்கிறார். இதனுள் சொல்லப்பட்டவை பன்னிரு ஆழ்வார் வரலாறுகளும் இராமானுசர் வரையுள்ள ஆசாரியர் வரலாறுகளும். இதன் மொத்தப் பாடல்கள் 2960. இதற்கும் நெடுங்காலம் பின்னதாக, திவ்விய சூரி சரிதம் என்ற பெருநூல் எழுந்தது. இதன் ஆசிரியர் வங்கிபுரம் சீனிவாசாசாரி. இதிலமைந்த பாடல்கள் 2894. முதலாழ்வார் தொடங்கி வேதாந்த தேசிகர் வரையுள்ள ஆழ்வார் ஆசாரியர் வரலாறுகளை இது கூறுகிறது.

1858இல் திருக்குடந்தை தட்டை கிருஷ்ணமாசாரியர் என்பவர் ஒரு வடகலைக் குருபரம்பரா ப்ரபாவம் அச்சிட்டார். "இந்த குருபரம்பரா ப்ரபாவகிரந்தங்கள், பிரமதந்திர சுவதந்திர சுவாமி (இவர் வேதாந்ததேசிகரின் சீடர்) முதலானவர்களால் சங்கிரகமாகவும் விஸ்தாரமாகவும் செய்யப்பட்டன. இப்படி சத்சம்பிரதாய பரம்பரையிலேயே வந்த கிரந்தங்கள் இருக்க, கொஞ்ச நாளைக்கு முன்னே ஒரு தருணத்திலே திருமழிசை அண்ணாப்பங்கார் என்பவர் அசூயையினாலும் ஆக்கிரகத்தினாலும் அநேகம் பொய்க்கதைகளைக் கலந்து பழநடை விளக்கம் என்று ஒரு புத்தகம் எழுதி யுக்தா யுக்த விவேகம் இல்லாத சாதாரண ஜனங்களுக்குள் வழங்குவித்தார். அக்காலத்திலேயே அவரோடு பிரத்தியட்சத்தில் வாதித்து அவர் கட்சிகளையெல்லாம் கண்டித்துக்கொண்டிருந்த மேல்நாட்டு ரங்காசாரியர் என்பவர் அப்பழநடை விளக்கத்திற்குக் கண்டனமாக நன்னடை விளக்கம் என்ற ஒரு கிரந்தம் செய்திருக்கிறார்" என்று இப்புத்தக முகவுரையில் காணப்படுகிறது. இவ்வாறு ஆசாரியர் வரலாற்றிலும் கூட இராமானுசருக்குப் பின்வரும் வரலாறுகளில் மிக்க வேற்றுமையும் பூசலும் ஏற்படுகின்றன.

இனி இப்பகுதியில், பதின்மூன்றாம் நூற்றாண்டில் பிரசித்தமாய் வாழ்ந்து, தமிழிலும் மணிப்பிரவாளத்திலும், வைணவப் பிரபந்த வியாக்கியானங்களும் சம்பிரதாய கிரந்தங்களும் வரலாறுகளும் எழுதிய சில ஆசாரியர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகின்றோம். கூறப்பட்டுள்ள யாவும் முந்தையோர் எழுதிவைத்த நூல்களில் கண்டவை. இங்கு புதிதான வரலாற்று ஆராய்ச்சிக்கு இடமில்லை.

இவ்வாறு சிறப்போடு வாழ்ந்து இக்காலப்பகுதியில் நூல் செய்தவர்களாக நாம் அறிகின்றவர்கள் பட்டரால் ஆட்கொள்ளப்பட்ட நஞ்சீயர், அவருடைய மாணாக்கரான நம்பிள்ளை, அவரிடம் சீடராயிருந்த பெரியவாச்சான் பிள்ளை வடக்குத் திருவீதிப்பிள்ளை பின்பழகிய ஜீயர் - ஆகிய ஐவர். எல்லோருடைய வரலாறுகளும் மிக்க சுவையும், நயமும், ஆசாரிய பக்தியும் பொருந்தியவை. வைணவர் அல்லாதவர்கள் இந்த ஆசாரியர்களுடைய சமய சம்பிரதாயங்கள், சரணாகதி தத்துவங்கள், நீதிகள், நல் ஆசாரங்கள் முதலியன பொதிந்துள்ளன. நகைச்சுவை பொருந்திய வரலாறுகளும் நிரம்ப உள்ளன. இவ்வரலாறுகளையும், சரித்திரத் துணுக்குகளையும், தமிழ் மக்களும், சிறப்பாக இளம் பிள்ளைகளும், நன்கு அறிய வேண்டும்.

நம்மாழ்வார் பாடியருளிய தமிழ் வேதமாகிய திருவாய்மொழிக்கு முந்திய நூற்றாண்டில் திருக்குருகைப்பிரான் பிள்ளான் ஆறாயிரப்படி என்ற வியாக்கியானம் செய்திருந்தார். 13ஆம் நூற்றாண்டில்தான் நஞ்சீயருடைய ஒன்பதினாயிரப்படி, பெரியவாச்சான் பிள்ளையின் இருபத்து நாலாயிரப்படி, வடக்குத் திருவீதிப்பிள்ளையின் முப்பத்து ஆறாயிரப்படி (இது நம்பிள்ளையின் அருளிச்செயல்) என்ற மூன்று பேருரைகள் தோன்றின. 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெரியவாச்சான் பிள்ளையின் சீடரான வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர் என்பவர் திருவாய்மொழி பன்னீராயிரப்படி செய்தார். இச்சிறப்பு, தமிழில் வேறு எந்த சமயக்கிரந்தத்துக்கும் ஏற்பட்டிராத சிறப்பு. இதை நன்கு ஊன்றிப் பார்க்கும்போது, சமய ஆசாரியர் என்ற முறையில் நம்மாழ்வாருக்கு நூல்கள் மூலம் ஏற்பட்டுள்ள பெருஞ்சிறப்பு வேறெந்த நூலாசிரியருக்கும் ஏற்படவில்லையென்றே சொல்லவேண்டும். இதுபோல, குறளுக்குப் பதின்மர் உரையும், தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்கு அறுவர் உரையும், சித்தாந்த சாத்திரமாகிய சிவஞான சித்தியாருக்கு அறுவருக்கு மேற்பட்ட உரைகளும் இருப்பது அறியத்தக்கது.

ஆசாரியர்களின் விரிவான வரலாறு அக்காலத்திலேயே, ஓரளவு ஆதாரபூர்வமான, ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில்,

| திருவாய்மொழி வியாக்கியானங்கள் | | | | |
|---|---|---|---|---|
| எண் | பெயர் | ஆசிரியர் | காலம் நூற்றாண்டு | குறிப்பு |
| 1. | ஆறாயிரப்படி | திருக்குருகைப் பிரான் பிள்ளான் | 12 தொடக்கம் | இராமானுசர் நியமனம் |
| 2. | ஒன்பதினாயிரப்படி | நஞ்சீயர் | 13 | நம்பிள்ளை இதைக் காவேரியில் போகவிட்டுப் புதிதாய் எழுதிக் கொடுத்தார் |
| 3. | பன்னீராயிரப்படி | வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர் | 14 தொடக்கம் | பெரியவாச்சான் பிள்ளையின் சீடர் |
| 4. | இருபத்து நாலாயிரப்படி | பெரியவாச்சான் பிள்ளை | 13 இறுதி | நம்பிள்ளை கட்டளை யிட்டதன் மேல் |
| 5. | முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு | வடக்குத் திருவீதிப் பிள்ளை | 13 இறுதி | நம்பிள்ளைஅருளிச் செயல் |

எழுதப்பட்டிருப்பது, வைணவ சமயத்துக்குரிய பெருஞ்சிறப்பு. இச்சிறப்பு சைவத்தில் இல்லை. நாயன்மார் அறுபத்துமூவர் வரலாறு சைவத்தில் இருக்கிறதென்றால் அது வேறுநிலை; அது பரமே பார்த்தநிலை; அது சமய ஆசாரிய நிலை; சந்தான ஆசாரிய வரலாறு, ஒரு சைவக் குருபரம்பரை நூல், தோன்ற வில்லை. ஆனால் வைணவ ஆசாரியர் வாழ்க்கை, இகத்தைக்கூட பல கோணங்களிலிருந்து பார்த்துச் சுவைத்துக் காட்டுவதாக உள்ளது.

மற்றும் ஒரு நிலையைக் குறிப்பிட எண்ணுகிறோம். ஆழ்வார்களில் கடைசி ஆழ்வார் நம்மாழ்வார். அவர் பரமபதம் சென்ற அதே நூற்றாண்டில் நாதமுனிகள் தோன்றினார். திருக்குடந்தையில் அடியவர் பாடிய ஆராவமுதன் பாசுரத்தைக் கேட்டு, ஏனைய பாசுரங்கள் இருப்பது தெரிந்து, ஆழ்வார் திருநகரியில் அப்பாசுரம் பாடிய ஆழ்வாரின் சந்நிதிக்கே சென்று, அவரால் நாலாயிரப் பிரபந்தங்களும் அவர் அருளப் பெற்றார். வைணவ ஆசாரியர் வரலாறு நாதமுனிகளோடு தொடங்குகிறது. இவ்விதமாக இவர் நேரே நம்மாழ்வாருடைய தொடர்பு பெறுகிறார். இந்தவகையில் ஆழ்வார் ஆசாரியர் பரம்பரை தொடர்பாக வருகிறது. சைவ பரம்பரை இத்தகைய தொடர்பு பெறவில்லை. சைவசமய ஆசாரியர்களின் வரலாறு நால்வரோடும் நின்று விடுகிறது. திருமுறையாசிரியர் வரலாறு, தனியே நம்பியாண்டார் நம்பியோடும் சேக்கிழாரோடும் நின்று விடுகிறது. சந்தான ஆசாரியர் வரலாறு, மெய்கண்டாரோடு தொடங்குகிறது. இடையில் இருவகை ஆசாரியர் பரம்பரைகளுக்கும், வைணவத்தில் உள்ளதுபோன்ற தொடர்பு இல்லை.

குருபரம்பரைகளும், பெரியதிருமுடி அடைவும், ஓரான் வழித் திருமுடி அடைவும், குறிப்பிடுகின்ற விவரங்களை வைத்துப் பின்வரும் வரலாறுகள் எழுதப்பட்டுள்ளன. இவ்வரலாறுகளில் சுவையையும், வரலாற்றுணர்ச்சியையும் வெளிப்படுத்துவதே எமது நோக்கம். அபசாரமாகச் சொல்லும் எண்ணமில்லை.

இந்நூலைக் கற்போர், வைணவ ஆசாரியர் வரலாற்றை எளிதில் தெரிந்துகொள்ளும் பொருட்டு, ஒரு வைணவ பரம்பரை அட்டவணையை இறுதியில் சேர்த்திருக்கிறோம். பின்வரும் வரலாற்றில் சிலசமயம் வடசொற்கள் - தொடர்களும் பரி

பாஷையும் - கலந்திருக்கக்கூடும். ஓரளவு அந்தந்தச் சரித உணர்ச்சியை ஊட்டுவதற்காகவும் குருபரம்பரையின் நடையைக் காட்டுவதற்காகவுமே இவை கொள்ளப்பட்டன என்று கருதவேண்டும்.

## மணிப்பிரவாளம் - ஒரு விளக்கம்

12ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் இராமானுசர் நியமனத்தின்மேல் திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவாய்மொழி வியாக்கியானம் ஆறாயிரப்படி எழுதத் தொடங்கியது முதல், தமிழ் வசனத்தில் மணிப்பிரவாளநடை வழங்கத் தொடங்கிவிட்டது. வைணவரே அதிகமான மணிப்பிரவாள நூல் செய்தார்; சைனரும் அனேக நூல் செய்துள்ளனர்; சைவர் செய்தது, ஒன்றே: 16ஆம் நூற்றாண்டில் சிவாக்கிரயோகி செய்த சிவஞான சித்தியார் உரை ஒன்றுமே. இவ்வாறு விளைந்த தென்மொழி வடமொழிக் கலப்பை, இந்த நூற்றாண்டில் பெருகக் காணலாம்.

மணிப்பிரவாளம் என்பதன் பொருளாவது, மணியும் பவளமும் கலந்துகோத்த மாலையொத்து, வடசொல்லும் தமிழ்ச் சொல்லும் கலந்து தொகுத்த உரைநடைச் சொல்மாலை என்பதாகும். மணி என்ற சொல்லை இருவகையாகச் சொல்வர். மாணிக்கம் என்று பொருள்கூறி, மாணிக்கமும் பவளமும் கலந்து தொடுத்திருந்தால் தம்மில் வேறுபாடு தோன்றாமல் ஒரே செந்நிறமாயிருப்பது போல, வடசொல்லும் தமிழ்ச் சொல்லும் கலந்தநடை, வேறுபாடின்றிப் படிக்க ஒன்று போலிருப்பது என ஒரு பொருள். மற்றது, மணி என்றால் முத்துமணி என்று பொருள் செய்து, முத்தும் பவளமும் தங்கள் வெண்மை செம்மை ஆகிய நிற வேறுபாட்டால் அழகு தருவதுபோல, இருமொழியும் கலந்தநடை, தன் சொல் வேறுபாட்டால் அழகு தருவது என்றும் சொல்லப்படும்.

வடமொழி (செய்யுளில்) விரவின் அது மணிப்பிரவாளமாம்; அதற்கு எதுகையில்லை என்பது வீரசோழியம் (180). சரித்திரக் கண்கொண்டு பார்க்கும்போது, இந்நூல் செய்யப்பெற்றது. வீரராசேந்திர சோழன் காலம் (கி.பி. 1063 - 1076). இக்காலத்து இராமானுசர் இளைஞராயிருந்திருப்பார். இவருக்கு முந்திய வைணவ ஆசாரியர் வடமொழியிலேயே நூல் செய்

தார்கள். பின்னர்தான் இருமொழி கலந்தநடை மிகுதியாயிற்று. சைனர் மணிப்பிரவாளநடை நூல் இக்காலத்துக்கு முன் செய் திருந்தால், அது இப்போது கிடைக்கவில்லை. ஆதலால், பேச்சு வழக்கில் அக்காலத்தே வழங்கிய இருமொழிக் கலப்பையும், சோழப் பேரரசருடைய கல்வெட்டுக்களில் வடமொழியும் தென்மொழியும் பயின்றிருப்பதையும் கருத்தில்கொண்டு, இரு மொழிக் கலப்புக்கு வீரசோழியமுடையார் இவ்வாறு ஓர் அமைதி காட்டினாரோ என்று கருதும்படியுள்ளது.

மணிப்பிரவாள நடையைச் சம்பந்தர் முதலாயினோர் பழித்து எதிர்த்தார்கள் என்று சிலர் கூறக் கேட்டிருக்கிறோம். இது உண்மையாகுமென்று தோன்றவில்லை. இவ்வாறு கூறு வோர் 'ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயன் அறிகிலா - அந்தகர்' என்பது முதலான தொடர்களால் சம்பந்தர் மணிப்பிரவாளத் தைப் பழித்தார் என்று சொல்வர். இக்கருத்துப் பொருந்துவ தாகச் சொல்லவியலாது. ஆரியத்தோடு செந்தமிழ்ப்பயன், சம்பந்தர் கருத்தின்படி சிவனை வழிபடுதல்; இது செய்யாதாரை அவர் பழித்தாரேயன்றி, இரண்டையும் கலந்து எழுதினோ ரைப் பழித்தார் என்பதற்கு இது ஆதாரமாகாது, வேறு சான்று மில்லை, அக்காலத்தில் இக்கலப்புநடை உண்டாகவில்லை. இந்நடை தோன்றியது மிகவும் பிற்காலத்தில் அதுவும் சமய தத்துவப்பொருள் விளக்குமிடத்துத்தான்.

சுந்தரரைக் குறித்தும் இங்கு ஒரு வார்த்தை சொல்லலாம். இவர் காலத்தில் சமணப் பூசல் ஏற்பட்டதாக வரலாறு இல்லை. எனினும், இவர் சம்பந்தர் அப்பர் வரலாறுகளை உணர்ந்தவ ராதலால், தாமும் சமணரைப் பழித்துரைக்கிறார். 'மலைக்குன்று போல் நின்று தங்கள் கூறை ஒன்றின்றியே - ஞமண ஞாஞண ஞாண ஞோண மென்றோதி யாரையும் நாணிலா - சமணர்' (7562) என இவர் பாடுவது, வடமொழியையோ, மணிப்பிரவாளத் தையோ கருதியது ஆகாது; தமிழ் உச்சரிக்க அறியாமல் மூக்கி னாற் பேசும் சமணர் தமிழைக் குறித்ததாகும்.

சங்கரர் இந்த வம்புக்கே போகவில்லை; முழுமையும் வட மொழியிலேயே பாஷ்யம் செய்தார். அவருக்குத் தமிழ் மூல நூலோ தமிழ் வேதமோ இல்லை; அவர் நாடாகிய கன்னட நாட்டு மொழியிலும் இல்லை. இராமானுசர் வடமொழியில் பாஷ்யம் செய்யினும்; பிரபந்தங்கள் தமிழ் வேதம் எனக் கொண்

டாடப் பெற்றமையால், இவருக்குப் பின்வந்தோர் வடமொழி யோடு தமிழும் கொண்டனர். அன்றியும், இராமானுசர் வேலை மதமாற்றம்; ஆகவே, பாமர மக்களைத் தம்பக்கம் இழுக்கும் போது, தாய்மொழி இல்லாமல் முடியாது. இதன் பொருட்டே இவர்களுக்கு மணிப்பிரவாளம் பயன்பட்டது. சைனருடைய நிலை இரண்டும் கெட்டான் நிலை; பல்லவரிடத்தும், பாண்டிய ரிடத்தும் அரசராதிக்கத் துணையோடு வளர்ந்த அவர்கள், அவ்வரசுகள் வீழவே, தாங்களும் எல்லாவகையிலும் வீழ்ச்சி யடைந்தனர். சோழரிடத்தில் பொதுவாக அவர்கள் காரியம் சாயவில்லை. மணிப்பிரவாளம் அவர்களிடையே கல்வியளவாக நின்றதே தவிர, பிரசாரத்துக்குப் பயன்படவில்லை. இதுவே நாட்டில் மணிப்பிரவாளத்தின் நிலை.

இவ்வியாக்கியான ஆசிரியர்களுக்கிருந்த சிறப்பு இரண்டு: ஒன்று, பகவானுடைய சமஸ்த கல்யாண குணங்களிலும், அவற்றை எடுத்துப் பேசுகின்ற ஆழ்வார் பிரபந்தங்களிலும், அளவின்றித் தோய்ந்திருத்தல். ஆகவே, பிரபந்தத்துள் ஒரு சொல்லை எடுத்தாலும்கூட, இவ்வளவு அனுபவமும் தோய்வும் அச்சொல் வழியே வெளிப்படுகிறது; வெளிப்படுவது அச்சொல் லின் பொருள் மாத்திரமல்ல; சகல அனுபவமும். மற்றது, வடமொழியில் அளவில்லாத பயிற்சி. அக்காலத்து வாழ்ந்த பிராமணர் அனைவருமே, வடமொழிதான் தங்களை நேரே பரமபதத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும் என்ற அடிப்படை நம்பிக்கை உள்ளவர்கள்; காரணம், அவர்கள் தமிழ்ப் பற்றில் குறைவில்லை; மூல ஆசாரியரான இராமானுசர் தமிழில் ஒரு நூல் கூடச் செய்ததில்லை; எல்லாம் வடமொழியில்தான் செய் தார். தாய் ஓரடி பாய்ந்தால் குட்டி பத்தடி பாயும் அல்லவா? ஆகவே, வியாக்கியானம் செய்த ஆசாரியர்கள் தங்கள் குரு காட்டிய வழியில் சென்று, வடமொழியில் நூல் செய்தார்கள். புதுநூல் செய்யாமல், தமிழ் நூலுக்கு உரை செய்யப்புகுந்தவர் களாதலால், தாங்கள் சொல்லிய வடமொழியோடு கூட, கொஞ்சம் தமிழையும் கலந்து கொண்டார்கள்.

இராமானுசர் ஏன் வடமொழியில் நூல் செய்தார் என்பது கேள்வி. வடமொழி அதிகம் பயின்று அதிலே பெற்றிருந்த பாண்டித்தியமும், தாம் வடமொழிச் சாத்திரங்களையே உரை செய்ய எடுத்துக் கொண்டமையும் என்றுதான் இதற்கு விடை.

கூறவேண்டும். உள்பொருள் பிரமம் ஒன்றுமே என்று அத்வைத நிருபணம் செய்த பிராமணரான சங்கரர் எல்லாம் வடமொழியில் செய்தமையால், அதற்கு மாறாக விசிஷ்டாத்வைத நிருபணம் செய்யவந்த மற்றொரு பிராமணரான இராமானுசர், தம் நூலை வடமொழியில் செய்தால்தானே பிராமணர் ஒப்புக் கொள்வார்கள்? தமிழில் செய்தால் இவருக்கு வடமொழி வராதுபோலும் என்று அவர்கள் இகழ்வதோடு, இவருடைய வாதமும் வெல்லாது போகும்.

அன்றியும், அக்காலத்தில், தமிழ் மக்களுக்கு வடமொழி யைக் காட்டினால் அது தேவபாடை எனக்கருதி அதில் அதிகம் ஈடுபடுவார்கள், சைவரை வைணவராக்க இதுவும் ஒரு நல்ல சாதனம் என்றும் அவர் கருதியிருக்கலாம். எப்படியும் மனித இயல்பு, எந்தக் காலத்திலுமே, புரியாததில் ஒரு மயக்கம் கொள்ளுதல்; நல்ல தமிழிலே சொல்லிவிட்டால், சைவமக்கள் நன்கு புரிந்து கொள்ளுவார்கள்; தங்கள் சமய தத்துவங்களை விட இவர் சொல்லுவதில் சிறப்பில்லை என்பது நன்கு விளங்கி விடும்; நன்கு புரிந்துகொள்ளாத வடமொழியில் சொன்னால் மயங்கிவிடுவார்கள் என்பதே இதன் கருத்து. எப்படியோ, இந்த வடமொழி மோகம் வைணவ வியாக்கியானக்காரர்களிடம் நிலைத்துவிட்டது. அதன் விளைவே மணிப்பிரவாளம். இவ் வியாக்கியானங்களை நாம் பயிலும்போது, மொழியை மறந்து, பொருளில் தோய்ந்தோமானால், மிகவும் சிறப்பான தெய்வ அனுபவத்தைப் பெறுவது உறுதி.

இராமானுசருக்குப் பின் ஏற்பட்ட எல்லையில்லாத வைணவ மணிப்பிரவாள உரைநடை நூற்பெருக்கத்தை நோக்கும் போது, ஒரு கருத்து எழாமற்போகாது. 'புதிதாக மதம் மாறிய வனுடைய சமய ஆவேசம்' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். இந்த வைணவத்தைப் பொறுத்தவரையில் இம்மொழி முழுமையும் உண்மையே. சைவத்திலிருந்து வைண வத்துக்குப் புதிதாய் மாற்றப்பெற்ற புது வைணவர்களை இயக் கியது இத்தகையதோர் ஆவேசமேயாகும்.

பொதுவாக வியாக்கியானக்காரர்கள் வடமொழியை அதிகம் தமிழில் கலந்ததனால், தமிழுக்குக் குறைவும் வட மொழிக்கு ஏற்றமும் கற்பித்தார்கள் என்ற ஒரு கருத்து நிலவு

கிறது. இது பெரிதும் பிழைபட்ட கருத்து. அவர்கள் ஆழ்வார்களுடைய பாசுரங்களில் ஈடுபட்ட பக்தி விசேடத்தால், தமிழே உய்தி தருவது என்ற கருத்தும் அவர்கள் நூல்களில் காணப்படும். பெரியவாச்சான்பிள்ளை எழுதிய திருமாலை வியாக்கியானத்தில், "குடதிசைத் தலையை வைத்துக் குணதிசைப் பாதம் நீட்டி" (19) என்ற பாடல் உரையில் பின்வருமாறு எழுதுகிறார்: "வடதிசை பின்புகாட்டி - வடக்குத்திக்கு ஆரிய பூமியாகையாலே, சமஸ்கிருத முரணராய், ஆழ்வார்கள் ஈரச்சொல்லும் நடையாடாத தேசமாகையாலே, அத்திக்கைத் திருத்தும்போது, பின்பழகெல்லாம் வேணுமென்றிருந்தார்." திருவரங்கநாதன் தெற்கு நோக்கியிருக்கிறான்; ஆகவே முதுகு வடக்குப்பக்கம் இருக்கும் என்பதை விளக்க வந்த பெரியவாச்சான் பிள்ளை, வடதிசையிலுள்ளார், சமஸ்கிருத முரணரானபடியால், அவர்களுக்குத் திருமுக மண்டலத்தைக் காட்டி ஆட்கொள்ள விரும்பாது, வடக்கே முதுகைக் காட்டித் தெற்கே நோக்கியிருக்கிறான் திருவரங்கநாதன் என்கிறார். பின்னும், திருவாய்மொழி 9. 2. 8ஆம் பாடலில் பெரியவாச்சான் பிள்ளை சொற்களை வைத்துச் சீயர் அரும்பதம் விளக்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

எங்கள்கண் முகப்பே உலகர்க ளெல்லாம்
    இணையடி தொழுதெழு திறைஞ்சித்
தங்கள்அன் பாரத் தமதுசொல் வலத்தால்
    தலைத்தலைச் சிறந்து பூசிப்பத்
திங்கள்சேர் மாடத் திருப்புளிங் குடியாய்!
    திருவைகுந் தத்துள்ள தேவா!
இங்கண் மா ஞாலத் திதனுளும் ஒருநாள்
    இருந்திடாய் வீற்றிடங் கொண்டே

என்பது பாடல். இதனுள், தமது சொல்வலத்தால் என்றவிடத்து, "பாலுண்டீர் பழமுண்டீர், பொன்னாலே பூணு நூலிடுவீர்" என்ற தொடரைப் பெரியவாச்சான் பிள்ளை எழுத, அதற்கு விளக்கமாக, சீயர் அரும்பதம் பின்வருமாறு கூறும்:

"தமது வலத்து - சொல்லால்" என்று அன்வயித்து, தந்தாமுடைய பலத்துக்கீடான சொற்களாலே யென்னுதல்; வலம் - பலம்; தந்தாம் சொல்லவல்லவளவாலே யென்னுதல். அதாவது

வங்கிபுரத்துநம்பி பெருமாளைச் சேவிக்க வெழுந்தருளின அளவிலே, இடைச்சிகளண்டையிலேயிருந்து ஸேவித்தாராய், அத்தை ஆண்டான் கண்டருளி, 'ப்ராப்யமான ஸ்ரீ வைஷ்ணவ சமுதாயமிருக்க அவர்களண்டைக்கு எழுந்தருளு வானென்?' என்ன, 'நாம் அல்பம் விரகமாயிருப்போம். இவர்கள் ஒன்று மறியாத கொச்சைகளாகையாலே, யஞ்சராமோ நபச்யதி என்கிறபடியே ஈசுவரனுடைய கடாக்ஷம் இவர்களிடத்திலே பள்ளமடையாயிருக்குங்காணும் என்றங்கே யிருந்தேன்' என்ன, 'அவர்கள் சொன்ன தேது, தேவரீரருளிச் செய்த தேது?' என்று ஆண்டான் கேட்க, 'பாலுண்பீர், பழமுண்பீர்; பொன்னாலே பூணுநூலிடுவீர், நூறு பிராயம் புகுவீர்; அழுத்த இரட்டை யுடுப்பீர்' என்கிற இது அவர்கள் சொன்ன வார்த்தை: 'விஜயஸ்வ, விஜயீபவ என்று நான் சொன்ன வார்த்தை' என்று நம்பியருளிச் செய்ய, 'அங்கே போயும் முரட்டு சம்ஸ்க்ருதம் விட்டீரில்லையே, எங்கேயிருந்தாலும் நாம் நாங்காணும், இங்கே யெழுந்தருளீர்' என்று ஆண்டானருளிச் செய்த வார்த்தை. இம்மேற்கோட் பகுதியில், ஆண்டான், 'முரட்டுச் சம்ஸ்கிருதம் விடவில்லையே' என்று வங்கிபுரத்து நம்பியைச் சுட்டிக்காட்டுவது குறிப்பிடத் தக்கது; "போய் நின்றது, சேவிக்க இடைச்சியர் கூட்டத்தில்; ஆனால் சம்ஸ்கிருதம் விடவில்லை; பெருமாளுடைய கடாட்சம் எப்படிக் கிடைக்கும்?" என்பது கருத்து.

எனவே, இங்கு சிறப்பு தமிழுக்கேயன்றி வடமொழிக்கு அல்ல என்பது தெளிவு. ஆசாரிய நிலையிலுள்ளவர்கள், சமஸ் கிருத முரணர், முரட்டு சமஸ்கிருதம் என்று கூறுவது குறிப் பிடத்தக்கது. இப்பெரியோர் தமிழையே சிறப்பாய்க் கருதிய போதிலும்கூட, நீண்டகால வடமொழிப் பழக்கம் விடவில்லை. அதனாலேயே இவர்கள் சமஸ்கிருதம் கலக்காமல் பேசவோ எழுதவோ முடியவில்லை. இப்படி அவர்கள் எழுதித் தமிழைக் கெடுத்தார்கள் என்று சொல்வது பிழையான வார்த்தை; இந்த எழுத்து இயல்பாக வந்ததே அன்றி, முயன்று வந்தது அல்ல. பட்டர் கூற்றாக, நஞ்சீயர் வரலாற்றில் ஒரு செய்தி அறிகிறோம்: அவர் ஆறு தரிசனத்துக்கும் மேலாகத் திருமங்கையாழ்வார் பாடிய திருநெடுந்தாண்டகம் சிறப்புடையது என்ற கருத்துப் படப் பேசுகிறார். இதனாலும், தமிழுக்கு அவர்கள் எவ்வளவு சிறப்புக் கொடுத்தார்கள் என்பது தெரியும்.

## நஞ்சீயர்

### வரலாறு

தீர்த்தவாசிப் பிராமணனொருவன், ஒரு சமயம் திருவரங்கம் அடைந்து, பராசரபட்டர் என்கிற பெரியபட்டரைச் சேவித்து, அவருடைய ஸ்ரீ பாதத்து முதலிகளையும்* திருவோலக்கத்தையும் தரிசனம் நிர்வகிக்கிற சிறப்பையும் கண்டு மகிழ்ந்து, "இது மேல்நாட்டு வேதாந்தியின் கோஷ்டி போலிருந்தது" என்றான். மீண்டும் அவன் மேல்நாடு சென்றபோது, அவ்வேதாந்தியைச் சந்தித்து, பட்டருடைய பெருமையைக் கூறவும், அவர், "ஆறு தரிசனம் வல்ல நாம் ஆறு ஆசனமிட்டு இருக்கிறோம். நமக்கு மேலே ஒருவரோ?" என்று சொல்லி அதிசயப்பட்டார். கேட்ட பிராமணன் மறுபடியும் ஸ்ரீரங்கமடைந்து பட்டரிடம் வந்து நடந்தவற்றைக் கூறவும், பட்டர், "நாம் வேத சாஸ்திரம் வல்லம் என்று நீ சொல்லியது போதாது; திருநெடுந்தாண்டகம் வல்லம் என்றல்லவா கூறவேண்டும்?" என்று சொல்லியனுப்பிவிட்டு, அவ்வேதாந்தியை ஸ்ரீ வைஷ்ணவ தரிசனத்துக்குத் திருப்ப வேண்டுமென்று கருத்தில்கொண்டு, கோயிலை அடைந்து பெருமாளுடைய உத்தரவும் பெற்றுப் புறப்பட்டார்.

அந்தப் பிராமணனும் சென்று வேதாந்தியிடம் "திருநெடுந்தாண்டகம் வல்லவர் பட்டர்" என்று கூறியபோது, அவ்வேதாந்தி இயல் தமிழ் வல்லவராயினும், வைணவ நூல்களைக் கற்றவர் அல்லராதலால், ஒன்றும் விளங்காமல் இருந்தார். இதற்கிடையில், பட்டர், தம் பரிவாரங்களோடு திருநாராயணபுரம் அடைந்து, பெருமாளைத் தொழுது, மிக்க கோலாகலத்துடன் வேதாந்தியின் இல்லம் நோக்கிப் புறப்பட்டார். வேதாந்தி இருந்த இடம் கங்கோரை (சிருங்கேரி) என்ற ஊர். அவ்வூர் எதிர்ப்பட்டவுடனே பட்டருடைய திருச்சின்னங்கள் ஒலிக்க ஆரம்பித்தன. அவரோ, மணிப்பல்லக்கிலே எழுந்தருளி வந்தார். அந்த நிலையில் இரண்டு பிராமணர் எதிரே வந்தார்கள். பட்டரைப் பார்த்துக் கேட்டார்கள்: "நீர் யார்? இவ்வளவு சம்பிரமத்துடனே எங்குச் செல்லுகிறீர்?"

---

* அடியார்களையும்.

பட்டர் : நாம் ஸ்ரீரங்கராச பட்டர். வேதாந்தியுடனே தர்க்கிக்கப் போகின்றோம்.

பிராமணர்: நீர் இப்படி சம்பிரமத்துடனே எழுந்தருளினால் வேதாந்தியை நீர் காணப்போகாது. அவர் கிருகத்துக்குள்ளே இருந்துவிடுவார். அவருடைய சிஷ்யப் பிரசிஷ்யர்கள் தலை வாசலிலே இருந்து, வந்த வித்துவான்களுடனே நாலாறு மாசம் தர்க்கித்து, அவர்களை உள்ளே புகவொட்டாதே புறம்பே தள்ளிவிடுவார்கள்.

பட்டர் : ஆகில், நாம் நேரே சென்று அவர் கிருகத்திலே புகுந்து வேதாந்தியைக் காணும் விரகு* என்ன?

பிராமணர்: வேதாந்தி தனவான் ஆகையாலே, தடையில்லாமல் பிராமணருக்குச் சத்திர போசனம் இடுவார். அந்தப் போசனத்துக்காக வந்த பிராமணரோடே கலந்து அவர்கள் வேடத்தையும் தரித்துக்கொண்டு உள்ளே சென்றால், புசிக்க வருகிற பிராமணரை அவர் பார்த்திருப்பார். அங்கே வேதாந்தியைக் காணலாம். ஆகையால் உம்முடைய சம்பிரமங்களை யெல்லாம் இங்கே நிறுத்திவிட்டு, நீர் ஒருவராக, உண்ணவரும் பிராமணருடனே எழுந்தருளும்.

இதைக்கேட்ட பட்டர், இவர்கள் சொன்னது சரியென்று உணர்ந்து, தம்முடைய பரிவாரங்களை ஊருக்கு வெளியே நிறுத்தி, தம்முடைய அணிகலன்களையெல்லாம் களைந்து, ஒரு தொன்னையை எடுத்துக்கொண்டு காவியுடை தரித்துக் கமண்டலத்தை ஏந்தி, எளிய கோலத்தில் உண்ணச்சென்ற பிராமணரோடு உடன் சென்றார். வேதாந்தியோ, ஆறு ஆசனத்தின் மேல் கம்பீரமாக அமர்ந்து உண்போரைப் பார்த்துக் கொண்டிருந்தார். உட்சென்ற பட்டரோ உண்ணுமிடம் செல்லாமல் வேதாந்தி இருந்த இடம் சென்றார்.

வேதாந்தி : பிள்ளாய், இங்கு ஏன் வருகிறீர்?

பட்டர் : பிட்சைக்கு வருகிறேன்.

வேதாந்தி : எல்லோரும் புசிக்கிற இடத்துக்குப் போகிறீர்❖, பிட்சைக்கு.

பட்டர் : எனக்குச் சோற்று பிட்சை அன்று.

---

* விரகு உபாயம்; விரகு தமிழ்ச்சொல். வைணவ மணிப்பிரவாளத்தில் பல சமயம் மிக நல்ல தமிழ்ச் சொற்கள் எளிதாக வழங்குவதும் உண்டு.

❖ போவீராக.

வேதாந்தி : (இவர் வறிய கோலமாயினும் சிறிது வித்துவானாயிருப்பர் போலும் என்று எண்ணி) கா பிக்ஷா?*

பட்டர் : தர்க்க பிக்ஷா.❖

கேட்ட வேதாந்தி திடுக்கிட்டார். "நம்மைத் தர்க்க பிட்சை கேட்ட நீர் பட்டரோ?" என்ன, இவரும், "ஆம்" என்று சொல்லி, தம்முடைய காவி உடை முதலியவற்றைக் களைந்து பிரசங்கம் செய்யத் தொடங்கினார். இருவரும் ஒன்பது நாள் தர்க்கத்தில் இறங்கியும், வெற்றி தோல்வி நிச்சயமாகவில்லை. அதன்மேல் பட்டர், பெரிய பெருமாளுடைய அருளைத் துணைகொண்டு, பத்தாம் நாள் வேதாந்தியோடு மீண்டும் வாதம் செய்து, வெற்றி பெற்றார். அப்போது வேதாந்தி அவர் திருவடியில் விழுந்து வணங்கி, "உம்மை இதுவரை மனுஷ்ய மாத்திரமே என்றிருந் தேன். நம்பெருமாள் என்ன, நீர் என்ன, பேதமில்லை. உறங்கும் பெருமாள் அவர், உலாவும் பெருமாள் நீர்" என்று பலபடப் புகழ்ந்து பட்டருக்குச் சீடரானார். பட்டர் அவரை வைணவ ராக்கி, சமய ரகசியங்களை எல்லாம் உபதேசித்தார். பின்னர் நாலாயிரமும் ஓதிக்கொண்டிருக்கும்படி நியமித்தருளி, பட்டர் திருவரங்கம் நோக்கிச் சென்றுவிட்டார்.

வேதாந்திகள் தம்மை ஆட்கொள்ளும் பொருட்டு எளிய கோலத்தோடு பட்டர் வந்த தன்மையை எண்ணி எண்ணி அரற்றிக்கொண்டிருந்தார். பின் இவர் பாகவத கைங்கரியமே வேலையாக இருந்தார். பின் அந்தநாளில் ஒரு நாள், இரு ஸ்ரீ வைஷ்ணவர்கள் இவர் தீர்த்தமாடப் போயிருந்த சமயம் வீட்டில் வந்து பிட்சை கேட்க, அங்கிருந்த இவர் தேவிமார் இருவரும், வந்தவர்களை உதாசீனமாய், "வேதாந்தி தீர்த்தமாடப் போயிருக்கிறார், அவரிடம் போங்கள்" என்று பிட்சையிடாது அனுப்பிவிட்டனர். இவர் வீடு திரும்பிவந்து நிகழ்ந்ததுணர்ந்து, 'பாகவத கைங்கரியம் செய்யாத தேவியரோடு இல்லறம் நடத்துதல் கூடாது' என்று முடிவுசெய்து, தமக்கிருந்த பெரும் சொத்தை மூன்று பாகமாக்கி, இரண்டை இரு தேவியருக்கும் கொடுத்துவிட்டு, தம் பாகத்தை விற்றுப் பணத்தை எடுத்துக் கொண்டு பட்டரைத் தேடிக் கோயிலை✞ அடைந்து பொருளை

---

* என்ன பிட்சை.

❖ தர்க்கம் புரிவதாகிய பிட்சை.

✞ திருவரங்கத்தை.

வைத்துப் பட்டர் திருவடியை வணங்கினார். இவரது நிலையை உணர்ந்து, பட்டர் "நம் ஜீயர் வந்தார்" என்று வாரியணைத்துக் கொண்டார். அதுமுதல் இவருக்கு நஞ்சீயர் என்று பெயர் வழங்கலாயிற்று. பட்டர் உத்தரவின்படி பொருளையெல்லாம் திருநந்தவனத்துக்கும் பாகவத கைங்கரியத்துக்கும் இவர் செல விட்டார்.

பட்டர் இல்லறத்தார். இப்போது நஞ்சீயர் துறவி. இவர் பட்டருடைய பல்லக்கைச் சுமக்கச் சென்றபோது அவர் தடுக்கவும் இவர், "ஆசாரிய கைங்கரியமே பெரிது, அதற்கு என் துறவு இடையூறு என்றால், காவி உடையை இதோ களைந்து விடுகிறேன்" என்றார். இவ்வாறு இவருடைய ஆசாரிய பக்தி யைப் புலப்படுத்தும் நிகழ்ச்சிகள் மிகப்பல. நந்தவனப் பணியில் ஒரு சமயம் இடையூறு ஏற்பட்டபோது தாமே செய்ய முன் வந்தார். "பட்டர் குடும்பத்துக்காகவே நான் நந்தவனப் பணி செய்கிறேன். பெருமாள் கைங்கரியத்தைவிட ஆசாரிய கைங் கரியமே பெரிது" என்று நஞ்சீயர் அப்போது கூறினார். மற் றொரு சமயம், நடந்த இளைப்பால் பட்டர் இவர் மடிமீது தலை வைத்து இரவு முழுவதும் துயில்கொள்ள, இவர் இடை விடாமல் அசையாது தாங்கியிருந்தார்.

பின்னர் பட்டர், இவருக்குத் திருக்குருகைப்பிரான் பிள் ளான் திருவாய்மொழிக்கு எழுதின வியாக்கியானம் ஆறாயிரப் படியும் பிரசாதித்தார். அவர் உத்தரவுப்படி இவர் திருவாய் மொழிக்கு ஒன்பதினாயிரப்படி என்ற உரை ஒன்று செய்தார்.

உரியகாலத்தில் பட்டர் திருநாட்டுக் கெழுந்தருள, உடனிருந்து கிரியைகளை முற்றுவித்துப் பின் தம் இருக்கை நோக்கிப் புறப்பட்ட நஞ்சீயர், முட்டாக்கிட்டு மூடிக்கொண்டு புறக்கடை வழியே சென்றார். கண்ட ஸ்ரீபாதத்து முதலிகள் 'இது ஏன்?' என்று கேட்க, இவர் "புதுக்க அறுத்த விதவை தெருவிலே வெளிப்பட வருமோ?" என்றார்.

இதன்பின் நஞ்சீயர் தாம்செய்த திருவாய்மொழி ஒன்பதி னாயிரப் படியை நம்பிள்ளையைக் கொண்டு பிரதி செய்வித் ததையும் அவரை ஆட்கொண்டதையும் அவர் வரலாற்றிலேயே காண்போம். இவரிடம் அவர் மிக்க பக்தி பூண்டவராய் வாழும் நாளில் 'இவர் திருவாய்மொழி நூறுரு அர்த்தம் நிர்வகித்

தருளினார். அதுகொண்டு பிள்ளை ஜீயருக்குச் சதாபிஷேகம் பண்ணினார் என்று பிரசித்தம்.'

நஞ்சீயர் நூறு திருநட்சத்திரம் வாழ்ந்து, முடிவில் நோய்ப் பட்டு வருந்தி, அப்போது தாம் விரும்பியபடி தம்மடத்து வாயிலில் பெருமாளுடைய ஸர்வஸ்வதானம் (மறைவு அறத் திருமேனி காட்டுகை) பெற்றார். நம்பிள்ளை வந்து வணங்கி ஒரு வார்த்தை உபதேசம் கேட்க, இவர் தரிசனார்த்தம் நிர்வகிக்கும் படி கட்டளையிட்டு, "வாரீர் பிள்ளாய், பட்டர் அடியேனுக்கு ஹிதோபதேசம் செய்து, 'வேதாந்தி என்கிற பேரையுடையோம், நம் பக்கல் ஆசிரயித்தோம், பகு திரவியத்தை ஆசாரிய தக்ஷிணை யாகக் கொடுத்தோம் என்று இறுமாந்திராதே, எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிரும் என்றருளிச் செய்தார். நீரும் அப்படியே, 'லோகாசாரியரென்ற பெயரை யுடையோம், அருளிச் செயல் நாலாயிரத்துக்கும் பொருள்சொல்ல வல்லோம், ஸ்ரீ பாஷ்யத்திற்கும் பிரவர்த்தகர்' என்று மேன்மையை நினைந் திராதே, எம்பெருமானார் திருவடிகளையே தஞ்சமென்றிரும்" என்று அருளிச் செய்தார். பின்பு கோயிலுக்கு நேரே, பகவத் சேனாதிபதி ஜீயர் மடியிலே தம்முடியும், பின்பழகிய பெருமாள் ஜீயர் மடியிலே திருவடிகளுமாகக் கண் வளர்ந்தருளி, பட்டர் திருவடிகளைத் தியானித்தபடியே திருநாட்டுக் கெழுந் தருளினார்.

**நூல்கள்**

நஞ்சீயர் செய்த நூல்கள்: திருவாய்மொழி ஒன்பதினாயிரப் படி, திருப்பாவை ஈராயிரப்படி, திருவந்தாதி கண்ணிநுண் சிறுத்தாம்பு திருப்பல்லாண்டு வியாக்கியானம், ரகஸ்ய த்ரய விவரணம், நூற்றெட்டு சரணாகதி கத்யத்ரய வியாக்கியானம் என்பன. இவர் 105 திருநட்சத்திரம் இருந்தார். நிகமாந்தயோகி, மாதவாசாரியர் என்பன இவருக்கு வழங்கிய வேறுபெயர்கள்.

நஞ்சீயர் ஒன்பதினாயிரப்படியின் சிறப்பை உபதேச ரத்ன மாலை பின்வருமாறு கூறும்:

> தஞ்சீரை ஞானியர்கள் தாம்புகழும் வேதாந்தி
> நஞ்சீயர் தாம்பட்டர் நல்லருளால் – எஞ்சாத
> ஆர்வ முடன்மாறன் மறைப்பொருளை ஆய்ந்துரைத்தது
> ஏரொன் பதினாயி ரம். (43)

நஞ்சீயர் வாழித்திருநாமம், அப்பிள்ளை பாடியது:

தெண்டிரைசூழ் திருவரங்கம் சிறக்க வந்தோன் வாழியே
சீருறு மா தவனென்னுஞ் செல்வனார் வாழியே
பண்டைமறைத் தமிழ்ப்பொருளைப் பரிந்துரைப்போன் வாழியே
பங்குனியி லுத்திரத்திற் பாருத்தித்தான் வாழியே
ஒண்டொடியார் கலவிதனை ஒழித்திட்டான் வாழியே
ஒன்பதினா யிரப்பொருளை யோதுமவன் வாழியே
எண்டிசையெண் சீர்பட்டர் இணையடியோன் வாழியே
எழில்பெருகு நஞ்சீயர் இனிதூழி வாழியே.

## காலக்குறிப்பு

வைணவ ஆசாரியர் வரலாற்றுக்கு ஓரளவு ஆதாரபூர்வமான மூலம், பின்பழகிய பெருமாள் ஜீயர் எழுதின குரு பரம்பராப் பிரபாவமாகும். இவர் நம்பிள்ளையின் சீடர். இவர் மடியில் திருவடி வைத்து நஞ்சீயர் உயிர் துறந்தார். ஆகவே உடன்கால நிகழ்ச்சிகளை அவர் நேரில் கண்டு அனுபவித்துக் கூறுகிறார் என்று நாம் கருதலாம். குரு பரம்பராப் பிரபாவத்தில் ஆழ்வார் ஆசாரியர் தோன்றிய காலம் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலம் துவாபர யுகத்திலேயே தொடங்குகிறது. இன்று கலியுகம் 5071 ஆண்டுகள் கழிந்த நிலையில், முதலாழ்வார்கள் முதலியோர் கலிக்கு முந்திய யுகத்திலேயே அவதரித்தார்கள் என்பது ஆராய்ச்சிக்குப் பொருத்தமாயில்லை. எனினும், ஆசிரியர் பிற்பட்ட ஆசாரியருக்குக் கூறியுள்ள ஆண்டுகள் பொதுவாய்க் கொள்ளத் தகுந்தனவே. நம்பிள்ளை கலி 4308 (கி.பி. 1207) அவதாரம் என்பது பொருந்தும். நஞ்சீயர் 4214 (கி.பி. 1113) பட்டர் 4163 (கி.பி. 1062) என்பன பொருத்தமாயில்லை. இரண்டு காரணங்கள். நஞ்சீயரின் மாணாக்கர் நம்பிள்ளை. நஞ்சீயர் வயதில் முதிர்ந்து, பட்டர் காலமான பிறகு, நம்பிள்ளையைத் தேடி, ஒன்பதினாயிரப்படி பிரதி செய்யக் கொடுத்தார். கொடுத்த காலம் இவருக்கு வயது 40 இருக்குமென்று கொண்டு, நம்பிள்ளைக்கு வயது 15 என்று கொண்டாலும், இவர் சுமார் 1182இல் பிறந்தார் என்று ஏற்படும். 105 திருநட்சத்திரம் என்றால் 1182 - 1287 என்றாகிறது. பட்டர் இளமையில் காலமானார்; வயது 28; இதை ஒப்புக்கொண்டால் இருபது வயதில் இவர் நஞ்சீயரை ஆட்கொண்டார் எனல் வேண்டும். நஞ்சீயர் அப்போது பிரசித்தியான வேதாந்தியானபடியால், வயது 30 என்றும் கொள்ளுதல் பொருந்தும். அக்காலம் கி.பி. 1212க்கு நேராகும்.

அங்ஙனமானால், பட்டர் காலம் 1192 - 1220; நஞ்சீயர் 1182 - 1287; நம்பிள்ளை 1207 - 1312. (இதுமட்டும் பிரபாவத்தில் கூறியபடியே.)

இது பொருந்தும் என்பதற்கு மற்றொரு காரணமும் காணலாம். பட்டர் வைபவத்தில் திரிபுவனவீர தேவராயன் என்ற அரசன் இவரை அழைத்தான் என்று கூறப்பட்டுள்ளது. இப்பட்டம் மூன்றாம் குலோத்துங்க சோழனுக்குரியது. அவன் ஆட்சிக்காலம் 1178 - 1218. இக்காலத்தில் பட்டர் வாழ்ந்தார் என்பது பொருந்துவதே. நஞ்சீயர் காலம் இங்கு குறித்தபடி 1182 - 1287 எனச் சொல்லுதல் சரியே. ஆசாரியர் திருநட்சத் திரங்களும் ஆயுட் காலமும் குருபரம்பராப் பிரபாவத்தில் சொல்லியபடியே கொண்டு இம்முடிவுக்கு வருகிறோம்.

திருவாய்மொழி வியாக்கியானப் பதிப்பில், முதல் குருகைப் பிரான் ஆறாயிரப்படியை அடுத்து இரண்டாவதாக, நஞ்சீயர் ஒன்பதினாயிரப்படி அச்சிடப்பட்டுள்ளது. அடுத்து வருகின்ற நம்பிள்ளை வரலாற்றில், நஞ்சீயர் ஏடு ஆற்றிலே போய்விட, நம்பிள்ளை தம் நினைவிலிருந்து இதை எழுதினார் என்பது சொல்லப்படும். இதனுள் நம்பிள்ளையின் வார்த்தையும் கலந் துள்ளது என்பது வரலாறு. நஞ்சீயர் பாவை வியாக்கியானம் இரண்டாயிரப்படி அச்சிடப்படவில்லை. பின்வருவது அவரது திருவாய்மொழி வியாக்கியான அவதாரிகையின் கடைசிப்பகுதி:

“முதல் திருவாய்மொழியிற் சொல்லிற்றாயிற்று - நானா ரத்ன பூர்ணமாய் அபரிச்சேத்யமான கடலை முந்துறத்திரளக் கண் டாற் போலே ஸ்வரூப ரூபகுண விபூதிகளால் பரிபூரணனாய், எல்லாப் படியாலும் எல்லாரிலும் மேற்பட்டு சர்வேச்வரனாய் ச்ரியப்பதியாக அபௌருஷேயமாய்க் கொண்டு சுத்ருடப் பிரமாணமான சுருதிகளாலே பிரதி பாதிக்கப்பட்ட எம்பெரு மானை, பாஹ்ய குத்ருஷ்டிகளால் அவிசால்யமாம்படி அவன் பிரசாதத்தாலே ஸாக்ஷாத்கரித்து அனுபவித்து அனுபவஜநிதப் பிரீதி உள்ளடங்காமை, அனுபவித்தபடியே ஸவிபூதிகனான எம்பெருமானைப் பேசி, ஏவம் விதனானவன் திருவடிகளிலே அடிமை செய்து உஜ்ஜீவியென்று தந்திருவுள்ளத்தைக் குறித்து அருளிச் செய்கிறார். கடலைத் திரளக் கண்டானொருவன் அதில் திரைகளையும் மற்றும் அங்குண்டான ரத்னாதிகளையும் தனித்தனியே காணுமாப் போலே, முதல் திருவாய்மொழியில் திரள அநுபவிக்கப்பட்ட எம்பெருமானுடைய ஒரோ வகை

களிலே ஒரோ திருவாய்மொழியாய்ச் சொல்லுகிறது. இரண்டாந் திருவாய்மொழி அடங்கி மேலெல்லாம் இப்படிச் செய்தார் இவரேயல்ல: பாரத ராமாயணங்களைப் பண்ணின வியாசாதிகளும் ஸங்க்ஷேபவிஸ்தாரங்களாலே தங்கள் ப்ரபந்தங்களைப் ப்ரபந்திகரித்தார்கள்."

## நம்பிள்ளை

சோழநாட்டில், திருவரங்கத்துக்கு அருகே, காவிரித் தென்கரையில் நம்பூர் என்ற ஊரீல், நம்பூர் குடியில், வடமப் பிராமணர் வகுப்பில் வரதராசன் என்ற பெயரோடு இவர் பிறந்து வளர்ந்தார். அச்சமயம், திருவரங்கத்தில் பிரபல வைணவ ஆசாரியராயிருந்தார் நஞ்சீயர். அவர் தம் குருவான பட்டரின் நல்லருள் சீர்கொண்டு திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படி என்ற ஒரு வியாக்கியானம் செய்திருந்தார். அதை "முழுதும் பட்டோலை கொண்டு ஒரு சம்புடத்திலே அழகாக எழுதித்தர வல்லாருண்டோ?" என்று தம் மாணாக்கரை வினவினார். அவர்கள் சென்று, "இங்கு வரதராசர் என்பவர் பலகாலும் வருவார். அவர் கையெழுத்து நன்றாயிருக்கும்" என்று சொல்லி, அவர் அனுமதி பெற்று இவ்வரதராசரை அழைத்து வந்தார்கள்.

நஞ்சீயர் இவரை மாதிரி ஏடு எழுதச்செய்து பார்த்து, நன்றாயிருக்கிறதென்று மகிழ்ந்தார். "உம்முடைய எழுத்து முத்துப் போலேயிருக்கிறது; ஆயினும், இது சமய கிரந்தமான படியால், திருவாய்மொழி வியாக்யானத்தை இச்சமயத்துக்குரிய வரல்லாத உம்மைக் கொண்டு எவ்வாறு எழுதுவிப்பது?" என்று தம் கவலையைத் தெரிவித்தார். கேட்ட வரதராசர், "தேவரீர் சம்மதம் போல் அடியேனைத் திருத்திப் பணி கொள்ளுக" என்றார். ஜீயரும் மகிழ்ந்து இவரை அங்கீகரித்து, தம்முடைய மாணாக்கராய்க் கிரியாபூர்வமாக ஏற்று, ஒன்பதினாயிரம் ஒருமுறை உபதேசம் செய்து, "இப்படியே தப்பாமல் எழுதித் தருவாய்" என்று இவர் கையிலே ஏட்டைக் கொடுத்தருளினார். வரதராசர் அதைப் பெற்றுக்கொண்டு, "இதை என்னுடைய ஊரிலிருந்து எழுதிக்கொண்டு வருகிறேன்" என்று சொல்ல, நஞ்சீயரும் சம்மதித்தார்.

தெற்கு நோக்கி வரதராசர் வந்தபொழுது, காவிரியாற்றிலே வெள்ளம் போயிற்று. இவர் தென்கரையை அடைய வேண்டியவராகையால், காவிரியில் சிறிது தூரம் நீந்தி அக்கரையடைய

எண்ணினார். அப்படியே பட்டோலையையும் எழுத வேண்டிய வெற்றோலையையும் திருமுடியிலே கட்டிக்கொண்டு நீரில் இறங்கி நீந்தியபோது, ஓர் அலைவந்து மோதி, திரு முடியில் கட்டிய துணியோடு ஓலையை அடித்துக்கொண்டு போயிற்று. கரையேறிய வரதராசர், "ஏடு போய்விட்டதே, இனி என் செய்வேன்!" என மிக வருந்தினார். பின்னர் தேறி, பெரிய பெருமாளின் அருளாலும், தமக்கு இயல்பாக இருந்த நினைவாற்றலின் சிறப்பாலும், குருவின் கடாட்சத்தினாலும், குருவிடம் பெற்ற உபதேசம் அனைத்தையும் ஞாபகப்படுத்திக் கொண்டு, வேறு வெற்றேடுகள் தயாரித்து அவற்றில் நூல் முழுதும் நன்றாக எழுதிச் சிலநாளில் முடித்தார். தாம் தமிழுக்கு மிகவும் உத்தம விரகராகையாலே, பாட்டுக்கள் தோறும் சிறப்பான பதங்களுக்கு அர்த்த விசேடங்கள் எழுதிச் சிறப்புச் செய்திருந்தார். இதைக் கொண்டு போய் நஞ்சீயரிடம் சேர்ப்பித்தார்.

கோசத்தை அவிழ்த்துப் படித்துப் பார்த்த நஞ்சீயர் மகிழ்ந்தாலும், அதில் தாம் சொல்லாத பொருள்களும் எழுதியிருப்பதைக் கண்டு, நம் பிள்ளையை விவரம் கேட்டார். முதலில் நம்பிள்ளை ஒன்றும் சொல்லாமலிருந்து, பிறகு தைரியமடைந்து, நிகழ்ந்தவற்றைக் கூறினார். "தாங்கள் ஒருமுறை கூறியவற்றை நன்றாகக் கிரகித்து அப்படியே திருப்பி எழுதிவிட்டேன்" என்று இவர் சொன்னதைக் கேட்டு, அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்து, "நன்றாக எழுதினாய்" என்று திருவுள்ளம் உகந்தருளி, வரதராசரை வாரி எடுத்து, "இவர் நம்பிள்ளையோ!" என்று கூறி, அணைத்துக் கொண்டார். திருக்கலிகன்றி தாசர் என்று இவருக்குத் திருநாமமும் சூட்டினார். (கலிகன்றி - திருமங்கையாழ்வார்.) அது முதல் வரதராசர் பெயர் நம்பிள்ளை* என வழங்கலாயிற்று.

---

* பிள்ளை என்ற சொல் வைணவ மரபில் ஆசாரியனைக் குறிப்பிடும். நம்பெருமாள் முதல் யார் யாருக்கு நம் என்ற அடை கொடுக்கப்பட்டது என்று முறைப்படுத்திக் கூறுவது நயமாக உள்ளது (உபதேச ரத்தின மாலை 50):

நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
என்ப தவரவர்தம் ஏற்றத்தால் – அன்புடையோர்
சாற்றுதிரு நாமங்கள் தானென்று நன்னெஞ்சே
ஏத்ததனைச் சொல்லி நீ இன்று.

இதனோடு அடுத்த 41 - 45 வரையுள்ள உபதேசரத்தின மாலைச் செய்யுட்கள் முறையாக, 6, 9, 24, 36, 12 ஆயிரப்படிகள் செய்த ஆசிரியர் பெயர்களைக் காலமுறைப்படி கூறுவது காணத்தக்கது.

நம்பிள்ளையிடத்தில் பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, பின்பழகிய பெருமாள் ஜீயர், ஈயுண்ணி மாதவப் பெருமாள் முதலியோர் சீடராயிருந்தார்கள். இவர் களில் இப்பெருமாள் ஜீயர், பரமபதமும் வேண்டுவதில்லை, நம்பிள்ளையின் திருமுக தரிசனமே போதும் என்ற வைராக்கிய முடையவர். நம்பிள்ளை சிறப்பாகக் காலட்சேபம் செய்ய வல்லவர். ஒருசமயம் இவர் பகவத் விஷயம் அருளிச் செய்தபின் கேட்டிருந்த வைஷ்ணவக் கோஷ்டி கலைந்து போகின்ற பெரும் திரளைக் கண்டு, ஆங்கு வந்திருந்த அரசன், "இதுவென்ன, பெருமாள் திருவோலக்கம் கலைந்ததா? அல்லது நம்பிள்ளை கோஷ்டிதான் கலைந்து சென்றதா?" என்று கூறி அதிசயித்தான் என்ற ஒரு வரலாறு உண்டு.

இராமானுசருடைய சகோதரி புதல்வர் முதலியாண்டான். முதலியாண்டான் திருப்பேரராய்க் கந்தாடையாண்டான் குமாரரான கந்தாடைத் தோழப்பர் என்பவர் எக்காலமும் நம்பிள்ளையிடத்துப் பொறாமையை வளர்த்துக் கொண்டிருந் தார். ஒரு சமயம் அவர் பெருமாள் சந்நிதியில் வழிபாடு செய்து கொண்டிருந்தபோது, நம்பிள்ளை தம் சீடர்களோடு அங்கே வழிபாட்டுக்கு எழுந்தருளினார். இவருடைய பெருமையைக் கண்டு பொறுக்கமாட்டாத தோழப்பர், இவரைப் பொறாமை யினால் பலபடியாக நிந்தித்துப் பேசினார். நம்பிள்ளை அதைக் கேட்டு, வருந்தி மனம் ஒடுங்கி அச்சத்தோடு பெருமாளைச் சேவித்து, வாய் திறவாமல் போய்விட்டார். ஆனால், இல்லத்தி லிருந்த தோழப்பரின் தேவி, ஞானம் மிகுந்தவள்; பாகவத பக்தி யும் ஆசாரிய பக்தியும் நிரம்பியவள். கோயிலில் நடந்த செய் தியை அறிந்து மிகவும் மனவருத்தம் அடைந்தாள். அந்நேரம் தோழப்பர் அங்கே வரவும், தேவி வழக்கம்போல அவரை எதிர் கொண்டு அழைக்காமலும், செய்யவேண்டிய உபசாரம் ஒன்றும் செய்யாமலும் இருந்தாள். கண்ட தோழப்பர் மனைவியை நோக்கி, "ஏன் இவ்வாறு இன்று உதாசீனமாய் இருக்கின்றாய்?" என்று கேட்டார். அதற்கு அவள், "தாம் இன்று பெருமாள் சந்நிதியில் பரம பாகவதரான நம்பிள்ளையைப் பலவாறாக நிந்தித்ததோடு, இப்படிச் செய்தோம் என்ற வருத்தமும் அடைய வில்லை. தமக்கும் எனக்கும் இனி என்ன சம்பந்தம்? இந்தச் சரீ ரம் தமக்குச் சொந்தம் என்பது உண்மை. ஆனால் என்னுடைய ஆன்மா, ஆழ்வாருடைய திரு அவதாரம் என்று எண்ணத்தக்க

ஆசாரியராகிய நம்பிள்ளையின் திருவடியில் சேருதற்குரியது" என்று சொன்னாள். கேட்ட தோழப்பர் திகைத்துப் போனார், இச்சொற்களால், அவரும் பொறாமை நீங்கி அறிவு விளங்கப் பெற்று, "இனி இதற்கு என்ன பரிகாரம் செய்யலாம்?" என்று மனைவியுடன் ஆலோசித்தார். "பகவத் அபசாரத்துக்குப் பிராயச் சித்தம் உண்டு; பாகவத அபசாரத்துக்குப் பிராயச்சித்தம் எதுவும் இல்லை: பரம தயாளுவான நம்பிள்ளை திருவடியிலே வணங்கி மன்னிப்புக் கேட்க வேண்டும்" என்று தேவி சொன்னாள். "நான் தனியே அவரைப் பார்க்க வெட்கமாயிருக்கிறது. நீயும் உடன் வரவேண்டும்" என்று மனைவியை அவர் அழைக்க, அதன்மேல் இருவரும் அங்கிருந்து வெளிப்பட்டு, நம்பிள்ளை திருமாளிகை நோக்கிச் செல்ல எண்ணிக் கையில் தீபத்தோடு புறப்பட்டார்கள்.

தோழப்பர் நிலை இவ்வாறிருக்க, கோயிலிலிருந்து திரும்பிய நம்பிள்ளை, "முதலியாண்டான் திருப்பேரரான தோழப்பர் மனம் கலங்கும்படி நாம் ஏதேனும் செய்துவிட்டோமோ" என்று எண்ணியவராய், எல்லோரும் உறங்கின பிறகு தனியே எழுந்து, முட்டாக்கு இட்டுக்கொண்டு தாம் ஒருவராகத் தோழப்பர் திருமாளிகையை அடைந்து, கதவு தாளிட்டிருப்பது கண்டு, திண்ணையிலே கண்வளர்ந்தருளினார். அப்போது வெளிவந்த தோழப்பரும் தேவியரும், திண்ணையில் ஒருவர் படுத்திருப்பதை விளக்கொளியில் கண்டு, "யார்?" என்று கேட்க, "அடியேன் கலிகன்றி தாசன்" என்று இவர் விடை கூறினார். "ஏன் இங்கு வந்து கிடக்கிறீர்?" என்று அவர்கள் மேலும் கேட்க, இவர் "பெரியபெருமாள் சந்நிதியிலே முதலியாண்டான் திருப் பேரனாரான தேவரீர் திருஉள்ளம் கலங்கும்படி நடந்து கொண்ட பாவியான அடியேனுக்குத் தேவரீர் வாசல் அல்லது புகலிடம் ஏது?" என்றார். கேட்ட தோழப்பர் இவருடைய பணிவார்ந்த வார்த்தைகளைக் கேட்டு, அப்படியே அவரை அணைத்துக்கொண்டு, "பிள்ளையே, இத்தனை நாளும் உம்மைச் சிறிது பேருக்கு ஆசாரியர் என்று இருந்தேன். நீர் உலகத்துக் கெல்லாம் ஆசாரியராகத் தக்கவர் என்று நான் இப்பொழுது அறிகிறேன்" என்று உபசாரமொழிகூறி, அவரிடத்தே அர்த்த விசேஷங்கள் எல்லாம் கேட்டு மகிழ்ச்சி கொண்டார். அது முதல் நம்பிள்ளைக்கு லோகாசாரியர் என்ற பெயரும் வழங்கலாயிற்று. உபதேச ரத்தினமாலை இந்நிகழ்ச்சியைப் பின்வருமாறு கூறும்:

துன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர் தம்முகப்பால்
என்ன உலகாரியரோ என்றுரைக்கப் – பின்னை
உலகார்ய னென்னும் பேர் நம்பிள்ளைக் கோங்கி
விலகாமல் நின்றதென்றும் மேல்.

நம்பிள்ளை வாழ்க்கையில் இதுபோன்ற சுவையுடைய நிகழ்ச்சிகள் அனேகம். ஒரு சமயம் அவரும் சீடரும் திரு வெள்ளறை தரிசித்து மீண்டும் கோயிலுக்கு வந்தபொழுது, காவேரிப் பிரவாகம் அதிகமாகி, ஓடம் கிடைக்கவில்லை. ஒரு தாழியில் ஏறி வந்தார்கள். மழையும் இருட்டும் சூழ்ந்து ஒன்றும் புலப்படாத சமயம். தாழிக்காரன் "தாழியிலிருந்து இரண் டொருவர் குறைந்து போனாலன்றி தாழி அமிழ்ந்து விடும்" என்று எச்சரித்தான். தாழியை விட்டு வெளிப்பட்டால் இறக்க வேண்டியதுதான். ஆகவே ஒருவரும் தாழியை விடத் துணிய வில்லை. அப்போது சாத்துவிக குணமுடைய ஓர் அம்மையார், "அப்பா, உனக்கு நூறு வயசு. உலகுக்கெல்லாம் ஒருவரான நம் பிள்ளையைக் கரையில் விடு: நான் ஆற்றோடு போகிறேன்" என்று சொல்லிக்கொண்டே நீரில் குதித்துவிட்டாள். தெய்வா தீனமாய் அங்கு ஒரு மணல் திட்டுத் தட்டுப்பட்டு அதில் அவள் நின்றுகொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் தாழி கரைசேர்ந்த பின், அந்த அம்மையாரை நினைத்து நம்பிள்ளை புலம்பவே, இரவு நேரமாகையால் அவ்வொலி இவள் காதில் விழுந்தது. இங்கிருந்து அவள் தான் பத்திரமாய் இருப்பது பற்றிக் குரல் கொடுக்க, நம்பிள்ளை தாழிக்காரனை மீண்டும் அனுப்பி இவளை அழைத்துவரச் செய்து, இவளுடைய விசுவாசத்தை மிகவும் பாராட்டினார். ஆசாரியனைத் தெய்வமென்று பேணு பனைப் பகவானே காப்பாற்றுகிறான் என்பதற்கு இவ்வரலாறு சிறந்த உதாரணமாகும்.

நம்பிள்ளை திருமாளிகைக்கு அருகில் பக்குவியான ஓர் அம்மை குடியிருந்தாள். பிள்ளை திருமடத்துக்கு இடம் போதாமையால், அவள் குடியிருந்த மனையைத் தரும்படி ஒரு வைணவர் கேட்க, அவள் கொடுக்க மறுத்தாள். நம்பிள்ளையே அவளை அழைத்துச் சொன்னபோது, அவள் "நானோ பெண், எனக்குப் பரமபதம் கொடுப்பதாயிருந்தால், அதுவும் பரம பதத்தில் தங்கிக் குடியிருக்க எழுதிச் சாசனம் செய்துகொடுத் தால், தருவேன்" என்று சொன்னாள். அவரும் அப்படியே செய்ய,

அவள் தன் மனையைக் கொடுத்துவிட்டு, மூன்றாம் நாள் உயிர் துறந்தாள். பிள்ளையின் சாசனம் வைகுந்தத்திலும் செல்லும் என்று அவளுக்கு அவ்வளவு நம்பிக்கை.

ஒரு சமயம், பாண்டி நாட்டு வைணவர் சிலர் இவரிடம் வந்து ஓர் உபதேசம் கேட்டார்கள். இவர் "கடற்கரை வெளியை நினைத்திருங்கள்" என்று உபதேசம் செய்தார். அவர்கள் "கடல் மணலையும், நாவல் காட்டையும் நினைக்கவா?" என்று கேட்டனர். இவரோ, "இலங்கைக்கு முன்னே நின்று கடற்கரை யிலே கவலையற்று வானர வீரர்கள் கண்ணுறங்க, அவர்களைப் பார்த்தவாறே இராமபிரான் வில்லும் கையுமாக நின்று கொண்டு காவல் புரிந்தான். அந்நினைவோடு அவனைச் சிந்தித் தால் அவனே உங்களைக் காப்பான்" என்றார். கேட்டோர் தங்கள் அறியாமையை எண்ணி வருந்தினர்.

நம்பிள்ளை சுவைபடப் பேசவும் வல்லவர் போலும். அவர் உடம்பு இளைத்திருந்தபோது ஒரு பக்தர் வந்து "திருமேனி இளைத்ததோ?" என்று கேட்க இவர், "ஆம், ஒன்று தேய்ந்தால் ஒன்று வளர்தல் அன்றோ? உடல் தேய்தல் ஞானம் வளர்தல்" என்று கூறினார். மற்றொரு சமயம் ஆரோக்கியக் குறைவோ என்று ஒருவர் கேட்டபோது, "குறைவில்லை, பெருமாளைச் சேவித்திருப்பதற்கு வேண்டிய ஆரோக்கியம் உண்டு" என்று மறுமொழி கூறினார்.

கூரத்தாழ்வான் திருப்பேரனாரான நடுவில் திருவீதிப் பிள்ளை பட்டர் என்பவர் நம்பிள்ளையிடம் பொறாமை கொண்டிருந்தார். இவருடைய ஞானபக்தி வைராக்கியம், பாகவத சேவை, சீடர்குழாம் இவற்றைக் கண்டு அவருக்குப் பொறுக்க முடியவில்லை. ஒருநாள் அரசன் இப்பட்டரை அழைத்திருந்தான். அவர் போகும்போது, வழியில் நம்பிள்ளை சீடரான பின்பழகிய பெருமாள் ஜீயரைக் கண்டு, உடன் அழைத்துக்கொண்டு சென்றார். ஜீயரும் "இவர் நம் ஆசாரியர் வம்சமாயிற்றே" என்று எண்ணி உடன்சென்றார். அரசன் பட்டரை எதிர்கொண்டழைத்துத் தக்க மரியாதை செய்தான். அவன் விரிந்த கல்வியுடையவனாகையால், பட்டருடைய கல்விப் பெருக்கைச் சோதிக்க எண்ணி, தனக்குள்ள ஓர் ஐயத்தைத் தீர்க்கவேண்டும் என்று அவரிடம் விண்ணப்பிக்கவே, பட்டரும் சரி என்றார் அதன்மேல் அரசன் "பட்டரே, 'ஆத்மா நம் மாநுஷம்

மந்யேராமம் தசரதாத்மஜம்" என்று பெருமாள் தம்முடைய பரத்துவம் தோன்றாமல் மனிதராகவே தம்மைப் பேசுகின்றார். அப்படியிருக்க, சடாயு உயிர்போகின்ற நிலையில், 'கச்சலோகாந் உத்தமாந்' என்று இராமபிரான் சடாயுவுக்கு மோட்சம் கொடுத்தபடி எங்ஙனே?" என்று வினவினான். பட்டருக்கு மறுமொழி உடனே தோன்றவில்லை. அச்சமயம் அரசன் வேறு காரியம் கவனிக்க நேரவும், பட்டர் ஜீயர் பக்கம் திரும்பி, மெதுவாக, "இதைப் பிள்ளை எப்படி கூறுவார்" என்று கேட்கவும், ஜீயர் உடனே, "சத்யேன லோகாந் ஜயதி" என்ற சுலோகத்தை நினைவூட்டினார். கேட்ட பட்டருக்கு சமாதானம் நினைவுக்கு வந்துவிட்டது. அரசன் தன்பக்கம் திரும்பி மீண்டும் கேட்டவுடனே, "வீரன் தன் வில்லினாலே மேலுலகம் பெற முடியும்" என்று சாத்திரங்கள் சொல்லுவதை எடுத்துக்காட்டினார். அரசன் மகிழ்ந்து, பட்டருக்கு மிக்கசிறப்புச் செய்தான். அப்போது பட்டர், ஜீயர் எடுத்துக்கொடுத்த சொல்லினால் அரசவையில் தம் பெருமை காப்பாற்றப் பட்டமையுணர்ந்து, அவருக்கும் குருவாகிய நம்பிள்ளையின் பெருமையையும் நன்குணர்ந்து, அரசனிடம் பெற்ற சிறப்புக்களை உடன்கொண்டு பிள்ளையிடம்போய்ச் செலுத்தி வணங்கினார். "தேவரீருடைய திவ்ய ஸூக்தியில் பதினாயிரங் கோடியிலே சிந்தின ஒரு ஸ்ரீ ஸூக்தி பெற்ற தனமிதுவாகையாலே, அடியேனையும் இத்தையும் அங்கீகரித்தருளவேணும்" என்று விண்ணப்பம் செய்தார். நம்பிள்ளையும் அதற்கு உடன்படாமல் பலவுமருளிச் செய்ய, நடுவில் திருவீதிப்பிள்ளைப் பட்டரும் கண்ணுங் கண்ணீருமாய் நம்பிள்ளை திருவடிகளைச் சேவித்து நிற்க, நம்பிள்ளையும் பட்டரை வாரியணைத்துக் கொண்டு, விசேஷ கடாட்சஞ் செய்தருளி, அவருக்கு எல்லா அர்த்த விசேஷங்களையும் சாதித் தருளினார். நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டரும், நம்பிள்ளையினுடைய விசேஷ கடாட்சத்தைப் பெற்று, மிகவும் மகிழ்ந்த மனத்துடனே நம்பிள்ளைக்கு ஸ்ரீ ஸூக்திஸாகரம் என்று சிறப்பான திருநாமஞ் சாத்தினார்.

அக்காலத்திலே இவர் பட்டருக்கு ஓர் உரு திருவாய்மொழிக்கு அர்த்தம் பிரசாதித்தார். பட்டர் அதை மிகவும் தெளிவாய்க் கேட்டு, கேட்டது அத்தனையும் ஒன்றுவிடாமல் எழுதி முடித்துப் பிள்ளை சந்நிதியிலே கொண்டுபோய் வைத்தார். பிள்ளையும் அதைவாங்கி அவிழ்த்துப் பார்த்த அளவில், அது

மகாபாரத எண்ணிக்கைப்படி லட்சத்து இருபத்தையாயிரம் கிரந்தமாய், திருவாய்மொழி வியாக்கியானமாயிருந்தது. "தேவரீர் திருவாய்மொழிக்குப் பிரசாதித்த வியாக்கியானம்" என்று பட்டர் கூறினார். கேட்ட பிள்ளை மிகவும் வருந்தி, "நம்முடைய அனுமதியின்றி நீர் நினைத்தபடி திருவாய்மொழியை இவ்வாறு ஏன் எழுதினீர்?" என்று கேட்டார். அப்போது பட்டர், "இது தேவரீருடைய அருளிச்செயல். அஃதொழிய கால் கொம்பு சுழி ஏற எழுதினது உண்டாகில் பார்த்தருள வேண்டும்" என்றார். அப்போது பிள்ளை பட்டரைப் பார்த்து, "வாரீர் பட்டரே, திருவாய்மொழி நிமித்தமாக நாம் வாக்காலே சொன்னதை எழுதினீரே அன்றி, சித்தத்திலே உள்ளதை எழுதினீரோ?" என்று கோபித்துப் பின்னும் சொல்வார்: "உடையவர் காலத்திலே திருக்குருகைப்பிரான் பிள்ளான் விஷ்ணுபுராண அளவிலே திருவாய்மொழிக்கு, ஆறாயிரம் கிரந்தமாகச் செய்த உரைக்கு உடையவர் அனுமதி பெறச் செய்த முயற்சிக்கு மட்டு முடி வில்லை: அதுபோல, நம்முடைய காலத்தில் நம்மையும் கேளாமல் இப்படி லட்சத்து இருபத்தையாயிரமாகப் பிரித் தெழுதினால், இது சிஷ்ய ஆசாரியக் கிரமத்துக்கு விரோத மாகப் போகும்" என்று சொல்லி, அந்த நூலை அவரிடமிருந்து வாங்கி நீரைச் சொரிந்து கறையானுக்குக் கொடுக்க, ஏடுகள் அன்றே மண்ணாய்ப் போய்விட்டன.

பின்னர் நம்பிள்ளை, தமக்கு உகந்த மாணாக்கராய், தம் மிடத்தே எல்லா அர்த்தங்களையும் அலகலகாகக் கற்றிருந்த பெரியவாச்சான் பிள்ளையை ஒரு திருவாய்மொழி வியாக்கி யானம் எழுதும்படி கட்டளையிட்டார். அங்ஙனமே அவரும் இருபத்து நாலாயிரம் கிரந்தமாக ஒரு பேருரை எழுதினார். சில நாள் கழித்து மற்றொருமுறை நம்பிள்ளை திருவாய்மொழிக்கு அர்த்தம் சொல்லி வந்தபோது, வடக்குத் திருவீதிப்பிள்ளையும் அதைப் பகலெல்லாம் கேட்டு இரவெல்லாம் உட்கார்ந்து எழுதி முடித்தார். "நம்முடைய அனுமதியில்லாமல் எழுதினீர்" என்று சொல்லி நம்பிள்ளை அவ்ஏட்டை வாங்கி உள்ளே வைத்து விட்டார். ஈயுண்ணி மாதவப் பெருமாள் என்ற மாணாக்கர் நம்பிள்ளை இதையும் அழித்து விடுவாரோ என்று பயந்து, பெரிய பெருமாளை வேண்டி ஏட்டைக் கொடுக்கப்பெற்றார். இவ்விதமாக முப்பத்து ஆறாயிரப்படி நிலைபெறலாயிற்று.

ஒரு சமயம் நம்பெருமாள் நம்பிள்ளையைக் கடாட்சித்து, “நீர் நம்முடைய திருமுடிப் பக்கத்திலேயே இருந்து திருவாய் மொழி நிர்வகியும்” என்று நியமித்தருளினார். நம்பிள்ளையும், நாயினேன் தேவரீருடைய நியமனத்தைத் தப்ப ஒண்ணாது; ஆகிலும், அவ்விடம் முன்பு துரியோதனன் பற்றிய இடம் ஆகை யாலே, அடியார்க்குப் பற்றும் இடம் ஆகாது” என்று விண் ணப்பஞ்செய்ய, பெருமாளும் உகந்து அதை ஆமோதித்தார்.

இவ்வாறு நெடுங்காலம் திருவாய்மொழியை உபதேசித்துக் கொண்டிருந்து நம்பிள்ளை தமது 105ஆவது பிராயத்தில் திரு நாட்டுக்கு எழுந்தருளினார். பன்னீராயிரப்படி குருபரம்பரை இவருடைய உபதேசங்கள் பலவற்றைக் கூறும். பின்வருவன இவருடைய சிறப்பைக் கூறும் பாடல்கள்.

நெஞ்சத் திருந்து நிரந்தர மாக நிரயத்துய்க்கும்
வஞ்சக் குறும்பின் வகையறுத் தேன்; மாய வாதியர்தாம்
அஞ்சப் பிறந்தவன், சீமா தவனடிக் கன்புசெய்யும்
தஞ்சத் தொருவன், சரணாம் புயம்என் தலைக்கணிந்தே.

இந்திரன் வார்த்தையும் நான்முகன் வார்த்தையும் ஈசனுடன்
கந்தன்சொல் வார்த்தையுங் கற்பவரார் இந்தக்காசினிக்கே
நந்தினம் முத்தெறி நம்பூர் வரதர்தம் மாளிகையிற்
சிந்தின வார்த்தைகொண் டேசில நாடு திறைகொள்வரே.

இவருடைய திரு நட்சத்திரம் கார்த்திகையில் கார்த்திகை, இவருடைய வாழித் திருநாமம் பின்வருவது:

தேமருவும் செங்கமலத் திருத்தாள்கள் வாழியே
திருவரையில் பட்டாடை சேர்மருங்கும் வாழியே
தாமமணி வடமார்பும் புயநூலும் வாழியே
தாமரைக்கை யிணையழகுந் தடம்புயமும் வாழியே
பாமருவுந் தமிழ்வேதம் பயில்பவளம் வாழியே
பாடியத்தின் பொருள்தன்னைப் பகர்நாவும் வாழியே
நாமநுதல் மதிமுகமும் திருமுடியும் வாழியே
நம்பிள்ளை வடிவழகும் நாடோறும் வாழியே.

### நூல்

நஞ்சீயருடைய ஒன்பதினாயிரப்படியை இவர் ஆற்றில் விட்டு, நினைவாற்றலினால் மீண்டும் எழுதினார். எழுதியதில், சொந்தக் கருத்தும் சில கலந்திருந்தன என்று குறிப்பிட்டோம்.

பெரியவாச்சான்பிள்ளை எழுதிய இருபத்து நாலாயிரப்படியும், இவருடைய காலட்சேப மொழிகளே; இதுபற்றியே, ஆச்சான் பிள்ளையின் பிறநூல்களில் அவருடைய வாக்கு விசேஷம் நன்கு காணலாம் என்றும், இருபத்து நாலாயிரப்படியில் அதிகம் காண்பதற்கில்லை என்றும் தெரிந்தோர் சொல்லுவர். ஈடு முப்பத்தாறாயிரப்படி, வடக்குத் திருவீதிப்பிள்ளை எழுதியபோதிலும், இவருடைய சொற்களே; பெரும்பான்மை இவ்விரண்டு உரைகளும் ஒன்றாயிருக்கும். நம்பிள்ளையின் அரிய உபதேச மொழிகள் பலவற்றை வார்த்தாமாலையில் காணலாம்.

## வடக்குத் திருவீதிப்பிள்ளை

இவர் நம்பிள்ளையின் அந்தரங்க சீடர். திருவரங்கம் வடக்குத் திருவீதியில் 1217இல் அவதரித்தார். இவர் அவ்வீதியில் உள்ள தம் திருமாளிகையில் வாழ்ந்து வந்தமையால் அப்பெயரோடு வழங்கப்பட்டார். இயற்பெயர் தெரியவில்லை. தாய் அம்மி. இவருக்கு மணமாகியிருந்தும் இவர் தம் மனைவியாகிய ஸ்ரீரங்கநாச்சியாருடன் மெய்யுறு புணர்ச்சியின்றியே வாழ்ந்து வந்தார். புத்திர சந்தானமின்றி வாழ்க்கை கழிந்து போனதைக் கண்ட தாய் மிகவும் கவன்று, ஒருநாள் இதை ஆசாரியரான நம்பிள்ளையிடம் சென்று அவர் தனியே இருக்கும் சமயம் விண்ணப்பித்துக் கொண்டாள்.

நம்பிள்ளை : உம்முடைய கிருஹ யோக க்ஷேமங்களென்ன?

அம்மி : ஸ்வாமி, தேவரீர் அடியேன் குமாரனுக்கு ஒரு பெண்ணை விவாகம் பண்ணியருளினீரே! அந்தப் பெண் பெரியவளானதும் ஸஹ கல்யாணம் போலே பண்ணிசயனத்திட, உடனே அப்பிள்ளை முறையிட, அதென்னென்று எல்லோரும் உட்புகுந்து பார்த்தவாறே, பிள்ளை உடம்பெல்லாம் புழுக்க நீர்சொரிய விக்கியழுது நின்றதைக் கண்டு, இது என்ன பிள்ளாய் என்று கேட்டேன். அம்மா, இது ஒரு ஆடுகிற பாம்பாயிருந்தது, பயப்பட்டேன். இன்னும் அப்படியே இருக்கிறது என்ன, இதுவும் ஒரு புதுமையோ என்று, பெண்ணை அப்பாலேபோக விட்டேன். பின்னையும் ஒருநாள் அந்தப்படியே ஆச்சுது என்று சொல்லி வருந்தினாள்.

நம்பிள்ளை : (சிரித்தபடியே) அதற்கு உமக்கென்ன?

அம்மி : ஸ்வாமி, தேவர் இப்படி அருளிச் செய்யலாமோ? பெண் வாழ வேண்டாவோ? என்று கூறி நம்பிள்ளை திருவடிகளிலே விழுந்தாள்.

நம்பிள்ளை : அம்மி, எழுந்திரு. நீ வருந்த வேண்டாம். நாட்டுப் பெண்ணை ருதுஸ்நானதையாய் வருகிறபோது, இது வழியாய் அழைத்து வா.

அம்மியும் அவ்வாறே அழைத்து வந்துவிட்டாள். திருவோலக்கத்திலே நம்பிள்ளையும் அந்தப் பெண்ணைக் கிட்ட அழைத்தருளி, "நம்போலே இருப்பானொரு பிள்ளையைப் பிறக்கக் கடவாய்" என்று ஆசீர்வதித்தருளினார். அன்று மாலை வடக்குத் திருவீதிப் பிள்ளையையும் அழைத்தருளி, "உம்முடைய பயம் தீர்ந்தது. உமது விசேஷ வைராக்கியத்துக்கும் குறைவு வராது. ஆனாலும், உலக மரியாதைக்கு நாம் சொன்னதற்காக, இன்று இரவு உமது தேவியுடன் கூடியிரும்" என்றருளினார்.

அவரும் அங்ஙனமே செய்ய, அவரது தேவி நாச்சியம்மாளும் கர்ப்பம் தரித்து லோக விலக்ஷணமாய்ப் பன்னிரண்டாம் மாசத்திலே ஐப்பசியில் திருவோண நட்சத்திரத்திலே ஒரு பிள்ளையைப் பெற்றாள். நம்பிள்ளை திருநாமமான உலகாசாரியன் என்ற பெயரையே அப்பிள்ளைக்கு இட்டார்கள். அவரே பிற்காலத்தில் பிள்ளை லோகாசாரியர்* என்ற பிரசித்தமாய் வழங்கிய ஆசாரியர். ஓராண்டு நிறைந்ததும், அப்பிள்ளையோடு எல்லோரும் சென்று நம்பிள்ளையைச் சேவிக்க, அவரும் வாழ்த்தியருளினார். அப்போது, "உம்மைப்போலே ஒரு பிள்ளை கொடுத்தீரே, நம்மைப்போலே ஒரு பிள்ளைகொடும்" என்று அழகிய மணவாளன் நியமித்தார். நம்பிள்ளையும் "அப்படியே ஆகட்டும்" என்று ஆசீர்வதித்தார். அவ்வாறே பிறகு உரிய காலத்தில் வடக்குத் திருவீதிப்பிள்ளையின் இரண்டாம் புதல்வராக அழகிய மணவாளன்* என்ற பிள்ளை பிறந்தார்.

வடக்குத் திருவீதிப்பிள்ளை செய்த நூல் ஈடு முப்பத்து ஆறாயிரப்படி. அதற்கு ஒரு வரலாறும் நம்பிள்ளை சரித்திரத்தில்

---

* இவ்விருவர் வரலாற்றையும் எமது தமிழ் இலக்கிய வரலாறு 14ஆம் நூற்றாண்டு நூலில் காண்க

சொல்லப்பட்டது. நம்பிள்ளை திருவாய்மொழிக்கு ஓர் உரு வியாக்கியானம் சொன்னார். அதை நன்றாகக் கேட்டு மனத்தில் அமைத்து, வடக்குத் திருவீதிப்பிள்ளை இரவெல்லாம் அமர்ந்து எழுதி முடித்து மறுநாள் பிள்ளை சந்நிதியிலே கொண்டு போய் வைத்தார். "இது ஏன்?" என்று பிள்ளை கேட்க, அவரும் "தேவரீர் இந்த உரு திருவாய்மொழி நிர்வகித்த கட்டளை" என்று விண்ணப்பம் செய்தார். நம்பிள்ளையும் அந்த ஸ்ரீகோசத்தை அவிழ்த்துப் பார்த்தருள, அவ்வுரையானது, அதிக விஸ்தாரமும் அதிகச் சுருக்கமும் இன்றி, ஆனைகோலம் செய்து புறப்பட் டாற் போல மிகவும் அழகாயிருந்தது கண்டு, பிள்ளை மிக்க மகிழ்ச்சியடைந்த போதிலும், "நம்முடைய அனுமதியின்றிக்கே எழுதினீர்" என்று வாங்கிக் கட்டி உள்ளே வைத்தருளினார்.

இதைப் பார்த்திருந்த ஈயுண்ணி மாதவப் பெருமாள் என்ற சீடர், இதையும் நம்பிள்ளை, நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் எழுதிய ஏட்டை அழித்ததுபோல் செய்து விடுவாரோ என்ற அச்சத்தால், பெரிய பெருமாளை நோக்கிக் குறையிருந்தார். அவரும் அர்ச்சகமுகனே நம்பிள்ளைக்கு உத்தரவிட்டு, அவ் வேட்டை ஈயுண்ணியிடம் கொடுக்கச் செய்தார். இவ்வரலாறு களை மணவாள மாமுனியும் தம் உபதேச ரத்தினமாலையில் பின்வருமாறு பாடுகிறார்:

தெள்ளியதா நம்பிள்ளை செப்பும் நெறிதன்னை
வள்ளல் வடக் குத்திருவீ திப்பிள்ளை – இந்த
நாடறிய மாறன் மறைப்பொருளை நன்குரைத்தது
ஈடுமுப்பத் தாறாயி ரம்.

சீரார் வடக்குத் திருவீதிப் பிள்ளைஎழுது
ஏரார் தமிழ்வேதத் தீடுதனைத் – தாருமென
வாங்கி முன் நம்பிள்ளை ஈயுண்ணி மாதவர்க்குத்
தாங் கொடுத்தார் பின்னதனைத் தான்.

இவர் 95 ஆண்டு வாழ்ந்தவர் (கி.பி. 1217 - 1312). செய்த நூல்கள் ஈடு முப்பத்தாறாயிரப்படி, கத்யத்ரய வியாக்கியானம், அஷ்டாக்ஷர தீபிகை முதலியன. சீடர் தம் புதல்வர் இருவர், ஈயுண்ணி மாதவர் முதலியோர். ஒரு பாடல் திருவாய்மொழி யைக் காத்த குணவாளர் இன்னார் என்று கூறுகிறது (உபதேச ரத்தினமாலை):

பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச் சான்பிள்ளை
தெள்ளார் வடக்குத் திருவீதிப் – பிள்ளை
மணவாள யோகிதிரு வாய்மொழியைக் காத்த
குணவாள ரென்று நெஞ்சே! கூறு. (39)

*இவருடைய திருநட்சத்திரம் ஆனிசுவாதி. இவருடைய வாழித் திருநாமம் பின்வருவது:*

ஆனிதனிற் சோதி நாள் அவதரித்தான் வாழியே
ஆழ்வார்கள் கலைப்பொருளை ஆய்ந்துரைப்போன் வாழியே
தானுகந்த நம்பிள்ளை தாள்தொழுவோன் வாழியே
சடகோபர் தமிழ்க்கீடு சாற்றினான் வாழியே
நானிலத்தில் பாடியத்தை நடத்தினான் வாழியே
நல்லவுல காரியனை நமக்களித்தான் வாழியே
ஈனமற எமையாளும் இறைவனார் வாழியே
எங்கள் வடவீதிபிள்ளை இணையடிகள் வாழியே.

*வடக்குத் திருவீதிப்பிள்ளை செய்த முப்பத்தாறாயிரப்படி வைணவர்களிடையே ஈடு என வழங்கும்; சுருதப் பிரகாசிகையின் அளவில் அதற்கு ஈடாக இருத்தலால் ஈடு எனப்படும். அன்றி, தன்னைச் சேவிப்பவர்களைப் பெருமாளிடத்தில் ஈடுபடுத்து தலால் ஈடு என்றும் பெயர்பெறும்.*

## *ஈயுண்ணி மாதவப் பெருமாள்*

*இவர் நம்பிள்ளையின் சீடராயிருந்தார். நம்பிள்ளை பிரசாதித்த திருவாய்மொழி வியாக்கியானத்தை வடக்குத் திரு வீதிப்பிள்ளை அழகாக முப்பத்தாறாயிரப்படியாக எழுதிக் காட்டியபோது நம்பிள்ளை அதை வாங்கி வைத்துவிட்டதைக் கண்ட இவர், இந்த வியாக்கியானத்தையும் நம்பிள்ளை முன் னமே நடுவில் திருவீதிப்பிள்ளை எழுதிக் காட்டியதை அழித்து விட்டதைப் போல அழித்து விடுவாரோ என்று அஞ்சி, திரு வரங்கநாதனைக் குறையிரந்து அவனுடைய கட்டளையால் இவ்வியாக்கியானம் தம்மிடம் தரப்பெற்று உலகுக்குக் கொடுத் தார் என்ற வரலாறு முன்னமே நம்பிள்ளை சரித்திரத்தில் சொல்லப்பட்டது.*

## பெரியவாச்சான் பிள்ளை

### வரலாறு

திவ்வியப் பிரபந்தம் நாலாயிரத்துக்கும் சிறப்பான வியாக்கியானம் எழுதி அதன் பெருமையாலும் சிறப்பாலும் 'வியாக்கியான சக்கரவர்த்தி' என்று புகழ்பெற்ற இவர், கி.பி. 1228இல் பிறந்தார் என்பது வரலாறு. பூர்வசிகை அந்தணர்குலம். சோழநாட்டில் திருவெள்ளியங்குடி என்ற மங்களாசாசனம் பெற்ற தலத்தை அடுத்து, சைவத்தில் சண்டேச நாயனார் அவதாரத் தலமாயுள்ள சேங்கநல்லூர் (சேய்ஞலூர் - சேங்கனூர்) என்ற ஊரில் பிறந்தார். தந்தை யாமுன தேசிகர், தாய் நாச்சியாரம்மை; இயற்பெயர் ஸ்ரீ கிருஷ்ண பாதர்; அபயப்ரத ராசர் என்றும் பெயர். ஆச்சான் என்பது வைணவ பரிபாஷையில் ஆசாரியன். பலர் ஆச்சான் என்ற பெயரோடிருந்தமையால், இவரை வேறு பிரித்துக்காட்ட பெரிய ஆச்சான் பிள்ளை என்ற பெயர் அமைந்தது (பெரியபுராணம் என்றமைபோல). வைணவ மரபில் ஆச்சான்பிள்ளை என்று மட்டும் சொன்னால் இவரே. (இவருக்கு முன் சிறியஆச்சான் பிள்ளை ஒருவர் இருந்தார்.) கிருஷ்ணசூரி என்றும் இவர் வழங்கப் பெற்றார்.

இளமையிலிருந்து இவருக்குக் கிருஷ்ண பக்தி அதிகமாயிருந்தது. ஊரார் அனைவரும் ஸ்மார்த்த வேதாந்திகளானபடியால், இவருடைய கிருஷ்ண பக்தியும் வைணவச்சார்பும் யாருக்கும் பிடிக்கவில்லை. எவ்வளவோ இன்னல் செய்தும் இவருடைய கிருஷ்ணபக்தி குறையவில்லை. திருமணம் ஆனால் பிள்ளை மாறுவான் என்று எண்ணின பெற்றோர், திருமணம் செய்து வைத்தும், இவர் மாறவில்லை உறவினர் தொந்தரவிலிருந்து தப்ப எண்ணி இவர் வடநாட்டுக்குத் தீர்த்த யாத்திரையாகச் சென்றார். யாத்திரை முடித்துத் தமிழ் நாட்டெல்லையிலுள்ள திருவேங்கடம் வந்து அதன் சிறப்பைக் கண்டபோது, அங்கேயே தங்கிப் பெருமாள் தரிசனத்திலேயே வாழ்நாளைச் செலவிட எண்ணிய இவருக்கு, சேங்கனூர் நினைவு உண்டானமையால், திருவேங்கடமுடையானிடம் விடைபெற்றுத் திரும்பினார்.

வழியில் ஒரு வைணவ பக்தர் இவரைச் சந்தித்துத் தாம் வைத்திருந்த சாளக்கிராமத்தை இவரிடம் தந்து, "இது எங்கள்

குடும்பச்சொத்து: இதை வைத்துப் பூசிக்க ஏற்ற ஆள் நான் தேடிய போது, நாளை நீர் இவ்வழி வருவீர் உம்மிடம் ஒப்படைக் கலாம் என்று பகவான் கட்டளையிட்டார். அதன்படி இதை நீர் பெற்றுப் பூசித்து வருவீராக" என்று சொல்லிக் கொடுத்தார். அப்படியே இவர் அதைப் பெற்றுப் பக்தியோடு பூசித்துக் கொண்டு தம்மூர் நோக்கி வந்தபோது, ஒருநாள் கொள்ளிடக் கரையில் வைத்து அப்பாற் சென்று மீளவும், சாளக்கிராமம் மறைந்துவிட்டது. இவர் எங்கு தேடியும் காணவில்லை. அதே நினைவாக ஊர் வந்து சதா அந்த நினைவோடு அரற்றி இருந்தார்; ஊரார் ஏளனம் அதிகமாயிற்று. ஒருநாள் கனவில் மீண்டும் அக்கொள்ளிடக்கரை வருமாறு கட்டளை பிறக்க, இவர் அவ்வாறே போய்ப்பார்க்க, அங்கு எம்பெருமானுடைய சிலை வடிவைத் தரிசனம் பெற்றார். இந்த மூர்த்தியைக் கொண்டு வந்து தம்மூரில் வைத்து வழிபட்டார்.

மீண்டும் தம்மூராரின் இடையூறு பொறுக்க மாட்டாமல், திருவரங்கம் செல்ல எண்ணிப் புறப்பட்டுச் சென்று கொள் ளிடக் கரையடைந்தார். இரவு அதிக நேரமாகி விட்டபடியால், ஓடம் கிடைக்காமல் அங்கு ஒரு திண்ணையில் தங்கி அரங்க நாதன் தியானத்தில் இருந்தார். அப்போது, இவர் மனம் கோயி லில் நடைபெறும் பூசாக்கிரியைகளில் மானசீகமாக லயித்துத் தாம் அங்கு போய்க் கலந்துகொள்ள இயலவில்லையே என்று வருந்தியபடியால், உணவு கொள்ளாது பட்டினியாகவே இருந்து விட்டார். அப்போது திருவரங்கநாதன் கருணையால், ஓரிளம் பெண் "இங்கு கிருஷ்ணசூரி யார்?" என்று தேடிவந்து, இவரைக் கண்டு, "எம்பெருமான் தந்த பிரசாதங்கள்" என்று அரங்கநாதன் பிரசாதங்களைத் தந்தாள். வந்தவள் திருமகளே என்பதை இவர் அப்போது உள்ளம் கசிந்துருகி உணர்ந்தார். "என் மீது அரங்கநாதன் இவ்வளவு கருணைகொள்ளக் காரணம் என்ன?" என்று இவர் எண்ணி, அருகிலிருந்த தம் மனைவியைக் கேட் கவும், அவ்வம்மையார், "அரங்கநாதனே, நீ பாலும் பழமும் அன்னங்களும் கொள்ள, உம் பக்தர் இங்கு இப்படி உம் தரிசனம் கிடைக்காமல் பட்டினி கிடக்கிறாரே என்று மனத்தால் நான் முறையிட்டேன்" என்றார். இவர் கேட்டு வியந்து, பகவான் திருவருளையே எண்ணியிருக்க, காலையில் வைணவர் சிலர் வந்து இவரை அழைத்துச்சென்று அரங்கநாதனைச் சேவிக்கச் செய்தனர்.

பின்னர் இவர் திருவரங்கத்தில் வாழ்வாராயினார். நஞ்சீய ரிடத்திலும் பின் நம்பிள்ளையிடத்திலும் சகல சாத்திரங் களையும் திருவாய்மொழி வியாக்கியானங்களையும் கிரமமாய் அனுசந்தித்தார். நம்பிள்ளையை தம்ஆசாரியராய்க் கொண்டார். இராமாயணத்தில் இவருக்கு அளவற்ற ஈடுபாடு. தம்முடைய வியாக்கியானங்களெங்கும் இராமாயணச் சுலோகங்களையே அதிகம் எடுத்துக்காட்டுவார். நம்பிள்ளைக்குக் கோஷ்டித் தலை வராயும் அந்தரங்க சிஷ்யராயும் இருந்து, நன்றாகக் கற்றுப் பிரவசனம் செய்துவந்த இவருடைய ஆற்றலை நன்குணர்ந்த பிள்ளை, திருவாய்மொழிக்கு வியாக்கியானம் எழுதும்படி கட்டளையிட்டார். அதன்மேல் இவர் இராமாயண சுலோ கங்கள் எத்தனையோ அத்தனை கிரந்தம் (24,000) கொண்ட வியாக்கியானமொன்று செய்தார். இருபத்து நாலாயிரப்படி என்று இது வழங்கும்.

நம்பிள்ளை பொதுவாக வியாக்கியான விஷயத்தில் மிக்க கண்டிப்பாயிருந்தவர். அவர் நடுவில் திருவீதிப்பிள்ளை பட்ட ருக்கு ஒருமுறை திருவாய்மொழிக்கு அர்த்தம் பிரசாதித் தருள, அவர் பிள்ளை அனுமதியின்றி லக்ஷத்திருபத்து ஐயாயிரம் கிரந்தம் எழுதியிருந்த ஏட்டைப் பிள்ளை வாங்கிக் கறை யானிடம் கொடுத்துவிட்ட வரலாற்றைப் பெரியவாச்சான் பிள்ளை அறிந்தவர். ஆகவே, அதே நம்பிள்ளை தம்மை எழுதும் படி பணித்தபோதிலும், இவர் மிக்க அடக்கத்தோடு, விளக்க மிருந்தாலும் சுருக்கமாய் எழுதினார். அன்றியும், திருப்பாவைக்கு மூவாயிரப்படி என்ற வியாக்கியானம் எழுதினார். திருப் பாவைக்குப் பலர் வியாக்கியானம் எழுதியிருப்பினும், இவர் உரையே மிக்க சிறப்புற்று விளங்குவது. ஆழ்வார் அருளிச்செயல் அனைத்திற்கும், அதாவது நாலாயிரப் பிரபந்த முழுமைக்கும், வியாக்கியானம் கண்டவர் இவர் ஒருவரே.

மற்ற ஆசாரியர்களைப் போல இவரும் திருவரங்கத்தி லேயே வாழ்ந்தார். 95 திருநட்சத்திரம் இருந்தார். நயினாராச்சான் பிள்ளை என்பவர் இவருடைய மருமானும் தத்த புத்திரருமா வார். அவரோடு பரகால தாசர், ஸ்ரீ ரங்காசாரியர், பின்பழகிய பெருமாள்ஜீயர் முதலியோரும் இவருக்குச் சீடர்கள்.

வேதாந்த தேசிகர் தாம் கண்ட ஒரு கனவின் பயனாக, பெரியவாச்சான் பிள்ளையால் திருத்தி யாட்கொள்ளப்பட்டு,

திருப்பாணாழ்வார் விக்கிரகத்தைத் திருவாராதனமாகப் பெற்றார் என்ற ஒரு வரலாறு* தென்கலைக் குருபரம்பரையில் காணப்படும்.

பெரியவாச்சான் பிள்ளைக்கும் வேதாந்த தேசிகருக்கும் இருந்த தொடர்பு, பழநடை விளக்கம் என்ற தென்கலை மூவாயிரப்படி குரு பரம்பராப்ரபாவத்தில் விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது. இவருடைய கருத்து, உபாசனையால் பெற்ற ஞானச் செருக்கினால் வேதாந்த தேசிகர் என்கிற தூப்புல் பிள்ளை சம்பிரதாய தரிசனத்தைக் கைவிட்டு, பின்ன சம்பிர தாயத்தைப் பிரவர்த்திப்பித்து வந்தார் என்பது. இதை இவர் பெரியபெருமாள் சந்நிதியில் சொல்லி முறையிட்டார். அதன் மேல் பெருமாள் தேசிகருக்கு ஒரு விபரீதமான ஸ்வப்பனம் வரும்படி திருவுள்ளங் கொண்டார்: பெரியவாச்சான் பிள்ளை யோடுகூட எல்லோரும் அரங்கநாதன் சந்நிதிக்கு எழுந்தருள, தேசிகர் தாம் மட்டும் தடுத்து நிறுத்தப்பட்டார். விழித்தெழுந்த தேசிகர் கனவுக்காக வருந்தி, காலையில் நோயோடு படுத்திருந்த பெரியவாச்சான் பிள்ளையை வந்து தரிசித்திருந்து, தாம் கண்ட கனவை அவரிடம் சொன்னார். அதன்மேல் பெரியவாச்சான் பிள்ளை அவரோடு சம்பிரதாயப் பொருள்களை விவாதித்த போது பல சம்பிரதாய உண்மைகளை அவருக்கு அறிவுறுத்தி னார். பின்னர் தேசிகர், பெருமாள் ஆழ்வார் ஆசாரியர்கள் விஷயமாக க்ஷமாசோடசி என்ற ஒரு பிரபந்தம் விண்ணப்பம் செய்தார். பெரியவாச்சான் பிள்ளையும் திருவுள்ளம் உகந்து தேசிகருக்குப் பஞ்ச சம்ஸ்கார பூர்வமாகச் சகல விசேஷார்த் தங்களையும் சாதித்தருளினார். தேசிகர் தமக்குத் திருவாராதனம் சாதித்தருள வேண்டும் என்று விண்ணப்பம் செய்ய, அப்படியே பிள்ளையும் தம்முடைய கோயிலாழ்வார் திருக்காப்பை நீக்கி, தேசிகரைப் பார்த்து “நீர் போய் கண்ணைக் கட்டிக்கொண்டு ஒருவரை எழுந்தருளப் பண்ணிக்கொள்ளும்” என்று நியமித்தார். தேசிகரும் அப்படியே சென்று கண்ணைக் கட்டிக்கொண்டு ஒரு மூர்த்தியை எடுத்து வந்து பார்த்தபோது, அந்தத் திருக் கோலம் திருப்பாணாழ்வாராக இருந்தது. பார்த்த பெரிய வாச்சான் பிள்ளை, “உம்முடைய நெஞ்சைச் சோதிப்பதற்காக எம்பெருமான் இவ்வாறு செய்தார். ஜாதி நிரூபணம் அடியாக இனி நீர் அபசாரம் செய்யாதீர். திருப்பாணாழ்வாருடைய

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 14ஆம் நூற்றாண்டு நூல் காண்க.

அமலனாதி பிரானுக்கு ஒரு வியாக்கியானம் இடும்" என்று உத்தரவிட்டார். அவ்வாறே தேசிகரும் அமலனாதி பிரானுக்கு 'முனிவாகனபோகம்' என்ற பிரசித்தமான வியாக்கியானம் எழுதினார்.* சிலநாள் கழித்து பெரியவாச்சான் பிள்ளை திரு நாட்டுக்கு எழுந்தருளினார்.

திவ்வியப் பிரபந்த உணர்ச்சிக்குப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம் தவிர வேறு கதியில்லை. ஆகவே ஸ்ரீ வைஷ்ண வர் அனைவரும் இவருடைய சம்பந்தம் பெற்று இவருடைய சிஷ்யராயிருப்பார்கள்.

**நூல்கள்**

இவர் செய்த நூல்கள் முன்கூறியபடி நாலாயிரப் பிரபந்தம் முழுமைக்குமான மணிப்பிரவாள வியாக்கியானம்; திரிமத சித்தாந்தசார சங்கிரகம், பாசுரப்படி ராமாயணம், கலியன் அருள்பாடு, பரந்தரகஸ்ய விவரணம், மாணிக்கமாலை, நவ ரத்னமாலை, சகலப்ரமாண தாத்பர்யம், உபகார ரத்னம், கத்ய த்ரய வ்யாக்யானம், ஆளவந்தார் தோத்திர ரத்நவ்யாக்யானம், தனிச்லோகி வ்யாக்கியானம், பரந்தபடி, அபயப்ரதான வியாக் கியானம், சரமரஹஸ்யம், அனுசந்தான ரஹஸ்யம், நிகமனப் படி முதலியன; யாவும் வியாக்கியானமே; பிரபந்த ரகசியம் என்பது மட்டும் தனி நூல்; இது மந்திர வியாக்கியானம்.

இவர் நாலாயிரம் முழுமைக்கும் வியாக்கியானம் செய் திருப்பினும், பெரியாழ்வார் திருமொழி - முதல் நான்கு பத்துக்கும் இவரது வியாக்கியானம் கிடைக்கவில்லை; இந்த நான்குக்கு மட்டும் மணவாளமாமுனி வியாக்கியானம் செய்திருக்கிறார். இதுகொண்டு அவர் காலத்திலேயே இப்பகுதி கைதவறி மறைந்து போய்விட்டதென்று கருதத்தகும் என்று ஆன்றோர் கூறுகின்றனர்.

பல இடங்களில் இவரால் மணிப்பிரவாளமில்லாது சுவை பொருந்திய தமிழாகவே எழுதமுடியும் என்பதற்கு எடுத்துக் காட்டுக்கள் சில கூறுவோம். அமலனாதிபிரான் 2ஆம் பாடல் வியாக்கியானத்தின் அவதாரிகை: "முதற் பாட்டில் அவர் தொடர்ந்து வந்தபடி சொன்னார், இப்பாட்டில் தாம் மேல்

---

* இவ்வரலாற்றை வடகலையார் ஒப்புக்கொள்வதில்லை.

விழுந்தபடி சொல்லுகிறார். திருவடிகளிலே தொடர்ந்த திருவுள்ளம் திருப்பரியட்டத்தின்மேல் சேர்ந்தபடி யெங்ஙனே யென்னில், தானறிந்து சேரில் விஷயத்தின் போக்யதைக்குக் குற்றமாம்; ஆகையாலே போக்யதை அளவுபட்டதுமல்ல, ஆசை தலைமடிந்ததுமல்ல, கடலோதம் கிளர்ந்தலை கப்புக்கால் உள்ளே கிடந்ததொரு துரும்பு கடலை அளவிட்டல்லவே கரை யேறுவது: ஒரு திரை ஒரு திரையிலே ஏற வீசுமத்தனையிறே."

மூன்றாம் பாடல் தொடக்கம்: மந்திபாய் வடவேங்கட மாமலை: "திருமலையில் பலாக்கள் வேரே பிடித்துத் தலை யளவும் பழுத்துக் கிடக்கையாலே அங்குத்தைக் குரங்குகள் ஜாத்யுசித சாபலத்தாலே ஒரு பழத்தைப் புசிக்கப் புக, மற்றை மேலில் பழத்திலே கண்ணையோட்டி, இத்தைவிட்டு அதிலே பாய்ந்து தாவா நிற்குமத்தனை யாய்த்து. பெரிய பெருமாளுடைய திவ்யாவயவங்களிலே தாம் ஆழங்கால் படுகிறாப்போலே யாய்த்து அவைகளும். கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடமிறே. ஒன்றையொன்றுபற்றி மாலையாக நாலா நிற்கும்; திருச்சின்னக்குரல் கேட்டவாறே பாய்ந்தோடாநிற்கும் என்று மாம். பரமபதமும் திருமலையும் கோயிலும் திருவயோத்யை யும் திருச்சோலையும் ஒரு போகியாயிருக்கிறபடி எங்கும் மாறி மாறித் தங்குகை. பலாக்கள் வேரோடு பணையோடு வாசியறப் பழுத்துக் கிடக்கையாலே ஒன்றிலே வாய்வைக்கப் பெறாதே தான் வேண்டினபடியே திரியும்படி யாய்த்து. வடவேங்கடம் தமிழ் தேசத்துக்கு எல்லை நிலம். போக்யதை அளவற்றிருக்கை. உபயவிபூதியும் ஒரு மூலையிலே அடங்கு மென்றுமாம்."

அடுத்த நூற்றாண்டில் வந்த அழகிய மணவாளப் பெரு மாள் நாயனார் இவ்வுரைக்குப் பாஷ்யம் எழுதினாற் போல இவர் தொடர்களையும் வாக்கியங்களையும் அப்படியப்படியே எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்.

பின்வரும் திருப்பாவைப் பகுதிகளையும் காண்க. (மூவாயி ரப்படி, பாட்டு 12, கனைத்திளம்): இனித்தானெழுந்திராய் - எங்களாற்றாமை யறிவித்த பின்பும் உறங்கக்கடவதோ எழுந் திராய். ஈதென்ன பேருறக்கம் - "பகவதஸ் த்வராயை நம:" என்று கொண்டு பிறர் ஆர்த்திக்கு த்வரித்து உணருமவனோடே பழகி வைத்து இங்ஙனேயுறங்குவதே என்கிறார்கள். ஆபந்நர்க்காக உணருமவன் படியுமன்றிக்கே காலமுணர்த்த உணரும் ஸம்ஸாரி

கள் படியுமன்றிக்கேயிருப்பதே உன்னுறக்கம்! அனைத்தில்லத்தாரும் அறிந்து - பெண்களெல்லாரும் வந்து உன்வாசலிலேயழைக்கின்றமை ஊராக அறிய வேணுமென்றிருந் தாயாகில், எல்லாருமறிந்தது, இனி எழுந்திராய்; பகவத்விஷயம் ரஹஸ்யமாக அநுபவிக்குமித்தனை, புறம்பு இதுக்கு ஆளுண்டோவென்று கிடக்கிறாயாகில், அதெங்கும் ப்ரஸித்தமாய்த்து என்றுமாம். எம்பெருமானார் திருவவதரித்தாப்போலே காணும் இப்பெண்பிள்ளையும்.

(பாட்டு 16, நாயகனாய் நின்ற): கொடித் தோன்றும் தோரணவாசல் காப்பானே மணிக்கதவம் தாள் திறவாய் ஆர்த்த ரக்ஷணத்துக்குக் கொடிகட்டித் தோரணமும் நட்டுவைத்தாற்போலே, பெண்கள் தடுமாற்றந்தீர முகம் தருகைக்கன்றோ உன்னையிங்கு வைத்தது? மணிக்கதவம் தாள் திறவாய் - 'பொன்னியலும் மாடக் கவாடம் கடந்துபுக்கு' என்னுமாப்போலே புகுவரைத் தன்னழகாலே காற்கட்டும் கதவினுடைய தாள்திறவாய். திருவாசலுக்குள் புகுவாரைக் காற்கட்டும் இது; அவன் புக்காரைப் புறப்படாதபடி காற்கட்டும் தன்னழகாலே. 'தாள் திறவாய்' என்றவாறே, அவன் 'பயமுள்ள தேசத்திலே மத்யராத்ரத்திலே வந்து திறக்க வழைக்கிற நீங்களார்?' என்ன; 'பயாநாம் அபஹாரி யிருந்த இடத்தில் பயமென்? என்ன; 'காலம் த்ரேதா யுகமாய், தமப்பனார் சம்பராந்தகனுமாய், பிள்ளைகள் தாங்களும் ஆண்புலிகளாய், மந்த்ரிகள் வஸிஷ்டாதிகளாய், ஊரும் திருவயோத்யையாய், பயமற்றிருக்கிறதோ; காலம் கலிக்குத் தோள் தீண்டியான த்வாபராந்தம், தமப்பனார் ஸாது ஸ்ரீ நந்த கோபர், இவர்கள் சிறு பிள்ளைகள், அதுக்கு மேலே தீம்பர்கள் ஊர், இடைச்சேரி, கம்ஸன் சத்ரு, எழும் பூண்டுகளெல்லாம் அஸுரப்பூண்டுகள், பயங்கெட்டிருக்கலாமோ?' என்ன; 'பெண்களுக்குப் பயப்பட வேணுமோ?' என்ன; 'சூர்ப்பணகை பெண்ணன்றோ?' என்ன; 'அவள் ராக்ஷஸி, நாங்கள் ஆயர் சிறுமியர், இவருக்கு என் வருகிறதோ! என்று வயிறுபிடிக்கு மிடையர்க்குப் பிறந்தவர்களன்றோ என்ன; 'பூதனைக்குப் பின்பு இடைச்சிகளுக்கன்றோ பயப்பட வேண்டுகிறது?' என்ன; சிறுமியரோமுக்கு - 'கிருத்ரிமம் அறியாத சிறு பெண்கள்' என்ன; 'வார்த்தையிலே யறியலாம், வந்த காரியத்தைச் சொல்லுங்கோள்' என்ன; அறைபறை - 'நோன்புக்குப் பறைவேண்டி வந்தோம்' என்ன; 'அதுவாகில் திருப்பள்ளி யுணர்ந்தால் விண்ணப்பம் செய்கி

றோம், அவ்வளவும் நில்லுங்கோள்' என்ன. இவ்விடத்தில் பெரிய வாச்சான் பிள்ளை பாத்திரங்களை நேரே நிறுத்தி உரையாடல் நிகழ்த்தி நாடகம் நடிப்பித்துக் காட்டுகிறார்.

இப்படிப் பின்னும் எல்லா இடங்களையுமே காட்ட முடியும். இவற்றிலிருந்து ஒரு கருத்தைச் சொல்லத்தோன்று கிறது. இவர் பகவானையும் பிரபஞ்சத்தையும் ஆன்மாவையும் இவர்களுக்குள்ள தொடர்பையும் பற்றிப் பேசும் போது, பெரி தும் வடசொற்றொடர்களைக் கொண்டு எழுதுகிறார். ஆனால் இயற்கை வருணனை போன்றவை கூறுமிடங்களில், தம்மை மறந்து இனிதாகத் தமிழ்ச் சொற்களாலேயே விளக்கமும் கதை களும் சொல்லிக்கொண்டு போகிறார். பகவத் விஷயத்தைச் சொல்லும்போதுதான், தமிழ்மொழி இவருக்குப் போதாததாகி, வடமொழியை மிக அதிகமாய்க் கையாளுகிறார்.

இனி, இம்மணிப்பிரவாள நடைகளைப் பயிலும்போது, தமிழ்வளம் பெறுகிறது என்பதில் கருத்து வேற்றுமை இருக்க வியலாது. பல புதிய சொல்லாட்சிகள், சொற்பொருள்கள், அழகிய தொடர்கள், உவமைகள், பழமொழிகள், வரலாறுகள், மரபுகள், விளக்கங்கள்-எல்லாம் அளவின்றிக் கிடைக்கின்றன. வடமொழிக் கலப்பிருக்கிறதே என்று மருண்டால், இத்தனையும் இழக்க வேண்டியிருக்கிறது.

கலியனருள்பாடு என்பது, திருவரங்கத்தில் திருவாய் மொழி அத்யயன உற்சவத்தைத் திருமங்கையாழ்வார் நியமித்து உடனிருந்து நடத்தி வைத்த வரலாற்றைக் கூறும் ஒரு சிறிய கட்டுரை. தனி ஸ்லோகி வியாக்கியானம் என்பது, இவர் வால்மீகி ராமாயணத்தில் தேர்ந்தெடுத்து உரையிட்ட 200 சுலோகங்களின் வியாக்கியானமாகும். ராமாயணத்தில் சில சுலோகங்களுக்கு அபயப்ரதான சாரம் என்று தமிழில் வேதாந்த தேசிகர் செய்து வந்தபோது, பெரியவாச்சான் பிள்ளை பலவற்றுக்கு வியாக்கி யானம் எழுதியிருப்பது கண்டு, "இனி எல்லாம் சோழியன் உமிழ்ந்த சக்கை" என்றார் என ஒரு வரலாறு வழங்கும். (சோழி யன் - சோழ நாட்டுப் பிராமணன்.)

தம் குருவின் ஆக்ஞைப்படி பெரியவாச்சான் பிள்ளை திருவாய்மொழி உரை செய்ததை உபதேச ரத்தினமாலைப் பாடல் பின்வருமாறு கூறும்:

நம்பிள்ளை தம்முடைய நல்லருளால் ஏவியிட
பின்பெரிய வாச்சான்பிள் ளையதனால் – இன்பா
வருபத்தி மாறன் மறைப்பொருளைச் சொன்னது
இருபத்து நாலா யிரம். (43)

மற்றொரு பாடல் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியா னச் சிறப்பைக் கூறும்.

பெரியவாச் சான்பிள்ளை பின்புள்ள வைக்கும்
தெரிய வியாக்கியைகள் செய்வான் – அரிய
அருளிச் செயற் பொருளை ஆரியர்கட் கிப்போது
அருளிச் செயலாய்த்து அறிந்து. (46)

## நயினாராச்சான் பிள்ளை

இவர் பெரியவாச்சான் பிள்ளையின் திருப்புதல்வர். வட மொழியில் பல நூல்கள் செய்தவர். வாதிகேசரி அழகிய மண வாளப் பெருமாள் ஜீயர் முதலியோர், பெரியவாச்சான் பிள் ளைக்குப் பிறகு இவரிடம் ரகஸ்ய கிரந்தங்களைப் பிரசாதிக் கப் பெற்றார்கள்.

## பின்பழகிய பெருமாள் ஜீயர்

இவர் நம்பிள்ளையின் சீடர்களில் ஒருவர். வைணவ சமயத் தினர் இவரை நினைவு கூர்வது இவர் செய்த ஆறாயிரப்படி குரு பரம்பராப்ரபாவம் என்ற மணிப்பிரவாள நடை நூலினால் ஆகும்.

இவர் வரலாறு அந்தப் பிரபாவத்தில் வரும் சில குறிப்புக் களால் அறிகிறோம். இவர் பிறந்தது திருப்புட்குழி. இவர் நம்பிள்ளையின் சீடராகத் தொடங்கியபோது, வயதில் மிக்க இளையவர். அப்போது பட்டருடைய பேரராகிய நடுவில் திரு வீதிப்பிள்ளை பட்டர் என்பவர் மிக்க பிரசித்தமாய் வாழ்ந்தார். அவர் எப்போதும் நம்பிள்ளையினிடத்து மிக்க பொறாமை யோடிருந்தவர். ஒருநாள் அவர் இராச சபைக்குப் புறப்பட்டுச் செல்லுகையில் வழியில் பின்பழகியாரைக் கண்டார். கண்ட போது "ஜீயா! ராஜகோஷ்டிக்கு போகிறோம். உடன்வருவாயாக" என்று அழைத்தார். இவரும், "நம் ஆசாரியரான பட்டரின் வம்ச மாயிற்றே" என்று மறுக்காமல் உடன் சென்றார். அரச சபையில் அரசன் கேட்ட கேள்விக்கு உத்தரம் சொல்ல முடியாமல் அவர்

விழிக்க அதற்கான விடையை இவர் பக்குவமாகச் சொல்லிக் கொடுத்துத் தூண்டிய செய்தியை நம்பிள்ளை வரலாற்றில் கண்டோம். பின்னர் இவர் நம்பிள்ளை பரமபதம் அடைந்தபிறகு, தாம் அறிந்த அளவு சம்பிரதாயப்படி வைகுந்தநாதன் முதல் தம் ஆசாரியரான நம்பிள்ளை வரை உள்ள ஆசாரிய சரித்திரத் தைக் குருபரம்பராப் பிரபாவம் என்ற நூலாக எழுதி வைத்தார்.

இவர் நஞ்சீயர் காலத்திலேயே ஆசாரியர் திருவடிகளை ஆசிரயித்த முதலிகள் கோஷ்டியில் சேர்ந்துவிட்டார். நஞ்சீயரின் இறுதிக் காலத்தில் அவர் இவர் மடியில் தம் திருவடிகளை வைத்தபடியே, பட்டர் திருவடிகளைத் தியானித்துக் கொண்டு திருநாட்டுக் கெழுந்தருளினார்.

இவர் பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, ஈயுண்ணி மாதவப் பெருமாள் முதலான அனேகம் வைஷ்ணவர்களோடு நம்பிள்ளையிடம் ரகசியார்த்தம் கேட்டு வந்தார். இவர் நம்பிள்ளை திருவடிக் கைங்கரியமே குறிக் கோளாய் ஊணும் உறக்கமும் இன்றி வாழ்ந்து வந்தார். அக் காலத்தில் ஒரு சமயம் இவருக்கு உடல் நலம் குன்றித் துன்புற் றார். அப்போது உயிர் போய்விடுமோ என்றஞ்சி, தமக்கு வேண் டியவர்களான சில வைஷ்ணவர்களை அழைத்து, “அடியேன் இப்போது பரமபதம் அடையாமல் இன்னும் சிறிது நாள் இங்கே இருக்கும்படி நீங்கள் பெருமாள் சந்நிதியில் சென்று பிரார்த்தித்து, ஏழை ஏதலன் (1418) ஆழியெழச் சங்கம் (3370) என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தையும் நம்மாழ்வார் பாசு ரத்தையும் சேவித்துப் பிரபத்தி பண்ணுங்கள்” என்று வேண் டிக் கொண்டார்.

அவர்களும் அவ்வாறே செய்தார்கள். அதன்மேல் இவருக்கு உடம்பு நலமாயிற்று. வைணவ கோஷ்டியினுள் இவர் இவ்வாறு செய்தது முறையா என்ற ஒரு வாதம் எழும்பிற்று. அவர்கள் சென்று நம்பிள்ளையைக் கேட்க, அவர் எங்களாழ்வானைக் கேளுங்கள் என்ன, அங்கிருந்த திருநாராயண புரத்தரையர், அம்மங்கி அம்மாள், அம்மங்கி பெரிய முதலியார் ஆகியோரை யெல்லாம் முறையாகக் கேட்டுவர, பிள்ளை இத்தனையும் கேட்டு ஒருவரும் ஒன்றும் சொல்லாமையால், பின் ஜீயரையே இதுபற்றி வினவினார். இவர் மற்றவர்கள் சொல்லிய கருத்து அன்று என்று கூறவும், பிள்ளை ‘உம்முடைய அபிப்பிராயம்

கூறும்' என்று கேட்டார். அதன்மேல் ஜீயர், "தேவரீர் திருமஞ்சன முறைகளிலே திருமஞ்சனசாலைக் கெழுந்தருளித் திருமஞ்சனங் கொண்டருளித் தூயவுடை யாடை திருவுத்தரீயம் சாத்தியருளி யுலாவியருள்போது, குறுவியர்ப்போடு கூடிய திருமுக மண்டலச் செவ்வியும், அடியேன் திருவிசிறி சுற்றிச் சுழற்றிப் பணிமாறுகிற கைங்கர்யத்தைவிட்டு அடியேனுக்குப் பரமபதத்துக்கும் போக இச்சையாயிருந்ததில்லை, பெருமு கோல்லாஸமும் இன்னம் சிறிதுகாலம் இங்கேயிருந்து பெறவேணுமென்று நினைத்துச் செய்தேன்" என்று விண்ணப்பஞ் செய்தார். இதைக் கேட்டவர் கள் மகிழ்ந்தனர்.

ஜீயர் நம்பிள்ளையினிடத்துக் கொண்டிருந்த ஈடுபாட்டை விளக்க மற்றொரு வரலாறும் உண்டு. ஒருநாள் இவர் "இவ் வாத்மாவுக்கு ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் யாது?" என்று நம்பிள்ளை வினவ, அவர், 'இச்சை ஸ்வரூபம், இரக்கம் உபாயம், இனிமை உபேயம்' என்று கூறினார். கேட்ட ஜீயர் "நான் வேறுவிதமாய் நினைத்திருக்கிறேன். அதாவது தேவரீர் திருவடிகளே தஞ்சமென்றிருக்கும் வைணவருக்கு அடிமை யாதலே ஸ்வரூபம், அவர்களுடைய அபிமானமே உபாயம், அவர்களுடைய முகமலர்த்தியே அடியேனுக்கு உபேயம் என்றி ருப்பேன்" என்று கூறினார். இவருடைய பக்தியை நம்பிள்ளை பெரிதும் பாராட்டினார்.*

நம்பிள்ளை பரமபதித்தபின் இவர் பெரியவாச்சான் பிள்ளையிடமும் சீடராயிருந்தவர்.

**நூல்கள்**

இவர் செய்த நூல்கள் குருபரம்பரா ப்ரபாவம், குருபஞ் சார்த்த ரகசியம் என்பன. இவற்றுள் இந்தக் குருபரம்பரையே இன்றுள்ள ஆழ்வார் ஆசாரியர்கள் வரலாற்றை அறிய மூல மாய் உள்ளது. இதன் முதல்பகுதி, பிரவேசம் என்ற பகுதியில் வைகுண்டநாதன் ஆழ்வார்களை அவதரிக்கச் செய்து அவர் களுக்கு மயர்வறமதி நலம் அருளி அவர்கள் முகமாக, திராவிட வேதமாகிய நாலாயிரப் பிரபந்தங்களைப் பிரகாசிப்பித்து அருளினான் என்பார். பின்பு முறையாக முதலாழ்வார் மூவர், திருமழிசையாழ்வார் வரலாறுகளைச் சொல்லி, பின் குலசேகரர்,

* வார்த்தாமாலை, 2.

பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடி, பாணர், திருமங்கை என்று முடித்து நம்மாழ்வார் மதுரகவியோடு ஆழ்வார் பன்னிருவர் வரலாற்றை முடிக்கிறார். பின்னர் ஆசார்ய வைபவம் தொடங்குகிறார். நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, யமுனைத்துறைவர் வரலாறுகளைச் சொல்லி, ஆளவந்தார் வரலாறு ஆனபின், பெரியநம்பிகள் பிரபாவம் சொல்லி, பிறகு இளையாழ்வாராகிய இராமானுசர் வரலாறு மிக்க விரிவாகச் சொல்கிறார். இடையில் அனேகருடைய வரலாறுகளும் சொல்லப்படுகின்றன. உடையவரிடத்து ஆசிரயித்த முதலிகள் நூற்றெண்பத் தொருவரைச் சொல்லியபின் எழுபத்து நாலு ஆசாரியர்களைச் சொல்கிறார். அடுத்து, பிள்ளையுறங்கா வில்லிதாசர் சிறப்பைக் கூறி, பின்னர் மீண்டும் எம்பார் ஸ்ரீபட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை என்ற முறையில் தம் ஆசாரியரோடு கொண்டுவந்து முடித்து விடுகிறார். தொடக்கத்தில் சில செய்திகள் வரலாற்றுக்குப் பொருத்தமில்லாமல் இருக்குமே தவிர, பொதுவாகச் சரித்திரங்களும் அங்கு கூறப்பட்ட பொருள்களும், வரலாற்றுக்கும் இலக்கிய உணர்ச்சிக்கும் பொருந்துவனவே. வைணவ சமயக் கோட்பாடு இன்னதென்று விளக்கவல்ல துணுக்குகள் போன்ற கருத்துக்கள் நூல் முழுமையும் நிரம்பியுள்ளன. மணிப்பிரவாள நடை என்பது உண்மை. பொருட் பொலிவுக்கு ஏற்றவாறு நடையும் கம்பீரமான நடை. இந்தப் பிரபாவத்தைப் பக்தியோடு படிப்பவர் இதிலேயே ஈடுபட்டு ஒன்றி விடுவர் என்பதில் ஐயமில்லை. பெரியபுராணம் ஒன்று நீங்கலாக, இவ்வளவு நயமும் சிறப்பும்கொண்ட வரலாற்று நூல் வேறெதுவும் இல்லை. இப்படிப்பட்ட ஒரு நூல் கிடைத்தது வைணவர்களுக்கு அரியபேறு ஆகும்.

இவருடைய குருபரம்பரை நூலே ஆதி நூலென்றும், ஏனையவை பின்னால் இதனோடு கற்பனையான பலகதைகளைச் சேர்த்துப் பெருக்கப்பட்டவை என்றும் அறியவேண்டும். சேர்க்கப்பட்ட பகுதிகள் யாவும் வீண்சமயப் பூசலுக்கு வித்தாக உள்ளவை. ஒரு குறிப்பைச் சொன்னால் இது நன்கு விளங்கும். இவர் எழுதிய திருமழிசையாழ்வார் வைபவத்தில் திருமழிசையாழ்வார் இதர சமயங்களெல்லாம் பயனில்லை என்று அறிந்து கைவிட்டுத் தாமே ஸ்ரீ வைஷ்ணவராகித் திருமாலினுடைய லீலா வைபவங்களை நன்கு அனுபவித்துப் பாடினார் என்று சொல்கிறது. ஆனால் மிகவும் பிற்காலத்து வந்த பன்னீராயிரப்படி

இது போதாதென்று கருதி, சிவவாக்கியரென்ற பிரசித்தமான பெயரை உடையவரான இவர் சைவ மதத்தில் புகுந்து சிவதீட்சை பெற்றுப் பரமத கண்டனம் செய்து திருமயிலை வருகையில், பேயாழ்வார் இவரைத் தடுத்தாட்கொண்டார் என்றும், அவ்விடத்தில் இவர் சிவபரமாகக் கூறினார் என்றும் சில கூற்றுக் களை மிகவும் விவரமாகச் சொல்கிறது. சிவவாக்கியர் வரலாறு மிகவும் பிற்பட்டது. (பதினான்காம் நூற்றாண்டு வரலாற்றில் கூறியிருக்கிறோம்.). பன்னீராயிரப்படி இதற்கு நெடுநாள் பிற்பட்டது. பின்பழகியர் காலத்தில் இப்போலிக் கதைகள் எழவில்லை. வார்த்தா மாலையும் இவரே தொகுத்தார் என்பது வரலாறு. அந்நூல் பற்றிய வரலாறு பின்னே உள்ளது.

அருணிரம்பும் புட்குழிவாழ் பின்பழகன் என்பார்
குருபரம்ப ராவிபவங் கூறத் – திருவார்
திருச்சங் குடையவனைச் சேவிப்போம், நெஞ்சே!
திருமால் பதஞ்சேர் திறத்து.

பின்பழக ராம்பெருமாள் ஜீயர் பெருந்தவத்தில்
அன்பதுவு மற்றுமிக்க ஆசையினால் – நம்பிள்ளைக்கு
ஆன அடிமைகள்செய் யந்நிலையை நன்னெஞ்சே!
ஊனமற எப்பொழுதும் ஓர்.

இவர் செய்த பாடல் ஒன்று தென்கலையார் இயல் சாத்தில் எட்டாம் பாடலாக உள்ளது.

ஊழிதொறும் ஊழிதொறும் உலகம் உய்ய
 உம்பர்களும் கேட்டுய்ய அன்பி னாலே
வாழியெனும் பூதம்பேய் பொய்கை மாறன்
 மழிசையர்கோன் பட்டர்பிரான் மங்கை வேந்தன்
கோழியர்கோன் தொண்டர்துகள் பாணன் கோதை
 குலமுனிவன் கூறியநூல் ஓதி வீதி
வாழிஎன வரும் திரளை வாழ்த்து வார்தம்
 மலரடிஎன் சென்னிக்கு மலர்ந்த பூவே.

இந்த ஜீயர் காலம் சுமார் கி.பி. 1290 ஆதல் கூடும். 1267இல் வேதாந்த தேசிகர் பிறந்தார் என்பது வரலாறு; அவருக்குப் பிறகே வடகலை என்ற தனிப்பிரிவு வைணவத்தில் தோன்றிற்று. ஆதலால் பின்பழகியர் காலத்தில் வடகலை என்ற தனிப்பிரிவு இல்லை. இவருடைய ஆறாயிரப்படி இரு கலையார்க்குமுரிய மூல குருபரம்பராப் பிரபாவமாயிருக்கும்.

## நடாதூரம்மாள்

இவர் ஆடவரான ஓர் ஆசாரியர். (கலி 4267) கி.பி. 1166இல் பிறந்தவர். வரதகுரு என்பது இயற்பெயர். காஞ்சியில் தேவராசப் பெருமாள் புதல்வராய்ப் பிறந்தார். இவர் வரலாறு மிக்க சுவை யுடையது. எங்களாழ்வானிடம் சென்று புத்திரனைப் போலக் கொள்ளியிட்டுக் கர்மாதிக் கிரியைகளைச் செய்வதாய் வாக்குறுதி கொடுத்து ஸ்ரீ பாஷ்யம் முதலியன சேவித்தார். இவரிடத்தில் கிடாம்பி அப்புள்ளார் வடக்குத் திருவீதிப்பிள்ளை முதலியோர் ஆசிரயித்தார்கள். ஒருநாள் இவர் பெருமாளுக்குப் பாலமுது சமர்ப்பிக்கையில் பால் உஷ்ணமாயிருந்ததைக் கண்டு, தம்முடைய கைவிரலைப் பாலிலிட்டுப் பார்த்தனர். இதனைக்கண்ட பெரு மாள், தாய் குழந்தைக்கன்றோ இவ்வாறு பாலூட்டுவது என்று 'என் அம்மாவோ' என்று அழைத்தனர். அதுமுதல் அம்மாள் எனத் திருநாமம் வந்தது. இவர் ஒருநாள் ஆரண்யத்தின் வழியா கத் திருவேங்கடம் செல்கையில் வழியில் மகாரண்யமாகை யால் பெருமாளுக்குப் பிரசாதம் அமுது செய்விக்கத் தகுந்த இடம் நேராமலிருந்தது. அதனால் இவர் பெருமாளுக்குத் திரு வாராதனம் செய்துவிட்டுத் தாம் உபவாசமாயிருந்தனர். இதைக் கண்ட திருவேங்கடமுடையான் ஒரு வேதியராய் இவர்க்கு முன் எழுந்தருள, அம்மாளும் 'தேவர் யார்?' என்ன, 'நான் திருவேங் கடமுடையான் அமுது செய்த பிரசாதத்தைத் தேவர் அமுது செய்தபின் உமக்கு விடை தருகிறேன்' என்று கூறி, அம்மாள் அமுது செய்தபின் மறைந்தருளினார்.

இவர் ஸ்ரீ பாஷ்யம் காலட்சேபம் செய்துவந்த காலத்தில் பராசரபட்டர் வந்து கேட்டுக் கொண்டிருப்பார். உடனிருந்த ஏனையோர் அவரை அலட்சியம் செய்து வந்தனர். ஒருநாள் அவர் வராததைக் கண்ட அம்மாள், ஸ்ரீ பாஷ்யம் தொடங்க வில்லை. ஏனையோர் 'இடம் மட்டும்தான் சூன்யமாய் இருக் கிறது' என்று ஏளனமாய்ச் சொன்னார்கள். இவர் அதை மனத்தில் வாங்கி, அவர் வந்தபின் தம்முடைய காலட்சேபம் முழுவதையும் சொல்லச் செய்தார். அவரும் ஒன்றும் விடாமல் சொன்னார். கேட்போர் அதிசயித்தனர். அம்மாள் அவரை அப்படியே எழுதச் செய்து அதற்குச் சுருதப் பிரகாசிகை என்று பெயரிட்டார். இது ஒரு சிறப்பான வைணவ சாத்திர நூலாக உள்ளது.

பின்னர் நெடுநாள் கழித்து, இவர் சந்நிதியில் அப்புள்ளார் ஸ்ரீ பாஷ்யம் சேவித்து வருகையில், அவரோடுகூட அவர் தங்கை புதல்வரான வேங்கடநாதன் என்ற குழந்தை வந்திருந்தான். பிற்காலத்தில் இக்குழந்தையே வேதாந்த தேசிகன் என்று பிரசித்தி பெறப் போகின்றவன். அம்மாள், வந்த குழந்தையினுடைய திவ்விய தேஜஸைக் கண்டு மயங்கி, விட்ட இடம் தெரியாமல் திகைக்க, கேட்டுக்கொண்டே வந்த குழந்தை, விட்ட இடத்தை எடுத்துக் கொடுத்தான். வியப்படைந்த அம்மாள், இக்குழந்தையை ஆசீர்வதித்து அப்புள்ளாரைக் கொண்டு ஸ்ரீ பாஷ்யம் கற்பிக்கச் செய்தார் என்பது வரலாறு.

வேதாந்த தேசிகர் பிறந்தது 1269. இவர் அம்மாள் காலட்சேபத்துக்குச் சென்றது மூன்று வயதில்; அப்போது ஆண்டு 1272. சம்பிரதாயப்படி அம்மாளுக்கு வயது 106 ஆகும். இதற்கு மேலும் இவர் இருந்தாரென்று கருதவேண்டும். இவர் வடமொழியில் அனேக சாஸ்திரங்கள் செய்துள்ளார்.

## திருக்கோனேரி தாஸ்யை

பொதுவாகச் சைவ வைணவ மரபுகளில், பரம்பரையில் வரும் ஆசாரியர்களுடைய சம்பிரதாய நூல்களே பிரசித்தி பெற்றிருக்கும். அவ்வாறில்லாதன அச்சமய மக்களிடையே அதிக வியாபகம் பெறுதல் இல்லை. இதன் பயனாக நூல்கள் விளக்கம் பெறாமல் மறைந்து போதலும் உண்டு. இவ்வாறு மறைந்து வந்த ஒருநூல் திருவாய்மொழி வாசகமாலை என்னும் விவரண சதகம். இதைச் செய்தார் திருக்கோனேரி தாஸ்யை என்ற வைணவப் பெண்மணி. இந்நூல் நன்கு ஆராய்ந்து தஞ்சை சரசுவதி மகால் வெளியீடாக 1952இல் நாவல்பாக்கம் தேவ நாதாசாரியரால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

### நூல்

இந்நூலானது நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய் மொழியில் தேர்ந்தெடுத்த 164 பாடல்களுக்கு வியாக்கியானம் போல் அமைந்துள்ளது. திருவாய்மொழியானது 1102 பாடல்கள் உடையது. பத்து அல்லது பதினொரு பாடல் கொண்ட பகுதி ஒரு பதிகம்; பத்துப் பதிகம் கொண்டது ஒரு பத்து. இவ்வாறு

பத்துப் பத்துக்கள் சேர்ந்ததே திருவாய்மொழி. இவ்வாசிரியர் இந்த வாசகமாலை என்ற நூலில் ஒவ்வொரு பதிகத்திலும் முதல் பாட்டை அல்லது முதற்பாட்டும் மற்றொரு பாட்டும் ஆக இரண்டு பாட்டுக்களை எடுத்துக்கொண்டு, அவற்றுக்குத் திருவாய்மொழியின் முதல் பாடலுக்கு இயையப் பொருள் சொல்லி, திருவாய்மொழிப் பாசுரங்கள் அனைத்திலும் சொல்லப் பட்ட பொருள் முதல் பாசுரத்தின் பொருளே என்று விவரிக் கிறார். இவ்வாறு இவர் நூறு பகுதிகளாக விவரிப்பதால் இந்த நூல் விவரண சதகம் என்று பெயர்பெற்றது. (சதகம் - நூறு). திருவாய்மொழி முதற்பாடல் எல்லோரும் அறிந்தது; அப்பாட்டு பின்வருவது:

உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.

நாலாயிரப் பிரபந்த உரைகள் போல இந்நூலும் மணிப் பிரவாள நடையிலேயே அமைந்துள்ளது. ஒவ்வொரு பாட்டின் தொடக்கத்திலும் தவறாது, “உயர்வற என்கிற பாட்டை இந்தப் பாட்டு விவரிக்கிறது; எங்ஙனனே என்னில்” என்று தொடங்கி ஆசிரியர் எழுதிக்கொண்டே போகிறார். பதிகத்தின் முதல் பாட்டை எடுத்துத் தந்து அதற்கு ஒரு விளக்கம் கூறிப் பின்னர் மற்றொரு பாட்டை எடுத்து அதற்கு விரிவு எழுதுவது இவ்வுரை யின் தன்மை. இதனுள் இவர் மிகப் பலவான வடமொழி நூல் களை எடுத்துக்காட்டுகிறார். அப்படியே நாலாயிரப் பிரபந்தங் களையும் எடுத்துத் தருகிறார். நாலாயிரமன்றி வேறு நூல்களை இவர் தொடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பலவான பழமொழிகளையும் தருகிறார். கடல் விசும்பினால் விளவ நீரில்லை, செருப்பு வைத்துத் திருவடி தொழுவாரைப்போல - என்பன காண்க.

இவர் எழுதும் உரைக்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் பகுதியைக் கூறலாம்.

நம்பி யைத்தென் குறுங்குடி நின்றஅச்
செம்பொ னேதிக ழுந்திரு மூர்த்தியை

உம்பர் வானவ ராதியஞ் சோதியை
எம்பி ரானையென் சொல்லி மறப்பனோ?

'உயர்வற' என்கிற பாட்டை 'நம்பியைத் தென்குறுங்குடி நின்ற' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே என்னில்; 'உயர்வற' என்று மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத் தளவுமாக லீலாவிபூதி யோகஞ் சொல்லுகிறது. உயர்நலமுடையவனென்று நித்ய விபூதியோகஞ் சொல்லுகிறது. 'யவனவ' னென்று உபய விபூதியிலும், அதிசயிதமான த்ருதீய விபூதிக்கும் நிர்வாககனான நம்பியை, பூர்ணனானவனை. நம்பியைத் தென்குறுங்குடி நின்ற அச்செம்பொனே திகழுந் திருமூர்த்தி - இப்படிப் பரிபூர்ணனா னவன் எனக்கு மயர்வற மதிநலமருளித் தன் சிலாக்கியமான பரத்வாதிகளிற் காட்டில் அர்ச்சக பராதீனமான திவ்ய மங்கள விக்ரஹத்தைக் காட்டிப் பரத்வாதிகளில் மனஸு போகிற மயக் கத்தையறுத்து.

அர்ச்சாவதாரத்திலும் திருக்குறுங்குடி நம்பியை யொழியப் போகாமல் மனனகமல மறும்படிபண்ணி. இப்படி மயர்வற மதிநல மருளினவன் யாவனொருவன் அவன், 'அயர்வறுமம ரர்கள திபதி யானவன்' என்றும்.

'உம்பர் வானவராதியஞ் சோதியை' - இப்படி நித்ய ஸூரி ஸேவ்யனாய், ஆதிகாரணமான பரஞ்சோதியை மறப்பதென்? அஜ்ஞான கந்த ரஹிதரான மேலாத் தேவர்களுக்கும் நிலத்தேவர் களுக்குங் காரணமானவனை மறக்க விரகுண்டோ? இப்படி உபகாரகனானவனை மறக்க விரகுண்டோ? 'துயரறு சுடரடி தொழுதெழென் மனனே' - மறக்க வொட்டாத் திருவடிகள், உன் மறப்பாகிற துயரறுக்கும். அஜ்ஞானாந்தகாரம் நீக்கி ஜ்ஞானப்பிரகாசமாகிற பரஞ்சோதிஸ் உனக்கு விளக்காகக் காட்டுந் திருவடிகளைத் தொழுதெழப் பண்ணின எம்பிரானை என் சொல்லி மறப்பனோ? அபூர்ணனென்று மறக்கவோ? அஸன்னிஹிதனென்று மறக்கவோ? வடிவழகில்லை யென்று மறக்கவோ? மேன்மையில்லையென்று மறக்கவோ? எனக்கு உபகாரகனல்லனென்று மறக்கவோ? எத்தைச் சொல்லி மறப்ப னென்கிறார்.

இந்நூல் வியாபகம் உடையதாய் இல்லை. ஒரே ஏடு கிடைத்து இப்பொழுது வெளியிடப்பட்டுள்ளது.

## ஆசிரியர்

நூலின் இறுதியில் காணப்படும் குறிப்பு இவ்வாசிரியர் பெயர் தெரிவிக்கிறது. 'உயர்வற உயர் நலமுடையவன்' என்கிற முதல் பாட்டின் விவரண சதகம் என்று திருநாமமான வாசக மாலையை அபர்யாப்தன் திருவடிகளிலே சந்தர்ப்பமான மாலையைச் செய்து அடிமை செய்தான் 'திருக்கோனேரி தாஸ்யை' என்று ஏடு முடிகிறது. இதனால் இவ்வாசிரியை பெயர் விளங்கும். இதன்பின், தன் கையினால் எழுதிய நூலில் ஏற்பட்ட பிழையைப் பெரியோர் பொறுத்தருளவேண்டும் என்று ஒரு வடமொழி வாக்கியம் காணப்படுகிறது: "கரக்ருதம் அபராதம் க்ஷந்துமர்ஹந்தி சந்த:" இதனால், நூல் ஆதியில் ஆசிரியை கையினால் எழுதப்பட்டதென்றும், தம் பிழையைப் பிறர் பொறுக்கவேண்டும் என்று பணிவோடு சொல்கிறார் என்றும் கருதலாம். கிடைத்த ஏடு ஆசிரியை எழுதியதாயிருக்க முடியாது. பிற்காலப் பிரதியேயாகும். முதல் ஏட்டிலிருந்த இவ்வாக்கியத்தையும் ஏடெழுதினார் பிரதி செய்து கொண்டார் போலும். இதனுள் ஒரு பக்கத்தில் திருஆரா அமுதனுடைய பாம்பணைப் பள்ளி சேவை படமாக வரையப்பட்டிருப்பது மிக்க அழகாயுள்ளது; புத்தகத்தில் இப்படத்தைக் காணலாம். ஓலையேட்டில் எழுத்தாணி கொண்டு அழகாகப் படமெழுதினோருடைய பக்தியையும் திறமையையும் எவ்வளவு போற்றினாலும் தகும்.

இவர் வரலாறு சம்பிரதாய நூல்களில் எங்கும் சொல்லப் படவில்லை. அடுத்துச் சொல்லப்படும் குறிப்புக்களால் இவர் வடக்குத் திருவீதிப்பிள்ளையின் சிஷ்யை என்று கருத இடமுண்டு. அச்சிட்ட நூலில் வாசகமாலையின் பின்னர் இரண்டு ஏடுகள் திருப்பாவை ஸ்வாபேதேச அர்த்த விவரணம் காணப்பட்டது என்று இரண்டு பக்கங்கொண்ட ஒருசிறு பகுதி உள்ளது. இதன் முதல் பத்தியை எடுத்துக்காட்டாக இங்குத் தருகிறோம். இவற்றைப் பார்க்கும்போது, இவ்வாசிரியை இதுபோலவே ஏனைய பிரபந்தங்களுக்கும் வாசகமாலையோ சுருக்கமான அர்த்த விவரணமோ எழுதியிருக்கக்கூடும் என்று தெரிகிறது. ஆனால் அப்படி எதுவும் கிடைக்கவில்லை. கீழ்வரும் பகுதியில் முதல் மூன்று பாட்டுக்களுடைய அர்த்தம் சொல்லப்படுகிறது.

"திருப்பாவை அடியிட்டஞ்சு பாட்டாலே ப்ரபந்நானுஷ்டாக க்ரமங்களையும், ப்ரபத்திவாசகமான திருநாமவைபவத்தையும்

பேசுகிறது. மேல் பத்து பாட்டாலே, ப்ரபத்தவ்யனுடைய திருநாம ஸங்கீர்த்தனமே ப்ரபன்னனுக்குக் கால க்ஷேபமாகையாலே, அந்த ஸங்கீர்த்தனத்துக்கு அதிகாரிகளானவர்களையுணர்த்திக் கூட்டிக்கொள்ளும்படி சொல்லுகிறது. எங்ஙனே என்னில், ‘புள்ளும் சிலம்பின’ என்னும் முதல் பாட்டில், பரிசுத்தமான சப்தப்ரமாணத்தை முன்னிட்டு ஸத்வநிஷ்டரை ஸாத்விக ஸமாசார நிதர்சந பூர்வகமாக பகவந்நாம ஸங்கீர்த்தனத்திலே ஸமாஹிதராக்கும்படி சொல்லுகிறது. இரண்டாம் பாட்டு ஸாத்விகப்ரதானரை, விரோதி நிரஸந ஸமர்த்தனுடைய ஸங்கீர்த்தனத்திலே ஸமாஹிதராக்கும்படி சொல்லுகிறது. மூன்றாம் பாட்டில், ஸத்வோத்தர காலத்தை முன்னிட்டு ஸத்வங்களாலே கொண்டாடும்படியான ஸ்ரீ வைஷ்ணவர்களை, ஸகல விரோதி நிவாரகனுடைய ஸங்கீர்த்தனத்திலே ஸங்கதராக்கும்படி சொல்லுகிறது.”

**காலம்**

பதிப்பித்தவர் இந்நூலின் காலம் வடக்குத் திருவீதிப் பிள்ளையின் காலம் என்று குறிப்பிடுகிறார்.

நூலின் இறுதியில் அஸ்மத் குருப்யோ நமஃ, ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம், சந்திரகிரி அய்யன் திருவடிகளே சரணம், ஸ்ரீமத்நாராயணனய்யர் திருவடிகளே சரணம், திருக்கோட்டியூர் ஜீயர் திருவடிகளே சரணம், வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம் என்ற பகுதிகள் காணப்படுகின்றன.

இங்கு குறிப்பிட்ட சந்திரிகிரி ஐயர், நாராயண ஐயர் யார் என்பது விளங்கவில்லை. திருக்கோட்டியூர் ஜீயர் என்பவர் இராமானுசருடைய ஆசாரியரான திருக்கோட்டியூர் நம்பியாவார். இங்கு கூறப்பட்ட ஆசாரியருள் வடக்குத் திருவீதிப் பிள்ளையே காலத்தால் பிற்பட்டவர். இவர் வாழ்ந்த காலம் குரு பரம்பரை நூல்களின்படி 1217-1312. இவருக்கு வணக்கம் சொல்கின்ற இவ்வாசிரியை நீண்ட ஆயுளோடு வாழ்ந்த பிள்ளையின் இறுதிக் காலத்தில் வாழ்ந்தவராக இருத்தல் கூடும். எனவே, இவருடைய காலம் 13ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி என்று கருதுகிறோம்.

## தனியன் பாடிய ஆசிரியர்

நாதமுனிகள் நாலாயிரப் பிரபந்தங்களை வெளிப்படுத்திய காலம் முதல், வைணவ ஆசாரியர்கள் பலரும், ஆழ்வார்களின் பக்தி விசேடங்களிலும் அருட்பாசுர நயங்களிலும் ஈடுபட்டு, வெவ்வேறு காலங்களில் ஆழ்வார்களுக்குச் சிறப்புப் பாயிரமாக ஒவ்வொரு பாடல் பாடினார்கள்.

இவ்வாறு பாடிய பாடல்கள் தனியன் என்பது சம்பிரதாயம். இவை வெண்பா அல்லது கட்டளைக் கலித்துறையாக இருக்கும். இவ்வாறு பாடிய பாடல்களின் தொகை 50. இவற்றுட் பெரும்பாலானவை 10 - 12 ஆகிய நூற்றாண்டுகளில் பாடப் பட்டவை.

ஒவ்வொரு பாடலும் இன்ன ஆசாரியர் பாடியது என்ற குறிப்பு அப்பாடல் தலைப்பில் உள்ளது. வைணவர்கள், தங்கள் பிரபந்தங்கள் ஆசாரியர்கள் பற்றிய சம்பிரதாயங்களை நன்கு போற்றி வந்துள்ளமையால், இப்பாடல் வரலாறுகள் உண்மையென்றே கொள்ளத்தக்கன. பல ஆசாரியர்கள் வடமொழியில் நூல் செய்திருந்து, தமிழில் நூல் எதுவும் செய்யாதவர்கள்; எனினும், அவர்கள் பாடிய ஒவ்வொரு தனியன் பாடல் மட்டும் நமக்குக் கிடைக்கிறது. அவர்களுள், 13ஆம் நூற்றாண்டுக்கு உரியோராகத் தெரிபவர் பின்வரும் ஒருவரே.

**பரகாலதாசர்**

இவர் பெரியவாச்சான் பிள்ளையின் மாணாக்கருள் ஒருவர். அவர் குமாரரிடம் கிரந்தங்களைப் பயின்றார்.

இவர் செய்த நூல் ஆசார்ய இருதயத்துக்கு (முந்துற முன்ன) வியாக்கியானம். தென்கலை இயல் சாத்து நான்காம் பாடல் இவர் பாடியது:

மங்கை நகர்வாழி வண்குறைய லூர்வாழி
செங்கை யருள்மாரி சீர்வாழி – பொங்குபுனல்
மண்ணித் துறைவாழி வாழி பரகாலன்
எண்ணில் தமிழ்ப்பா இசை.

## வார்த்தா மாலை

வார்த்தைகளைத் தொடுத்த மாலை என்பது பொருள். இந்நூல் 1882இல் அச்சாயிற்று. "ஸ்ரீ வைஷ்ணவர்கள் அவசியம் அறியவேண்டும் அர்த்தங்களையும் அனுஷ்டானங்களையும் பெண்களும் பேதைகளும் எளிதாக அறிந்து உஜ்ஜீவிக்கும் படி ஸ்ரீமந் நாதமுனிகள் தொடக்கமானார் அருளிச் செய்த வார்த்தாமாலை"* என்பது இதன் முகப்பேடு. முதல் பக்கத்தில் பின்பழகிய பெருமாள் ஜீயர் சேர்த்தருளிய வார்த்தாமாலை என்று உள்ளது. நூல் முடிவில், பின் பழகிய பெருமாள் ஜீயர் திருவடிகளே சரணம் என்றிருப்பதால், அவரே செய்தார் என்று சிலர் கருதியதுண்டு. அவர் சேர்த்தருளியிருக்கலாம்; செய்தருளி னார் என்பது பிழை. நாதமுனிகள் தொடக்கமுள்ள வார்த்தை களின் திரட்டானது, வடக்குத் திருவீதிப்பிள்ளை பெரிய வாச்சான் பிள்ளையோடு முடிகிறது. ஆகவே, இவர்கள் கால மாகிய 13ஆம் நூற்றாண்டு இறுதியே இது தொகுக்கப்பெற்ற காலம்; பின்பழகிய பெருமாள் காலமும் இதுவேயாகும்.

இத்திரட்டிலுள்ள வார்த்தைகள் 456. வார்த்தை என்பது, ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் ஓர் ஆசாரியர் தம் மாணாக்கருக்கு உபதேசித்த அல்லது விளக்கம் சொன்ன அல்லது வினாவுக்கு விடையளித்த சொற்கள். இவை சில சமயம் ஒரே வரியாயிருக் கும், சில சமயம் மூன்று பக்கம்கொண்ட பல வாக்கியங்களா யிருக்கும்; 441ஆம் வார்த்தை ஏழு பக்கமுள்ளது. இவை குரு பரம்பரையில் வரும் வரலாறுகளிலும், வியாக்கியானங்களிலும் காணப்படும் கருத்துக்களில் பொறுக்கிச் சேர்த்தவையே. இவ் வாறு சேர்க்கப்பட்டவை, பொருள் தொடர்பினால் சேர்க்கப் பட்டுள்ளன; காலமுறைப்படியோ, ஆசார்யர் பரம்பரைக் கிரமமாகவோ, சேர்க்கப்படவில்லை. இவற்றின் சாரமான கருத்து, ஆசாரியர் பணியும் அடியவர் பணியுமே ஒருவனை முத்தி பெறுகைக்குத் தகுதியுடையவனாக்கும் என்பது. எடுத்துக் காட்டாகச் சில வார்த்தைகளைக் கீழே தருகிறோம்.

---

* 1889இல் சித்ரகூடம் கந்தாடை திருவேங்கடாசாரியர் அச்சிட்ட இராமானுச நூற்றந்தாதி வியாக்கியானத்தில் காணும் விளம்பரத்தில் பின்பழகிய பெருமாள் சேர்த்தருளின வார்த்தாமாலை என்றே காணப்படுகிறது.

அகங்காரமாகிறது ஒரு சர்ப்பம்; மமதையாகிறது அதனுடைய உடல்; ராகத்துவேஷங்கள் அதனுடைய பற்கள். இப்பற்களை முறிக்கத் தீரும் (11ஆம் வார்த்தை). பற்றிற்றெல் லாம் பற்றி அவனையும் பற்றுகை பக்தி; விடுவதெல்லாம் விட்டுத் தன்னையும் விடுகை ப்ரபத்தி (67). எம்பெருமானை அபேட்சிக்கை வார்த்தாமாத்ரம்; ஸ்ரீ வைஷ்ணவர்களை அபேட்சிக்கை கையைப் பிடிக்கை; ஆசாரியனை அபேட்சிக்கை காலைப் பிடிக்கை (191). எல்லா ஆசாரியர்களுடைய அபிப் பிராயமும், எல்லா ஆழ்வார்கள் திருவுள்ளக் கருத்தும், எல்லா வேதாந்தங்களுடைய கதியும், எல்லா சாஸ்திரங்களுடைய நினைவும், நிரூபித்த அளவில், ஆசாரிய கைங்கரியமே பரம ப்ரயோஜனம் என்று நஞ்சீயர் பிள்ளைக்கு அருளிச் செய்தார் என்று வடக்குத் திருவீதிப்பிள்ளை அருளிச் செய்வர் (220). ஆசாரிய கைங்கரியம் தனக்குப் பசி விளைந்துண்கை; பாகவத கைங்கரியம் தாய்க்குச் சோறிடுகை; பகவத் கைங்கரியம் ஒப்பூண் உண்கையும் மூப்புக்குச் சோறிடுகையும் என்று வடுகநம்பி அருளிச் செய்வர் (221). ஸ்ரீ வைஷ்ணவர்களை நெகிழ நினைத்தானாகில் நிலம் பிளந்தால் இழையிட ஒண்ணாதாப் போலேயும், மலை முறிந்தால் தாங்க ஒண்ணதாப் போலேயும், கடலுடைந்தால் அடைக்க ஒண்ணாதாப்போலேயும், இதுவும் அப்ரதிக்ரியம்மாய் இருப்பதொன்று (277). பிணச்சோறும் மணச்சோறும் விலைச் சோறும், புகழ்ச்சோறும் பொருட்சோறும் எச்சிற்சோறும் - இவை ஆறும் தியாஜ்யம்; மற்றைச் சோறிறே வைஷ்ணவ னுண்ணும் சோறு என்று தீர்த்தங்குடி ஜீயர் அருளிச்செய்வர் (292). ஒரு பிராம்மணன் இறப்பில் நின்றும் விழ, அவ்வளவிலே சிறியாச்சான் அங்கேற எழுந்தருள, பிராமணன், “ஆச்சான், பெருமாள் என்னைத் தள்ளினபடி கண்டீரே!” என்ன, “அங்ஙனன்றுகாண், கர்மத்தாலே நாம் விழுந்தோம், பெருமாள் எடுத்தான் என்று நினைத்திராய்” என்றருளினார் (369). சோமா சியாண்டான் அகளங்க நாட்டாழ்வான் காலத்திலே ஒரு இடையன், பால் களவு கண்டானென்று கட்டியடிக்க, பிள்ளை அத்தைக் கேட்டு மோகித்து விழுந்தாராம் (375). அனந்தாழ்வான் போசலராஜ்யத்துக்கு எழுந்தருளுகிறபோது, கட்டுப் பிரசாதம் கட்டிக் கொண்டுபோய் ஒரு இடத்திலே அவிழ்த்தவாறே, அடைய எறும்பாயிருந்தது. இத்தைக் கண்டு அனந்தாழ்வான் பயப்பட்டு, ‘எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனும்

ஆவேனே' என்றருளிச் செய்தவரிலே சிலராய் வந்துதிப்பர்கள்; இப்படியே கொண்டுபோய்த் திருமலையிலே வைத்து வாருங் கோள் என்றருளிச் செய்தார் (384). துறையறிந்திழிந்து, முகமறிந்து கொடுத்து, வினையறிந்து பரிமாறி, நினைவறிந்து அடிமை செய்ய வேண்டும் (405).

நாராயணனைப் பற்றி நாடுறலாயிருக்க, நகரங்களைப் பற்றி நரகவாசிகளா யிருக்கிறார்கள்; எம்பெருமானைப்பற்றி ஏற்றம் பெறலாயிருக்க ஏழைகளைப்பற்றி இளிவரவுபடி நின் றார்கள்; ஸ்ரீ வைஷ்ணவர்களைப்பற்றிச் சீர்மைபடலாயிருக்க, சில்வானரைப் பற்றிச் சீர்கேடராகா நின்றார்கள்; ஆசாரிய னைப் பற்றி அமிர்தபானம் பண்ணலாயிருக்க, அஜ்ஞானரைப் பற்றி அனர்த்தப்படா நின்றார்கள்; மந்திரத்தைப்பற்றி மாசறுக்க லாயிருக்க, மமதையைப் பற்றி மறியா நின்றார்கள்; நியந்தாவான ஆசாரியன் சந்நிதியிலே வர்த்தித்தல், நியமவானான சிஷ்யன் சந்நிதியிலே வர்த்தித்தல் செய்தலல்லது, நியதனாகைக்கு வழி யில்லை (154).

நூலிறுதியில் ஆளவந்தார் பரமபதம் அடைந்த வரலாறும், அடைந்தபின் இராமானுசர் அங்கு வந்துசேர்ந்த வரலாறும் கூறும் பகுதி சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த நூல் 11 - 13 நூற்றாண்டுகளில் வழங்கிய வைஷ்ணவ சமய நூல்களின் உரைநடைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். பல பகுதிகள் சிறந்த உணர்ச்சிமிக்க பேச்சின் வலிவுடைய நடை யாக உள்ளன. தமிழ் வசனநடையை ஆராய்வோருக்கு இது ஒரு சிறந்த கருவூலமாகும். அடுத்தபடி, இவற்றைப் பயிலும் போது எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான சமயக் கருத்துக் களையும், வாழ்க்கைக்கு இன்றியமையாத பண்புகளையும் யாரும் உணர்ந்து கொள்ளமுடியும்.

ooo

அத்தியாயம் 10

# சைன இலக்கியம்

## முன்னுரை

வர்த்தமான மகாவீரர் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வட நாட்டில், தோன்றி அஹிம்சா பரமோ தர்ம: என்ற தமது சித்தாந்தத்தைப் பரப்பினார். நாளடைவில் அவர் போதித்த சின தருமம் தெற்கு நோக்கிப் பரவி, ஐந்நூறு ஆண்டுகளில் தமிழ்நாட்டிலும் அணுகிவந்தது. பின்னும் ஐந்நூறு ஆண்டு களில் பல்லவ, பாண்டிய நாடுகள் முழுமையும் வியாபித்து, பிற ஆத்திக சமயங்களுக்கு இடையூறு செய்யவே, அப்பர், சம்பந்தர் போன்ற அருளாளர் தோன்றி, சமணர் குறும்படக்கிச் சைவத்தை மீண்டும் நிலை நாட்டினார்கள். இந்த நிலையில் அவர்களுக்கு அரசியல் ஆதிக்கம் தடைப்பட்டுப் போகவே, அவர்கள் தங்கள் கவனத்தை மொழித்துறையில் திருப்பினார்கள். திருப்பிய போது, அவர்கள் செயல் மூன்று துறைகளில் வளர்ந்தது. ஒன்று, சைனசமய இலக்கியமும் சரித்திரமும் இயற்றுதல்: சூளாமணி, சிந்தாமணி போன்றன இத்தகைய முயற்சி. இரண்டு, தமிழ் மொழிக்கான இலக்கணங்கள் செய்தல்: இலக்கணங்களாகவும் உரைகளாகவும் அவர்கள் செய்த நூல்கள் மிகப்பல. மூன்று, நீதி நூல்கள் நல்லொழுக்க போதனைக்குரியவை இயற்றுதல்: நாலடி அறநெறிச்சாரம், பழமொழி, சிறுபஞ்சமூலம், ஏலாதி, திணைமாலை நூற்றைம்பது முதலான பல நூல்கள் இத்துறைக் குரியவை. இவ்வாறு அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் - சைவ சமயாசாரியரான அப்பர் சம்பந்தர் காலம் தொடங்கி ஏறக்குறைய ஓர் ஆயிரம் ஆண்டுகள் இவர்களுடைய இலக்கிய பணி நிகழ்ந்து வந்திருக்கிறது. 16ஆம் நூற்றாண்டில் மண்டல புருடர் செய்த சூடாமணி நிகண்டே சைனப் புலவர்களுடைய

இறுதியான இலக்கியப் படைப்புப் போலும்; இதன்பின் இவர்கள் செய்ததாக, சிறப்பான எந்த நூலும் தெரியவில்லை.

இவ்வாறு அமைந்துள்ள சைனசமய நூல் வரலாற்றில் சில நூற்றாண்டுகளில் சிறப்புடைய நூல்கள் செய்யப்பெற்றிருந்தன, சில நூற்றாண்டுகளில் சிறப்புடைய நூல்கள் எழவில்லை; இது இயல்பே.

ஒரு கருத்தை மட்டும் இங்குச் சுட்டிக்காட்டி விட்டு மேலே செல்வோம். சைனர், தமிழ்நாட்டில் முற்றிலும் அன்னியர்; அன்னிய சமயத்தினர் என்பது மட்டுமல்ல; இனத்தாலும், நாகரிகத்தாலும், மொழியாலுமே முழு அன்னியர். ஆதியில் இவர்கள் தமிழ் நாட்டுக்குள் பிரவேசித்தபோது - கி.பி. முதல் நூற்றாண்டு அல்லது அதற்குப்பின் - இந்நாட்டில் மொழியும் நாகரிகமும் சமயமும் மிகவும் வளர்ந்து சிறப்போடு ஓங்கிவரக் கண்டார்கள்; கண்டு இவற்றோடு தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டார்கள். இதுவே இவர்களுடைய சிறந்த பண்பு. சங்க இலக்கிய காலம் முடிகிறவரையில் - அதாவது கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முடிய - சைனர் தமிழ்நாட்டில் எவ்விதச் சிறப்புக்கும் உரியராயிருந்ததில்லை. அருகன், சினன், முக்குடைச் செல்வன் என்ற பெயர்கள் ஆட்சிக்கு வரவில்லை. சங்கநூற் புலவர் வரிசையில் சைனர் ஒருவர்கூட இல்லை. நிகண்டன் கலைக் கோட்டுத் தண்டினார் என்ற ஒரு புலவர் நற்றிணையில் ஒரு பாடல் பாடி இருக்கிறார். நிகண்டு செய்தமையால் இவர் நிகண்டன் என்று பெயர் பெற்றார் என்பதே மரபு. ஆனால் சிலர் சமணத்தின் ஒரு பிரிவாகிய நிர்க்கந்தம் என்பதைக் குறிக்கின்ற நிர்க்கந்தன் என்ற பெயர் இவ்வாறு நிகண்டன் என்று மருவி இருக்கிறது என்று கருதுவர். ஆனால் எட்டுத்தொகை தொகுத்த காலத்தில் எந்தச் சைனருடைய பெயரும் காணப்பட்டிலது. எந்தச் சைனப் புலவரும் அக்காலத்தில் இருந்ததில்லை. ஆதலால் நிர்க்கந்தன் என்ற சொல்லுக்கு அக்காலத்தில் ஆட்சி இல்லை என்பது தெளிவு.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் மதுரையில் பாண்டியர் வலி குன்றியபோது, களப்பிரர் என்ற அன்னிய இனத்தார் படையெடுத்து மதுரையைக் கைப்பற்றிச் சிலகாலம் ஆண்டு வந்தார்கள் என்பது சரித்திரம் சொல்லுகின்ற செய்தி. 'களப்பிரன் என்னும் கலியரசன்' என்று சாசனம் கூறும். இவர்கள் ஆட்சிக்

காலம் தமிழ்நாட்டில் துன்பம் மிகுந்த ஓர் காலம்: சமயம், நாகரிகம், மொழி எல்லாம் சிதைவுண்டன. இவர்கள் சமணர்கள். இவர்களுடைய மொழி பிராகிருதமும் பாலியும்; தமிழன்று. இக்காலத்தில்தான் தென்தமிழ் நாட்டில் சமணம் புகுந்து, வைதிக சமயத்தைத் தாழ்த்தி, தான் ஓங்கி வளர்ந்தது. ஆதலால், இதற்குப் பிற்பட்ட காலமே சமண நூல்கள் தமிழில் தோன்றிய காலம் என்று கருதவேண்டும்.

இந்த நூற்றாண்டுக்கு வரும்போது இரண்டே நூல்கள் எழுந்திருப்பதை நாம் காண்கிறோம். ஒன்று அறநெறிச்சாரம் என்ற சிறப்பான நீதி நூல். மற்றது யசோதர காவியம் என்ற எச்சிறப்பு மில்லாத ஒரு சைனப் புராணக்கதை; இச்சரித்திரம், சைன நூலாசிரியரின் கருத்து வறட்சிக்குத் தக்க எடுத்துக் காட்டாயுள்ளது. இவ்விரண்டையும் இந்த அத்தியாயத்துள் ஆராய்வோம்.

## முனைப்பாடியார்

அறநெறிச்சாரம் என்ற சிறப்பான சைனநூல் செய்தவர் முனைப்பாடியார். இந்நூல் 226 வெண்பாக்கள் கொண்டது. முதற்பாடல் தற்சிறப்புப் பாயிரமாக நூற்பெயர் கூறுவது; அன்றி 223, 224ஆம் பாடல்களும் நூற்பெயர் கூறுவன. முறையே "ஈண்டு அறநெறிச் சாரத்தைத் தோன்ற விரிப்பன்; அறநெறிச் சாரத்தை ஓதியும் கேட்டும் உணர்ந்தவர்க்குக் கருதியவை கோடல் எளிது" (223); "மெய்ந்நூல் அறநெறிச்சாரம் அறிந்தான் வீடு எய்தும்" என்ற தொடர்களைக் காண்க. அறநெறிச் சாரத்திலிருந்து 34 செய்யுட்கள் புறத்திரட்டினுள் தொகுக்கப்பட்டுள்ளன.

### நூல்

இந்த நூலானது சைன சமயத்தாருக்குரிய சிறப்பு ஒழுக்கங் களையும் மக்கள் வாழ்க்கைக்குரிய பொதுவான அறநெறி களையும் வரையறை செய்து கூறுகிறது; இவ்வாறு அறநெறி களின் சாரம் ஆயிற்று. இந்நூல் வெண்பாவால் ஆனது. இதற்கு முன் செய்யப்பெற்றிருந்த அருங்கலச்செப்பு என்ற சைன நூலின் விளக்கம் என்று கருதுவர். அருங்கலச் செப்பு 181 குறள் வெண்பாக்கள் உடையது. செப்பில் சுருக்கமாக உள்ள சைன சமயச் செய்திகள் பல, இச்சாரத்தில் விளக்கமாகக் கூறப்பெற் றுள்ளன என்பர். இக்கருத்து முழுமையும் பொருந்துவதன்று.

*அறநெறிச்சாரம் மிகவும் சிறப்பான நீதி நூல்களில் ஒன்று. நூல் கேட்டற்கு உரியார் யார், அல்லார் யார் என்பதை ஆசிரியர் பாயிரப் பகுதியில் கூறுகிறார். இப்பகுதி ஓரளவு தமிழ்நாட்டில் கல்வி பற்றிய கருத்துக்கள் எவ்வாறு வளர்ந்து செல்கின்றன என்பதை அறிய உதவுகின்றது. சைனசமயச் சார்பாயிருந்த போதிலும்கூட, பொது நிதிகளும், ஆசாரங்களும், நல்லொழுக்க விதிகளும் இதில் கூறியுள்ள அளவு நயம்பட வேறெந்த நூலிலும் கூறவில்லை. ஆசிரியரான முனைப்பாடியார் தமக்கு முன்வந்த எல்லா நூல்களிலும் நிரம்பத் தோய்ந்து அவற்றின் சாரமாகப் பாடுகிறார்.*

**தானே தனக்குப் பகைவனும் நட்டானும்;**
**தானே தனக்கு மறுமையும் இம்மையும்;**
**தானே தான் செய்த வினைப்பயன் துய்த்தலால்,**
**தானே தனக்குக் கரி. (174)**

*என்பது இவர் பாடல்; இது,*

**தானே தனக்குப் பகைவனும் நட்டானும்;**
**தானே தனக்கு மறுமையும் இம்மையும்;**
**தானே தான் செய்த வினைப்பயன் துய்ப்பானும்;**
**தானே தனக்குத் தலைவனு மாமே. (2228)**

*என்ற திருமந்திரப் பாடலை எடுத்து அமைத்துக் கொண்டிருப்பது வெளிப்படை.*

*பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இவர் நன்றாகத் தோய்ந்தவர். பல பாடல்கள் நான்மணிக்கடிகை என்று ஐயுறும் வண்ணம் அமைந்துள்ளன; 53, 72, 116, 133, 147, 205 காண்க. மிகப் பலவான பாடல்கள் பழமொழி நானூறு போல அமைந்து, இறுதிவரியில் சிறு பழமொழி ஒன்றைக் கொண்டு முடிவன: 43, 55, 61, 79, 84, 124, 144, 173 காண்க. பின்வரும் அறநெறிச்சாரப் பாடலும் இதே கருத்தும் சொல்லும் கொண்ட அவ்வையார் பாடலும் (நல்வழி) பெரும்பான்மை ஒன்றாகவே உள்ளன:*

**ஒருநாளும் நீதரியாய், உண் என்று சொல்லி**
**இருநாளைக்கு ஈந்தாலும் ஏலாய், – திருவாளா:**
**உன்னோடு உறுதி பெரிதெனினும், இவ்வுடம்பே**
**நின்னோடு வாழ்தல் அரிது. (159)**

ஒருநாள் உணவை ஒழிஎன்றால் ஒழியாய்
இருநாளைக்கு ஏல் என்றால் ஏலாய், – ஒருநாளும்
என்நோ அறியாய், இடும்பைகூர் என்வயிறே!
உன்னோடு வாழ்தல் அரிது.

இரண்டையும் ஒப்பு நோக்குக.

"வழிபடாது ஓடும் மனனே - தடுத்தென்னை விரைந்து நீ நாடிக்கொள் மற்றோர் இடம்" (189) என்பது, "இடரீர் உமக் கோர் இடம் நாடிக்கொண்டு - நடவீரோ காலத்தால்" என்ற நக்கீரர் கயிலைபாதி காளத்திபாதி யந்தாதிப் பாடலைத் தழுவியது. "ஊசல் கயிறற்றால் தாய் தரையே யாந் துணையாம்" என்பது சிவஞானபோதம் 8ஆம் சூத்திரத்தின் வார்த்திகம்; இங்கு "ஊசல் கயிறற்றால் போலக் கிடக்குமே" என்பது 105ஆம் பாட்டு. முன்னிலைப் பன்மையாக நீம்* என்ற சொல்லாட்சி காணப்படுகிறது (226): இது 'கள்' விகுதி பெற்று 'நீங்கள்' என்று இன்றும், பிற்கால இலக்கியங்களிலும், பயில்கின்றது.

பல்காலும், பலராலும் பயிலப்படுகின்ற சிறப்பு அமைந்த பாடல்கள் பல: காய்தல் உவத்தல் (23), பல கற்றோம் யாம் (44), இறந்த பிறப்பில் (61), சென்றநாடு எல்லாம் (70), மருவிய காதல் மனையாளும் (189), பிறர்க்கின்னா செய்தவன் (96), எள்ளிப் பிறர் உரைக்கும் இன்னார் சொல் (102), இன்சொல் விளை நிலனா (113).

இந்நூலின் ஐந்தாம் பாடல், நூல் உரைத்தற்குத் தகுதி யிலாதார் இன்னவர் என்று கூறுகிறது:

பிள்ளை, பேய், பித்தன், பிணியாளன், பின்நோக்கி,
வெள்ளை, களி, விடமன், வேட்கையான், – தெள்ளிப்
புரைக்கப் பொருள் உணர்வான், என்று இவரே நூலை
உரைத்தற்கு உரிமை இலாதார்.

இப்பாடல் அடுத்த நூற்றாண்டில் தோன்றிய சீவசம் போதனை என்ற சைன சமய நூலுள் 35ஆம் பாடலாக அப்படியே எடுத்தமைக்கப் பெற்றிருக்கிறது. உலக மூடம் என்ற இடத்து

---

* நான் நாம் நாங்கள், தான் தாம் தாங்கள் என்பனபோல நீ நீம் நீங்கள் என்ற ஆட்சி இருந்ததென்று அறிஞர் கருதுவர். நீம் என்ற இச்சொல் இந்த நிலையைக் குறிக்கிறது. இன்றும் நீம் என்று பேச்சு வழக்கில் சோழநாட்டில் சில பகுதிகளில், உணர்ச்சி வசப்பட்டுக் கோபமாய்ப் பேசும் நிலையில் சிலரிடம் காணப்படுகிறது என்பது எடுத்துக்காட்டு.

மாமாங்க மாடலையும் ஆசிரியர் குறிப்பிடுகிறார்; மாமாங்க மாடல் சைவருடைய சடங்கு. 195 - 203 ஆகிய 9 பாடல்களால் செவி, கண், மூக்கு, நா, கால், தலை, நெஞ்சு ஆகிய உறுப்புக்கள் செய்யத்தக்கன இவை, தகாதன இவை என்று கூறுகின்றார். அதிட்டம் பொய் என்பார். பட்டாங்கு என்ற சொல் இருமுறை வருகிறது (42,45): சாத்திரம் என்பது இங்கு பொருள். இச் சொல் சிலப்பதிகாரம், அவ்வையார் பாடிய நல்வழி, குலோத் துங்கசோழன் கோவை ஆகிய நூல்களிலும், தொல்காப்பிய உரையிலும் அருகிப் பயிலும் சொல். மகடூஉ முன்னிலையாக ஒரு பாடலும் நெஞ்சம் முன்னிலையாக 9 பாடல்களும் அமைந்துள்ளன.

> தலைமகனிற் றீர்ந்தொழுகல் தான்பிறரிற் சேறல்
> நிலைமையில் தீப்பெண்டிற் சார்தல் – கலனணிந்து
> வேற்றூர் புகுதல் விழாக்காண்டல் நோன்பெடுத்தல்
> கோற்றொடியார் கோளழியு மாறு.

என்ற அறநெறிச் செய்யுளும்,

> கள்ளுண்டல் காணிற் கணவற் பிரிந்துறைதல்
> வெள்கில ளாப்பிற ரிற்சேறல் – உள்ளிப்
> பிறர்கருமம் ஆராய்தல் தீப்பெண் கிளைமை
> திறவது தீப்பெண் தொழில்.

என்று சிறுபஞ்சமூலச் செய்யுளும் ஒத்தியல்கின்றன என்பது வையாபுரிப்பிள்ளையவர்கள் குறிப்பு.

### ஆசிரியர்

இந்நூல் செய்தார் முனைப்பாடியார் என்று வழங்குகிறது. அப்பரும் சுந்தரரும் பிறந்த நடுநாடு திருமுனைப்பாடி நாடு என்று வழங்கும். இவ்விருவர் புராணத் தொடக்கத்திலும் சேக்கிழார் இந்நாட்டின் சிறப்பைத் தனியே எடுத்துக் கூறு கிறார் (பெரியபுராணம் 147, 1272, 1281). இவ்வாசிரியர் வரலாறு தெரியவில்லை. ஒருகால் இவர் இந்நாட்டில் பிறந்தவராய் இருக்கலாம். இந்நூலின் இறுதிப்பாடல் முனைப்பாடி என்ற பெயரைக் குறிப்பிடுகின்றது.

> முனைப்பாடி யானை, சூர் முக்குடைச் செல்வன் –
> தனைப்பாடி வந்தோர்க்குத் தந்த பரிசில்,
> வினைப்பாடு கட்டழித்து, வீட்டு இன்பம் நல்கி,

'நினைப்பாடி வந்தோர்க்கு நீம் ஈக!' என்றான்
நிறைவிளக்குப் போல இருந்து.

இதனால் முனைப்பாடி என்பது ஓர் ஊர் என்று கருத இடமாகிறது. இவ்வூரில் அருகன் கோயில் இருந்ததுபோலும். ஆசிரியருக்கு இவ்வூர்ப் பெயர் காரணமாக முனைப்பாடி என்ற பெயர் அமைத்துக் கொள்ளப்பட்டதோ என்று கருத வேண்டி இருக்கிறது. இவ்வாசிரியர் சைனர் என்பது வழக்கு. அதற்கேற்ப, பாடல்கள் 1, 225, 226 ஆகியவை அருகதேவனைக் குறிப்பிடுகின்றன. இவற்றுள் 225ஆம் பாடல் சைன மரபின்படி அருகனைச் சிவனென்றே சொல்வதும் கருதத்தக்கது.

அவன்கொல், இவன்கொல், என்று ஐயப்படாதே,
சிவன்கண்ணே செய்ம்மின்கள் சிந்தை: – சிவன்தானும்,
நின்றுகால் சீக்கும் நிழல்திகழும் பிண்டிக்கீழ்
வென்றசீர் முக்குடையான் வேந்து.

இங்கு, "சிவன் கண்ணே செய்ம்மின்கள் சிந்தை - அவனே பிண்டிக்கீழ் வேந்து" என்று குறிப்பிடுகின்றமையால், இவர் சைனத்திற்கும் சைவத்திற்கும் ஒரு சமரசம் நிலைநாட்ட முயன் றாரோ என்றும் கருத இடம் தருகிறது. அன்றியும், இவர் முந்தையோர் பாடல்களை எடுத்தாண்டிருப்பதும் இதற்கு ஆதரவு தருகின்றன. திருமந்திரம், நல்வழி, நக்கீரர் நூல் என்பன முன்னே காட்டினோம். சிறப்பான சைனர் நூல்கள் பிறசமயத்து நூல்களை எடுத்து ஆள்வது மரபன்று. இவர் காலத்தில் சைனம் வலிகுன்றி வந்து ஏனைய வைதிக சமயங்கள் ஓங்கி வந்ததை இவர் தம் கண் முன்னே கண்டிருந்தார். ஆகவே, தாம் நூல் செய்ய முற்பட்டபோது, தம் நூலை ஓரளவு சைன சமயச் சார்பு அதிகம் வெளிப்படாமலும், பெரும்பான்மை அனைவரும் ஒப்புக் கொள்ளத் தக்கவாறு சிறந்த நல்லொழுக்கக் கருத்துக்களே செறியும்படியும், திட்டமிட்டுச் செய்திருக்கிறார்.

சைன சமயத்திற்குரிய உலகமூடம், தேவமூடம், பாசண்டி மூடம் என்ற மூன்றையும் சில பாடல்களில் (13-18) குறிப்பிடு கிறார். இவை மட்டுமே சைனக் கோட்பாடுகள். இங்கு காட்டிய சில பாடல்கள் நீங்க, ஏனைய யாவும் பொது நல்லொழுக்கக் கருத்துக்களே. இந்நூலுக்கும் அருங்கலச் செப்புக்கும் தொடர்பு இல்லை என்று யாம் கருதுகிறோம்.

இனி, இந்நூலானது மிகவும் சிறந்த இலக்கியச் சுவை யுடையது. ஆசிரியர், மகளிர் ஒழுக்கத்தை ஏழு பாடல்களில் (89-95) விளக்கி உரைக்கிறார். இவை சிறப்பான தமிழ் மரபில் அமைந்துள்ளனவே அன்றி, சைன மரபை ஒட்டிப் பெண்டிரைப் பழித்தல் என்ற கருத்தைத் தெரிவிக்கவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. இதே நூற்றாண்டில் பெண்டிரைப் பழிக்க வென்றே யசோதர காவியம் தோன்றியிருக்க, இச்சைன ஆசிரியர் பழிக்காது நூல் செய்திருப்பது பாராட்டுதற்குரியது. நல்லொ ழுக்கக் கருத்துக்களை இவர் திட்டமிட்டே போதிக்கின்றார் என்று முன்னமே சொன்னது இதனால் வலியுறுகின்றது.

ஆசிரியர் பெரிதும் நகைச்சுவை பொருந்தியவர் போலும். தம்மையே குறிப்பிடும்போது, திருவாளா (117, 189) பண்பாளா (165) என்று விளிக்கிறார். உயிரைச் சோற்றூர்திப்பாகன் என்பார் (122). செல்வம் உடையார் தொண்டு பூண்டு பல உரைப்பதெல் லாம் 'வயிற்றுப் பெருமான் பொருட்டு' என்று சொல்வார் (164). இரப்பாரே வள்ளல்கள்: ஏனெனில் இவர்கள் தமக்கு ஒன்று ஈயும் உயிர்களுக்கு எல்லாம் இம்மைப் புகழும், இனிச் செல்கதிப் பயனும் தருகிறார்கள் என்கிறார் (221).

**காலம்**

புறத்திரட்டு என்ற பழம்பாடல் தொகை நூலில் இதிலிருந்து 34 பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. புறத்திரட்டின் காலம் 15ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என்று அதன் பதிப்பாசிரியர் வரையறை செய்திருக்கிறார்.* எனவே, அறநெறிச்சாரம் அதற்கு முந்திச் செய்திருக்க வேண்டும் என்பது தெளிவு. அருங்கலச் செப்பின் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு என யாம் கருது கிறோம். அறநெறியின் காலம் 13ஆம் நூற்றாண்டு என்று அறிஞர் முடிவு செய்திருக்கிறார்கள்: இது பொருந்துவதே.

இவர் காலத்தை வரையறை செய்ய அவ்வையார் பாடல் ஒற்றுமை பெரிதும் உதவுகிறது. நல்வழிப் பாடலை மேலே பார்த்தோம். நல்வழி பாடிய அவ்வையாரே கொன்றைவேந்தன் மூதுரை இரண்டும் பாடினார் என்பது வழங்கும் வரலாறு. இதில் முரண் ஏதுமில்லை. இவ்விரு நூல்களையும் பேராசிரியர் தொல்காப்பிய உரையில் குறிப்பிடுவதால், அவர் காலமாகிய

* எமது தமிழ் இலக்கிய வரலாறு, 15ஆம் நூற்றாண்டு நூல் காண்க.

13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திற்கு முற்பட்டவராகிறார் இவ்அவ்வையார்; இவர்காலம் 12ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என நாம் கொள்ளலாம். நல்வழிப் பாடலின் சாரமாகத் தம் பாடலை முனைப்பாடியார் பாடியிருப்பதால் அவருக்குப் பின்வந்தவர் என்பது தெளிவு. எனவே, இவர் காலம் 13ஆம் நூற்றாண்டு என்று கருதலாம். சிவஞானபோதச் சொல் ஒற்றுமையையும் ஆராய்ந்தால், இவர் காலம் 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

13 - 15 நூற்றாண்டுகளில் சாரம் என்ற பெயருடைய சமய நூல்கள், செய்யுளாகவும் உரைநடையாகவும், சைவ வைணவ சமயங்களில் மிகப்பல எழுந்தன என்பதும் இங்கு அறியத் தக்கது.

அறநெறிச்சாரம் 94ஆம் பாடலாகிய 'தலைமகனிற் றீர்ந்தொழுகல்' என்ற பாடல், பொருளதிகாரம் கற்பியலில், 152ஆம் சூத்திர இளம்பூரணர் உரையில் மேற்கோளாக வருகிறது. அவ்விடத்து மற்றொரு மேற்கோள் நாலடியிலிருந்து இதற்கு முன் பெய்யப்பட்டுள்ளது. அங்குள்ள தொடர்களை நோக்கும் போது, இம்மேற்கோள் பிற்கால இடைச்செருகல் எனக் கருதுமாறு உள்ளது. இளம்பூரணர் உரையேட்டு வரலாற்றை ஆராயும்போதும், இக்கருத்து வலியுறுகின்றது. ஆதலால், அறநெறிச்சாரத்தின் காலம் 13ஆம் நூற்றாண்டு எனப் பிற வகையால் கொள்ளும் முடிவு இளம்பூரணர் உரையில் இந்நூற் பெயர் காணப்படுவதால் மாறுபடாது. இளம்பூரணம் உரைப் பிரதியில் குறைநிரப்ப வேண்டி நச்சினார்க்கினியத்திலிருந்து எடுத்த பல பகுதிகளுள் உள்ளன. அறநெறிச்சாரத்தை 14ஆம் நூற்றாண்டினரான நச்சினார்க்கினியர் காட்ட, 13ஆம் நூற்றாண்டினரான பேராசிரியர் காட்டவில்லை என்பதும் கருதத் தக்கது.

## பதிப்பு

முதல் பதிப்பு 1903இல் திரிசிரபுரம் தமிழ்ப் பண்டிதர் தி.ச. ஆறுமுக நயினாரால் திருச்சிராப்பள்ளியில் வெளியிடப்பட்டது. அது பிழை மலிந்த பதிப்பு: எனினும், பதிப்பாளர் பின்வரும் குறிப்பு எழுதியிருந்தமை பாராட்டற்பாலது: "இந்நூலை விரைவில் வெளியிட வேண்டி நேர்ந்தமையால், தக்காரெடுத்து

ஒழுங்குபடுத்தி வெளியிடற்கு இது ஒருவாறு பயன்படக் கூடு மெனக் கொள்ளத்தக்கது." பின்னர் 1905இல் திருமணம் - செல்வகேசவராய முதலியார் பல ஏடுகளைக் கொண்டு ஒப்பு நோக்கி நூற்பொருளைப் பாகுபாடு செய்து அதற்கேற்பச் செய்யுள் வரிசையை மாற்றி அச்சிட்டார். பாயிரப் பகுதியாகிய 10 பாடல்களை மட்டும் மாற்றவில்லை. இவைபோல, ஏனை யவும் பத்துப் பத்துப் பாடல் கொண்ட அதிகாரங்களாகவும் அமைந்திருத்தல் கூடும். இப்பதிப்பில் புதுத்தலைப்புகளும், குறிப்புரைகளும் உள்ளன. பின்னர் மர்ரே கம்பெனியின் திருத்த மான பதிப்பு, 1959.

## யசோதர காவியம்

### முன்னுரை

சங்க இலக்கியம் என்பது இன்னதென்ற வரையறை புலப்படாதிருந்த காலத்தில், எட்டுத்தொகை பத்துப்பாட்டு பதினெண்கீழ்க்கணக்கு ஐம்பெருங்காப்பியம் ஆகிய யாவும் சங்க இலக்கியமே என்ற கருத்து இருந்தது. நாளடைவில் கால அறிவு வளர்ந்து, முதல் இரு தொகுதிகளுமே சங்க இலக் கியங்கள், ஏனையவை காலத்தால் பிற்பட்டவை என்ற தெளிவு பிறந்தது. இவற்றுள், ஐம்பெருங்காப்பியம் என்று சிலப்பதிகாரம் முதலான நூல்களை நாம் வழங்கிய போதிலும்கூட, பண்டைக் காலத்தில் இப்பெயர் இருந்ததில்லை. நன்னூலின் முதல் உரை காரரான மயிலைநாதரே (14ஆம் நூற்றாண்டு) முதன் முதலில் ஐம்பெருங்காப்பியம் என்று வழங்கியவர். காப்பியம் என்ற பெயரின் கருத்தையும், ஐம்பெருங்காப்பியம் என்று சொல்லப் படுகின்ற ஐந்து நூல்களிலும் காப்பிய இலக்கணம் பொருந்தி யிருக்கின்றதா என்பதையும், இங்கு நாம் ஆராயப்புகவில்லை.

ஐம்பெருங்காப்பியம் என்றதுபோல, ஐஞ்சிறு காப்பியம் என்ற ஒரு வழக்கும் உள்ளது. இலக்கிய வரலாற்றில் இதற்கு ஆதாரம் இல்லை. 1889இல் சூளாமணி பதிப்பித்த சி.வை. தாமோதரம்பிள்ளை பின்வருமாறு பதிப்புரையில் எழுதியிருக் கிறார்: "சீவகசிந்தாமணி முதலிய பெருங்காப்பியங்கள் ஒத்த சிறப்புடைய தமிழில் சமணர் எழுதிவைத்த யசோதர காவியம், உதயண காவியம், நாககுமார காவியம், சூளாமணி, நீலகேசி என்னும் பெயரிய சிறு காப்பியங்களும் உள". இது எளிதில்

கொள்ளமுடியாத ஒரு கூற்று. இங்கு குறிப்பிட்ட ஐந்து நூல்களுள் நாககுமார காவியம் பற்றிய விவரம் எதுவும் தெரியவில்லை; நூலும் அச்சாகவில்லை. உதயண குமார காவியம் என்ற ஒரு சிறு நூல் ஐயரவர்களால் அச்சிடப்பட்டுள்ளது; மிகவும் அற்பமான நூல் என்று அவர்களே கூறியிருக்கிறார்கள். நீலகேசி என்பது முழுமையும் சமய தத்துவ வாதமாகவே உள்ளது; காப்பியம் அன்று. யசோதர காவியத்தைப் பின்னர் ஆராயப் போகிறோம். சூளாமணி ஒன்றுதான் சிறந்த இலக்கியமாயும், காப்பிய இலக்கணங்கள் பொருந்தியதாகவும் உள்ள பெருநூல்; உண்மையில் இது ஐம்பெருங்காப்பிய வரிசையில் வைத்து எண்ண வேண்டியது; ஏனோ அவ்வரிசையில் இல்லை.

ஐஞ்சிறு காப்பியம் என்ற பெயர் கூறும் நூல்கள் சிறு காப்பியமாவதற்கு இரண்டு காரணங்கள் கூறுவர். ஒன்று பொருளமைதியால் சிறுமை, மற்றது அளவால் சிறுமை, நீலகேசி முதலானனவை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் கூறவில்லை; ஒரு பகுதியே கூறுகின்றன. அப்படியே அளவாலும் இவை குறைந்த பாடல்தொகை உடையன. சூளாமணியோ அங்ஙனமன்று; உறுதிப்பொருள் நான்கும் கூறுவது. 2131 பாடல் கொண்டது. இலக்கியச் சுவையாலும் மிக்க சிறப்புடையது. ஆதலால் இது பெருங்காப்பிய வரிசைக்குரியதே அன்றி, சிறு காப்பியமாகாது.

பெருங்காப்பியங்களுக்கு, காவியம் என்றசொல் நூற்பெயரிலேயே அமையப் பெறவில்லை. சூளாமணிக்கும் அப்படியே. நீலகேசிக்கு நீலகேசித்தெருட்டு என்ற பெயரும் வழங்கும். பிற மூன்றின் பெயரிலும் காவியம் என்றசொல் அமைந்திருக்கிறது. காப்பியத் தகுதி இன்மையால், இப்பெயர் சூட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டது போலும்!

### ஆசிரியர்

இந்நூலாசிரியர் பெயரும் வரலாறும் தெரியவில்லை. பிற காப்பியச் சரிதங்களைப் போலன்றி இக்காப்பிய நாயகனான யசோதரன் சரிதம் தமிழில் வேறெந்த நூலிலும் வழங்கவில்லை.

வடமொழியில் யசோதரன் கதை பல இடங்களில் பயில்கிறது. சைன புராணங்களில் மகாபுராணம் என்பது சிறப்புடைய ஒன்று. இது தீர்த்தங்கரர் இருபத்து நால்வர். சக்கரவர்த்திகள்

பன்னிருவர், பலதேவர் வாசுதேவர் பிரதி வாசுதேவர் தனித் தனியே ஒன்பதின்மர் ஆக அறுபத்து மூவர் வரலாறு கூறும். இம்மகாபுராணத்தை ஒன்பதாம் நூற்றாண்டில் ஜினசேனரும் அவர் மாணாக்கர் குணபத்திரரும், பத்தாம் நூற்றாண்டில் மல்லி சேனரும் எழுதினார்கள். மற்றொரு புராணமாகிய உத்தர புராணத்தை இக்குணபத்திர முனிவர் எழுதினார் என்பர். இதனுள் முதல்முதலாக யசோதர சரித்திரம் கூறப்படுகின்றது. இச்சரித்திரத்தில் வடமொழி ஆசிரியருக்கு ஈடுபாடு மிகுதி போலும். பத்தாம் நூற்றாண்டில் பலர் இதை எழுதினார்கள். அவர்களுள் மூவர் செய்தன இங்கு குறிப்பிடத்தக்கன. ஒன்று, சோமதேவ சூரி செய்த யசஸ்திலக சம்புகாவியம் என்ற உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்; இரண்டு வாதிராச சூரி செய்த யசோதர சரிதம்; மூன்று புட்பதந்தர் செய்த யசோதர காவியம். இவை யாவும் பத்தாம் நூற்றாண்டில் செய்யப்பட்டன. பூர்ணதேவரென்பாரும் வடமொழியில் ஒரு யசோதரகாவியம் பாடினார் என்பர். இவற்றுள் வாதிராசருடைய நூலைத் தழுவி இத்தமிழ் நூல் செய்யப்பட்டது என்பது, தமிழ்நூலைப் பதிப் பித்த வேங்கடராமையங்கார் கருத்து; இவ்வடநூல் நான்கு சருக்கமாய் உள்ளது; இக்கதைக்கு மூலம் குணபத்திரருடைய உத்தரபுராணத்துள் இல்லை. ‘வடமொழியில் நாககுமார காவி யம் செய்த மல்லிசேனரே தமிழிலும் உரைநடையில் அக்காவி யம் செய்தமைபோல, இவ்வாதிராசர் இருமொழிகளிலும் நூல் செய்திருக்கலாம்’ என்பது இவருடைய கருத்து; ஆனால் இதற்குப் போதிய ஆதாரமில்லை. தமிழ் நாககுமார காவியம், செய்யுளாகவோ, உரைநடையாகவோ எங்கேனும் இருப்பதாக யாரும் கேள்விப்பட்டதில்லை.

புட்பதந்தர் என்பவர் வடமொழி உத்தரபுராணம் எழுதிய காலம் கி.பி. 965. இவரே யசோதர சரிதம், நாககுமார சரிதம் என்ற இரண்டையும் வடமொழியில் எழுதினார் என்றும் சொல்வர்.

தமிழ் யசோதர காவியம் பலபதிப்பு வெளியாகியிருப்பினும், ஆசிரியர் பற்றிய திட்டமான செய்தி திரு. துரைசாமிப்பிள்ளை பதிப்பில் தான் காணப்படுகிறது. ஆசிரியர் ‘வெண்ணாவலூ ருடையார் வேள்’ என்று ஒரு பாடல் சொல்லுகிறது; இவரது இயற்பெயர் இங்கு சொல்லப்படவில்லை.

புட்பதந்தன் சொன்ன பொருள்சேர் கதை தன்னைத்
திட்பமாய்ச் செந்தமிழிற் செப்பினான் – நட்புடையார்
நண்ணா ரிவரென்ன நாடாக் கொடைக்கையார்
வெண்ணாவ லூருடையார் வேள்.

*இப்பாடல் கா. நமசிவாய முதலியார் சொல்லிய தென்றும், வித்துவான் சண்முகம் பிள்ளையவர்கள் பிரதியிலும் இது காணப்படுகிறதென்றும் இப்பதிப்பாசிரியர் குறிப்பிட்டிருக் கிறார்.*

இதன்படி வடமொழியில் புட்பதந்தர் சொன்ன கதையை வெண்ணாவலூருடையார்வேள் செந்தமிழில் செய்தார் என்று அறிகிறோம். இப்பாடலில் நூற்பெயர் சுட்டப்படாவிடினும், இந்நூல் ஏட்டுப்பிரதியில் இப்பாடல் காணப்பட்டமையால், இதற்குரியதென்று சொல்வது பிழையாகாது. நாவலூர் என் றால் திருநாவலூர் என்று கருதலாமாயினும், வெண்ணாவல் என்றமையால், திருவானைக்காவென்றே கருதவேண்டும். வேறு இவரைப்பற்றி எந்தச் செய்தியும் விளங்கவில்லை. "சமண சமயச் சான்றோர் சிலரை உசாவியதில் கன்னடநாட்டில்தான் இவ்விரு நூல்களும் சிறப்பாகப் பரவியிருந்தன என்கின்றனர்." (துரை சாமிப்பிள்ளை, முகவுரை ப. 14.)

**நூலின் கதைச்சுருக்கம்**

யசோதர காவியக்கதை தமிழ்நாட்டில் அதிகம் பழக்க மில்லாதது. ஆதலால் அதைச் சுருக்கி இங்கு கூறுகிறோம். ஔதேய நாட்டுத் தலைநகரான இராசமாபுரத்தில் மாரிதத்தன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் சண்டமாரிதேவிக்கு நரபலி இடக்கருதி ஆணும் பெண்ணுமான இரட்டையரைக் கொணரும்படி தன் தளபதியான சண்ட தருமனை அனுப்ப, அவன் சென்று நகரில் பிட்சைக்கு வந்த அபயருசி, அபயமதி என்ற இரட்டையரை வலிந்து பிடித்து வந்தான். அவர்கள் அஞ்சாது தெய்வத்தை வாழ்த்திக் கொண்டே மாரிமுன் சென்றனர். அவர் களை வெட்ட அரசன் வாளை யோங்கினான். 'அரசன் வாழ்க என்று உங்கள் வாயால் சொல்க' என்று அந்நகர மாந்தர் அச் சிறுவர்களிடம் சொல்லவே, அபயருசி புன்முறுவலுடன், "இம்மன்னன் பலியிடும் தீயதொழிலை விட்டு அருள்கொண்டு வாழ்வானாக" என்று சொன்னான். அரசன் வாளை நிறுத்தி, அவர்

களது அச்சமின்மையைப் பாராட்டி, அவர்கள் பூர்வ வரலாற்றைக் கேட்க, அபயருசி சொல்வான். இதுவரை முதல் சருக்கம்.

அவந்திநாட்டு உச்சயினி நகரத்து மன்னனாகிய அசோகன் அவன் மனைவி சந்திரமதி ஆகிய இருவருடைய புதல்வனாகப் பிறந்த யசோதரன் அமிர்தமதியை மணந்து யசோமதி என்ற புதல்வனைப் பெற்றான். அசோகன் தன் தலையில் நரை கண்டு துறவியானான். அமிர்தமதி தொழுநோய்கொண்டு குரூபியாயிருந்த யானைப்பாகனோடு கூடாவொழுக்கம் வாழ்ந்தது கண்ட யசோதரன் துறவுபூணக் கருதித் தன் தாயை அணுகி, தன் மனைவியின் பொய்யொழுக்கத்தைச் சொல்ல நாவெழாமல் மறைத்து, தீயகனாக் கண்டதாகச் சொல்லவே, தாய் மாரிக்குப் பலியிட்டு வழிபடுமாறு கூறினாள். பலியிட மனமில்லாத மன்னன் மாக்கோழி செய்து அதைப் பலியிட முற்பட்டான். ஒரு தெய்வம் அக்கோழியினுள் புகுந்து கொள்ளவே, அரசன் பலியிட்டபோது அத்தெய்வம் துடிதுடித்து இறந்தது. அரசன் நடுங்க, அவன் கருத்தறிந்த அமிர்தமதி அவனுக்கும் அவன் தாய்க்கும் நஞ்சூட்டிக் கொன்றாள்.

இனி மூன்றாம் சருக்கம். மன்னனும் தாயும் மயிலும் நாயுமாகப் பிறக்க, வளர்த்தவர்கள் இவற்றைக் கையுறையாக அரசனாயிருந்த யசோமதியிடம் கொடுத்தார்கள். அரண்மனையில் வளர்ந்த மயில் முற்பிறப்பு நினைவால் அமிர்தமதியின் கள்ளக் காதலனின் கண்ணைக்குத்த, அவள் மயிலைக் கல்லால் அடிக்க, குற்றுயிராய்க் கிடந்த மயிலைக் கௌவியெடுத்து நாய் அரசனிடத்துச் செல்ல, மயில் தன்னை நாய்தான் கடித்தது என்று பிழைபடக் கருதி இறந்து, முள்ளம் பன்றியாய் பிறந்தது. அரசன் நாயைக் கொல்ல, நாய் பாம்பாய்ப் பிறந்து, முள்ளம் பன்றியால் மடிந்து, முதலையாய்ப் பிறக்க, அப்பன்றி ஒரு கரடியால் மடிந்து மீனாய்ப் பிறந்தது. மீனைத் துரத்திச் சென்ற முதலை, எதிர்ப்பட்ட அரசன் தாதியை விழுங்க, ஏவலர் முதலையை வதைக்க, முதலையும் மீனும் ஆடாகவும் குட்டியாகவும் பிறந்து பல துன்பங்களையும் அனுபவித்து, பல தீவினைகளையும் செய்துவந்தன. குட்டியாடு அரண்மனையிலிருக்க, தாயாடு எருமையாய்ப் பிறந்து, அரசனுடைய குதிரையைக் கொன்ற காரணத்தால் கொல்லப்பட்டது. குட்டி யாட்டையும் கொண்டு வரச்செய்து, அமிர்தமதி அதையும் கொன்றாள். இரண்டும் கோழிகளாகப் பிறந்தன.

இனி நான்காம் சருக்கம். கோழிகளை வளர்த்தவன் ஒரு முனிவரிடம் தருமம் கேட்டபோது, கோழிகளும் உடன்இருந்து கேட்டன. மகிழ்ச்சியால் அவை கூவ, அங்கு விழித்த மன்னன் தன் உறக்கத்துக்கு இடையூறாக இருந்தன என்று இவற்றைக் கொன்றான். தருமம் கேட்ட புண்ணியத்தால் கோழிகள் அவன் தேவி புட்பாவலியின் கருவில் அபயருசி, அபயமதி என்ற இரட்டைக் குழவிகளாய்ப் பிறந்தன. பின் புட்பாவலிக்கு யசோதரன் பிறந்தான்.

இனி ஐந்தாவது சருக்கம். ஒரு சமயம் யசோமதி வேட்டைக்குச் சென்ற போது எதிர்ப்பட்ட சுதத்தமுனி என்ற முனிவரைப் பார்த்தமையால் வேட்டைக்குப் பிராணிகள் கிடைக்கவில்லையென்று கருதி அவரைக் கொல்ல முயன்ற போது, அவர் இவனை ஆட்கொண்டு உபதேசம் செய்தார். நல்லுணர்வு பெற்ற யசோமதி தன் தலையைக் கொய்து அவர் பாதத்தில் வைக்க முயன்றபோது முனிவர் அவனைத் தடுத்து, யசோதரனும் சந்திரமதியுமே, அபயருசியும் அபயமதியுமாகப் பிறந்தனர் என்று காட்டினார். இச்செய்தியெல்லாம் அபயருசியும் அபயமதியும் மாரிதத்தனுக்குக் கூற, அவற்றைக் கேட்டு அவன் நல்லறிவுபெற்று, தருமத்தைக் கடைப்பிடித்து நற்கதியடைந்தான்.

இக்கதையைப் படிப்பவர்கள் இதை ஏதேனும் ஒரு பிறவி வரலாற்றுக் குறிப்பாகக் கருதவேண்டுமேயன்றி, இதைக் கதையென்று கருதவியலாது. பிறப்பு, வினை, இறப்பு, மீண்டும் பிறப்பு, வினை, இறப்பு என்று இப்படியே நூல் முழுமையும் போய்க் கொண்டிருக்கிறது. ஒருகால் இடையிடையே சின தருமம் விளங்கக்கூடும். ஆனால் இதில் கதைப்போக்கே இல்லை. இதைக் காவியம் என்று சொல்லுவது சொல்லுக்குச் செய்கிற அபசாரம். சைனர் பொதுவாக மொழிகளை மிக்க செம்மையாக ஆராய்ந்து, அரிய இலக்கண நூல்கள் செய்தார்கள். ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்ற பேருண்மையை உணர்த்த வேண்டி, சிறப்பான நீதி நூல்கள் பல செய்தார்கள். ஆனால் அவர்கள் காவியம் என்று எடுத்த இடமெல்லாம் தோல்வி தான். சிறப்பான முத்தமிழ்க் காவியம் என்று பெயர் தாங்கிய சிலப்பதிகாரம் ஒன்று மட்டும் இதற்கு விலக்கு. (இதைச் செய்த இளங்கோவடிகள் சைனரல்லர் என்று கூறத் துணிந்து நாம்

சொல்ல எண்ணுகிறோம். கதைப்போக்குக்காக அவர் அருக தருமத்தைச் சிறப்பித்துக் கூறினார். இதை இவ்விடத்து விரிவாக ஆராயும் நோக்கமில்லை.) மற்றபடி அடுத்த நூல்களாகிய சிந்தாமணி, சூளாமணி, நீலகேசி ஆகிய காவியங்கள் காவியக் கட்டுக்கோப்புச் சிறிதும் உடையன அல்ல. ஆனால் ஒவ்வொன் றும் ஏதோ கதை உடையதாக இருக்கிறது. சிந்தாமணியும் சூளாமணியும், ஆங்காங்கு கவிதைச் சுவையும் செய்யுள் நயமும் உடையனவாய் விளங்குகின்றன. யசோதர காவியமோ எந்தக் கதைப்பண்பும் இல்லாத ஒரு விசித்திரப் படைப்பாக உள்ளது. மூலநூல் இதற்குக் காரணம் என்றால், உண்மை. ஆனால் கதையாசிரியர் ஏன் இந்த நூலைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கேள்விக்கு விடை இல்லை. இத்தகைய இலக் கியப் படைப்புக்களே பிற்காலக் காவிய வளர்ச்சியையும் தரத் தையும் குறைத்து விட்டன என்று கருத வேண்டியுள்ளது.

யசோதரனுடைய கதை சைன மக்களுக்கு மிகவும் உவப் பான ஒரு கதைபோலும். வடமொழியில் மிகப்பலர் இக்கதை யைப் பாடியிருப்பது இதற்குச் சான்றாகும். சைன நூலாசிரியர் பலர் இக்கதையைச் சுட்டியிருக்கிறார்களென்று கூறலாம். திருத்தக்கதேவர் பாடிய நரி விருத்தம், 48ஆம் பாடல் பின்வருவது:

**வரைத்த நாளன்றி வாழ்பவர் இன்மையால்**
**உரைத்த மாட்சி யிலாநரி உற்றகோள்**
**திறத்தின் ஒன்றிலன் ஊனுடை யுண்டியுண்டு**
**இறப்ப வும்நர கத்திடை எய்தினான்.**

இங்கு சுட்டப்பட்ட வரலாறு யசோதர காவியத்துக் கதா நாயகனான யசோதர மன்னன் அவன் தாய் சந்திரமதி ஆகிய இருவர் வரலாறும் என்று, அவ்விருத்தப் பதிப்பாசிரியர் மு. இராகவையங்கார் குறிப்பிட்டிருப்பது காணத்தக்கது.

**நூற்பொருள்**

இந்நூல் முன்பிருந்த பெருங்காப்பியங்களை யொத்த செம்மையான நடை உடையதன்று. உதயணகுமார காவியத்தை யும் இங்கு ஒருங்கு கருதுவோமானால், அதனினும் இது சிறப் பானதெனலாம், அவ்வளவே. ஆசிரியர் நூற்பொருளைப் பின் வருமாறு கூறுகிறார்:

மருவு வெவ்வினை வாயின் மறுத்துடன்
பொருவில் புண்ணியம் போகம் புணர்ப்பதும்
வெருவு செய்யும் வினைப்பயன் இற்றெனத்
தெரிவு றுப்பதும் செப்புத லுற்றதே.

மக்களுக்குத் தீவினை வந்து தொடரும் வழி இன்னதென்று உணர்த்தி, அவ்வழியில் செல்லாது தடுத்து, நல்வினை செய்து அதனால் வரும் புண்ணியத்தையும் போகத்தையும் அடைவிப்பதை நோக்கமாய்க் கொண்டுள்ளது. பொதுவாகச் சைன நூல்கள் யாவுமே வினையை முதன்மையாகக் கருதிச் சொல்வன என்பது உண்மை; எனினும் இந்நூல், வினையுள் சில கருத்துக்களை அதிகம் வலியுறுத்திச் சொல்கிறது. மூன்று கருத்துக்கள் குறிப்பிடத்தக்கன. ஒன்று உயிர்க்கொலை பெரும்பாவம்; மிகவும் கீழான விலங்குப் பிறவியை அடைவிக்கும், மீளா நரகம் புகுவிக்கும். பலியிடுதலும் கொலையேயாகும்; பாவனையாற் செய்வதும் கொலையே; புலாலுண்ணல் கொடிய பாவம். இரண்டாவது, இசையின் பழிப்பு. இசை மக்களை உலக இன்பத்தையே நாடச் செய்வதுடன் தீயவழியில் செலுத்துவதாலும் வெறுக்கத்தக்கது. மேல்நிலைக்கு வர விரும்புவோர் இசையில் மனத்தைச் செலுத்தக்கூடாது. மூன்றாவது, பெண்கள் மனம் தீயவழியையே நாடும்; அவர்களை வெறுக்கவேண்டும். கூடாவொழுக்கம் பஞ்ச பாதகங்களையும் செய்யத் தூண்டும். பெண்களுடன் கூடி வாழ்வதை விட்டொழித்துத் துறவு பூண்டு தருமங்கேட்டு மனிதன் மேல்நிலையை அடையவேண்டும். தருமங் கேட்டலின் பலன் மிகவும் பெரிது. தருமோபதேசம் காதில் விழுந்த விலங்குகளும் அறிவில்லாதிருந்த போதிலும் கூட, புண்ணியம் பெறும், மேல்நிலை பெறும்.

இந்நீதிகள் எக்காலத்துக்கும் பொருந்தும் என்று கருதவியலாது. உயிர்க்கொலையும், புலாலுண்ணலும் உலகில் என்றுமே அறிவுடைய மக்களால் பழிக்கப்படும் செயல்கள். மற்றவை அப்படியல்ல. இவ்வாசிரியர் இசையைப் பழித்திருப்பது ஒரு காலத்திலும் மக்கள் ஒப்புக்கொள்ளக் கூடியதன்று. முத்தமிழில் இசைத்தமிழ் ஒரு சிறந்த பகுதியாய் இருக்கும் நாட்டில், இசை தீமைக்கு இடமாகும் என்ற கருத்தை யாரே ஏற்க முடியும்? உலகில் எல்லா நாடுகளிலும் மனிதனை மேம்படுத்தும் ஒரு சிறந்த கருவியாக இசையைக் கருதி வந்திருக்கின்

றனர். இறைவனே இசைக்கு வசமாவான்; இசைக்கு உருகாதார் மனிதப் பிறவியே இல்லை என்றெல்லாம் சொற்கள் எழுந் துள்ளன. குரூப வடிவும் தொழுநோயுமுடைய அட்டபங்கன் என்ற ஒரு யானைப்பாகன் பாடிய மாளவ பஞ்சமம் என்ற பண்ணைச் செவிமடுத்து உருகிய அமிர்தமதி என்ற அரசி கூடா வொழுக்கத்தில் துணிந்து பஞ்சமா பாதகங்களும் செய்தாள் என்று கதை புனைந்த ஆசிரியர், அதுகொண்டே இசை தீமை யானது என்று கூறுவது ஏற்க ஒண்ணாதது.

இனி, பெண்ணினத்தைக் குறித்து இவர் கூறும் கருத்து, தமிழிலும் மக்களிடையிலும் சைனத்தால் விளைந்த பெருங் கேடு என்றுதான் சொல்லவேண்டும். 'தத் ஜன்மத்தில் ஸ்திரீ களுக்கு மோட்சமில்லை' என்பது சைனர் கோட்பாடு எனவே, எப்போதும் பெண்ணினத்தைப் பழித்துரைப்பது அவர்கள் இயல்பு. இதைக்கேட்டு வைதிக சமயத்தாரும் சில சமயம் பெண்ணினத்தைப் பழித்துரைத்திருப்பதையும் பலபடக் காண் கிறோம். எனினும், காரைக்காலம்மையார், ஆண்டாள் போன் றோர் சரித்திரங்கள், சரித்திர உண்மைகளாயினும், ஒருபுறம் சைனத்தைக் கண்டித்து ஒடுக்கவென்றே தோன்றியவை. திலக வதியார் மங்கையர்க்கரசியார் வரலாறுகளில் சைன சம்பந்தம் உண்டு; ஆனால், மற்ற இருவர் வரலாறுகளில் சைன சம்பந்தம் இல்லை. எனினும், இந்நான்குமே பெண்களின் பெருமையை எடுத்துப் பேசும் முகமாகச் சைனத்தைக் கண்டிப்பன. கொல் லாமை என்ற சிறந்த தத்துவம் சைனத்தில் அமைந்திருந்த போதிலும், இப்படிப்பட்ட பிற்போக்கான கருத்துக்கள் அதில் மலிந்திருந்தமையால், அச்சமயம் மக்களால் ஒடுக்கப்பட்டது இயல்பேயாகும்.

கீழ்த்தரமான காமத்தைக் கூறும் கதைகள் தமிழ்நாட்டில் பல எனினும், காமத்தால் கொடும்பாவம் செய்தவனும் இறை வனுடைய பெருங்கருணையினால் ஆட்கொள்ளப் பெற்றான் என்பதே அவ்வகைக் கதைகளின் முடிவாக இருக்கும். ஆனால், காமத்தால் மனிதன் மேலும் மேலும் கீழ்நோக்கிச் செல்லுவ தையும், அவனுக்கு உய்தி இல்லை என்று முடிப்பதையும் காணும் போது, நம் மனதில் ஓர் அருவருப்பு உணர்ச்சியே எஞ்சி நிற் கிறது. எல்லா வகையாலும் பெண்கள் சிறப்புப் பெற்றிருந்த தமிழ்நாட்டில் இப்படி ஒருவர் 'காவியம்' பாட வந்தது விசித்திர

மான நிலை. மூலநூலின் கதை இதுவென்றால், இவர் ஏன் இக் கதையைப் பாடவேண்டும் என்பது கேள்வி. தாம் கருதிய நீதி களைப் புகட்ட ஆசிரியர் இக்கதையைத் தேர்ந்து கொண் டார் என்றால், இங்குக் கதைப்போக்கும் சம்பவங்களும் மிக வும் கீழ்த்தரமானவை என்பது மட்டும் சொல்லி இப்போது அமைகிறோம். பிறர் நூல்களில் இவ்வளவு கீழாகப்போய் நீதி புகட்டிய வரலாறுகளும் இல்லை, இலக்கியத்தில் பெண்பிறவி இத்துணைக் கீழ்த்தரமாய்ச் சித்தரிக்கப் பெற்றதும் இல்லை.

இந்நூலாசிரியர் சிந்தாமணிக் கருத்துக்களையும் தொடர் களையும் பல இடங்களில் எடுத்தமைத்திருக்கிறார். 'தொல்லை நம் பிறவி எண்ணில் தொடுகடல் மணலு மாற்றா' என்ற சிந்தா மணித் தொடர் (270) இந்நூலில் (39) 'மனித யாக்கை - பண்டு நாம் கொண்டு விட்ட வாரிவாய் மணலு மாற்றா வகையின' எனவரும்.

**இடுக்கண் வந்துற்ற காலை எரிகின்ற விளக்குப் போல**
**நடுக்கமொன் றானு மின்றி நகுகதாம். (50)**

என்பது சிந்தாமணி. இந்நூல் 61ஆம் பாடலைக் காண்க:

**இடுக்கண் வந்துறவும் எண்ணாது எரிசுடர் விளக்கின் என்கொல்**
**நடுக்கமொன் றின்றி நம்பால் நகுபொருள்கூறுக.**

இந்நூற் பாடல்களையும் கருத்துக்களையும் பின்வந்ததாகக் கருதப்படும் மேருமந்தர புராணம் பல இடங்களில் எடுத்தாளு கின்றது.

இசையில் ஈடுபடுவதனால் வருங்கேட்டை விளக்குவது இந்நூலின் நோக்கமாயிருந்தபோதிலும், இந்நூலாசிரியர் இசை யின் பெருமையையே பலவிடங்களிலும் சொல்லுகின்றார். தலைநகரானது இசையாலும் நடனத்தாலும் விஞ்சையர் உலகத் தினை வெல்லும் என்று இவர் கூறமுடிந்ததேயன்றி, உலக இயல்புக்கு மாறாக இசையைப் பழித்துக்கூற இயலவில்லை.

அபயருசி, அபயமதி இருவரையும் சண்டதருமன் பிடித்துச் செல்லும்போது, அபயமதி பெண்ணாதலால் அவள் அஞ்சு வாளோ எனக்கருதி, அவளுக்கு அபயருசி தாங்கள் பெற்ற உபதேசத்தையும், கற்ற சமய உண்மைகளையும், வாழ்க்கை நிலையாமையையும் எடுத்துக் கூறுகின்றான். அவ்விடத்து இரு

வரும் பஞ்ச பரமேட்டி வணக்கம் சொல்லுகிறார்கள். ஐந்து பாடல்களால் சித்தர், அருகர், ஆசாரியர், உபாத்தியாயர், சாது என்ற ஐயர் வணக்கமும் சொல்லப்படுகின்றது.

இயங்கும் உயிர்களைக் கொலைசெய்வது பெரியகொலை யென்றும், இயங்கா உயிர்களான செடி, கொடி முதலியவற் றைக் கொலைசெய்வது சிறிய கொலையென்றும் அருங்கலச் செப்பு கூறும். இந்நூல் பெருகிய கொலை என்று (236) முதல் வகைக் கொலையைக் குறிப்பிடுகிறது.

இனி இந்நூல் கூறும் சில செய்திகள் குறிப்பிடத்தக்கன. ஐப்பசி மாதத்தில் சுக்கிலபட்ச அட்டமி செவ்வாய்க்கிழமை யில் வரும்போது தேவிக்கு விழாச்செய்தல் மிக்கசிறப்பு. சண்ட மாரி ஒரு 'துருத்தேவதை'. மாதரார் வதையினுக்குரியரல்லர். மூழ்ந்த வினை முனியுமெனின் முனியலரும் உளரோ? தன்னுயி ருக்குத் தீங்கு நேர்ந்தாலுங்கூட மன்னர் உயிர்க்கொலை செய்ய லாகாது. பிற அருகநூலார் கூறுவதுபோல, இவரும் இறுதிப் பாடலில் முடிவான கதியைச் சிவகதி என்றே கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பின்வருவன இந்நூற் பாடலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக் களாகும். இளவேனில்:

செந்தளிர் புனைந்த சோலைத் திருமணி வண்டுந் தேனும்
கொந்துகள் குடைந்து கூவுங் குயிலொடு குழுமி யார்ப்பச்
செந்துணர் அளைந்து தென்றல் திசைதிசை சென்று வீச
வந்துளம் மகிழ்ந்த தெங்கும் வளர்மதுப் பருவம் மாதோ.

**அறத்தின் உயர்வு**

அருள்புரி மனத்தர் ஆகி ஆருயிர்க்கு அபயம் நல்கிப்
பொருள்கொலை களவுகாமம் பொய்இவை புறக்கணித்திட்டு
இருள்புரி வினைகள்சேராது இறைவனது அறத்தை எய்தின்
மருள்செய வருவது உண்டோ வானவர் இன்பம் அல்லால்.

**காலம்**

நேராக இந்நூலின் காலத்தை அறிவதற்கான சான்றுகள் இல்லை. இது மக்களால் ஓரிலக்கியமாகப் பயிலப் பெறவில்லை. பண்டையுரையாசிரியர்களாலும் எடுத்தாளப் பெறவில்லை. காரணம், இதனிடம் எவ்விதக் காவியத் தன்மையும் இல்லாமை

போலும். ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றென்று கருதப்பெறும் உதயணகுமார காவியம் என்பது பதினைந்தாம் நூற்றாண்டுக் குரியதென்று அந்நூற்றாண்டு வரலாற்றில் விளக்கியிருக்கிறோம். கிடைக்கிற மற்ற இரு சிறுகாப்பிய நூல்களான சூளாமணியும் நீலகேசியும் காலத்தால் மிக முந்தியவை. இம்மூன்றுக்கும் இடைப்பட்ட நூல் இவ்யசோதர காவியமென்று கருதத் தோன்றுகிறது.

இந்நூலுக்கு மூலமான வடமொழி நூல்களின் காலம் இதற்கு மேலெல்லையை ஓரளவு வரையறுக்கிறது. தொடக் கத்தில் புட்பதந்தர் ஓர் யசோதர காவியம் செய்தாரென்று குறிப் பிட்டோம். அப்படியே சோமதேவசூரி செய்த யசஸ்திலக சம்புவும் வாதிராசசூரி செய்த யசோதர காவியமும் இவ்வரசன் கதையைக் கூறுமென்றும் சொன்னோம்.

இவர்களுடைய காலம் பத்தாம் நூற்றாண்டாகும். வாதி ராசர் கதையே இத்தமிழ் நூலுக்கு மூலம்; பூரணசந்திர நயினார் தம் பதிப்பில் பல இடங்களில் பொருள் விளக்கத்தின் பொருட்டு, வாதிராசரின் வடமொழிப் பாடல்களை எடுத்துத் தருகிறார். வாதிராசருக்குக் கதை கிடைப்பதற்கான மூலம் குணபத்திரர் எழுதிய உத்தர புராணமும், ஹரி பத்திரர் எழுதிய யசோதர சரிதமுமாகும். இவர்கள் காலமெல்லாம் பத்தாம் நூற் றாண்டாகவே, தமிழ்நூலின் காலம் இதற்குப் பிற்பட்டதாகும்.

இனி இந்நூல் பாடப்பெற்றுள்ள விருத்தப்பாவும் மற்றொரு குறிப்பைத் தருகிறது. 320 பாடல் கொண்ட இந்நூலில் அறுசீர் விருத்தம் 173, கலிவிருத்தம் 98, சந்தக்கலி விருத்தம் 40, எழுசீர் விருத்தம் 9; அறுசீர் விருத்தங்கள் யாவும் விளம் மா மா என்ற ஒரேவகைச் சீர்களைக் கொண்டவை. இவற்றைப் பார்க்கும் போது ஒரு கருத்து எழுகிறது. விருத்தப்பாக்கள் தேவார காலம், நாலாயிரப் பிரபந்த காலம் தொடங்கி விரிவும் செம்மையும் அமைந்த யாப்புக்களாக உருவம் பெற்றுவிட்டன. அதாவது, ஏழாம் நூற்றாண்டு தொடங்கிப் பலவகை விருத்தப்பாக்கள் எழுந்திருந்தன. பெருங்காப்பியம் செய்த ஆசிரியர்கள் இவற்றை அமைத்திருக்கிறார்கள். கம்பர், திருத்தக்கதேவர், ஒட்டக்கூத்தர், சேக்கிழார் ஆகியோரைக் குறிப்பிடலாம். சூளாமணி, நீலகேசி ஆகிய நூல்களும் கூறத்தக்கவை. எனினும், செம்மையான யாப் பமைதியும் ஓசையும் பெறாத காப்பியக் கலித்துறை என்ற

*கலிநிலைத்துறையும் இக்காவியங்கள் அனைத்திலும் பயன் படுத்தப்பட்டுள்ளது. கலிநிலைத்துறை என்பது சீரும் ஓசையும் தெளிவில்லாத பாட்டு. சிந்தாமணி, சூளாமணி, நீலகேசி, குண்டலகேசி முதலான நூல்களின் கடவுள் வாழ்த்து இந்த யாப்பிலேயே பாடப்பட்டுள்ளது. இது ஐஞ்சீராக வருகிற நான்கடிகள் கொண்ட பாடல். அடிகள் மா - மா - கனி - மா - மா என்ற சீர் அமைப்புக் கொண்டவை, பின்வரும் முதற்பாடல் களை உதாரணமாகக் காண்க.*

மூவா முதலா உலகம்மொரு மூன்றும் ஏத்தந்
தாவாத இன்பம் தலையாயது தன்னின் எய்தி
ஓவாது நின்ற குணத்தொண்ணிதிச் செல்வன் என்ப
தேவாதி தேவன் அவன்சேவடி சேர்தும் அன்றே.

*என்பது சிந்தாமணி; தொடர்ந்து 34 பாடல்கள் இதே யாப்பு.*

வென்றான் வினையின் தொகையாகிவி ரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த உணர்வின்னொழி யாது முற்றுஞ்
சென்றான் திகழும் சுடர்சூ ழொளி மூர்த்தி யாகி
நின்றான் அடிக்கீழ்ப் பணிந்தார்வினை நீங்கி நின்றார்.

*என்பது சூளாமணி; தொடர்ந்து 6 பாடல்கள் இதே யாப்பு.*

முன்றான் பெருமைக்கண் நின்றான்முடிவு எய்து காறும்
நன்றே நினைந்தான் குணமேமொழிந் தான்த னக்கென்று
ஒன்றானும் உள்ளான் பிறர்க்கேயுறு திக்கு ழாந்தான்
அன்றே இறைவன் அவன்தாள்சரண் நாங்கள் அன்றே.

*என்பது குண்டலகேசி.*

நல்லார் வணங்கப் படுவான்பிறப் பாதி நான்கும்
இல்லான் உயிர்கட்கு இடர்தீர்த்துஉயிர் இன்பம் எய்துஞ்
சொல்லான் தருமச் சுடரோன்எனுந் தொன்மை யின்னான்
எல்லாம் உணர்ந்தான் அவனேயிறை யாக ஏத்தி.

*என்பது நீலகேசி. யாப்பருங்கல விருத்தியானது பிங்கலகேசி அமிர்தபதி ஆகிய இறந்துபோன நூல்களின் முதல் பாட்டும் இவ்விதமே வருமென்று கூறுகிறது.*

குற்றங்கள் மூன்றுமிலனாய்க் குணங்கட்கி டன்னாய்.

என்பது அமிர்தபதித் தொடக்கம். இங்கெல்லாம் நாம் காண்பது, அடியின் மூன்றாம் சீர் கனிச்சீர். இந்த யாப்பின் இலக்கணம் யாருக்குமே விளங்கியதில்லை. ஐயரவர்கள் மிகவும் திருத்தமாக மூன்றுமுறை சிந்தாமணி பதிப்பித்தும், அங்கு நூல் முழுமையும் பாடல்களைச் சீர்பிரிக்காமலே பதிப்பித்துள்ளார். காரணம், இவ்வகைப் பாடல்களைச் சீர்வரையறை செய்ய அன்று இயலாதிருந்தமை. சூளாமணி பதிப்பித்த தாமோதரம் பிள்ளையும் சீர் பிரிக்காமல் பதிப்பித்துள்ளமையும் இக்காரணம் பற்றியே. சிந்தாமணி முதன்முதல் சீர் பிரித்துப் பதிப்பிக்கப் பெற்றது, சைவசித்தாந்த மகாசமாஜப் பதிப்பில்தான் (1941)*. முதலில் தோன்றிய காப்பியங்களில் இப்பாடல் மிகுதியாய்க் காணப்படுகிறது. கம்பராமாயணத்திலும் பெரியபுராணத்திலும் கூட இவ்யாப்பு நிரம்பக் காணப்படுகிறது.❖ இக்காவியங்கள் 12ஆம் நூற்றாண்டோடு முடிகின்றன. ஆனால் சைனகாவியம் என்று பெயர் சூட்டியிருக்கின்ற யசோதர காவியத்துள் இப்பாடல் ஒன்றுகூட இல்லை. இது கொண்டு இந்நூல் 12ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதென்றும் 13ஆம் நூற்றாண்டில் செய்யப்பெற்றிருக்கலாம் என்றும் சொல்கிறோம். சோழர் ஆதிக்கம் ஓங்கி, சைவ இலக்கியம் பெருகி வளரவும், சைன இலக்கியம் அருகிச் சுருங்கவும் தொடங்கிய காலம் இது என்று சொல்லலாம்.

---

* இப்பதிப்பு மிகவும் திருத்தமுடைய பதிப்பு. பல இடங்களில் பாடல்கள் ஐயரவர்கள் பாடத்திலிருந்து மாறுபடும்; சில இடங்கள் நச்சினார்க்கினியர் உரையை ஒட்டி ஏட்டிலிருந்து ஏற்ற மூலங்கள் அமைக்கப் பெற்றன. இந்நூலை வையாபுரிப் பிள்ளையவர்கள் பதிப்பித்தகாலை, அவர்களுக்கு ஐந்து ஓலைச்சுவடிகளைப் படிக்கும் பணியை யாம் ஏற்றிருந்தோம். அச்சமயம் முற்காட்டியவை போன்ற பாடல்களில் சீர்வரையறை செய்வதற்கு அவர்கள் பட்ட கஷ்டம் பெரிது. வரையறைக்கு ஆதாரம் செவிப்புலன் ஒன்றே; செய்யுளின் ஓசை ஒன்றே வரையறைக்குத் துணைசெய்வது. இன்று, அவ்வரையறை ஒருவர் செய்தபின் எளிதாய்த் தோற்றலாம். ஆனால் அன்று ஐயரவர்கள் கூட வரையறை செய்யவியலாத காலம். ஐயரவர்கள் பதிப்புக்கு இது குறைவாகாது. சீர் பிரிப்பதிலிருந்த கஷ்டத்தையே குறிப்பிட்டோம். உடனிருந்த எம்போல்வாருக்கே இது எத்துணைச் சிரமம் என்பது தெரியும்.

❖ பிற்காலத்தில் கச்சியப்ப சிவாசாரியர் தாம் பாடிய கந்தபுராணத்தில் இந்த யாப்பைப் பயன்படுத்தியிருக்கிறார். இது பெருநூலாதலாலும், பெரியபுராணத்தை முன்மாதிரியாகக் கொண்டு இவர் காவியம் பாடினாராதலாலும், இங்ஙனம் இருத்தல் இயல்பே.

**பதிப்பு**

1. 1887இல் காஞ்சி பாகுபலி நயினார் முதற்பதிப்பு அச்சிட்டார் என்பர்.

2. 1908இல் தில்லையம்பூர் வேங்கட ராமையங்கார் பதிப்பு. மூலம் மட்டும்; 320 பாடல். நூல் 61 பக்கம், அகராதிவகை 19 பக்கம். ஆங்கில முன்னுரை. சைன சமய விளக்கம் யசோதரன் சரிதம் முதலியன 120 பக்கம்.

3. 1944இல் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை பதிப்பு விரிவுரையுடன். 330 பாடல். இறுதிப்பாடல் ஆக்குவதேதெனில் என்பது; இது திருத்தக்கதேவர் செய்த நரிவிருத்தத்தின் இறுதி யிலும் மேருமந்தர புராண இறுதியிலும் காணப்படுகிறது. இது நரிவிருத்த நூலுக்குரியதன்று என்பது தெளிவு.

4. 1965இல் வீடூர் பூர்ண சந்திர நயினார் பதிப்பு. 320 பாடல். துரைசாமி பிள்ளைப் பதிப்பில் சமயக் கொள்கைகள் மாறாக எழுதப்பட்டிருக்கின்றன என்று கருதி இவர் புதிதாக வேறுரை எழுதி வெளியிட்டார். பிற பதிப்புக்கள் சருக்கம் ஐந்து எனக் கொண்டபோதிலும், இவர் ஓலைச்சுவடியில் ஐந்தாம் சருக்கம் தனியே இன்மையாலும், வடமொழியில் நான்கே இருப்பதாலும் தாமும் நான்கே கொண்டதாக எழுதியிருக்கிறார். 1940இல் வே.மு. சீனிவாச முதலியார் தாம் இந்நூலை உரையுடன் வெளி யிடுவதாக விளம்பரம் செய்தார்; நூல் வெளியானதாகத் தெரியவில்லை; சில பாடல்கள் உரையுடன் தமிழ்ப்பொழிலில் வெளிவந்தன.

○○○

அத்தியாயம் 11

# பிரபந்த இலக்கியம்

## முன்னுரை

பழமையாக வருகின்ற பிரபந்தங்களின் மரபில் இக்காலத்திலும் சில பிரபந்தங்கள் தோன்றியிருக்கின்றன. அகப்பொருள் நூலாகிய கோவை என்ற பிரபந்தவகை, நெல்வேலி வென்ற சீர் நெடுமாறன்மீது பாடப்பெற்ற பாண்டிக்கோவையோடு* தொடங்குகிறது. 9ஆம் நூற்றாண்டில் எழுந்த திருச்சிற்றம்பலக் கோவையார் மிகவும் பிரசித்தமானது; இது சைவத் திருமுறை களில் ஒன்றாகவே உள்ளது. இந்த வரிசையில் பதின்மூன்றாம் நூற்றாண்டுக்குரிய கோவைப் பிரபந்தங்களாக இரண்டு நூல்கள் தெரிகின்றன. ஒன்று, மூன்றாம் குலோத்துங்கசோழன் மீது பாடப்பெற்ற குலோத்துங்கசோழன் கோவை; இந்த நூற் றாண்டின் முதல் சில ஆண்டுகளில் செய்யப்பெற்றது. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. மற்றது, தஞ்சாக்கூரில் வாழ்ந்த தஞ்சைவாணன் மீது பொய்யாமொழிப் புலவர் பாடிய கோவையாகும். இக்கோவை, நம்பியகப்பொருள் காட்டும் துறைகளுக்கு இலக்கியமாக எழுதப்பெற்றது என்பர். இது பெரிதும் ஆட்சியிலுள்ள நூல்.

கோவை போலவே உலாப்பிரபந்தமும் தமிழில் மிகவும் பெருமையுடையது. 8ஆம் நூற்றாண்டில் சேரமான் பெருமாள் ஆதியுலாவாகிய திருக்கைலாய ஞானஉலா பாடினார். இதுவும் சைவத் திருமுறைகளில் சேர்ந்துள்ளது. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மூன்று சோழ அரசர் மீது ஒட்டக்கூத்தர் பாடிய உலாக்கள் இலக்கியத்துறையிலும் சரித்திரத் துறையிலும்

---

* இதன் காலம் நூற்றாண்டு ஏழா ஒன்பதா என்று வரையறை செய்ய வேண்டியுள்ளது.

சிறப்பானவை. அடுத்து இந்நூற்றாண்டில், சங்கர சோழன் உலா என்ற ஓர் உலா நூல் எழுந்திருக்கிறது. இச்சோழன் மூன்றாம் குலோத்துங்க சோழனுடைய தம்பியெனப் பெறுகிறான்; இதுவும் ஒட்டக்கூத்தர் பாடிய உலாக்களையொப்ப, சரித்திரத்துறையில் சிறப்பான இடம் பெறுதற்குரியது.

11ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழில் பரணிப் பிரபந்தங்கள் தோன்றியிருக்கின்றன. இன்று நமக்குக் கிடைத்துள்ள பரணி களில் காலத்தால் பழமையானது. முதற்குலோத்துங்க சோழன் வென்ற கலிங்கத்துப் போரைச் சிறப்பித்துப் பாடிய கலிங்கத்துப் பரணியாகும். இதையன்றி, முதல் இராசேந்திர சோழன் (1012 - 44) கிருஷ்ணையாற்றங் கரையிலிருந்த கொப்பம் என்ற ஊரில் மேலைச் சாளுக்கிய அரசனான ஆகவமல்லனை வெற்றி கொண் டதைச் சிறப்பித்த கொப்பத்துப் பரணியும், வீரராசேந்திரன் (1065 - 70) கூடல் சங்கமத்தில் அச்சாளுக்கியரை வென்ற கூடல் சங்கமத்துப் பரணியும் இதற்கு முன் எழுந்தவையாகும். இவை நமக்குக் கிடைக்கவில்லை. பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுந்தது தக்கயாகப் பரணி. இந்த பரணிப் பிரபந்த மரபில் இரணியவதைப் பரணி என்ற ஒரு சிறப்பான நூல் பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றியது. இதன் ஆசிரியர் பெயர் தெரிய வில்லை; எனினும், இது மிக்க சுவை பொருந்திய ஒருநூல் என்பது நன்கு விளங்குகிறது.

கி.பி. 10 முதல் 13 வரை உள்ள நூற்றாண்டுகள் சோழருடைய பராக்கிரமங்கள் மிகுந்த காலம். தஞ்சாவூரில் பல்லவரின் கீழ் அடங்கி இருந்த ஒரு சிற்றரசனான விசயாலயன் தனிக்கொடி பறக்கவிட்ட காலமாகிய கி.பி. 845 முதல் சோழநாடு எழுச்சி பெற்றது. இம்மன்னர்கள் சோழநாட்டைச் சூழ்ந்துள்ள நாடு களை ஒன்றன்பின் ஒன்றாக வென்று தங்கள் ஆதிக்கத்துக்குக் கொண்டு வந்தார்கள். இதன் விளைவாக எதிர்த்தோரிடம் போர்கள் அடிக்கடி ஏற்பட்டது இயல்பே. அன்றியும், வடக்கில் சாளுக்கியரும் தெற்கில் பாண்டியரும் அவ்வப்போது பூசல் விளைவித்துக் கொண்டிருந்தார்கள். பெரும் போர்களும் சிறு பூசல்களும் ஏற்பட்ட வண்ணம் இருந்தன. இவை வலி மிகுந்த முதலாம் இராசராசன், இராசேந்திரன், முதல் குலோத்துங்கன், மூன்றாம் குலோத்துங்கன் முதலியோர் காலத்தில் சோழநாட் டிற்குப் பெருவெற்றியையும் கொண்டாட்டத்தையும் தந்தன.

புலவர் பலர் அரசனோடும் படைகளோடும் போர்க்களங்களுக்குச் சென்று பல காட்சிகளை நேரில் கண்டிருக்கிறார்கள். இதன் பயனாகவே சோழர் ஆட்சிக் காலத்தில் போரை வருணிக்கின்ற பரணி நூல்கள் பல எழுந்தன. பிற்காலத்தில் எழுந்தவை, தத்துவ நெறியில் அஞ்ஞானப் போரைக் குறித்தனவான அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி, பாசவதைப் பரணி முதலாயின. இரணியவதைப் பரணியும், கதை புராணக் கதையாயினும், தக்கயாகப்பரணிபோல உண்மையான போரை வருணிப்பது.

பொதுவாக இந்நூற்றாண்டுப் பிரபந்தங்களைப் பற்றி ஒரு கருத்துக் குறிப்பிடுதல் தகும். மேலே சொல்லப்பட்ட நான்கு நூல்களில் தஞ்சைவாணன் கோவை ஒன்றுமே அதிகம் வழங்குவது. மற்ற நூல்கள் வழங்கவில்லை. சங்கர சோழனுலாவும், இரணியவதைப் பரணியும் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியாயின: கற்போர் கண்ணில் பட்டதில்லை போலும். குலோத்துங்க சோழன் கோவை, மு.ரா. அருணாசலக் கவிராயரால் நெடுங்காலத்துக்கு முன்னமே அச்சிடப்பெற்றது. யாவும் மிக்க சிறப்புடைய இலக்கியங்கள். இன்னும் அதிகமாகத் தமிழர் விரும்பிப் பயிலத்தக்கவை.

## குலோத்துங்கசோழன் கோவை

### மூன்றாம் குலோத்துங்கசோழன்

இக்கோவையின்* பாட்டுடைத் தலைவன் பற்றிக் கருத்து வேற்றுமைகள் நிரம்ப ஏற்பட்டுள்ளன. ‘கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்’ என்று பழம் பாடலொன்று கூறும். இவ்வொட்டக்கூத்தர் செய்த உலாக்கள், பிள்ளைத்தமிழ் கிடைக்கின்றன. ஆனால் கோவை அந்தாதி கிடைக்கவில்லை. அவர் குலோத்துங்கன் கோவையும் நாலாயிரக் கோவையும் செய்தார் என்பது ஒரு வரலாறு; அவை இரண்டும் கிடைக்கவில்லை.❖ முதலில் இக்கோவை அவர் செய்ததென்று அறிஞர்

---

* அடுத்ததான சங்கரசோழன் உலா பற்றிய கட்டுரையையும் உடன் படித்தால், பரம்பரை குறித்த எல்லாச் செய்திகளும் அதனுள் விளக்கப் பெற்றிருக்கக் காணலாம்.

❖ கண்டன் கோவை என ஒரு கோவை இருந்ததென்று தனிப்பாடல்களால் தெரியவருகிறது; கண்டன் - இரண்டாம் இராசராசன். இக்கோவையும் இன்று கிடைக்கவில்லை. இதை ஒட்டக்கூத்தர் பாடியிருத்தல் கூடும்.

சிலர் கருதினர். ஆனால் கூத்தர் வாழ்ந்தது விக்கிரமசோழன் (1118 -1136), குலோத்துங்கசோழன் II (1133 - 1150), இராசராசன் II (1146 - 63) ஆகிய மூன்று சோழர் காலம். குலோத்துங்க சோழன் கோவை ஒட்டக்கூத்தரைப் போற்றிய இரண்டாம் குலோத்துங் கனைப் போற்றுவதன்று, மூன்றாம் குலோத்துங்க சோழனைப் போற்றுவது. இவன் காலம் 1178 - 1218. இராசராசன் காலத் திலேயே இப்புலவர் மிக்க முதுமையடைந்திருந்தார் என்பது வரலாறு; அக்காலத்திலேயே இவர் ஆயுள் முடிந்திருக்கும். மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் இவர் வாழ்ந்தார் என்பது சற்றும் பொருந்தாமை தெளிவு.

இனி, குலோத்துங்கசோழன் கோவை பற்றிக் கருத்து வேற்றுமை பெரிதும் நிலவுகிறது. மு. இராகவையங்கார் போன் றோர் இதன் பாட்டுடைத் தலைவன் மூன்றாம் குலோத்துங்க சோழன் என்று பன்முறை எழுதியிருக்கிறார்கள். ஆனால் சோழர் வரலாறு எழுதிய சதாசிவ பண்டாரத்தார், இவன் சோழ அரசர் பரம்பரைக்குரியவன் அல்லன், வேறு கொங்குநாட்டுச் சோழன் என்று எழுதுகிறார். எனவே, இக்கருத்துக்களை ஆராய்ந்து, முடிவு செய்துகொண்ட பின்னரே கோவை நூலுக்குள் நாம் புகமுடியும்.

இக்கோவை மூன்றாம் குலோத்துங்கன் மீது பாடப்பட்ட தென்பதே பலர் கருத்து. பல பாடல்கள் இவனைச் 'சங்கமராசன் புதல்வன் குமார குலோத்துங்கன்" என்று குறிப்பிடுகின்றன. இச்சங்கமராசனுக்கு மூன்று புதல்வர்கள்: நல்லமன், குமார குலோத்துங்கன், சங்கரசோழன் என்போர்; இக்குலோத்துங்கன் குமார மகீதரன் என்றும் சொல்லப் பெறுகிறான். (ஒரு பாடல் (64) இவனைச் சங்கமன் முன்னோனென்று கூறுகிறது; சங்கமன் என்றசொல் சங்கரன் என்றிருக்க வேண்டும்.) சங்கரன் இவன் தம்பி; சங்கரன் மீது 'சங்கரசோழன் உலா' என்ற பிரபந்த மொன்று செய்யப் பெற்றுள்ளது. அடுத்து அது ஆராயப்பெறும். அதனுள் இவர்களது வமிச பாரம்பரியம் முன்காட்டியவாறு விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது. 1163இல் இறந்த இரண் டாம் இராசராசனுக்குப் பின்னும் மூன்றாம் குலோத்துங்கன் பட்டமெய்திய 1178க்கு முன்னும் அரசாண்டோர் பற்றிக் கிடைத் துள்ள சரித்திர அறிவில் சிறிது குழப்பமுண்டு. இடையில் அரசாண்டவன் இரண்டாம் இராசாதிராசன்; இவன் இராச

ராசனுக்கு நேர் வாரிசு அல்லன். இந்த நிலையில் இக்கோவையின் பாட்டுடைத் தலைவன் இம்மூன்றாம் குலோத்துங்கன் என்ற கருத்தைச் சதாசிவ பண்டாரத்தார் மறுத்தெழுதியிருக்கிறார்.*

"இவன் இரண்டாம் இராசாதிராசன் தம்பி என்று சிலர் கூறுகின்றனர். அதற்குக் கல்வெட்டுக்களிற் சான்றுகளின்மை யின் அஃது ஏற்றுக்கொள்ளத்தக்கது அன்று. சங்கரசோழன் உலாவில் சொல்லப்படும் சங்கமன் மக்களான நல்லமன், குமார மகீதரன் ஆகிய இருவரும் முறையே இரண்டாம் இராசாதி ராசனும் மூன்றாம் குலோத்துங்கனுமாயிருத்தல் வேண்டுமென்று கூறுவர் சிலர். அவ்வுலாவில் கூறப்பெற்ற சங்கமனும் அவன் மக்களான நல்லமன் குமாரமகீதரன் சங்கரன் என்போரும் கொங்கு நாட்டிலிருந்த கொங்குச் சோழர் ஆவர்; சங்கமன் என்ற பெயர் அவன் வீரசைவனாயிருத்தல் வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றது. சங்கரசோழன் உலாவும் குலோத்துங்க சோழன் கோவையும் கொங்கு நாட்டிலிருந்து கிடைத்தவை. அவ்வேட்டுப் பிரதிகள் தஞ்சை அரண்மனைப் புத்தகசாலை யிலும் சோழநாட்டிலும் இல்லாமை குறிப்பிடத்தக்கது. எனவே, அவை சோழர்களின் வரலாற்றாராய்ச்சிக்கு ஏற்றுக்கொள் ளத் தக்கவையல்ல. இரண்டாம் இராசாதிராசன் எதிரிலிப் பெருமாள் எனவும் அவன் தந்தை நெறியுடைப் பெருமாள் எனவும் வழங்கப் பெற்றனர் என்பது பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டினால் அறியப்படுகிறது. அப்பெயர்களுள் எதுவும் சங்கரசோழன் உலாவிலும் குலோத்துங்கசோழன் கோவை யிலும் காணப்படவில்லை. அன்றியும் நெறியுடைப் பெருமாள் என்பான் விக்கிரமசோழன் பெயரன் என்று அக்கல்வெட்டுக் கூறுகின்றது. அச்செய்தியும் உலாவில் சொல்லப்படவில்லை. ஆகவே சங்கரசோழன் உலாவில் கூறப்பெற்ற சங்கமன், குமார மகீதரன் என்போர் சோழநாட்டை ஆட்சிபுரிந்த சோழமன்னர் அல்லர் என்பது தேற்றம்."

இவ்வாசிரியர் இங்கு கூறியுள்ள கருத்து ஒன்றேனும் பொருந்தத்தக்கது அன்று. அண்ணன் அரசனாயிருக்கும் போது, இளவரசனான தம்பியைக் குமாரன் என்பது இயல்பு. குலோத்துங்கன் பெயரால் அமைந்த ஊரைக் குமாரகுலோத்

* பிற்காலச் சோழர் வரலாறு II 1954, பக்கம் 144. இவர் கருத்தைக் குறித்த ஒரு விளக்கத்தைப் பக்கம் 379இல் உள்ள குறிப்பில் காண்க.

துங்கச் சோழச் சதுர்வேதி மங்கலம் என்று குறிப்பிடுகிறது. கோவை சிறப்பிக்கும் குமார குலோத்துங்கனே மூன்றாம் குலோத்துங்கன் என்பதற்கு இது மிகச்சிறந்த சான்று. குமார என்ற அடைபெற்ற குலோத்துங்கன் வேறு எவனும் இலக்கியத் திலோ சாசனத்திலோ வழங்கவில்லை. மேலும், கோவையானது சரித்திர வரலாறு கூறும் நூலன்று. மெய்க்கீர்த்தியோ, வரலாறு கூறுவது; இதில் காணப்படும் செய்திகள் யாவும் கோவையில் காணப்படாமை இயல்பே. அன்றியும் கொங்குச்சோழர் வர லாறு எதுவும், வரலாறறிந்த தமிழ் இலக்கியத்துள் பயின்று வந்ததில்லை. கோவை, கோழிக் குலோத்துங்கன் என்று எங்கும் கூறுகிறதேயன்றி ஓரிடத்திலேனும் கொங்குநாட்டு ஊரைச் சுட்டிக் குலோத்துங்கன் என்று குறிப்பிடவில்லை. அச்சிட்ட கோவை ஏடுகள் திருநெல்வேலி நெல்லையப்பன் கவிராயருக் குரிய திருநெல்வேலி ஏடும், திருவாவடுதுறை மடத்து ஏடும், தென்காசி ஏடுமாகும்; கொங்குநாட்டு ஏடுகள் அல்ல. கோவை ஏடுகள் தஞ்சைப் புத்தகசாலையிலோ இந்நாட்டுப் பகுதியிலோ காணப்படவில்லை யென்பது மெய்யன்று; இது ஒரு காரணமு மாகாது; திருவாவடுதுறை மடம் சோழநாட்டில்தான் உள்ளது. அன்றியும், புகார் நாகை ஆகிய நகரங்களையுடையவன் என்று கோவை குறிப்பிடும் அரசன் கொங்குச்சோழன் என்பவர் கூற்றை என் சொல்வது?

மேலும், பண்டாரத்தாரே, இரண்டாம் இராசராசனுக்குப் பின் இராசாதிராசன் ஆண்டபோதிலும், 1163 முதல் குலோத் துங்கன் ஆட்சியெய்திய 1178 வரையில், பாரம்பரிய வரலாறு தெளிவு பெறவில்லை என்று, அவர் தொகுத்த பாரம்பரிய அட்டவணையில் இக்காலத்தில் ஒன்றும் குறிப்பிடாமல் விட்டு வைத்தார்; வரலாற்றில் இரண்டாம் இராசாதிராசனை விளக்கி எழுதியிருக்கிறார். இக்காலத்தில் ஏற்பட்ட ஆட்சியைப் பற் றிய நிகழ்ச்சிகள் பெருங்குழப்பத்துக் கிடமாயிருந்தன. இராச ராசனும் (II) மூன்றாம் குலோத்துங்கனுமே பரகேசரி பட்டம் தரித்தவர்கள். இருவருக்கும் இடையில் ஆண்ட இராசாதி ராசன் இராசகேசரி என்ற பட்டம் புனைந்து அரசாண்டான்; இருப்பினும், வமிசாவளி பூரணமாய் விளங்கவில்லையென்பது அவர் குறிப்பு.

குமார குலோத்துங்கன் பரம்பரை இக்குழப்பமான பகுதிக் குரியது. கல்வெட்டுச் செய்திகள் கோவையுள் காணப்படாமை,

கோவையே கொள்ளத்தக்கதன்று என்பதற்குக் காரணமாகாது. சிறப்பான வரலாற்றுச் செய்திகள் இதனுள் காணப்படா விட்டாலும், இதனுள் காணும் சில சரித்திரக் குறிப்புக்களும் குலோத்துங்கன் இயல்புகளும் இங்கு ஆராயத்தக்கவை. சோழர் வரலாற்றுச் செய்திகள் பலவற்றுக்குச் சான்றுதவும் சிறப்பு நூலாக இதைக் கொள்ளவேண்டும்.

**கோவை**

இது மிகவும் பழமையான கோவைப் பிரபந்தங்களுள் ஒன்று. திருக்கோவையாரை அடுத்தும், தஞ்சைவாணன் கோவைக்கு முன்னும் தோன்றியது. இதன் விநாயகர் காப்புச் செய்யுள், இது ‘ஐந்திணைக் கோவை’ என்று கூறும். மிக நீண்ட கோவைப் பிரபந்தங்களுள் ஒன்று; 510 பாடல்கள். 500இன் மிக்க பாடல் களுடைய பிற கோவைகள் அம்பிகாபதி, ஆரூர், திருப்பதி, மயூரகிரி, மாறன் கோவை என்பன. இதன் ஆசிரியர் பெயர் தெரிய வில்லை. இது 1910 இல் மு. ரா. அருணாசலக் கவிராயரால் துறை விளக்கம் குறிப்புரை முதலியவற்றோடு அச்சிடப்பட்டது.

குலோத்துங்கசோழன் கோவை சம்பிரதாயமான முறையில் சோழருக்குரிய நகரங்களான உறையூர் (கோழி), புகார், தஞ்சை (அளகை), நாகை என்பவற்றை எல்லாவிடத்தும் குறிப்பிடு கிறது. அளகை என்பது, தஞ்சையின் பெயர்களுள் ஒன்று. குபேரன் நகர் அளகை; தஞ்சையில் குபேரன் இருந்து பூசித்தான் என்ற புராண வரலாற்றால், தஞ்சையும் அளகையாயிற்று. கல்யாணி என்ற நகரம் பலமுறை கூறப்பட்டுள்ளது. கலிங்கமும், கொல்லா புரம் பொருதோன் என்று 329ஆம் பாடல் கூறுகிறது. கலிங்கம் கல்யாணி கொல்லாபுரம் என்பன இவன் முன்னோரது போர் வெற்றிகளைக் குறிப்பன. உபசாரமாக இவன் மேலேற்றிக் கூறப் பட்டன. இவ்வாறு கூறுதல் இலக்கிய மரபு. கலிங்கப்போர் முதல் குலோத்துங்கன் நிகழ்த்தியது; கல்யாணியும் கொல்லா புரமும் சாளுக்கிய நகரங்கள்; கல்யாணி இவன் வழிக்கு உரிய தாயிருந்தது; மற்றது இராசாதிராசன் பொருது வென்றது.

குலோத்துங்கனுடைய போரின் செய்திகள் சில கோவை குறிப்பிடுகிறது. ஏவிய தன் பணிக்கெய்தாத வேந்தர் எடுத்த படை தாவிய வீரன் - 143 என்பது பொதுவான குறிப்பு. பாண்டியனை வென்ற செய்தி; மீன் போத வெந்கண்ட கோழி 114; மீனவர் சேரரை வெந்கண்ட வீரம் விழுக் கவிஞரானவர் பாடுங்

குலோத்துங்கன் 195; சேரர் பாண்டியர் ஆங்காரம் தீர்த்தோன் 467; மீனமும் சாபமும் ஆளி அடவிபுகக் கொடி நின்ற வேங்கை 170; வெகுண்டே மதுரைக் கரியோட வென்றவன் 480; சேரரை வென்ற செய்தி - 195, 170, 417; கொங்கோட்டும் வேங்கைக் கொடியோன் 82. கொங்கோடக் குத்தும் களிற்றான் 133; பயந் தோடியந்தக் குடராசன் சேவிக்கும் தாளான் 253; கொங்கு நாட்டுச் சேரருடன் போர் நிகழ்த்தி வெற்றிபெற்றது, இவன் வரலாற்றில் ஒரு சிறப்பான செய்தி. சேரனது கருவூரை வென்று, தன் அடியில் பணிந்த அவனுக்கு மீண்டும் முடிவழங்கி அவ் வூருக்கு முடிவழங்கிய சோழபுரம் எனப் பெயரிட்டான். தோற்றோடிய பாண்டியன் சேரனிடம் சரண்புக, இருவருமே இவன் படை வலிமைக்கு ஆற்றாது பணியவும், இருவரையும் மன்னித்து, சிறப்புச் செய்தான். பாண்டிய மன்னுக்கு நிதிகளும் வழங்கினான். இவை கல்வெட்டுக் கூறும் செய்திகள்:

> **திருவிழுந்த தென்னவனும் சேரலனும்**
> **அரியணையின் கீழிருக்க அவர்முடிமே லடிவைத்துப்**
> **படிவழங்கி முடிவழங்கிப் பாண்டியற்கு விடைகொடுத்துக்**
> **கொடிவழங்கு வில்லவற்குக் கொற்றவர்பெறு திருவழங்கி.**

எனவரும் மெய்க்கீர்த்திப் பாடல் காண்க. உடைந்தோடினரைக் காயாத சிங்கம் 59; காத்து ஓடினரைக் கொல்வேன் எனும் சொல் குமாரகுலோத்துங்கன் 89; இடைந்தோடினரைக் கொல்லோம் என விடும் சென்னி - 304; வழுதியர் கோன் திறை தரவே வன்சிறை விடுத்து அழுதுயர் மாற்றும் குலோத்துங்க சோழன் - 466; அஞ்சியோடினர் பின் கூனாத விற்கை அபயன் குலோத்துங்கன் 298.

இவை முற்குறித்த நிகழ்ச்சிகளைத் தெரிவிப்பன. பாண்டி நாட்டுப் போரில் ஈழ மன்னன் பாண்டியனுக்குத் துணைநின் றமையால் சோழன் ஈழத்தின் மீது படையெடுத்து ஈழமன்னனை அடிப்படுத்தான் என்பது சரித்திரச் செய்தி; ஈழம் வங்கம கொங்கோடக் குத்தும் களிற்றான் (133) என்ற வரிகள் இதனைக் குறிப்பிடும். கடல் கடந்தும் சோழப்பேரரசு பரவியிருந்தமையைச் ‘சாவகமும் கொங்கும் இறைஞ்சும் குமாரகுலோத்துங்கன்’ என்ற வரி குறிப்பிடும். வடபுறத்திலிருந்த சில தெலுங்குக் குறுநில மன்னர்கள் இவனிடம் மாறுகொண்டபோது, இவன் அவர்களை அடக்கிய செய்தியைக் ‘கருநாடம் வங்கம்... ஓட - 133

என்ற வரிகள் சுட்டும். இத்தனைப் போர் நிகழ்ச்சிகளும் குலோத்துங்கன் வரலாற்றுக்குரியவை. எனவே, கோவை இவன் மீது பாடப்பெற்றது என்பதில் ஐயமில்லை. சங்கமன் என்ற ஒரு தொடரினாலேயே இவன் வீரசைவன், அன்னியன் என்ற கருத்து ஏற்கத்தகாதது.*

குலோத்துங்க சோழன் தன் 24ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1202) திரிபுவனதேவன் என்ற பட்டம் தரித்துக் கொண்டான். பின்னர் திருவிடை மருதூருக்கு அருகில் இன்று பிரசித்தமாய் விளங்கும் திரிபுவனம் என்ற பெருங்கற்றளியையும் நிருமித்தான் என்பது சரித்திரம். கோவைப்பாடல் (290) புவனாதிதீரன் என்று கூறுவது ஒருகால் இதைக் குறிப்பிடுவதாகலாம்.

குலோத்துங்கன் வீரத்தைப் போற்றியது போலவே, அவனது வள்ளன்மையையும், தமிழ்ப் புலமையையும், கோவைகாரர் மிகவாகப் புகழ்ந்து கூறுகிறார். இவற்றைப் பார்க்குமுன், சரித்திர வரலாற்றால் அறிந்த இவனது வள்ளமையை நினைவு கூர்தல் வேண்டும். இவன் முன்னோர் பலரினும் பார்க்க இவன் தமிழ் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்த சிறப்புடையவன். 40 ஆண்டுகள் (கி.பி. 1178 - 1218) ஆட்சி புரிந்தான். வீரராசேந்திரன் திரிபுவன வீரன் என்ற பெயர்கள் இவனுடைய வீரத்தாலும் போர் வெற்றியாலும் இவனுக்கு வந்தன. இவ்வாறு இணையில்லாது விளங்கிய சிறப்பினால் இவன் தமிழ் வளர்ச்சிக்கு உதவுவது சாத்தியமாயிற்று. இவன் காலத்தில்தான், குணவீரபண்டிதர் என்ற சைனப் பண்டிதர் வச்சணந்திமாலை நேமிநாதம் என்ற இரண்டு இலக்கண நூல்கள் எழுதினார். பவணந்திமுனிவர், இவன் வீரர்க்ளுள் ஒருவனான அமராபரணன் சீயகங்கன் ஆதரவில் நன்னூல் செய்தார். இவன் அவையை அலங்கரித்த வேறு சில புலவர்களைச் சாசனப்புலவர் என்ற தலைப்பில் பின்னர் காணலாம். (குணவீர பண்டிதர் வரலாறு 12ஆம் நூற்றாண்டு வரலாற்றில் சொல்லப்பெறும்.)

இவன் கலாரசிகன் என்பதைக் கோவை குறிப்பிடும்: எண்ணெண் கலையாதரன் - 360; இசை விருப்பமுடையவன், பண்ணாசை பூண்டவன் - 46; மதுரித்த தொன்னூல் காதே மணப்பவன் - 332. புலவர்களை அன்போடு ஆதரிப்பவன்,

---

* அடுத்ததான சங்கரசோழன் உலாப்பற்றிய கட்டுரையில் இது பின்னும் விளக்கப்பட்டுள்ளது.

தண்டமிழ்க்குப் பொன்னே பொழிபவன் - 30; தமிழ்ப் பாவலர்க்குக் கார்மேகம் அன்னவன் 35; தமிழ்வாணர் தங்கள் எண்ணாகும் வண்மை 54; உயர்வாணர் ஐந்து தருவோ எனும் கை 85; மழை ஏழுமொன்றாய்த் தான் ஈவோன் 104; முதுபுலவர் புத்தா ரமுதம் 116; கவிவாணர் செம்பொற்கொட்டாரம் 65; மெய்த் தமிழைத் காதே புனைபவன் 120; நூற்புலவோர்க்குத் தாபரன் 125; கற்றோர்க்கு வள்ளல் 327; செந்தமிழ்க்கோர் ஆதார மன்னவன் 359; பாவலர் காவியம் சூடுபவன் 415; தண்டமிழ்க்குச் சிந்தாமணி 425; பாவலரை அன்பால் வளர்ப்பவன் 452; தமிழ் நூற்கவிக்கு நந்தாம் இருகை 461 (நந்து - சங்கரநிதி); பாவலர் கண் காப்பு அனையன் 487.

இவ்வாறு இவன் தமிழ்ப் புலவர்க்குச் சிந்தாமணியா யிருந்ததோடு, தானே நிரம்பத் தமிழ்ப் புலமை படைத்திருந்து, கவிஞரின் தரம் தெரிந்து தமிழ்நூல் ஆய்ந்தான் என்றும் அறி கிறோம். ஓதாதுணர்ந்தவன் 202; கொழித்துத் தமிழ் கொள் ளும் கிள்ளி 250; நூற்கவியின் சொற்பதம் தேர்பவன் 441; தென் பால் தமிழ்தெரி சென்னி 401; தமிழ்வாணர் தெய்வக் கவியா பரணன் 224. தியாகாபரணன் என்பது இவனது பட்டங் களுள் ஒன்று என்பதை இங்கு நினைவு கூரலாம்: தாயும் தமரும் எனத் தமிழ் தாங்கி, தண்டமிழை ஆயும் கமகன் 94. கமகன் என்றமையால் இவன் தனது நுண்ணறிவினாலும் புலமையின் பெருமையாலும், கல்லாத நூற்பொருளையும் எடுத்துரைக்க வல்லவன் என்பது கருத்தாயிற்று. இவனது உண்மையான புலமையைப் பாராட்டிப் புலவர் இங்ஙனம் சொல்லுகிறாரே யன்றி, உபசாரமாக அன்று என்பது பின்னும் அவர் சொல்லும் சில தொடர்களால் நன்கு விளங்கும். தன்முன் வந்து கவி பாடினோர் கவிதைகளிலுள்ள குற்றங்களைக் களைந்தெறியும் ஆற்றல் படைத்தவன்: பாவனைத்தும் கோதே பிரித்தெறி கோமான் 75; அருந்தமிழைக் கோது பிரித்தெறி கோமான் 479; உரைவாணர் தங்கள் நவை காணின் மாற்றும் குமார குலோத்துங்கன் 363 - என்பவை காண்க. இவற்றால் இக்கோவை யாசிரியர் இவன் அவைக்களத்தே அமர்ந்து இவனது வள்ளன்மை யோடு புலமைப் பண்பையும் நன்கு கண்டு அனுபவித்தவர் என்று கருதலாம். அரசனுடைய இந்த இயல்பு சாசனங்கள் மூலம் தெரியவில்லை. இவ்வாறு இவன் பண்பையும் மூன்றாம் குலோத்துங்கன் காலத் தமிழ்மொழி வளர்ச்சியையும் ஒட்டி

நோக்கும்போது, இக்கோவை இம்மன்னனையே பாடுகின்றது என்பதில் கருத்து மாறுபாடு இருக்க முடியாது; வேறு ஓர் அரசவையில் தமிழ் இவ்வாறு வளர்ச்சி பெறவில்லை.

இக்குலோத்துங்கன் சிவபிரானிடத்து மிக்க பக்தி பூண்டவன் என்பது பலவிடத்தும் சொல்லப்பட்டுள்ளது. பத்தியாலுருகி நாகபரணனை ஏத்துபவன் - 88, 380; மழுவாளியைத் தான் போய்ச் சூழ்திருத் தாளான் 103; நந்திதன் பாதம் பணிவோன் 215; கொன்றை சூடும் பிரான் காலை இசைக்கும் குலோத்துங்கன் 265; வெண்ணீறெழும் பாவலர் வாய் துதிக்கும் புகழ் அளகேசன் 281; காமாரிக்கு அன்பன் 468. இவற்றினும் சிறப்பானது மதுரேசர் தாள்தொழும் கோழிக் குலோத்துங்கன் (386) என்பது: இவன் பாண்டிய மன்னனோடு மும்முறை போரிட்டு வென்று மதுரையிலேயே தங்கி, சோழ பாண்டியன் என்ற பட்டம் புனைந்து அங்கேயே வீராபிடேகமும் செய்துகொண்டு, பாண்டிநாட்டைச் சோழபாண்டியன் மண்டலம் எனப் பெயரிட்டு, மதுரைக்கு முடித்தலை கொண்ட சோழபுரம் எனவும் பெயர் தந்தான் என்று கல்வெட்டு சான்று பகர்கிறது. மதுரேசரைப் பணிந்து, அவருக்கு அணிகலன் அளித்து வீதியமைத்து, கோயிலைப் புதுக்கி விழா நடத்தி, வேறுபல தொண்டுகளும் செய்தான். இவ்வாறு இவஃ. செய்த திருப்பணிகளைப் பின்வருமாறு மெய்க்கீர்த்தி உரைக்கும்:

அறந்தரு திரு ஆலவாயில் அமர்ந்தவர்க்குத் தன்பேரால்
சிறந்த பெருந் திருவீதியும் திருநாளும் கண்டருளிப்
பொருப்பு நெடுஞ் சிலையால்முப் புரமெரித்த சொக்கற்குத்
திருப்பவனி கண்டருளித் திருவீ தியில் சேவித்துத்
தென் மதுரைத் திருவாலவாய்
பொன்மலையெனப் பொன் வேய்ந்து.

இனி இக்கோவையிலுள்ள பிற செய்திகள் சில கூறுவோம். 390ஆம் பாடல் ஒன்றில் மட்டும் பாட்டுடைத் தலைவன் பெயர் கூறப்படவில்லை. அந்த இடத்தில் ‘தமிழ்க் குதவும் கண்டன் புகார் வரைக் காரிகையே’ என்ற தொடர் காணப்படுகிறது. கண்டன் சிறப்பாக இரண்டாம் இராசராசனைக் குறிக்கும் சொல்; (பொதுவாகச் சோழமன்னரைக் குறிக்கும்;) இவன் மீது பாடப்பெற்ற கோவையொன்று இருந்தமை தொடக்கத்தில் குறிப்பிட்டோம்.

131ஆம் பாடல் தொனியினால் அந்தாதி உலா கோவை என்ற பிரபந்தப் பெயர்களையும் கிளவி என்ற கோவையுறுப்பை யும் கூறுகிறது. 'கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்' என்ற தொடர்கொண்ட தனிப்பாடல் 17ஆம் நூற்றாண்டின் பின் தோன்றியது. எனினும் அப்பாடலில், ஒட்டக்கூத்தர் பற்றி இம்மூன்று பிரபந்தங்களைக் குறிப்பிட்டுச் சொல்ல ஆதாரம் எதுவென்பது விளங்கவில்லை. அவர் பாடியதாகக்கூறும் உலாக் கள் உள்ளனவேயன்றி, கோவை அந்தாதி இல்லை. ஆகவே இக் கோவைப் பாடல், அத்தொடர் எழுவதற்கு அடியெடுத்துக் கொடுத்ததென்பது ஆராயத்தகுந்தது.

242ஆம் பாடலில் ஆசிரியர் கூகை என்பதைக் 'கல்வரிக்கே ஆகும் எழுத்து ஆறாம் எழுத்து ஒன்பதாம் எழுத்தாம் பெயர் எனவும், கௌவை விலக்கல் என்பதைப் 'பதினோரெழுத்தாம் பெயரை விலக்கியதே' எனவும் கூறியது அறியத்தக்கது.

கோவையாசிரியர் தமது பாடல் தோறும் தம்மரசன் திருமாலே என்று சிறப்பித்துக் கூறுகிறார். வேறு செய்திகள் கூறியது அருமை. 452ஆம் பாடலில் மட்டும் பொதியமுனி இசையினால் மலையைக் கரைத்தார் என்ற (திருவையாற்றுப் புராணச்) செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் நூலகத்தில் பலவான எளிய உவமைகளைக் கூறியுள்ளார் - 118, 119, 160, 178. நூல் பொதுவாக எளியநடையில் சுவையான பொருள்படுமாறு சிக்கலான கற்பனையின்றி அமைந் துள்ளது. பழமையான கோவைப் பிரபந்தங்களுள் இது சிறப் பானதொன்று என்பதில் ஐயமில்லை.

**ஆசிரியர்**

கோவைப் பாடல்களிலிருந்து நாம் சில யூகங்கள் செய்ய முடியும். பாடிய புலவர் இளமையிலிருந்தே இவ்வரச குமார னோடு பழகியவர். இளமையில் இவன் அரச பதவிக்கு வருவா னென்று எண்ண இடமில்லாதிருந்தது. அரசனாகிப் பல ஆண்டுகள் கழித்து இவர் இந்நூல் பாடிய போதிலும், இளமைப் பழக்கத்தைக் கொண்டே பாடுகிறார். இந்த நினைவோடு பார்த்தால், இக்கோவை இக்குலோத்துங்க சோழனைக் குறித்த தென்று கொள்வதில் யாதொரு வேறுபாடும் தோற்றாது; இளமைத் தொடர்பால் தான் இவர் குமாரகுலோத்துங்கன்

என்று பாடுகிறார். ஆசிரியரைக் குறித்து வேறெச் செய்தியும் தெரியவில்லை.

இக்கோவை மூன்றாம் குலோத்துங்க சோழன்மீது பாடப் பெற்றது, இதன்காலம் 1200 - 18க்கு இடைப்பட்டதாகிய 1210 என்பது முன்செய்த முடிவு. இக்கால எல்லைக்கு ஆதரவாக நூலகத்து ஒரு சான்று கிடைக்கிறது. அதையும் இங்கு சுருக்க மாய்க் குறிப்பிடலாம்.

பேராசிரியர் தம் தொல்காப்பிய உரையுள் மூதுரை, கொன்றைவேந்தன் என்ற இரு நூல்களைக் குறிப்பிடுகிறார். அவர் காலம் நன்னூலார் காலமாகிய 1212க்கும் பரிமேலழகர் காலமாகிய 1276க்கும் இடைப்பட்டது என்பது ஆராய்ச்சி யாளர் கருத்து. அதாவது 1225 என்று முன்னமே காட்டினோம் (பக்கம் 156). ஆகவே, மூதுரை கொன்றை வேந்தன் காலம் இதற்குமுன்; கி.பி. 12ஆம் நூற்றாண்டு என்று கொள்ளலாம். இந்நூல்களைப் பாடியவர் அவ்வையார்; இவ்வவ்வையாரே நல்வழியும் பாடினார் என்பது வரலாறு. நல்வழியில் இரண்டாம் பாடல் பின்வருவது:

> **சாதி இரண்டொழிய வேறில்லை; சாற்றுங்கால்**
> **நீதி வழுவா நெறிமுறையின் – மேதினியில்**
> **இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்:**
> **பட்டாங்கில் உள்ள படி.**

இப்பாடலின் சொல்லையும் தொடரையும் எடுத்து அப்படியே கோவைப் பாடலொன்று கூறுகிறது:

> **இட்டார்எப் போதுமிடுவார் இடார் என்றும் இட்டுண்கிலார்**
> **பட்டாங்கில் உள்ள படியிதன்றோ பண்டு இராவணனைக்**
> **கட்டாண்மை தீர்த்த குலோத்துங்க சோழன்கல் யாணி மின்னைத்**
> **தட்டாது முன்னம் தருந்தெய்வம் இன்னம் தருநெஞ்சமே. (37)**

கருத்தில் சிறிது மாறுதல் இருந்த போதிலும்கூட, இக் கோவைப் பாடல் நல்வழிப் பாடலைத் தழுவிச் செய்யப்பட்ட தென்பது தெளிவு. ஆதலால் 12ஆம் நூற்றாண்டு என்று தெரிகின்ற அவ்வையார் பாடிய நல்வழிக்குப் பின்வந்தது கோவை; 13ஆம் நூற்றாண்டுக்குரியதாகலாம். இதனால் இதன் கால எல்லை தஞ்சை சோழமன்னரின் பரம்பரைக்குரிய மூன்றாம் குலோத் துங்கன் காலத்தோடு பொருந்துவதும் தெளிவாகின்றது.

## சங்கரசோழன் உலா

இவ்வுலா, மதுரை - செந்தமிழ் தொகுதி 16இல் வெளியா யிற்று. சரித்திர வரலாற்றில் இப்பாட்டுடைத் தலைவனுக்கும் இந்நூலுக்கும் உரிய இடத்தை இங்கு அறுதியிட முயலுவோம்.

### சோழர் மரபு

சங்கரசோழன் உலாவும் உலா மரபை ஒட்டித் தொடக் கத்தில் சோழ பாரம்பரியம் கூறுகிறது. கலிங்கத்துப் பரணியும், ஒட்டக்கூத்தர் பாடிய தக்கயாகப் பரணியும், நூலின் பிற்பகுதி களில் இராச பாரம்பரியம் கூறுகின்றன. கூத்தரே பாடிய விக்கிரம சோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா, இராசராசன் உலா என்ற மூன்று உலாக்களும் நூன்முகப்பில் இராச பாரம்பரியம் கூறுகின்றன. இராச பாரம்பரியம் என்பது, இங்கு வமிசாவளி அல்லது மரபு. இம்மூவர் ஆட்சிக்காலமும் முறையே கி.பி. 1118 - 1136, 1133 - 1150, 1146 - 1163 ஆகும். சங்கரசோழன் உலா ஆசிரியரும் தொடக்கத்தில் 38 கண்ணிகளில் சோழ பாரம்பரியம் கூறுகிறார். அவற்றுள் 1 - 26 கண்ணிகள் பூர்வ சரித்திரம். இப்பகுதி முன் கூத்தர் செய்த மூன்று உலாப் பகுதிகளோடு ஒப்பிடத்தக்கது. சிறப்பாக, அம்மூன்றிலும் முதல் உலாவாகிய விக்கிரமசோழன் உலாவை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இவ்வுலா ஆசிரியர் கண்ணிதோறும் அவ்வுலாவை ஒட்டியே பாடியிருப்பது தெரி கிறது. பின்வரும் அட்டவணை இதை விளக்கமாய்க் காட்டும்.

இவ்வொற்றுமையை ஆராயும்போது, சங்கரசோழன் உலா ஆசிரியர் எவ்வளவு தூரம் ஒட்டக்கூத்தர் செய்த உலாக் களைப் பின்பற்றிப் பாடியிருக்கிறார் என்பது தெளிவாகப் புலப்படும். அவ்வுலாக்களைப் பாடிய கூத்தர் இராசராசன் காலத்தில் (அல்லது அதையடுத்து வந்த சோழன் காலத்தில்) வயதில் மிக்க முதுமையடைந்து, காலமாகியிருப்பார். 1118 - 1163 வரை ஆண்ட மூன்று சோழர் காலத்திலும் வாழ்ந்து பிரபந்தம் பாடிய அவர் பின்னும் 40 - 50 ஆண்டுகள் வாழ்ந்து 1200க்குப் பின் இருந்த சங்கரசோழன் மீது உலாப் பாடினார் என்று கருதுவது நடைபெறாத ஒன்று. (விக்கிரமன் இவரைப் புலவ ராய்த் தேர்ந்த காலம் கி.பி. 1120உம், அப்போது இவர் வயது 30உம் ஆகலாம்.) இல்லையானால், இந்நூலின் சிறப்பை நோக்கும்

போது, அவரே இதையும் பாடினார் என்றே கருதத்தோன்றும். அன்றியும், மிக்க முதுமையும் மிக்க புலமைச் செருக்கும் கொண்ட இப்பெரும்புலவர், பட்டத்துக்கே வராத சங்கர சோழனைப் பாட மனம் ஒருப்படார் என்பதும் உறுதி; கவிச் சக்கரவர்த்தி அல்லவா அவர்?

| சோழர் வரலாறு | | விக்கிரம சோழன் உலாக் கண்ணி | சங்கர சோழன் உலாக் கண்ணி |
|---|---|---|---|
| குல முதல்வன் - சூரியன் | ... | 3 | 2 |
| மைந்தனைத் தேர்க்காலில் ஊர்ந்த சோழன் - மனுநீதிச் சோழன் | ... | 4 | 3 |
| மறிக்கும் புலிக்கும் ஒக்க நீர் ஈந்தோன் - மாந்தாதா | ... | 5 | 4 |
| உம்பர் விமானம் உகைத்தவன் - முசுகுந்தன் (உபரிசரன்) | ... | 6 | 4 |
| புரந்தரனூர் புரந்த வேந்தன் | ... | 6 | 5 |
| கூற்றுக்கு ஒக்க வழக்கு உரைத்தோன் - பெருநற்கிள்ளி | ... | 7 | 5 |
| யமன் படை பின்வாங்க முதுமக்கட் சாடி வகுத்தவன் - சுரகுரு | ... | 8 | 6 |
| தூங்கு எயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் | ... | 9 | 7 |
| மேல்கடல் கீழ்கடற்கரை விட்டோன் - சங்கர்ஷணன் (சமுத்திர ஜித்) | ... | 9 | 7 |
| நாக நாட்டுக் கன்னியை மணந்தோன் - கிள்ளிவளவன் | ... | 10 | 8 |
| பாட்டுக்கு நூறாயிரம் பொன் ஈந்தோன் | ... | - | 9 |
| பாக்கொண்டு பதினாறு கோடி பசும் பொன் கொடுத்தோன் - கரிகாலன் (I) பட்டினப் பாலைக்காக | ... | - | 10 |
| புறவுக்காக நிறைபுக்கபிரான் - சிபி | ... | 11 | 11 |

| | | | |
|---|---|---|---|
| ஆறு கண்ட திறலோன் - சிவூகன் | ... | 12 | 12 |
| காவிரிக்கரை செய்தான் - கரிகாலன் - II | ... | 13 | 13 |
| களவழிப் பாடலுக்குச் சேரன் தளை களைந்தான் - கோச்செங்கணான் | ... | 14 | 14 |
| தொண்ணூறு மாறும் பூணாகப் புண் சுமந்தான் - விசயாலயன் | ... | 15 | 15 |
| திருமன்றம் ஆடகத்தால் வேய்ந்த அபயன் - பராந்தகன் I | ... | 16 | 16 |
| கேரளநாடு சிந்தினவன் - இராசராசன் I | ... | 17 | 17 |
| கடாரமும் கொப்பமும் கொண்டவன் - இராசேந்திரன் I | ... | 18 | 18 |
| கல்யாணம் அட்ட தனிக் காவலன் - இராசாதிராசன் I | ... | 19 | 19 |
| கொப்பத்து யானை ஆயிரம் கொண்டோன் - இராசேந்திரன் II | ... | 20 | 20 |
| கருமுகிற்கு மாணிக்கப் பாப்பணை செய்தவன் - இராசமகேந்திரன் | ... | 21 | 21 |
| கூடலர் சங்கமத்துப் போர்வென்று பரணி கொண்டவன் - வீரராசேந்திரன் | ... | 22 | 22 |
| கலிங்கப்பரணி கொண்ட விறலோன் - குலோத்துங்கன் I | ... | 23 | 23 |
| கூத்தன் உலாக்கொண்ட விக்கிரம சோழன் | ... | 28 | 24 |
| உலா மாலையோடு பிள்ளைத்தமிழ் மாலையும் பெற்றோன் - குலோத்துங்கன் II | ... | - | 25 |
| உலாக் கண்ணிதொறும் பொன்னாயிரம் சொரிந்த பூபதி - இராசராசன் II | ... | - | 26 |

இனி, இங்குகாட்டிய அட்டவணையைக் குறித்துச் சில சொற்கள் கூறுவது பொருத்தமாகலாம். ஒட்டக்கூத்தர் மூன்று சோழர் காலத்தில் வாழ்ந்து, மூவருக்கும் உலா பாடிய போதிலும்,

விக்கிரமசோழன் உலாவில்தான் அரசர்களின் பரம்பரையில் மாறுதல் இல்லாமலும் முன்பின் பிறழ்வு இல்லாமலும் ஒருவர் பெயர் விடாமலும் கூறி வருகிறார். இது மன்னர் ஆதரவை அவர் நாடி நின்ற காலம். பாடலில் பிழை வரக்கூடாது என்று விழிப்போடு பாடியநிலை. மற்ற இரு உலாக்களும் பாரம்பரியம் இவ்வாறு திருத்தமாக அமையப்பெற்றன அல்ல. இக்காலத்தில் கூத்தர் கவிச்சக்கரவர்த்தியாகி விட்டார். யாருக்கும் இனி அஞ்ச வேண்டியதில்லை. பின்வந்த சங்கரசோழன் உலா கூறும் பாரம்பரியத்தோடு ஒப்பிட்டு நோக்கினால் இது நன்கு விளங்குகிறது. இரண்டாவதாகிய குலோத்துங்கசோழன் உலாவுக்குப் பழைய உரையொன்று ஐயரவர்களிடமிருந்து கிடைத்து வெளியிடப்பட்டிருப்பினும், அங்கு அவ்வுரையாசிரியரின் விளக்கங்கள் பிழையாக உள்ளன. எடுத்துக்காட்டாக, சோழன் செங்கணான், விசயாலயன், இராசராசன், பராந்தகன் முதலானோர் பெயர்களும் அவர் குறிப்பில் முன்பின்னாக அமைந்து விளக்கமின்மை புலப்படும். ஆனால் இங்கு காட்டிய பட்டியலில் இரண்டு உலாக்களும் திருத்தமாக ஒன்றோடொன்று முழுமையும் பொருந்துமாறு சொல்லியிருப்பது பாரட்டத் தக்கது; ஒன்றுக்கொன்று சான்று ஆகவும், கல்வெட்டாராய்ச்சியாளர் முயன்று ஆராய்ந்து காணும் பாரம்பரியத்துக்கு முழுமையும் ஒத்தும் இருப்பது, வியக்கத்தக்கது.

சூரியன் தொடங்கி, நாகநாட்டுக் கன்னியை மணந்தான் என்பது வரையில், ஓரளவு புராணக் கதைகள், சரித்திரச் சான்று கிடைக்கப் பெறாதவை. கிள்ளிவளவன், “நாக நாடாள்வோன் தன்மகள் - பீலிவளை என்பாள் பெண்டிருள் மிக்காள்” என்பாளை மணந்த செய்தியை மணிமேகலையும் குறிப்பிடுகிறது; இவன் பெயர் வடிவேற்கிள்ளி என்றும் அங்கு சொல்லப் பட்டுள்ளது.

அடுத்து, “பண்ணிய - பாயிரம் பெற்றதொரு பாட்டுக்குப் பன்னொரு நூறாயிரம் பொன் பணித்த அண்ணலும்” (9) - விளங்கவில்லை.

பாக்கொண்டு பதினாறுகோடி பொன் கொடுத்தான் - கரிகாலன் I (10). மூன்றாம் இராசராசனை வென்று கரிகாலனது சோழநாட்டை அழித்த சுந்தர பாண்டியன், பட்டினப் பாலைக்காகப் பரிசில் விடப்பட்ட பதினாறுகால் மண்டபம்

ஒன்றுமே சோழநாட்டில் இடிக்காமல் விட்டான் என்று 1219இல் எழுந்த ஒரு கல்வெட்டுப் பாடல் கூறுவதும், கரிகாலன் பரிசில் தந்த வரலாற்றைக் குறிப்பிடும்:

வெறியார் தளவத்தொடைச் செய மாறன்வெகுண்ட தொன்றும்
அறியாத செம்பியன் காவிரி நாட்டி லரமியத்துப்
பறியாத தூணில்லை கண்ணன் செய் பட்டினப் பாலைக்கன்று
நெறியால் விடுந்தூண் பதினாறு மே அங்கு நின்றனவே.

அடுத்து, காவிரியாறு கண்டவன் (வழியை ஒழுங்கு பெறுவித்தவன்) சிவூகன் என்பான். காவிரிக்கரை செய்தவனாக மீண்டும் மற்றொரு கரிகாலனையே (II) 13ஆம் கண்ணி கூறுகிறது. பின்னர் கோச்செங்கணான், விசயாலயன், பராந்தகன், இராசராசன் I என்று முறையாகத் தொடங்கி, 26ஆம் கண்ணியில் இரண்டாம் இராசராசன் வரையில் எல்லாச் சோழஅரசரும் தொடர்பாகச் சொல்லப்பட்டுள்ளனர். இராசேந்திரன் II கொப்பத்துப் பரணி கொண்டது (20), முடிசூடாமலே இறந்துபோன இராச மகேந்திரன் இளவரசனாயிருந்து திருமாலுக்குப் பாப்பணி செய்தது (21), வீரராசேந்திரன் கூடல் சங்கமத்துப்பரணி கொண்டது (22) ஆகிய செய்திகளைக் கண்ணிகள் முறை பிறழாமல் குறிப்பிடுவது மிகவும் சிறப்பு. இவை கல்வெட்டுச் செய்திகளுக்கு ஒத்து உள்ளன. பின், கலிங்கத்துப் பரணியைக் கூறி, விக்கிரமன் உலா பெற்றதை,

கூடிய 'சீர்தந்த' என்றெடுத்த கூத்தனுலாச்
சூடிய விக்கிரம சோழனும்.

என்று குறிப்பிட்டு, இரண்டாம் குலோத்துங்கன் கூத்தரால் இரு பிரபந்தங்கள் பெற்றதை,

வெள்ளைக் கலியுலா மாலையொடு மீண்டும் அவன்
பிள்ளைத் தமிழ்மாலை பெற்றோனும்.

என்று இவ்வுலா ஆசிரியர் குறிப்பிடுகிறார். இராசராசன், கூத்தர் பாடிய உலாவுக்குக் கண்ணிதோறும் பொன்ஆயிரம் சொரிந்தது புதுச் செய்தி:

முன்நாயகரில் அவன் மூதுலாக் கண்ணிதொறும்
பொன் ஆயிரம் சொரிந்த பூபதியும் – என்னும் இவர்
மாசக்ர மேரு வலஞ்செல் மகரசல
பூசக்ர மேழும் புரந்ததற் பின்.

## குமார மகீதரனும் சங்கரசோழனும்

இனி இவ்வுலாவின் அடுத்த கண்ணிகள் பாட்டுடைத் தலைவனின் தந்தை - உடன்பிறந்தாரைக் கூறுகின்றன. 30 - 38 கண்ணிகள் மட்டும் இங்கு கருதல் வேண்டும்:

– அவந்திமன்

வங்கமன் சங்கமன் ஆதித்தன் வந்தித்த
சங்கமன் தொல்லைத் தவம்போலப் – பங்காய்

எழுந்திகிரி வெற்பை எனத்திகிரி யுந்தன்
செழுந்திகிரி யின் திமிரந் தீர்ப்ப – மொழிந்து அனைத்தும்

வல்லமன் ஆதி மனுவினும் மேதக்க
நல்லமன் என்கின்ற நாயகற்கும் – தொல்லை

மலைக்கும் கடற்குநடு மண்முழுதும் காத்துச்
சிலைக்கும் பாதாளத்தைச் சீறித் – தொலைத்துப்

பருந்து நிழல்பந்தர்ப் பல்லா யிரம்பேய்
விருந்து களிப்ப விடுத்துக் – கருந்தலையின்

குன்று குவித்துக் குவித்த பிணக்குவடு
சென்று குருதித் திரைமிதப்ப – வென்றதற்பின்

பூசற் குடகடற்கே போர்வாள் கறைகழுவித்
தேசத்து ஒழியாத் திறைகொண்டு – காசினிக்கே

பைத்த பொருபுலியைப் பல்கோடி வேந்து அணிய
வைத்த குமார மகீதரற்கு – மெய்த்துணையாத்

தோற்றிய சங்கர ராசன் சுரராசன்
போற்றிய கங்கா புரராசன்:

இங்கு சோழ பரம்பரையில் மூவருடைய வமிசாவளி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

சங்கமன் (நெறியுடைப்பெருமாள்)

| நல்லமன் - எதிரிலிப் பெருமாள் (இரண்டாம் இராசாதி ராசன் போலும்) | குமாரமகீதரன் (குமார குலோத்துங்கன் - மூன்றாம் குலோத்துங்கன்) | சங்கரன் (இவ்வுலாத் தலைவன்) |
|---|---|---|

முற்கூறியபடி சூரியன் முதல் இராசராசன் II வரை 'பூசக்ர மேழும் புரந்த பின்னர்' சங்கமன் இருந்திருக்கிறான். இவன் வளவர் குல அசலத்து உச்சி நிவந்த பரிதி நிகர்த்தவன் (29). இவனை அவந்திமன், வங்கமன், சங்கன், ஆதித்தன் என்போர் வந்தித்தனர். எனினும் ஆசிரியர், சங்கமன் நாடு புரந்ததாகக் கூறவில்லை.

சங்கமனுடைய புதல்வர் மூவருள் கடை, சங்கரன்; முதல் இருவர் ஆகிய நல்லமனுக்கும் குமாரமகீதரனுக்கும் இளவலாகக் கங்கைகொண்ட சோழபுரத்தில் தோன்றியவன். இவர்களுள் குமாரமகீதரன் இமயமலைக்கும் கடலுக்கும் நடுவிலுள்ள நாடு முழுமையும் காத்தவன். பெரும்போர்கள் பல செய்தவன். பல மன்னர்களிடம் திறை கொண்டவன். பலகோடி வேந்தர்கள் புலிக்கொடியை அணிய வைத்தவன். இவனுக்குத் துணையாகச் சங்கரராசன் தோன்றினான்.

முன் குலோத்துங்கசோழன் கோவைப் பாடலும் குலோத்துங்கனைச் சங்கரன் முன்னோன் என்று கூறுகிறது:

**தேனார் கடலும் திரைப்பாற் கடலும் திரைபுரண்டொன்று**
**ஆனால் எத்தன்மையத் தன்மையன்றோ அகிலாண்டமெல்லாம்**
**கோனாகும் சங்கரன் முன்னோன் குலோத்துங்கன் கோழிவெற்பின்**
**மானாரும் யானும் மணந்த இப்பேரின்ப மாகடலே. (64)**

இதனால் குமாரமகீதரனே குலோத்துங்கன் என்பதும், இவன் தம்பி சங்கரன் என்பதும் உறுதியாகின்றன. இக்குமாரமகீதரன் குமார குலோத்துங்கன் என்னும் மூன்றாம் குலோத்துங்கன் என்பது முன்னர் அவன் பெயருள்ள கோவையை ஆராய்ந்த இடத்து விளக்கப்பட்டது. மேலும் இந்த இடத்து இரண்டாம் இராசராசனுக்கும் மூன்றாம் குலோத்துங்க சோழனுக்கும் இடையில் உள்ள சோழர் பாரம்பரியத்தை நன்கு ஆராய்ந்தால், சங்கரராசன் வரலாறு விளக்கம் பெறும்.

இவ்வுலாவின் ஆசிரியர் முறையாகச் சோழர் மரபைக் கூறிவருவதால், இவர் கூறுகின்ற செய்திகள் ஏற்கத்தக்கனவே அன்றி விலக்கத்தக்கன அல்ல; இவற்றில் பிழையேதும் இலது. இவ்விராசராசன் ஆட்சி 1163இல் முடிவடைந்தது. மூன்றாம் குலோத்துங்கன் 1178இல் பட்டமேற்றான். இவனையே குமார மகீதரன் என்று நம் உலா கூறுகின்றது. இவ்விரு ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் இரண்டாம் இராசாதிராசன்

அரசாண்டான். இரண்டாம் இராசராசன் தனக்குப் பின் வாரிசாகத் தன் பாட்டனார் விக்கிரம சோழருக்கு மற்றொரு கிளைவழியில் பேரனாக இருந்த நெறியுடைப் பெருமாள் என்பவனுடைய புதல்வனான எதிரிலிப் பெருமாள் என்பவனை அழைத்து, தன் இறுதிக்காலத்தில் இளவரசுப் பட்டம் கட்டினான். இது பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டால் அறிகின்ற செய்தி. இவனே இரண்டாம் இராசாதிராசன். (இந்நெறியுடைப் பெரு மாளே உலாக்கூறும் சங்கமன் என்று கருதலாம். விக்கிரம னுடைய பெண் ஆளுடைய நாச்சியார்; அவளுடைய மகனே நெறியுடைப் பெருமாள்.)

"உடையார் விக்கிரம சோழதேவர் பேரனார் நெறியுடைப் பெருமாள் திருமகனார் எதிரிலிப் பெருமாளைப்* பெரிய வேதர் துஞ்சியருளின நாளிலே மண்டை கவிப்பித்துப் போந்தாரான வாறே இவரைத் திரு அபிஷேகம் பண்ணுவிக்க கடவராக." இவ் எதிரிலிப் பெருமாள் 1166இல் இராசாதிராசன் என்ற பெயருடன் மகுடாபிஷேகம் செய்யப்பெற்றான் என்று பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டினால் அறிகிறோம். "நாலாம் திரு நட் சத்திரத்திலே இராசாதிராசன் தேவர் என்று திரு அபிஷேகம் பண்ணுவித்து" என்பது காண்க. (இவனையே உலாவானது நல்லமன் என்கின்ற நாயகன் எனக் குறிப்பிடுகின்றதா?) இவ் இராசாதிராசனுக்குப் பின் மூன்றாம் குலோத்துங்கன் 1178இல் பட்டம் பெற்றான். இங்கு எதிரிலிப் பெருமாளாகிய இராசாதி ராசன் விக்கிரம சோழனுடைய பேரனுடைய புதல்வன் என்று மட்டும் அறிகிறோம். எந்த வழியில் என்பது முன்னே காட்டி னோம். இரண்டாம் இராசாதிராசன் பிள்ளையில்லாமல் இறந்து போனான் என்று நாம் நினைக்க வேண்டியிருக்கிறது. அவன் தம்பியும் தாயத்தாருள் ஒருவனுமான குலோத்துங்கன் III பட்டம்

---

* சோழ மன்னர் முடிபுனைந்த பின்னர், இராசராசன், இராசேந்திரன், குலோத்துங்கன் முதலான பெயர்களைத் தங்கள் விருப்பம் போலப் புனைந்தார்கள் என்றும், இங்கு கூறியபடி எதிரிலாப் பெருமாள் முதலான இயற்பெயர்களே பட்டத்துக்கு வருமுன் அவர்களுக்கு வழங்கின என்றும் நாம் அறியலாம். இரண்டாம் குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் அவ்வரசனைப் பாடல்தோறும் 'எதிரிலாப் பெருமாளே' என்று விளிக்கிறது; இங்கு சாசனத் தொடரும் எதிரிலாப் பெருமாள் என்றே படித்தற்குரியது. பிழை பொறுக்கும் பெருமரசன் என்பதும் அக்குலோத்துங்கன் பெயர் என்று பிள்ளைத் தமிழால் அறிகிறோம். மண்டை கவித்தல் - முடிசூட்டுதல்.

புனைந்தான். இவ்வாறு இராசராசன், இரண்டாம் இராசாதி ராசன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகிய மூவருக்கும் உரிய உறவின்முறை தந்தை மகன் முறையாக வராதபோதிலும், இவர் கள் நெருங்கிய உறவுடையவர் என்பது மட்டும் தெளிவாகிறது.

இராசாதிராசனும் குலோத்துங்கனும் முறையே நல்லம னும் குமாரமகீதரனும் ஆவர் என்பது ஒரு கருத்து. இதற்குக் கல்வெட்டுச் சான்று இல்லை என்பது உண்மை. அன்றியும், சங்கரசோழன் உலாவில் காட்டிய கண்ணிகள் நல்லமனுடைய ஆட்சியையோ போர் வெற்றிகளையோ குறிப்பிடவில்லை. ஆனால் குமாரமகீதரனுடைய போர் வெற்றிகளை மிகச் சிறப் பாக சொல்லுகின்றன. ஆகவே குமாரமகீதரன் அரசனாயிருந்து மூன்றாம் குலோத்துங்கன் என்று பெயர் தரித்திருந்தான் என்று கொள்வது பொருந்தும்; நல்லமன் அரசாண்டான் என்று கருது வதற்குப் போதிய ஆதாரமில்லை. அப்படியாயின், இராசாதி ராசன் யார், அவன் தொடர்பு யாது என்பது நியாயமான கேள்வி. நாம் அதிகமாய்ச் சரித்திர ஆராய்ச்சியினுள் புகவில்லையாதலின் இக்கேள்விக்கு இங்கு விடை காணவில்லை. குலோத்துங்க சோழன் கோவை பற்றிய கட்டுரையில் அவனைப் பற்றிய செய்திகள் விரிவாக ஆராயப்பெற்றன.

இனி, வரன்முறையாகப் பாரம்பரியத்தைச் சொல்லுகின்ற உலா, இரண்டாம் இராசராசனைச் சொன்ன பிறகு, பின்வந்த சோழரைச் சொல்லுகின்ற முறையால், குமாரமகீதரன் அர சுரிமை பெற்றிருந்தான் என்றும், அவன் தம்பியாகிய சங்கர சோழன் அவனுக்கு உடனிருந்து உதவி வந்திருக்ககூடும் என்றும் நாம் கருதுவது ஓரளவு பொருந்தும். இவனைப் பற்றிய வேறு குறிப்புகள் கிடைக்கவில்லை. சங்கரன், சங்கமன் புதல்வனென்று விநாயகர் காப்புச் செய்யுளும் 272ஆம் கண்ணியும் குறிப்பிடு கின்றன.

சங்கமன் தந்த தமிழ்ச்சங் கரசோழ
துங்கமன் மீதுலாச் சூட்டவே – அங்கேழ்

அரக்கிளவி நாயகனும் ஆனையாந் தேனா
கரக்கிளவி நாயகனும் காப்பு.

தனகர சங்கம சங்கர சோழ
தினகரன் என்றுந் தெளிப்ப. (272)

விவரங்கள் தெரியாத நிலையில் கல்வெட்டுகளின் துணை கொண்டு வரலாற்றை அறியும்பொழுது, முடிசூடி ஆண்டவர்கள் வரலாறு மட்டும் விளக்கமுறுகிறது; ஏனையோர் செய்திகள் விளக்கமுறவில்லை. ஆதலால் உறவினராக இருந்த சங்கமன், நல்லமன், சங்கரன் பற்றிய செய்திகள் விளக்கம் பெறவில்லை.

முதல் இராசேந்திர சோழனுக்குப் பிள்ளைகள் பலர். அவர்களுள் முடிபுனைந்து ஆண்டோர் மூவர். அவர்களின் வரலாறுகளே நன்கு அறியப்படும்; ஏனையவர் வரலாறுகள் அறியப்படமாட்டா. முடிபுனையாத சங்கரசோழன் வரலாறும் இத்தகையதே.

**ஆசிரியர்**

இவ்வுலாப் பாடிய புலவர் சங்கரனுடைய தோழராயிருந் திருப்பார். சோழர் மீது மூன்று உலாக்கள் பாடிய ஒட்டக் கூத்தர் சோழ மரபில் ஓர் அரசனுக்கு அவைப்புலவராயும், ஓர் அரசனுக்குத் துணைவராயும், ஓர் அரசனுக்கு ஆசிரியராயும் முதுபுலவராயும் இருந்து அம்மூன்று மன்னர்களையும் வாழ்த்தி யிருக்கிறார். அரை நூற்றாண்டுக் கழித்து அவரைப் போல மற்றொரு புலவர் குலோத்துங்கனையும் பாடி, அவன் தம்பி சங்கரனையும் பாடியிருத்தல் கூடும். ஒருவரே குலோத்துங்க சோழன் கோவையையும் சங்கரசோழன் உலாவையும் பாடி னாரா என்பது தெரியவில்லை. கோவையானது சோழனது போர்ப் பிரதாபங்களையும் வள்ளன்மையையும் தமிழ்ப் புலமை யையும் சிவபக்தியையும் பலபடப் புகழ்ந்து கூறுகின்றது. உலா சங்கரனை அவ்வாறு கூறவில்லை. இது இயல்பே: முன்னவன் அரசனாயிருந்தான்; பின்னவன் அவ்வாறு இருக்கவில்லை.

மேலும், எல்லாக் கோயில்களிலுமுள்ள எல்லாக் கல்வெட்டுக்களும் பிரதி செய்யப்பெறவில்லை; பிரதிசெய்யப் பெற்றன யாவும் இன்னும் அச்சிட்டு ஆராய்ச்சியாளருக்குக் கிடைக்கவில்லை. இவை கிடைக்கின்ற நிலைமையில் மேலும் எண்ணற்ற செய்திகள் வெளிப்பட்டு, இங்கு ஐயுறவாக உள்ள பல பொருள்களும் தொடர்புகளும் விளக்கம் பெறுதல் கூடும்.

இனி, கல்வெட்டுக்களில் சங்கரசோழன் பெயர் வரவில்லை என்பது உண்மையே. ஆனால் சோழ மரபில் இவனொருவன் இருந்தான் என்பதை மறுக்க அது காரணமாகாது.

அன்றியும், சங்கமன் என்ற பெயரால், அவன் வீரசைவ னாகக் கூடும் என்று கருதுவர். இதற்கு நியாயமில்லை. வீர சைவத் தொடர்பு தமிழ்நாட்டில் பசவண்ணருக்கு நெடுங் காலத்துக்குப் பிறகு ஏற்பட்டது. பசவர் காலம் 1125 - 65. 50ஆண்டுக்குள் வீர சைவர் மரபு தமிழ்நாட்டில் பெருகியது என்று கொள்வது பொருந்தாது. மேலும், குருலிங்க சங்கமம் என்பது சைவ சித்தாந்த மரபு. இதில் சங்கமர் என்பது பொது வாகச் சிவனடியாரே யன்றி, வீரசைவர் என்ற கருத்துக்கே இதில் இடமில்லை.

சங்கமன் முதலியோர் கொங்குநாட்டுச் சோழர் என்று குறிப்பிட்ட சதாசிவ பண்டாரத்தார் எந்த ஆதாரமும் காட்ட வில்லை; ஏனெனில், ஆதாரம் இல்லை. கோவையிலும் உலா விலும் கொங்கு பற்றிய பேச்சே வரவில்லை; கொங்குச் சோழ ருக்கு இந்தப் பாரம்பரியமும் உரியதன்று; அக்கூற்று ஏற்கத் தக்கதன்று. மேலும் கொங்கு ஓடக் குத்தும் களிற்றான் என்று கோவைப் பாடல் பாடுவது, கொங்கை வென்ற சோழனையே யன்றி, கொங்கில் தலைவனாயிருந்தவனைப் பாடுவதாகாது.

## உலா

இனி, இவ்வுலாவைப் பற்றிச் சில சொற்கள் சொல்லலாம். பிற உலாக்கள்போல இதுவும் சோழர் குலத்தொன்மை, தலை வனுடைய பெருமை, அவனுடைய அலங்காரம், அவன் பவனி வருதல், குழாங்கள் கூற்று என்பன முதலில் கூறுகின்றது. பின்னர் பேதை முதலான பருவப் பெண்களின் நிலைகள் சொல்லப்படுகின்றன. கண்ட அவர்களுடைய நிலை, மடந்தைப் பருவத்தில் தசாங்கம் கூறி அம்மனை ஆடுதல் என்பவை சொல் லப்படுகின்றன. நாகைப்பதி, தென்னுறந்தை, அனுராசாபுரி என்ற பெயர்கள் வருகின்றன. அனுராதபுரத்தை வென்றவன் முதற் குலோத்துங்க சோழன். அவனுக்கே சயதரன் என்ற பட்டமும் இருந்தது. இவற்றை உபசாரம் பற்றிப் புலவர் சங்கரனுக்கு ஏற்றி வழங்குகிறார். முதல் இராசராசன் வென்ற உதகையும் அவ்வாறே இவன் மீது ஏற்றிச் சொல்லப்படுகின்றது. இச் சங்கரன் மணமாகிச் சிறப்புமிக்க தன் தேவியுடன் வாழ்ந்தவன் (44 - 46) என்று தெரிகிறது. உலாக் கண்ணிகள் மிக்க சுவைபட அமைந்துள்ளன.

## பொய்யாமொழிப் புலவர்

ஆசிரியர்

இவர் பாடிய தஞ்சைவாணன் கோவை என்ற நூலினாலும் வேறுசில தனிப்பாடல்களாலும் இவர் தமிழ் இலக்கிய சரித்திரத்தில் ஒரு முக்கிய இடம் பெறுகிறார். இவர் தொண்டை நாட்டுச் செங்காட்டங் கோட்டத்தில் துறையூர் என்ற ஊரில் பிறந்தார். இதைத் தொண்டைமண்டல சதகம் குறிப்பிடுகிறது:

> கையா றிரண்டுடைக் காளைதன் வாயிற் கவிதை கொண்ட
> பொய்யா மொழிக்கும் புகலிடமானது; பொய்கையெல்லாம்
> செய்யார் கமலம் மலரவண்; டானங்கள் சென்று திகழ்
> மையார் குவளை வயல்புடை சூழ்தொண்டை மண்டலமே. (18)

இவர் வரலாற்றால் இவ்வூர் பொய்யாமொழி மங்கலம் எனப் பெறுகிறதென்பர். இவர் இளமைப் பருவம் பற்றிப் பலவகைக் கதைகள் வழங்குகின்றன. உண்மையும் உண்டு. புனைந்துரையும் உண்டு. இலக்கியச் சரித்திரத்தில் காலத்தால் பின்னோக்கிச் செல்லச்செல்ல, மனித இயல்பைக் கடந்த செய்திகள் அனேகம் சேர்ந்திருக்கக் காண்கிறோம். இவர் வரலாற்றிலும் இவ்விதமே உள்ளன. இவற்றுள் பொருத்தமானவற்றை இனிக் காண்போம். காளமேகப் புலவர் வரலாற்றில் சில செய்திகள் பொய்யாமொழி வரலாற்றிலும், இவர் வரலாற்றில் சில செய்திகள் காளமேகம் வரலாற்றிலும் மாறிக் காண்பது உண்டு.

பாடுகின்ற ஆற்றல் நம் புலவருக்கு இளமையிலேயே வாய்ந்திருந்தது. அடுத்துள்ள வயிரபுரம் என்ற ஊரிலிருந்த ஆசிரியரிடம் இவர் கல்வி பயின்று வந்தார். அவருடைய நெல் வயலை மாணாக்கர் முறைபோட்டுக் காவல் காப்பது வழக்கம். இவருடைய முறை வந்தபோது, இவர் காவலிருந்த சமயம், அவ்வூர்த் தலைவன் காலிங்கராயன் என்பவனுடைய குதிரை பயிரை மேய்ந்துவிட்டது. பார்த்த இவர் ஆசிரியர் தண்டிப்பாரே என்று அஞ்சி மனம் வருந்தி, தினந்தோறும் தாம் அவ்வூரில் வழிபட்டுக் கொண்டிருந்த காளிதேவியை மனத்தால் நினைத்து ஒரு பாடல் பாடினார்:

வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே
ஆய்த்த அருகார் அணிவயலில் – காய்த்த
கதிரைமா ளத்தின்ற காலிங்கன் ஏறும்
குதிரைமா ளக்கொண்டு போ.

பாட்டு முடிந்தவுடனே, அக்குதிரை அவ்விடத்திலேயே விழுந்து இறந்தது. இதைக் கண்டோர் அனைவரும் அதிசயித்து அஞ்சி ஆசிரியரிடம் சென்று அறிவித்தனர். அவர் வந்து பார்த்தபோது குதிரை செத்துக் கிடந்தது. செய்தி தலைவனுக்கும் எட்டிற்று. அவனும் வரவே, அவன் கோபத்தால் தம் ஆசிரியருக்கு ஏதேனும் கெடுதி நேருமோ என்று அஞ்சிய நம் இளம்பிள்ளை, பாட்டின் கடைசி அடியை மட்டும், 'குதிரை மீளக் கொண்டுவா' என்று மாற்றிப் பாடினார். உடனே குதிரை உயிர்பெற்று எழுந்து ஓடிற்று. தலைவனும் ஆசிரியரும் மிக்க மகிழ்ச்சி யடைந்தார்கள். ஆசிரியர் மாணாக்கரைத் தழுவிக்கொண்டு, "அப்பா, உன் மொழி பொய்யாமொழி,

பொதியில் அகத்தியனாய்ப் பொய்யா மொழியாய்
அதிகை அமண்பாக் கிழானாய்த் – துதிபெருகு
செங்காட்டுக் கோட்டந் துறையூர் எனுந்தலத்துத்
தங்காட்டங் கொண்டிருப்பாய் தான்."

என்று பாராட்டினார். அது முதல் இவருக்குப் பொய்யாமொழி என்ற பெயர் நிலைத்தது. இவரது இயற்பெயர் தெரியவில்லை; அதிகத்தூர் அமண்பாக்கம் இவர் பிறந்த ஊர்; துறையூர் தொடர்புபெற்ற ஊர். (பொய்யாமொழி என்பது சிவபெருமானுக்கு உரிய பெயர். வடமொழியில் சத்தியவாகீசர் என்பது. களக்காடு முதலான இடங்களில் சுவாமிக்கு இப்பெயருண்டு.)

இவர் மதுரை நோக்கிச் செல்லும் வழியில் சிராமலைச் சிவபெருமான் இவர் முன் புலவர் வேடத்தில் காட்சி கொடுத்தார் என்றும், அப்போது இவர் சிராமலையைப் பாடாமல் மறந்ததற்காக வருந்திச் சிராமலை யீசன்மீது இரண்டு பாடல் பாடித் துதித்தார் என்றும் வரலாறு கூறும்:

கோட்டாற் கொழும்பிரசங் குத்தி அதனடுவே
பாட்டாற் பனைக்கை புகமடுத்துக் – காட்டானை
தேனீர் அருந்துஞ் சிராமலையே, செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை.

அங்கம் புலியத ளாடையைச் சாத்தி யரவமுடன்
பங்கம் புலிவைத்த பண்பர்க் கிடம்பணை வாளெயிற்று
வெங்கட் புலியைவிட் டானையைத் தேடி விதவிதமாய்ச்
சிங்க மிருந்து தனித்தனி நோக்கும் சிராமலையே.

பின்னர் இவர் புகழோடு வளர்ந்துவந்த காலத்தில், முருகப் பெருமான் இவரை ஓரிடத்தில் வழியில் தடுத்து நிறுத்தி 'என் மீது ஒரு பாடல் பாடு' என்று கேட்டார். அப்போது இவர், சிவ பெருமான் திருவடியிலேயே மாறாத பக்தியோடு வாழ்ந்தவர். ஆதலால், 'நான் கோழியையும் பாடிக் கோழிக்குஞ்சையும் பாடுவனோ?' என்று சொல்லி மறுத்து விட்டார். பின்னர் ஒரு சமயம் இவர் தென்னாடு நோக்கிச் செல்லுகையில், வழியில் ஒரு சுரத்தின் கண் முருகன் வேடச் சிறுவன் போல எதிர் தோன்றித் தன் கைவேலினால் இவரை நிறுத்தி அச்சுறுத்தினான். வேடன் ஆதலினாலே, புலவர் அஞ்சி, 'ஐயா, யாம் தமிழறி புலவர். எம்மை ஒன்றும் செய்யற்க' என்றார். 'அப்படியானால் என்மீது ஒரு பாடல் பாடு' என்று வேடன் கூறலும், புலவர் 'உன் பெயர் என்ன?' என்று வினவினார். வேடன் 'என் பெயர் முட்டை' என்றான். உடனே புலவர் முட்டை என்ற பெயரை ஒரு வெண் பாவில் அமைத்து, அந்தச் சுரமாகிய பாலைநிலத்தையே திணை யாகவும், நற்றாயிரங்கல் என்ற துறையாகவும் வைத்து,

பொன்பாவும் கள்ளிப் பொறிப்புறவே ஏதிலன்பின்
என்பேதை செல்லற் கியைந்தனளே – மின்போலும்
மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர்போம்
கானவேல் முட்டைக்குங் காடு.

என்று பாடினார். கேட்ட வேடன் நகைத்து, 'கள்ளியே பொறி பறக்கின்ற கானலில், வேலின் முள் வெந்து சாம்பலாகாமல் தைக்கிறது என்று நீ பாடியது வியப்பு' என்று சொல்லி, தான் ஒரு பாடல் பாடினான்:

விழுந்ததுளி அந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்து சுடர் சுடுமென் றேங்கிச் – செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினாள்
பொய்யா மொழிப்பகைஞர் போல்.

இதைப்பாடி, 'புலவரே, குஞ்சைப் பாடமாட்டேன் என்ற நீர் எவ்வாறு முட்டையைப் பாடினீர்?' என்று நகைத்தான். உடனே

விழிப்புற்ற புலவர், இதுவும் முருகன் திருவிளையாடல் என்று எண்ணி நோக்கியபோது, முருகன் அவர் இளைப்பை மாற்றி, தன் வேலாயுதத்தால் அவர் நாவில் எழுதி அருள் பாலித்து, உருக்கரந்தான்.

முட்டை என்ற பெயருடன் முருகன் தன்னைப் புலப்படுத்தி இவரிடம் பாடல் பெற்றான் என்ற செய்தி அருணகிரிநாதரால் திருப்புகழிலும், மார்க்கசகாய தேவரால் தமது திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழிலும், அந்தகக்கவி வீரராகவமுதலி யாரால் சேயூர் முருகன் பிள்ளைத்தமிழிலும், கந்தப்ப தேசிக ரால் தணிகைச் சந்நிதி முறையுள் பல இடங்களிலும், குறிப்பிடப் பட்டுள்ளது: பின்வரும் தனிப்பாடலும் இதைக் கூறும்:

துட்டப் பயில்பிது ராச்சிரம் வைத்திடும் தொண்டன்மகன்
ஒட்டச் சிறுக்கி நலங்கிடையாள் பெற்ற ஓமுடிவான்
குட்டப் பிணியுண்டு அயலார் தரஉணும் கூன்வயிறன்
முட்டைக்கு மூத்தவன் கரிமுகன் வந்து முன்னிற்கவே.

கொங்கு மண்டல சதகம் 97ஆம் பாடலும் முட்டை என்ற பெயர் பற்றிய வரலாறும் பாடல்களும் குறிப்பிடும்:

முட்டையென் பேர்சுரம்போக்கா ஒருபா மொழியெனக்கேட்
டிட்ட முறுபொய் யாமொழி பொன்போ லெனவுரைக்கச்
சுட்டழ கில்லையீ தென்று விழுந்த துளியென்றுநன்
மட்டவிழ் முருகோன் சொன்ன துங்கொங்குமண்டலமே.

இப்பாடல் முட்டையையும் சம்பந்தப்பட்ட இரு பாடல்களை யும் கூறுகிறது.

பின்னர் புலவர் தென்பாண்டிநாடு அடைந்து அங்கே தென்காசிப் பக்கம் மாறை என வழங்கிய நாட்டுத் தஞ்சாக்கூர் என்ற ஊரில் வாழ்ந்த வள்ளல் ஆகிய வாணன் என்பவனுடைய நட்பைப் பெற்றார். அவனிடம் வைத்த அன்பு காரணமாக அவன்மீது தஞ்சைவாணன் கோவை என்ற பிரசித்தமான பிரபந்தம் பாடினார். இவர் இதைப் பாடி அரங்கேற்றிய சமயம் வாணன் ஊரில் இல்லாமையால், அவன் மனைவி உடன் இருந்து கேட்டு மகிழ்ந்து, பாட்டுக்கொரு பொன் தேங்காய் உருட்டிச் சிறப்புச் செய்தாள்; பின்னர், வாணன் தஞ்சாக்கூர் திரும்பியபோது, நிகழ்ந்ததை அறிந்து புலவரை மீண்டும்

அக்கோவையைப் பாடச்சொல்லிக் கேட்டு, தேங்காயின் மூன்று கண்ணுக்கும் மூன்று மணிகள் வீதம் வைத்திழைத்து உருட்டினான் என்றெல்லாம் வரலாறுகள் கூறும். இச்செய்தியைப் பாண்டிமண்டல சதகமும் குறிப்பிடுகிறது:

ஒருகவிக் கோரொரு தேங்காய்பொன்னாற்செய் துருட்டிக் கல்வி
பெருகச்செய் நாவலர்வாழக் கொடுத்துப்ரதாபம்பெற்றோன்
திருமலி தஞ்சையிற் கோவைத் தமிழ்கொண்டு செல்வமிக
வருதரு வாகிய வாணனும் பாண்டி மண்டலமே.

பின்னர் அங்கிருந்து இவர் தம்மூர் நோக்கித் திரும்பியபோது மதுரையில் சில நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன.

வணங்காமுடி என்ற சிறப்புப்பெயர் பொருந்திய பாண்டியன் மதுரையில் ஆட்சி செலுத்தினான். இவர் சென்ற சமயம் இவன் மதுரைக் கோயிலில் சிவபெருமான் திருமுன் பக்தியோடு வழிபட்டு நின்ற நிலைகண்டு, பின்வரும் பாடலால் பாதி வசையும் பாதி நகையுமாக அவனைப் பாராட்டினார்:

குழற்கால் அரவிந்தம் கூம்பக் குமுதம் பொதியவிழ்ப்ப
நிழற்கால் மதிய மன்றோ நின் திருக்குலம் நீ அவன் தன்
அழற்கால் ஒளிர்சடைமீதே இருந்தும் அவ் வந்திவண்ணன்
கழற்கால் வணங்கு தியோவணங் காமுடிக் கைதவனே.

'சிவபிரானது திருமுடியை இருப்பிடமாகக் கொண்டு விளங்குகின்ற சந்திரனது மரபில் பிறந்தவனாக இருந்தும் நீ, அப்பெருமானது திருவடியை வணங்குதல் என்ன பொருத்தம்?' என்பது இப்பாடலின் கருத்து.

புலவரைக் கவனித்த அரசன் தன் வழிபாட்டை முடித்து அவர் செய்திகளை விசாரித்தறிந்து, மதுரை நகரில் தமிழ்ச் சங்கத்தை மீண்டும் கூட்டித் தமிழாராய்ச்சி செய்வித்தல் அவர் அவா என்று சொல்லக் கேட்டான். 'தெய்வப்புலமை வாய்ந்த அச்சங்கத்தாரை மீண்டும் கூட்டுதல் சிற்றறிவினரான நம்மால் ஆவதா?' என்று அவன் ஐயமுற்று, சங்கத்தார் சந்நிதியடைந்து, "இத்திருவுருவங்கள் சிரக்கம்பம் செய்யுமாறு தாங்கள் ஒரு பாடல் பாட முடியுமானால் மீண்டும் சங்கத்தைக் கூட்ட முடியும் என்று நம்புவேன்" என்று அரசன் புலவரை நோக்கிக் கூறினான். அப்படியே அவர் பின்வரும் பாடல் பாடி, சிலை வடிவாயிருந்த புலவர்கள் தலை அசைக்குமாறு செய்தார்:

உங்களிலே யான்ஒருவன் ஒவ்வுவனோ,ஒவ்வேனோ?
திங்கட் குலன்அறியச் செப்புங்கோள், – சங்கத்துப்
பாடுகின்ற முத்தமிழ்க்கென் பன்னூலும் ஏற்குமோ
ஏடவிழ்தார் ஏழெழுவீர், இன்று?

*புலவர் சிலைகள் சிரக்கம்பம் செய்யக்கண்ட அரசன் அதிசயித்த போதிலும், மீண்டும் புலவரைச் சோதிக்கக் கருதி, பொற்றா மரைக் கரையை அடைந்து, "புலவரே, இப்பொற்றாமரை வாவியில் முன்பு இருந்து இப்போது அமிழ்ந்து விட்டதெனச் சொல்லப்படும் சங்கப் பலகையை மீண்டும் மிதக்கச் செய் வீராக" என்றான். அவரும் அதற்கிசைந்து.*

பூவேந்தர் முன்போற் புரப்பார் இலையன்றிப்
பாவேந்தர் உண்டென்னும் பான்மைதான் – மாவேந்தன்
மாறன் அறிய மதுரா புரித்தமிழோர்
வீறணையே சற்றே மித.

*என்ற பாடல் பாடினார். பலகை மிதந்தது கண்டு மகிழ்ந்த அரசன் இவருக்குத் தக்க சிறப்புச் செய்தான். பின்னர் பாண்டி யனைவிடப் பக்தியும் புலமையும் மிக்கவளாகிய பாண்டிமா தேவி இவரைத் தனியே அழைத்துப் பின்னும் அதிகச் சிறப்புச் செய்தாள். அதனால் உளம் மகிழ்ந்த புலவர் பாண்டிமாதேவி யைப் புகழ்ந்து ஒரு வெண்பாப் பாடினார்:*

உமையாளும் நீயும் ஒருங்கொப்பே ஒப்பில்
உமையாளுக் கங்குண்டோர் ஊனம் – உமையாள்தன்
பாகந்தோய்ந் தாண்டான் பலிக்குழன்றான் பாண்டியன்நின்
ஆகந்தோய்ந் தாண்டான் அரசு.

*பாண்டிநாட்டில் தங்கி நெடுநாள் தமிழ் வளர்த்து வந்து, பிறகு இவர் அங்கிருந்து புறப்பட எண்ணி அரசனிடம் விடைபெற்ற போது, அரசன் இவருடைய புலமையைப் பெரிதும் பாராட்டி னான். இவர் மிக்க பணிவோடு பின்வரும் பாடலைக் கூறி, விடைபெற்றுச் சோழநாடு சென்றார்:*

அறம் உரைத்தானும் புலவன், முப்பாலின்
திறம் உரைத்தானும் புலவன், – குறுமுனி
தானும் புலவன்; தரணி பொறுக்குமோ,
யானும் புலவன் எனில்?

இதன்பின் புலவர் சோழநாடு அடைந்தார். அங்கு கண்டியூர் என்ற ஊரிலிருந்த சீநக்கன் என்ற வள்ளலால் ஆதரிக்கப்பெற்று நீண்ட நாள் அங்கேயே தங்கி இருந்தார். இருவருடைய நட்பும் பாரி கபிலர் நட்புப் போன்றது என்று இலக்கியமறிந்தோர் கூறுவர். சீநக்கனைப் புகழ்ந்து இவர் பாடிய பாடல்கள் பல.

**அளிகொ ளும்தொடை யான்அர சைக்குமன்**
**ஒளிகொள் சீநக்கன் இன்றுவந் திட்டசீர்ப்**
**புளியஞ் சோறுமென் புந்தியிற் செந்தமிழ்**
**தெளியும் போதெலாந் தித்தியா நிற்குமே.**

இது அவருக்கு விருப்பான புளியஞ்சோற்றை அவன் உண்பித்த தன்மையைப் புகழ்வது. இவ்வரலாற்றைச் சோழ மண்டல சதகப் பாடலும் விரித்துக் கூறும்:

**பொய்யா மொழியார் பசிதீரப் புளியஞ் சேறு புகழ்ந்தளித்த**
**செய்யார் அரசூர்ச் சீநக்கன் செய்த தெவரும் செய்தாரோ**
**கையாருதவி பொறையுடை மைகா ணியாளர் கடன் அன்றோ**
**மையார் புவியில் முதன்மை பெற்றோர் வளஞ்சேர் சேழ மண்டலமே. (54)**

(அரசூர் - சோழநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்தில் உள்ளது,)

இவ்விருவருடைய நட்டைப் விளக்க ஒரு கதை வழங்குகிறது. ஒருநாள், சீநக்கன் துயில் கொள்ளும் மஞ்சத்தின் மீது இவர் படுத்துத் துயின்று விட்டார். உரிய நேரத்தில் அங்கு துயிலவந்த சீநக்கன் மனைவி, அங்குத் துயில்பவர் தம் கணவரே என்று வழக்கம் போல எண்ணி, அருகில் படுத்துத் தானும் உறங்கி விட்டாள். சற்று நேரம் பொறுத்து வழக்கம்போல் உறங்க வந்த சீநக்கன், நிகழ்ந்ததை யூகித்து அறிந்தான். மனத்தில் சிறிதும் மாறுபாடு கொள்ளாமல் ‘செல்லக்கிடமின்’ என்று கூறி அடுத்த ஓரத்தில் தானும் படுத்துத் துயின்றான். பொழுது புலர்ந்தது. விழித்துணர்ந்த புலவர், தம் நிலையை அறிந்து மிகவும் கவலை யுற்றார். அப்போது சீநக்கன், அவரையும் தன் மனைவியையும் தேற்றித் தன்னுடைய நட்பின் பெருமையைப் புலப்படுத்தினான்.

இவ்வாறு சீநக்கனது தோழமைபெற்ற புலவர் சோழநாட்டுக் கண்டியூருக்கும் தென்பாண்டி நாட்டுத் தஞ்சாக்கூருக்கும் நட்பால் உரியவராக வாழ்ந்து கொண்டிருந்தார் என்று நாம் யூகிக்கலாம். ஒரு சமயம் வாணனைப் பார்த்துவிட்டுத் திரும்பியபோது, சீநக்கன் காலகதியால் மரணமடைந்ததைக் கேட்டு மிகவும் வருந்தி ஓடோடியும் வந்தார். இவருடைய வருகையை

அறிந்த அந்நாட்டு மன்னனாகிய சோழன் இவருடைய பிரிவாற்றாமையை உணர்ந்து, இவரைத் தேற்ற முற்பட்டபோது, புலவர் தேறாமல் பின்வரும் பாடலைச் சொல்லிவிட்டுச் சீநக்கன் உடல் கிடந்த மயானத்தை நோக்கிச் சென்றார்:

வாழி சோழ, என் வாய் மொழி கேண்மோ!
ஊழி நிலவுஎறி மாளிகை யின்வயின்
கட்டிளங் கணவன் கவின்பெறு சேக்கை
என்று அறி மனைவி நெடிது துயில்கொளச்
செல்லக் கிடமின் எனக்கிடந் தருகஎனச்
சொல்லிய நண்பன் தனிச்செல் பவனோ?
நானும் ஏகுவன், நற்றுணை அவற்கே!

அங்கு சென்று சீநக்கன் உடல் கிடந்த சிதையில் ஏறித் தமக்கும் இடங்கொடுக்கும்படி ஒரு பாடல் பாடி நண்பனோடு ஈமத்தீயில் தாமும் உயிர் விட்டார்:

அன்றுநீ செல்லக் கிடஎன்றாய், ஆயிழையோடு
இன்று நீ வானுலகம் ஏறினாய், — மன்றல்கமழ்
மானோக்கும் வேல்விழியார் மாறனே, கண்டியூர்ச்
சீநக்கா! செல்லக் கிட.

இவ்வாறு பொய்யாமொழியார் சீநக்கனோடு கொண்டிருந்த நட்பு. சங்க நூல்களில் சொல்லப்பட்ட கபிலர் பாரி நட்பும், பிசிராந்தை கோப்பெருஞ்சோழன் நட்பும் போன்றது. 'பசைந் தாரின் தீர்தலின் தீப்புகுதல் நன்று' என்பது நான்மணிக்கடிகை 15. அம்மொழிக்கு இலக்கியமாக இவர் வாழ்க்கையும் முடிவும் அமைந்திருந்தமை வியக்கத்தக்கது.

தமிழ் நாவலர் சரிதை, பொய்யாமொழியார் வரலாற்றில் பல செய்திகளைக் குறிப்பிட்டு 16 பாடல்களைத் தருகிறது. இது வரை கண்ட பாடல்கள் போக, ஏனைய பாடல்களையும் வேறு பல செய்திகளையும் இனிக் காண்போம். காளையார் கோயில் தேவரடியார் எழுபது பேரும் எழுபதினாயிரம் பொன்கொடுக்கப் பொய்யாமொழியார் பாடியது:

வாச மலர்மடந்தை போல்வார்வண் கானப்பேர்
ஈசன் தமர்கள் எழுபதின்மர் — தேசத்
திரவலர்மேல் நீட்டுவர்கை ஈண்டுலகங் காக்கும்
புரவலர்மேல் நீட்டுவர்பொற் கால்.

அதே ஊரில் ஒரு வீட்டில் வாழ்ந்த தேவதாசியான கூத்தாள் என்பாளும் அவள் தமக்கை தாய் பாட்டி என்போரும் குருடா யிருக்க, அவர்கள் உபசாரத்துக்கு மகிழ்ந்து, புலவர் இப்பாட லைப் பாட, அவர்கள் மீளவும் கண்ணொளி பெற்றனர்:

கூத்தாள் முகத்திரண்டு கூர்வேல்கள், கூத்தாள்தன்
மூத்தாள் முகத்தின் முழுநீலம், – மூத்தாள்தன்
அன்னை முகத்தில் அரவிந்தம், அன்னைதன்
அன்னை முகத்திரண் டம்பு.

புலவருக்குத் தேவரடியார் தொடர்பு அதிகம் போலும். சீநக்கனது கண்டியூரில் இவர் வாழ்ந்த காலத்து, இத்தொடர்பு பலராலும் பழிக்கும் நிலைக்கும் வந்தது. இதையறிந்த புலவர், அப்பழிப்பு வீண் அபவாதம், தம்மிடத்தில் உண்மையாகவே எவ்விதத் தவ றும் இல்லை என்பதாகப் பின்வரும் பாடல் பாடினார்:

தேரையார் தெங்கிளநீ ருண்ணார் பழிசுமப்பர்;
நாரியார் தாமறிவார், நாமவரை நத்தாமை;
கோரைவாய் பொன்சொரியுங் கொற்றவன் தன்கண்டி
யூரைவாய் மூட வுரையறிந்தோ மில்லையே.

(நாரியார் - சீநக்கன் தேவி என்றுகூறி, செல்லக் கிடமின் என்ற வரலாறு இவ்வபவாதத்துக் காரணம் என்றும் சிலர் சொல்லுவர்.) இவரைப் பழித்து வந்த ஒரு புலவன்* இவர் தனி வழியே சென்ற போது, நீர் யார் என்றவனுக்குக் 'குலோத்துங்கச் சாவகன்' என்று தம்மைக் குறிப்பிட்டார். அவன் இவரை நையப்புடைக்கவே இவர் வருத்தம் பெறாமல் அவனை வெகுண்டு நோக்கலும், அவன் உடல் வெடித்து வீழ்ந்து மாண்டான். அவன் மனைவி அழுது புலம்புவதைக் கண்டு இவர் பின்வரும் பாடல் பாடினார். குலோத்துங்கச் சாவகன் என்பது கண்டியூர்ச் சீநக்கன் தந்த ஒரு பட்டமாகலாம். இவன் சோழ நாட்டினன் ஆதலால், மூன்றாம் குலோத்துங்கனுடைய சிறப்புக்களை நன்குணர்ந்து இப்புலவ ருக்கு அச்சோழன் பெயரையே பட்டமாக அளித்தான் போலும்:

கோதில்குல மங்கைக் குலோத்துங்கச் சாவகனென்
றோதினேன் றன்னை யொறுப்பதனான் – மாது
துளையாத முத்துவடந் தூக்கினாள் ஆரம்
விளையாடு செப்பிரண்டின் மேல்.

---

* புலையன் என்றும் சொல்லுவர்.

இப்புலவர் சிற்றின்பத்துறையில் எளியராயிருந்திருப்பார் போலும். கண்டியூர் வண்ணாத்தியை இவர் பாடினார் என்று தமிழ் நாவலர் சரிதை காட்டும் பாடலையும் காண்க:

தூசுதூ சாக்குவார் பாவை சுடர்த்தொடிக்கை
ஆசிலாக் கண்டியூர் ஆரணங்கு – வாசமலர்க்
கண்ணங்கை கொங்கைமுகம் காலும் கடிக்கமலம்
கண்ணங்கை கொங்கைமுகம் கால்.

பாண்டி மண்டல சதகம் பின்னுமொரு விநோதக் கதையும் சொல்லும்(7). இரட்டைப் புலவர் இவ்வாணன் மீது அகப்பொருள் இலக்கியம் பாடி நிறுத்தினர். (ஒருகால் வாணன் போதிய பொருள் தரவில்லைபோலும்.) பின் பொய்யாமொழிப் புலவர் வந்து தஞ்சைவாணன் கோவை பாடியதும், வாணன் தன் பொக்கிஷத்தைத் திறந்து வேண்டிய மட்டும் வாரிக்கொள்ளச் சொன்னான். இரட்டைப் புலவர் 14ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர்கள்; ஆதலால் இக்கதையும் ஒரு பொய்க்கதையே.

'தேரையார் தெங்கிளநீர் உண்ணார்' என்ற பாடலையும், இந்த அபவாதம் 'செல்லக்கிட' என்ற வரலாற்றால் விளைந்தது என்பதையும், முன்னமே குறிப்பிட்டோம். இறுதிக் காலத்தில் புலவர் சீநக்கனோடு சிதையில் ஏறி உயிர் விட்டார் என்ற செய்தியை அறிந்து, இவரைப் பழித்திருந்த ஏழூர் மக்கள் அனைவரும் இவருடைய உண்மை அன்பின் திறத்தை நன்குணர்ந்து, தமது தகாத பழிச்சொல்லுக்காக மனம் வருந்தி, நீலியின் பொருட்டு உயிர் துறந்த எழுபது வேளாளரை ஒப்ப, தாங்களும் தீயில் உயிர் துறந்தார்கள் என்று ஒரு தனிப்பாடலும் சோழமண்டல சதகமும் குறிப்பிடும்:

சிற்றரசூர் பேரரசூர் தென்மாவை – பூந்துருத்தி
கொற்றமலி கண்டி குருகாவூர் – இத்தனையும்
வாய்ப்பா யமர்ந்தருளு மன்னுகுடி யத்தனையும்
தீப்பாய்ந்த நல்ல திறம்.

புரைதீர் அரசைப் பதிபுகுந்த
  பொய்யா மொழியார் புகழ்தமிழ்க்கா
அரசூர் முதலா யேழூரும்
  அழலிற் புகுந்த தரிதாமோ

தரைசூழ் மதியம் மருவாற்றுஞ்
　　சான்றோரஃதாற் றாரெனுஞ் சொல்
வரையா துலகிற் பெற்றோரும்
　　வளஞ்சேர் சோழ மண்டலமே.

## தஞ்சைவாணன் கோவை

மிகப்பழைய கோவைப் பிரபந்தங்களுள் ஒன்றாகிய இது, தமிழ் இலக்கிய சரித்திரத்தில் தனிச்சிறப்புடையது. பாண்டிக் கோவை, திருக்கோவை, குலோத்துங்கசோழன் கோவை என்பவற்றையடுத்துக் கிடைக்கின்ற நூல்களில் இதுவே பழமை வாய்ந்தது. தென்பாண்டி நாட்டில் மாறை அல்லது குறுமாறை நாடு என வழங்கும் நாட்டுத் தஞ்சாக்கூர்த் தலைவனாயிருந்த சந்திரவாணனைப் புகழ்வது. வேளாண் மரபு விளக்கிய வாணன் (382) என்பதால் இவன் வேளாளன் என்று அறிகிறோம். வையைத் துறைவன் முதலான தொடர்கள், இவன் நாடு பாண்டிநாடு எனக்காட்டும். இவன் பாண்டிநாட்டுப் படைத்தலைவனாய் இருந்தான் என்பதை வழுதியர் நாமம் வளர்க்கின்ற வாணன் (7), வழுதி கண் போல்பவன், வெங்கோன் மழைபொழிவானவர் போர் வென்ற மீனவர் தம் - செங்கோன் முறை செலுத்திய வாணன் (55), செழியன் கயலைத் திசை வைத்த வாணன் (178) என்ற தொடர்கள் தெரிவிக்கும். சேர சோழரோடு போரிட்டு இவன் வென்றான் என்று பாடல்கள் கூறும். விசயக்கொடி மேல் வாங்கிய சாபம் உயர்த்தவன் போர்வென்ற வாணன் (5), கொலைகால் அயிற்படை நேரியர்கோன் அகங்கோட அங்கைச் - சிலைகால் வளைத்துத் திருத்திய வாணன் (53) என்ற பாடல் களைக் காண்க.

'செம்பொன் வெற்பை வளைக்கும் பிரான்முடி வைகுதலால்' என்று அம்புலியை நோக்கி இவர் கூறுதல், ஆசிரியரும் வாணனும் சிவவழிபாடு உடையவர்கள் என்பதைப் புலப்படுத்துவது.

இந்நூல் 425 கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் உடையது. இடையில் சில துறைகளுக்கான பாடல்களை ஆசிரியர் பாடவில்லை போலும். தொல்காப்பியம் இறையனார் களவியல் என்ற பண்டை இலக்கணங்களை இவர் நன்கு பயின்றார் எனினும், நாற்கவிராசநம்பி அகப்பொருள் விளக்கத்துக்கு இலக்கியமாகவே இவர் இக்கோவையைப் பாடியிருக்கிறார்.

சொற்சுவையும் பொருட்சுவையும் செறிந்த எளிய நடையில் நூல் செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர் தமிழினிடத்துப் பற்று மிகுந்தவர் என்பதை எல்லாவிடத்தும் புலப்படுத்திச் செல்கிறார். 'தேறும் தொறும் இனிதாய்த் தமிழ் போன்று இவள் செங்கனி வாய்' என்பது முதலான தொடர்களைக் காண்க.

குன்றத்தூர் அட்டாவதானி சொக்கப்ப நாவலர் எழுதிய உரை இதற்கு உண்டு. களவியல் நிகழ்ச்சிகளுக்கு இவர் நாள் வரையறை செய்து கூறியிருப்பது மிகவும் சிறப்பானது. ஏனைய அகப்பொருள் இலக்கணத்துக்குரிய உறுப்புக்களை நன்கு விளக்குவதாயும், அவ்விலக்கணம் பயில்வாருக்குப் பெரும் துணையாயும், இக்கோவையுரை அமைந்துள்ளது.

**காலம்**

முருகப்பெருமான் பொய்யாமொழியாரை முட்டை என்ற வேடன் வடிவத்தில் தடுத்துப் பாடல் கொண்டார் என்ற செய்தியை, 15ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த அருணகிரிநாதர் பல திருப்புகழ்ப் பாடல்களில் குறிப்பிடு கிறார். ஒன்று, 'முரட்டுப் புலவனை முட்டைப் பெயர் செப்பிக் கவிபெறு பெருமாளே' (953) என்பது. அவர் காலத்தில் இது ஒரு பழைய வரலாறு ஆகியிருக்கிறது. இதனால் நம் புலவர் 15ஆம் நூற் றாண்டுக்கு அதிகம் முற்பட்டு வாழ்ந்தவர் என்று அறிகிறோம்.

இனி, இப்புலவர் நாற்கவிராச நம்பி செய்த அகப்பொருள் விளக்கத்துக்கு இலக்கியமாகவே தம் நூலைச் செய்தார் என்றும் முன்னமே குறிப்பிட்டோம். நம்பியின் காலம் முதலாம் மாற வர்மன் குலசேகர பாண்டியனது ஆட்சிக் காலமாகிய 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பது நன்கு நிறுவப்பட்டுள்ளது. நம்பியகப்பொருள் இப்பாண்டியன் அவையில் அரங்கேற்றப் பெற்றது. பொய்யாமொழியார் உடனிருந்து கேட்டு அதற்கு இலக்கியம் சிறப்பாகப் பாடினார் என்று கருதவேண்டும். ஆதலால் இவர் காலமும் உடன்காலமாகும். நம்பி காலம் 1275; இவர் காலம் 1275 - 1300.

பொய்யாமொழியாரின் காலம் திட்டமாக இன்னதென்று வேறுவகையாலும் நிறுவ முடிகிறது. இவர் பாடிய கோவை யின் பாட்டுடைத் தலைவனாகிய சந்திரவாணன் பாண்டிய ருக்குப் படைத்தலைவனாக இருந்து பல போர்கள் வென்றான் என்று குறிப்பிட்டோம். மேற்குறித்த கால எல்லைக்குள் இவனைப்

படைத்தலைவனாகக் கொண்டு போர்வென்ற பாண்டியன் 1268முதல் 1311வரை ஆட்சிபுரிந்த முதல் மாறவர்மன் குலசேகரன் என்பது ஆராய்ச்சியாளர் முடிவு. இதுவே தஞ்சைவாணன் காலம். ஆதலால், பொய்யாமொழிப் புலவரும் 13ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்தார் என்ற முடிவு பொருத்தமாகும்.

மற்றுமொரு குறிப்பும் சொல்லத்தக்கது. சீநக்கன் தன் நாட்டு மன்னான இராசேந்திர சோழனைக் காணச்சென்றான். அவன் விரும்பியவண்ணம் புலவர் பின்வரும் பாடலைக் கையுறையாகப் பாடிக் கொடுத்தார்:

**திறையின் முறைகொணர்ந்து தெவ்வரெல்லாம் ஈண்ட**
**இறையும் இறைகடக்க லாகா – அறை கழற்கால்**
**போர் வேந்தன் போர்மாளப் போர்வாள் உறைகழித்த**
**தேர் வேந்தன் தஞ்சைத் தெரு.**

கேட்டு அரசன் மிக்க மகிழ்ச்சியடைந்து சீநக்கனுக்குச் சிற்றரசூர் முதலான ஏழூர்களை யளித்துச் சிறப்புச் செய்தான். அதுமுதல் சீநக்கன் அவ்வேழுருக்கும் தலைவனாக வாழ்ந்தான். இதுபற்றி அவனை அரசூர்ச் சீநக்கனென்று சொல்லுவதும் உண்டு. இச் செய்தியைச் சோழமண்டல சதகமும் குறிப்பிடுகிறது:

**திறையின் முறையென் றுலகறியச் செப்பும் பொய்யா மொழி தமிழ்க்காத்**
**துறையின் அளகை ராசேந்த்ர சோழன் வரிசை தொகுத் தளித்தே**
**அறையும் பெருமைச் சீநக்கர் அரசூர் முதலா ஏழூரும்**
**மறுவி லாது விளங்கியது வளஞ்சேர் சோழ மண்டலமே. (53)**

சதகம் குறிப்பிடும் இராசேந்திரன், மூன்றாம் இராசேந்திரன், 1246 - 79. எனவே இக்காலத்தில் புலவர் இப்பாடல் பாடியிருக்க வேண்டும். முன்னமே புலவர் "வாழி சோழ என் வாய்மொழி கேண்மோ" என்ற வரியால் குறிப்பிடப்பட்ட சோழன் இவனே என்று கருதுதல் பிழையாகாது. நம்பி அகப்பொருள் செய்தது, சுமார் 1275 என்று குறிப்பிட்டோம். உடன்காலத்திலேயே இவர் அதற்கு மேற்கோளாகத் தஞ்சைவாணன் கோவை பாடிப் பின் வரலாறு கூறுகிறபடி கண்டியூர் வந்து இத்தனிப் பாடலும் பாடினாராயின், இவ்வளவும் 1275 - 79க்குள் நடந்திருக்க வேண்டும்.

இதுவரை காட்டிய குறிப்புக்கள் அனைத்தினாலும், இவர் கோவை பாடிய காலம் 1275 - 1279க்குள் என்று தெரிகிறது.

## இரணியவதைப் பரணி

இப்பரணி தக்கயாகப்பரணிபோல ஓர் இதிகாச வரலாற்றைப் பொருளாகக் கொண்டு பாடப்பெற்றது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிடுகின்ற செந்தமிழ் என்ற பத்திரிகையில் இது 1918இல் வெளியாகியிருக்கிறது. தனிப் புத்தகமாக வெளிவரவில்லை. ஆகையால் ஆராய்ச்சியாளருடைய சிந்தனை இதில் செல்லவில்லை போலும்.

**நூல்**

இந்த நூல் செய்த ஆசிரியர் பெயரும் செய்த காலமும் அறியுமாறு இல்லை. நூலின் அகத்திலும் இதற்கான குறிப்புக்கள் எவையும் காணப்படவில்லை. எனினும், நூலில் கிடைக்கின்ற செய்திகளை ஆராய்ந்து இலக்கிய வரலாற்றில் இந்நூலுக்குரிய இடம் எது என்பதை முடிவு செய்வது இயலும்.

பாட்டியல் இலக்கணநூல்கள் பரணிப் பிரபந்த இயல்பு கூறுகின்றன. ஆயிரம் யானை அமரிடை வென்ற - மானவனுக்கு வகுப்பது பரணி என்பது பரணியின் இலக்கணத்தை விளக்கும் பிற்காலப் பாடல். கிடைக்கின்ற பரணி நூல்களில் காலத்தால் மிகவும் முற்பட்டது கலிங்கத்துப் பரணி; முதல் குலோத்துங்க சோழன் (1070 - 1120) பெற்ற கலிங்க வெற்றியைச் சிறப்பித்துப் பாடிய நூல். இதற்கடுத்தது ஒட்டக்கூத்தர் பாடிய தக்கயாகப் பரணி (12 நூ.) பிற பரணிகள் தத்துவராயர் பாடிய அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி (15 நூ.) பாசவதைப்பரணி (17 நூ.) என்பன. இவையன்றி கஞ்சவதைப் பரணி, திருச்செந்தூர்ப் பரணி* முதலாயினவும் இருந்தன.

இவ்வரிசையில் ஒரு முக்கிய இடத்துக்குரியது இரணிய வதைப் பரணி. இது பிரகலாதனுக்காகத் திருமால் நரசிங்காவதாரம் எடுத்து அவன் தந்தையாகிய இரணியனை வதைத்த வரலாற்றைப் பரணி இலக்கணம் பொருந்தக் கூறுவது. பிற பரணிப் பிரபந்தங்களில் உள்ளதுபோல, இதன் பொருள் பாகு

---

* திருச்செந்தூர்ப் பரணி 18ஆம் நூற்றாண்டில் சீனிப்புலவர் பாடியது. திருச்செந்தூர் முருகன் சம்பந்தமான பிரபந்தம் என்று இதைக் கருத வேண்டும்; அன்றி இப்பெயர் பரணிப்பிரபந்த மரபுக்கேற்ப தோற்றவர் பெயரால் சூரபதுமன் வதைப்பரணி என்றே இருத்தற்கு உரியது.

பாடும் பின்வருமாறு நன்கு அமைந்துள்ளது: 1. கடவுள் வாழ்த்து 2. கடை திறப்பு, 3. காடு பாடியது, 4. கோயில் பாடியது, 5. தேவி யைப் பாடியது, 6. பேய்களைப் பாடியது, 7. இந்திர சாலம், 8. போய் முறைப்பாடு, 9. காளிக்குக் கூளி கூறியது, 10. களங் காட்டல் 11. கூழடுதலும் இடுதலும், 12. வாழ்த்து. இதில் அமைந்த தாழிசைகள் 698. நூல் முகப்பில் 'தேனறா மகிழ்த் தொடை யலும்' என்ற பழைய நம்மாழ்வார் வணக்கப் பாடலை உடை யது. இரணியன் வதையைக் கூறினும், இது திருவரங்கத்து அழகிய மணவாளன் புகழைக்கூற வந்ததாகும். கடவுள் வாழ்த்துப் பகுதியில் திருமாலின் பஞ்சாயுதங்கள் ஆதிசேடன் கருடன் கலைமடந்தை கொற்றவை முதலியோருக்கு வணக்கம் கூறி, அரங்கனார் கழல் சடகோபன் எதிராசன் முதலியோருக்கு வாழ்த்துக் கூறுகிறார். கடைதிறப்புப் பகுதி முந்திய பரணிகள் போல மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. அப்படியே பிற பகுதிகள் ஒவ்வொன்றும் சந்தப்பொலிவும் பொருட்பொலிவும் நிரம்பிக் காணப்படுகின்றன. எல்லாப் பகுதிகளும் அப்படியே பரணி இலக்கணம் பொருந்த உள்ளன. அரிசி ஆக்குமிடத்தைக் கூறும்போது, பேய்கள் யானையின் மருப்பை உலக்கையாகக் கொண்டு இடிக்கின்றன என்று சொல்லுமிடத்துப் பதினைந்து பாடல்கள் "சும்மேலோ சும்முலக்காய்" என்ற தொடரை மகுட மாக உடைய வள்ளைப்பாட்டுக்கள் அமைந்துள்ளன. இறுதி யில் அரங்கரை வாழ்த்துவதுடன் இந்நூல் முடிகிறது.

காளிக்குக் கூளி கூறியது என்ற 9ஆம் பகுதி இரணியன் வரலாற்றை மிகவும் விளக்கமாகக் கூறுகிறது. இரணியன் வரலாறு, தேவர்கள் முறையீடு, பிரகலாதன் பிறப்பு, கல்வி, இரணியன் சீற்றம். நரசிங்கமூர்த்தி தோன்றுதல், போர், இரணிய வதம், பிரகலாதனுக்கு அருள் - ஆகிய செய்திகள் வீரச்சுவை யும் பக்திச்சுவையும் ததும்புமாறு அமைக்கப் பெற்றுள்ளன.

இப்பரணியானது ஒரு புதுநெறியை மேற்கொண்டிருக் கிறது. அதாவது இந்நூல் முன்னமே குறிப்பிட்டவாறு திருமால் பிரகலாதனுக்காக வேண்டி நரசிங்காவதாரம் எடுத்து இரணி யனை வதைத்த வரலாறாகிய ஒரு புராணக்கதையைப் புனைந்து உரைப்பது. சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணி இன்று முழுமையும் கிடைப்பது. இதற்கு முன்னும் பின்னும் மூன்று பரணி நூல்கள் இருந்து இப்போது கிடைக்காமற்

போயின என்று நூல்களால் அறிகிறோம். இராசேந்திர சோழன் பெற்ற கொப்பத்து வெற்றியைப் பாடும் பரணியை இராசராசன் உலா கூறுகிறது. வீரராசேந்திரன் பெற்ற கூடல் சங்கமத்து வெற்றியை விக்கிரமசோழன் உலாவும் இராசராச சோழன் உலாவும் குறிப்பிடுகின்றன. இவ்விரண்டையும் குறிப் பிடுபவர் ஒட்டக்கூத்தரே. இனி, கலிங்கத்தில் விக்கிரமசோழன் பெற்ற வெற்றியைச் சிறப்பித்து ஒட்டக்கூத்தரே தென்தமிழ்த் தெய்வப்பரணி என்ற ஒரு பரணி நூல் பாடினார் என்று தக்க யாகப்பரணி 776ஆம் தமிழிசையாலும் அதன் உரையாலும் அறி கிறோம். இவையன்றி இராசாதிராசன் சளுக்கப்போர் வென்று ஒரு பரணிகொண்டானென்றும், இராசகேசரி குலோத்துங்க சோழன் இருபரணிகள் கொண்டானென்றும், சாசனங்கள் கூறு கின்றன. இக்குலோத்துங்கன் முதல் குலோத்துங்கன் போலும். இவை பற்றிய செய்தி ஒன்றுமே புலப்படவில்லை.

இவ்வாறு எழுந்த பரணிப் பிரபந்தங்கள் அனைத்துக்கும் பின்னர்த் தோன்றியது, ஒட்டக்கூத்தரே செய்த தக்கயாகப் பரணி. இது இரண்டாம் இராசராசனைச் சிறப்பிப்பது. முற்கூறிய பரணிநூல்கள் யாவும் காலத்தால் இவ்வரசனுக்கு முற்பட்ட சோழமன்னரைப் போற்றுபவை. ஒட்டக்கூத்தரே வேறு பரணி பாடினார் என்று முன்னமே குறிப்பிட்டோம். இவர் முதலில் விக்கிரமன்மீது ஒரு கலிங்கத்துப் பரணியையும் பின்னரே அவன் பேரனைச் சிறப்பித்து இத் தக்கயாகப் பரணியையும் பாடினா ரென்று கருதவேண்டும். விக்கிரமன் குலோத்துங்கன் இராச ராசன் ஆகிய மூவர் காலத்திலும் இவர் இருந்தமையால், விக்கிரமன் கலிங்கப்போர் வெற்றியை முதலில் சிறப்பித்தார். இராசராசன் காலத்தில் வயது முதிர்ந்தவராய் இருந்தபோது இராசராசன் மீது உலா பாடினார். பின் சிவ பக்தியுணர்வு மேலிட்டு இத்தக்கயாகப்பரணி பாடினார் என்று நாம் கருத லாம். தக்கயாக சங்காரமே பரணியின் பொருள். ஆனால் இவர் இடையில் காளிக்குக் கூளி கூறியதாகத் திருஞான சம்பந்தர் கதை முழுமையும் அமைத்திருப்பது, சமய உணர்வு மேலீட்டி னால் இவ்வாறு பாடினார் என்று நாம் கருதுவதற்கு ஆதரவு தருகிறது.*

---

* இது பற்றிய விளக்கத்தை எமது 12ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றுள் காண்க.

அன்றியும், தக்கயாகப் பரணியுள் பிரபந்தப் பொருளில் ஒரு மாறுதலைக் காண்கிறோம். இதுவரை செய்யப்பெற்றிருந்த பிரபந்தங்கள் அரசர் செய்த போர்களில் தோற்றவர்களையும் அரசனது வெற்றியையும் குறித்தன. ஆனால் இத்தக்கயாகப் பரணி ஒரு புராணக்கதையைக் குறித்தெழுந்தது. இவ்வாறு இதற்குமுன் பரணிநூல் எதுவும் செய்யப்பெறவில்லை. இவ்வாறு செய்யப்பெற்ற முதல் நூல் இதுவேயாகும். ஆயிரம் யானையை அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி என்பது இலக்கணமாயினும், இங்கு சிவபிரானிடம் தோன்றிய வீரபத்திரர் தக்கயாகத்துக்கு வந்திருந்த தேவர்களோடு போர் புரிந்து வெற்றி பெறுகிறார் இங்கு நடைபெறுவது உண்மையான போர்; தத்துவரீதியான போர் அன்று. இறைவனுடைய அம்சமாகிய வீரபத்திரரை ஒரு போர் வீரனாக்கி அவர் போரை வென்ற செய்தியை இந்நூல் கூறுவதால், இங்கும் பரணியிலக்கணம் முழுமையும் பொருந்துமாற்றை அறியலாம். பிற்காலத்தில் வந்த கஞ்சவதைப் பரணி, சூரன் வதைப்பரணி ஆகிய திருச்செந்தூர்ப் பரணி போன்றன இந்த மரபுக்குரியவை.

ஒட்டக்கூத்தரை அடுத்து இதே மரபில் செய்யப்பெற்ற நூல் இந்த இரணியவதைப் பரணியாகும். திருமால் நரசிங்காவதாரமாகத் தூணினின்றும் எழுந்தருளி வந்து இரணியனை வதைக்கின்ற புராணக்கதையை இது பொருளாகக் கொண்டது. தக்கயாகப் பரணியானது இரண்டாம் இராசராச சோழனைச் சிறப்பிக்க வந்தது; அதுபோலவே, இரணியவதைப் பரணியும் இரணியவதையைக் கூறித் திருவரங்கநாதனைச் சிறப்பிப்பது.

### காலம்

இந்நூலாசிரியரைக் குறித்து எதுவும் தெரியாதபோதிலும் கூட, இரண்டு குறிப்புக்களால் இவருடைய காலத்தை ஒருவாறாக நாம் வரையறை செய்யமுடிகிறது ஒன்று, இவர் கலிங்கத்துப்பரணி போன்றவற்றை முன்மாதிரியாகக் கொள்ளாமல் தக்கன்வதை கூறுகின்ற தக்கயாகப் பரணியை முன்மாதிரியாகக் கொண்டமை, இதிகாசக் கதையைப் பொருளாகக் கொண்டு பரணிநூல் செய்யும் வழியைத் தோற்றுவித்தவர் ஒட்டக்கூத்தர். இவர் காலம் 12ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதி வரையில்; ஆதலால் நம் பரணியாசிரியர் அவருக்குப் பிற்பட்டவராகிறார்.

இரணியவதைப்பரணி செய்தார் ஒட்டக்கூத்தருடைய மாணாக்கரோ என்று கருதக்கூட இடமுண்டு. ஒட்டக்கூத்தரால் பாடப்பெற்ற இரண்டாம் குலோத்துங்க சோழன் தில்லைத் திருமாலை அலைகடலில் கிடத்தினான் என்பது பொதுவாய் வழங்கும் வரலாறு. அவன் மகன் இரண்டாம் இராசராசன் காலத்தும் ஒட்டக்கூத்தர் வாழ்ந்திருந்து அவனையும் உலாப் பாடிச் சிறப்பித்தார். இவ் இராசராசன் திருமால் அடியார்க்கு ஓரளவு ஆதரவு அளித்தான். அதுபற்றி அவனது மெய்க்கீர்த்தி, 'விழுந்த அரிசமயத்தை மீளவும் எடுத்தான்' என்று கூறும். இவன் காலம் ஒட்டக்கூத்தர் காலமே. ஆதலால் இக்காலத்தே இரணியவதைப் பரணி தோன்றியிருக்கலாம் என்ற ஐயம் எழுதல் இயல்பு. இப்பரணி ஆசிரியர் 30ஆம் தாழிசையில் இவர் தம் காலத்திருந்த வளவனைக் குறிப்பிடுகிறார்:

**கதிர் வெயில் இரவி மரபில் வாழ்**
**கழல்புனை வளவன் நிழல்குலாம்**
**மதிபுரை கவிகை நிலவினால்**
**மலர்தலை உலகு வளர்கவே.**

இங்கு ஆசிரியர் தம் காலத்து ஆட்சி புரிந்திருந்த சோழ மன்னனுடைய கொற்றக்குடையின் நிழலில் உலகு வளர்க என்று வாழ்த்துகிறார். ஒட்டக்கூத்தர் காலத்தவராய் இருப்பின், இங்கு சோழனை வாழ்த்தியவர் தம் ஆசிரியரான கூத்தரையும் வாழ்த்தியிருத்தல் வேண்டும். அவ்வாறின்மையின், பின்வந்த ஒரு சிறப்பான மன்னனுடைய ஆட்சியில் இவர் வாழ்ந்து, அவன் புகழையே இங்ஙனம் பாடுகிறார் என்று நாம் கருதவேண்டும். ஒட்டக்கூத்தர் காலத்துக்குப் பின் இரண்டாம் இராசாதிராசன் (1163 - 1178) ஆட்சி புரிந்தான். அவனுக்குப் பிறகு பட்டமெய்தி யவன் மூன்றாம் குலோத்துங்கன். இவன் மிக்க பராக்கிரமம் பொருந்திய சக்கரவர்த்தியாக விளங்கினான். இவன் காலத்தில் தமிழ் வளம் மிகவும் ஓங்கியிருந்தது. இவனே மிக்க தமிழ்ப் புலமையுடையவன். அன்றியும், குணவீர பண்டிதர், பவணந்தி முனிவர் முதலான சமணசமயப் புலவர்களும், அக்காலத்து அவைப் புலவரான வீராந்தப் பல்லவரையர் என்பாரும், மாபாரதம் தமிழ்ப்படுத்திய புலவர் அருணிலை விசாகன் என்பாரும், இவன் அவையிலும் நாட்டிலும் பெரும்புலவராய் வாழ்ந்திருந்தார்கள். இவன் ஆட்சிக் காலத்தில் சோழர் சாம்

ராஜ்யத்தின் வீழ்ச்சிக்கான அறிகுறிகள் தொடங்கிவிட்ட போதிலும்கூட, ஆட்சி மிகவும் சிறப்புப் பெற்றிருந்தமை சரித்திரம் கூறும் உண்மை.

மேலும், இவ்வரசன் ஓரளவு சமயப் பொறையுடையவன். இவன் திரிபுவனம் கோயில் கட்டியவன்; திரிபுவனம் கல்வெட்டு இவனைத் தில்லைச் சிற்றம்பலவருக்கு ஏகபத்தன் என்றும் கூறும். அதாவது இவன் வேறு தெய்வந் தொழாதவன். இப்பெயர் பொதுவாகச் சோழர் அனைவருக்குமே பொருந்தும். எனினும், இவன் வெறுப்பின்றிச் சைன சமயப்புலவர்களை ஆதரித்ததோடு, பிற சமயங்களுக்கு ஆதரவும் தந்தானென்று சாசன வாயிலாய் அறிகிறோம். 1199இல் திருப்பருத்திக் குன்றிலுள்ள சினாலயத் துக்கு இருபது வேலி நிலம் பிரசாதித்தான் என்பது சாசனச் செய்தி. அப்படியே தன் ஆட்சியின் மூன்றாம் ஆண்டாகிய கி.பி. 1181இல் இவன் தென்னார்காடு ஜில்லா வேலூரிலுள்ள திருமால் கோயிலுக்குத் தன்பெயரைச் சூட்டிக் குலோத்துங்க சோழ விண்ணகரம் எனப் பெயரிட்டான் (விண்ணகரம் - விஷ்ணு கோயில்). அதற்குக் குலோத்துங்க சோழநல்லூர் என்ற ஊரை நிபந்தமாக அளித்தான். ஆதலால் திருமாலின் பிரதாபம் கூறு கின்ற இந்தப் பரணி இந்த அரசன் காலத்தில், ஓரளவு இவன் ஆதரவில், இயற்றப்பெற்றது என்று கருதுவது தவறாகாது. அங்ஙனமாயின் இப்பரணியின் காலம் கி.பி. 1200ஐ அடுத்த சில ஆண்டுக்குள்ளாயிருக்கலாம். மூன்றாம் குலோத்துங்கன் காலம் 1178 - 1218. இக்குலோத்துங்கன் மீது சுமார் 1205இல் கோவை பாடப் பெற்றது. பரணியின் காலமும் இதே காலமாகலாம் - 1205 - 1210

ஒரு குறிப்பு இங்கு தருதல் பயனுடையதாயிருக்கும் இக் குலோத்துங்க சோழன் திரிபுவனம் என்ற பெருங்கோயிலைக் கட்டியவன். தான் தரித்துக்கொண்ட திரிபுவன சக்கரவர்த்தி என்ற பட்டத்துக்கேற்ப இந்த பெருங்கோயிலுக்குத் திரிபுவனம் என்று பெயர் வைத்தமை பொருத்தமுடையதே. இங்கு மூர்த்தி சரபமூர்த்தி எனப் பெயர் பெறுவர். பிற்காலத்தில் 16ஆம் நூற் றாண்டில், சரபமூர்த்தியின் வரலாறு கூறுகின்ற சரபபுராணம். என்பதும் புராணத் திருமலைநாதரால் பாடப்பெற்றது. இரணியனை வதைத்த நரசிம்மமூர்த்தி மிகுந்த உக்கிரத்தோ டிருந்தவர். திருமகள் பிரார்த்தித்தும் பிரகலாதன் வேண்டியும்

கூட, அவரது உக்கிரம் சிறிதும் தணியவில்லை. அதுகண்ட தேவர்களெல்லாம் மிகவும் அஞ்சிச் சிவபெருமானைப் பிரார்த்தித்தார்கள். சிவபெருமான் அப்போது சரபப்புள் என்ற புள்ளின் வடிவந்தாங்கி நரசிம்மத்தின் முன்தோன்றினார். இந்தப் புள்ளானது சிங்கத்தின் தலையும் நான்கு கைகளும் நான்கு கால்களும் கொண்டு இறக்கை படைத்துப் பறக்கவல்லது என்பது ஐதிகம். இந்த புள்ளைக் கண்டவுடன் நரசிம்மம் வலியிழந்தது. இந்தச் சரபமூர்த்தி இந்தத் தலத்திற்கே தனிச் சிறப்பாகவுள்ளவர். வேறெங்கும் இந்த மூர்த்தியைக் காணமுடியாது. (இரண்டாம் இராசராசன் அமைத்த தாராசுரம் கோயிலில் மட்டும் இவ் வடிவத்தைக் காணலாம்.) இரணியனுடைய வரலாறு கூறுகின்ற நூலாகிய இந்தப் பிரபந்தம் இந்த அரசனுடைய காலத்தில் செய்யப்பெற்றது என்பதற்கு ஏற்ப, இங்கு இந்த மூர்த்தியின் பெருமையும் இவன் செய்த இக்கோயிலில் வெளிப்படுவது ஒருவகையில் தொடர்புடைய செய்தியாக இருக்கின்றது. இது காரணமாகவும் இந்தப் பரணி மூன்றாம் குலோத்துங்கன் காலத்துச் செய்யப்பெற்றது என்று கருதுவது பொருத்தமாகலாம்.

## விளக்கமில்லாத பிரபந்தங்கள்

சைவமும் வைணவமும் மிக்க விளக்கம் பெற்ற இந்த நூற்றாண்டில், சிறு பிரபந்தங்கள் மிகப் பலவாகத் தோன்றியிருந்தன என்று தெரிகிறது. எப்படியோ, மூன்றாம் குலோத்துங்க சோழனையும், அவன் தம்பி என்று கருதுகிற (பட்டம் பெறாத) சங்கர சோழனையும் பற்றிய இரு பிரபந்தங்களே முழுமையும் கிடைத்தன. அவற்றை இதுவரையில் ஆராய்ந்தோம். இனி, வேறு வகையால் அறியக் கூடியனவும் இக்காலப் பகுதிக்கு உரியன என்று தெரிகின்றனவுமான சில பிரபந்தங்களைக் குறித்துச் சில சொற்கள் கூறலாம்.

இறையனார் அகப்பொருளுக்குப் பின் அதைத் தழுவிக் கட்டளைக் கலித்துறையாக ஓர் அகப்பொருள் இலக்கண நூல் செய்யப்பெற்றிருந்தது. அதற்குச் சிறப்பான ஓர் உரையும் அழகிய மேற்கோள் பாடலைக் கொண்டதாய் எழுதப்பெற்றிருந்தது. இவை அடியோடு மறைந்துபோகும் நிலையில் இருந்தமை கண்டு, வையாபுரிப்பிள்ளை அவர்கள் கிடைத்த பகுதிகளை மிக முயன்று செப்பம் செய்து, களவியற்காரிகை என்ற புதிய பெயர்

சூட்டி அழகாக அச்சிட்டார்கள். (இது பற்றிய ஒரு கட்டுரையை, எமது 14ஆம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாற்றில் காண லாம்.) இவ்வுரை வைணவ பரமாகவும், சைவ பரமாகவும், நான்கு பிரபந்தங்களைக் குறிப்பிடுகிறது. இவ்வுரையாசிரியரின் சிறப்பு ஒவ்வொரு பாடலும் இன்ன நூலைச் சேர்ந்தது என்று திட்ட மாக எழுதுவது; இல்லையானால், நூற் பெயர்களை அறிய வழியே இராது. இப்பிரபந்தங்களின் காலம் உரையின் கால மாகிய 14ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்று மட்டுமே இங்குக் குறிப்பிட முடியும்; எந்தக் காலம் என்று வரையறை செய்ய ஆதாரம் இல்லை. ஆயினும், தொடக்கத்தில் சொல்லிய வாறு இவை சமயச் சார்புடையனவாக இருப்பதால், சைவ சந்தான ஆசாரியர்கள் தோன்றியதும், சிறப்பான வைணவ வியாக்கியானங்கள் செய்த ஆசாரியர் தோன்றியதுமான இந்த நூற்றாண்டே இந்தத் தோத்திரப் பிரபந்தங்களுக்குரிய கால மென்று கருதுகிறோம்.

இக்காலத்துக்குரிய வைணவப் பிரபந்தம் ஒன்று.

**கோயில் அந்தாதி:**

இதிலிருந்து நான்கு பாடல்கள் மேற்கோளாக வந்துள்ளன; அவை திரிபில் அமைந்தவை. கோயில் என்பது திருவரங்கம். இரண்டு பாடல்களின் முழு வடிவம் கிடைக்காமையால் இங்கு தரவில்லை.

பிறவா ரணங்கு மணிக்குழை யார்கழல் பேணிணரென்று
அறைவா ரணங்கள் அரற்றும் அரங்கர் அருளிலர்போல்
மறவா ரணங்கள் மடங்கலுக் கோடும் வழிவழிவந்து
உறவா ரணங்கின் பொருட்டுர வோய்வரல் ஒங்கிருளே.

சேர்ந்தசங் கத்த சிறுநுதற் காகச்செவ் வேல் முருகற்கு
ஈர்ந்தசங் கத்தையிட் டாலென் பயன்கட் டிலங்கைச் செந்தீக்
கூர்ந்தசங் கத்துவிற் கோலிய கொற்றவன் வெற்றிச் செங்கை
ஆர்ந்தசங் கத்தரங் கன்திருத்தார் கொண் டணிமின்களே.

இவ்வந்தாதி முழுமையும் அகத்துறைப் பாடல்களாகப் பாடப்பட்டிருந்தது போலும்.

பின்வரும் மூன்று நூல்கள் சைவபரமானவை.

## நறையூர் அந்தாதி

நறையூர், நாயன்மார் பாடல் உடைய தலம். இதுவும் அகத்துறை அந்தாதி போலும். பின்வருவது ஒரே பாடல்:

நல்லளந் தானு மமுதளந் தானும் நகைக்கு நல்ல
வில்லளந் தாள்நுதற் கும்விலை கேட்கில் விரிதமிழின்
சொல்லளந் தானொரு பாவலர்க் காத்துறையூர் நறையூர்
நெல்லளந் தானளந் தானெடு நாட்டிற்கு நேர் நிற்குமே.

## தில்லை அந்தாதி

தில்லை, சிதம்பரம். இதுவும் அகத்துறைப் பாடல் கொண்ட ஓர் அந்தாதி. பின்வரும் ஒரே பாடல் காணப்படுகிறது. இது தெளிவு என்ற துறைக்குரியது.

தொடிவா னரமங்கை யன்றிமைக் குங்கண்கள் தோயுநிலத்
தடிவா னரந்த மலரும் புலரும் அயன்தலையைத்
தடிவா னரன்பிறை தாழ்சடை யோன்தில்லை யூசல்வல்லிக்
கொடிவா னரம்புரியும் பொழில் வாய்வந்த கோல்வளைக்கே.

## மழவை எழுபது

மழவை என்பது, திருமழபாடி. பாடல்பெற்ற சிவத்தலம். இதுவும் அகத்துறைப் பாடல் கொண்ட நூல். எழுபது பாடல் பாடுவது ஓர் இலக்கிய மரபு என்பதைப் பரிபாடலாலும் ஐந்திணை எழுபது என்ற பதினெண்கீழ்க்கணக்கு நூலாலும், ஈங்கோய்மலை எழுபது, கோயில் பண்ணியர் திருவிருத்தம் போன்ற திருமுறை நூல்களாலும், ஏர் எழுபது ஈட்டி எழுபது போன்ற பிற்கால நூல்களாலும் அறியலாம். பின்வரும் ஒரே பாடல் காணப்படுகிறது:

செருமலை தானவர் முப்புரந் தீயெழத் தேவர்கட்கும்
வருமலை தீர்த்தவன் மாமழ பாடியில் வந்தெதிர்ந்த
கருமலை வீட்டிய செம்மலை யன்றிக் கறங்குவதிம்
மருமலை கூந்தலை யார்கொள்ள வேண்டி மணமுரசே.

○○○

அத்தியாயம் 12

# பிற ஆசிரியர்

## முன்னுரை

பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆசிரியர்களைப் பல்வேறு தலைப்புக்களில் நாம் பார்த்தோம். இவர்கள் செய்த நூல்களாலும் வாழ்ந்த வரலாற்றுச் செய்திகளாலும், இவர் களுடைய வரலாறுகளை நாம் குறிப்பிட முடிந்தது. இவர்களே யன்றிப் பின்னும் பலவேறு புலவர்கள் இக்காலத்தில் வாழ்ந் திருக்கிறார்கள். நூலும் செய்திருக்கிறார்கள், உரையும் எழுதி யிருக்கிறார்கள். இவர்களைக் குறித்த வரலாறுகள் ஒன்றும் நமக்கு விளங்காமையால் எதுவும் குறிப்பிட இயலவில்லை.

சித்தராரூடம் என்ற பாம்பு நூல் இக்காலத்தில் தோன் றியது. கவிராசராசன் என்று ஒரு புலவர் சிறப்பாக வாழ்ந்தார் என்றும் அறிகிறோம். சோழர் சாசனங்களாலும் பாண்டியர் சாசனங்களாலும் அறியப்பெற்ற புலவர் அனேகர். அப்படியே சத்திய மங்கலத்து ஆட்சிபுரிந்த கோப்பெருஞ்சிங்கன் அவை யில் புலவர் பலர் வாழ்ந்திருக்கிறார்கள். இவர்களைக் குறித்துச் சில செய்திகள் கல்வெட்டுக்களால் நாம் அறிகிறோம். இப்படி அறியப்பெற்ற செய்திகளை இப்பகுதியில் இங்கே தொகுத்துக் கூறுகிறோம்.

இவர்களையன்றி, பெயர் தெரியாப் புலவர் எத்தனையோ பேர் அரசர்கள் மீது அழகாக மெய்க்கீர்த்தி முதலியன பாடி யிருக்கிறார்கள். அவர்களைக் குறித்து நமக்கு ஒன்றுமே தெரிய வில்லை. கல்வெட்டுக்களை ஆராயும்போது மெய்க்கீர்த்திகள் பல, மிக்க இலக்கியச்சுவை பொருந்தியனவாகத் தெரிகின்றன: ஆனால் இவற்றுக்கு எந்த விளக்கமும் நமக்குக் கிடைக்கவில்லை.

## கவிராசராசன்

பெரும் புலவர்களாய் இலக்கியம் செய்த ஆசிரியர்கள் பலவேறு காலங்களில் பலர் வாழ்ந்திருக்கிறார்கள். ஆங்காங்கு நூலுரைகளில் வரும் குறிப்புக்கள் தவிர அவர்களுடைய வாழ்க்கையோ நூலோ நமக்குக் கிடைக்கவில்லை. அப்படிப் பட்ட ஆசிரியர்களில் கவிராசராசன் என்பவரும் ஒருவர். தக்கயாகப்பரணி உரையில் (தாழிசை 377) 'கவிராசராசன் வாக்கு' என்று பின்வரும் அடியை உரைகாரர் காட்டுகிறார்:

> வண்பசிக் கடும்புலிக் குடம்பளித் துடம்பின்மேல்
> வாளெறிந்த வாயினூடு பால்சுரந்து –

நூலின் பெயரோ அதன் பொருளோ தெரியவில்லை; கவிராச ராசன் என்றமையால், சிறப்புடைய புலவர் போலும். உரைகாரர் காலம் 15ஆம் நூற்றாண்டு ஆனமையாலும், கவிஞர் பெயரில் இராசராசன் என்றிருத்தலினாலும், இவர் தக்கயாகப் பரணியில் சிறப்பிக்கப்பெற்ற இரண்டாம் இராசராசன் காலத்துக்குச் (1148 - 63) சிலகாலம் கழித்து, 13ஆம் நூற்றாண்டில் இருந்திருக்கக் கூடுமென்று கருதுகிறோம். 'வாக்கு' என்று உரைகாரர் அருமை யாகக் கூறுவதால் இவருடைய பெருமை விளங்கும்.

## சத்திமுற்றப் புலவர்*

சத்தி முற்றம் என்பது பண்டைய சோழர் தலைநகராகிய பழையாறையின் ஒரு பகுதியாகச் சோழர் பேரரசின் காலத்தில் விளக்கம் பெற்றிருந்தது. (சுந்தர பாண்டியன் அழித்த சோழர் நகரங்களில் பழையாறையும் ஒன்று.) பின்னர் பழையாறை நகரம் காலகதியில் சிதைந்து போகவே, இன்று ஒரு தனிச் சிற்றூராயிருக்கிறது. இது இப்போது ஒரு பாடல்பெற்ற சிவ

* சத்திமுற்றப் புலவர் பற்றிய ஐயரவர்கள் குறிப்பு: இவர் சோழிய வேளாளர். திருச்சத்தி முற்றத்தைச் சார்ந்த பட்டீசுவரத்தில் தெற்கு வீதியில் வசித்து வந்தார் என்று தெரிகிறது. இவர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் அங்கே இருந்து வருகின்றனர். இந்தப் பரம்பரை யோரில் மூன்று தலைமுறைக்கு முன்பு முத்துக்கருப்ப வாத்தியா ரென்பவரும், அவர் குமாரர் அப்பாவு வாத்தியார் என்பவரும் இவர் தம்பி ஐயா வாத்தியாரென்பவரும் படித்தவர்.

ஸ்தலம். முற்காலத்தில் இங்கு வாழ்ந்த ஒரு புலவர், வறுமையால் நொந்து தம்மை ஆதரிப்பாரின்றித் துயருற்று, மதுரைக்குச் சென்று பாண்டி மன்னனைக் கண்டு பாடிப் பரிசில் பெறலாம் என்ற எண்ணத்தோடு சென்றார். அவர் சென்றஅன்று, பாண்டியன் அவையில் ஒரு சிறப்பான சம்பவம் நடந்திருந்தது. முதல்நாள் பாண்டியன் சில நாரைகளை வைகைக் கரையில் கண்டிருந்தான். அவற்றினுடைய சிறந்த கால்களும் கூர்மையாகச் சிவந்து நீண்டிருந்த அலகும் அவன் உள்ளத்தைக் கவர்ந்தன. மறுநாள் வழக்கம் போல் காலையில் அரசவை கூடியது. நாரையின் அலகுக்குச் சரியான ஓர் உவமை கூறும்படி புலவர்களைப் பாண்டியன் கேட்டான். புலவர்கள் கூறிய உவமைகள் அவனுக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை. அவன் முகம் சுளித்திருந்ததைக் கண்ட அவைப்புலவர் பெரிதும் மனம் தளர்ந்தனர்.

இந்த வேதனையான நேரத்தில், சத்தி முற்றத்திலிருந்து வந்த புலவர் அரசவையின் வாயிலை அடைந்தார். கலங்கியிருந்த அவைப்புலவர் இவரைப் பாண்டியன் அவையில் செல்ல விடாமல் தடுத்தனர். வருந்திய புலவர் தங்குவதற்கு இடமின்றி, ஊர்ப் பொதுவில் நின்ற ஒரு மரநிழலில் இருந்த பாழ் மண்டபத்தில் இராப்பொழுதைக் கழிக்க ஒதுங்கியிருந்தார். குளிரினின்றும் உடலை மூட ஒன்றுமில்லாமல், கையினாலே உடலை மூடிக்கொண்டு இருந்தார். இருட்டு நேரம், கூரை இல்லாத அந்த மண்டபத்தின் மேலாகச் சில நாரைகள் பறந்து சென்றன. கண்ட புலவர், மதுரை சென்ற தன் கணவர் பொருள் பெற்று வருவாரென்று எண்ணி, இவர் திரும்பி வரும் வரவைப் பல்லி சொல்லும் என்று எதிர்பார்த்திருந்த தம் மனைவியை நினைத்தார். வருந்திய கவிஞருள்ளம் நாரைவிடுதூதாக ஒரு பாடல் பாடிற்று.

அந்தநேரம் நகர் பரிசோதனைக்காக ஒருவருமறியாது பாண்டி மன்னன் தனியே வீதிவழியாக வந்து கொண்டிருந்தான். தனியாக ஒரு பாழ்மண்டபத்திலிருந்து நம் புலவர் பாடிய பாடற்குரல் அவன் காதில் விழுந்தது. சற்று இருந்து கேட்டான். புலவர் தனிமையில் பாடியவர் ஆதலினால், தாம் பாடிய பாடலை நன்கு சுவைத்துத் திருப்பித் திருப்பிப் பாடிக் கொண்டிருந்தார்:

நாராய், நாராய், செங்கால் நாராய்!
பனம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயும்நின் பெடையும்
தென்றிசைக் குமரி யாடி வடதிசைக்
காவிரி யாட ஏகுவி ராயின்,
சத்தி முற்றத்து வாவியிற் சென்று
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லி
வரவுபார்த் திருக்கும் மனைவியைக் கண்டு, எம்
கோமான் வழுதி கூடல் மன்றத்து
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலுறத் தழீஇ,
அலகு திறந் தன்ன பல்லின னாகிப்
பேழையுள் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே!

*பாட்டைக்கேட்ட பாண்டியன் மகிழ்ச்சி அடைந்தான். "பழம் படு பனையின் கிழங்கு பிளந்தன்ன - பவளக் கூர்வாய்ச் செங் கால் நாராய்" என்ற வரிகளில் தன் மனம் தேடிய உவமை பொருந்தியிருக்கக் கண்டான். தனியாகவே அரண்மனைக்குத் திரும்பினான். மறுநாள் காலையில் புலவரைத் தேடி அவைக்கு அழைத்துவரச் செய்தான். அவர் பாடிய பாடலை மீண்டும் கூறச்செய்து கேட்டு, அவையினர் அறியுமாறு தன் மகிழ்ச்சி யைப் புலப்படுத்தி, புலவருக்குத் தக்க பரிசில்கள் நல்கி, பின்னர் ஏவலாளரை அனுப்பிச் சத்தி முற்றத்திலிருந்து புலவருடைய மனைவி மக்களை அழைத்து வரச்செய்து, மதுரையில் புது வீடும் கட்டுவித்துக் குடியேற்றினான்.*

*இது தமிழ்நாடு நன்கறிந்த வரலாறு. புலவரது இயற்பெயர் தெரியவில்லை. சத்தி முற்றத்தில் பிறந்தமையால் சத்தி முற்றப் புலவர் என்கிறோம். இவ்வரலாறு பிற்காலத்து நூலாகிய சோழ மண்டல சதகம் 63ஆம் பாடலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது:*

நினையுங் கழற்காற் சிலம்பலம்ப நின்ற பெருமானினைப்பாடிப்
பனையின் கிழங்கு பிளந்தன்ன பவளக் கூர்வாய் நாரையென்றே
புனையும் முதனூற் சத்திமுற்றப் புலவ னமுது புசித்தூற
வனையும் மதுரத் தமிழ்வாடை மணக்குஞ் சோழமண்டலமே.

இப்புலவர் 13ஆம் நூற்றாண்டு என்பது பொதுவாக அறிஞர் கொண்டுள்ள கருத்தாகும். இதற்கு எந்த ஆதாரமும் காணப் பட்டிலது. எனினும், இங்கு ஒரு பொருத்தம் இருப்பது புலப் படும். கி.பி. 1279 உடன் சோழமன்னர் ஆட்சி முடிவடைந்தது. பிறகு தமிழ்நாட்டில் கொஞ்சகாலம் பாண்டியராட்சி ஓங்கி யிருந்தது. சோழராட்சி குலைந்த காலத்தில் தோன்றிய நல்லிசைப் புலவரான சத்திமுற்றப் புலவர் பாண்டிநாடு நோக்கிச் சென்றார் என்பது ஏற்கக்கூடிய கருத்தே. எனவே, இவருடைய காலம் 13ஆம் நூற்றாண்டின் இறுதி என்பதை நாம் உறுதி செய்யலாம்.

புறநானூறு 67ஆம் பாடலில் பிசிராந்தையார் என்ற புலவர் ஓர் அன்னச்சேவலைத் தம்முடைய நண்பனும் தலைவனுமா கிய கோப்பெருஞ் சோழனிடம் தூது விடுகிறார். சத்திமுற்றப் புலவரது பாடலானது பிசிராந்தையாருடைய 'அன்னச்சேவல் அன்னல்சேவல்' என்று தொடங்குகின்ற பாடலிலிருந்து எழுந் திருக்கக்கூடும். அங்கும் புலவர், அப்புள்ளை நோக்கி, "குமரி யாற்றினது பெரியதுறைக்கண்ணே கலிரையை மேய்ந்து வட திசையிலுள்ள இமயமலைக்கண்ணே போகின்றபோது, இடை யில் சோழநாட்டில் கிள்ளியைப் பார்த்து இன்னது சொல்வா யாக" என்று கூறுகின்றார்.

## சித்தராரூடம்

இப்பெயருடையதொரு பழங்கால நூல் இருந்ததென் பதைச் சிந்தாமணியுரையில் நச்சினார்க்கினியர் குறிப்பிடுவ தால் நாம் அறிகிறோம். பதுமையார் இலம்பகம் 122ஆம் பாடல், "அந்தணன் நாறுமாயின் ஆன்பாலவியினை" என்ற பாடலுக்கு, "சித்தராரூடமென்னும் நூல் கொண்டுவந்து கூறின், ஆன்பாலவி யினை நாறுமாயின் அஃது அந்தணன் பாலதாம்; அலர்ந்த காலத்தில் நந்தியா வட்டத்தை நாறுமாயின், அஃது அரசன் பாலதாம்; தாழை மலர் நாறுமாயின் வணிகன் பாலதாம்; மற்றொன்றும் கூடாத அரிதாரம் நாறுமாயின், அது சூத்திரன் பாலதாம் என்று கூறினான்" என்று எழுதுகிறார். பதுமையைத் தீண்டிய நாகத்தின் நஞ்சைச் சீவகன் ஆராய்ந்து அரசர் சாதி என்று கூறுகின்றான்.

சித்தராரூடம் என்பது, பாம்பைப் பற்றிக் கூறுகின்ற ஒரு நூல்; இன்றைய பரிபாஷையில் சொல்வதானால் பிராணி நூல். பாம்பின் பிறப்பு, அதன் வளர்ச்சி, பாம்பு வகைகள் கூறி, விஷம்

முதலியவற்றையும், விஷத்தை முறிக்கும் மருந்துகளையும், இந்நூல் விரிவாகக் கூறுகிறது. "சித்தராரூடச் சிந்து என்ற விஷ வைத்திய நூலொன்று தமிழில் வழங்குகிறது" என்பது ஐயர வர்கள் குறிப்பு.

இந்நூல் சிந்துப் பாட்டினால் ஆனது. தொடக்கத்தில் காப்பாக உள்ள சில பாடல்கள் மட்டும் விருத்தம். காப்புச் செய்யுளிலேயே ஆசிரியர் நூற்பெயர் குறிப்பிடுகிறார்:

அத்திமா முகவன் செய்ய அடியிணைக் கமலம் போற்றிச்
சித்தரா ரூடம் தன்னில் செப்பிய பொருள் ஆராய்ந்து
சுத்தமாய் எவர்க்கும் தோற்றச் சுருக்கமாய் நொண்டிச் சிந்தாய்
வித்தகர் அருளி னாலே தமிழினில் விளம்ப லுற்றேன்.

காசிபர் தேவி யாவாள் கத்துரு விநதை யான்பேர்
ஏசிலாத் திருவின் மைந்தர் இருநூற்று நாற்பத் தெட்டில்
வீசிய விடங்கொள் பாம்பின் மிக்கதோர் தலைவன் என்று
மாசிலா அட்ட நாகம் ஒன்றுதான் வகுக்க லாமே.

பின்னர் மருதூர் நாகலிங்கரை வணங்கிச் சித்தராரூடம் தொடங்குகிறார். இனி யாவும் நொண்டிச்சிந்துப் பாடல்கள்; தொகை 312; 5 மட்டும் விருத்தம்.

திருமருதூர் வளரும் நாகலிங்கர்
சீர்பாத கமலமென் சென்னியில் வைத்து
மருவும் சித்தராரூடப் பொருளினை
வகுத்துச் சொல்வே னிந்த மகிதலத்தில்.

அண்டர்பணி கர்த்தனார் படைத்ததனில்
ஆகாத சீவசெந்து அனேக முண்டாம்
விண்டுரைக்கக் கேளுமினி நல்லபாம்பு
விரியன் வழலை கொம்பேறி மூக்கன்.

சாணாக மூக்கன் புடையன் மண்டலி
சவடி மயக்கரவம் மண்ணுளி சாரை
வாணாளை வாட்டும் செய்யான் இருதலை
மணியன் சிலந்தி புலிமுகப் பூச்சி.

தேள் புள்ளிவண்டு பூரான் பச்சோந்தி
செவ்வட்டை பேய்நரி நாய் செருச்செயெலி
வாள் பல்லுப்பூனை புலி பிலவங்கம்
வனத்துத் தவளையட்டை வாசி முதலை.

அரணை நட்டுவக் காலி முதலியவை
அல்லாத சீவ செந்தனேக முண்டாம்
உரகத்தின் பெயரும் நிறமும் சாதியும்
ஊணும் மணமும் அவை உறைவிடமும்.

படமெடுத் தாடுங் குறியும் முட்டையிட்டுப்
பருவமறிந்து பொரித்தூரும் பரிசும்
விடமுறுந் தந்தக் குறியும் கடித்திடு
விதமும் கடித்த கடி மீளாவிடமும்.

காலக்கடி அடக்கக் குறிவேகக் குறி
கருதிய தூதரிற் காணுங்குறியும்
சீலமுள்ள மணி மந்திரத்தால் கருட
தியானத் தால்மருந்தினால் தீர்க்கும் செயலும்.

குருமலரடி வணங்கி வகையாகக்
கூறுகி றேனிந்தக் குவலயத்தில்
மரை மலர்ப் பொகுட்டுறை வோன் பயந்தருள்
மகவென வந்துதித்த மாதவத்தினோன்.

*மாதவத்தினோன் - இவ்வாசிரியர், தாமரைப் பொகுட்டில் உறைகின்ற பிரமனுடைய புத்திரர் என்று தம்மைக் கூறிக் கொள் கின்றார். அச்சிட்ட நூல் தலைப்பில் கௌசிக முனிவர் என்று பெயர் அமைந்திருப்பது இக்கூற்றை ஒட்டித்தான் போலும். பின்வந்த ஆசிரியர்கள், சிறப்பாக சமயத்துறையிலும் மந்திர தந்திரத் துறைகளிலும், மூலமான முனிவர் மரபைத் தமது மரபாகச் சொல்லுவதை இன்றும் காண்கிறோம். சித்தராரூட ஆசிரியரும் இவ்வாறு சொல்லிக் கொள்ளுகிறார் என்று நாம் கருதவேண்டும்.*

*நச்சினார்க்கினியர் குறிப்பிட்டபடி பாம்பு மலர் மணம் நாறுவது இந்நூலில் 23ஆம் பாடல் கூறுகிறது:*

அந்தணர் நாவி மணம் – இறையவர்
அலர்ந்த செந்தாழையி னலர்மணமாம்
வந்திடும் வசியர்மணம் – பாதிரிப்பூ
வகுத்த சூத்திரர் மண மிலுப்பையின்பூ.

*நாகம் மணம் நாறுவது இன்றும் காணுகின்ற உண்மை. நல்ல பாம்பு வருமிடத்தில் தாழம்பூ மணம் வீசுவதை இன்றும் பலர் கண்டிருக்கிறோம்.*

சித்தராரூடம் என்ற நூல் 1916இல் குருசாமிக் கோனாரால் மதுரையில் அச்சிடப்பெற்றது. இதனோடுகூட சர்ப்பாரூட சாத்திரம் மந்திர சக்கரங்களும் சேர்த்து அச்சிடப்பெற்றன. இவை யாவும் "பதினெண் சித்தர்களில் மகா மகத்துவம் பொருந்திய கௌசிக முனிவர் திருவாய் மலர்ந்தருளிய"தாகத் தலைப்பு ஏடு கூறுகிறது. மற்றொரு விளம்பரம், விஷ வைத்திய ஆரூடம் எட்டு என்றும், அவை சித்தர், சர்ப்பம், மந்திரம், சக்தி, கருடம், தேவி, நாகம், சிவாரூடம் என்றும் கூறுகிறது.

அச்சிட்ட புத்தகம் முன்னே குறிப்பிட்டபடி ஐந்து விருத்தங்களும் 307 சிந்துக்களும் கொண்டது. முன்காட்டிய "காசிபர் தேவி" என்ற பாடல் ஏட்டில் உள்ளது; அச்சில் இல்லை. இந்நூல் முறையாகப் பின்வரும் பொருள்களைக் கூறுகிறது; பாம்பின் பிறப்பு, சாதி, இரை எடுக்கும் நாள், இரை இருக்குமிடம், ஆடும்குறி, முத்திரை, நிறம், வாசனை, கருப்பம் முதலியன, கடிவாய்க்குறி, கடித்தால் கடிமீளாத உறுப்பு, மீளாத நாள், விரியன் முதலியவைகளின் பிறப்பு, வயது, தூதன் வரவு, வடிவு, திக்காரூடம், சரக்குறி, வேகக்குறி, அடக்குக்குறி, கருட தியானம், பிற தெய்வங்கள் தியானம், மருதூர் நாகலிங்கர் தியானம், சோதனை வேர், நசிகம், புகை, ஒத்தடம், துவளை, தூள் மருந்து, பலவகை மருந்து முறைகள், கலிக்கம், தைல வகைகள், பல அரவுக்கடிக்கு மருந்து, பிற பூச்சிகளுக்கு மருந்து, பாம்பு பிடிப்பதற்குக் கடகம், பாம்பின் வாய் சுட்ட வேர், விஷம் ஏற்றவும் இறக்கவும் மோதிரங்கள் என்பன.

இந்நூலின் இயல்பு காரணமாக இது மிகவும் எளிய நடையில் இருப்பது தெளிவு. இது காரணமாகவே இதை மிகவும் பிற்காலத்து நூல் என்று ஒதுக்கி விடமுடியாது. சில இடங்கள் சொல் நயமும், மடக்கு நயமும் பொருந்தி உள்ளன. பின்வரும் பாடல்கள் காண்க.

மெய்யென நம்பு மடியார் – தங்களின்
வெய்ய வினையகற்றி விளங்க வைப்போர்
பொய்யென நினைத்தவர்பால் – ஒருநாளும்
புகுதா தவர்வினை புகுதாதவர்

கலியுக வரதரென்று – மொழிகின்ற
காரணத் தார்சது ராரணத்தார்
மலைமக ளினைத் தமது – நல்ல
வாமத்தில் வைத்துகந்த மகிமையினார்.

நச்சினார்க்கினியர் இந்நூற் பெயரைக் குறிப்பிடுவதாலும், இப்பெயர் கொண்ட வேறுநூல் இல்லாமையாலும், அவர் குறிப்பிட்ட நூல் இதுவே என்று நாம் கருதலாம். அவர் காலம் பதினான்காம் நூற்றாண்டு. ஆகவே, இந்நூல் அவருக்குச் சிறிது காலம் முற்பட்டது என்றாலும், இதன்காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டு என்று குறிப்பிடுதல் பொருந்தும். சிந்துப் பிரபந்தம் என ஒரு நூல் இருந்ததாகக் கல்வெட்டின் மூலம் அறிகிறோம். (அடுத்துவரும் சாசனப் புலவர் 2 பார்க்க); ஆதலால் அப்பழங் காலத்திலேயே சிந்துப் பாடல்கள் இத்தகைய பொருளைப் பாடுவதற்குப் பயன்பட்டன என்று கருதுவது பிழையாகாது.

## திருக்கோட்டி நம்பி

தமிழில் ஏற்பட்டிருந்த வைத்திய நூல்களும் சோதிட நூல்களும் எண்ணிறந்தன. ஏடுகளை அவிழ்த்துப் புரட்டிப் பார்த்து ஒரு பொருளைக் கண்டு சொல்வது சற்றே கடினமான வேலை. ஆதலால், கல்வித்துறையில் அறிவுடையோர், தமிழிலக்கணங் களை மனப்பாடம் செய்ததுபோல, வைத்திய நூல்களாயினும், சோதிட நூல்களாயினும், மனப்பாடம் செய்தே வைத்திருந் தார்கள். மனப்பாடத்துக்கு எளிதாயிருக்கும் பொருட்டு, எல்லா நூல்களும் எதுகை மோனை பொருந்தச் செய்யுள் வடிவிலேயே இயற்றப்பட்டிருந்தன. பெரும்பான்மையான நூல்கள் விருத்தப் பாவும், வெண்பாவுமே.

இவ்வாறு எழுந்த நூல்களுள், உள்ளமுடையான் என்ற சோதிட நூலும் ஒன்று. இது காலத்தால் மிகவும் பழையது. இதைச் செய்தார் திருக்கோட்டியூர் நம்பி என்பவர். "சகரனாண்டு ஆயிரத்து இருநூற்றின், முன்னையோர் வடமொழியினர் செய்த சாத்திரத்தை யெல்லாம் செந்தமிழினாலே செய்து முடித்தான், வெண்பைக்குடி நாட்டுப் பிரதேசப் பாண்டவன் மங்கலமான பஞ்சமாதேவி சதுர்தேவி மங்கலம் கடவூராரியன் திருக்கோட்டி நம்பி என்று கருதுவது."

இது மதுரைத் தமிழ்ச் சங்கத்து ஏடொன்றின் இறுதியில் எழுதப்பட்டிருந்த வாசகம் (செந்தமிழ் தொகுதி 1, பக்கம் 469). இவ்வாசிரியர் இராமானுசரின் ஆசாரியரான திருக்கோட்டி நம்பியின் ஊரினர். அப்பெயராலேயே இவரும் வழங்கப் பெற் றிருக்கிறார். அவர் பரம்பரையினராகவும் இருக்கலாம். அவ்வூரின்

பெயரும் நாடும் இதனால் அறிகிறோம். செய்தகாலம் சகம் 1200 எனவே, கி.பி. 1278 ஆகிறது. வீமேசுர உள்ளமுடையான் என்பது வேறு; பிற்கால நூல்.

**சாசனப் புலவர்**

பிற்காலச் சோழரும் பாண்டியரும் ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தே, நாட்டில் கவிவாணருக்கு நல்லாதரவு ஏற்பட்டிருந்தது. சிறப்பான பல நூல்களும் காவியங்களும் இலக்கணங்களும் இக்காலத்தில் தோன்றின என்பதை நாம் அறிவோம். வேந்தர் களையும் அவர்கள் வெற்றிப் பிரதாபங்களையும் பாடும் அரசவைப் புலவரும் பலர் இருந்து வந்திருக்கிறார்கள். இவர் களுட் சிலர், தாமே புலவராயும் படைத்தலைவர் போன்ற பதவி வகித்தவராயும் இருந்தனர். கோயில்களில் அரசர்கள் பல்வகைக் கொடைகளைக் கல்வெட்டில் பதித்து வைக்கத் தொடங்கியபோது, அவர்களுடைய பிரதாபங்களை இவ்வகைப் புலவர்கள் மெய்க்கீர்த்திகளாகப் பாடினார்கள். வீரச்செயல் களையும் தனிப் பாடல்களாகப் பலர் பாடினார்கள். இவற்றுட் பல பாடல்கள் சாசனங்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

13ஆம் நூற்றாண்டில் எழுந்த சோழ பாண்டிய அரசர்கள் கோயில்களிற் பொறித்த கல்வெட்டுக்களால், அவர்கள் காலத் திலிருந்த சில புலவர்களின் வரலாறுகள் தெரிய வருகின்றன. இவற்றை மு. ராகவையங்கார் எழுதிய சாசனத் தமிழ்க்கவி சரிதத்திலும், சதாசிவ பண்டாரத்தார் எழுதிய சோழர் வரலாற் றிலும் காணலாம். அவற்றுள் பொருத்தமானவற்றை இங்கு வகைப்படுத்திக் கூறுவோம்.

## சோழர் ஆதரவு பெற்றோர்

**1. அருள்நிலை விசாகன்**

இவர் பாரதம் தமிழ்ப்படுத்தினார் என்று சொல்லப்பட் டுள்ளது. பிரசித்திபெற்ற சின்னமனூர்ச் சாசனம் என்பது மூன் றாம் இராசசிம்ம பாண்டியன் "மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" விளங்கினான் என்று கூறுகிறது. அது இன்று கிடைக்காத ஒரு பழைய நூல். இவனுக்கு முந்திய 9ஆம் நூற்றாண்டில் நந்திவர்மன் காலத்தில் பெருந்தேவனார் பாரதவெண்பா பாடினார்; இடையில் உரைநடையும் உண்டு.

இந்நூலில் சில சில பகுதிகள் இன்று கிடைக்கின்றனவேயன்றி, நூல் முழுமையும் கிடைக்கவில்லை. வில்லிபுத்தூரர் செய்த பாரதம் விருத்தப்பாட்டு, 15ஆம் நூற்றாண்டு, முழுமையும் இன்று அச்சில் உள்ளது.

இவற்றுக்கிடையே, மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் ஒரு பாரதம் புதிதாய்த் தமிழில் செய்யப்பெற்ற தென்று சாசனம் தெரிவிக்கிறது. அவனது 32ஆம் ஆட்சி யாண்டில் (கி.பி. 1210) மணவில் கோட்டத்துத் திருப்பழையனூர் திருவாலங்காட்டுத் திருவரங்கில் அண்டமுற நிமிர்ந்தருளின நாயனாருக்குக் குன்றவத்தனக் கோட்டத்து இல்லத்தூர் நாட்டு அரும்பாக்கமுடைய அருணிலைவிசாகன் திரைலோக்யமல்லன் வத்ஸராஜன் என்பார் ஒரு நந்தா விளக்குவைத்தார் என்றும், அவ்விசாகன் பாரதந்தன்னை அருந்தமிழ்ப்படுத்திச் சிவநெறி கண்டனன் என்றும், சாசனம் கூறுகிறது. (பெயர் அறநிலை விசாகன் என்பர் சதாசிவ பண்டாரத்தார்.) இதனால் 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழில் மூன்றாவது முறையாக ஒரு பாரதம் செய்யப்பட்டதென்று தெரிகிறது. இப்பாரதம் இன்று இல்லை. சாசனத் தொடர்களால், இவர் சிற்றரச மர பினருள் ஒருவர், அரசியல் அதிகாரி, படைத்தலைவர், சிவ பக்தியில் சிறந்தவர், செந்தமிழ்ப் புலமையுடையவர் என்று அறிகிறோம்.

இச்சாசனம் திருவாலங்காட்டு நடராசப் பெருமானை அண்டமுற நிமிர்ந்தருளின நாயனார் என்று குறிப்பிடுகிறது. ‘அண்டமுற நிமிர்ந்தாடும் எங்கள் அப்பனிடம் திருவாலங் காடே’ என்ற காரைக்கால் அம்மையார் திருப்பாடலைப் போற்றி இப்பெயர் சாசனத்துள் கொள்ளப்பெற்றது என்று நாம் அறிதல் வேண்டும்.

### 2. திருவாழி பரப்பினான் கூத்தன்

காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோயில் சாசனமென் றால், மூன்றாம் இராசராசனது (1216-1256) 21ஆம் ஆட்சியாண் டில் (கி.பி. 1237) திருவாழி பரப்பினான் கூத்தன் என்பான், சிந் துப் பிரபந்தமொன்று பாடி, அதற்குப் பரிசாகப் பொத்தப்பிச் சோழன் திருக்காளத்தி தேவன் என்ற அரசனிடம் வள்ளுவப் பாக்கம் என்ற ஊரை முற்றூட்டாகப் பெற்றான் என்று கூறும். திருவாழி பரப்பினான் என்பது திருமாலின் சமயத்தைப் பரப்பி

னான் என்று பொருள்படும். மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் என்பவன் பவணந்தி முனிவரை ஆதரித்த சீயகங்கனுக்கு அம்மான் (பக்கம் 130 பார்க்க); இவன் திருவாழி பரப்பினான் சந்தி என்ற பெயரால் திருநீர்மலைத் திருமால் கோயிலுக்கு நிலம் அளித்தான், காளத்திக் கோயிலுக்குத் திருப்பணிகள் செய்தான் என்று வேறு கல்வெட்டுக்கள் கூறும், இன்று அச்சிந்து கிடைக்க வில்லை. தமிழில் முதன்முதலில் தோன்றிய சிந்துப்பாட்டு இது வாயிருக்கலாம். இது கச்சித் திருமாலைப் புகழ்வதாயிருக்கும்.

### 3. வீராந்தப் பல்லவரையர்

திருக்கடவூரில் மூன்றாம் குலோத்துங்கனுடைய 23ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1201) எழுந்த ஒரு கல்வெட்டால் அரச னது அவைப்புலவருள் ஒருவராக வீராந்தப் பல்லவரையர் என்ற புலவர், அரசனிடம் விண்ணப்பித்து, பாரசவன் பொன்னன் என்பவனை நிருத்தப் பேரரையனாக நியமிக்கும்படியும் அவன் நட்டுவநிலை நடத்தி வரும்படியும் செய்தார் என்று அறிகி றோம். இவர் நூல் செய்ததாகவோ, பாடல் பாடியதாகவோ அறிய இடமில்லை. எனினும், அரசனுடைய வாயிற்புலவர் மெய்க்கீர்த்தி முதலியன பாடுபவராதலால், அரசனிடம் செல் வாக்குப் பெற்றிருந்த இப்புலவர் மெய்க்கீர்த்தி பாடியிருக்க லாம். குலோத்துங்கசோழன் கோவை பாடிய ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை. இவரே செய்துமிருக்கலாம்; துணிந்து கூற ஆதாரமில்லை.

## பாண்டியர் ஆதரவு பெற்றோர்

### 4. திருவரன் குளமுடையான்

தேவன் திருவரன்குளமுடையான் என்ற புலவர் பாண்டி நாட்டுப் பொன்னமராவதி முதலான ஊர்களில் வாழும் மாவீரர்கள் மீது போர்வஞ்சி என்ற பிரபந்தம் பாடினார். அவர் கள் கேட்டு மகிழ்ந்து, அவருக்கு மறச் சக்ரவர்த்திப்பிள்ளை என்ற பட்டத்தைச் சூட்டித் தூத்துக்குடி என்ற கிராமத்தில் பாதி இறையிலியாகவும் கொடுத்துப் பாராட்டினார்கள். புதுக் கோட்டைச் சீமையிலுள்ள திருவரன்குளம் திருமால் கோயிலில், திரிபுவன சக்கரவர்த்தி மாறவர்மன் சுந்தர பாண்டியன் (1216 - 38) ஆட்சியாண்டு 11இல் (கி.பி.1227) இச்செய்தி கல்வெட்டில்

பொறிக்கப்பட்டுள்ளது. பெருவஞ்சி என்பதே போர்வஞ்சி; இது தன்னைப் பணியாத பகையரசர் நாட்டை வென்ற வேந்தன் போரிட்டு அழிப்பதைக் கூறும் புறத்துறையாகும். இச்சுந்தர பாண்டியன் சோழனைவென்று, தஞ்சையும் உறந்தையும் செந் தழல் கொளுத்தினான் என்று அவனுடைய சாசனம் கூறுகிறது. இம்மாவீரர் இப்போர்களில் உதவின வீரராவர். பொன்னமரா வதி சுந்தர பாண்டியன் நகரங்களுள் ஒன்றாகவும் விளங்கியது. இந்நூல் இக்காலத்துக் கிடைக்கவில்லை. இப்புலவர் இயற் பெயரும் பிறவரலாறுகளும் தெரியவில்லை.

## 5. காரணை விழுப்பரையர்

காரணை விழுப்பரையர் என்ற ஒரு புலவர் மதுரையில் வாழ்ந்தவர். 1216 - 1238இல் ஆண்ட மாறவர்மன் சுந்தர பாண்டியன் அவைக்களப் புலவராயிருந்து பெருமையடைந்தவர். பின் கூறப் படும் ஆதிச்ச தேவருக்கு நண்பராயிருந்து, காங்கேயன் என்ற பாண்டியன் அதிகாரியை அவருக்கு அறிமுகம் செய்வித்து, அவன்மீது அவர் பிள்ளைத்தமிழ் பாடும்படி செய்தவர். இவரது ஊர் திண்டிவனம் தாலுக்காவில் கண்ணமங்கலத்துக்கு அருகி லுள்ளது என்பர். இப்பாண்டியனுக்குரிய மெய்க்கீர்த்தியாகிய "பூமருவிய திருமடந்தையும்" என்று தொடங்குவது இவரால் செய்யப்பட்டிருத்தல் கூடும். 'காரணை விழுப்பரையன் மடல்' என்றொரு நூலும் இருந்ததாக மு.இராகவையங்கார் குறிப்பிட் டிருக்கிறார். இவ்விழுப்பரையர் பெருமாள் சீபாதம் சேவிப்ப வர் என்று சாசனம் குறிப்பிடும்.

## 6. ஆதிச்ச தேவன்

அதே சுந்தர பாண்டியனுடைய 14ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1230) பெரிச்சிகோயில் என்ற பாண்டிநாட்டுத் தலத்தின் சிவாலயத்திலுள்ள ஒரு சாசனம் சிறு பெரிச்சியூர் கொடிக் கொண்டான் பெரியான் ஆதிச்ச தேவன் என்ற புலவர், கண்டன் உதயஞ் செய்தான் காங்கேயன் என்ற தலைவன் மீது பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம் ஒன்று பாடி, சாத்தனேரி கிராமத்தில் நிலங் கள் அளிக்கப் பெற்றார் என்ற செய்தி கூறுகிறது. இவன் சுந்தர பாண்டியனுடைய அரசியல் அதிகாரிகளுள் ஒருவன், தேராற்றுப் போக்கிலுள்ள நியமம் என்ற ஊரின் தலைவன் என்று அறி கிறோம். காரணை விழுப்பரையர் என்பவர் இப்புலவரைக் காங் கேயனிடத்து ஆற்றுப்படுத்தி வைத்தவர். காங்கேயன் புலவனை

நம்புலவன் என்று ஒருமை பாராட்டிப் பேசுகிறான். பிள்ளைத் தமிழ் இப்போது கிடைக்கவில்லை. இக்காலம் 13ஆம் நூற்றாண்டு ஆனமையால் இந்நூல் பழைய நூல்களில் ஒன்றாகும்.

## 7. கவிராயர் ஈசுவரசிவ உடையார்

இவர் திருக்களர் என்ற தலத்தில் பிறந்தவர். முன்கூறிய அதே பாண்டி மன்னர் காலத்தில் குறுநில மன்னராய் இருந்த திருக்கானப் பேருடையான் மழவ சக்கரவர்த்தி என்பவனுக்குத் தமிழாசிரியராக விளங்கினார். திருப்பத்தூர் அரண்மனைச் சிறுவயல் என்ற ஊரிலுள்ள கல்வெட்டு, இப்புலவருக்கு விளங்கிளி நல்லூர் என்ற ஊர் முற்றூட்டாக அளிக்கப் பெற்றது என்று கூறுகிறது.

## 8. தாயின் நல்ல பெருமாள்

புவனேக வீரத் தொண்டைமானான தாயின் நல்ல பெருமாள் முனையதரையன் என்ற புலவர், ஆதித்தவல்லையன் என்ற படைத்தலைவனது வெற்றித் திறத்தைப் புகழந்து ஆறு பாடல்கள் பாடினார். இவை சிதம்பரம் கோயிலில் தெற்குக் கோபுரத்திற்கெதிரே நந்தி மண்டபத்தில் வரையப் பெற்றுள்ளன. புவனேக வீரன் என்ற பட்டம் 1248இல் அரசெய்திய மாறவர்மன் விக்கிரம பாண்டியனுக்குரியது. இப்பட்டத்தைத் தாமும் தரித்துக்கொண்ட இப்புலவர் இவன் காலத்தவராவார். தாயினும் நல்ல பெருமாள் என்பது சேலம் ஜில்லாவிலுள்ள ஆறகளூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் திருநாமம்; தாயினும் நல்ல சோளீச்சுரமுடையார் என்பது. தொண்டைமான் என்றமையால் இவர் புலவராய் இருந்ததோடு, தலைவராகவும் இருந்தார் போலும். இங்கு கூறப்பட்ட வல்லையன் என்ற படைத்தலைவன் பனைசையாறு உடையான், முனையன் ஆதித்தன் என்றும் சொல்லப் பெறுகிறான். இவன் சிதம்பரம் பக்கத்தில் சோழனுடன் போரிட்ட பாண்டியர் தலைவருள் ஒருவன்.

## பாடப் பெற்றோர் – கோப்பெருஞ் சிங்கன்

1243இல் சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு 13ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் சிறப்போடு வாழ்ந்த கோப்பெருஞ் சிங்கன் என்ற காடவர் தலைவனைச் சரித்திரம் நன்கு எடுத்துக்கூறும். பல்லவர் படைத்தலைவர் வழியில் வந்த

இவன், சோழர் பரம்பரையில் பெண்கொண்டு வந்திருந்தும், இவர்களோடு பகைமை பூண்டு மூன்றாம் இராசராசனைச் சிறை பிடித்துச் சோழசாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந் தான். பலவகைப் பட்டங்கள் இவன் பொறித்துவைத்த சாசனங் களில் காண்கிறோம். நாற்பதாண்டுகள் இவன் அரசாண்டான் தென்னார்க்காடு தஞ்சைப் பகுதிகளில் இவனுடைய கல்வெட் டுக்கள் மிகவும் அதிகம். செய்யுளியற்றவும் வல்லவனென்று தெரிகிறது. கோதாவரி ஜில்லாவில் இடர்க்கரம்பை என்ற தமிழ்ப்பெயருடைய திராக்ஷாராமம் என்ற ஊர்க் கல்வெட்டில் காணப்படும் இரண்டு பாடல்கள் இவன் செய்தன என்பர். வாயலூர்ச் சாசனப் பாடல்கள் இவன் சோழனைச் சிறைப் பிடித்த செய்தியைச் சுவைபடக் கூறும்.

பொன்னி நாடனும் உரிமையும் அமைச்சரும்
இருப்பதுன் சிறைக்கூடம்
பொருப்பிரண்டென வளர்ந்த தோள் வலியினாற்
கொண்டது சோணாடு.

கன்னி காவிரி பகிரதிநின்பரி
யாடுதண்துறை வாவி
காவன் மன்னவர் திறையுடனுணங்குவது
உன் பெருந் திருவாசல்.

வெந்நிடாத போர்க் கன்னடர் வெந்நிடப்
பொருததுன் பெருஞ்சேனை
விளங்கு செம்பொனின் அம்பலக் கூத்துநீ
விரும்பிய தேவாரம்.

பின்னி காவலஅவனி நாராயண
பேணு செந்தமிழ் வாழப்
பிறந்த காடவ கோப் பெருஞ் சிங்கநின்
பெருமையார் புகழ்வாரே.

திறையிட் டிருமின்கள் தெவ்வேந்திர் செம்பொன்
துறையிட்ட பூம்புகார்ச் சோழன் — சிறைகிடந்த
கோட்டந் தனைநினைமின் கோப்பெருஞ்சிங் கன்கமல
நாட்டங் கடைசிவந்த நாள்.

மீளிவன் கொடிவிடை வேந்தர் மார்பினும்
தோளினும் தீட்டிய தொண்டை மன்னவர்
வாளில்வென் றிடுசிறை வளவன் தூங்கிய
நாளினும் பெரியதிந் நள்ளென் யாமமே.

அறைகடலி னிசையுடனே அண்டர் வேயின்
ஆம்பலிசை செவிகவர அந்தி மாலை
நிறைமதியின் நிலவென்னும் நெருப்புப் பட்டால்
நேரிழை நின் றாற்றுவளோ நிருப துங்கா
பிறை பொருத கன மகரக் கிம்புரிவன் கோட்டுப்
பெருங்களிற்றுச் சோழனையு மமைச்சரையும் பிடித்துச்
சிறையிலிடக் களிறுவிடும் மிண்டன் சீயன்
திருமிகுந்த ராசாக்கள் தம்பிரானே.

ஒருநாளும் விடியாத நெடிய கங்குல்
ஊழியென நீண்டுவர உலகிற் புன்கண்
மருண்மாலை யதுமுன்னே வந்த தென்றல்
மடந்தை இவள் ஆற்றுவளோ மல்லை வேந்தே
பொருமாலை முடியரசர் கன்னி மாதர்
போற்றிசெயப் புவனமுழு துடையார் தாமும்
மாதும் வளர்புயத்து மிண்டன் சீயன்
திருதிரிபுவனத் திராசாக்கள் தம்பிரானே.

இப்பாடல்களின் இறுதியில் சொக்கசீயன் ஆணை என்ற முத்திரை பொறிக்கப்பட்டுள்ளது: அழகிய சீயன் (சீயன் - சிங்கம், சிம்மவர்மன் என்பது பல்லவர் பட்டம்) என்பது இவன் பெயர். (சொக்கம் - அழகு) சொக்க சீயன் என்றது கொண்டு, அப்பெய ருடைய புலவர் ஒருவர் இருந்தார் என்று எழுதப்பட்டுள்ளது. இது பொருந்தாது என்பது வெளிப்படை. எனினும், இவன் காலத்தே மிகப் பலவான புலவர்கள் இருந்து மெய்க்கீர்த்தி முதலியன பாடி வந்தார்கள் என்பது உண்மையாகும்.

**ஆரிய சேகரன்***

புகழேந்தி வரலாற்றில் இத்தலைவனைக் குறித்துச் சில சொற்கள் சொல்லப்பட்டன (பக்கம் 23) கொழும்பு பொருட்

---

* 15ஆம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாறு - ஆரியச்சக்கரவர்த்தி, ஆரியசேகரன் பார்க்க.

*காட்சிச்சாலையில் காணும் பின்வரும் சாசனப்பாடல் இவனைக் குறித்தது (கி.பி. 1290):*

கங்கணம்வேற் கண்ணிணையாற் கட்டினார் காமர்வளைப்
பங்கயக்கை மேல்திலதம் பாரித்தார் – பொங்கொலி நீர்ச்
சிங்கைநகர் ஆரியனைச் சேரா அனுரேசர்
தங்கள் மடமாதர் தாம்.

## மகதைப் பெருமாள்

*வாணகோவரையன் பொன்பரப்பினான் என்றும் இவனுக்குப் பெயர். மூன்றாம் குலோத்துங்கனிடம் சில போர்களில் இவன் படைத் தலைவனாய் இருந்தான். திருவண்ணாமலைக் கோயிலைப் பொன் வேய்ந்தான். அக்கோயில் சுவர்களில் இவனைப் புகழ்ந்த பாடல்கள் 22 பொறிக்கப்பட்டுள்ளன. பின் வருவன அவற்றுட் சில. (மகதை - மகதம், நடுநாடு.)*

தாரும் முடியும் முரசுந் தமக்குரிய
பாரும் உடன்பெறுவர் பார்வேந்தர் – வீரப்
பெருமாள் மகதேசன் பேரெழுதித் தத்தம்
திருமார்பில் ஆளோலை செய்து.

வன்மதுரை விட்டு வடகடலான் மால்வழுதி
தென்மதுரை பட்டின்று தென்கடலான் – நன்னுதலாய்
மல்லார்தோள் மாகதர்கோ மான்முனிந்தால் மன்னவருக்கு
எல்லாம் கடலோ இடம்.

மண்ணாள் திகிரிக்கை வாணன் வடுகெறிந்த
எண்ணா யிரஞ்சூழ்ந்த எண்டிசையும் – புண்வடிந்த
நீரேநீர் காக நிழலே நிழல்நெடும்பேய்த்
தேரேதேர் செஞ்சேறே சேறு.

சூழும் பிணவணைமேல் தோய்கழுகின் பந்தர்க்கீழ்
வீழும் கழுதினங்கள் மெய்காப்ப – வாழுந்தன்
தொன்னகரே போல்வடுகர் துஞ்சத் துயிற்றியதே
மன்னவர்கோன் மாகதர்கோன் வாள்.

*இவை போலப் பல பாடல்கள், பரணிப் பாடல்போல, மகதைப் பெருமாள் போர்செய்த வருணனையாக உள்ளன.*

### சுந்தரபாண்டியன் 1216 – 1238

*இவன் மூன்றாம் இராசராசனை வென்றவன், வெற்றியைக் கூறுவது இப்பாடல்:*

காரேற்ற தண்டலைக் காவிரி நாடனைக் கானுலவும்
தேரேற்றிவிட்ட செழுந்தமிழ்த் தென்னவன் சென்றெதிர்ந்து
தாரேற்ற வெம்படை யாரியர் தண்டு படத்தனியே
போரேற்று நின்ற பெருவார்த்தை இன்னும் புதுவார்த்தையே.

### சுந்தர பாண்டியன் 1251 – 1271

*இவன் தில்லையில் துலாபாரம் செய்ததைப் பின்வரும் பாடல் கூறும்:*

இனவரிக்கிம்புரி வெண்பிறைக் கோட்டிகல் வெங்கடுங்கட்
சினமதத்த வெங்கரிச் சுந்தரத் தென்னவன் தில்லைமன்றில்
வனசத் திருவுடன் செஞ்சொற் றிருவை மணந்ததொக்கும்
கனகத் துலையுடன் முத்தத் துலையிற் கலந்ததுவே.

### விக்கிரம பாண்டியன் 1248 – 1258

*இவன் சுந்தரபாண்டியன்கீழ் நாட்டின் சில பகுதிகளில் பொறுப்பேற்றிருந்தவன். புவனேகவீரன் என்பது பட்டம்; புவனகிரி இவன் பெயரால் எழுந்த ஊர். இவனைப் பற்றிய சாசனப் பாடல்கள் மிகப் பல.*

புயலும் தருவும்பொருகைப் புவனேக வீரபுனல்
வயலுந் தரளந்தரு கொற்கை காவல வாரணப் போர்
முயலும் கணபதி மொய்த்தசெஞ் சோதி முகத்திரண்டு
கயலுண் டெனுமது வோமுனி வாறிய காரணமே.

வெங்கண் மதயானை விக்கிரம பாண்டியனே
பொங்கி வடதிசையிற் போகாதே – அங்கிருப்பாள்
பெண்ணென்று மீண்டபெருமாளே பேரிசையாழ்ப்
பண்ணொன்றும் வேய்வாய் பகை.

*இவன் காகதீய குல வீரகண்ட கோபாலனை வென்று கணபதிக்கு நாடளித்தபின், மற்றொரு தெலுங்குப் பகுதியில் ருத்ராம்பா என்ற அரசி ஆண்வேடம் பூண்டு அரசு செய்த செய்தியை இப்பாடல்கள் குறிப்பிடுகின்றன.*

குறிப்பு

## கூற்றும் மறுப்பும்

தமிழிலக்கிய உலகில் அனேக வரலாறுகள் தெளிவுபடாமல் உள்ளன, காலங்கள் தெளிவுபடாமல் உள்ளன. பண்டைத் தமிழ்ச் சான்றோர், கருத்துக்களைப் பெரிதாக நினைத்தார்களே ஒழிய, சொன்னவரையோ சொன்ன காலத்தையோ பெரிதாக நினைக்கவில்லை. இதுபற்றி இலக்கிய வரலாற்றில் எத்தனையோ பகுதிகள் முடிவு செய்யப்பெறாமல் உள்ளன. அகத்தியர் தொல்காப்பியர் திருவள்ளுவர் என்பாரது வரலாறுகளும் காலங்களும் தெளிவுபெறவில்லை. இவை என்றைக்கேனும், தெளிவாக விளங்குமா என்பதும் சந்தேகமே. இருப்பினும், சில கருத்துக்கள் யார் சொல்லியிருந்த போதிலும்கூட, நிராகரிக்கத் தக்கனவே. எடுத்துக்காட்டாக, தொல்காப்பியர் ஜமதக்கினியின் புதல்வர், அவர் பெயர் திரணதூமாக்கினி என்று நாச்சினார்க்கினியர் சொல்வார். நச்சினார்க்கினியர் எவ்வளவு பெரியவராய் இருந்தபோதிலும் கூட, அவர் கூறும் இந்தக் கருத்துக்கள் நகைப்புக்கு இடமாகுமேயன்றிக் கொள்ளத்தக்கன ஆகா.

இது பழங்காலத்துக் கதை. இருபதாம் நூற்றாண்டில், விவேகம் செழித்து வளர்ந்த காலத்தில்கூட, இப்படிப்பட்ட போலிக் கூற்றுக்களும் மறுப்புக்களும் மலிந்துள்ளன. தெரிந்து சொல்கிற போலிக் கூற்றுக்கள் சிலவற்றை நினைவு கூர்வது பொருந்தும். நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் பாண்டியர் வரலாறு சோழர் வரலாறு என்ற நூல்கள் ஆங்கிலத்தில் எழுதினார். எழுதிய காலம், இவ்வரலாறுகள் விளக்கம் பெறாத காலம். 1901இல் கோபிநாதராயர் எழுதிய சோழவமிசச் சரித்திரச் சுருக்கம் என்ற நூல் ஒன்றே அப்போது இருந்தது, பிற்காலத்து வெளிவந்த சாசனங்களை யெல்லாம் நன்கு ஆராய்ந்து சாஸ்திரியார் தம் புத்தகங்களை எழுதினார். அவற்றுள் குறைபாடுகள் இருந்தபோதிலும்கூட, அக்காலத்தில் அவை சிறந்த நூல்கள் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வர். அக்காலம் ஆங்கிலத்திலும் தமிழிலும் வரலாற்று விளக்கமில்லாத காலம். இவரும் மிக்க நிதானத்தோடு நூல்களை எழுதி வந்தமையால், நூல்கள் சிறப்படைந்தன.

காலம் மாறிற்று. இவரும் வளர்ந்து பிற்காலத்தில் நூல் எழுதியபோது, இந்த நிதானம் தவறி, தமிழரையும் தமிழையும் தாழ்த்துவதே நோக்கமாய்க் கொண்டது போலத் தம் நூல்களை எழுதினார். அகத்தியர் பற்றி இவர் வெளிநாட்டுப் பத்திரிகை ஒன்றில் எழுதிய கட்டுரை இப்படிப்பட்டது. ‘அகத்தியர் ஆரியரே. தமிழருக்குப் பெருமை தரும் சான்றோரும் நூலாசிரியரும் இல்லாமையால், தமிழர் இவரைத் தமிழ் தந்தவர் என்று சொல்லிக் கொண்டார்கள்’ என்பது அதன்சாரம். கல்கத்தாவில் வெளிவந்த ‘தென்னிந்தியப் பண்பாட்டின் வரலாறு’ என்ற இவரது ஆங்கில நூல், தமிழ்நாட்டுப் பண்பாட்டை மறுப்பதாகவே உள்ளது. சேக்கிழார் பெரியபுராணம் பாடியது, சைன சமயத்தில் இருந்த அறுபத்துமூவர் வரலாற்றைப் பார்த்துத்தான் என்பது இதில் காணும் ஒரு கருத்து. சைனருடைய அறுபத்து மூவரைக் கூறிய சைன மகாபுராணங்கள் தோன்ற நெடுங்காலம் முன்னமேயே சுந்தரர் சைவ நாயன்மார் பெயரைத் தொகுத்துத் திருத்தொண்டத் தொகை பாடியிருந்தார் என்பதைக்கூட இவர் கருதவில்லை. இப்படியே, தென்னிந்திய அகழ்பொருள் ஆராய்வுக் கழகத்தில் இவர் பேசி எழுதிய கட்டுரை. ‘முருகன் என்றொரு தெய்வமில்லை, இருந்தால் அவர் வடமொழியிலிருந்து அமைத்துக்கொண்ட தெய்வமேயன்றித் தமிழ்க் கடவுளில்லை’ என்ற கருத்தை மகுடமாகவுடையது.

அடுத்து, இவருடைய ஆராய்ச்சிக்குத் தொடக்க காலத்தில் உதவியாயிருந்து. பின்னர் ஒருகால் வேறுபட்டிருந்த சிதம்பரம் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் என்பவர் எழுதிய கோப்பெருஞ்சிங்கன் என்ற புத்தகத்துக்கு, இவர் ஹிந்துப் பத்திரிகையில் எழுதிய மதிப்புரையில் மிகவும் வன்மையாகக் கண்டனம் செய்திருந்தார். கருத்தை மறுக்கலாம். ஆனால் சொந்த வெறுப்பை மதிப்புரையில் கட்டுவது இவர் செய்த புதுமை. வையாபுரிப்பிள்ளை அவர்கள் பல கருத்துக்களை வடமொழிச் சார்பாய்ச் சொன்னதற்கும் ஒரு காரணம் இவருடைய தொடர்பாயிருக்கலாம்.

பிற்காலத்தில் சோழர் வரலாற்றாராய்ச்சி நிபுணராயிருந்த சதாசிவப் பண்டாரத்தார், சாஸ்திரியாரின் கருத்துக்கள் சிலவற்றை மறுக்கவேண்டுமென்றே எண்ணம் கொண்டிருந்தார். அருமையாக இவர் உழைத்துச் செய்த சோழர் வரலாற்றில் வெறுப்புணர்வு காரணமாக, வேண்டாத சில வாதங்களைக் கூறியிருக்கிறார்; கருத்துக்களில் பிறழ்வும் ஏற்பட்டிருக்கிறது.

சமய வரலாற்றறிவுக்கும் இலக்கிய வரலாற்றறிவுக்கும் இவற்றை உள்ளபடி உணர்தல் அவசியமென்று யாம் கருதுகிறபடியால், இவற்றுள் ஒன்றிரண்டைச் சுட்டிச் செல்லும் நோக்குடனேயே இக்குறிப்பை எழுதுகிறோம்.

நம்பியாண்டார் நம்பி இராசராச அபயகுலசேகர மன்னன் என்று வழங்குகிற முதலாம் இராசராசன் காலத்தில் வாழ்ந்து, அவன் வேண்டுகோளின்படி திருமுறைகளைக் கண்டு எடுத்துத் தொகுத்துப் பண்ணடைவு வகுத்துத்தந்தார் என்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட வரலாற்றுச் செய்தி. பண்டைய ஆராய்ச்சி யாளருள் இக்கருத்திலிருந்து மாறுபட்டவர், இலக்கண விளக்க பரம்பரை - சோமசுந்தர தேசிகர் ஒருவரே. 'இராசராசனுடைய தமையனாய்ப் பட்டத்துக்கு வராமலே இறந்துபோன ஆதித்த கரிகாலனே இங்கு குறிப்பிடப்பட்ட மன்னன்' என்பது அவர் கருத்து. பொருத்தமின்மை வேறு இடத்தில் தெளிவாக்கப்பட் டுள்ளது.* ஆனால் இப்போது பண்டாரத்தார், திருமுறையை வெளிப்படுத்திய மன்னன் இராசராசன் அல்லன், இவனுக்கு நெடுங்காலத்துக்கு முன் அரசாண்ட (விசயாலயன் மகனாகிய) ஆதித்தசோழன் என்று எழுதுகிறார். திருமுறைகள் வெளிப் பட்ட காலம் சோழர் ஆட்சியில் பெருஞ்சிறப்பு நிலவிய காலம். ஆதித்தசோழன் காலத்தில், முதலில் தோல்வியும், பலவகைப் போர்களும், பின் வெற்றியும், இப்படியாக எண்ணிறந்த குழப் பங்கள் மிகுந்திருந்த காலம். இது, நம்பி திருமுறை தேடுவதற் கான சூழ்நிலை தராது. அதுபற்றி இங்கு ஆராயவில்லை: முன் குறிப்பிட்ட இடத்தில் விளக்கியிருக்கிறோம்.

இரண்டாவது, இரண்டாம் குலோத்துங்கன் காலத்தே சேக்கிழார் வாழ்ந்து பெரியபுராணம் பாடினார் என்பது எல்லோரும் அறிந்த செய்தி. அவனுக்கே சேக்கிழார் பலமுறை குறிப்பிடுகின்ற அநபாயன் என்ற பெயர் சிறப்பாக உரிய பெய ராகும். இதை நீலகண்ட சாஸ்திரியும் சொல்லியிருக்கிறார். அவர் சொன்னார் என்பதற்காகவும், வேறு சில காரணங்கள் காட்டியும் பண்டாரத்தார் மறுத்தெழுதி மூன்றாம் குலேத்துங்க சோழன் என்று நிலைநாட்ட முயல்கின்றார். இது பொருந்தாது.❖

---

* எமது தமிழ் இலக்கிய வரலாறு, பதினொராம் நூற்றாண்டு, நம்பி யாண்டார் நம்பி என்ற பகுதி பார்க்க.

❖ எமது பன்னிரண்டாம் நூற்றாண்டு இலக்கிய வரலாறு பார்க்க.

மூன்றாவதாக, ஒன்பதாம் அத்தியாயத்தில் நாம் ஆராய்ந்துள்ள சிறப்பான பிரபந்தமாகிய குலோத்துங்கசோழன் கோவையானது, மூன்றாம் குலோத்துங்க சோழனுக்கு உரியதன்று, கொங்குச்சோழனுக்கு உரியது என்று சொல்லி இவர் இந்நூலைப் பரிசீலிக்காமலே தள்ளிவிட்டார்.

ஒரு காரணம், சாஸ்திரியாரும் மு. இராகவையங்கார் அவர்களும் இக்கோவை கொண்டவன் மூன்றாம் குலோத்துங்க சோழனே என்று எழுதியிருப்பது.

அடுத்து சேனாவரையர். இவர் ஊர் மாறோக்கம். இப்பெயரைக் கேட்டவுடனே தமிழ் படித்தோருக்கு மாறோக்கத்து நப்பசலையார் நினைவு வரும். இவர் சிறப்புமிக்க புலமையுடைய பெண்பாலார். புறநானூற்றில் ஏழு பாடல்களும் நற்றிணையில் ஒன்றும் இவர் பாடியன. ஆனால் தமது புத்தகத்தில் ஐயங்கார் இதைக் குறிப்பிட்டிருக்கிறார் என்பதற்காக, பண்டாரத்தார் நப்பசலையாரை விடுத்து, யாருக்கும் தெரியாத பெயராகிய மாறோக்கத்துப் புல்லங்காடர் என்ற கைந்நிலை ஆசிரியர் பெயரை எடுத்துக்காட்டுகின்றார். இவ்வாறே இவர், திருவிசைப்பாத் தலமாகிய களந்தை ஆதித்தேச்சரமானது ஆதித்தன் கட்டிய சிறப்பான கோயிலாய் இருந்தும்கூட, அதைப்பற்றித் தம் நூலில் ஒரு வார்த்தை சொல்லவில்லை. இப்படியே பட்டத்துக்கு வராமலே இறந்துபோன இராசமகேந்திரனைப் பற்றிக் கூறும் கருத்தும்; ஒருகால் இவ்விடத்து, சாஸ்திரியார் கூற்றை விட இவரது கருத்தே பொருத்தமாயிருக்கலாம்.

இவ்வாறு ஆராய்ச்சிகளில் பெரும் முரண்களையும், ஒருவர் கூற்றை மறுப்பதற்காகவே மற்றொருவர் வலிந்து திரிப்பதையும் காண்கிறோம். 'ஆவின் கொடைச் சகரர்' என்று தொடக்கமுடைய மூவலூர்க் கோவில் கல்வெட்டுத் தொடரை ரா. இராகவையங்கார் அவர்கள் கம்பர் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு என்று நிறுவுவதற்குச் சாதனமாக கொண்டது முதல், இத்தகைய போலிக் கூற்றுக்களும் மறுப்புக்களும் தமிழ் ஆராய்ச்சியில் மலிந்து விட்டன. யாரையும் குறை சொல்வது எமது நோக்கமன்று; உண்மையை எடுத்துக்காட்டுவதற்காகவே இவற்றை இங்கு குறிப்பிட்டோம்.

ooo

## 1. சோழர் பரம்பரை

கி.பி. 845இல் விசயாலய சோழன் பரகேசரி என்ற பட்டப் பெயர் புனைந்து தனியான சோழர் பேரரசைத் தொடங் கினான்.

இவனது மகன் ஆதித்தன் இராசகேசரி என்ற பட்டம் புனைந்து முடி சூடினான்.

பின்னர் தொடர்ச்சியாகத் தந்தை - மகன் முறையில் பர கேசரி இராசகேசரி என்ற பட்டங்களை மாறி மாறிப் புனைந்து கொண்டு, பரகேசரி அதிராசேந்திர சோழன் (1070) வரையில் பதின்மூன்று மன்னர் முடிசூடி ஆட்சி செலுத்தினார்கள்.

இவனுக்குப் பின் நேரே ஆண் சந்ததி இல்லாமையால், இவனது பாட்டன் முதல் இராசேந்திர (கங்கைகொண்ட) சோழன் புதல்வி அம்மங்கை தேவிக்கும் கீழைச்சாளுக்கிய மன்னன் இராசராச நரேந்திரனுக்கும் புதல்வனாய்ப் பிறந்த மகன், குலோத்துங்கன் (உபயகுலோத்தமன்) என்று பெயர் பூண்டு, சோழநாட்டில் முடிசூடினான் (1070). இவனது பட்டம் இராசகேசரி என்பது.

14-17ஆகிய பட்டங்கள் இச்சோழர் நேரே ஆண் வாரி சாக ஆண்டனர்.

இரண்டாம் இராசராசன் 1163இல் வாரிசில்லாமல் இறக் கவே, மறுபடியும் ஒரு பெண்வழி அரசுரிமை மாறிச் சென்று, இரண்டாம் இராசாதிராசனும் அவன் தம்பி என்று ஆராய்ச்சி யாளர் கருதுகின்ற மூன்றாம் குலோத்துங்கனும் ஆட்சி புரிந்தனர்.

இறுதியாக இருந்த மூன்றாம் இராசேந்திரன் வாரிசில் லாமல் இறக்கவே, சோழ வமிசம் அழிந்தது. 13ஆம் நூற்றாண் டில் ஆட்சிபுரிந்த அரசர்களையும் முன் தொடர்பையும் பின் வரும் அட்டவணையில் காண்க.

- பரகேசரி விக்கிரம சோழன் 1118 - 1133
  - இராசகேசரி குலோத்துங்க சோழன் II 1133 - 1150
    - பரகேசரி இராசராச சோழன் II (மக்கள் இல்லை) 1144 - 1163
  - பெண் ஆளுடை நாச்சியார்
    - நெறியுடைப் பெருமாள்
      - இராகேசரி இராசாதிராசன் II 1163 - 1178
      - பரகேசரி குலோத்துங்கன் III 1178 - 1218
        - இராசகேசரி இராசராசன் III 1216 - 1256
          - பரகேசரி இராசேந்திரன் III 1246 - 1279 முடிவு.

## 2. பாண்டியர் பரம்பரை

சோழர் வமிசாவளி தந்தை மகன் முறையாகவும், புதல்வர் புதல்வியர் தொடர்பு விளக்கமாகவும் அமைந்திருக்கிறது.

845இல் தஞ்சையைக் கைப்பற்றி விசயாலயன் முடிசூடிக் கொண்டான்.

அதுமுதல் 1279இல் மூன்றாம் இராசேந்திரன் சந்ததி இல்லாமல் இறந்து போனது வரை, சோழர் பரம்பரை மிகவும் திட்டமாகவும் விளக்கமாகவும் சாசனச்சான்று கொண்டு அறிஞர் நன்கு நிறுவியிருக்கிறார்கள்.

இதில் விளக்கமில்லாத பரம்பரை இடமோ, குழப்பமான இடமோ எதுவும் இல்லை.

ஆனால் 13ஆம் நூற்றாண்டில் மதுரையில் ஆட்சிசெய்த பாண்டிய வம்ச பரம்பரையில் இத்தகைய தெளிவில்லை.

தந்தை மகன் முறை எங்குமே விளக்கமாக இல்லை.

வேறு உறவின் முறையும் விளங்கவில்லை.

எனினும், சதாசிவ பண்டாரத்தார் தமது பாண்டியர் வரலாறு என்ற நூலில் மிகவும் முயன்று பாண்டியர் பரம்பரையை ஓரளவு ஒழுங்குபடுத்தி வைத்திருக்கிறார். அதைத் தழுவியே பின்வரும் பரம்பரை சொல்லப்படுகிறது.

ooo

சடையவர்மன் குலசேகரபாண்டியன் I
1190 - 1218
|
(புதல்வன் அல்லது தம்பி)
மாறவர்மன் சுந்தர பாண்டியன் I
1216 - 1238
(மூன்றாம் இராசராசசோழனை வென்றவன்)
|
சடையவர்மன் குலசேகரபாண்டியன் II
1238 - 1239
|
மாறவர்மன் சுந்தர பாண்டியன் II
1239 - 1251
சடைய வர்மன் சுந்தர பாண்டியன் II
1251 - 1271
(தில்லை மேலைக் கோபுரம் கட்டியவன்)

(சடையவர்மன் வீர பாண்டியன், சுந்தர பாண்டியன் பிரதிநிதியாக
(1253 - 68) சோழநாடு தொண்டை நாடுகளில் தங்கியவன்.
சடையவர்மன் விக்கிரம பாண்டியன் (1249 - 58) தொண்டை,
நடு நாடுகளில் அதே சுந்தர பாண்டியனது பிரதிநிதியாயிருந்தவன்)
|
மாறவர்மன் குலசேகர பாண்டியன் I
1268 - 1311
(பெருஞ்சிறப்பு வாய்ந்தவன்)

(சடையவர்மன் சுந்தர பாண்டியன் - கொங்கில் 1276 - 93 வரை பிரதிநிதி.
மாறவர்மன் விக்கிரம பாண்டியன் குலசேகரன் தம்பி (1268 - 91)
நடு நாடு, தொண்டை நாடுகளின் பிரதிநிதி)

| | |
|---|---|
| சடைய வர்மன் சுந்தர பாண்டியன்<br>பட்டத்துத் தேவி மகன்.<br>1310இல் தந்தையைக் கொன்று<br>பட்டம் எய்தினான்.<br>1310 - 1319. | சடைய வர்மன் வீர பாண்டியன்<br>காமக்கிழத்தி மகன்..<br>1296 - 1342. |

இவ்விருவர் பூசலால் முகம்மதியப் படை மதுரையுட் புகுந்து மதுரையை அழித்துப் பாண்டியர் பரம்பரையையும் அழித்து விட்டது. முகம்மதியர் ஆட்சி 1330 - 1378.

## 3. வைணவ பரம்பரை

வைணவ ஆசாரிய பரம்பரை நாதமுனிகளோடு தொடங்குகிறது (9 நூ.) 11 -12 நூற்றாண்டுகளில் வாழ்ந்த இராமானுசரால் மிகப் பெரிதாக வளர்ந்தது. நாம் கருதும் 13ஆம் நூற்றாண்டுக்குப் பொருந்தும் பகுதியை மட்டும் பின்னே கூறுகிறோம். பின்வரும் பரம்பரைகள் முழுமையும் மாணாக்கர் பரம்பரையே (வேறுவிதமாயிருந்தால் அங்கே குறிப்பிடுகிறோம்.)

பட்டர்
1192 - 1220
(பக்கம் 317 பார்க்க)

நஞ்சீயர்
1182 - 1287;
ஒன்பதினாயிரப்படி.

நம்பிள்ளை 1207 - 1312; ஒன்பதினாயிரப்படி நஞ்சீயருக்குப் பிரதி செய்தார். தம் காலட்சேபம் கொண்டு இருபத்து நாலாயிரப்படியைப் பெரியவாச்சான் பிள்ளையைக் கொண்டு எழுதுவித்தார். வடக்குத் திருவீதிப் பிள்ளை அக்காலட்சேபம் கொண்டு தம் ஈடு எழுதினார்.

பெரியவாச்சான் பிள்ளை நாலாயிரப் பிரபந்தம் முழுமைக்கும் வியாக்கியானம். 1228 - 1323

ஈயுண்ணி மாதவப் பெருமாள் முதலிய பலர்.

வடக்குத் திருவீதிப் பிள்ளை ஈடு 1217 - 1312

நயினாராச்சான் பிள்ளை (புதல்வர்)

பிள்ளை லோகாசாரியர் 1264 - 69 (புதல்வர்)

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் 1266 - 1361 (புதல்வர்)

இவ்விருவர் வரலாறும் 14ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில் காணலாம்.

# ஆதார நூல்கள்


அத்தியாயம்

1. நளவெண்பா - பழைய பதிப்புக்கள் ; மர்ரே கம்பெனி 1960.

2. திருக்குறள் உரைக்கொத்து, காசிமடத்துப் பதிப்பு 1959. திருக்கோவையாருரை, நாவலர் பதிப்பு 1922; காசிமடத்துப் பதிப்பு 1960. திருமுருகாற்றுப்படை உரைக்கொத்து, காசி மடம் 1959.

3. அகநானூறு, வே. இராசகோபாலையங்கார் பதிப்பு 1926. பதினெண்கீழ்க் கணக்கு உரைகள்: நாலடியார் உரைவளம், தஞ்சை சரசுவதி மகால் பதிப்பு 1953.

4. நன்னூல் மூலம், நம்பியகப் பொருள் மூலம்: தாண்டவராய முதலியார் பதிப்பு 1835. நன்னூல் உரைகள்: மயிலைநாதர் உரை, ஐயரவர்கள் பதிப்பு 1918; சங்கர நமசிவாயர் உரை, ஐயரவர்கள் பதிப்பு 1935. நம்பியகப்பொருள், மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பு 1926. குமாரசுவாமிப் புலவர் புத்துரைப் பதிப்பு 1912. தஞ்சை சரசுவதி மகால் பதிப்பு 1962.

5. தொல்காப்பியம் பொருள், பேராசிரியம், கனக சபாபதிப் பிள்ளை பதிப்பு 1934. தொல்காப்பியம் பொருளதிகாரப் பொருளகராதி, நாகமணி முதலியார், 1935. வச்சணந்தி மாலையுரை, சேனாவரையம்.

6. நம்பி திருவிளையாடல், ஐயரவர்கள் பதிப்பு 1927.

7. சித்தாந்த சாத்திரம், உரைப் பதிப்புக்கள், சைவ சித்தாந்த மகா சமாஜம் பதிப்பு 1: ச. அனவரத விநாயகம் பிள்ளை 1933. பதிப்பு 2: மு. அருணாசலம் 1940.

8. தமிழ் பகவத்கீதை: பழைய உரைப் பதிப்பு 1853; பொன்னம் பலசுவாமி உரையோடு, ரிப்பன் அச்சகம் 1912.

9. குருபரம்பாரப் பிரபாவங்கள், திருவாய்மொழி வியாக்கி யானங்கள், திருவாய்மொழி வாசகமாலை, வார்த்தாமாலை, 1882.

10. அறநெறிச்சாரம், யசோதர காவியம்.

11. தஞ்சைவாணன் கோவை 1835 பதிப்பு; நம்பியகப்பொருள் விளக்கப் பதிப்பு, மதுரைத் தமிழ்ச்சங்கம் 1926.

**பொது:**

தமிழ் நாவலர் சரிதை, கனக சுந்தரம்பிள்ளை பதிப்பு 1920. விநோதரச மஞ்சரி -அட்டவதானம் வீராசாமிச் செட்டியார் 1931. தண்டபாணி சுவாமிகள் புலவர் புராணம் 1910. டாக்டர். உ.வே. சாமிநாதையர் பதிப்புக்கள், உரைநடை நூற்குறிப்புக்கள். மு. இராகவையங்கார் - பெருந்தொகை 1937 ; சாசனத் தமிழ்க் கவிசரிதம் 1937; ஆராய்ச்சித் தொகுதி 1940.

**சதகம்:**

சோழமண்டல சதகம், சோமசுந்தர தேசிகர் பதிப்பு 1916. கொங்குலமண்டல சதகம், தி.அ. முத்துசாமிக் கோனார் பதிப்பு 1923. தொண்டை மண்டல சதகம், சி.கு. நாராயண சாமி முதலியார் பதிப்பு 1924. பாண்டிமண்டல சதகம், ப. அ. முத்துத் தாண்டவராயப் பிள்ளை பதிப்பு 1932.

**வரலாறு:**

தி.வை. சதாசிவ பண்டாரத்தார் - பிற்காலச் சோழர் சரித்திரம், பகுதி 1, பகுதி 2; பாண்டியர் வரலாறு.

○○○

## ஆசிரியர் பெயர்- கால அட்டவணை

இவ்வகராதியுள், ஆசிரியர் பெயர், செய்த முக்கியமான நூல், காலம் ஆகியவை தொகுத்துச் சொல்லப்பட்டுள்ளன. ஆசிரியர் பெயர் தெரியாத நூல்களும் இதனுள் அகராதி வரிசையிலேயே உரிய இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. உடன் காலத்தவராகத் தெரிந்த அரசர், வள்ளல், பிற புலவர் பெயர்களும் தனியே குறிப்பிடப்பட்டுள்ளன.

* இன்று கிடைக்காத நூல்கள்

| எண் | ஆசிரியர் | நூல் | உடன் காலத்தவர் | காலம் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | அருணந்தி சிவம் | சிவஞான சித்தியார், இருபா இருபது | மெய்கண்டார் | 1253 | 210 |
| 2 | அருணிலை விசாகன் | *தமிழ்ப் பாரதம் | குலோத்துங்க சோழன் III | 1210 | 370 |
| 3 | ஆதிச்சதேவன் | * காங்கேயன் பிள்ளைத்தமிழ் | | 1230 | 373 |
| 4 | இரணியவதைப் பரணியாசிரியர் | இரணியவதைப் பரணி | | 1210 | 352 |
| 5 | இராச பவித்திரப் பல்லவதரையர் | அவிநய உரை | | 1250 | 181 |
| 6 | ஈயுண்ணிமாதவப் பெருமாள் | | நம்பிள்ளை வடக்குத் திருவீதிப் பிள்ளை | 1300 | 267 |
| 7 | ஈசுவரசிவ உடையர் | | | 1300 | 374 |
| 8 | கவிராசராசன் | | | 1225 | 362 |
| 9 | காரணை விழுப்பரையன் | ஆதிச்சதேவன் | | 1225 | 373 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | காலிங்கர் | குறள் உரை | | 1225 | 31 |
| 11 | குலோத்துங்க சோழன் கோவையாசிரியர் | குலோத்துங்கசோழன் கோவை | குலோத்துங்க சோழன் III | 1205 | 317 |
| 12 | சங்கரசோழன் உலா ஆசிரியர் | சங்கரசோழன் உலா | | 1215 | 328 |
| 13 | சத்தி முற்றப் புலவர் | தனிப்பாடல் | | 1295 | 362 |
| 14 | சித்தராரூட ஆசிரியர் | சித்தராரூடம் | | 1225 | 365 |
| 15 | சேனாவரையர் | தொல்காப்பியம் - சொல்லதிகார உரை | | 1276 - 1281 | 171 |
| 16 | தருமனார் | *குறள் உரை; நாலடிஉரை | பதுமனார் | 1250 - 1275 | 106 |
| 17 | தாயின் நல்லபெருமாள் | சாசனப் பாடல் | | 1283 | 374 |
| 18 | தாமத்தர் | *குறள் உரை | | | 95 |
| 19 | திருக்கோட்டி நம்பி | உள்ள முடையான் சோதிட நூல் | | 1278 | 369 |
| 20 | திருக்கோனேரி தாஸ்யை | திருவாய்மொழி வாசகமாலை | வடக்குத் திருவீதிப் பிள்ளை | 1275 - 1300 | 282 |
| 21 | திருமுருகாற்றுப்படை பழைய உரையாசிரியர் | திருமுருகாற்றுப்படை பழைய உரை | | 1275 | 77 |
| 22 | திருவரன் குளமுடையான் | *பெருவஞ்சி | | 1227 | 372 |
| 23 | திருவாழி பரப்பினான் கூத்தன் | *சிந்துப் பிரபந்தம் | பொத்தப்பிச்சோழன் | 1231 | 371 |

| எண் | ஆசிரியர் | நூல் | உடன் காலத்தவர் | காலம் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 24 | நச்சர் | குறள் உரை | | | 95 |
| 25 | நஞ்சீயர் | திருவாய்மொழி ஒன்பதினாயிரப்படி | நம்பிள்ளை | 1182 - 1287 | 248 |
| 26 | நடாதூரம்மாள் | | | 1166 - 1275 | 281 |
| 27 | நம்பிள்ளை | திருவாய்மொழி உரைகள் | நஞ்சீயர், பெரியவாச்சான் பிள்ளை | 1207 - 1312 | 255 |
| 28 | நயினாராச்சாம் பிள்ளை | | | 1300 | 276 |
| 29 | நாலடி விளக்கவுரை யாசிரியர் | நாலடி விளக்கவுரை | | 1290 | 111 |
| 30 | நாற்கவிராச நம்பி | அகப்பொருள் விளக்கம் | குலசேகர பாண்டியன் | 1275 | 133 |
| 31 | பட்டனார் | பரமார்த்த தரிசனம் | | 1275 | 227 |
| 32 | பதிற்றுப்பத்து உரையாசிரியர் | பதிற்றுப்பத்து உரை | | 1275 | 85 |
| 33 | பதுமனார் | நாலடியார் உரை | | 1225 - 1250 | 98 |
| 34 | பரகாலதாசர் | தனியன் | பெரியவாச்சான் பிள்ளை | 1300 | 287 |
| 35 | பரிமேலழகர் | குறள் உரை | | 1272 | 42 |
| 36 | பவணந்தி முனிவர் | நன்னூல் | சீயகங்கன் | 1212 | 117 |
| 37 | பின்பழகியபெருமாள் ஜீயர் | குருபரம்பரை ஆறாயிரப்படி | நம்பிள்ளை | 1290 | 276 |
| 38 | புகழேந்தி | நளவெண்பா | சந்திரன் சுவர்க்கி | 1275 | 3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 39 | பெரியவாச்சான் பிள்ளை | நாலாயிரப் பிரபந்த வியாக்கியானம் | நம்பிள்ளை | 1228 - 1323 | 268 |
| 40 | பெரும்பற்றப் புலியூர் நம்பி | திருவாலவாயுடையார் திருவிளையாடல் | | 1295 | 186 |
| 41 | பேராசிரியர் (2) | திருக்கோவையார் உரை | | 1275 | 68 |
| 42 | பேராசிரியர் (1) | தொல்காப்பியப் பொருளதிகார உரை | | 1220 | 150 |
| 43 | பொய்யாமொழிப் புலவர் | தஞ்சைவாணன் கோவை | தஞ்சாக்கூர் வாணன் சீநக்கன் | 1290 | 339 |
| 44 | மனவாசகங் கடந்தார் | உண்மை விளக்கம் | அருணந்தி சிவம் | 1255 | 218 |
| 45 | முனைப்பாடியார் | அறநெறிச்சாரம் | | 1275 | 293 |
| 46 | மெய்கண்டார் | சிவஞானபோதம் | அருணந்தி | 1232 | 201 |
| 47 | யசோதர காவிய ஆசிரியர் | யசோதர காவியம் | | 1275 | 300 |
| 48 | வச்சணந்தி மாலை உரையாசிரியர் | வச்சணந்தி மாலை உரை | | 1220 | 164 |
| 49 | வடக்குத்திருவீதிப் பிள்ளை | ஈடு முப்பத்தாறாயிரப்படி | நம்பிள்ளை | 1217 - 1312 | 264 |
| 50 | வார்த்தாமாலை தொகுத்தவர் | வார்த்தாமாலை | | 1290 | 288 |
| 51 | வீராந்தப் பல்லவரையர் | | குலோத்துங்க சோழன் III | 1202 | 372 |

## ஆசிரியர் கால ஒப்புமை அட்டவணை

இங்கு ஒவ்வொரு கால் நூற்றாண்டாக எடுத்து அக்காலத்தில் வாழ்ந்திருக்கக் கூடிய இலக்கிய, இலக்கண, உரையாசிரியர்கள், சைவ ஆசிரியர்கள், வைணவ ஆசிரியர்கள், ஏனையோர் என்று பிரித்தும் தொகுத்தும் முறைப்படுத்திக் காட்டியிருக்கிறோம். ஒரு காலப் பகுதியைக் குறிப்பிட்டால் சந்தர்ப்பம் நோக்கி அதற்கு முன்னும் பின்னும் கூட அவ்வாசிரியர் வாழ்ந்தார் எனக் கருதல்வேண்டும்

| காலம் | இலக்கியம் இலக்கணம் உரை | சைவம் | வைணவம் | பிற |
|---|---|---|---|---|
| 1200 - 1225 | தமிழ்ப் பாரதம்<br>குலோத்துங்கசோழன் கோவை<br>சங்கரசோழன்உலா<br>பவணந்தி முனிவர்<br>தொல்காப்பியம் - பேராசிரியம்<br>காலிங்கர் குறள் உரை | மழவை எழுபது<br>நறையூர்ந்தாதி | இரணியவதைப்பரணி | சித்தராரூடம் |
| 1225 - 1250 | அவிநய உரை<br>நாலடி உரை பதுமனார் | மெய்கண்டார் | கோயிலந்தாதி | காங்கேயன் பிள்ளைத் தமிழ்<br>பெருவஞ்சி<br>சிந்துப் பிரபந்தம் |

| காலம் | இலக்கியம் இலக்கணம் உரை | சைவம் | வைணவம் | பிற |
|---|---|---|---|---|
| 1250 - 1275 | தருமனார் நாலடி உரை<br>பரிமேலழகர் குறள் உரை<br>புகழேந்தி<br>அறநெறிச் சாரம்<br>திருமுருகாற்றுப் படை பழைய உரை<br>பதிற்றுப் பத்துரை<br>யசோதர காவியம் | அருணந்தி சிவம்<br>மனவாசகங் கடந்தார்<br>பேராசிரியர் - கோவையார் உரை | நஞ்சீயர்<br>நம்பிள்ளை<br>பெரியவாச்சான் பிள்ளை | ஸ்ரீபட்டனார் |
| 1275 - 1300 | தொல்காப்பியம் - சேனாவரையம்<br>நாலடி விளக்க உரை<br>பொய்யாமொழிப் புலவர்<br>நம்பியகப் பொருள்<br>அதநானூறு பழைய உரை | நம்பி திருவிளையாடல் | வடக்குத் திருவீதி பிள்ளை<br>திருக்கோனேரி தாஸ்யை<br>பின்பழகிய பெருமாள் ஜீயர்<br>வார்த்தாமாலை<br>நயினாராச்சான் பிள்ளை | திருக்கோட்டி நம்பி - சோதிடம்<br>தாயின் நல்ல பெருமாள்<br>சத்திமுற்றப் புலவர்<br>காரணை விழுப்பரையன் |

## மேற்கோள் செய்யுள் அகராதி


| | | | |
|---|---|---|---|
| அகத்திணை | 137 | ஆதித்தன் | 231 |
| அங்கம்புலி | 341 | ஆதியில்அற | 37 |
| அண்டர்பணி | 366 | ஆதியில் தமிழ் | 174 |
| அணித்தகைய | 233 | ஆம்பல்வாய் | 94 |
| அத்திமாமுக | 366 | ஆரொருவன் | 170 |
| அந்தணர் | 367 | ஆள் ஐயா | 49 |
| அம்பதுமத்தார் | 187 | ஆற்றியல் | 228 |
| அரணைநட்டு | 367 | ஆறாது தத்து | 219 |
| அரிமேலழகு | 63 | ஆனிதனிற் | 267 |
| அருள்நிரம்பு | 280 | இட்டார் எப்போ | 327 |
| அருள்புரி | 310 | இடுக்கண் வந்து | 309 |
| அருளுந்தொகு | 189 | இந்திரன் வார் | 263 |
| அவந்திமன் | 333 | இந்நூலிற்கு | 69 |
| அவற்றுட் சூத்தி | 126 | இம்மையே | 41 |
| அவன்கொல் | 297 | இருவேறு | 233 |
| அளிகொளும் | 345 | இருள்வெளி | 217 |
| அறத்திற்கே | 57 | இழையொன்றி | 9 |
| அறத்தை | 20 | இன்றியமையர்ச் | 51 |
| அறந்தருதிரு | 325 | இன்று பூசை | 192 |
| அறம் உரை | 344 | இனவரிக்கிம் | 378 |
| அறவியல் இரு | 100 | ஈசனுக்கன் | 215 |
| அறியாமை | 215 | ஈன்றபொழுதில் | 58 |
| அறிவோன் | 70 | உங்களிலே | 344 |
| அறுவகைச் | 214 | உத்தரகோச | 191 |
| அறைகடலின் | 376 | உமையாளும் | 344 |
| அன்பு பெரிது | 36 | உயர்வற உயர் | 283 |
| அன்று நீசெல் | 346 | உருவழிக்கும் | 16 |

| | |
|---|---|
| உன்னும் நான் | 228 |
| ஊர்வபதி | 55 |
| ஊழிதொறும் | 280 |
| ஊழிற்பெருவலி | 54 |
| ஊழையும் | 54 |
| எங்கள் கண் | 246 |
| எட்டெழுத்தை | 12 |
| எய்தியமணி | 165 |
| எழுத்தறிய | 49 |
| எழுதுவரிக் | 181 |
| எழுபானிரண் | 125 |
| என்றார் | 193 |
| எனைநாளென்ப | 219 |
| ஏகா அழகே | 231 |
| ஏற்ற அகத்திணை | 137 |
| ஒரு கவிக்கோ | 343 |
| ஒருநாள் உரை | 295 |
| ஒருநாளும் நீ | 294 |
| ஒருநாளும் விடி | 374 |
| ஒரு முனிவன் | 5 |
| ஒருவர் ஒரு | 177 |
| ஓதுசமயங் | 214 |
| கங்கன் அக்ன் | 129 |
| கங்கக்குரிசில் | 121 |
| கங்கணம்வேற் | 377 |
| கூட்டர் மய | 228 |
| கண்ணுதற்கட | 61 |
| கண்பொட்டை | 7 |
| கதிர்வெயில் | 356 |
| கல்பொறியும் | 33 |
| கலியுகவரத | 368 |
| கள்ளுண்டல் | 296 |
| கற்றவர் புகழும் | 167 |
| கன்னலும் செந் | 197 |
| காசிபர் தேவி | 366 |
| காகக்கு | 21 |
| காதல்கவ | 20 |
| கார்வளங் | 187 |
| காரார்களந் | 24 |
| காரேற்ற | 378 |
| கால்காய்ந்த | 161 |
| காலக்கடி | 367 |
| குருத்தவா | 170 |
| குருமலரடி | 367 |
| குலந்தரும் | 190 |
| குழற்கால் | 343 |
| குற்றங்கள் | 312 |
| கூடிய சீர் | 332 |
| கூத்தாள்முக | 347 |
| கூனையுங் | 7 |
| கேட்டார்ப்பிணி | 58 |
| கையாறிரண் | 339 |
| கையும்பத | 234 |
| கையும்மல | 234 |
| கொன்றைவேய் | 160 |
| கோக்கண்ட | 8 |
| கோட்டாற் | 340 |
| கோதில்குல | 347 |
| கோரத்துக் | 4 |
| சங்கநிதிபோல் | 22 |
| சங்கமன் தந்த | 333 |
| சத்தம்பயி | 25 |
| சந்தனப் பொதி | 174 |
| சாணாகமூக் | 366 |
| சாதி இரண் | 327 |
| சிற்றரசூர் | 348 |

சீரார் வடக்கு 266
சீலமுனிவர் 106
சுந்தரன் அவ 195
சூழும்பிணி 377
செங்கால் மட 146
செந்தளிர் 310
செருமலைதான 360
செல்லன் புத 7
சேயமாமது 227
சேர்ந்த சங்கத் 359
சேலேய் விழி 8
சொக்கனென் 196
சொன்னகலை 21
சொன்ன சந்த 7
ஞாலத்துழி 101
தஞ்சீரைஞானி 252
தம்மின்தம் 57
தருமர் மணக் 31
தலைமகனில் 296
தலைமை 230
தற்கோலிப்பூ 12
தன்னூர்ச் சன 120
தனகர சங்க 336
தாரும்முடி 377
தாருவென 22
தானேதனக்கு 294
திருத்தகுசீர் 60
திருந்திய இறை 196
திருந்திய தமிழில் 46
திருமருதூர் 366
திருவிழுந்த 322
திறையிட்டிரு 375
திறையின் முறைகொ 351
திறையின் முறையெ 351
தீக்குலாம் 230
தீர்த்தமார் 230
துட்டப்பயல் 342
துன்னுபுகழ் 259
தூசுதூசாக் 348
தூபம் கமழும் 10
தெண்டிரைசூழ் 253
தெய்வப்புல 60
தெள்ளியதா 266
தெளிவில் 230
தேமருவும் 263
தேர்ப்பட்ட 228
தேரையார் 347
தேள்புள்ளி 366
தேனார்கடலும் 334
தோடிவானர 360
தோற்றம் துடி 220
நத்தம் போல் 58
நம்பியைத் 283
நம்பிள்ளை 276
நம்பெருமாள் 256
நல்லளந்தா 360
நல்லறிவு 149
நல்லார் கண் 56
நல்லார் வண 312
நல்லோர் அருள் 112
நளனைப் புகழ் 13
நற்றிணைநல்ல 79
நன்றாய் ஞான 45
நன்னர் நன்னா 154
நாமார் அடிமை 14
நாராய் 364

| | |
|---|---|
| நாராயணாய | 16 |
| நாலடி நான், | 96 |
| நாற்குணமும் | 20 |
| நானூறவற் | 100 |
| நானே இனி | 9 |
| நிலநீர் | 86 |
| நின்ற நீதி | 83 |
| நினையுங்கழற் | 364 |
| நினைவினை | 190 |
| நீதிமாமது | 191 |
| நீலநெடுங் | 16 |
| நூலார் கலை | 13 |
| நெஞ்சத்திரு | 263 |
| நெஞ்சுக்கிருள் | 123 |
| நேமிமால் | 9 |
| நையும் படி | 24 |
| படமெடுத்தா | 367 |
| படிபுகழ் | 191 |
| பண்டைமறை | 213 |
| பண்பார் கவிஞர் | 168 |
| பரத்தையிற் | 136 |
| பல்லக்கு | 187 |
| பவங்கள் | 190 |
| பழியும் புகழும் | 26 |
| பன்னிலூறும் | 217 |
| பாதிவிருத்த | 216 |
| பார் விரித்த | 216 |
| பாரார் நிடத | 17 |
| பாலாரும் | 37 |
| பாலெல்லாம் | 60 |
| பிள்ளான்நஞ் | 267 |
| பிள்ளைபேய் | 295 |
| பிறவாரண | 359 |
| பின்பழகராம் | 280 |
| புட்பதந்தன் | 303 |
| புயலும் தரு | 378 |
| புரைதீர் அரசை | 348 |
| புவி புகழ் | 182 |
| புனவர் தட் | 149 |
| பூட்டார் நிலை | 24 |
| பூணாக என்ப | 152 |
| பூத்தகாலை | 136 |
| பூப்பின் | 136 |
| பூமகளும் | 168 |
| பூமலி அசோ | 118 |
| பூமலி நாவல் | 134 |
| பூமிசை நடந்த | 135 |
| பூவேந்தர் | 344 |
| பெரியவாச் | 276 |
| பேயடையா | 201 |
| பேர று பத்தி | 125 |
| பையரவிலே | 233 |
| பொத்தப்பிச் | 130 |
| பொதியில் அக | 340 |
| பொம்மென | 41 |
| பொய்ம்மை | 53 |
| பொய்யா மொழி | 345 |
| பொருந்த ஒரு | 26 |
| பொருப்பை | 189 |
| பொன்பாவும் | 341 |
| பொன்னிநாட | 375 |
| பொன்னுடைய | 21 |
| போதுவார்நீற | 15 |
| மங்கைநகர் | 287 |
| மடிமானி | 168 |
| மண்ணாள்திகிரி | 377 |

| | |
|---|---|
| மருவுவெவ்வி | 307 |
| மல்லிகையே | 10 |
| மலர் தலையுல | 119 |
| மலர் தலையுல | 209 |
| மலை நிலம் பூவே | 168 |
| மறை பறை இறை | 195 |
| மன்னதிகை | 218 |
| மாநிலங்காவ | 67 |
| மாமனு நூல் | 22 |
| மாமுத்த வெண் | 22 |
| மாயைதனை | 220 |
| மாலின் மரு | 106 |
| மானவன் | 6 |
| மானிற்குமோ | 6 |
| மிக்கோன் உல | 16 |
| மீளிவன் கொடி | 376 |
| முச்சகம் நிழற் | 118 |
| முட்டை யென் | 342 |
| முன் நாயகரில் | 332 |
| முன்றான் பெரு | 312 |
| முன்னம் கரு | 190 |
| முன்னுரைத்த | 45 |
| முன்னூலொழிய | 127 |
| முனைப்பாடி | 296 |
| முனை முகத்து | 32 |
| மூலப் பழமறை | 15 |
| மூவாமுதலா | 312 |
| மெய்யென | 368 |
| மோனைமுத்த | 7 |
| யாதொருதெய் | 214 |
| யான்செய்தேன் | 215 |
| யானையாழ் | 194 |
| வண்டார்வள | 22 |
| வண்ணம் எழு | 36 |
| வண்பசிக்காடு | 362 |
| வரந்தரும் | 188 |
| வரைத்தநா | 306 |
| வல்லாடாயத் | 19 |
| வள்ளல் சிலைப் | 43 |
| வள்ளுவக்கட | 37 |
| வள்ளுவர் சீர் | 64,215 |
| வளங்கெழு | 107 |
| வன்கண் குடி | 154 |
| வன்மதுரை | 377 |
| வாக்குமன | 219 |
| வாசமலர் | 346 |
| வாய்த்தவயி | 340 |
| வாழிசோழ | 346 |
| வான்பொய்யா | 153 |
| வானவர்மக் | 118 |
| விக்காவுக் | 12 |
| விண்பட்ட | 7 |
| விரும்பியருள் | 44 |
| விரைத்தார் | 45 |
| விழுந்த துளி | 341 |
| வெங்கண்மத | 378 |
| வெண்பாவிற் | 2 |
| வெள்ளைக்கலி | 332 |
| வெறியார் | 332 |
| வென்றான்வினை | 312 |
| வென்றிவள | 5 |
| வையமுழுது | 232 |
| வேத நூல்கள் | 228 |


❖ ❖ ❖

## பொருள் அகராதி


அட்டவணைகள்:
சங்கர சோழன் பரம்பரை 334
சோழர் வரலாறு
- இரு உலாக்கள் 329
திருவாய்மொழி
வியாக்கியானங்கள் 240
நளவெண்பாப் பாடல் 26
பகவத்கீதை அத்தியாயப்
பெயர் 226
பாட்டியல் நூல்கள் 166
வைணவ குருபரம்பரை
நூல்கள் 237
அட்டமூர்த்தம் 62
அட்டாங்கயோகம் 51
அணியிலக்கணம் 158
அத்வைத்த வேதாந்தம் 226
ஆசாரியனே தெய்வம் 259
ஆற்றுப்படை 169
இசையைப் பழித்தல் 307
இயல், இசை,
நாடக வைப்பு முறை 157
இயைபு 245
இருப்பு நிலை 179
இலக்கண பஞ்சகம் 116
இலக்கண நூல் வளர்ச்சி 133
உத்தர குரு 34
உயிர் - இயங்கும் உயிரும்
இயங்கா உயிரும் 310
உரைநடை அறிவு 30
உரையாசிரியர் சேவை 144
உவமைப்போலி 163
எட்டுத்தொகை உரை 76
எண்குணத்தான் 45
ஏட்டில் கயிறு
சார்த்திப் பார்த்தல் 201
ஏடு எதிரேறிய வரலாறு 97
ஐப்பசி விழா 310
ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு
இரட்டைத் தாழ்ப்பாள் 9
ஒரு பொருட் பன்மொழி 65
கல்செய்யும் உதவி 102
கலிவெண்பா 156
கலை முப்பத்தெட்டு 70
கள்ளக்கவி 70
கற்பின் திண்மை 20
கற்புடை மகளிர் 102
காலத்தால் மாறுதல் 67
கிரந்தம் 235
குருலிங்க சங்கம வழிபாடு 226

கைங்கரியம் 226
கையெழுத்தின் அழகு 285
சகர முதன்மொழி 180
சண்டமாரி 310
சத்திமான் 193
சமணர் அன்னியர் 130
சமயப்பொறை 214
சமஸ்கிருதம் முரட்டுப்பாஷை 247
சமஸ்கிருத முரணர் 247
சரபமூர்த்தி 357
சாத்துக்கவி 170
சான்றோர் செய்யுள் 139
சிவ சின்னங்கள் 190
சிவாசாரியர் 225
சுவை எட்டு 162
சூதின் தீமை 18
சைவ இலக்கிய வரலாறு 199
சைவ குருபரம்பரை இன்மை 248
சைன இலக்கியம் 291
சைனர் இலக்கணம் இயற்றியமை 124
சைனர் இலக்கியப் பணி 291
சைனர் காவியங்களின் தோல்வி 305
சைனர் மொழிக்கு அன்னியர் 292
சைனர் வரலாறு 292

ooo

# சொல்லாட்சியும் பொருளும்


| | | | |
|---|---|---|---|
| அருங்கலை | 331 | பவ ணந்தி | 115 |
| ஆச்சான் | 268 | பிரஸ்தானத்திரயம் | 227 |
| இராவுத்தன் | 192 | புராணம் | 183 |
| ஈடு | 267 | பூவாசகேசி | 192 |
| உண்டல் | 179 | பெண்மகன் | 172 |
| உபாக்கியானம் | 184 | மெய்கண்டார் | 201 |
| உரிச்சொல் - நிகண்டு | 124 | பெற்றம் - ஆ, எருமை | 172 |
| உறுகால் | 175 | மத்தியஞ்சயம் | 193 |
| ஓரான்வழி | 241 | சோழர் வீழ்ச்சி | 357 |
| கமகன் | 224 | சோழியன் உமிழ்ந்த சக்கை | 275 |
| கூகை | 326 | சோறு - விலக்கத்தக்க சோறு | 289 |
| கொச்சகம் | 163 | ஞானசாத்திரக் கோயில்கள் | 216 |
| கெளவை | 326 | தத்துவம் | 51,220 |
| சண்பை | 211 | தல புராணம் | 184 |
| சாத்தல் - வேதம் | 193 | தாய பனுவல் | 159 |
| சிற்புட்பகேசி | 192 | திசைச் சொற்கள் | 172 |
| சேவல் | 146 | திருமுறைக்கு உரை இல்லை | 71 |
| சேனாவரையன் | 171 | தீர்த்தங்கரர் இருபத்துநால்வர் | 301 |
| சொக்கன் | 194 | தும்மினால் சிவாய எனல் | 196 |
| தத்துவம் | 220 | துரியோதனன் பற்றிய இடம் | 263 |
| தீத்தீத்தீ | 177 | நகைச்சுவை | 162 |
| நந்தி | 114 | நடராச தத்துவம் | 220 |
| நிகண்டன் | 292 | நன்னூலார் பாயிரம் செய்ய வில்லை | 126 |
| நீம் | 295 | | |
| பதக்கணம் | 193 | | |

நாகமும் பெடையும் 104
நாற்கவி 116
நானிலம் 72
நானே பிரமம் 226
நீலமணியின் குற்றம் 193
நூல் கேட்கத் தகுதியில்லாதார் 295
பகவத் கைங்கரியம், பாகவதகைங்கரியம், ஆசாரிய கைங்கரியம் 226
பகை ஐவகை 67
பசுவைக் கோறல் வழக்கல்ல 195
பஞ்சகவ்வியப் புரம் 174
பஞ்சபரமேட்டிகள் 310
படைவகுப்பு 50
பழங்குடி - சேர சோழ பாண்டியர் 67
பாகவத அபசாரத்துக்குப் பரிகாரமில்லை 258
பாட்டியல் இசைத் தமிழிலும் ஒரு பகுதி 167
பாட்டியல் வரலாறு 165
பாலைக்கு நிலமின்மை 72
பிராணிகளின் இளம்பாற்பெயர்கள் 163
பிள்ளைக்கவி 170
பிறப்பு ஏழு 54
புராணம் மூன்றுவகை 184
புலமைக் காய்ச்சல் 77
புலாலுண்ணாமை 307
புன்கவிஞர்கள் நால்வகை 169
பெருங்காப்பியமும் சிறு காப்பியமும் 300
மக்கட்பேற்றின் பெருமை 21
மணிப்பிரவாள நடை 242
மணிப்பிரவாள விளக்கம் 242
மறைஞானி 193
மாதலைப் பழித்தல் 298
மாமாங்க மாடல் 296
மிறைக்கவி செய்தல் மரபு அன்று 158
முகம்மதியரால் தமிழ் நூல் அழிவு 145
முப்பத்தெட்டுக் கலை 70
மூடம் மூவகை 297
மொழி பெயர்ப்பு 162
யானை பற்றிய தொடர்புகள் 194
வசன நடை 290
வடகலை தென்கலைப் பிளவு 226
வடநூலார் 51
வடமொழி வழக்கு 56
விடுகதை 181
வீடு செய்யுளில் வாராது 154
வெண்பாக் காவியங்கள் 2
வேதாந்தம் 206
வைணவ சமய எழுச்சி 50


ooo

## சிறப்புப் பெயர் அகராதி


அகத்தியம் 122
அகத்தியர் 134
அகத்தியர் பலர் 165
அகத்தியர் பாட்டியல் 165
அகத்தியர் யாழ் நூல் 157
அகநானூற்றுக் கருத்தகவல் 84
அகநானூறு 76
அகநானூறு பழைய உரை 82
அகலிகை வெண்பா 2
அகோர முனிவர் 188
அங்கமாலை 169
அச்சுத களப்பாளர் 201,210
அட்டாதச புராணம் 185
அடங்கல் முறை 201
அண்டத்துப் பரணி 8
அண்ணா அப்பங்கார் 236
அணியியல் 133
அதிகை 219
அதிவீரராம பாண்டியர் 17
அந்தாதிச் செய்யுள் 159
அப்பர் 184
அப்புள்ளார் 281
அபயன் 25
அபிமன்னன் சுந்தரிமாலை 5
அம்பிகாபதி கோவை 138
அம்பி 265
அமண்பாக்கம் 340
அமராபரணன் 131
அமலனாதிபிரான் 272
அமிதசாகரர் 158
அமிர்தபதி 312
அரிச்சந்திர புராணம் 184
அரிச்சந்திர வெண்பா 2
அரிபீடிகை 175
அருங்கலச் செப்பு 298
அருங்குன்றைப்பிள்ளை சீயகங்கன் 129
அருணகிரி 342
அருணந்தி சிவம் 210
அருணிலை விசாகன் 371
அருளாளப் பெருமாள் கோயில் 66
அல்லி அரசாணிமாலை 5,6
அவ்வை 159
அவகிரிக்கோட்டை 23
அவந்தி மன் 334
அவிநயம் 182
அவிநயனார் 145
அவிநயனார் கலாவியல் 167
அவிநயனார் யாப்பு 182
அழகப்பிரான் இடைக்கரை யாழ்வார் 173

அழகிய மணவாளப் பெருமாள் 265
அறநிலை விசாகன் 371
அறநெறிச்சாரம் 191
அறிவானந்த சித்தி 216
அறுபத்து மூவர் வரலாறு 241
அனந்தராமையர் 88
அனந்தாழ்வான் 289
அனுராசமாபுரி 338
ஆச்சான் பிள்ளை 268
ஆசாரக் கோவை 88
- உரை 92
ஆசாரிய இருதயம் 287
ஆசிரிய நிகண்டு 132
ஆண்டாள் 279
ஆண்டான் 247
ஆண்டிப்புலவர் 132
ஆத்திரையன் பேராசிரியன் 147
ஆதிச்சதேவன் 373
ஆதிநாதர் கோவில் 121
ஆரிய சேகரன் 23
ஆருகதர் 51
ஆவினன்குடி - சித்தன் வாழ்வு 63
ஆழ்வார் திருநகரி 241
ஆழ்வார் பிரபந்தம் 152
ஆளவந்தார் 290
ஆளுடைய நாச்சியார் 335
ஆற்றூர் சேனாவரையன் 171
ஆற்றூர் சோமநாத சுவாமி 173
ஆறாயிரப்படி குரு பரம்பரை 235
ஆறுமுகநயினார் 289
ஆறுமுகநாவலர் 132
ஆனந்தத் தாண்டவநம்பி 186
இசை நூல் 157
இடைக்காடர் 191
இடைக்காடனார் ஊசிமுறி 159
இடைச்சங்க நூல் 185
இந்திரகாளியம் 167
இரட்டையர் 348
இரத்தினச் சுருக்கம் 25
இராசகோபால ஐயங்கார் 82
இராசகோபால பிள்ளை 174
இராசபவித்திரப் பல்லவதரையன் 145
இராசமகேந்திரன் 330
இராசராசசோழன் I 330
இராசராச சோழன் II 330
இராசராச சோழன் III 221
இராசராச சோழன் உலா 328
இராசராச நல்லூர் 203
இராசாதிராசன் II 330
இராசேந்திரன் I 330
இராசேந்திரன் II 330
இராமலிங்கத் தம்பிரான் 171
இராமாயணம் 27
இராமாயண வெண்பா 2
இராமானுச கவிராயர் 90
இராமானுசர் 245
இருபத்து நாலாயிரப்படி திருவாய்மொழி 262
இருபா இருபது 212
இரும்பல்காஞ்சி 16
இலக்கணக் கொத்து 127
இலக்கண விளக்கம் 137

இலக்கண விளக்கப்
பாட்டியல் 165
இலங்காபுரித் தண்டநாயகன் 140
இலிங்க புராணம் 184
இளங்கோவடிகள் 202
இளம்பூரணர் 78
இளம்பெருமான் அடிகள் 298
இறையனார் களவியல் 75
இறையனார் - புலவர் 191
இன்னா நாற்பதுரை 88
இனியவை நாற்பதுரை 88
ஈடு 101
ஈயுண்ணி மாதவப் பெருமாள் 257
ஈழநாடு 23
உக்கிரப் பெருவழுதி 99
உண்மை விளக்கம் 200
உத்தர புராணம் 302
உத்தரமா புராணம் 188
உதயண குமாரகாவியம் 301
உபதேச காண்டம் 184
உபநிடதம் 63
உமாபதி சிவம் 64
உய்யக்கொண்டார் 223
உய்யவந்தார் 135
உலகாயதன் 212
உவமான சங்கிரகம் 25
உள்ளமுடையான் 370
உறந்தை 159
எங்களாழ்வான் 281
எட்டுத்தொகை 76
எட்டுத்தொகை உரை 76
எதிரிலாப் பெருமான் 335
எம்பார் 223
எம்பெருமானார் 276
எல்லப்ப நாவலர் 32
ஏஎ - சாமவேதம் 63
ஏணியேற்றம் 5
ஏலாதி உரை 94
ஏலாராசியம் 175
ஏழிற்கோ 159
ஏனாதி நல்லுதடன் 173
ஐங்குறு நூறு 139
ஐங்குறு நூறு பழைய உரை 80
ஐஞ்சிறு காப்பியம் 76
ஐந்திணை எழுபது 135
ஐந்திணை ஐம்பது உரை 159
ஐம்பெருங் காப்பியம் 75
ஐயடிகள் காடவர்கோன் 198
ஐயரவர்கள் 30
ஐயன் ஆரிதனார் 133
ஒக்கைகாவலர் 45
ஒட்டக்கூத்தர் 3,4,5
ஒன்பதினாயிரப்படி
திருவாய் மொழி 252
ஓரான்வழித் திருமுடியடைவு 241
கங்கராச்சியம் 128
கங்கன் 128
கங்கைகொண்ட சோழபுரம் 334
கச்சிப்பதி மனவாசகங்
கடந்தார் 220
கச்சியப்பர் 313
கஞ்சவதைப்பரணி 352
கடகண்டு 159
கடந்தை 211

கடம்பவன புராண 188
கடிய நன்னியார் 158
கண்டன் 346
கண்டனலங்காரம் 138
கண்டியூர் 347
கணேசையர் பதிப்பு 181
கந்தப்ப தேசிகர் 342
கந்தபுராணம் 184
கந்தாடை ஆண்டான் 257
கந்தாடைத் தோழப்பர் 257
கந்தி 25
கந்திருவ நூல் 157
கப்பிஞ்சி நாடு 187
கபிலபரண நக்கீரர் 180
கபிலம் 180
கபிலர் 180
கபிலர் அந்தாதி 191
கபிலர் பாரி நட்பு 346
கம்பராமாயணம் 20
கம்பர் 38
கரிகாலன் 329
கருவூர் 91
கருவூர்த்தேவர் 191
கல்யாணம் 330
கல்லாடம் 199
கலிகன்றிதாசர் 256
கலிங்கப்போர் 177
கலியன் அருள்பாடு 272
கலித்தொகை 76
கலைக்கோட்டுத் தண்டு 169
கவிராசராசன் 362
கவிராயர் ஈசுவரசிவ உரையார் 374
கவுணியகோத்திரம் 186
கழகப் பதிப்பு 181
களந்தை 159
களப்பிரர் 292
களவழி நாற்பது 159
களவியற்காரிகை 358
கன்னிவனப்புராணம் 185
கனகசுந்தரம் பிள்ளை 142
கஜ சாத்திரம் 169
காக்கை பாடினியம் 159
காக்கை பாடினியார் 181
காசி கண்டம் 184
காசி மடத்துப் பதிப்பு 77
காஞ்சி 129
காஞ்சி உலகளந்த பெருமாள் 44
காஞ்சி காமாட்சி கோயில் 130
காஞ்சிப் புராணம் 184
காஞ்சிபுரம் 66
காந்தபுராணம் 169
கார் நாற்பது 135
கார் நாற்பது உரை 91
காரணை விழுப்பரையார் 373
காரியார்நாரியார் பாப்பகுந்தது 195
காரைக்காலம்மையார் 19
காலிங்கர் 331
காலிங்கர் உரை 47
காலிங்கராயர் 32
காலிங்கராயன் 339
காவிதி கண்ணந்தை 173
காவிரிக்கரை செய்தான் 329
காளமேகம் 3

கானப்பேர் 195
கானப்பேர்ப் புராணம் 188
கிடாம்பி அப்புள்ளார் 281
கிருஷ்ணசூரி 268
கிருஷ்ணமாசாரி 238
கிள்ளிவளவன் 329
கிளவிக்கொத்து 73
கீர்த்தித்திரு அகவல் 192
குசேல வெண்பா 2
குடந்தை 159
குடந்தைப் புராணம் 188
குண்டலகேசி 76
குணசாகரர் 126
குணபத்திரர் 302
குணவீர பண்டிதர் 124
குமார குலோத்துங்கன் 326
குமாரமகீதரன் 333
குரக்குத்தளி 121
குருபரம்பராப் பிரபாவம் 236
குருபரம்பரை 185
குருமொழி 220
குலசேகர பாண்டியன் 23
குலசேகர பாண்டியன் சடையவர்மன் 140
குலசேகரர் 278
குலோத்துங்க சோழச்சாவகன் 347
குலோத்துங்க சோழன் I 129
குலோத்துங்க சோழன் II 129
குலோத்துங்க சோழன் III 130
குலோத்துங்கசோழன் உலா 328
குலோத்துங்கசோழன் கோவை 138
குலோத்துங்கசோழன் பிள்ளைத் தமிழ் 330
குவளாலபுர பரமேசுவரன் 129
குவளாலபுரம் 129
குறள் 138
குறள் உரை 111
குறள் விளக்கம் 56
குறுங்குடி நம்பி 12
குறுந்தொகை 76
குறுந்தொகை உரை 88
குறும்பு நாடு 121
குன்றமெறிந்தாய் என்ற பாடல் 192
கூடல் சங்கமத்துப்பரணி 332
கூடல் சங்கமம் 330
கூடலூர் கிழார் 80
கூத்த நூல் 157
கூத்தர் 330
கூத்தராற்றுப்படை 169
கூர்ம புராணம் 169
கூரத்தாழ்வார் 123
கூழங்கைத் தம்பிரான் 132
கைந்நிலை உரை 95
கையடம் 175
கொங்கு நாடு 338
கொங்குதேர் வாழ்க்கை 191
கொங்குமண்டல சதகம் 120
கொங்குவேளிர் 159
கொப்பத்துப் பரணி 332
கொப்பம் 330
கொரியோலானஸ் 34
கொல்லம் 141
கொலை மறுத்தல் உரை 181

கொற்கை 172
கொற்றந்தை 24
கொன்றை வேந்தன் 160
கோச்செங்கணான் 329
கோபெருஞ்சோழன் 346
கோபிநாத ராவ் 121
கோயில் அந்தாதி 359
கோயில் திருப்பண்ணியர் விருத்தம் 360
கோலார் 121
கோவல வெண்பா 2
கோவிந்த பகவத் பாலர் 228
கோவையுரை செய்த பேராசிரியர் 68
சகலாகம பண்டிதர் 203
சகுந்தலை வெண்பா 2
சங்க இலக்கியம் 30
சங்கமன் 333
சங்கயாப்புடையார் 158
சங்கர்ஷணன் 329
சங்கர அத்வைதம் 206
சங்கர சோழன் உலா 316
சங்கரநமசிவாயர் 122
சங்கர பாடியம் 207
சங்கரர் 225
சங்கற்ப நிராகரணம் 204
சட்டைநாத வள்ளல் 71
சடகோப ராமானுசாசாரியர் 132
சண்பை - சீகாழி 218
சண்பைத் தலைவர் 211
சண்முகம் பிள்ளை 303
சத்திமுற்றப் புலவர் 362
சத்திய வாகீசர் 340
சதாசிவ சிவசாரியர் 207
சதாசிவப் பண்டாரத்தார் 338
சதாசிவ ரூபம் 72
சந்திரசேகர கவிராச பண்டிதர் 93
சந்திரன் சுவர்க்கி 3,10
சந்தான குரவர் 204
சந்தான சாரியர் புராணம் 212
சந்திரகிரி ஐயன் 286
சம்பந்தர் 96
சம்பந்தர் துதி 190
சமணமுனிவர் எண்ணாயிரவர் 97
சமுத்திர ஜித் 329
சரசுவதி மகால் பதிப்பு 98
சரப புராணம் 357
சரவணப்பெருமாள் ஐயர் 68
சனகாபுரம் 120
சனகை 119
சனநாதபுரம் 120
சனற்குமர முனிவர் 202
சனிக்குரிய தலம் 19
சாங்கிய நூல் 51
சாங்கியர் 62
சாசனத் தமிழ்க்கவிசரிதம் 172
சாந்தி புராணம் 183
சாமிநாத தேசிகர் 211
சாரசமச்சயம் 188
சாருவ பௌமன் புகழேந்தி 26
சாவித்திரி வெண்பா 2
சித்தாந்த சாராவளி 208
சித்தாந்த இதழ் 208
சிதம்பரசுவாமி - போரூர் 188

சிதம்பரநாத முதலியார் 90
சிதம்பரப் பாட்டியல் 165
சிதம்ப்ரம் 186
சிந்தாமணி 30
சிபி 329
சிம்மநந்தி 128
சிராமலை 340
சிருங்காரப் பிரகாசம் 65
சிலப்பதிகாரம் 181
சிவஞான சித்தி 209
சிவஞான சித்தி உரை 239
சிவஞான சித்தி பரபக்கம் 212
சிவஞான சுவாமி 124
சிவஞான சுவாமி சிற்றுரை 209
சிவஞான பாடியம் 209
சிவஞான போதச் சிறப்புப் பாயிரம் 217
சிவஞான போதப்பொருள் 205
சிவஞான போதம் 203
சிவநெறிப் பிரகாசம் 213
சிவப்பிரகாச உரை 207
சிவப்பிரகாச சுவாமி 225
சிவப்பிரகாசம்பிள்ளை 216
சிவப்பிரகாசர், மதுரை 207
சிவமகா புராணம் 184
சிவாக்கிர யோகி 207
சிவாகமத் தேர்ச்சியுள்ள சைவர் உரை 209
சிவானந்தையர் 142
சிவூகன் 329
சிற்றட்டகம் 139
சிற்றதிகாரம் 124
சிறிய ஆச்சாள்பிள்ளை 268
சிறுகாக்கை பாடினியார் 158
சிறுகுரீ உரை 159
சிறுபஞ்சமூலம் 49
சிறுபஞ்சமூலம் உரை 93
சினேந்திர மதம் 119
சினேந்திரன் செய்த சத்தநூல் 119
சீத்தலைச் சாத்தனார் 159
சீயகங்கன் 120
சீயர் அரும்பதம் 246
சீவசம்போதனை 2
சீனாபுரம் 121
சுந்தரபாண்டியன் 331
சுந்தரமூர்த்தி பதிப்பு 181
சுந்தரர் 121
சுப்பிரமணிய தீட்சிதர் 175
சுருதப்பிரகாசிகை 267
சுவாமிநாத தேசிகர் 127
சுவாயம்புவம் 208
சுவாயாம்புவசங்கிரகம் 208
சுவேதவனப் பெருமாள் 202
சூடாமணி நிகண்டு 291
சூரன் வதைப்பரணி 352
சூளாமணி 76
செங்காட்டங் கோட்டம் 339
செஞ்சி 24
செஞ்சிக் கலம்பகம் 24
செந்தமிழ்ப் பத்திரிகை 328
செய்யுளியல் உடையார் 158
செயிற்றியம் 159
செயிற்றியன் 180
செல்விநகர் 2
செல்வகேசவ முதலியார் 93
செவ்விருக்கை 23

சென்னகேசவலு நாயுடு 171
சேக்கிழார் 27
சேங்கனூர் 268
சேந்தமங்கலம் 374
சேய்ஞலூர் 268
சேயூர் முருகன்
பிள்ளைத்தமிழ் 342
சேர சோழ பாண்டியர் 67
சேரமான்பெருமாள் 156
சேனாவரையர் 66
சைவ சித்தாந்த சாத்திரம் 200
சைவத்திருமுறை 185
சைவாகமம் 62
சோமசுந்தர தேசிகர் 91
சோமதேவசூரி 311
சோமநாத சுவாமி கோயில் 173
சோழசிங்கபுரம் 120
சோழநாடு 23
சோழ பாண்டியன் மண்டலம் 325
சோழ பாண்டியன்
என்ற பட்டம் 325
சோழ மன்னர் 161
சோழேந்திர சிங்கர் 129
சௌத்திராந்திகன் 212
ஞானசித்தி 212
ஞானப்பிரகாசர் உரை 216
ஞானப்பிரகாசர் - மதுரை 212
தக்கயாகப்பரணி
உரையாசிரியர் 29
தகடூர் யாத்திரை 159
தசபுராணம் 184
தஞ்சாக்கூர் 342
தஞ்சை 138
தஞ்சைவாணன் 348
தஞ்சைவாணன் கோவை 69
தண்டபாணி தேசிகர்
குறள் உரை 95
தண்டலம் 182
தண்டியலங்காரம் 115
தண்டியாசிரியர் 176
தணிகைச் சந்நிதி முறை 342
தத்தாத்திரேயப் பாட்டியல் 166
தத்துவப் பிரகாசர், சீகாழி 217
தத்துவப் பிரகாசர்
- திருவொற்றியூர் 212
தத்துவராய சுவாமி 225
தந்திர வாக்கியம் 159
தமிழ் நாவலர் சரிதை 4
தமிழ்நெறி விளக்கம் 133
தருக்க சங்கிரக உரை 124
தருமர் 32
தருமர் உரை 95
தனிச் செய்யுள்சிந்தாமணி 4
தனி நின்று வென்ற பெருமாள் 23
தனிப்பாடல் திரட்டு 23
தாண்டவராய சுவாமி 69
தாமத்தர் 32
தாமோதரம்பிள்ளை 151
தாயின் நல்லபெருமாள் 374
தாயுமானவர் பாடல் 216
தாரா நகர் 65
திணை மாலை நூற்றைம்பது
உரை 138
திணை மொழி ஐம்பது உரை 91
தியாகாபரணன் 324

திருகடுகம் 49
திரிபுவனதேவ்ன் 170
திரிபுவனம் 357
திருக்கயிலாய பரம்பரை 206
திருக்களிற்றுப்படி 135
திருக்காளத்தி 129
திருக்குருகைப்பிரான் 240
திருக்குறள் 20
திருக்குறள்உரை 30
திருக்குறள் நுண்பொருள் மாலை 60
திருக்கோட்டி நம்பி 369
திருக்கோட்டியூர் நம்பி 286
திருக்கோட்டியூர் ஜீயர் 286
திருக்கோவை 191
திருக்கோவையார் உண்மை 74
திருச்சிராப்பள்ளி 23
திருச்சிற்றம்பலம் 190
திருச்செந்தூர்ப்பரணி 352
திருத்தக்க தேவர் 311
திருத்துறையூர் 201
திருத்தொண்டர் புராணம் 184
திருநள்ளாறு 19
திருநாராயண புரம் 248
திருநாராயண ஐயங்கார் 93
திருநாவலூர் 303
திருநெடுந்தாண்டகம் 248
திருப்பாணாழ்வார் 271
திருப்பாதிரிப்புலியூர்த் தலபுராணம் 185
திருப்பாவை ஈராயிரப்படி 252
திருப்பாவை மூவாயிரப்படி 270
திருப்பாவை ஸ்வாபதேச விவரணம் 285
திருப்புட்குழி 276
திருப்புத்தூர்க் கல்வெட்டு 196
திருமங்கையாழ்வார் 156
திருமந்திரம் 297
திருமலையார் 95
திருமழிசையாழ்வார் 278
திருமாலை வியாக்கியானம் 246
திருமுருகாற்றுப்படை 192
திருமுருகாற்றுப்படை உரை 77
திருமுனைப்பாடிநாடு 201
திருமூலர் 198
திருமேனி இரத்தினக் கவிராயர் 68
திருவண்ணாமலைச் சாசனம் 221
திருவணைக்கரை 83
திருவரங்கம் 269
திருவல்லம் 120
திருவழுதி வளநாடு 171
திருவள்ளுவ மாலை 36
திருவள்ளுவர் 180
திருவாசகப் பதிகங்கள் 192
திருவாசகம் 219
திருவாதவூர் 191
திருவாதவூர் முனிவர் 70
திருவாதவூரடிகள் புராணம் 184
திருவாய்மொழி 20
திருவாய்மொழி பிள்ளை 223
திருவாய்மொழி வியாக்கியானங்கள் 242
திருவாரூர் 211
திருவாரூர்க் கோவை 138

திருவாலவாயுடையார் திருவிளையாடல் 186
திருவாவடுதுறையாதீனப் பழையவுரை 209
திருவானைக்கா 303
திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ் 342
திருவிளக்கம் உரை 216
திருவிளையாடற் பயகர மாலை 188
திருவிளையாடற் புராணம் 184
திருவுசாத்தான் நான்மணிமாலை 188
திருவுந்தியார் 135
திருவேங்கடம் 268
திருவையாற்றுப் புராணம் 326
திலகவதியார் 308
திவாகரம் 114
திருவெண்காட்டுத் தேவாரம் 201
திருவெண்காடர் 202
திருவெண்காடு 200
திருவெண்ணெய் நல்லூர் 200
திருவெள்ளியங்குடி 268
தில்லை 71
தில்லை அந்தாதி 360
தில்லை நம்பி 186
தில்லை மாளிகை மடம் 188
தீர்த்தங்குடி ஜீயர் 289
துருவ வெண்பா 2
துரைசாமிப் பிள்ளை 302
தெய்வச் சிலையார் 172
தென்கலை இயல் சாத்து 287
தென் பாண்டிய நாடு 172
தேவநாதாசாரி 282
தேவாரம் பாடிய மூவர் 206
தொண்டரடிப்பொடி யாழ்வார் 279
தொண்டை மண்டலம் 3
தொண்டை மண்டல சதகம் 13
தொல்காப்பிய உரை 298
தொல்காப்பிய உரை - பேராசிரியம் 149
தொல்காப்பிய உரையாசிரியர் 144
தொல்காப்பியச் சூத்திரத்துக்கு இலக்கியம் 161
தொல்காப்பியம் 65
தொல்காப்பியர் 118
தொல். செய்யுள். உரை 148
தொல். சொல். உரை 144
தொல். பொதுப்பாயிரம் 146
தோழப்பர் 257
நக்கீரதேவ நாயனார் 156
நக்கீரர் 191
நக்கீரர் அந்தாதி 192
நக்கீரனார் அங்கதம் 159
நக்கீரனார் அடி நூல் 159
நச்சர் 32
நச்சினார்க்கினியர் 77
நஞ்சீயர் 80
நடாதூரம்மாள் 281
நடுவில் திருவீதிப் பிள்ளை 270
நத்தத்தனார் 158
நம்பி அகப்பொருள் 116
நம்பி திருவிளையாடல் 186
நம்பியாண்டார் நம்பி 156

நம்பிள்ளை 270
நம்பூர் 255
நம்மாழ்வார் 239,241
நமசிவாயமுதலியார் 303
நயனப்பத்து 169
நயினாராச்சாம் பிள்ளை 270
நரிவிருத்தம் 314
நரிவெரூ உத்தலையார் 162
நல்லமன் 333
நல்வழி 327
நவநீதப் பாட்டியல் 167
நளதீர்த்தம் 19
நளவெண்பா 10
நளன் கதை 19
நளாயினி வெண்பா 2
நற்றிணை 80
நறையூர் அந்தாதி 360
நன்னடை விளக்கம் 237
நன்னூல் 116
நன்னூல் ஐந்ததிகாரம் 122
நன்னூல் என்றொரு சாஸ்திரம் 122
நாககுமார காவியம் 300
நாகமணி முதலியார் 356
நாதமுனி 241
நாராயணசாமி முதலியார் சிகு.43
நாராயணய்யர் 256
நாலடி 96
நாலடி உரை 111
நாலடி நானூறு 99
நாலடி விளக்கவுரை 111
நாலாயிரப் பிரபந்தம் 123
நாவலர் பதிப்பு 69
நாற்கவிராச நம்பி நூலும் உரையும் செய்தார் 134
நான்மணிக் கடிகை 294
நான்மணிக் கடிகை உரை 88
நிகண்ட வாதி 212
நிர்வர்த்தியம் 175
நிரம்ப அழகிய தேசிகர் 216
நிகண்டன் கலைக்கோட்டுத்தண்டன் 292
நீதி நூல்கள் 88
நீலகங்கரையன் 66
நீலகேசி 76
நுண்பொருள் மாலை 68
நுளம்பப் பாடிப் பாண்டியர் 154
நெடுநல் வாடை 49
நெய்த்தானம், திரு 12
நெற்குன்றவாணர் 199
நேமிநாதம் 87,120
நேமிநாதர் 148
நைஷதம் 17
பகவத்கீதை 266
பகவத்கீதைஉரை 229
பகவத்கீதை வெண்பா 233
பஞ்ச பாண்டவர் வனவாசம் 5
பட் என்ற சாஸ்திரி 208
பட்டர் 254,260
பட்டனார் 226
பட்டாசாரியன் 212
பட்டினத்தார் 194
பட்டினப்பாலை 329
படிக்காசுப் புலவர் 24
பண்டாரப் பாட்டியல், 166
பத்துப்பாட்டு 139

பத்துப்பாட்டு உரை 75
பதிற்றுப்பத்து 76
பதிற்றுப்பத்து அந்தாதி 85
பதிற்றுப்பத்து உரை 85
பதினெண்கீழ்க்கணக்கு 76
பதினெண் கீழ்க்கணக்கு உரை 57
பதினென் கீர்க்கணக்கு உரைகளின் காலம் 89
பதினொராந் திருமுறை 191
பதுமனார் 112
பதுமனார் உரை 98
பதுமாசாரியர் 99
பயோதப்பத்து 169
பரகாலதாசர் 270
பரகாலர் 287
பரஞ்சோதி 188
பரஞ்சோதி திருவிளையாடல் 186
பரஞ்சோதி முனிவர் 202
பரணர் பாட்டியல் 165
பரமார்த்த தரிசனம் 226
பராக்கிரம பாண்டியன், தென்காசி 26
பராசரப்பட்டர் 281
பராந்தக நல்லூர் 173
பராந்தகன் I 330
பரிதியார் 31
பரிதியார் உரை 75
பரிப்பெருமாள் 31
பரிப்பொருமாள் உரை 47
பரிபாடல் 76
பரிபாடல் உரை 76
பரிமேலழகர் 31,66
பரிமேலழகர் பரிபாடலுரை 76
பரிமே... ...பருமாள் தாசர் 66
பருப்பதம் 159
பல்காப்பியம் 158
பல்காயர் 162
பல்காயனார் 158
பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டு 335
பவணந்தி முனிவர் 117
பவணந்தி பட்டாரர் 119
பவளக்கொடி மாலை 5
பவானந்தம் பிள்ளை 132
பழநடை விளக்கம் 236
பழமொழி நானூறு 88
பழமொழி நானூறு உரை 93
பழையதிருவிளையால் 2
பழையனூர் நீலி 24
பன்னிரு திருமுறை 71
பன்னிரு படலம் 158
பன்னிரு பா... 133
பன்னீராயி... படி குரு பரம்பரை 237
பனம்பாரம் 126
பனையூர் 187
பாஞ்சராத்திரி 212
பாட்டியல் மரபு ஒரு நூல் 167
பாடலனார் 126
பாண்டிக்கோவை 169
பாண்டித்துரைத் தேவர் 76
பாண்டி நாடு 23
பாண்டிப்பெருமாள் விருத்தி 209
பாண்டி மண்டல சதகம் 13
பாண்டியர் வரலாறு 142

பாணராற்றுப் படை 169
பாம்பணைப்பள்ளி சேவை ஏட்டில் படம் 285
பாரதம் 27
பாரதம் தமிழ்ப்படுத்தியவர் 371
பாரத வெண்பா 20
பால் வண்ண தேவனான வில்லவ தரையன் 83
பாலசுப்பிரமணிய முதலியார் 207
பாவைப்பாட்டு 160
பாற்கரியன் 212
பிங்கலம் 128
பிரபாகரன் 212
பிரமதந்திர ஸ்வதந்திர ஜீயர் 238
பிறமோத்தர காண்ட 184
பிரயோக விவேகம் 119
பிரஸ்தானத்திரயம் 227
பிராப்பியம் 175
பிள்ளையுறங்கா வில்லிதாசர் 279
பிள்ளை லோகஞ்சீயர் 123
பிள்ளைலோகசாரியர் 265
பின்பழகிய பெருமாள் சீயர் 257
பீலிவளை 331
புகழேந்தி 1
புட்பதந்தர் 303
புத்ததேவர் பல் 141
புராண சாகரம் 183
புலந்திரன் களவு மாலை 5
புலவர் புராணம் 8
புலவராற்றுப்படை 169
புளிங்குடி 135
புறத்திரட்டு 183
புறநானூறு 76
புறப்பொருள் வெண்பா மாலை 52
பூதத்தார் அவையடக்கு 160
பூத புராணம் 159
பூர்ணதேவர் 302
பூழிநாடு 172
பூஜாஸ்தவம் 208
பெண்ணாகடம் 210
பெரிய திருமுடி யடைவு 241
பெரிய திருமொழித் தனியன் 123
பெரிய நம்பி 223
பெரிய பட்டர் 248
பெரிய புராணம் 27
பெரியவாச்சான் பிள்ளை 257
பெரியாழ்வார் 279
பெருந்தேவனார் 163
பெருந்தேவனார் பாரதம் 159
பெருநற்கிள்ளி 229
பெரும்பற்றப் புலியூர் 190
பெரும்பற்றப் புலியூர் நம்பி 2,186
பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடல் 185
பெருமுத்தரையர் 96
பேராசிரியர் 68
பேராசிரியர் ஐவர் 152
பேராசிரியர் திருக்கோவை உரை 68
பேராசிரியர் - தொல்காப்பிய உரை 150
பேராசிரியர் - நீர்மலிந்தவார் சடையோன் பேர் மகிழ்ந்தவர் 146
பேராசிரியர் நேமிநாதர் 146
பேரானந்த சித்தி 216
பேரூர் கிழான் 180

பொத்தப்பிச்சோழன் 130
பொதிய முனி 226
பொய்கையார் 159
பொய்யா மொழி 138
பொய்யாமொழி மங்கலம் 339
பொருநராற்றுப்படை 169
பொருளதிகாரம் 191
பொல்லாப்பிள்ளையார் 203
பொன் விளைந்த களத்தூர் 3
பொன்னம்பலசாமி 229
பொன்னுசாமித் தேவர் 69
போசராசன் 65
மகாபுராணம் 301
மகா வமிசம் 23
மகேந்திர வர்மன் 199
மங்கையர்க்கரசியார் 308
மச்ச புராணம் 184
மண்டல புருடர் 291
மணக்கால் நம்பி 223
மணக்குடவர் 31
மணவாள மாமுனி 236
மணிமேகலை 76
மதிதுங்கன் 23
மதிவரர் 112
மதுரகவி 279
மதுரேசர் 325
மதுரை 140
மதுரை கூடல் ஆலவாய் 190
மதுரை கோயிலொழுகு 197
மதுரைத் தமிழ்ச்சங்கம் 144
மதுரைத் தமிழ்ச் சிற்றம்பலம் 190
மதுரைத் திருப்பணிமாலை 197
மதுரைப் பேராலவாயார் 191
மயிலை நாதர் 125
மயேச்சுரர் 148
மர்ரே கம்பெனிப் பதிப்பு 300
மருங்காபுரி சமீன் 187
மல்லிசேனர் 302
மழவைஎழுபது 360
மள்ளுவநாடு 10,22
மறைஞான சம்பந்தர் 211
மனவாசகங் கடந்தார் 200
மனுநீதிச் சோழன் 329
மனு மதலிய அறநூல் 50
மாணிக்கவாசகர் 191
மாத்தியமிரர் 212
மாத்தூர் 203
மாந்தாதா 229
மாந்தைக் கொங்கு ஏனாதி 173
மாபுராணம் 159
மாயாவாதி 212
மார்க்கோ போலோ 141
மாவிலங்கைச் சனநாதபுரம் 121
மாறோக்கத்து நப்பசலை 172
மாறோக்கம் - தென் பாண்டிநாடு 172
மிழலைக் கூற்றம் 171
மின்னொளியாள் குறம் 5
மீனெறி தூண்டில் 151
முசுகுந்தன் 329
முசிறி 23
முட்டை 342
முடித்தலை கொண்ட சோழபுரம் 325

முத்தமிழ் 28
முத்துசாமிக் கோனார் 122
முத்தொள்ளாயிரம் 159
முதலாழ்வார் 153
முதுமொழிக் காஞ்சியுரை 88
முப்பத்தாறாயிரப்படி 265
மும்மையால் உலகாண்ட மூர்த்தி 195
முரணை நகர் 3
முருகாற்றுப்படை 169
முனிவாகன போகம் 272
முனைப்பாடி 297
முனைப்பாடியார் 293
மூதுரை 159
மூர்த்தி நாயனார் 195
மூவடி முப்பது 159
மூவாயிரப்படி 236
மெய்கண்ட சாத்திரம் 204
மெய்கண்ட தேவப்புத்தேரி 203
மெண்கண்டார் 71
மெண்கண்டீசுரமுடையார் 221
மேரு மந்தர புராணம் 309
மேல்பாடி 130
மைசூர் 229
மோதிரப்பாட்டு 160
யசஸ்திலக சம்பு 302
யசோதர சரிதம் 302
யதீந்திரப் பிரவணப் பிரபாவம் 236
யமுனைத் துறைவர் 279
யாப்பருங்கலக் காரிகை 116
யாப்பருங்கலம் 116
யாப்பருங்கல விருத்தி 29
யாமளேந்திரர் 166
யானைத் தொழில் 169
யோக நூல் 51
யோகாசாரன் 212
ரங்காசாரி 238
ராகவையங்கார், ரா. 76
ரௌரவாகமம் 207
லோகசாரியர் 258
வங்கமணி 334
வங்கிபுரத்து நம்பி 246
வச்சணந்தி 164
வச்சணந்தி மாலை 116
வச்சணந்தி மாலை உரையாசிரியர் 163
வச்சணந்தி முனிவர் 164
வஞ்சி 91
வஞ்சிப் பாட்டு 160
வடக்குத் திருவீதிப்பிள்ளை 257
வடிவேற் கிள்ளி 331
வடுக நம்பி 289
வடுக நாடு 172
வண் துவரைப் பெருமாள் 66
வணங்காமுடிப் பாண்டியன் 344
வயிரபுரம் 339
வர்த்தமான மகாவீரர் 291
வரகுணன் 194
வரதகுரு 281
வரத ராசர் 255
வரையறுத்த பாட்டியல் 166
வல்லம் 96
வல்லமன் 153
வள்ளிமலை 119
வள்ளுவக் கடவுள் 37

வள்ளுவப் பயன் 159
வள்ளுவப் பாடிநாடு 23
வளையாபதி 76
வாக்கிய தீபம் 175
வாகீசமடம் 194
வாகீசமுனி 199
வாதவூரடிகள் வரலாறு 193
வாதிகேசரி 233
வாதிராசன் 302
வாமன முனி 76
வார்த்தாமாலை 280
விக்கிரம சோழன் 4
விக்கிரம சோழன் உலா 254
விக்கிரம பாண்டியன் 140
விசயகண்ட கோபாலன் 66
விசயாலய சோழன் 225
விசாகப் பெருமாளையர் 171
விநாயக முனிவர் 188
விநாயர் வணக்கம் 229
விநோதரச மஞ்சரி 3,7
வியாகரணம் 124
வில்லவதரையன் 83
வில்லி பாரதம் 27
விவரண சதகம் 283
விவேக சிந்தாமணி 42
விளக்கத்தனார் கூத்து 160
வீரபாண்டியன் 140
வீரராசேந்திரன் 332
வீராசாமிச் செட்டியார் - அட்டாவதானம் 3
வீராந்தப் பல்லவதரையர் 372
வீரைத்தலைவன் பரவமய கோளரி 185
வெண்காடமுனி 188
வெண்ணாவலுடையார்கோன் 303
வெண்பாப்பாட்டியல் 170
வெள்ளிப்பாடல் 188
வெள்ளியம் பலவாணத் தம்பிரான் 189
வேங்கடராமையங்கார் 302
வேதகிரி முதலியார் 132
வேதாந்த இலக்கியம் 225
வேதாந்த தேசிகர் 236
வேதாந்தி 268
வேதராணிய புராணம் 188
வேம்பத்தூரார் திருவிளையாடல் 186
வேலப்பப் பண்டாரம் 212
வைசேடிகர் 51
வைத்தியநாத தேசிகர் 127
வைத்தியலிங்கம் பிள்ளை பதிப்பு 142
வைபாடிகன் 212
வையாபுரிப் பிள்ளை 30
ஹர்ஷர் 17
ஜினசேனர் 302
ஸத்ஸம்பிரதாயக் குருபரம்பரை 237
ஸ்ரீ பட்டனார் 267
ஸ்ரீ புராணம் 185
ஸ்ரீ ஸூக்தி சாகரம் 261

○○○